சிவமயம்.

கல்லாடனார்

இயற்றிய

கல்லாடம்.

இது

மயிலேறும்பெருமாள்பிள்ளை முதலிய

வித்வான்கள் எழுதிய

உரையோடு,

அதனை விளக்கி,

மஹாவித்வான்

காஞ்சி-இராமாநுஜயோகிகள்

எழுதிய

விசேஷ உரையுடன்,

சென்னை :

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1911

[Copyright Registered]

விலை ரூபா 3.

முகவுரை

எந்நாட்டவரும் தந்நாட்டுப் பழம் பொருளைப் பொன் னேபோற் போற்றுவர். எப்பொருளினும் கல்விப்பொருளே சிறப்புடையதா மாகலின், மக்களாவார் தந்நாட்டில் வழங் கும் பண்டைய நூல்களையும் அவற்றை இயற்றிய ஆசிரியரது வரலாறுகளையும் அறிய அவாவுவர். சிதைந்துள்ள நூல் களைத் தேடிச் செப்பனிட்டு வெளியிடும் அருங்கலை விநோதர் களை அவற்றாலுண்டாகும் பயனையும் மகிழ்வையும் உணர வல்லார்.

இனி, பண்டைய நூல்களைப் பழகி ஆராய்வதும், அவ ற்றை இயற்றிய ஆசிரியரது வரலாறுகளை உணர்வதும் எற் றுக்கோ வெனின், அன்னார் உண்மையுறக் கண்டு உரைத் தனவன உறுதியுரைகள உணரக் கிடைத்தலே யன்றி, அக் காலத்திய மாந்தர் கொண்டிருந்த நடையுடை பாவனைகளும், நாகரிகமும் நாட்டுவளனும் பிறவும் நன்கு புலனுமென்பது பற்றேயென்க. இக்கருத்தைப்பற்றியனறே மேனாட்டுப் புலவரும், நூல்களை தோன்றிய கால வரலாற்றைப் பெரிதும் ஆராய்ந்து தேர்கின்றனர்.

நமது நாட்டின்கண் வரலாற்று முறைமை எழுதினாலும் வழக்கமறியாமையால், எவர் எக்காலத்தை யுரைக்கப் புகினும், பல்லாயிர வருடங்களுக்கு முன்' எனப்பாயிரங் கூறத் தொட ங்குகின்றனர். சிலர் முற்பட்ட தொல்லறே முதிர்ச்சி யுடைய தன்று கருதி தமக்கான நூல்களை மதிறவற்றிற்கும் முற் பட்டதென்று முரண்படக் கூறுவர். மற்றுஞ்சிலர் காலமென் றும் கண் தெரியாக் காட்டிற் புகுந்து கண்டது அல்லலே என்றிப் பிறிதில்லையென அதனின் அகன்றொழிவர். கருமமே கண்ணாயினர் சிலர், எவ்வகைய இன்னலையும் புறங்கண்டு

மனஞ் சோர்வுபடாது பண்டைய நூல்கள், சாசனங்கள், கல்வெட்டுக்கள், பிறநாட்டு வரலாறுகள் முதலியவற்றை ஆராய்ந்து கால முறையைக் கண்டறிகின்றனர். இவரது உழைப்புச் சிறக்குமாறு இறைவன் இன்னருள் புரிவானுக.

இதுநிற்க, பண்டைய தமிழ் நூல்களில் 'கல்லாடம்'என்னும் அரிய நூலும் ஒன்றும். இது கல்லாடனார் இயற்றியது. கல்லாடர் கடைச்சங்கத்துப் புலவர் நாற்பத்தொன்பதின்மரில் ஒருவர். இவரது சிறப்புக்கவி திருவள்ளுவ மாலையின்கண் ஒன்பதாவதாக நிலவுகின்றது. ஒரு காலத்து, மணிவாசகப் பெருமான் திருவாய்மலர்ந்தருளிய திருக்கோவையாரைச்சுடிச் சங்கப்புலவர்கள், "அகப்பொருள் இயலுக்கு மாறுபடுகின்றமையின் இந்நூல் குற்றமுடைத்து" எனலும், கல்லாடர் அக்கடுமொழியைக் கேட்கப்பொறாது அவர்தங்கூற்றை மறுத்து, அதுகாரணம்பற்றி மற்றைய புலவர்களோடு முரண்பட்டு, ஆலவாயில் அருட்பெருங் கடவுளை யணுகி, "அடியார்க்கு நல்லாய்! 'பாவை பாடியவாயாற் கோவைபாடுக' என்னும் திருப்பணியை மேற்கொண்டு திருவாய் மலர்ந்தருளியதாகும் திருக்கோவையார், முற்றறிவுடைய மணிவாசகர் வழங்கிய அதனைச் சிற்றறிவுடைய இப்புலவர்கள் குற்றமுடைத்தென்கின்றனரே! இது என்னே! அடியேன் அப்புலவர்களை வாயடைக்குமாறு அருள புரிதி" என வேண்டியபின்னர், விரைந்து சென்று ஒரு புடையிருந்து, கோவையாருள ஆங்காங்கு ஒவ்வொன்றாக நூறு செய்யுட்களைத் திரட்டி, ஒவ்வொன்றன கருத்து ஒவ்வொன்றினுக பொதிந்து சிறிதுமாய ஒரு நூறு அகவற்பாக்களை யாத்தனர். யாத்தபின்னர் கல்லாடர் குற்றங் கூறிய அப்புலவர்களைக் கூட்டிச்சென்று, இறைவன் முன் இருத்தி, "நச்சினார்க்கினியாய்! யான் இனி இந்நூறு அகவல்களைத் திருமுன் கூறுகின்றேன். திருக்கோவையார் எவ்வகையினும் அமைவுடையதேயாயின், அவையிற்றை அகப்படக்கொண்ட இவ்வகவல்களை எற்றருளல்வேண்டும்" என்று விண்ணபித்து ஓதுவாராயினர். எம்பெருமான் ஒவ்வொரு பாவும் முடியுந்தோறும் தம் முடியைத் தாளக்கின்றனர். அதுகண்ட

சங்கப்புலவர்கள சங்கை யொழிந்தனர் என்பது இந்நூலைக் குறித்து வழங்கும் கர்ணபரம்பரை.

கல்லாடர் செய்பனுவற் கல்லாட நூறுநூல்
வல்லார்சங் கதத்தில் வதிந்தருளிச்—சொல்லாயும்
மாமதுரை யீசர் மனமுவந்து கேட்டுமுடி
தாமசைத்தார் நூறு தமம.

என்னுந் தனிச்செய்யுள ஒன்று அக்கூற்றை ஆதரிக்கின்றது. மேற்கண்ட வரலாறு எத்துணை உண்மை யுடைத்து எனத் துணிதற்குப் போதிய ஆதாவுகள வேறு கிடைக்கில.

இதுநிற்க, வாதவூரடிகளது வாசகதத்தை யுவந்து, திலே யம்பலவாணர் அவர்க்கு 'மணிவாசகர்' என்னும் அபிதா நத்தை யருளினர் என்பதும், 'பாவை பாடியவாயாற் கோவைபாடுக' என்றனர் என்பதும், அவ்வடிகள அருளிய திருவாசகம் முதலிய தமிழ்மறை நூல்களைத் தமது அரு மைத் திருகரத்தான எழுதினர் என்பதும், மற்றும் அவ் வடியவர்பொருட்டுத் தாம் மண் சுமத்தல் முதலாய தொழில் களைப் புரிந்தனர் என்பதும், பிறவும் ஒப்புமையுடையவாக் கொளகின்றுமாகலின், அருநூலைச் சுடடி வழுந்த குறையினைப் பேரருள்கூர்ந்தற்பொருட்டு மதுரை நாயகர் தம்மூடியைத் தளகி ஞர் என்பது இழுக்காகாதனறே. இதனாற் கல்லாடர் பொரு ட்டு முடி தளகினரல்லர் என்பது புலனாகும். அன்றி, அந் நூல் சூற்றமுடைத்தாயின், அதனைக கேட்டு மகிழ்ந்து, ஏட் டினகண் எழுதிவைத்த இறையனாருக்கும் இழுக்குண்டாமாக லின் இயற்றினர், எழுதினர் ஆகிய இருவோர்க்கும் இழுக் குறுவண்ணம் மதுரையீசர் தமமுடி தளகினர் என்பது அல்வழியாகாதென்க.

இனி, திருக்கோவையாரின் துறையடைவுகளை உளரு றையாகக்கொண்டு கல்லாடனார் தம் நூலினை யாத்தனரெனின், மணிவாசகர் கல்லாடனார்க்கு மூற்பட்டவர் என்பது பெறப் படும். சிலர், மணிவாசகர் திருத்தொண்டத் தொகையுட்

ஸ்ரீமான் கோபிநாதராவ் அவர்களை உள்ளிட்டோர்.

கூறப்படாமையின், அவர் சுந்தரர்க்கும் பிற்பட்டவர் எனக் கொண்டு, மணிவாசகர் சற்றேறக்குறைய கிறிஸ்துசகம் ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்தவர் என்கின்றனர். * சிலர் 'பொய் மீடிமை யில்லாத புலவர்' என்பது மாணிக்க வாசகரையே குறிக்கற்பாலது, நம்பியாண்டார் அதற்குச் சங்கப் புலவருள் கபிலர், பரணர், நக்கீரர் ஆகிய மூவரையும் முரண்படக்காட்டினர் என்பது முதலிய அடைவுகளைக் காட்டி, மணிவாசகர் சுந்தரர்க்கு முற்காலத்தவராதலே யன்றி, 'நரியைக் குதிரை செய்வானும்' என அப்பர் அருளிய மறை மொழியை வெளியாக்கி, வாசகர் சம்பந்தருக்கு முற்பட்டவ ரென்றும் கூறுவர். மற்றுஞ் சிலர் மணிவாசகர் சம்பந்தருக்கு முற் பட்டவர் என்பதிற் சற்றும் ஐயமில்லை; அவர் வீரசைவ ராயினமைபற்றி சுந்தரர் அவரைத் திருத்தொண்டத் தொகையுட் கூறு தொழிந்தனர் என்ப. மணிவாசகர் வீரசைவரே என்னலா மெனின், வீரசைவர்கள் அவரை அடியார் தொகையுட் கொண்டிலராதலின் அது முரண்படுமாறுகாண்க.

இதுநிற்க, கல்லாடம் ஒன்றனையே ஆதரவாகக் கொண்டு மணிவாசகர் கடைச்சங்ககாலத்திற்கு முற்பட்டவர் என்பதில் முரண்படுமாறு என்னையோ வெனின், அற்றுயிலை கோக்கோவையார் சங்கமருவிய நூலாதல் வேண்டும். அவ்வாறாகச் சங்கமருவிய நூற் றொகையுட் காண்கின்றிலதில்லை. மற்றும் திருக்கோவையார் சங்கம் மருவிய நூலாயின், இறையனார் அகப்பொருளுக்கு உரை கண்டருளிய நக்கீரனார் மேற்கோளாகிய இதனை யெடுத்து ஆளாதிருத்தல் கூடுமோ வென்னும் ஐயப்பாடும் நிகழ்கின்றது. டாக்டர் ஜி.யு.போப்பையர் அவர்களும் மணிவாசகனார் ஒன்பதாம் நூற்றாண்டில் வதிந்தவ ரென ஊகிக்கின்றனர்.

மற்று இக்கல்லாடம் வந்த வழிதான் யாதோ வென்றாராய்வுழி, இது கல்லாடனார் செய்தது என்பதுமட்டும் பொய்யாமாறில்லை. அக்கல்லாடர்தாமும் கடைச்சங்கத்திருந்த

* ஸ்ரீமான் கே. ஜி. சேஷ ஐயர் அவர்களை உள்ளிட்டோர்.

அவர்தாமோ அல்லரோ எனபது துணிதல வேணடும. கோவையார் சஙகம் மருவிய நூலன்றுமெனவே இக்கலலாடம செய்தவரும அககலலாடரன றெனபது தெளிவாகும. ஆகவே மறறெரு கல்லாடர் சஙககாலதறகுப் பிறபடஇருந தனரெனபதுதானே போதரும.அவர்தாமும மிகப பிறபட்ட காலததவர் என்று புலபபடுகினறனது. உரையாசிரியருள ஒருவரும இககல்லாடதறை மெயமதாளக காணகினறிலோமாதலின, இவர உரையாசிரியாகள காலதறகும பிறபடடவர எனபது இழுகாது.

கல்லாடம என்பது ஒரு திருப்பதி. தூண, 'கல்லாடத்துக்கலநதினி திருநது' என்னும மணிவாசகாதிருவாகுகுதெளிவிகுகும. ஆகவே கல்லாடனுர் அப்பதியின்கண் வதிநதவர எனனலாம. இவரே சங்ககாலத்தவர எனககொள்ளின், பின்னவர் அவர பெயரையே தாம மேறகொண்டிருநதனர எனஊகிகசலாம். இவவிரண்டாம கலலாடரே இநதூலினை யாத்தனரெனபது தெளளிதிற புலனுகும. அவவாறுயின் இந நூலசசுவடி யெழுநத காண பரமபனுரயான கதை யெம்மடமம உண்மை பழுககு மென்பது உரையாமலே விளஙகும.

இவையனைத்தையும ஒரு புறம ஒதுக்கி, இநநூலின உளளுறையை உறறு நோககுமிடதது, திருககோவையாருள ஒரு நூறு செய்யுடகளைததோநதெடுதது அவறறின் கருததுகள் அகபபட அகவல் செய்தா ரெனபதை மறுததறகிலலை. ஆயினும ஒரோவிடதது அதிதானும மாறுபடுகின்றது. இதனை,

திருக்கோவையார்.

இடமணித்துக்கூறி வற்புறுத்தல்.

வருங்குனற மொன்றுரித தோன்றில்லை யமபல வன்மலயத்
திருங்குன்ற வாண ரிளங்கொடி யேயிட ரெய்தலெமமூர
பருங்குறை மாளிகை தண்கள பததொளி பாயதுமமூர்க
கருங்குன்ற வெண்ணிறக களிசுக மேய்கருங் கணகுழையே.

கல்லாடம்.

எம்மூர் சேணினு நும்மூர்க் குன்றமும்
பெருந்தவர் குழவு மருங்கதி யிருப்பும்
பொதியமுங் களிப்ப வீரிதரு தென்றலுங்
கீணசடல் குடித்த முனிவனுந் தமிழு
மேருவு மூவர்க் கோதிய புரமு
மூலகமீன் றளித்த வுமையுமா ரனுங்
தேவர்க் கரசனுங் காவற் றருவும்
வழுவா விதியு மெழுதா மறையுஞ்
செங்கோல் வேந்துந் தங்கிய குடியுங்
தவஞ்சூ ழீமயமுங் கமஞ்சூன் மழையு
மெல்லியி லீங்கிவை சொல்லிய வனறி

ஆகிய இரண்டு செய்யுட்களையும் ஒப்பநோக்கி உய்த்துணர்க. அகப்பொருள இயல்பற்றிக் கோவைநூற் றுறைபடவுள்ள எவர் உரைப்பினும் ஒன்றையொன்று பற்றியே நிற்கும் என்பது ஈண்டுக் கவனிக்கத் தக்கதாம். நிற்க, "கல்லாடம் கற்றவனிடத்துச் சொல்லாடாதே" எனவும், "கல்லாடம் கற்றவனிடத்து மல்லாடாதே" எனவும், இருநூலைச் சுட்டி வழங்கும் பழமொழிகள் - இதன் உயர்வை உளவாறே யுணர்க்கின்றன. இது பண்டைய நூல்களேபோல் சொறசெறிவும் பொருளாழமும் கொண்டு விளங்குதலின் கற்றோர் இதனைக் கருந்தனமாகக் கொண்டிருகின்றனர்.

உத்தமக் கவிகளை ஓவியம் வல்ல புலவர்க்கு ஒப்பிட்டுரைத்தல் கூடும். ஓவியன், தான் காணும் பொருளின் உருவின் அமைப்புக்களை உண்மையுறத் தேர்ந்து, இயற்கை நலம் சிறிதும்மாறுபடாவண்ணம் சித்திரிக்கின்றனன். அவன் தான் வரையக்கொண்ட அப்பொருளின் உருவினுணுதல் நிறத்தினுணுதல் ஒரு சிறிது மிகுதலேனும் குறைதலேனும் காட்டுவானாயின் காண்போரதனை இயற்கைநல மழிந்ததென எள்ளியுரைப்பர். நல்லியற் புலவரும் இத்தகையினரே. நல்லியற் புலவராயினர் தாம் கூறபபுகுந்த விடயங்களைத் தம்மனம் போனவாறு

மாறுபடுத்துக் கூறுது அவ்விடயத்தின் உண்மை நிலையோடு தம் மனத்தை ஒன்றி, உலகினர் உண்மையுற உரைக்கும் திறத்தினராவர். இவ்வகைய உத்தமப் புலவர்களில் கல்லாடரையும் ஒருவராகக் கூறலாம். இவர் இல்பொருளுவமை, தற்குறிப்பேற்றம் முதலிய அணிகளை ஒதுக்கி, இயற்கை நவிற்சியினையே பெரிதும் பாராட்டுகின்றனர். இதனை,

வரியுடல் சூழக் குடம்பைநூ றெற்றிப்
போக்குவழி யடையா தளளுயிர் விடுத்தலின்
அறிவு புறம்போய வுலண்டது போலக்
கடற்றிரை சிறுக மலக்குதுயர் காட்டும்
உடலெனும் வாயிற் கிறைகடவு புக்குப்
போகா துணங்குறும் வெள்ளறி வேழம்

அருணிறைத் தமைத்த கல்லிய ருளமெனத்
தேக்கிய தேனுட னிருண்மதி கிடக்கும்
கல்லாக் கயவர்க் கருநூற் கிளைமறை
சொல்லினர் தோமெனத் துணைமுலை பெருத்தன
பலவுடம் பழிக்கும் பழியு னுணவினர்
தவமென தேய்ந்தது திடியெனு நசுபபே
கடவுட் கூறு ருளமெனக் குழலும்
கொன்றைபுற வகற்றி நின்றவிருள் கட்டின
சுரும்புபடிந் துண்ணும் கமுநீர் போலக்
கறுத்துச் சிவந்தன கண்ணினை மலரே

மீனுண வள்ளி யிருந்தவெண் குருகெசைச்
சோறுறை கான்ற கைதைய லரும்

அறவெயி றணைத்தமுள் லிலைமுடக் கைதைகள்

முதலிய பாவடிகள் இனிது விளக்கும்.

இந்நூலாசிரியர் தம் நூலுள் பெரும்பாலும் ஒவ்வோர் அகவலினும் மதுரையம்பதியினைச் சிறபபித்து, மதுரை நாயகரைத் துதித்து, அவர் செய்தருளிய திருவிளையாடற் சரிதங்களை விளங்கக் கூறுகின்றனர். அன்றி, அத தலம் திருப்பரங்குன்றினை அண்மியதெனத் தழுவிக்கூறுதலின், இவர் பாண்டி-

நாட்டின னென்பதும், முருகனைத் தமது வழிபடுகடவுளாகக் கொண்டவர் என்பதும் துணியப்படும். இந்நூலில் முருகக் கடவுள் வணக்கமும் இனிது உறுதிப்படுத்தும்.

'இவ்வரிய நூலை ஏறக்குறைய ஐம்பது யாண்டுகளுக்குமுன்னர் ஸ்ரீமான்-திருச்சிராபுரம்-மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள் மூல பாடமாகப்பதிப்பித்தனர். இதற்குப்புலவர்பெருமான் ஸ்ரீமான். மயிலேறும்பெருமான் பிள்ளையவர்கள முன்னரே இந்நூலின் முதற்முப்பத்தேழு அகவல்களுக்கு விரிவுரையொன்றுவரைந்திருந்தனர். அதன்பின்னர் வித்வான் புதுவை - சுபபராய முதலியாரவர்கள் ஏனைய அகவல்களுக்குப் பதவுரை யொன்றெழுதினர். இவ்விரண்டுரையும் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டிருந்தும், பாராட்டுவோ ரின்மையால் இக்காலதனே அது தானும் கிடைப்ப தரிதாயிற்று. அதுகண்ட மகாவித்வான் காஞ்சிபுரம் - இராமசாமி நாயுடவர்கள மேற்குறித்த இரண்டுரைகளையுந் தழுவி அகலவுரை யொன்று வரைந்தளித்தனர். அவர்தன்மையும், இவ்வுரையின் வன்மையும் இத்துணைய வென எடுத்துரைத்தல் என் சிற்றறிவி னளவிற்றன்றென வாளா விடுத்தனன். சுற்றிலுள்ள மூன்று அகவல்களுக்கு உரை செவ்வனே புலப்படாமை போலும் அவற்றிற்கு அருப்பதவுரை மட்டும் கண்டுவிட்டது. "கல்லாடதேதும் மல்லாடாதே" என்னும் பழமொழி பழதுபடா தென்பதற்கு இஃதோர் சான்றாகும்.

இம் மூன்றே யொழிய நூல் முழுதும் நன்கு புலனாமாறு இனிய உரை யெழுதியளித்த அப்பெரியார்க்கும், அவர்க்குப் பொருளுதவி செய்து அந்நூலை அச்சுவாகனத்தேற்றி பெரும் உலகிவரச்செய்த ஸ்ரீமான் வை. சிவசங்கரச்செட்டியார், பி. ஏ., பி. எல்., அவர்கட்கும் தமிழுலகம் என்றும் பாராட்டும் கடப்பாடுடையதென்னும் கருத்துடையேன்.

எஸ். பி. ஜி. ஹைஸ்கூல்,
சென்னை, 24-2-11.

கா. நமச்சிவாயன்.

சிவமயம்

கல்லாடம்

மூலமும் உரையும்.

கடவுள் வாழ்த்து.

வெண்பா

செவ்விதிகழ் பொருட்டெ செந்தா மரைவதனக்
கொவ்வையெழிற் செவ்வாய்க ருத்தேணை—ஒவ்வி
விழியாணை பைம்புனரும மேவுமத வெளளம
பொழியாணை யைமனமே போற்று.

அவையடக்கம்

விருத்தம்

வாய்ந்தபொருட் கொருபொருளாய்க் கலிவாணிக
கருளைகொழிகது மன்பாய்ப பாரி
னுய்ந்தமுதற் றமிழ்வடி தருக கல்லாட
மெனவொருநூ லருளி யிட்டார்
தேய்ந்தமதிச சடைபபரமர் கருணைபெறச்
சங்கமுறு செல்வர் வாழ்தகக்
காய்நதபுல னடகையுயர் பெருஞானம்
பழுத்தருளகல லாட னீரே.

வெண்பா

கல்லாடர் செய்பனுவற் கல்லாட நூறுநூல்
வல்லார்சங் கத்தில வதிதருளிச்—சொல்லாயு
மாமதுரை யீசர் மனமுவநது கேட்டுமுடி
காமசைத்தார் நூறு சரம்.

விருத்தம்

வடிவெடுத்து வேதமன்பிற் பாடுகிணு
மறிந்தறியா வண்ணம் வைகும்
பொடியணியுந் திருமேனிப் புனிதன்மது
ரைக்கிறைவன் புகழின் பாடல்
நெடியகவிக் கல்லாடர் பொருட்டுறையை
கழ்த்துதொறு நிலவு சூடும்
முடியசைத்து நன்றுநன்றீ தெனமகிழு
மெனினிகராய் மொழிவ தியாதே.

கணபதி துதி.

நேரிசை யாசிரியப்பா

திங்கண்முடி பொறுத்த பொன்மலை யருவி
கருமணி கொழித்த தோற்றம் போல
இருகவுள் கவிழ்த்த மதகதி யுவட்டின்
வண்டிமம் புரளும் வயங்குபுகர் முகத்த
செங்கதிர்த் திரளெழு கருங்கடல் போல
முக்கண்மேம் பொங்கும் வெளளமெறி நடத்த
பெருமலைச் சென்னியிற் சிறுமதி கிடந்தெனக்
கண்ணரு ணிறைத்த கவின்பெறு மெயிற்ற
ஆறிரண் டருக்க ரவிக்கதிர்க் கனலும்
வெள்ளோமதி முடித்த செஞ்சடை யொருத்தன்
உடலுயி ராட வாடுறு மனலமும்
தென்கீழ்த் திசையோன் தெருதரு தீயும்
ஊழித் தீப்படர்ந் துடற்றுபு நிகையும்
பாசக் கரகம் வீதியுடை முக்கோல்
முறிக்கலைச் சுருக்குக் கரம்பெறு முனிவர்
விழிவிடு மெரியுஞ் சாபவாய் நெருப்பும்
நிலைவிட்டுப் படராது காணியி னிலைக்கச்
சிறுகாற் றழலு மசைகுழைச் செவிய
ஆம்பன்முக வரக்கன் கினையொடு மறியப்

பெருங்காற்று விடித்த நெடும்புழைக் கரத்த
கருமிடற்றுக் கடவுளைச் செங்கணி வேண்டி
இடங்கொண் ஞாலத்து வலங்கொளும் பதத்தி
குண்டுநீ ருடுத்த நெடும்பா ரெண்ணைமும்
எண்ணு விலக்கமொடு நண்ணிடு துரயமும்
அளந்துகொடு முடித்த னின்கட ஞாலின்
வரியுடல் சூழுங் குடம்பையூ றெற்றிப்
போக்குவழி படையா துள்ளுயிர் விடித்தலின்
அறிவுபுறம் போய வுலண்டது போலக்
கடற்றிரை சிறுக மலக்குதி யர் காட்டுமம
உடலெனும் வாயிற் சிறைநடுவு புக்குப்
போகா நுணங்குறும் வெள்ளறி வேமும்
ஆரணம் போற்றுநின் காலுற வணங்குறும்
கான்முக மேற்ற தொளிகொள்வாய்க் கறங்கும்
விசைத்தநடை போகுஞ் சகடக் காலும்
நீட்டிவலி தள்ளிய நெடுங்கயிற் றாசலும்
அலமரு காலு மலகைத் தேரும்
குறைதரு பிறவியி னிறைதரு கலக்கமும்
என்மனத் தெழுந்த புன்மொழித் தொகையும்
அருள்பொழி கடைக்கண் டாரகித்

தெருளுற வைய முடிப்பையின் றெனவே.

'திங்கள்' என்பது முதல் 'முகத்த' என்பது வரை.

(1—4 வரிகள்.)

(பதவுரை) திங்கள்-பிறையை, முடி-சிரத்தில், பொறுத்த தாங்கிய, பொன்மலை-பொன்மலையினின்றும் வீழ்கின்ற, அருவி-அருவியானது, கருமணி-நீலமணியை, கொழித்த-கொழிக்கின்ற, தோற்றம்போல-காட்சிபோல, இருகவுள்-இரண்டு கவுள்களும், கவிழ்த்த-கொட்டின, மதநதி-மதமாகியநதியின், உவட்டில்-பெருக்கில், வண்டு இனம்-வண்டுக் கூட்டங்கள், புரளும்-புரளுதற்கிடமாய், வயங்கு-விளங்குகின்ற, புகர்-புள்ளிகளோடு கூடிய, முகத்த-முகத்தினையுடையாய்.

(விசேடவுரை) திங்கள் என்றது சந்திரனுக்குப் பொதுப் பெயராயினும் பொன்மலைக்கேற்பச் சந்திரனென்றும், மூத்தபிள்ளையாருக் கேற்பப் பிறையென்றும் பொருள்கொள்ளக்கிடந்தது, இத் தொடர் பொன்மலைக்கும் மூத்தபிள்ளையாருக்கும் உவமை கூறலின். பொன்மலை - மேருமலை (பொன்னுனியன்ற மலை). பொன் மலை மூத்தபிள்ளையாருக்கும், அதன்மூடி பொறுத்த திங்கள் மூத்தபிள்ளையார் முடியிற் றரித்த பிறைக்கும், அருவி மூத்தபிள்ளையாரது இருகவுள் கவிழ்க்கு மதப்பெருக்கிற்கும், அருவிகொழிக்கு நீலமணி மூத்தபிள்ளையாரது மதப்பெருக்கிற் புரள்கின்ற வண்டினத்திற்கும் உவமையாகக்கொள்க. கவுள் - கதுப்பு. மதநதி - மத நீராஞ்ஞ யாறு. உவ்வட்டு - பெருக்கு. புரளல் - உருளல். உருளலெத் துக்கெனின் பெருக்காதலானென்க. புகர் - புள்ளி (பொறி).

'சேங்கதிர்' என்பதுமுதல் 'கடத்த' என்பதுவரை.

(5—6 வரிகள்.)

(ப-ரை.) செங்கதிர் - செங்கதிரின், திரள் - கூட்டம், எழு - எழுகின்ற, கருங்கடல்போல்-கரிய கடல்வெள்ள மெறிந்தாற்போல, முக்கண்மேல்-மூன்று கண்களினிடத்தும், பொங்கும் - எழாநின்ற, வெள்ளம் எறி - பெருக்காகச் சிந்துகிற, கடத்த - மதநீரினையுடையோய்.

(வி-ரை.) செங்கதிர் - சோம சூரியாக்கிகள் எனப் பொருள் கொள்க, மேல் முக்கண்மேற் பொங்கும் எனவருதலால். செங்கதிர்-செம்மையாகிய கதிர், இது இதனையுடைய சுடர்களை யுணர்த்தலான் ஆகுபெயர்.

'பெருமலை' என்பதுமுதல் 'எயிற்ற' என்பதுவரை.

(7—8 வரிகள்.)

(ப-ரை.) பெரு - பெரிய, மலை - மலையின், சென்னியில் - உச்சியில், சிறுமதி - இளம்பிறை, கிடக்தென-கிடந்தாற்போல, கண் அருள் - அருட்பார்வையையுடைய முகத்தில், நிறைந்த - நிரம்பின, கவின் பெறும் - அழகுபெற்ற, எயிற்ற - கொம்பினையுடையோய்.

(வி-ரை.) கிடந்தென என்பது கிடந்தால் எனஎன்பதன் விகாரம். எயிறு-கொம்பு.

'ஆறிரண்டருக்கர்' என்பதுமுதல் 'குழைச்செவிய' என்பது வரை. (9—18 வரிகள்.)

(ப-ரை.) ஆறு இரண்டு - பன்னிரண்டென்னும் தொகையையுடைய, அருக்கர்-சூரியர்களது, அவிர்-பிரகாசிக்கிற, கதிர் கனலும் கிரணக்கினியும், வெள்ளை மதி - வெண்பிறையை, மூடித்த - சூடினன், செஞ்சடை - செவந்த சடாபாரத்தையுடைய, ஒருத்தன்-ஒப்பற்றவனுகிய சிவபெருமான், உடல் உயிர் ஆட - உடலுயிர்கள் நடுங்கும்படி, ஆடியும் - நடித்தலிடமாகிய, அனலமும் - பிரளய காலாக்கினியும், தென் மீம் திசையோன் - தென்திக்குக்குரித்திக்கினைத் தனக்கிடமாக வுடையவனுகிய தீக்கடவுள், தெறுதரு - (தன்னைச்சேர்ந்த எல்லாப் பொருள்களையும்) எரிக்கிற, தீயும் - நெருப்பும், உடற்றுபவருத்தாகின்று, படர்ந்து - உலகமுழுதும் பரக்க, சினை - கையினையுடைய, ஊழிக்தீயும் - பிரளய காலாக்கினியும், பாசம் - உறிக்கயிற் றிற்றனகிய, கரகம் - கமண்டலத்தையும், விதி உடை - (வேத விதிப்படியே) தாங்கப்பெற்ற, மூகோல் - திரிதண்டத்தையும், முறிக் கலைச் சுருக்கு - முறிக்கலையின் சுருக்கினையும், கரம்பெறு - (தமது) கையிற்முருங்கிய, முனிவர் - முனிவரது, விழி விடும் எரியும் - கண்கள் வெளிப்படுத்துகிற கினத்தீயும், சாபம் - சபித்தலையுடைய, வாய் நெருப்பும் - வாயத்தீயும், நிலைபிட்டு - தத்தம் நிலையினின்றும் நீங்கி, படராது - பரவாவண்ணம், காணியில் நிலைக்க - தத்தம் காணியில் நிலைபெற் நிருக்கும்படி, சிறுகாற்று ஊழ்ந்து - சிறுகாற்றலவாகின்ற, அசை - அசையாகின்ற, குழை - குழையையணிந்த, செவிய - நிருச்செவியினையுடையோய்.

(வி-ரை.) ஆறிரண்டருக்காவார் - தாத்துரு, சவிதான், அரியமன், மித்திரன், வருணன், அஞ்சுமான, இரணியன், பகவான், திவசுவான், பூஷன், சவித்துரு, துவட்டன் என்பவர். ஒரு சூரியனே நித்திரைமாத முதலாக மேடமுதலிய ஒவ்வோ ராசியிற் பிரவேசித்து இப்பெயர்களோடுபறுவனென்பர். இப்பன்னிரண்டு சூரியரை த்வாதசாதித்தர் என்பர் வடநூலார். அவிர்தல் - பிரகாசித்தல். கதிர் - கிரணம். கனல் - ஆகுபெயர். மதி சந்திரனுக்குப் பொதுப்பெயராயினும், மூடித்த செஞ்சடை யொருத்தன் என மேல்வருதலால் ஒருகலைச் சந்திரனைக் குறித்தது. வெள்ளை-இயற்கையடை. வெள்ளை மதி செஞ்சடை யெனறது முரண்டொடை. ஒருத்தன்-தனியன், "தாயுமிலி தாதையிலி தான்றனியன் காணேடி" என்றார் பெரியாரும். தனியன் என்பதனை அத்வீதியன் என்பர் வடநூலார். உட

உயிர்-உடம்போடுகூடிய உயிர்கள். அகலம்-வடசொல். தென்கீழ்த் திசைப்பாலகனுதலால் அக்கினிதேவனைத் 'தென்கீழ்த்திசையோன்' என்றார். தெறுதல் - எரித்தல், பருதி தெறுதா. தீ-ஆகுபெயர். ஊழித்தீ - வடவைத்தீ; இது பெண்குதிரை வடிவமா யிருப்பது. இது கடனீர் தன்னெல்லே கடவாது நிற்றற்பொருட்டுப் படைப் புக் காலத்தே கடனடுவே யமைக்கப்பட்டது. உடற்றுபு - செய யெனெச்சத்திரிபு. சிகை - கொழுந்து; இதனை ஜ்வாலே யென்பர் வடநூலார். பாசம்-கயிறு; அது காரகம் என மேல் வரலால் உறிக்கயிறு என்றுரைக்கலாயிற்று. பாசத்தா னியன்ற வுறி யென்பர் சில ராகுபெயரான், அப்பொருள் சிறவாமை யுய்த்துணர்க. விதி - வேதவிதி (நியமம்). முக்கோல் - மூன்று மூங்கிலே யொரு ங்கு சேர்த்துக் கட்டி விரதியர் கைக்கொண் டிருப்பது. இது மும்மூர்த்திகளு மொன்முகிய முதற்கடவுளதுருவ மென்றும், மூன்று தத்துவரூபமென்றும் குறிப்பது. ஏனை த்ரிதண்டம் என் றும், இதனை யுடையாரை த்ரிதண்ட ஸ்வாமிகள் என்றுங் கூறுப வடநூலார். முறிக் கலேச் சுருக்கு - துண்டித்த கலேயின் சுருக்கு. சுருக்கு - சுருக்கப்பட்டது. கல்-தூணி, இது தவத்தினாது தண ணிடம் கட்டியிருப்பது; இதனை அவரவித்துக் சுத்தாசமக முதலிய செய்தற்குத் தயகையிற் சுருகிக்கொன்வது இயல்பாதலான். அவரை 'முறிக்கலேச் சுருக்குக் கரமபெறு முனிவர்' என் றார். முனிவர் - கடவுளே இடையருது மந்ரஞ் செய்வோர் (மந்ர ஜீவர்) என்பது பொருள். இது வடசொல்லென றறியாதார் சிலர் தென்சொல்லெனக்கொண்டு உலகத்தை வெறுத்தவர எனுரை ப்பர், அது பொருந்தாதென்பதுய்த்துணர்க. கோபாக்நி வெளிப் படும்வாயில் விழியாதலால் 'விழிவிடு மெரி' என்றார். சாபவாய் நெருப்பு என்றது வாயினுற் சபித்தலே. காணி - உரிமை நிலம். ஆறிரண்டருக்க ரவிர் கதிர்க் கனல் முதலிய வெல்லாக் கனல்களும் தத்தங்கிலேவிட்டுப் பெயராதிருத்தற் காரணம் மூத்தபிள்ளேயாரது திருச்செவி யசைவா னுளதாஞ் சிறு காற் றென்பது இத்தொடர்ப் பொருள்.

'ஆம்பல என்பதுமுதல் 'கரத்த' என்பதுவரை.

(18— 20 வரிகள்.)

(ப-ரை.) ஆம்பல் - யானேயின், முகம் - முகத்தினேயுடைய, அரக்கன் - அரக்கனுனவன், கிளேயொடு - தன் சுற்றத்தாருடன், மறிய - தமோற, பெருங்காற்று விடுத்த - பெருங்காற்றினே வெளிப்

பதித்திய, நெடி - நெடிய, புழை - தொளையையுடைய, கரத்த - துதிக்கையினையுடையோய.

'கருமிடற்று' என்பதுமுதல் 'பதத்த' என்பதுவரை.

(21—22 வரிகள்.)

(ப-ரை) செங்கனி வேண்டி - செங்கனியை விரும்பி, கரு மிடறு - நீலகண்டத்தையுடைய, கடவுளோ - கடவுளாகிய சிவபெரு மானே, இடம்கொள் - இடத்தையுடைய, ஞாலத்து - புவியுருவாகக் கொண்டு, வலம்கொள்ளும் - வலம்வருத, பதத்த - திருவடியை யுடையோய்.

'குண்டு' என்பதுமுதல் 'கடலுதலின்' என்பதுவரை.

(23—25 வரிகள.)

(ப-ரை) குண்டுநீர் - கடலினே, உதித்த - புடைசூழப்பெற்ற, நெடி-பெரிதாகிய, பார்-உலகிலுள்ளாரது, எண்ணமும் - எண்ணங் களேயும், எண்ணு இலக்கமொடு நண்ணி-எண்ணப்படாத இலக்கத் தோடு கூடிய, தூயதமும் - தின்பங்களேயும், அளந்துகொடு - அள விட்டுக்கொண்டு, முடித்தல்-முடிவுசெய்தல், நின்கடன் ஆதலின்- உன் கடன்மை யாதலால்.

(வி-ரை) குண்டு-ஆழம்; கடலினு மாழ்கை நீர்மிலையொன் றின் மையான அதனைக் 'குண்டுநீர்' என்றார். பார் - ஆகுபெயர்.

'கான்முகம்' என்பதுமுதல் 'தொகையும்' என்பதுவரை.

(33—38 வரிகள்.)

(ப-ரை.) கால் - காற்றினே, முகம் எற்ற - தன்னிடத்தேற்ற, தொளைகொள்-தொளையைகொண்ட, வாய்-வாயினையுடைய, கறங் கும்-காற்றடியும், விசைத்த நடை-வேகமாகிய நடையோடு, போகும்- செல்லுகின்ற, சகடக்காலும் - பண்டியினுருளையும், நீட்டி - நீளச் செலுத்தி, வலிதள்ளிய - இணிவினல் தள்ளப்பட்ட, நெடுகயிற்று ஊசலும் - நெடிய கயிற்றிற்பிணித்த ஆசலும, அலமருகாலும்-சுழற் காற்றும், அலகைத்தேரும் - பேய்த்தேரும், குறைதரு - தாழ்தற் குரிய, நிறைதரு - நிறைந்த, பிறவியின் கலக்கமும் - பிறப்பத் தடு மாற்றத்தையும், என்மனத்து எழுந்த-என் னுள்ளத்திற் றோற்றின, புல்மொழித் தொடையும் - புல்லிய சொற்றொடையையும்.

(வி-ரை.) முகம் - இடம். சகடம் - பண்டி. அலமரல் - சுழலல்; பகுதி அலமர. பேய்த்தேர் - கானனீர். கலக்கம் - துன்பமெனினு மாம்.

அருள்' என்பதுமுதல் 'இன்றென' என்பதுவரை.

(39—40 வரிகள்.)

(ப-ரை.) அருள் - அருண்மழையை, பொழி - பொழிகின்ற, கடைக்கண் தாக்கி - கடைக்கண்பார்வை செலுத்தி, இன்று - இப் பொழுது, ஐய-ஐயனே, தெருள் உற - தெளிவுபொருந்த, மூடிப்பை என-மூடிப்பாயென்று கருதி.

(வி-ரை.) பொழியென மேல்வருதலால் அருள் என்பதற்கு அருள்மழையென் றுரைக்கலாயிற்று. தாக்கல் - படச்செய்தல். ஐய எனபதற்கு அழகாக, வியப்ப என்றுரைத்தலுமாம்.

'வரியுடல்' என்பதுமுதல் 'உலண்டதுபோல' என்பதுவரை.

(26—28 வரிகள்.)

(ப-ரை.) நூல்-நூலிழை, வரி - கீற்றுக்களேயுடைய, உடல் - தண்ணுடம்பை, சூழ - வளைய, குடம்பை - கூட்டினை, தெற்றி-உண் டாக்கி, போக்கு - தான் போதற்குரிய, வழி படையாது - வழியை யுண்டாக்கிக்கொள்ளாது, உள் உயிர் விடுத்தலின் - அக்கூட்டினு ள்ளே யுயிர்விடுதலால், அறிவு புறம்போய-அறிவில்லாதது, உலண்டு போல - கோற்புழுப்போல;

(வி-ரை.) உலண்டது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. விடுத்தலின் என்பதில் இன் என்னுமைத்தாவது மூன்றுவதன் கரு விப்பொருட்டு. அறிவு புறம்போய-அறிவுநீங்கின, படையாது விடுத் தலின் எனவியையும்.

'கடற்றிரை' என்பதுமுதல் 'வணங்குதும' என்பதுவரை.

(29—32 வரிகள்.)

(ப-ரை.) கடல் - கடலின், திரை - அலைகள், சிறுக - சிறுகும் படி, மலக்கு - கலங்குதற்கேதுவாகிய, துயர் காட்டும் - துன்பத்தை யுண்டாக்குகிற, உடல் என்னும்-உடம்பென்கிற, சிறை கடிவு புக்கு - சிறைகடிவேபுகுத்து, வாயில் போகாது-வாயிலிற்செல்லாது, உணங் குறும் - வருந்துகின்ற, வெள்ளறிவேமும்-வெள்ளறிவினையுடையே மாகிய யாமும், ஆணம் போற்றும் - வேதங்கள் போற்றுகிற, நின்

கால் - உன் திருவடியை, உற - மிகுதியாக, வணங்குதும் - வணங்குகின்றோம்.

(வி-ரை.) கடற்றிரை இறுக என்றது கடற்றிரைகளிலு மிகப் பலவாக என்றபடி. மலங்கல் - கலங்கல். வாயில் - வாய்தல் (சுழும்) கையென்னும் வாயில்). கிறை - காவல். உணங்குறு - ஒருசொல். வெள்ளறிவு-அறியாமை. போற்றுதல் - துதித்தல். ஆரணம்போற்று கின்காலுற வணங்குதும் என்றது அறிவுருவாகிய வேதங்கள் துதித் தற்குரிய கின் திருவடியை வெள்ளறிவேம் துதித்தற் கியலாமையால் உறவணங்குதும் என்றபடி.

முகத்த, கடத்த, எயிற்ற, செவிய, கரத்த, பதத்த, எண்ணமுந் தியமு முடித்தல் கின்கடனுதலின் முடிப்பையெனக் கருதி வெள் ளறிவேமும் கின்காலுற வணங்குதும் என வினைமுடிவு செய்க.

வெள்ளறிவேம் - ஒருமைத்தன்மைப்பன்மை. முடித்தல் என்ப தற்கு நாசமாக்குதலும் முற்றுறச்செய்தலும் பொருளாதலால் பிற விக் கலகக்கத்தை நாசஞ்செய்வாயென்றும், என் புன்மொழித் தொ டையை முற்றுவிப்பாயென்றும் உரைத்துக்கொள்க.

முருகக் கடவுள் துதி.

நேரிசை யாசிரியப்பா.

பாய்திரை யுடுத்த ஞாலமுடி வென்ன
முடங்குளீ முகத்துப் பஃறே ளவுணனெடு
மிடையுடு வுதிரச் செங்களம் பொருது ,
ஞாட்டினுண் மறைந்து நடுவறு வரத்தால்
வடவைநெடு நாக்கின் கிளைகளவிரிந் தென்னச்
செந்துகிர் படருந் திரைக்கடற் புக்குக்
கிடந்தெரி வடவையிற் றளிர்முக மீன்று
திரையெறி மலைகளிற் கவடுபல போக்கிக்
கற்செறி பாசியிற் கிணக்குழை பொதுளி
அகறிரைப் பரப்பிற் சடையசைந் தலையாது
கீழிணர் கின்ற மேற்பகை மாவின்
ஓருட லிரண்டு கூறுபட விடுத்த
அழியாப் பேரளி யுமைக்க ணின்று
தற்பெயர் புணர்த்திக் கற்பினெடு கொடுத்த

அமையா வென்றி யரத்த நெடுவேலோய்
கீழ்மே னின்றவக் கொடுந்தொழிற் கொக்கின்
கூறிரண் டாய வொருபங் கெழுந்து
மாயாப் பெருவரத் தொருமபி லாகிப்
புடவிவைத் தாறறிய பல்பூலைப் பாநதள்
மண்சிறுக விரிதத மணிப்படந் தூக்கி
வீழுங்கிய பல்கதிர் வாய்தொறு முமிழ்ந்தென
மணிநிரை சிந்தி மண்புக வலைபபக்
கார்விரித் தோங்கிய மலைத்தலைக் கதிரென
ஓவறப் போக்கிய சிறைவிரி முதுகிற்
புவநங் காணப் புறமெழாடு பொலிவதோய்
போழ்படக் கிடந்த வொருபங் கெழுந்து
மின்னனு மாண்ட கவிரவர் பூத்த
சென்னி வாரணக் கொடும்பதை யாகித்
தேவர்மெய் பனிப்புற வான்மிடை யுடுத்திர
பொரியிற் கொறிப்பப் புரிதபொரு ணெடி த
தாமரை பழித்த கைமருங் கமைத்தோய்
ஒருமையு ளொருங்கி யிருகைநெய் வார்த்து
நாரத னேம்பிய செந்தீக கொடுத்த
திருகுபுரி கோட்டுத் தகர்வரு மதியோய்
மூலைமயன வீரண்டு முரட்குவடு மரீஇக்
சூழற்கிடு சுமந்த யானைமகட் புணர்மதோயீ
செங்கட் குறவர் கருங்காட்டு வளர்தத
பைங்கொடி வள்ளி படர்ந்தபுய மலியோய்
இமயம் பூத்த சுனைமாண் டொட்டில்
அறிவிற் றங்கி யறதாய் மூலையுண்
டிழன்மதில் சுட்ட தழனகைப் பெருமான்
வணங்கின் றேறத்தக் குருமொழி வைதோய்
ஓமனு மெழுத்திற் பிரமம் பேசிய
நான்மறை விதியை நடிங்குசிறை வைத்துப்
படைபபுமுதன் மாய வான்முதற் கூடித்
தாதையு மிரபபத் தலையறு விடுதோய்

கூடஞ் சுமந்த கெடுமுடி நேரி
விண்டடை யாது மண்புகப் புதைத்த
குறுமுனி தேற கெடுமறை விரித்தோய்
ஆறுதிரு வெழுத்துங் கூறுகிலே கண்டு
நின்னூட் புகுழநர் கண்ணுட் பொலிதோய்
மணிக்கா லறிஞர் பெருங் குடித் தோன்றி
இறையோன் பொருட்குப் பரணர்முதல் கேட்டு
பெருந்தமிழ் விரித்த வருந் தமிழ்ப் புலவனும்
பாய்பரி யதிய நீயே யாதலின்
வெட்சிமலர் சூழ்ந்த நின்னிரு கழற்கால்
சூழ்ந்தை யன்பினெஞ் செனினி தலேக் கொள்ளு
அறிவுகிலே கூடாச சின்மொழி கொண்டு
கடவுட் கூ வலவா வருந்தியும்
சநகப் பிழையுந் தளளாக் காமமும்
தற்படி கூயரமு படைவகெட் டிறந்தலும்
தென்புலக் கோமகன் றீதறை தண்டமும்
நரகொடி தறநகத் தழல்வரு பீழையும்
நீளா திமபின் முடித்து
மீளாத காட்சி தருதியின் றெனவே

பாய்திரை' என்பதுமுதல் 'நேடுவேலோய்' என்பதுவரை.

(1—15 வரிகள.)

(ப-ரை.) பாய்-பாய்ந்த, திரை-கடலினை, உடித்த - சூழப்பெற்ற, ஞாலம் - உலகத்தார், முடிவு என்ன - யுகமுடிவென்னுமாறு, பல் தோள் - பல தோள்களையுடைய, முடங்கு உளே முகத்து அவுண ரெஞ - சிலகமுகாசுரனுடனே, மிடை - (ஆகாயத்தில்) நெருங்கின, உடு - உடுக்கணங்கள், உதிர - உதிரும்படி, செங்களம் பொருது - போர்க்களத்திற் போர்செயது, நடிவு அறு - (சாவாமல்) பாதியில் ரசுரிமை யழிதற்குக் காரணமாகிய, வரத்தால் - வரத்தினால், ஞாட் பினுள் - போர்க்களத்தில், மறைதது - ஒளிதது, வடவை - வடவைத் தீயினது, நெடு நாக்கின் னிகைகள் - நெடிய நாவின் னிகைகள், விரிந்தென்ன - விரிந்தாற்போல, செம் தகிர் - செம்பவளக்கொடி கள், படரும் - படர்தற்கிடமாகிய, திரைக்கடல் - அலைகளையுடைய

கடலினிடத்தே, புக்கு - புகுந்து, அகல் - அகன்ற, திரை - அலை களையுடைய, பரப்பில் - விஸ்தீர்ணமாகிய அக்கடலில், கிடந்து எரி - எரியாகிற்கிற, வடவையின் - வடவைத் தீப்போல, முகம் - தன்னிடத்தில், தவிர் என்று - தளர்விட்டு, திரை எறி - அலையெறி கின்ற, மலைகளின் - மலைகளைப்போல. கவடு பலபோக்கி - பலகோடு கள்விட்டு, கல்செறி பாசியின் - கல்லிற்செறிந்த பாசிபோல, இனை - இளைகளில், குழை பொதுளி - இலைதழைத்து, சடை முகைந்து - வேர சைந்து, இணர் - பூங்கொத்துக்கள், அலையாது - அசையாமல், நிற் கின்ற - நிழாய்கின்ற, மேற்பகை - முற்பகையாகிய, மாவின் - மாவி னது, ஓர் உடல் - ஒருடம்பானது, இரண்டு கூறுபட - இருகூறும் படி, விடுத்த - எவின, அழியா - குறையாத, பேர் அளி - பெருங் கருணையையுடைய, உமை - பார்வதி, கண்நின்று - எதிர்நின்று, தன்பெயர் புணர்த்தி - தன்பெயரைச் சாத்தி, கற்பினுடு கொடு த்த - கற்பித்தலுடனே கொடுத்த, அமையா வெள்ளி - அடங் காத வெள்ளியையுடைய, நெடு - நீண்ட, அரத்த வேலோய்-செவ் வேற்படையை யுடையோய்.

(விளை.) சூலம் - சூலப்பெயர். திரை-ஆகுபெயர். முடங்குளே - அண்மொழித்தொகைக் காரணப்பெயர். ஞாட்பு-போர்க்களம். நிலவு வரமாவது-சூரன் முற்பிறப்பிலரசனாகி நிரந்தரயுத ஜண்டமகேட்ப அவர் சுப்பிரமணியர்க்கு மயிலும் கோழியுமாகச் செல்லென்றது. வரம்-வேண்டுகோள். நிலவுவரம் என்று பாடமாயின் உண்மையாகப் பொருந்துதற்குக் காரணமாகிய வரமென்க. முகம்-வழுவுரு. மலை களின் என்பதில் இன் ஐ ஏழாவதனுருப்புப்பொருட்டு. கவடு - கோடு (பெருங்கிளை). நிலைப்பரப்பு - கடல் எனினுமமை. போன ஜந்தா தரசுரிமை யீயுமிடைநிலாலத்தி முருகக்கடவுள் நீ பெனக்குச் சத்தியருவென்றமையால் 'மேற்பகை' என்றார் உமைக்குப்பெயர் புண ர்த்திக் கொடுத்தலாவது உமைத்துயென்னும் பெயர் புணர்த்திக் கொடுத் தல். கற்பாவது - சூரனைச் சங்காரிக்கக்கடவையென்று கற்பித்தல். கற்பு - தொழிற்பெயர். அமைதல் - ஒடுங்குதல்.

'கீழ்மேல்' என்பதுமுதல் 'போலிந்தோய்' என்பதுவரை.

(16—25 வரிகள்.)

(பதவுரை) கீழ் மேல் நின்ற - கீழ் மேலாக நின்ற, அ - அந்த, கொடுந் தொழில் - தீத்தொழிலையுடைய, கொக்கின் - மாவினது, இரண்டு கூறு ஆய - இரு கூறுகிய, ஒரு பக்கு எழுத்து-ஒரு கூறெழு

ஈது, பெருவரத்து-பெரியவரத்தினால், மாயா - அழியாத, ஒரு மயில் ஆகி-ஒருமயிலுருவாகி, புடவி வைத்து ஆற்றிய-பூமியைத் தலையில் வைத்துத் தாங்கிய, பல் தலை பாதங்கள்-ஆதிசேடன், மண சிறுக-மண் ணும சிறும்படி, விரித்த-பரப்பின, மணிப்படம்-மணிப்படத்தை, தாக்கி - கொதித்து மேலேயெடுத்து, வீழுங்கிய - (முனனே) விழுங கின, பல் கதிர் - பல கதிர்களை, வாயதோறும் - வாய்களெல்லா வற்றிலும, உமிழ்ந்தென - உமிழ்ந்தாற்போல, மணி நிரை - மணி வரிசையை, மண பூக சிந்தி - மண்ணிற்புகுமாறு சிதறி, அலைப்ப - வருத்தலால், கார் - மேகமானது, விரித்து ஓங்கிய - பரவப்பெற் றுயர்ந்த, மலைதலை-மலையினிடத்தே, கதிர் எனை-ஞாயிறு பொலிக தாற்போல, ஓ அற - ஒழிவற, போகிய - நீண்ட, சிறை வீரி - சிறை விரியாகின்ற, மூதுகில் - அதன மூதுகிலே, புவனம் காண - உலகங காணுமபடி, புதொடி பொலிகதோய - புகழுடனே விளங்குவோய்.

(வி-ரை) வைதாற்றிய வென்பது நிகழ்காலப் பொருடக்து நினறது. மண்ணிற் சிறப்பும்மை தொகைத்து புரிந்த பொருள் - வாணமாதல் ஈற்ற - வேர் மகாகு - மாமம. மாயதல் - அழிதல். ஆறறல-தாங்கல பாதங்கள் - பாமபு, இது புடவிவைத்தாறறிய பஃ றலையென்ற விசேடணத்தால் ஆதிசேடனை யுணாத்திற்று. மணி - அரதகம் கதிர் - ஆகுபெயர். கதல - சிதறல. அலைத்தல் - வருத் தல. கார - ஆகுபெயர். மலைதலை யென்பதில் தலை எழனுருபு. ஓ - ஓசாழுத்தொதாருமொழியாகிய முதனிலைத் தொழிறபெயர். புவ னம - ஆகுபெயர்.

'போழ்பட' என்பதுமுதல அமைத்தோய்' என்பதுவரை.

(26—31 வரிகள.)

(ப-ரை) போழ்பட கிடந்த - பிளவுபடக் கிடக்க, ஒருபகு எழுந்து - வேறொருரு கூறெழுந்து, கொடுமபகை - கொடிய பகையா கிய, மினனல் மாணட - விளகமாகிய அழகு மாட்சிமைப்பட்ட, கவிர் அலர - முருகமலபூப்போனற, பூத்த - செஞ்சுட்டுப் பொலிவு பெற்ற, சென்னி - தலையையுடைய, வாரணம ஆகி - கோழியாகி, தேவர் மெய - தேவர்களுடமபு, பணிப்பு உற - நடுக்கமடைய, பொரி யின்-பொரிபோல, வான - ஆகாயத்தில், மிடை - செருங்கின, உடு திரள் - மீனகணங்களோ, கொறிப்ப - கொறித்ததால, புரிந்த - அது விரும்பின பொருள் - கருமத்தை, நாடி - (தேவர்கு இடுகைணில்

லாது) கருதி, தாமரை பழிதத - தாமரைமலரை யிகழ்ந்த, கை - திருக்கரத்தின், மருங்கு - வலப்பக்கத்தில், அமைத்தோய் - கொடியாக அமைத்துக்கொண்டோய்.

(வி-ரை.) மின்னல் - மின்னுதல். அலர் - தொழிலாகுபெயர். சூடல்-உசசிக்கொண்டை. வாரணம் - சேவற்கோழி. கொறிதத்தல் பல்லினாற் பறித்தல். புரிதல் - விருமபுதல். நாடல் - திருவுளப்பற்றல். மருவகு - பக்கம், அதாவது வலப்பக்கத்தைக் குறிக்கிறது.

'ஒருமையுள்' எனபது முதல் 'மதியோய்' என்பதுவரை.

(32—34 வரிகள.)

(பதவுரை.) ஒருமையுள் ஒருவகி - ஐமபொறியு மொருவழியாக மனத்தைச செல்லுமிடத்துச செல்லவிடாது ஒருவழிப்படுதத, நாரதன் - நாரதமுனிவன, இருகை கெய வார்த்து - இருகையாலும நெயயை வார்த்து, ஓம்பிய - செயதுமுடித்த, செந்தீ - வேள்வியால், கொடுதத - தரப்பட்ட, திருகு - திருகுதலையுடைத்தாய, புரி - சுருளுக்கோழி கூடின, கோட்டு - கொமபினையுடைய, தகர் - தகரின மேல், வரும் - வருகின்ற, மதியோய - மதியி னையுடையோய.

(வி-ரை.) ஒருமை-ஒருவழியாக. ஒருங்கல் - ஒருவழிப்படுதத்தல். ஓம்புதல் - அரக்கர் முதலாயினோரால இடையூறு நேராது காபபாற்றல் எனினுமாம. செநதீ-ஆகுபெயர் திருகு-முறுக்கு. பொரி யென பது பாட்டமாயின் பொருகினையுடைய எனக. தோய் - கொபபு. தகரிலுரும என்றும் பாடம், அதறகுத தகரேறிலருகிற என்றுரைக்க; தகர-அட்டிகடர. மதி-அறிவு. குழவிப்பருவதத்த இவ்வீரத்தொழினிகழ்ததினமையால் 'மதியோய்' எனறார்.

மூலே' என்பதுமுதல் 'புணர்ந்தோய் என்பதுவரை.

(35—36 வரிகள்.)

(பதவுரை) முரண்-மாறுபாட்டினையுடைய, இரண்டு குவடு என-இரண்டு மலைகளென்னுமாறு, மூலமரீஇ - மூலைகளைப் பொருதி, குழற்காடு சுமதத - கூந்தற் காட்டினைச் சுமதத, யானை மகள்-தெய்வயானையை, புணர்ந்தோய் - சோந்தோய.

(வி-ரை.) மரீஇ யென்பதற்குப் பகுதி மருவு. மூலைமரீஇயென் னுது குவமரீஇ யெனினுமாம. என்னெனின், யானைமகளென்ற

தில் யானையாகிய மகளென் றேரையுண்டாதலால், யானையானது மகளானதற் கேற்பத் தனக்குரிய குறிஞ்சியாகிய மலையையும் தாவுலவுங் காட்டையும் மூலையாகவும் முழவாகவும் மருவிச்சுமத்தென்றற்கு 'யானைமகள்' எனறார். காடு மிருதிருத்து வந்தது.

'செங்கண்' என்பதுமுதல் 'மலையோய்' என்பதுவரை.

(37—38 வரிகள்.)

(ப-ரை.) செங்கண் - செவந்த கண்களையுடைய, குறவர் - குன்றவாணர், கருங்காட்டு - கரியகாட்டில், வளர்த்த - காப்பாற்றின, வள்ளி பை கொடி-வள்ளியாகிய பசியகொடியான து, படர்ந்த-படரப்பெற்ற, புயம் - திருத்தோள்களாகிய, மலையோய்- மலையினையுடையோய்.

(வி-ரை.) செங்கண் கருங்காடு என்றது முரண்டொடை. பைங்கொடி செவ்விக்கொடியுமாம். கொடிக்குப் படர்தலும் மலைக்கு அசற்கிடமாயிருத்தலும் இயல்பெனபது போதர 'பைங்கொடி வள்ளி படர்ந்த' புயமலை யென்றார்.

'இமயம்' என்பதுமுதல் 'வைத்தோய்' என்பதுவரை.

(39-42 வரிகள்.)

(ப-ரை.) இமயம் - இமயமலையிலுண்டாகிய, மாண்-மாட்சிமைபொருந்திய, சுனை - பொய்கையிலுண்டாகியி, தொட்டில்-மலராகிய தொட்டிலில், அறிவின் - அறிவோடு, தங்கி - பொருந்தி, அறுதாய் முலை உண்டு - ஆறுதாயர் முலையுண்டு, உழல் - திரியாநின்ற, மதில்-முப்புரத்தை, நகை தழல்-சிரிப்பாகிய நெருப்பினல், சுட்ட - எரித்த, பெருமான் - சிவபெருமானுடைய, வணங்கிறை எத்த - தொழுதுநின்று துதிக்க, குருமொழி வைத்தோய்-அவர்க்குக் குருமொழியை வைத்தோய்.

(வி-ரை.) தங்கி உண்டு வைத்தோய் எனக் கூட்டுக. சிவபெருமான் உமையொடு புணர்ந்துண்டாக்கிய கருவை இந்திரன் பல கண்டங்களாகச் சேதித்தலால் எஞ்சின கருவை அமரர் சோபதியெனச் சமாதியினுணர்ந்து அவன்பாலேற்றுக்கொண்டுபோன முனிவரெழுவரும் இறைவன் கண்டமாக்கிய கருவைக்கவர்ந்து அங்கியிற் பெய்து, அக்கருவைக் கடவுட் கற்பினையுடைய அருந்ததி யொழியக் கார்த்திகையாகிய அறுவரும் தம் சுனைலர் வேண்ட வயின்று சூற்கொண்டு சரவணப்பொய்கை மலரி லீன்றமையால் 'முலையுண்டு' என்றார்.

'பதுமப்பாயல்" எனப் பரிபாடலிற் கூறப்பட்டமையால் மலரைத் தொட்டிலாக்கினர். அறிவின் என்னுமின் மூன்றனெடுவின்பொருளாது. முலை-முலைப்பால் (ஆகுபெயர்). உழல் மதில்-ஐங்கமபட்டணங்கள். இவை மூன்றென்னுந் தொகையவாய இரும்பு பொன் வெள்ளி என்பவைகளானியன்றன. "இரும்புமாமதில் பொன்னிஞ்சி வெள்ளிப் புரிசையன்ரூர், துரும்புறச்செற்ற கொற்றத்தெம்பிரானதில் லைச் சூழ்பொழிற்கே" என்ரூர் மணிவாசகரும். தழனகை-சழலாகிய நகை, தழலேயுடைய நகை என விரித்தலுமாம். பெருமான்-பெருமையுடையான். குருசிஷ்ய பாவந்தோன்ற 'வணஙகின நேத்தக் குருமொழி வைத்தோய்' என்ரூர். குருமொழி வைத்தலாவது உபதேசித்தல். அது ஓங்காரார்த்தோபதேசம். இதனை,

"தேமொழி யத்தன் பெறவோர் தனக்கன்று சேணுலகத்
தேமொழி யத்தஞ் சினங்காட் டவுணரைச் சேடகபத்
தேமொழி யத்தம் புயமலர் சூடிகை சிந்தவென்ற
தேமொழி யத்தம் பதினு லுலகுமந் திக்கதொன்றே.'

என்றற்றொடக்கத்தனவற்ரு னினிதுணர்க.

'ஓமெனும்' என்பதுமுதல் 'விடுத்தோய்' என்பதுவரை. (3—46 வரிகள்.)

(ப-ரை.) பிரமம் பேசிய - பிரமமாகப்பேசின, நூல்மறை விதியை-நான்கு வேதங்களையுடைய பிரமனே, ஓம் என்னும் எழுத்தின் - ஓமென்னு மக்கரத்தால், நடுங்கு - நடுங்குதற் கேதுவாகிய, சிறை வைத்த - சிறைப்படுத்தி, படைப்பு முதல் மாய - படைத்தல் முதலிய தொழில்கள் நடவாமையாலே, கூடி-அவை நடக்கும்படி, வான் முதல் - தேவர்களும், தாதையும் - தந்தையாகிய சிவபிரானும், இரப்ப - வேண்ட, தளை விடுத்தோய் - விலங்கு விடுத்தோய்.

(வி-ரை.) எழுத்தின் என்பதில் இன் என்னும் ஐந்தாவது மூன்றுதன் கருவிப்பொருளில் வந்தது. ஓமென்னுமெழுத்து - பிரணவாக்கரம். பிரமம்பேசல்-தானே பிரமமென்றல். 'வேதங்கட் கலகில வேனும், பயின்று வருவன நான்சே யாதலின் 'நான்மறை' என்ரூர். விதி - முதனூலெத் தொழிலாருபெயர். விதித்தல் - படைத்தல். சிறை - சிறைச்சாலை (காவல்). வான் - ஆகுபெயர். படைப்பு முதலாய தொழில்கள் இவனுனே நடவாவேணும் இவனது படைப்பு நிகழ்ந்தாலன்றே யேனையாது அளிப்பழிப்புக்கள் நிகழ்வது, ஆதலால்

படைப்புமுதல்மாய என்பதற்குப் படைப்புமுதலாய தொழில் நடவாமையால் எனப் பொருளுரைக்கலாயிற்று. இவ்வாறன்றி, படைப்பு முதல் - படைப்பாகிய முதற்றொழில் என்றுரைத்தலுமாம். தூளி - விலங்கு. சிறைவைத்து சிறைவிடித்தோய் என்னுந் தூளி விடித்தோய என்றல் மூணுமேமையினை. மூரணது, என்னை? சிறை வைக குஞ்சுகால் தூளியிட்ட வைப்பது பெருமழுகுகாதலினென்க. மாய வெனனும் செயவெனெசசம் காரணப்பொருட்டி கூடியென்பதைக் கூடவெனத்திரிக்க. அது - பகுதிப்பொருள் விகுதி. தாதையும் எனனுமும்மை இறந்தது தழீ இயது, உயர்வு சிறப்புமாம். பேசிய வீதினிய யெனவும் வைத்துவிடித்தோய் எனவுமியையும்.

'கூடம்' என்பது முதல் 'விரித்தோய்' என்பது வரை.

(47-49 வரிகள்.)

(பதவுரை.) கூடம் சுமந்த - கூடமானது தாங்கிய, நெடு முடி - நெடிய குவடுகளையுடைய, நேரி-நேர்மையானது, விண் தடையாத - ஆகாய வழியைத் தடுக்காது, மண புக - மனனுலிலழுந்தும்படி, புதைத்த - மறைத்த, குறுமுனி - அகத்திய முனிவன். தோற - தெளியும் வண்ணம், நெடுமறை - பெரிதாகிய வேதாரத்தத்தை, விரித்தோய் - விரித்துரைத்தோய.

(வி-மரை.) கூடம்-மேன்றாகச் செய்யப்பட்ட கோட்டம். "மாடஞ் செய்" என்னு முதற்குறிப்புள்ள நிருக்கோவையார் செய்யுளில் "கூடஞ்செய் சாரற் கொடிச்சியென்றேனறு கூறுவதே" என் பதனுரையை யீண்டு நினைக்க. குவடு-சிகரம். கூடஞ்சுமந்த என்பதற்கு மரத்தினிளாற் கூடஞ்செய்தாற்போன்ற எனினுமாம். நேரி சோழதேயத்துள தோர்மலை. தடைத்தல் - தடுத்தல். விண்-ஆகு பெயர். அறுகுட்டப் பரிமாணாதலால் அகத்தியரை 'குறுமுனி' என்றும், உருவிற் குறியரேனும் நெடுமறை விரிப்பாரேனு மறிவினரென்பது தோனற 'நெடுமறை விரித்தோய்' எனறும் கூறினர். குறுமுனி நெடுமறை யென்பன முரணெடைை. முனி மகதேலன, இத் தொடரான் இவர் அகத்தியர்க்குப் பரமாசாரிய னென்பதினிது விளக்கப்பட்டது.

அறமுதலிய நாற்பொருளு மறைந்திருத்தற் கிடனுதலால் வேதத்தை மறையெனபது தமிழறிஞர் வழக்கு. வேதம் என்பதற்குச் சதுர்வித புருஷார்த்தங்களையும் அறிதற் கருவியாபுள்ளது எனப் பொருள் கூறுவர் வடநூலார். விதி-தானு, (பகுதி).

'ஆறு' என்பதுமுதல் 'போலிந்தோய்' என்பதுவரை.

(50—51 வரிகள்.)

(ப-ரை.) ஆறு திரு எழுத்தும் - ஆறு திருவெழுத்துக்களும், கூறும் - சொல்லுகின்ற, நிலை - நிலையை, கண்டு - அறிந்து, நின் - உனது, தாள் - திருவடியை, புகழுநர் - துதிப்போர்கள், கண் உள் - கண்ணினுள்ளே, பொலிக்தோய் - விளங்குவோய்.

(வி-ரை.) ஆறுதிருவெழுத்து என்றது "சுமாராயநம" என்னும் மந்திரத்தை. இது கூறுநிலை மந்திர காத்திரத்தாணுக்க. கண்டு என்ற நீண்டறிதென்னும் பொருட்டு. கண் முகக்கண் அகக்கண் இரண்டுமாம்; அகக்கண் - அறிவு. பொலிதல்-மிக்கு விளங்குதல்.

'மணிக்காலநிஞர்' என்பதுமுதல் 'நீயேயாதலின்' என்பதுவரை.

(52—55 வரிகள்.)

(ப-ரை.) மணிக்கால்-அரதகப் பிறப்பிடத்தை, அறிஞர் - அறிவோராகிய மதுரை வாணிகரது, பெருங்குடி - பெரிய குடியில், தோன்றி - பிறந்து, இறையோன் பொருட்கு - இறையோன் கூறின பொருட் கூற்றிற்கு, பரணர்முதல் கேட்ப - பரணர் முதலாயினோர் கேட்க, பெருந்தமிழ் - பெரிய தமிழில், பாய் - பரந்த, பார் அறிய - உலகிலுள்ளார் அறியும்படி, விரித்த-பொருள் விரித்த, அருந்தமிழ்ப் புலவனும்-அரிய தமிழ்ப்புலவனும், நீயே ஆகலின்-நீயேயாதலால்.

(வி-ரை.) கால் - பிறப்பிடம். இறையோன் பொருள் - இறையனாரகப்பொருள். பரணர் முதலாயினோர்-பரணர் முதலாகிய கடைச் சங்கத்தார் நாற்பத்தொன்பதின்மர். பாய் - பாய வென்பதனீறு குறைந்தது. பார் - ஆகுபெயர். புலவனும் என்னும்மை யெண்ணும்மை, இறந்தது தழீஇயதுமாம். வணிகர் பெருங்குடியிற் றோன்றி யென்றது பூரிஜிழார்க்கு உருத்திர சன்மாராகத் தோன்றி யென்ற வாறு. தமிழில் எழுத்துஞ் சொல்லுமேயன்றிப் பொருளின்மையால் பாண்டியனுஞ் சங்கத்தாரும் வேண்டிக்கொள்ள, சொக்கநாதர், "அன் பினேந்திணை" முதலாக அறுபது சூத்திரமாகப் பொருட்கூறு வகுத் தருள, அதற்கு நக்கீரர் மெய்யுரைகாண, ஆலவாய்ப் பெருமானடிக ளுரைசெய்யக்கேட்டுக் கண்ணீர்வார மெய்ம்மயிர் சிலிர்ப்ப உருத்திர சன்மர் சங்கப்பலகையிலிருந்து குறிப்பிற் பொருள் விரித்தமையால் 'அருந்தமிழ்ப்புலவன்' என்றார். குறிப்பிற் பொருள் விரித்தமை

யெற்றுக்கெனின், ஐயாட்டைப் பிராயத்து மூங்கைப்பிள்ளேயா யிருக் கமையானென்க.

'வேட்சிமலர்' என்பதுமுதல் 'இன்றெனவே' என்பதுவரை

(56—65 வரிகள்.)

(ப-ரை.) அறிவுகிலேகூடா - அறிவுகிலே பெறுத, சில்மொழி கொண்டு - எமது சில சொற்களே யேற்றுக்கொண்டு, கடவுள் கூறு கடவுளாகிய வுன்னேப் புகழாமைக் கேதுவாகிய, உலகா அருத்தி யும்-கெடாத ஆசையும், சாநப்பீழையும்-பிறவித்துன்பமும், தள்ளா-ஒழிக்கப்படாத, காமமும் - காமநுகர்ச்சியும், சற்படி 'தயரமும் - தன்னலுண்டாகிய தன்பமும், அடைவு கெட்டு-முறைதப்பி, இற த்தலும் - நடத்தலும், தென்புலக்கோமகன் - இயமன், நீ-நெருப் புப்போல, சேறு - வருத்துகிற, தண்டமும்-ஒறுத்தற்றுன்பமும், நரகொடு துறக்கத்து - நரகத்தும் சுவர்க்கத்தும், உழல்வரு-உழலா கின்ற, பீழையும் - துன்பமும், நீளாது - நீட்டியாது, இம்பரில் - இம் மையிற்றானே, முடிதிரு - முடிவுசெய்து, இனறு - இப்பொழுதே, மீளா - மீளாதபடி, காட்டி - முதிர்ப்பேற்றை, திருநி என - தருவை யென்றெண்ணி, வெட்சிமலர்மாலே, சூழ்ந்த - அணி யப்பெற்ற, நின் - உனது, கழல் - வீரக்கழலணிந்த, இருகால்-இர ண்டிருவடிகளேயும், குழந்தை அன்பினெடு - குழந்தையன்பினல், சென்னி சேலக்கொள்ளுதும் - (யாம் எமது) சென்னிமேலேற்றுக்கொள் வோம்.

(வி-ரை.) நிலேகூடல் - நிலேபெறல். சின்மொழி - புன்சொல் எனினுமாம். மொழிகொண்டு என்பதில் கொண்டு மூன்றுவதன் சொல்லுருபு. உலத்தல் - கெடுதல். பிறவித்துன்பங்களாவன - தன் னலுளவாவனவும், பிறவுயிர்களா லுளவாவனவும், தெய்வத்தாலுள வாவனவுமென மூவகையா னுளவாகுந் துன்பங்கள்; இவற்றையே ஆன்மிகம் பௌதிகம் தைவிகம் என்பர் வடநூலார். "ஊரு ளெழுந்த வுருகெழு செந்தீக்கு, நீருட் குளித்து முயலாகும் - நீருட், குளிப்பி னுங் காமஞ் சுடுமே குன்றேறி, யொளிப்பினுங் காமஞ் சுடும்." என்ப வாகலின் 'தள்ளாக்காமம்' என்றார். அடைவுகெட்டிறத்தல் - வரம்பு கடந்து நடத்தல். தென்புலம் - தென்திசையாகிய இடம், அதற்குத் தலேவனுதலால் இயமனே 'தென்புலக் கோமகன்' என்றார். தெறு தல் - வருத்துதல். தண்டித்தலானுளதாம் துன்பத்தைத் தண்ட

மெண்ணூராகுபெயரான. நாகொடு எனபதில் ஒடு உமமைப்பொருட்டு, இசைநிறைபெயினினுமாம் உழல்வரல்-ஒருசொல். முடித்தல் - ஒழித்தலு முற்றுவித்தலும் ஆதலால் அருத்தி முதலியவற்றை யொழித்தல எனறும, எமது புனசொறபாவை முற்றுவிப்பாயெனறும் உரைத்துகொள்க. இனமொழியெனறது சிலசொல்லானியன்ற பாவினை (பிபகுதனை) மீளாககாடசி - மீளாமைக கேதுவாகிய நினது தரிசனம் எனினும பொருநதும அறிவுறிலே கூடாத இனமொழிகொணடு நீளா திம்பரின முடிதுத தருதியினமறன நின்னிரு கழற்கால சென்னிதலேக கொள்ளுதும எனவும, அருத்தி முதலியவறறை யொழிசது மீளாககாடசி தருதியென நினனிருகழறகால் சென்னி தலேகொ ளளுதும் எனவு முடிதது கூடகொளக கொளளுதும் எனப தறகு வினைமுதலாகிய யாம எனபது வருவிதது கூடகைகப்பட்டது.

வேலேலாய பொலிநதோய உமைததோய மதியோய புணர்ந தோய மலேயோய வைததோய விடுத்தோய விரிததோய பொலந தோய், புலவனு நீயேயாதலின், அறிவுறிலேகூடாச இனமொழிகொ ணடு அருதது முதலியவறறை நீளாது முடித்துக காட்சி தருதியென்ற நினனிரு கழற்கால சென்னிதலேக கொள்ளுதுமென வினை முடிக்க.

திருக்கோவையார் கருத்-ம் செய்யுள்.

தமர் நினைவுரைத்து வரைவு கடாதல்.

தமர்நினைவுரைத்து வரைவுகடாத லென்பது-இற்செறிவறிவித்து வரைவு கடாயதோழி. அவண் மூலை தாங்கமாட்டாது இடைவருந்துவதனைக் கண்டு எமரிற் செறி பாராக நினையாநின்றார். அயலவரு மகட்பேச நினையாநின்றரெனத் தமர்நினைவுரைத்து வரைவு கடாவாகிற்றல். அதற்குச செய்யுள்:—

"சுற்றுஞ்சடைக்கற்றைசிற்றம்பலவற்றொழாதுதொல்சீர்
கற்றுமறியலிற்சிலம்பாவிடைதைவதுகண
டெற்றுந்திரையின்னமிர்தையளித்தமரிற்செறிப்பார்
மற்றுஞ்சிலபலசீரூர்பகர்பெருவார்தைகளே."

"விற்செறிதுதலியையிற்செறிவிப்பரென்
றெளிவேலவற்குவெளியேயுரைத்தது"

(போ-ரை.) சிலம்பா! சுற்றப்பட்ட சடைத்திரளையுடைய சிற்றம் பலவனே முற்பிறவியிற் றொழாமையான் தூல்களைக் கற்றுவைத்தும் அவனது பழைய புகழை யறியாதாரைப்போல, மூலைதாங்கவில்லா திடைவருந்துவதனைக் கண்டு, எற்றுந்திரையையுடைய கடலிற்பிற ந்த இனியவமிர்தத்தை யொப்பாளை இப்பொழுது தமர் நின்செறிப் பார், அதுவுமன்றி, இசசீரூராராற் பகரப்படும பெரியவார்தைகள் சில பலவுள, எ-று.

(வி-ரை.) எற்றுந்திரை யென்பது நினையாகிய தன் பொருட கேற்ற வடையடித்துநின்றதோ ராகுபெயர். இற்செறிப்பார் என் பது ஆரீற்று முற்றச்சொல். வினைப்பெயர் என்பாரும் செறிப்பர் என்று பாடமோதுவாருமுளர். சிலபலவென்பது பத்தெட்டெனென் பதுபோலத் தணிபின்மைக்கண் வந்தது. சீரூர்ப்பகரென்பதூஉம் பாடம்.

சிவமயம்.

நூல்.

நேரிசையாசிரியப்பா.

அழுதழுந் தருவும் பணிவரப் படைத்த
உடலக் கண்ணை னுலகுகவர்க் துண்ட
கலவுண்ணை நெடுஞ்சூர்க் கிளைகளம் விட்டொளித்த
அருணைறைந தமைந்த கல்லிய ருளமெனத்
தேக்கிய தேனுட னிருன்மதி கிடக்கும்
எழுமலே பொடித்த கதிரிலே நெடுவேல்
வளரிதுணைக் கேள்வன் புள்ளுடன் மகிழ்ந்த
கறங்குகா ருவிப் பரங்குன் றுடித்த
பொன்னகர்க் கூடற் செண்னியப்பிறையோன்
பொதியப் பொருப்பன் மதியக் கருத்தினைக்
கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறிப்
பொற்குவை தருமிக் கற்புட னுதவி
எனனுளங் குடிகொண் டிரும்பய னளிக்கும்
கள்ளவிழ் குழல்சேர் கருணையெம பெருமான்
மலர்ப்பத நீங்கா வுளப்பெருஞ் சிலம்ப
கல்லாக் கபவர்க் கருநாற் கோமறை
சொலல்லா தோமெனத் தணைமுலே பெருத்தன
பலவுடம் பழிக்கும் பழியு னுணவினர்
தலைமெனத தேய்ந்தது துடியெனு நுசுப்பே
கடவுட் கூரு ருளமெனக் குழலும்
கொன்றைபுற வகற்றி நின்றவிருள் காட்டின
சுரும்புபடிந் துண்ணுங் கழுநீர் போலக்
கறுத்துச் செவக்தன கண்ணிணை மலரே
ஈங்கிவை நிற்க ஸ்ரூர் பெறுந்தமர்
இல்லிற் செறிகருஞ் சொல்லுடன் சின்மொழி
வில்லுந் தமியிற் கூறினர்
உள்ளங் கழுதலுக் கண்செவந் தருந்தே.

பதுதி-பகற்குறி. துறை-இற்செறிவறிவித்து வரைவு கடாவிய தோழி, தலைவியவயவங்கண்டு எமர் இற்செறிப்பாராக நினையாகின்றார், அயலவருமகட்பேச நினையாகின்றாரெனத் தமர்நினைவுரைத்து வரைவுகடாதல்.

'அழுதழும்' என்பதுமுதல் 'பிறையோன்' என்பதுவரை.

(1—9 வரிகள்.)

(பதவுரை) அழுதழும் - அழுதழுது, திருவும் - கற்பகத் திருவும், பணிவரை - முன் தாழ்தலுண்டாகையால், படைத்த - பின படைக்கப்பட்ட, உடலை அகண்ணன் - இந்திரனது, உலகு - உலகத்தை, கவர்த்து உண்ட - கபர்த்துணடற் கேதுவாகிய, நெடி - பெரிய, களவு உடை - கள்வினையுடைய, சூர் - சூரனது, கிளை - தம்பி, களம விட்டு ஒளித்த - போர்க்களத்தை விட்டு மறைந்த, அருள் நிறைந்து அடைந்த - கருணை நிறைந்தொடுங்குதற்குக் காரணமாகிய, கல்வியர் - கல்வியை யுடையாரது, உள்ளம் என - மனம் அதகல் யார் தேசுபோல, தேசுகிய தேனுடன் - நிறைந்த தேன் கூடானது, மதி கிடக்கும் - மதி போற கிடக்கற்கு, ஒ ழுமலையை, பொடித்த - துகளாக்கின, சதிர்- ஒளியையுடை ய - தகட்டு வடிவாகிய, நெடுவேல் - நெடிய வேற்படையை ய, வள்ளி தூணை - வள்ளிநாய்கரியாருக் கொப் பாகிய, கேள்வன - கணவன், புள்ளுடன் மகிழ்ந்த - புள்ளோடுகூடி மகிழ்ந்த, சதங்கை - ஒலிக்கின்ற, கால் - நீரையுமிழாநின்ற, அருவி - அருவியா ரவளையுடைய, பரங்குன்று உகந்த - திருப்பரங்குன்றஞ் சூழ்ந்த, பொன்னகர் - பொன் மாடங்களையுடைய, கூடல்-மதுரையி லெழுந்தருளிய, சென்னியம் பிறையோன் - சிரத்தில் அழகிய பிறையையுடையோன்.

(விளக்கம்.) உடலகக்கண்ணன் என்பதில் அகரம் பண்பு விகாரம். ''உண்டற் குரிய வல்லாப் பொருளை, யுண்டனை போலக கூறலும் விதியே'' என்ற விதியால் 'உண்ட' என்றார். தாருகாசுரனைக் 'கிளை' என்றார் தனையாகலின். விட்டென்ற செய்தெனெசசம் காரண காரியமின்றி வந்தது, ''அகனமர்ந்து செய்யாளுறையும்'' என்பதிற் போல. தேனையுடைய விழுட்டென் மதிவேற்றுமை தெரியாத கிட கும் எனினுமாம, கிடக்குமென்னும் பெயரெச்சம் கிலப்பெயர் கொண்டது. கதங்கி வீழாநின்ற அருவியெனப் பொருள்கொள்ளின், ''கிலதலிலை யுதப்பெலா நிறைதளும்பு முகனே'' என்றற்போலக

கொள்க. பிறையோன் என்பதனைப் பெயராக்காது, "முன்னத்தி னுணருங் கினவியு முளவே" என்பதனை லமைக்கினுமாம். கினைகள் விட்டொளிர்த்த என்பது பாடமாயின் களம் என்பது கள்ளென வீகாரமாயிற் றெனக்கொள்க. இவ்வாறு களமென்றுரைப்போல அகவற் பாவி லசைமிக்கு வருதலுமுண்டு. பணிவர என்பதற்குச் சொல்வழியி னிற்க வென்றலுமாம். இதனினைப் பணிந்துநிற்ப வெனினு மாம். தருவென்பது மரப்பொதுப் பெயராயினும் பணிவரப் படை த்த வுடலக்கண்ணன் என மேல் வருதலால் கற்பகத்தருவைக் குறித்தது. அகலிகையிழைவாற் கௌதமர்சாப மேற்றமைதோன்ற 'உடலக்கண்ணன்' என்றார். பங்குன்று ஆறபடை வீட்டினுளொ ன்று. பெர்ன்னகர் கூடல் என்பதற்குப் பொன்னுலகுபோலுங் கூடல் என்றுரைப்பினு மமையும்.

'போதியப்பொருப்பன்' என்பதுமுதல் 'கருணையம்பெருமான்' என்பதுவரை.

(10—14 வரிகள்.)

(பத-ரை.) பொதியப் பொருப்பன்-பாண்டியன், அற்புடன்-அன் போடு, பொற்குவை-பொற்கிழியை, தருமிக்கு-தருமியென்னும் அர்ச கருக்கு, உதவி - கொடுப்ப, மதியக் கருத்தினை - அவன் மனக்கரு த்தை, கொங்குதேர் வாழ்க்கை - கொங்குதேர் வாழ்க்கையெனு முதற் குறிப்பினையுடைய, செந்தமிழ் கூறி-செந்தமிழ்ப்பாட்டருளி, என் உள்ளம் குடிகொண்டு - என்மனதிற் குடிகொண்டு, இரும் பயன் - பெரும்பயனே, அளிக்கும்-தந்தருளுகின்ற, கூன் அவிழ் குழல் சேர் - உமாதேவியைச் சேர்ந்த, கருணை - கிருபையையுடைய, எம் பெருமான் - எம்மிறைவன் (ஆகிய அவனது).

(வி-ரை.) உதவி உதவ என்பதனைப்போல, திரியாது கிடந்தவாறு பொருள் கொள்ளினுமாம். இரும்பயன் முத்திப்பேறு அதனிற் பெரும்பய னெண் ணின்மையான்; "சிறப்பீனும்" என்னுர் பெருநாவல ரும். இருப்பயன் எனப் பாடமோதி இம்மை மறுமைப் பயனென் றுரைத்தலு மொன்று. குடிகொண்டுசேர் எனவியையும். பாண்டி யற்குத் தசாங்கங் கூறுங்கால் மூதற்கட்கிறத்தினிற்றலால் 'பொதியப் பொருப்பன்' என்னுர். "மலையா நாடு" என்னுஞ் செய்யுளாற் றசாங்க மினிது விளங்கும். அற்பு அன்பென்பதன் திரிபு. கள்ளவிழ்குழல்-அன்மொழித்தொகைக் காரணப்பெயர்.

மலர்ப்பத நீங்கா வுளப்பெருஞ் சிலம்ப.

(15—வது வரி.)

(ப-ரை.) மலர் - தாமரைமலர்போலும், பதம் - திருவடியை, நீங்கா-நீங்காத, உள்ளம் - மனத்தையுடைய, பெருஞ்சிலம்ப-பெரிய சிலம்பனே.

(வி-ரை.) இறைவனது திருவடிக்குவமையாகப் புணர்க்கப்படுதலால் மலர் என்றது தாமரைமலருக்காயிற்று. பதத்தை யெழுவாயாக்கித் திருவடியானது நீங்காதவென் றுரைப்பினுமாம். சிலம்பன்-மலைநாடன்.

'கல்லா' எனபதுமுதல் 'பெருத்தன' என்பதுவரை.

(16—17 வரிகள்.)

(ப-ரை.) கல்லா-கற்காத, கயவர்க்கு-கீழ்மக்கட்கு, அருநூல்-அரியதூலாகிய, கிளை-சாகைகளையுடைய, மறை-மறைப்பொருளை, சொல்லினர்-சொன்னவரது, தோம் என-குற்றம் பெருத்தாற்போல, தூணை மூலை-மூலையிரண்டும், பெருத்தன-பருத்தன.

(வி-ரை.) கல்லாக்கயவர் - கல்வியறிவில்லாத கீழ்மக்கள்; கயமை-கீழ்மை. மறைப்பொருள்-வேதார்த்தம, ரஹஸ்யார்த்தம் எனினுமாம்? 'அருநூல்' என்றார் இறைவனருளினீ முதனூலாதலான். தோம் - பாவீமமாம். பொருளின் றொழில் உவமையினுங் கூட்டியுரைக்கப்பட்டது. பருத்தன என்பதற்குப் பருதி பருமை, பராரை மராத்து என்பதிற்போல. "உசாவினைப் பேதைக்களிப்பான் பிழைப்பிற் பெருகினவே, கோதைக் கொம்பன்னர் குயம்" என்றார் பிறரும் மூலை-சாதிப்பெயர். இனைதினெனவறிந்த முற்றும்மை தொக்கது.

'பலவுடம்பு' என்பதுமுதல் 'நுசுப்பே' என்பதுவரை.

(18—19 வரிகள்.)

(ப-ரை.) பல உடம்பு-பலவுடம்புகளை, அழிக்கும்-தைத்தற்குக் காரணமாகிய, பழி-பழித்தற்குரிய, ஊண் உணவினர்-ஊணுணவுடையோரது, தவம் என-தவம் அறத்தேய்ந்தாற்போல, துடி என்னும் நுசுப்பு-துடியென்றற்குரிய இடையானது, தேய்ந்தது-அறத் தேய்ந்தது.

(வி-ரை.) பலவுடம்பழித்தலாவது-பலவுடம்புகளினின்றவுயிரினைப் பிரித்தல். பழி - அறிஞராலும் அவர்செய்த அறிவு நூல்க

ளாறும் பழிக்கப்பட்ட. ஊனுணவினர்-ஒரு சொல். பழியென்னுங் காலங்காந்த பெயரெச்சத்திற்கிது முடிபாயிற்று. பொருளின்றெழில் உவமையினுங் கூட்டி யுரைக்கப்பட்டது. தேய்ந்ததென்றது முன் னெல்லாம் துடிபோலு நுசுப்பின்று அதுவுமின்றி அறத்தேய்ந்த தென்றபடி.

'கடவுள்' என்பதுமுதல் 'காட்டின' என்பதுவரை.

(20—21 வரிகள்.)

(ப-ரை.) குழலும் குழல்களும், கொன்றை - கொன்றைக் காயை, புறவகற்றி - முல்லைநிலத்தகற்றி, கடவுள் - இறைவனே, கூரர்-புகழாதவரது, உள்ளம் என-மனமிருளைக் காட்டினாற்போல, நின்ற இருள் காட்டின - நிலைபெற்ற இருளைக்காட்டின.

(வி-ரை.) கடவுட் கூரு ருளமெனக் குழலிருள் காட்டினவென் பதற்கு வண்ணவுவமை யொவ்வாதேனும் உவமைக்கண்ணிறத்தை விட் டறியாமையென்னும் பண்புபற்றிக் கூறினர், இது பண்புவமை. இது "புறங்குன்றி கண்டனைய தோடு மகங்குன்றி, மூகைற் கரியா ருடைத்து" என்பதனு லினிது விளங்கும். பண்பு-குறிப்பின்றி நிக ழுங் குணம். கொன்றை புறவகற்றி யென்றது தற்குறிப்பேற்றம். காட்டினவெனக் குழல் மயிர் மாத்திரையா யையம்பாலெயு மூணர்த் தலிற் பன்மை கூறினர். இத்தொடர்க்கண்ணும்பொருளின் றெழி லுவமைக்கண்ணுங் கூட்டியுரைக்கப்பட்டது. குழலும் என்றவும்மை யிறந்ததுதழீஇயது. கடவுட்கூரு ருள்ளமுங் குழலும் நின்றவிருள் காட்டின்வென்றார் பகலோர்க்கும் பின்னிடாமைபற்றி. ஐம்பாலா வன - குழல், கொண்டை, சுருளி, பனிச்சை, முடி யென்பன. இவற் றுள் குழல் என்பது சுருட்டி முடிப்பது, கொண்டை யென்பது பக்கல் முடிப்பது, சுருள் எனபது பினனே செருகுவது, பனிச்சை யெனபது பினனிவிடுவது, முடியென்பது உச்சியின் முடிப்பது.

'சுரும்பு' என்பதுமுதல் 'மலரே' என்பதுவரை.

(22—23 வரிகள்.)

(ப-ரை.) சுரும்பு - வண்டுகள், படிந்து உண்ட-படிந்து தேனு ண்ட, கழுநீர்போல-கழுநீர் மலர்போல, கண் - கண்களாகிய, இணை மலர் - இரண்டு மலர்கள், கறுத்துச் செவந்தன-கறுத்துச் செவந்து விட்டன.

(வி-ரை.) படிதல் - தோய்தல். சுருட்பு உண்டவென்பதற்குச் செயப்படுபொருளாகிய தேன் வருவித்துரைக்கப்பட்டது. கழுநீர் - பொருளாகுபெயர். செவந்தன - செம்மைப் பண்படியாகப் பிறந்த இறந்தகாலத் தெரிநிலேவினேமுற்று. சிவந்தன என்றும் பாடம்.

'ஈங்கிவை'என்பதுமுதல் 'கண்சேவந்துருத்தே' என்பதுவரை

(24—27 வரிகள்.)

(பா-ரை.) ஈங்கு - இவ்விடத்து, இவை நிற்க - இவை நிற்பனவாக, (இவற்றைக்கண்டு) பெறும் தமர்-இவளே யீன்ற தாய்தந்தைய ராகிய தமர், இல்லில் செறிக்கும் சொல்லுடன் - மனேயிற் சேர்க்கின்ற சொல்லோடு, தமியில் - தமியளாயிருந்து, உள்ளம் கறுத்து - மனங்கொந்தித்து, கண் செவந்து-கண்கள் செவ்வாகின்று, உருத்து-கோவித்து, கூறினர் - பேசினர்,(ஆதலால் இற்செறிப்பார் அதுவேயு மன்றி) சீறார் - சீறாரும், சில்மொழி - சிலசொற்களோ, விள்ளும் - விள்ளாகின்றது, எ - று.

(வி-ரை.) சீறார் சில்மொழி விள்ளும் என்றது மகட்பேசலே. சீறார் இடவாகுபெயராய்த் சீறாரிலுள்ளாரைக் குறித்தது, "சிலம் பணிகொண்ட செஞ்சீறடி பங்கன்"என்புழிப்போல. சிறு ஊர் சீறூர் எனப்பட்டது. ஈங்கிவை யென்பதை ஒரு சொல்லாகக் கோடலு மாம், இவையென்பதே பொருள். திருக்கேவையார், உகவ-வது "தெள்வன் புனற்சென்னியோன்" என்னும் முதற்குறிப்பினே யுடைய செய்யுளின் விசேடவுரை இங்கு நோக்கத்தக்கது. ஈங்கிவை நிற்க என்பதற்கு இம்மாதின் செயல் இங்ஙனமாம் இதுநிற்க வென் றுரைப்பினுமாம். பெருந்தமர் என்றும் பாடம், இதற்குத் தமரிற் சிறந்தவராகிய தாயதந்தையர் முதலியோர் என்றுரைத்துக்கொள்க.

சிலம்ப, பெருத்தன, தேய்ந்தது, காட்டின, செவந்தன, இவை நிற்க, தமர் இல்லிற் செறிக்குஞ் சொல்லுடன் பேசிக்கொண்டனரா தலால், இனி யிற்செறிப்பார், அதுவேயுமன்றி, சீறார் சின்மொழி விள்ளும் என வினேமுடிவு செய்க. (க)

தாயறிவுகூறல்.

தாயறிவு கூறலென்பது—தொழுதிரந்து கூறவும், வேட்கை மிகவாற் பின்னுங் குறியிடைச் சென்று நிற்ப, அக்குறிப்பறிந்து, கங்காளலிடத்து அமையிரவின்கண் ஒருதேர் வந்ததண்டாகக் கூடு மென வுட்கொண்டு அன்னே சிறிதே கண்ணுஞ் செவந்து என்னேயும்

பார்ததாள், இருந்தவாற்றான் இவ்வொழுக்கத்தை யறிந்தாள்போலு மெனத் தோழி தலைமகளுக்குக் கூறுவாள்போன்று சிறைப்புற மாகத் தலைமகற்கு வரைவு தோன்றத் தாயறிவு கூறுகிற்றல். அதற்குச் செய்யுள்:—

"விண்ணுஞ் செலவறி யாவெறி யார்கழல் வீழ்சடைத்நீ
(வி-மை.) பிணிமுகம்-முருகற் குரித்தாகிய யானை. "சேயுயர் பிணிமுக மூர்ந்த" என்று பரிபாடலினும், "ஓடாப்பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி" என்று திருமுருகாற்றுப்படையினுங் கூறினார்; பிணிமுகமாகிய மயிலெனினுமாம். "வானுதருன்முருகு மெய்ந்நிறீஇ" என்றார் வெண்பாமாலையினும். பின்னரித் பெற்றவென்றும் பாடம். உம்மை - சிறப்பும்மை. மலைத்தலை - மலையினுச்சி. மனவு - அக்குமணி. வெறி - ஆவேசம். தொண்டகம் - குறிஞ்சிநிலப்பறை. மறி - ஆடு.

'கருந்தலை' என்பதுமுதல் 'இழக்குக' என்பதுவரை.

(15—17 வரிகள்.)

(ப-ரை.) கருந்தலை - கரிய தலையினையுடைய, சாரிகை - நாகணவாய்ப்புள்ளும், செவ்வாய்-சிவந்த வாயினையுடைய. பசுங்கிளி -

பசிய கிளியும், அம் - அழகிய, தூவி - தூவியினையுடைய, தோகை மயிலும், வெள் ஒதிமம் - வெள்ளையன்னமும், உழை-மானும் ஆகிய, இவையுடன் தொடர் - இவற்றுடனுண்டாகிய, இன்பமும்-இன்பத்தையும், ஒருவழி இழக்குக - ஒருவழி யிழப்பாளாக.

(வி-ரை.) தொடர் இன்பமென்க. உம்மை-சிறப்பும்மை. எண்ணும்மைகள் தொக்கன. தூவி - சூட்டு; "தூவிமஞ்ஞை நன்மணம் புகுத்தும்" என்றார் சிந்தாமணியினும். நாகணவாய்ப் புள்ளுக்குப் பூவையென்று மொருபெயர். தோகை - ஆகுபெயர்.

'சேயிதழ்' என்பதுமுதல் 'அலமர' என்பதுவரை.

(18—19 வரிகள.)

(ப-ரை.) சே இதழ்-செவ்வித பூவினையுடைய, இலவத்து-இலவமரத்தின், உடைகாய் - வெடித்தகாயினுள், பஞ்சினம் - பஞ்சுக்கூட்டம், புகை முரிந்து எழுந்தென - தழலின்கண் உண்டாகிய புகையுடைந்தெழுந்தாற்போல, விண்ணத்து - ஆகாயத்தில், அலமர - சுழல.

(வி-ரை.) விண்ணத்து என்பதில் அத்துச்சாரியை. அலமர என்பதற்குப் பகுதி அலமா.

'குழை' என்பதுமுதல் 'தவழ' என்பதுவரை.

(20—21 வரிகள்.)

(ப-ரை.) குழைபொடி - இலைகரிந்த, கூவையின் சிறை-கூவையின் புக்கத்தில், சிறை நீங்க - சிறகுகள் கரிந்த, பழுந்தும ஆரையும்-பருந்தும் ஆந்தையும், பார்ப்புடன் தவழ-தத்தம் குஞ்சுகளோடு தவழ.

(வி-ரை.) குழை - தளிருமாம். பொடிதல் - கரிதல். கூவை - ஓர் மரம். நீங்கனவெனப் பாடமாயின் நீங்கனவாகிய வென்க.

'உடை' என்பதுமுதல் 'குழற' என்பதுவரை.

(22—23 வரிகள்

(ப-ரை.) உடை கவட்டு - பிளந்த கவட்டினையுடைய, ஓமை - ஓமைமரத்தின், உயர் கினை இருக்கும்-உயர்ந்த கிளைகளிலிருக்கின்ற, வரை கண் கூகை-வளைந்த கண்களையுடைய கூகைகளும், மயங்கி - மனமயங்கி, வாய் குழற - வாய் குழறுகின்ற.

(வி-ரை.) உம்மை இறந்தது தழீஇய வெச்சவும்மை. உலர் கினை யென்னும் பாடம். இதற்கு உலர்ந்த கினை யென்பது பொருள். வினைகண் - வட்டமாகிய கண்.

'ஆசை' என்பதுமுதல் 'தெறிப்ப' எனபதுவரை.

(24—27 வரிகள்.)

(ப-ரை.) ஆசையின் - ஆசைபோல, தணியா-தணியாத, அழல் பசி தணிக்க - பசியாகிய நெருப்பைத தணிக்கும்படி, காளி முன் - காளிக்கெதிரே, காவல் காட்டி வைத்து-காவலாகக் காட்டிவைத்து, எரும் - போகின்ற, குழி கண்-குழிந்தகண்களையுடைய, கரும்பேய்-கரிய பேயினது, மகவு - பிள்ளைகள், கண் முகழ்ப்ப-கண்ணேமூடும் படி, வேம் உடல் சின்னம் - வேவாகின்ற பிணத்தினுடற் சின்னங் கள், வெள்ளிடை தெறிப்ப - வெளியாமிடத்தில் தெறிப்ப.

(வி-ரை.) ஆசையின் - என்பதில் இன் ஐத்தனுருபு, ஒப்புப் பொருட்டு. கடும்பேய என்னும்பாடம்; இதற்குக் கடுமையாகிய பே யென் றுரைக்க.

நெடுந்தாள் குற்றிலை வாகைநெற் றிழலிப்ப.

(28—வது வரி.)

(ப-ரை) நெடுந்தாள் - நெடியதாளினையும், குறு இலை - குரிய இலையினையுமுடைய, வாகை - வாகைமரத்தின் நெற்று ஒலிப்ப - நெற்றுகளொலிக்க.

(வி-ரை.) நெற்று - முதிர்ந்துலர்ந்தகாய்.

'திசை' என்பதுமுதல் 'பெருமான்' என்பதுவரை.

(29—33 வரிகள்.)

(ப-ரை) சுடலையில் - இடுகாட்டில், சூறை - சுழல்காற்று, திசையின்று எழாது - திசைகளினின்றெழாமல், தழன் முகந்து - அக்கினியை மொண்டுகொண்டு, எறி - உயர்ந்து, இடையிடை அடிக்கும் - விட்டுவிட்டுச சுழலும், பேர் அழல் கானினும்-பெரிய அழற் காட்டினும், நாடும் - தன்னைக்கருதும், என் உளத்தினும் - என் னுள்ளத்தினும், ஒருபால் - இடப்பாகத்திலிருக்கும், பசுங்கொடி - பசியகொடிபோல்வான், நிறைபாட்டியர-ஆடற்கேற்ற வெண்நிறப் பாட்டைப் பாட, பாரிடம் குனிப்ப - பூதகணங்களாட, ஆடிய பெரு மான் - நடித்தபெருமான்.

(வி-ரை) அயர் குளிப்ப என்னும் செயவெனெச்ச வடிக்கு ஆடிய வென்பதன் முதனிலைகொண்டு முடிந்தது. நிலப்பெயர்கொண்டது. முகம் தெரிப்ப என்றும் பாடம். அடிக்கும்கான் எனவும், கானி னும் உள்ளத்தினும் ஆடிய எனவும் இயையும்.

'வையகத்து' என்பதுமுதல் 'பெருமான்' என்பதுவரை.

(34—38 வரிகள்.)

(ப-ரை.) வையகத்து உருவினர் - பூமியிடத்துப் பிறக்கு மறி வினையுடையாராது, மலர்ஆ அறிவினை - கல்விகேள்விகளான மலர்ச்சி யாகாகின்ற அறிவினை, புலன் நிரை மறைத்த - பஞ்சவிடயங்கள் வெளிப்படாது மறைத்த, புணர்ப்பதுபோல - மாயம்போல, ஆவி-தடாகங்களில், குளிர்கொண்டு - குளிர்ச்சிகொண்டு, உறையும் உறைகின்ற, தெளி நீரை - தெளிந்தநீரை, வள்ளை - வள்ளைக்கொடி யும், செங்கமலம் - சிவந்த தாமரைமலரும், கள் அவிழ் - மதுவிரியா நின்ற, ஆம்பல் - அல்லிமலரும், பாசடை - (இவற்றின்) பசிய இலை யும், மறைக்கும்-தெரியாது மறைக்குமிடமாகிய, கூடல் பெருமான்-மதுரைப்பெருமானுடைய.

(வி-ரை.) மலர்-வினைமாத்திரையாய் நின்றது. ஆவறிவு-வினைத் தொகை. மறைக்கும் என்னும் பெயரொசசம் கூடல் என்னும் நிலப் பெயர் கொண்டது. 'புணர்ப்பது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. தாமரை ஆம்பல் என்பன ஆகுபெயர்கள்.

செந்தாள் விடித்துறை யந்தர்க டம்மினும்.

(39-வது வரி.)

(ப-ரை.) செந்தாள் விடித்து - சிவந்த திருவடியைவிட்டு, உறை - வாழ்கின்ற, அந்தர்கள் தம்மினும் - அறிவில்லாத்தம்மினும்.

(வி-ரை.) பெரும ஞடையதாள் எனவியையும். அந்தர்-(ஞான க்கண்ணில்லாத) குருடர். தம்-சாரியை.

'மூவா' என்பதுமுதல் 'தோழியை' என்பதுவரை.

(40—41 வரிகள்.)

(ப-ரை.) மூவா - (கருமத்தி லிருவரு மொருவர்க்கொருவர்) மூந்தாத, தனி நிலைக்கு - ஒப்பற்ற நிலையால், இருவரும்-இருவருமி

ரும், ஓர் உயிர் இரண்டு என - ஒருயிரென்னும்படி உட லிரண்டாக, கலைத்த - பெற்றதனால் வந்த, நல்லாண்டருள்-நல்ல காவல்செய்த, தோழியை - பாங்கியையும்.

(வி-ரை.) தனிநிலைக்கு - உருபுமயக்கம், சிறப்புப்மை தொக்கது. தாழுமோருயிராயினும் இற்செறிக்கப்பட்ட பின்னர் பரா முகத்தளாதலின் நற்றாய் முதலியோரை முன்னே துறந்தமையின், தோழியையும், பின்னேவிட்டகலவென்றார். உம்மை-சிறப்பும்மை. அரண்டரு தோழியை யென்றும் பாடம்; இதற்குக் காவலாயிருந்த பாங்கியை யென்னுரைத்துக்கொள்க.

'சேரு' என்பதுமுதல் 'போல' என்பதுவரை.

(42—43 வரிகள்.)

(ப-ரை.) செருவிழும் இச்சையர் - போர்க்களத்திற் செல்லும் விருப்பமுடையவர், தமது உடல்பெற்ற-தமது உடம்புபெற்றதனால் உண்டாகிய, இன்புகள் - இன்பங்களே, நோக்கா இயல்புபோல - பாராட்டாத இயற்கைபோல.

(வி-ரை.) போர்க்களத்தில் செல்லுதற்குக் காரணமாகிய அன் பினர் தாம் உடல் பெற்றதனால் வந்த இன்பங்களே நோக்காத இயல்புபோலவென்க. உடற்பெற்றவின்பம் - மக்கள் மெய்தீண்டல் முதலாகிய இன்பம். செரு - போர், அது அதனேயுடைய இடத் திற்காயினமையால் ஆகுபெயர். உடல் - மானிடதேகம். இயல்பது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி.

மருங்குபி னேக்கா தொருங்கு விட்டு.

(44—வது வரி.)

(ப-ரை.) மருங்கு நோக்காது - பக்கம்பாராது, ஒருங்கு - எங்க ளோடுகூட, பின்விட்டு - பின்னேவிட்டு.

ஒருவ னன்பெடுத்து.

(46—வது வரி.)

(ப-ரை.) ஒருவன் அன்பு எடுத்து - ஒரேதிலனது அன்பை மேற்சொண்டு.

(வி-ரை.) ஏதிலன் - அயலான்.

'அகல' என்பதுமுதல் 'சுரத்தில்' என்பதுவரை.

(44—46 வரிகள்.)

(ப-ரை.) அரும் - செல்லுதற்கரிய, தழல் சுரத்தில் - கெருப்புப்போலும் பாலைநிலத்தில், அகல-செல்ல, உள்ளம் பொருந்தியது - மனமொருமித்தது, எப்படி - எவ்வாறு.

(வி-ரை.) இனியான் எவ்வாறு ஆற்றுவேன் என்பது இசையெச்சம். போல அகல என இயையும்.

மடந்தை என்னே நீங்குவாளாக, அதுவன்றி ஆயத்தை நீங்குவாளாக, அதுவன்றிச் செவிலியையும் தப்புவாளாக, அதுவன்றிப் பூவைமுதலிபவற்றிலு முண்டாகிற இன்பத்தையு மிழப்பாளாக, அதுவன்றித் தோழியையும் விட்டு ஒருவனண்பை மேற்கொண்டு, பாலையிற்செல்ல மனம் பொருந்தியதெப்படி, இனி யெங்ஙனமாற்று வேன் என வினைமுடிவுசெய்க.

திருக்கோவையார் உரை-ம் செய்யுள்.

செலவுநினைந்துரைத்தல்.

செலவுநினைந்துரைத்த லென்பது — வரைவுடம்படாமையின், தோழி தலைமகளைநோக்கி புலத்து கூறக்கேட்டு, அக்குறிப்பறிந்து, இக்கல்லதரின்கண் 'நீர்வந்தவா றென்னென்றவென்று வினவுவாரைப் பெற்றேமாயின், இத்தன்மையையுடைத்தாகிய இருளின்கண் யாம் அவருழைச்சேறலரிதன்று, சென்றேமாயினும், அவ்வாறு சொல்லுவாரில்லையெனத் தலைமகள் செலவுநினைந்து கூறுகிற்றல். அதற்குச் செய்யுள்:—

வல்சியி னெண்கு வளர்புற் றகழமல் கும்பிருள்வாய்ச்
செல்வரி தன்மம்மன் சிற்றம் பலவரைச் சேரலர்போற்
கொல்கரி சீயங் குறுகா வகைபிடி தானிடைச்செல்
கல்லத ரென்வந்த வாறென் பவர்ப்பெறிற் கார்மயிலே.

பாங்கி நெருங்கப் பணிமொழி மொழிந்து
தேங்கமழ் சிலம்பற்குச் சிறைப்புறத் தெளிவி.

(ப-ரை.) கார் மயிலே - கார்காலத்து மயிலையொப்பாய், சிற்றம் பலவரை - சிற்றம்பலவரை, சேரலர்போல்-சேராதாரைப்போல வருந்த, சீயம் - சிங்கமானது, கொல் கரி - கொலைக்கரியை, குறுகா வகை - சென்றணையாதவண்ணம், பிடி - பெண்யானை, தான் -

தூண், இடை - இரண்டற்கு மிடையே, செல் - சென்று புகும், கல் - கற்கள் நிறைந்த, அதர் - வழியில், வந்தவாறு - நீர் வந்தவாறு, என் - எங்ஙனே, என்பவர்-என்று சொல்லுவாரை, பெறின் - பெற்றேமாயின், வல்லியின் - (குறும்பியாகிய) உணவு (காரணமாக), எண்கு - காடி, வளர் - வளர்ந்துயர்ந்த, புற்று - புற்றை, அகழ - அகழாநிற்ப, மல்கும் - மிகாநின்ற, இருள்வாய் - இருளின்கண், செலவு - அவரிருந்தவழிச் சேறல், அரிது அன்று - அரிதன்று (செல்வேமாயினும்வாறு சொல்லுவாரில்லை), எ-று.

(வி-ரை) செல்வரிதென்பது - செல்வழிக்க ணெண்பதுபோல மெய்யீற் றுடம்படுமெய். செல்லவென்பது கடைக்குறைத்து நின்ற தெனினு மமையும். மண் - ஒழியிசைக்கண் வந்தது. கலனதர் - கற்கண்ணதர். கல்லதரினென்பது பாடமாயின் வந்தவா றறனெனை ஒருசொல் வருவித்துரைக்க. பணிமொழி மொழிதென்பதனை மொழியவெனத் திரித்து சிறைப்புறக் கிளவியாயிற்றென வொரு சொல் வருவித்துரைக்க. சிறைப்புறக் கிளவியாயிற்றெனவே, சிறைப் புறமாதல் குறித்தாளல்லளென்பது பெற்றும். இவை யிரண்டற்கும் மெய்ப்பாடு அழுகையைச் சார்ந்த விளிவரல், பயன் அது.

நேரிசையாசிரியப்பா.

ஓவிற்புருஞ் சட்டக முழிதொறு முழிதொறும்
பழவினை பருந்த பாடகம் போல
முதிர்புயல் குளிறு மெழுமலை புக்க
கட்டுடைச் சூருட னாமங் கொண்டு
பற்றியுட் புகுந்து பகங்கடல் கண்டு
மாவொடுங் கொன்ற மழைநெடு திருவேல்
சேவலங் கொடியோன் காவல்கொண் டிருந்த
குன்ற மூடுந்த கூடலம் பதியிறை
தொடர்ந்துயிர் வவ்விய விடங்கெழு மிடற்றோன்
புண்ணியர் தழைத்த முன்னோர் நாளில்
இருவீர னிமிர்த்துப் புரிவொடு சேர்த்துக்
குழையுடம் றலைவிரி கைத்திரி கறங்க
வொருவிரற் றெறித்து மைவிரற் குவித்தும்
பெருவா யொருமுகப் படகம் பெருக்கத்
தடாவுட லும்பர்த் தலைபெறு முழவ

நான்முகந் தட்டி நடிமுக முரப்ப
வொருவாய் திறந்துட் கடிப்புடல் விசித்த
கல்லி யங்கைத் தலைவிரற் முக்கக்
கயநதலை யடியெனக் கயிறமை கைத்திரி
யிருவிர லுயர்த்திச் செருகில மிரடட
விருதலை குவிந்த நெட்டுடற் றண்ணுமை
யொருமுகந் தாழ்த்தி யிருகடிப் பொலிப்பத்
திருமல ரெழுதிய வரையிரு பத்தைந்
தங்குலி யிரண்டிரண் டணைத்துவி ளர்கிறீஇ
மும்முகக் கயலுடன் மயிர்க்கயிறு விசித்த
கல்ல வடத்திரள் விரற்றலை கறங்க
மரக்கா லன்ன வொருவாய்க் கோதை
முகத்தினுந் தட்ட மூக்கினுந் தாக்க
நாடிரு முனிவர்க் காடிய பெருமான்
றிருவடி வினவாக் கருவறை மாக்க
ணெஞ்சினுங் கடந்து நீண்டவல் லிரவிற்
செல்லவு முரியர் கோமி னில்லா
தெம்மெதிர்ப் பின்றி யிருந்தெதிர்ப் பட்டு
மறைவமி யொழுகா மன்னவன் வாழும்
பழிநாட் டார்ந்த பாவம் போலச்
சேர மறைத்த கூரிரு ணடுநா
ளரிதிற் போந்தனி னென்றோர்
பெரிதின் வாய்மை வெற்பனிற் பெறினே.

'உயிர்' என்பதுமுதல் 'புகுந்து' என்பதுவரை.

(1—5—வரிகள்.)

(ப-ரை.) உயிர் புகும்-உயிர் பொருந்துதற் கிடமாகிய, சட்டக முழிதொறு முழிதொறும் - உடம்பிடந்தோறு முடம்பிடந்தோறும், பாடகம்போல - இடைவிடாது காலைப் பாடகஞ் சூழ்ந்து கிடந்தாற் போல, பழவினை புகுந்த - சூழ்ந்து கிடந்த பழவினை கொல்லும் விருப் பங்கொண்டு தொடர்ந்துட் புகுந்தாற்போல, முதிர் - சுன்முதிர்ந்த, புயல் - மேகம், குளிரும் - முழங்காகின்ற, எழுமலை-எழுமலையினும்;

புவை - புகுதற்குக் காரணமாய, கட்டிடை - கட்டினையுடைய, சூருடல - சூரபன்மாவுடலே, காமங்கொணடு - கொல்லும் விருப்பங கொண்டு, பற்றி உட்புகுதது - தொடர்ந்துட் புகுந்து

(வி-ரை.) பழவினை புகுதற்குக காரணமாகிய வீடதனிலே யுடைய நெஞ்சம பகுநதாறபோல வெனினுமாம். பொருளடையை யுவமைகருங கொளக. எழுவகைப் பிறப்பிற பலவகை யுடம்பினைக கூறுவார் 'உழிதொறு முழிதொறும எனறார். "பாடகமபோலச சூழ்நத பழவினை' எனறார சிநதாமணியினும் கட்டு - கற்பிததல், அது சுப்பிரமணிய னெனறகுர சததுருவாய வருகவெனறு கறபித தல குறிபறுகமு மகளை வடிவுமாகக கறபிதலுடைய சூரனை னினுமாம "வணடோதும' எனனு மருதககலியுள், "இரணிமகேறற வொடியாப பருவ மது சூரகொனறா லேலோவ" எனறார. சட்டகம-உடமபு, உபி எதனுருப, இடபபொருள. பாடகம-மாதர்காலணியி லொனறு

'பசுங்கடல்' எனபது முதல 'சோடிபோலவு எனபதுவரை.

(5—ம் வரிகள.)

(ப-ரை) பசுவகடல கலகி - (மகளிறகாறறு) பசிய கட லிடைதுகக நரல, மாவெறகட மெலல - அவன மறைதறகிடமாகய மாவெறபுகொனன, மகர - மீன எணணிடையட, உகம - மெதனதாக, திருவேல் - அதக வேலினையுட, சேவலமகொடியோன - கோழுக கொடியினனுமாகிய முருகன.

(வி-ரை.) மாவான தனறி சூருடை மாமரமு மனவெனவு சூரனுக கருள பாதத திலு, உடமை - இனசாயிறற எனன வாட-முப்பு ப ந ப ம ப ரத திலு எனறு முறபோல - ஒடிவையு மும மடையு மன ப யாகவு ராவாக ர் ச க்களை வெனற வெனினு மாம. "உ ம பாடகமாதர் எ முறபோல சூனனனனுமபய பொப புமபறறிக 'வெனன' எனறார.

'காவல்' எனபது முதல 'மிடற்றோன' எனபதுவரை.

(7—9 வரிகள.)

(ப-ரை) காவல கொணடிருநத - காப்பாகக்கொண்டு வீற்றிரு நத, சூனறமுடிநத - திருபபரகுனறஞ் சூழ்நத, கூடல பதி இறை - அழகிய கூடறபதியில வாழுமிறையானவன, தொடாநது உயிர் வவ்விய-உயிரபோல விடாது கைகொளளுமபடி, விடக்கெழு மிடறறோன - விடதது நினறையுடைய மிடறறினை யுடையோன.

(வி-ரை.) அம் - சரியையுமாம். விரைவுபற்றி வல்லிய என இறந்தகாலத்தாற் கூறினர். கெழு - சாரியை, யாழ்கெழுமணிமிடற்று என்றுற்போலவும், வயங்கெழுபுகழோன் வற்புறுத்தியது என்றுற்போலவும், புறத்திற் சிறந்த சீர்கெழு கொடியுமல்வேறு என்றுற் போல விடம் பொருந்திய வெனினுமாம். பதியுறை என்று பாடமாயின் உறைமிடற்றோனெனக் கூட்டுக. கூடலம்பதியுறை - சிவபெருமான். வல்வல்-கவர்தல். மிடறு - கண்டம்.

'புண்ணியம்' என்பதுமுதல் 'கறங்க' என்பதுவரை.

(10—12 வரிகள்.)

(ப-ரை.) புண்ணியம் - சிவபுண்ணியம், தழைத்த - தழைத்ததனால் வந்த, முன்னோர் காளில் - பூசநாளில், இருவிரல்-பெருமையையுடைத்தாகிய விரலினை, புரிவொடு நிமிர்த்து - தொழிலோடு நிமிர்த்து, சேர்த்து - சேர்த்தி, குழை - குழையாகின்ற, உடல்-உடலினையும், தலேயிரி - பரந்த தலையினேயுமுடைய, கைத்திரி - இடக்கை, கறங்க - முழங்காநிற்ப.

(வி-ரை.) முன்னோர் - மந்திரி, அது ஒருவரைக் கூறும் பன்மைக்கிளவி. மந்திரி காளெனவே வியாழ நாளாய்ப் பூசமாயிற்று. கையினும் நிரிதகுமையாற் கைத்திரி யெனறு இடக்கைக்குப் பெயராயிற்று. இருமை - பெருமை. குழை - வினேத்தொகை.

'ஒரு' என்பதுமுதல் 'பெருக்க' என்பதுவரை.

(13—11 வரிகள்.)

(ப-ரை.) பெருவாய்-பரந்த வாயினையும், ஒரு முகம்-ஒருமுகத்தினையுமுடைய, படகம்-படகமென்னும் வாச்சியம, ஒருவிரல் தெறித்தும் - தன்னிடத் தொருரு விரலேக்கொண்டு தெறித்ததனலும், ஐவிரல் குவித்தும் - ஐவிரலேக் குவித்ததனலும், பெருக்க-ஓசையைப் பெருகப்பண்ண.

(வி-ரை.) தெறித்தல் குவித்தலென்பன எதுப்பொருட்டாயின. வாச்சியம் - வாத்தியம்.

'தடா' என்பதுமுதல் 'உரப்ப' என்பதுவரை.

(15—16 வரிகள்.)

(ப-ரை.) தடாவுடலுப்பர் - பெரிய வுடலின்மேல், தலேபெறும் - தலேபெற்ற, முழவம்-முழவமென்னும் வாச்சியம், நான்முகம்-

ஙஞண்குமுகமும், நமுமுகம்-நமுமுகமும், தட்டி-தட்டுதலால், உரப்ப-ஒலியைப் பண்ணுறிற்ப.

(வி-ரை.) தடவு என்னும் உரிச்சொல் தடா என நீறுதிரிந்து நின்றது. உம்பர் - மேல். தட்டி-காரணப்பொருட்டாகிய வினையெச்சம்; இது உரப்ப என்னும் வினைகொண்டது.

'ஒருவாய்' என்பதுமுதல் 'தாக்க' என்பதுவரை.

(17—18 வரிகள்.)

(ப-ரை.) ஒருவாய் திறந்து - ஒரிடத்தைத் திறந்து, உட்கடிப் புடல் விரித்த-குமிழினே யுள்ளேகட்டிய வுடலினையுடைய, சல்லரி - சலலரியென்னும் வாச்சியம், அங்கை-அங்கையினலும், தலிவரல் - தனிவிரலினலும், தாக்க - தாக்குதலான் முழங்காறிற்ப.

(வி-ரை.) வாய் - இடம்.

'கயந்தலை' என்பதுமுதல் 'இரட்ட' எனபதுவரை.

(19—20 வரிகள.)

(ப-ரை.) கயந்தலையடியென-யானைக்கன்றினடிபோல, கயிறு அமை - கயிறுபொருதிய, கைத்திரி - கடியெள்ளல் வாச்சியம், கொவிரல் - இருவிரல், செருநிலை - செருவலை, உயாத்தி - கையை யுயாத்தி, இரட்ட - இரட்டாறிற்ப.

(வி-ரை.) கையினுற் றிரிதலமையாற் கைத்திரியாயிற்று. கயந்தலை - யானைக்கனமு; மெல்லியதலையையுடையது என்பதுபொருள். இரட்டல் - ஒலித்தல்.

'இருதலை' என்பதுமுதல் 'ஒலிப்ப' என்பதுவரை.

(21—22 வரிகள்.)

(ப-ரை.) இருதலை குவித்த - இரண்டுதலையுஞ் சுருங்கிய, தெட்டெடல் - தெடியவுடலினையுடைய, தண்ணுமை - தண்ணுமை யென்னும் வாச்சியம், ஒருமுகம் தாழ்த்தி - ஒருமுகத்தினைத் தாழ்த்தி, இருகடிப்பு ஒலிப்ப - மற்றொருமுகத்தி லிரண்டு கடிப்பினு லொலியைப்பண்ணுறிற்ப.

(வி-ரை.) தலை - பக்கம். தண்ணுமை-மத்தளம். ஒருகட்பறை யெனினுமாம். கடிப்பு - கோல்.

'திருமலர்' என்பதுமுதல் 'கறங்க' என்பதுவரை.

(23—26 வரிகள்.)

(ப-ரை.) திருமலர் எழுதிய-தாமரைமலர் வடிவாக வெழுதிய, வரை இருபத்தைந்து - இருபத்தைந்து வரையில், அங்குலி இரண்டு இரண்டு அணைத்து-இரண்டிரண்டு விரலாக அணைத்து; விளர்நிறிஇ-செவ்வே நிறுத்தி, மும்முகக் கயலுடன் - மும்முகக்கயலுடன், மயிர்க்கயிறு விசித்த - மயிர்க்கயிறுகட்டிய, கல்லவடத்திரள் - கல்லவடத்திரளென்னும் வாச்சியம், விரற்றலை கறங்க - விரற்றலையினால் முழங்க.

(வி-ரை.) இலக்குமிக்குத் தவிசாயிருத்தலால் தாமரைமலரைத் 'திருமலர்' என்றார். மும்முகக்கயல் - மூன்றுமுகமுள்ள சேல்மீன். விசித்தல் - கட்டுதல். விரற்றலை - விரல்நுனி.

'மரக்காலன்ன' என்பதுமுதல் 'தாக்க' என்பதுவரை.

(27—28 வரிகள்.)

(ப-ரை.) மாக்சால் அன்ன - மாக்கால் போன்ற, ஒருவாய்க் கோதை-ஒரு வாய்க்கோதை, முகத்தினும் தட்ட-முகத்தினுந்தட்ட, மூக்கினும் தாக்க - மூக்கினுந்தாக்க.

(வி-ரை.) ஒருவாய்க்கோதை-ஓர் கீட்பறை. தாக்கல் - அடித்தல்.

நாடிரு முனிவர்க் காடிய பெருமான.

(29-வது வரி.)

(ப-ரை) நாடி - கருதாநின்ற, இரு முனிவர்க்கு - பதஞ்சலி வியாக்கிரபாத ரென்னு மிருமுனிவர்க்காக, ஆடிய பெருமான்-திருநடஞ்செய்த பெருமான்.

(வி-ரை.) செயவெனச்சவடிக்கு ஆடியவென்னும் பெயரெச்சத்தின் முதனிலை கொண்டது. நான்கனுருபு அதற்கு வினையுடைமைப்பாற்பட்டது. பூசநாளிற் றிருநடஞ் செய்த பெருமானெனக் கூட்டுக.

'திருவடி' என்பதுமுதல் 'தோழி' என்பதுவரை.

(30—32 வரிகள.)

(ப-ரை.) திருவடி வினவா - திருவடியினை வினையாமையால் வந்த, கருவுறை மாக்கள் - கருவினையுடைய மாக்களது, நெஞ்சினும்

கடந்த - நெஞ்சிருளினுங் கடந்து, நீண்ட வல் இரவில் - நீட்டித்த வலிய இரவினிடத்து, தோழி - தோழீ.

(வி-ரை) திருவடி நினையுமெனறும் பாடம். கரு - கருப்பம். நெஞ்சு - ஆகுபெயர்.

எமமெதிர்ப் பின்றி யிருநதெதிர்ப பட்டு.
(33—வது வரி.)

(ப-ரை.) எம் - எம்மை, எதிர்ப்பின்றி-எதிர்தலின்றி, இருந்து எதிர்ப்பட்டு - எதிர்ப்பட்டிருந்து.

(வி-ரை.) இருநதெதிர்ப்பட்டு என்பது எதிர்பபடடிருந்து என முன்பின்னாக மாறறிப பொருள் கொள்ளப்பட்டது.

'அரிதின்' என்பதுமுதல் 'பெறினே' என்பதுவரை.
(37—38 வரிகள.)

(ப-ரை.) அரிதின் - கரிதாக, போநதனர் என்று - வநதீரென்று, பெரிதின் - பெரிதாக, ஓர் - ஒரு, இன - இனிய, வாயமை வார்த்தை, வெற்பனின் - வெற்பனால், பெறின் - பெற்றேமாயின்.

(வி-ரை) அரிதின் பெரிதின என்பவற்றில் இன் அல்வழிச் சாரியை. வெற்பனின என்பதில் இன என்னுமைநதாவது மூன்றுவகன கருவப்பொருளில் வநதது.

'மறை' என்பதுமுதல் 'நாள்' என்பதுவரை.
(34—36 வரிகள்.)

(ப-ரை.) மறைவழி - மறையின் வழியே, ஒழுகா - ஒழுகாத, மன்னவன் - வேநதன், வாழும - வாழ்கின்ற, நாடு - நாட்டை, பழியார்நத - பழியடர்நததனால வநத, பாவம - பாவம், சேரமறைதத் போல-ஒருங்கே மறைதததாற்போல வெல்லாப்பொருளையு மறைத்த, கூர் இருள் நடுநாள் - மிகுநத விருளையுடைய விடையாமதத்தில்.

(வி-ரை.) மறைவழி - வேதமார்க்கம. இடையாமம்-நடுசசாமம்.

நில்லாது செல்லவு முரியம.
(32—வது வரி.)

(ப-ரை.) நில்லாது-யாம் கணப்பொழுதும் தரியாது,செல்லவும் உரியம் - செல்லவுமுரியமே.

(வி-ரை.) உம்மை - சிறப்புமமை.

திருக்கோவையார உசூ0-ம் செய்யுள்.

அறத்தொடு நிற்றல்.

அறத்தோடு நிற்றலென்பது—அறத்தொடு நிற்பாளாக முன் ரோற்றுவாய்செய்து, எம்பெருமாற்குப் பழிவருங்கொல்லோ வென்னு மையத்தோடுநின்று யாமுன் பொருநாள் கடற்கரையிடத்தே வண்டல் செய்து விளையாடா நின்றேமாக, அந்நேரத்தொரு தோன்றல் தும்வண்டன் மணைக்கு யாம் விருந்தென்று வந்து நின்றபொழுது, நீ பூக்கொய்யச் சிறிது புடைபெயர்ந்தாய், அந்நிலைமைக்கட் கீழ்காற்று மிகுதலாற் கரைமேலேறுங் கடல்மேல் வந்ததற்றது; உறயான் ரோழியோ தோழியோவென்று நின்னை விளித்தேன், அதுகண்டிரங்கி, அவனருளொடு வந்து தன் கையைத் தந்தான, யானு மயக்கத்தாலே யதனை நின்கையென்று தொட்டேன், அவனும் பிறிதொன்றுஞ் சிந்தியாது என்னுயிர்கொண்டு தந்து என்னை கரைக்கணுய்த்துப் போயினன். அன்று என்ஞணினுல் நினைக்கதனைச் சொல்லமாட்டிற்றிலேன், இன்றிவ்வாறுயினபின் இது கூறினேன். இனி நினைக்கடுப்பது செய்வாயாகவெனத் தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நில்லாநிற்றல். அதற்குச்செய்யுள்:—

வண்டலுற் றேமெங்கண் வந்தொரு தோன்றல் வரிவளையீ
ருண்டலுற் றேமென்று நின்றதொர் போழ்திடை யான்புலியூர்க்
கொண்டலுற் றேறுங் கடல்வர வெம்முயிர் கொண்டு தந்து
கண்டலுற் றேர்நின்ற சேரிச்சென் ருனெஞர் கழலவனே.

தெய்த வெறியி னெய்துவ தறியாது
நிறத்தொடித் தோழிக் கறத்தொடு நின்றது.

(ப-ரை.) வண்டல் உற்றேம்-விளையாட்டைப் பொருந்தினே மாகிய, எங்கண் - எம்மிடத்து, ஒரு தோன்றல் - ஒரு தோன்றல், வரி வளையீர் - வரிவளையையுடையீர், உண்டல் உற்றேம் என்று - (தும்வண்டன் மணைக்கு விருந்தாய்நாம்) உண்ணக்கருதினேமென்று சொல்லி, வந்து - வந்து, நின்றதோர் போழ்து - நின்றதோர் பொழுதின்கண், உடையான் - உடையானது, புலியூர் - புலியூர் வரைப்பில், கொண்டல் உற்று-மேற்காற்று மிகுதலால், எறும் - கரைமேலே வந்தேறும், கடல் - கடல், வர - (எமமேல்) வர, (அதன்கணழுந்தாமல்) எம் உயிர் கொண்டு - எம்முயிரைக் (கைக்) கொண்டு, தந்து - (எமக்குத்) தந்து; ஓர்கழலவன்-அவ்வொப்பற்ற கழலையுடையவன், கண்

டல் உற்று-கண்டலாகிய(மரம)மிக்கு, எர் நின்ற-அழகுநின்ற, சேரி-(அசு)சேரியின்கண், சென்ருன் - சென்ருன், எ - று.

(வி-ரை) இனித்தக்கது செப்லாயாக வென்பது எஞ்சி நின்றது. தோன்றல்-பெருமையிற் சிறந்தோன். உடையான்-சிவபிரான். 'சுண்டல்-தாழை. வண்டலற்றே மங்கணெண்பது பாடமாயின், அங்கணெண்பதனை எழாம்வேற்றுமைப் பொருள்பட நின்றதோ ரிடைச்சொல்லாக வுரைக்க. புலியூர்க் கடலெனல் வியையும். தேரிற் சென்ருனென்பது பாடமாயின் நம்மைக் சுண்டல் விரும்பித் தேர் மேலேறிச சென்ருனென் றுணர்க. தேரினென்பது - கருவிப்பொருட்கண்வந்த வைதாமுருபெனினு மமையும். இதற்குச் சுண்டலற்றென்பது குறைந்நின்றது. தோன்றல், கழலவன் என்றதனுல், அவனது பெருமையும், எம்முயிர்கொண்டு தந்தென்றதனுல் - மெய்யுரவுங கூறினுளாம், மெய்ப்பாடும் பயனும் அவை.

நேரிசை யாசிரியப்பா.

தேன்னுழைப் பலவுபிர் சனித்தனி படைத்துப்
பரப்பிக் காட்டலிற் பதுமு ஞகியு
மவ்வுயி ரெவ்வுயி ரீனைத்துங் காத்தலிற்
செவ்விகொளை கருமுகிற் செல்வ ஞகியுங்
கட்டிய கூரைவரம் புட்புக வழித்து
நீர்தலே தரித்தலி னிமல ஞகியுந்
தருவு மணியுஞ் சங்குமுங் கிடைத்தலி
னரிமுதி ரமரர்க் கரச ஞகியு
மூன்றழ ஞன்மறை முனிவர் தோய்ந்து
மறைநீ ருருத்தலின் மறையோ ஞகியு
மீனுங் கொடியும் விரிகிணை யைந்தும்
தேனைை சுரிமஞ் திருவுறை கூடலு
மணந்ததலை மதகுல மன்னவ ஞகியு
நவமணி யெடுத்து நற்புலங் காட்டலின்
வளர்குறி மயங்கா வணிக ஞகியும்
விழைதரு முழவும் வித்து நாறுந்
தழைதலின் வேளாண் டலைவ ஞகியும்
விரிதிரை வையைத் திருநதி சூழ்ந்த

மதுரையம் பதிநிறை மைம்மலர்க் களத்த
னிணையடி வழுத்தா ரணைதொழி லென்னக்
கைதையங் கரைசெப் பொய்தற் பாவையோ
டிருதிரை யெடுக்கப் பொருதிரை யெடுத்தும்
பூழ்ப்போனகம் பகுவட ணுண்டுஞ்
சாய்தாட் பிள்ளை தந்துமகா டுத்து
மூடவுடற் கைதை மடன்முறித் திட்டும்
கவைகவர்ப் பாவை கண்ணி சூட்ட
குவலயத் திருமலர் கொணர்ந்து கொடுத்தும்
நின்ரு ணுனெடாரு காளை
யென்ரு லித்தொழில் செய்வது புகழே.

தன் னுழைப் பலவுயிர்—செய்வது புகழே, பதுதி - வரைபொருட் பிரிதல், துறை - அறத்தொடுநிற்றல்.

'தன்னுழை' என்பதுமுதல் 'ஆகியும்' என்பதுவரை.

(1—2 வரிகள்.)

(ப-ரை.) பலவுயிர் - மீன்முதலிய பலவுயிரினையும், தனித் தனி - தனித்தனியாக, படைத்து - சிருட்டித்து, தன்னுழை தன்னிடத்தில், பரப்பிக்காட்டலின் - பரப்பிக்காட்டுதலால், பதுமனுகியும் - (கால்வகைத் தோற்றத்தே மூவகைப் பிறப்பினையும் வெவ் வேறு தன்னிடத்துண்டாக்கிப் படைத்துக் காட்டும்) பிரமனுகியும்.

(வி-ரை.) நீர் வெவ்வேறு படைத்தல் - நீர்வாழ்சாதியொழிந்த வுஞ் சலமயமாதலாவது வின்றியமையாமையின் அது வெவ்வேறு படைத்ததாயிற்று. "முழங்கு முக்நீர்" என்னும் புறப்பாட்டில் " நீ ரின் றமையா யாக்கைக் கெல்லா, முண்டிகொ டித்தா ருயிர்க்கெரடித் தோரே, யுண்டிமு தற்றே யுணவின் பண்ட, முணவெனப் படுவது நிலத்தொடு நீரே, நீரு நிலனும் புணரி யோரீண், டெம்பு முயிரும் படைத்திகி னேமே"என்பதனனுமறிக. பிரமன் வெவ்வேறு படைத் தல் "ஊர்வ பதினென்ரு மொன்பது மானிடம்"என்பதனனுமறிக. ஆதித்தனெருவனுய்க்கடந்தோறும் வெவ்வேறு தோன்றினுற்போல, உயிரொன்றுய்ச் சடந்தோறும் வியாபிக்கு மென்பார் மதமறுத்தற் குப் 'பலவுயிர்' என்ரூர்.

'அவ்வுயிர்' என்பதுமுதல் 'செல்வனுகியும்' என்பதுவரை.
(3—4 வரிகள்.)

(ப-ரை) அவ்வுயிர் - தன்னிடத்திலுண்டான வுயிரனேதத்தையும், எவ்வுயிர் அனேத்தும் - ஒழிந்த வுயிரெல்லாவற்றையும், காத்தவின - காத்தலால் (பிரமன் படைக்கு முயிரெவ்வுயிரவ்வுயிரனேத்தையுங் காக்கும்), செவ்வி கொள்-அழகைக்கொண்ட, கரு முகில்-காரிய மேகமபோலும், செல்வனுகியும - விட்டுணுவாகியும்.

(வி-ரை.) காத்தல் - காலமறிந்துதவலும், வரம்புகடவாது நிற்றலும.

'கடடிய எனபதுமுதல் 'ஆகியும்' என்பதுவரை.
(5—6 வரிகள்.)

(ப-ரை.) கட்டிய-தான் வரமபிகதோடாது வரம்பாகக்கட்டிய, கரைவரம்புட்புகவழிதது-கரையழியவழித்து, நீர்தலே தரித்தலின் - நீர் தலேமையாகத தரித்தலால், நிமலனுகிய - (திருட்டி திதியென வண்டாக்கிய கரைவரம்பினைத் தன்னிடத்தொடுங்கச் சர்வசங்காரம் பண்ணிக கருகையைத் தலேமேற்றரித்த) சிவனுகியும்.

(வி-ரை.) வரம்பு - கரை. ஒத்தல் - கடத்தல். நிமலன் - மலரஹிதன்.

'தருவும்' என்பதுமுதல் 'ஆகியும்' என்பதுவரை.
(7—8 வரிகள்.)

(ப-ரை.) தருவும் - சோலேயும், மணியும் - மணிகளும், சங்கமும் - சங்கங்களும், கிடைத்தலின் - பெறலால் (கற்பகத்தருவும் சிந்தாமணியும் சங்கநிதியும் பெறலால்), அரிமுகிர் - மிகுந்த கண்ணினேயுடைய, அமரர்க்கு அரசன் ஆகியும் - இந்திரனுகியும்.

(வி-ரை.) முகிர்தல்-மிகுதல். அமரர்க்கரசன் - தேவராஜன்.

'மூன்றழல்' என்பதுமுதல் 'ஆகியும்' என்பதுவரை.
(9—10 வரிகள்.)

(ப-ரை.) மூன்று அழல் - (காருகபத்தியம் தென்றிசையங்கி ஆகவனீயம் என்னும்) முத்தீயினேயும், நான்மறை (தைத்திரியம், பௌடிகம், தவலகம், சாமம் என்னும்) நான்கு வேதத்தினேயுமுடைய,

முனிவர் தோய்ந்து - முனிவர் மூழ்கும்படி, மறை நீர் - மறையா கின்ற நீரை, உருத்தலின்-கொடுத்தலால், மறையோன் ஆகியும்-(அம் முனிவர்பா லளவளாய்க் காயத்திரியா லாதித்தனுக் கருக்கியங் கொடுக்கும்) வேதியனுகியும்.

(வி-ரை.) தோய்ந்து - தோய, தோய்ந்து மறைதற்குக் கார ணமாகிய நீரொனினுமாம். தென்றிசையங்கி - தக்ஷிணாக்னி.

'மீனும்' என்பதுமுதல் 'ஆகியும்' என்பதுவரை.

(11—13 வரிகள்.)

(பதவுரை.) மீனும் - மீன்களும், கொடியும் - கொடிகளும், விரி நீர் ஐந்தும் - (குறிஞ்சி முதலாக) விரிந்த நிலமைந்தும், தேனு றை - தேனினுறைந்த, தமிழும் - இசையும், திரு உறை கூடலும் - திருமகள்பொருந்திய மதுரையும், மணத்தலின் - பொருந்துதலால், மதிக்குலமன்னவன் ஆகியும்-(தனக்குரிய கயற்கொடியும் பிறகொடி களும் பரந்த நிலையைத்தும் செலுக்கினிமை பொருந்திய இறைய ஞாகப்பொருளும் திருமகள் பொருந்திய மதுரைமாநகரும் பெற்ற) பாண்டியனுகியும்.

(வி-ரை.) தேன் - இனிமை, "தேனுறநின்று தெருண்டார வை செப்பலுற்றேன்" என்றுற்போல. திருவுறை கூடற்கு - கண் டாரால் விரும்பப்படும் மழகுபொருந்திய கூட லெனினுமாம். மதிக் குலம் - சந்திரகுலம். கயற்கொடி - மீனக்கொடி, நிலையைந்து - ஐவகைநிலம், அவை:—குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் எனப்பன.

'நவமணி' என்பதுமுதல் 'ஆகியும்' என்பதுவரை.

(14—15 வரிகள்.)

(பதவுரை.) நவமணி-புதுமையாகிய மணிகளை, எடுத்து - (நிரை யால்) எடுத்து, நற்புலம் காட்டலின் - நல்லலிடங்களோமுங் காட்டு தலால், வளர் குறி - (நவமணிகளை யெடுத்து அம்மணிகள் பிறக்கு நல்ல தானங்களைக் காட்டி) உண்டாகாநின்ற விலக்கணத்தைச் (சொல்லுதற்கு), மயங்கா - மயங்காத, வணிகன் ஆகியும் - வணிக னுகியும்.

(வி-ரை.) நற்புலங்காட்டி யுண்டாகாநின்ற விலக்கணத்தைச சொல்லுதல் - ஈழம்பாரோசிகன்னி கொற்கைத் துறைகளி லுண்டா

கிய விப்பிமுத்தும் ஈழத்துறையி லிப்பிமுத்தும் மதியொளிபோன்று கெய்திருக்குமெனச் சொல்லுதல். வேனவு மிவ்வாறு கணடு கொளக. "புலநெறாகுதோனே" என்றுற்போல புலமிலக்கண முமாம், குறிப்பு அடையாளமுமாம். நவம் - புதுமை. இரை-அலை.

'விழைதரும்' என்பதுமுதல் 'ஆகியும்' என்பதுவரை.

(16—17 வரிகள்.)

(ப-ரை.) விழைதரும் - விரும்பப்படும் (உழவுத்தொழிலும் உழுத பின் வித்துந்தொழிலும் வித்தியபின் பயிர்களுண்டாந் தொழி லுந் தன்னுற் றழைதலினுல்), உழவும் - உழவும், வித்தும்-வித்தும், நாறும் - நாற்றும், தழைதலின் - தழைப்பண்ணுதலின், வேளாண் தலேவன் ஆகியும-வேளாண்மையையுடைய தலேவனுகியும்.

(வி-ரை.) வித்தும் நாறுமென வினைமாத்திரையாய்நின் றும் மைபெற்றது. நாறுதல் தோன்றுதலெனவே முகமும் எதிர்முகமும் கருப்பமும வினவும் அடங்கின. தழைதல் - செழித்தல். நாறு - நாற்று.

'விரிதிரை' என்பதுமுதல் 'தோழிலேன்ன' என்பதுவரை.

(18—20 வரிகள்.)

(ப-ரை.) விரிதிரை - விரிந்த திரையினேயுடைய, வையை - வையையாகிய, திருநதி சூழ்ந்த - அழகிய நதியுடுத்த, மதுரையம் பதிநிறை - அழகிய மதுரைநகரிற் றங்காகின்ற, மை மலர் களத் தன் - குவளேமலர்போன்ற கண்டத்தினே யுடையோனது, இணை அடி - இரண்டு பாதத்தையும், வழுத்தார் - வழுத்தாதார், அணை தொழில் என்ன - பொருந்திய தொழிலேபோல.

(வி-ரை.) அம்-அசையுமாம். நிறையென்றும் பாடம்.

'கைதையங்கரை' என்பதுமுதல 'எடுத்தும்' என்பதுவரை.

(21—22 வரிகள்.)

(ப-ரை.) இருதிரை - (நீ பூக்கொய்யப் பிரிகின்ற காலத்துக் கீழ்காற்று மிகுதலால்) கரையேருகின்ற திரையினேயுடைய கடல், கைதையங்கரை - கண்டற்கரைசேர்ந்த, செய்-செயலமைந்த, பொய் தற்பாவையோடு - வினேயாட்டுப் பாவையுடனே, எடுக்க - என்னே யெடுக்க, பொருதிரை - அக்கடலினின்று, எடுத்தும் - என்னே யெடுத்தும்.

(வி-ரை.) போல வெடுக்கவென வியையும். இருந்திரை எனப் பாடமாயின், (இருமை-கருமையுர்) பெருமையுமாம். கைதை கண்டல் என்பன தாழையின் பெயர். பாவை - பிரதிமை. திரை - ஆகு பெயர்.

பூழிப் போனகம் புதுவுட னுண்டும்.

(23—வது வரி.)

(ப-ரை.) பூழிப்போனகம்-(நும் வண்டன் மனைக்கு விருந்தென்று) பூழ்தியாலமைதத சிறுசோற்றை, புதுவுடனுண்டும் - புதிதாகச்சேர வஞ்கீகரித்தும்.

(வி-ரை.) "காமர் கடும்புனல்" என்னுங் குறிஞ்சிக் கலியில் "எல்லாமுட னீங்க" என்றார்.

சாய்தாட் பிள்ளை தந்துகொ டித்தும்.

(24—வது வரி.)

(ப - ரை.) தாள் - தாளினையுடைய, சாய் பிள்ளை - கோரைப் பாவை, தந்து கொடித்தும் - பண்ணி யெனக்குத் தந்தும்.

(வி-ரை.) கொடித்தமென்ப திடவழுவமைதி. சாய்-கோரை.

முடவுடற் கைதை மடன்முறித் திட்டும்.

(25—வது வரி.)

(ப-ரை) முடவுடல் - வளைந்த வுடலினையுடைய, கைதை மடல் - தாழைமடலை, முறித்திட்டும் - முறித்திட்டும்.

'கவை' என்பதுமுதல் 'கோடித்தும்' என்பதுவரை.

(26—27 வரிகள.)

(ப-ரை.) கவை - கவர்ப்பட்ட, துகிர்ப்பாவை-பவளபபாவைச்சு, கண்ணி சூட்ட - மாலைசூட்ட, குவலயத் திருமலர் - அழகிய நீலோற்பலமலரை, கொணர்ந்து கொடித்தும் - கொண்டுவந்து தரதும்.

'நின்றுன்' என்பதுமுதல் 'புகழே' என்பதுவரை.

(28—29 வரிகள்.)

(ப-ரை.) நின்றுன் - நின்றவன், உண்டு ஒரு காளை என்றால் - ஒருகாளை யுண்டென்றால், இத்தொழில் செய்வது-இங்ஙனம் வெறி

யாட்டெடுத்தல், புகழே - நங்குடிக்குப் புகழல்ல, (இனி யுனக்குத் தக்கது செய்வா யென்க.)

(வி-மை.) ஏகார மெதிர்மறை. "ஏலாப்பரிசுளவே" என்றாற் போல.

தோழி! எடுத்தும், உண்டும், கொடுத்தும், இட்டும், கொடுத்தும், நின்றவ ளொருகாலே யுண்டென்றல், வெறியாட் டெடுத்தல் நங்குடிக்குப் புகழல்ல, உனக்குத் தக்கது செய்வாயென வினைமுடிவு செயக. (கக)

திருக்கோவையார் கூஎம் செய்யுள்.

தேர்வரவுகண்டு மகிழ்ந்துகூறல்.

தேர்வரவு கண்டு மகிழ்ந்துகூறு லென்பது—புனல் வரவு கேட்ட தலைமகன் புனலாட்டு விழவிற்குப் பரத்தையர் சேரிக்கட் சென்லாகிற்ப, இவனைப் புணர்தற்குத் தக்க தவத்தினை முற்கால த்தே செய்தீர்கள், தேர் வந்து தோன்றிற்று, இனிசென்று இவ னது தோளிணையைத் தேர்ப்பாய்னெனத் தேர்வரவுகண்டு பரத்தை யர் தம்முண் மகிழ்ந்து கூறுகிற்றல். அதற்குச் செய்யுள்:—

சேயே யெனமன்னு நீம்புன லூரன்றிண் டோளிணைக
டோயீர் புணர்தவந் தொன்மைசெய் தீர்சுடர் கின்ற கொலவ
தீயே யெனமன்னு சிற்றம் பலவர்தில் லேங்கரச்சாய்
வீயே யெனவடி யீர்கெடுத் தேர்வந்து மேவினதே.

பயின்மணித் தேர்செலப் பரத்தையர் சேரிக்
கயன்மணிக் கண்ணியர் கட்டு ரைத்தது.

(ப-ரை.) சுடர் கின்ற - சுடராகின்ற, கோலம் - வடிவு, தீயே என - தீயேயென்று சொல்ல, மன்னு-நிலைபெற்ற, சிற்றம்பலவர் - சிற்றம்பலவரது, தில்லே நகர்வாய் - தில்லைநகரிடத்துள்ளீராகிய, வீயேயென - மலரையொக்கும், அடியீர் - அடியையுடையீர், கெடுத் தேர் - நெடிய தேர், வந்து மேவினது - (ஈண்டு) வந்து மேவிற்று; புணர்தவம்-(இவனைப்) புணர்தற்குத் தக்க தவத்தை, தொன்மை - முற்காலத்து, செய்தீர் - செய்தீர்கள்; சேயே என - (வடிவு) முருக வேளே யென்றுசொல்ல, மன்னு - நிலைபெறுகின்ற, நீம்புனலூ ரன் - இனிய புனலை யுடைத்தாகிய வூரையுடையவனது, திண் - திண்ணிய, தோள் இணைகள் - தோளிணைகளை, தோயீர் - (இனி) அணைமின், எ - று.

(வி-ரை.) ஒன்றற்கொன் றிணையா யிருத்தலின் 'இணை' எனத் தனித்தனி கூறப்பட்டன. இதுவும் ஊடனிமித்தம். கோலமெனற் பாலது கொலமெனக் குறுகிநின்றது. கயன்மணிக்கண்ணி யென்பது பாடமாயின், பரத்தையர் சேரிக்கட் டலைமகனது தேர் செல்லத் தலைமகனெஞ்துரைத்ததாம். இணை - ஒப்பு. தோய்தல் - அணைதல். வீ-மலர். இப்பொருட்கு நெடுந்தேர் தும்மது சேரிக்கண் வந்து தங்கிற தென்றுரைக்க. மெய்ப்பாடு-உவகை. பயன்-தலைமகன் வரவு சேரிப் பரத்தையர்க்குப் பாங்காயினர் அவர்க்குணர்த்தல்.

நேரிசையாசிரியப்பா.

வடிவிழிச் சிற்றிடைப் பெருமுலை மடவீர்
தொழுமின் வணங்குமின் சூழ்மின் முடர்மின்
கட்டுதிர் கோதை கடிமல ரன்பொடு
முண்டக முகையின் முலைமுகந் தரிமி
னுருளிற் பூழி யுள்ளுற வாடிமி
னெதிர்மி னிறைஞ்சுமி னேத்துமி னியங்குமின்
கருப்புரந் தூதைந்த கல்லுயர் மணித்தோள
வாசம் படரு மருத்தினு முறுமின்
பெருங்கவின் முன்னுட் பேணிய வருந்தவங்
கண்ணிடை யுளத்திடைக் காண்மின் கருதுமின்
பூவுஞ் சுண்ணமும் புகழ்ந்தெதி ரெறிமின்
யாழிற் பரவுமி னீங்கிவை யன்றிக்
கலத்துமென் றெழுமின் கண்ணளி காண்மின்
வெண்சுடர் செஞ்சுட ராகிய விண்ணெடு
புவிபுன லனல்கான் மதிபுல வோனென
மூமுது நிறைந்த முக்கட் பெருமான்
பனிக்கதிர்க் குடைவன் பயந்தருள் பாவையைத்
திருப்பெரு வதுவை பொருந்திய வந்நாட்
சொன்றிப் பெருமலை தின்றுணி தொலைத்த
காருடற் சிறுநகைக் குறுந்தாட் பாரிட
மாற்ரு தலைத நீர்நசை யடக்க
மறிதிரைப் பெருநதி வரவழைத் தருளிய
கூடலம் பதியுறை குணப்பெருங் கடவுண்

முண்டக மலர்த்து முதிராச் சேவடி
தரித்த வுளரத் தாமரை யூரன்
பொற்றுணர்த் தாமம் புனைந்தொளிர் மணித்தேர்
வித்திவந் ததுவர் லானம்
மேதந் தீர விருமருங் கெழுந்தே.

வடிவிழிசி சிற்றிடை-இருமருங் கெழுந்தே. பகுதி-பரத்தையிற் பிரிதல்; சூறை - தேர்வரவுகண்டு மகிழ்ந்து கூறல்.

'வெண்சுடர்' என்பதுமுதல் 'பெருமான்' என்பதுவரை.

(14—16 வரிகள்.)

(ப-ரை.) வெண்சுடர் - (எவ்வகைப் பொருளினும்) சந்திரனும், செஞ்சுடர் - ஆதித்தனுமாகிய அவ்விரு சுடரும், ஆகிய-உண்டாகிய, விண்ணெறு - ஆகாசமும், புவி-பிருதுவியும், புனல்-நீரும், அனல் - நீயும், கால் - காற்றும், மதி புலவோன் என-மதிக்கு மியமானனும் எனனும்படி, முழுதும் நிறைதத - எங்கும் நிறைதத, முக்கண் பெரு மான - மூன்று கண்ணினையுடைய பெருமான.

(வி-ரை.) ஒடு - எண்ணெறு. மதிபுலவோன் - மதிக்கும் புல வோன், "மேலிகிழவோனே" என்றாறபோல, புலவோனென வுடம் பொடு புணர்த்துக் கூறினர் புலவன்-அறிவுள்ளவன். "நிலநீர் நெருப் புயிர் நீள்விசும்பு மலர்ப்பமலோன, புலனை மைகுழ்ஞ டெண்வகை யாயப் புணர்ந்தின்று, றுலகீக தெனதநிலைபத தெனதத்தா னெருவனுமே, பலவாகி நிலறவா தேறிணைக மாடாழோ" எனத் திருவாசகம் - பயபஞ்சசுத்தி-தில்லையிற்பாடிய திருத்தோணேக்கத் தினும் அவ்விடமூர்த்தங கூறினர்.

'பனி' என்பதுமுதல் அந்நாள்' என்பதுவரை.

(17—18 வரிகள.)

(ப-ரை.) பனி கதிர் குலவன் - சந்திர வம்சத்தனுதிய மலயத் துவச பாண்டியன், பயந்தருள் - பெறற, பாலவை - அழகிய மும்மூலைத் தடாதகையை, திருப்பெரு வதுவை - கலியாணமாக, பொருந்திய அநாள-பொருந்திய அந்நாளில்.

(வி-ரை.) புலத்தை யுடையவனைப் புலவனென்றும் போலக் குலத்தை யுடையவனைக் 'குலவன' என்றார்.

'சோன்றி' என்பதுமுதல் 'கடள்' என்பதுவரை.

(19—23 வரிகள.)

(ப-ரை). சொன்றி பெருமலை - பெருஞ் சோற்றுமலையை, ரனி - மிகவும், நின்று தொலைதற-துகாகாது தொலைத்த, காருடல் கரிய வுடலினையும், பிறு நகை - பிறிய நகையினையும், குறுந்தாள் குறிய தாளினையுமுடைய, பாரிடம - குண்டோதரன், ஆற்றுது தாகமாற்றாது, அலந்த - வருந்துதற்குக் காரணமாகிய, நீர் நசை அடக்க - நீர் வேட்கையை யடக்க, மறிதிரைப் பெருநதி - மறிதந திரையினையுடைய வையைப் பெருநதியை, வரவழைத்தருளிய - வரும்படி யழைதது கிருபைபண்ணிய, கூடலம்பதியுறை-மதுரை நகரிலுறையாகின்ற, குணப்பெருங்கடவுள் - எண்குணங்களையுடைய எல்லார்க்கு மேலான கடவுள் (அவரது).

(வி-ரை) மலையென் றுரைதத லின 'நின்று' என்றார், அது இழித் தற்கண் வருதலின் வழுவனறு; "அறுசுவை யடிசி லணியிழை தருதலி னுறுவயிறு மோம்பாதி நின்று" என்றற்போல. அருளியகுணப் பெருங கடவுள் கூடலம்பதியுறை கடவுளென் றியைக்க குணம-ராஜஸகுணம்; குணத்தினை யுடையராகி எண்குணம எனினுமாம. சொன்றி-சோறு. குண்டோதரன் - ஒமகுண்டமபோன்ற வயிற்றை யுடையவன். நசை வேட்கை எனபன விருப்பப்பொருள. உறை தல் - வசித்தல

'முண்டகம' எனபதுமுதல 'எழுநதே' எனபதுவரை.

(24—28 வரிகள.)

(ப-ரை). முதிரா - அறிவு பெறாத, முண்டகம் - இதயதாம ரையையும், அலர்த்தும் - அறிவுபெறப்பண்ணும், சேவடி - சிவந்த வடியினை, தரித்த - பெற்ற, உள்ளத்தாமரை - இதய தாமரையை யுடைய, ஊரன்-நம்மூரானது, பொன்-பொன்னினாற்செய்த, துணர்-கொதது னையுடைய, தாமம் - மாலையை, புனைந்தொளிர் - புனைந்த சூலல் விளஙகாகின்ற, மணி தேர் - மணிகள் கட்டிய தேரானது, வீதி - (புனலாட்டு விருப்பினால் நமது) சேரியிடத்து, வந்தது—, வரலால் - வந்ததாதலால், நதம எதம - (இப்பொழுது) நம்மே லுண்டாகிய படிறு, நீர - நீஙக, இருமருங்கு - இரண்டு பக்கமும், எழுந்து - எழுந்து.

(வி-ரை.) மூண்டகமும் மெனனுஞ் சிறபபுமை விகாரததாற றொகதது, மூதிராத மூண்டகமும மலாகதுஞ் சேவடி யெனறுமாம. வநதது வரலென்பது புகுநததுவே யெனமுறபோல கினறது. இரு மருஙகுமென்னு முறறுமமை தொகதது முன்றும பினனு மொழிக கிடமும வலமும பகதமாபிறறு. எகாரமீறறசை.

'வடி' எனபதுமுதல் 'மடவீர்' என்பதுவரை.

(1—வது வரி.)

(ப-ரை.) வடி விழி-மாவடுபோன்ற விழியினையும, சிற்றிடை-சிறிய விடையினையும, பெரு மூலை - பெரிய மூவுயினையுமுடைய, மடவீர - மடவீர.

(வி-ரை) பெருக்தோட் சிறுநுதற் பேரமர்க்கட் பேதைபோல மயஙகிவநததி வடி - மாவடு, "வடிகணண பாப்பி" எனமுற்போல. மடவீர் என்றது குணததை நோககாது பொதுவாய மாதரீர் எனனும பொருள பயநது கினறது.

'தொழுமின்' என்பதுமுதல் 'காண்மின்' என்பதுவரை.

(2—13 வரிகள).

(ப-ரை.) தொழுமின் - அததேரைக் கையெடுத்துத் தொழுவீராக, வலஙகுமின - (அதிவன்றி யவனேத) தலவணகைகளஞ் செயவீராக; சூழ்மின -அத் தேரைப் பிரதககிணஞ் செயவீராக; தொடர்மின - (அதுவனறி யதனைப்) பற்றுவீராக; உருளிற் பூழி - (அதுவன்றி யதனேரின) வண்டியா லெழுநத புழுதியை, உள் ளூற வாடுமின -மேலெழுகும பூசுவீராக, கடிமலர் கோனறை - (அதுவனறி) நீர் வாசததினையுடைய மலாமாலையை, அனபொடு - அனபோடு, கட்டுதிர் - முடிப்பீராக, மூணடகம் - (அதுவன்றி) மூண்டகமலரை, முகையின் - முகிழ்போனற, மூலைமுகம் - மூலை யிடததில், தரிமின் - தரிப்பீராக; எதிர்மின - (அதுவன்றி அவனை) நீ தொடாகொள்வீராக; இறைஞசுமின் - (அதுவன்றி யவனைச) சாஷ டாஙகமாகச சேவிபபீராக, எததுமின-(அதுவன்றி யவனைப்) புகழ் வீராக; இயஙகுமின - (அதுவனறி) அவனிடதது செல்வீராக, கல் உயர் - (அதுவனறி யவனது) மலையி னுயாசசியினு முயர்நத, மணி கோள - மணிகள தோளில், துதைநத - செறிநத கருப்புர வாசம படரு - கருப்புரவாசதைதத் தொணடுவரும், மருததினும - காற்றி னெதிரிலும, உறுமின - பொருதுவீராக; மூன்னுள்-(அதுவனறி)

மூன்ஞள், பெருங்கவின் - பெரிய அழகானது, பேணிய - (இவளிடத்திலிருக்க வேண்டுமென்று) விரும்பிய, அருந்தவம் - அரிய தவத்தை, கண்ணிடை - கண்ணுறல், உளத்திடை - உள்ளகத்திடத்து, காண்மின் - காண்பீராக; கருதுமின் - (அதுவன்றி) நீரவனை நினைப்பீராக; எதிர் - (அதுவன்றி) அவனெதிரே, புகழ்ந்து (அவனைப்) புகழ்ந்து, பூவும் சுண்ணமும் - பூவையுஞ் சுண்ணத்தையும், எறிமின் - எறிவீராக; யாழில் பரவுமின் - (அதுவன்றி அவனை) யாழிற் பாடுவீராக; ஈங்கு இவையன்றி-இவ்விடத்திற் கூறிய வியையன்றி, கலத்தும் என்று எழுமின் - (அவனைக்) கூடுவேமென் றெழுவீராக; கண் அளி - (அதுவன்றி அவனைக்கூடி) அவன் கிருபையை, காண்மின் - காண்பீராக.

(வி-ரை.) அன்றி யென்பதனை யெங்குங் கூட்டி அதுவென வொருசொல் வருவிக்க. "தேமல ரங்கட் டிருவே புகுத்த, மாமலர்க் கோதை மணாளன் புகுதுக" என்றற்போலத் தனித்தளி மூற்றுக்கினுமாம். தலைவன் புதுப்புனலாட்டு விழலிற்குப் பரத்தையர் சேரியிற் செல்ல அவரிவ்வணங் கூறியதுந் தலைவி யூடுதற்கு நிமித்தமாம். இது பரத்தையர்க்குப் பாங்காயினர் கூறியது.

மடவீர்! நம்மூரன்றேர் நம்வீதியில் வந்ததால் இப்பொழுது நம்மே லுண்டாகிய படிறு நீங்க இரண்டு பக்கமு மெழுந்து இவ்வண்ணஞ் செய்வீராகவென வினைமுடிவுசெய்க. (கஉ)

திருக்கோவையார் கூ0அ - ம் செய்யுள்.

கல்வி நலங்கூறல்.

கல்வி நலங் கூறலென்பது—வகைந்துகொண்ட பின்னர் ஒத்தற்குப் பிரியலுறுகின்ற தலைமகன், தலைமகளுக்குப் பிரிவுணர்த்துவழுங, மிகவுங் கூற்றுற் கற்றோர் நன்மைக் கெல்லையில்லாத தன்மைய ராவரெனத் தோழிக்குக் கல்விநலங கூறுகிறதல். அதற்குச் செய்யுள்:—

நீள வில்லாத் திகழ்தரு கல்விச்செம் பொன்வரையி
ஞள வில்லா வளவுசென் றுரம் பலத்துணின்ற
வோள வில்லா வொருவ னிருங்கழ லுண்ணினர்போ
லோள வில்லா வளவின ராகுவ மேந்திழையே.

கல்விக் கடல்வர் செல்வத் தவரெனச்
செறிகுழற் பாங்கிக் கறிவறி வித்தது.

(ப-ரை.) எந்திழையே-எந்திழாய், சீர்-நன்மைக்கு, அளவில்லா-எல்லையில்லாத, திகந்தரு - விளங்கும், கல்வி - கல்வியாகிய, செம்பொன் வரையின்-மேருக்குன்றத்தினது, ஆர்-மிக்க, அளவு இல்லா-அளவில்லாத, அளவு - எல்லையை, சென்றார் - அடைந்தவர்கள், அம்பலத்துள் நின்ற-அம்பலத்தின்கண்ணின்ற, ஓர் அளவு இல்லா-ஓரளவையுமில்லாத, ஓநவன் - ஒப்பில்லாதானுடைய, இருங்கழல்-பெரிய திருவடிகளே, உன்னினர்போல் - (அறிந்து) நினைந்தவரைப் போல், ஏர் - நன்மைக்கு, அளவு இல்லா-எல்லையில்லாத, அளவினர் ஆதவர் - தன்மையராவர், எ - று.

(வி-ரை.) செம்பொன்வரை யென்றன் காய்மையும் பெருமையுங் கலவாமையு முடைமையால். கற்றதுளர்ன்னுங் கற்க நினைக்கின்ற ஞதலன் 'ஆளவில்லா வளவுசென்றா' என்றன். ஆரளவு - சாதமும் புளி முதலாயின அளவு. ஓரளவென்பது காட்சியும் அனுமானமு முதலாயினவளவு; இது குறிப்பெச்சம். செல்வத்தவர் - இல்வாழ்க்கைச் செல்வத்தவர். அறிவறிவித்தது அறியப்படுவதனே யறிவித்தது. பாங்கி யறிவறிவித்ததென்பது பாட்டாயின் தலைமகனது குறிப்பைக்கண்டி .தோழி தலைமகட்குக் குறிப்பினுற் கூறினளாக வுரைக்க. மெய்ப்பாடு - பெருமிதம், பயன் - பரிவுணர்த்தல்.

கோரையாசிரியப்பா.

நிலையினீற் சலியா நிலைமை யானும்
பலவுல கெடுத்த வொருதிறத் தானு
நிறையும் பொறையும் பெறுநிலை யானும்
தேவர் மூவரு காவ லானுங்
5 தமனியப் பராரைச் சைல மாகியு
மளக்கவென் றமையாப் பரப்பின தானு
மமுதமும் திருவு முதவுத லானும்
பலதுறை முகத்தொடு பயிலுத லானு
முள்ளுடைக் கோட்டு முனையெறி சுறவ
10 மதிர்வனே தடியு மளக்க ராகியு
நிறையுளங் கருதி நிகழ்ந்தவை நிகழ்ந்துவை
தருதலின் வானத் தருவைந் தாகியு
மறைவெளிப் படுத்தலிற் கலிமக ளிருத்தலி

னகமலர் வாழ்தலிற் பிரம னுகியு
முயிர்ப்பிரிக் தளித்தலிற் புலமிசை போக்கலிற
படிமுழு தளந்த நெடியோ னுகியு
மிறுதியிற் சலியா திருத்த லானு
மறுமைதந் துதவு மிருமை யானும்
பெண்ணிடங் கலந்த புண்ணிய னுகியு
மருள்வழி காட்டலி னிருவிழி யாகியுள
கொள்ளுநர் கொளைக் குறையா தாதலி
னிறையுள நீங்கா துறையரு ளாகியு
மகையுறு லாகி யிருவினை கெடுக்கும்
புண்ணிய கல்வி யுண்ணிழற் மாகதன்
பரிபுரக் கம்பலை யிருசெவி யுண்ணும்
குடககோச் சேரன் கிடைத்திது காண்கென
மதிமலி புரிசைத் திருமுகங் கூறி
யன்புருத் தரித்த வின்றிசை பாணன
பெறநிதி கொடுகென வறிவிக் தருளிய
மாதவர் வழுத்துங் கூடற் கிறைவ
னிருசரண் பெறுகுர் போலப்
பெருமதி நீவெர் சிறுமதி துதலே.

நிலையிற் சலியா-சிறுமதி துதலே. பகுதி - ஒதற்பிரிவு, துறை கல்விகலங் கூறல்.

'நிலையினின்' என்பதுமுதல் 'ஆகியும்' என்பதுவரை.

(1—5 வரிகள்.)

(பதவுரை.) நிலையினின் - பருடார்த்தமாகிய (தர்மார்த்த காமங் களின்) நெறியினின்றும், சலியா - அசையாத, நிலைமையானும் - நிலைமையினலும், பல உலகு - உலகம்பலவும், எடுத்த - கைக்கொ ண்ட, ஒரு திறத்தானும் - ஒப்பற்ற கூறுபாட்டானும், நிறையும் - அறிவும், பொறையும் - பொறுதியும், பெறும் - உண்டாகும், நிலை யானும் - நிலைமையானும், தேவர் மூவரும் - பிரமா விட்டுணு உருத்திரனென்னு முத்தேவரும், காவலானும் - காவலா யிருத்த லானும், பாரை - (நின்ற நிலையில் தளங்காத நிலைமையும் பலவுல குக்கு மாதாரமாகு மொப்பற்ற கூறுபாடும் இவ்வளவுகல மூயரமென்

பதும் பலபொருளோடு தாங்கலும் பெற்ற நிலைமையும் மூவாகு மிருப்பிடமாதலு முடைத்தாய) பரியவரையினையுடைய, தமனியச் சைலம் ஆயும் - மகமேருவாகியும்.

(வி-மை.) இன் - நீக்கம் இதைதென்ன வறிதறிவும்மை தொக்கது பலவுலகையுடைய பூமியைப் 'பலவுலகு' என்றார். "மாயோன் மேய காடுறை யுலகமும், சேயோன் மேய மைவரை யுலகமும்" என்றார் தொல்காப்பியனுந. "மூவெழுலகமும்" எனவு பரிபாடலினுங் கூறினர். இது எதுவுஞ் செலேடையு முருவகமும் பெற்ற சுவகிர் ணம்: எனையவுமன்ன.

'அளக்க' என்பதுமுதல் 'ஆகியும்' என்பதுவரை.

(6—10 வரிகள்.)

(உ-ரை) அளக்கவென்று - இவ்வளவு பொருளுளவென்று, அணையா - ஆராய்படாத, பரப்பினதாலும - நிரிவாலும், அழுத மும் திருவும - அழுதமுமிருபும (என்று மகலகில்லாழி), உதவுதலானும் - தருதலானும, பலமுறை-பலபொருள்மார்க்கமும, முத்தொழி - தன்னிடத்தில், பயிறதலானும் - பரிபூரணமாதலும, மூன்றுடை - (ஒருவராலு மளக்கப்படாத பரப் பினையும் அழுதத்தினையும் திருமகளோடு தருதலும் எம்மறி யிறைதாதிபுரையை பலதிறையிடத்தோடி பொருந்துதலு முடைத்தாகிய திருமூருகரு) மூன்றினையுடைய, கோட்டி - கோட்டிஞரல், மூனை எறி - பகைகளை வெல்லாகின்ற, சுறவம் - சுறவம், அதிர - முழங்காகின்ற, வளை-சங்கத்தை, தடியும் - வெல்லுதற்கிடமாகிய, அளக்கர் ஆயும் - கடலாகியும்.

(வி-ரை.) பரப்பினதென்பதில் அது பருநிப்பொருள் விகுதி. தடியுங்கடல் இடத்து நிகழ்பொருளின்மேறுழி விடத்தின்மேல் நின்றது. "மிஞிறார்க்குங் காஞ்சி" என்றார் பாலக்கவியினும். பயிலல்-பழகல். சுறவம் - மீன்விசேடம். தடிதல் - வெல்லுதல்.

'நிறையுளம்' என்பதுமுதல் 'ஆகியும்' என்பதுவரை.

(11—12 வரிகள.)

(ப-ரை.) நிறையுளம் - நிறைந்த அவாவருள்ளத்தில், நிகழ்ந்தவை நிகழ்பவை - எப்பொருள் நிகழ்ந்தவை. நிகழ்பவை, (அப்பொருள்களே யவரவரறிவுக்குத் தக்கதாய்), கருநி-கருத, தருதலின் - கொடுத்தலானும், வானத்தரு ஐந்து ஆகியும் - (அவரவருள்ளங் குறைபடா

மற் கருதி யவருள்ளததி னிகழ்ந்ததொரு ளெப்பொரு ளபபொருள்களைக் கொடுக்குமே) வானதத்தினக்ணுள்ள வைந்தருவாயும்.

(வி-ரை.) ஐந்தருவாவன - சந்தானம், தேவதாரம், கற்பகம், மந்தாரம், பாரிஜாதம் என்பன.

'மறை' என்பது முதல் 'ஆகியும்' என்பதுவரை.

(13—14 வரிகள்.)

(ப-ரை.) மறை வெளிப்படுத்தலின் - இரகசியப் பொருளை வெளிப்படுத்தலானும், கலைமகள் இருத்தலின் - சரஸ்வதி குடியாக விருத்தலானும், அகமலர் வாழ்தலின் - இதய கமலத்திற் றங்குதலானும், பிரமன் ஆகியும் - (வேதததை வெளிப்படுததச சரசுவதியோடு பொருந்திச் சாமையிடத்தி லிருக்கும்) பிரமனுகியும்.

(வி-ரை.) கல்விக் கதிதேவதை யாதலால் சரஸ்வதியை 'கலைமகள்' என்றார்.

'உயிர்' என்பதுமுதல் 'ஆகியும்' என்பதுவரை.

(15—16 வரிகள.)

(ப-ரை.) உயிர் - உயிர்கள், பரிந்த - விரும்பி வேண்டிய பொருள்களை, அளித்தலின் - கொடுத்தலானும், புலமிசை போக்கலின்-அவரவர்க் கடங்காதறிவை மேற்போக்கலானும், படி முழுதும்-(உயிர்களை விரும்பிக் காத்தலு மறிவுக்கு மேலாகக் காணப்படுதலு முடைய) உலகமுழுதும், அளந்த - அளந்த, நெடியோன் ஆகியும் - திருமாலாகியும்.

(வி-ரை.) மூறறும்மை தொக்கது. விருப்பம் நிகழாவழி வேண்டல் நிகழாதெனபது தோன்றப் பரிந்ததே என்பதற்கு விரும்பி வேண்டிய பொருள்களை யென்றுரைக்கலாயிற்று.

'இறுதி' என்பதுமுதல் 'ஆகியும்' என்பதுவரை.

(17—19 வரிகள்.)

(ப-ரை.) இறுதியில்-கற்பவிறுதியில், சலியாது-அசைவின்றி, இருத்தலானும்-இருத்தலானும், அறுமை - ஆறங்கத்தையும், தக்கு-தணினிடத்துண்டாக்கி, உதவும் - எல்லாருமறிய வுதவும், இருமையானும் - பெருமையானும், பெண்ணிடம் கலந்த - (எல்லாத்தேவரு மொடுங்குங் கால விறுதியி லேகமா யசைவின்றி யிருத்தலுந் தொ

முத லிம்மையிற் சிவன்மூத்தராய மறுமைப்பயன் நந்ததவும் பெரு மையுமுடைய) பார்வதியை யிடப்பாகத்தில் வைத்த, புண்ணியன் ஆகியும் - சிவபெருமானுகியும்.

(வி-ரை.) ஆறு - அறுமையா மீண்டெண்ணின்மே னின்றது. "இருமை வகைதெரிக் தீண்டறம் பூண்டார்", "தெரிமாண் டமிழ் மும்மைத் தென்னன் பொருப்பு என்புழிப்போல" அது "ஆறறி யந்தணர்" என்றுற்போல, வரையறைக் குணப் பண்புடைப் பொருண்மேனின்ற வாகுபெயர், அங்கத்தை யுணர்த்தலின். ஆறங்கமாவன - மந்திரம், வியாகரணம், நிகண்டு, சக்தோபிசிதி, நிருத்தம், சோதிடம் என்பன

அருள்வழி காடடலி னிருவிழி யாகியும.

(20—ஆம் வரி.)

(ப-ரை.) அருள் வழி - கற்றதனுல் தொடர்பு பற்றுது இயல் பாக வெல்லா வுயிர்க்கண்மேலுஞ் செல்வதாகிய) கருணையை, காட் டலின் - கொடுத்தலால், இருவிழி ஆகியும் - (வீட்டுநெறி காட்டலா லருட்பார்வையைக் காட்டும்) இருவிழியாகியும்.

(வி-ரை.) அருளினுல் வழிகாட்டல் - அருள்கொடுத்து வழி காட்டலாயிற்று. அருள்காட்டல் - வீட்டு நெறியைக் காட்டல்; "அருளிலார்க் கவ்வுலகமில்லே" என்பதனுலறிக.

'கோள்ளுநர்' என்பதுமுதல் 'ஆகியும்' என்பதுவரை.

(21—22 வரிகள.)

(வ-ரை.) கொள்ளுநர் - கற்பார், கொள்ள - கற்றதனுல், நுறை யாது - குறையாது, நிறை - அறிவுபொருந்திய, உளம் - உள்ளத் தைவிட்டு, நீங்காதாதலின்-பிரியாம லுண்டாதலால், உறை அருள் ஆகியும் - (ஒன்றென் றெறவ்வாத சமயநெறியி லுள்ளாரெல்லாரு மனவைகளா ஞாய்ந்துகொள்ள வேறபடாம லறிவினையுடைய வுள் ளத்தை நீங்காது) உறையுமருளாகியும்.

(வி-ரை.) அருட்காயின் யாவருமென வொருசொல் வருவி க்க, "பல்லாற்றுற் றேரினு மஃதே துணை" என்பதனுன் அருள் எல் லாச் சமயத்தார்க்கு மொக்குமென்க.

'அவை' என்பதுமுதல் 'மூக்கர்' என்பதுவரை.

(2—24 வரிகள்.)

(ப-ரை.) அவை - (நல்லவை தீயவை யென்னும் இரண்டி) சபைகளு, முதலாகி - முதலமைபாயி, இருவினை கெடுக்கும் - நல் வினை தீவினைகளைக் கெடுக்கும், புண்ணியக்கல்வி - தருமமுதலா கிய கல்விகளை, உண்ணிகழ் மாக்கள் - கருதாகினை மாகள்.

(வி-மை.) ஆகியும் நிகழ் கல்வியெனக் கூட்டுக. புண்ணியங் கல்வியெனவே குறையவையுந் நீயவையு மொழிந்தன. நல்லவை - வெண்பா - "புகழுந் தருமமெறி கின்றோர்பொய் காம, மிகழுஞ் சினஞ்செற்ற மிலேலோர்-நிகழ்க்கலே, நெல்லா முணர்ந்தோ நிருந்த வீடமன்றே, நல்லா ரவைக்கு நலம்" எனபதனுனறிக. நிறையவை - வெண்பா - "நலனடக்கஞ் செமமை நடுவுநிலை நான்குஞ், குலனென் நிவையுடையோர் கோற்றில - புலனில்லோர், சென்று மொழிந்த னவுவ கேட்டோர் செறிந்தவிட,மன்றே நிறைந்த வவை" என்பத னுனறிக.

சிறுமதி நூதலே.

(32—வது வரி.)

(ப-ரை.) சிறுமதி நூதலே - சிறியமதிபோலு நுதலினையுடை யாய்.

(வி-மை.) சிறுமதிநுதல் - அன்மொழித்தொகை.எ-விளியுருபு.

'பரி' என்பதுமுதல் 'நீடேர்' என்பதுவரை.

(25—32 வரிகள்.)

(ப-ரை.) பரிபுரக்கம்பலை - (அம்பலத்தி லாடும்) காற்சிலம் போசையை, இரு செவிபுண்ணும் - இரு செவியிற் பொருதுசத் தேதுவாகிய, குடக்கோசசோன்-குடதிசைக் கோவாகிய சேரமான், மதிமலிபுரிசை - மதிமலிபுரிசை யென்றடி யெடுத்துப்பாடி, நிரு மூகம் இது - இவ்வோலையை, கிடைத்தி காண்கென கூறி - பெற் றுக் காண்பானுகவென்று கூறி, அன்பு உருதரித்த - அன்புதானே தொருவடிவாகப் பெறற, இன்பு இசை பாணன்-இனிய இசையினை யுடைய பாணன், கிழிபெற கொலிக்கென - கிழிபெறக் கொப்பா னுகவென்று, உரவிதித்தருளிய-பொருந்த வீதித்தருளிய, மாதவர் வழுத்தும் - மிகுதத் தவநிலையுடையோர் வணங்கும், கூடற்கிறை வன-கூடற்கு முதல்வன, இருசரண் பெறுகுநர்போல - பெரிய

சரணத்தைப் பெற்றாற்போல, பெருமதி நீவேர் - மிகுந்த கல்வியறிவிற் களவில்லாத தன்மையாவர்.

(வி-ரை.) உண்ணுறுமென்ப ஆண்டற்குரிய வல்லாப்பொருளே யென்பதனைக் கொள்க. தடாகோ - திசைதிலகத்தினது. கூடல் - மதுரை. இருசரண - இரண்டாயடி யெனினுமாம். மதி - அறிவு, அது ஈண்டைக்கேற்பக் கல்வியறிவுகளாயிற்று.

சிறுமதிநுகரே! கல்விமாக்கள் இறையவன் சரணம் பெறுகுகர்போலப் பெருமதி நீயுமெனவினைமுடிபு செயக.

இது விதலையாப்புப் பொருளுகோள். வரைக்கபின்னர்த் தலைமகட்கோதற் பிரிவுணர்த்தவாதலாலும் கல்வியுடையராகலினிறைவன் சரணம் பெற்றாற்போல நீயுமெனை நோழிக் கறிவுதராமனென்க.

திருக்கோவையார நகூஉம் செய்யுள்.

மூன்னிகழ்வுரைத் தூரடநீர்த்நூல்.

மூன்னிகழ்வுரைத் தூடை நீர்த்நலேம்பு—கல்வியிடத் தூடாகின்ற தலைமகளுற்று, யாமிகடிய நெறியைச்சென்று சிறிய ஞரின் கண் மரையாதட் பன்னியில், இளைத்திருந்த மெல்லிய முலைகள் என் மார்பிடை வந்தட்டச்சுத் தடிய நெடியதுயிற்கு மாறு கண்டிலம், அதனை நீ புள்ளியு மறிந்தியாவென முன்னிகழ்வுரைத்துத் தலைமகன் அவளை யூடறீர்ப்பித்தல். அதற்குச் செய்யுள்:—

ஆறார் சடைமுடி யம்பலத் தண்டாண் டம்பெறினு
மாறார் மழலிடை யாய்கண்டி லம்வள் ளுகிர்வெதுப்பு
நீறூர் கொடுநெறி சென்றிச நெறிமென் முலைநெருங்கச்
சிறார் மரையுதஞ் சிற்றடி கங்குற் சிறுதுயிலே.

முன்னி கழ்ந்தது கண்ணுற்ற குரைத்து
மன்னுபுன ஞ ன் மலிழ்வுற் றது.

(பு-ரை.) ஊர் - தலைவன்தா, மழவிடையாய் - இளையவேற்றையுடையாய், ஆறு ஊர் - ஆறுபாதி, சடைமுடி - சடைமுடியையுடைய, அம்பலத்து - அம்பலத்தின்கண் உளராகிய, அண்டர் - தேவரது, அண்டம் - அகலிடம் (மூழுதையும்), பெறினும் - (யாம்) பெறினும், வள் கதிர் - (ஞாயிற்றினுடைய) வளிய கதிர்கள், வெதுப்பு - வெதுப்பிய, நீறு ஊர் - நீறுபரந்த, கொடுநெறி சென்று - கொடிய நெறியைச் சென்று, இ-இத்த,செறி-நெருங்கிய,மெல் முலை

மெலிய முலைகள, நெருங்க-எமமுடைய மாபினிடைவந்து)அடர, சிறு ஊர- (நெறியால) சிறியவழினகண,மரை அதரில-மரையெனனு மிருகத்தின ரோல்லுலாய படுகையில, தங்கு - தங்கிய, கலகுல- இரவில, சிறு துயில - சிறியதுயிறகு, மாறு கணடிலம - மாறுகணடிலம (அதனை நீ யுளளியு மறிதியோ)

(வி-ர.) மழவிடையாய எனபதறகு இளவேறு போலபவனே யென துரைபபினுமாம. மாறு - ஒபபு. அணடாதணட முழுதும பெறுகலால வருமினபமும அதறகியலானவறற வினபதறகு மாறலல வெனறவாறு இளவேறு-புதலவன தமகறதறக பளளியு மிடமுமினமையிற 'சிறுதுயில' எனறான. துயிலும பொழுதிற றுயிலாபபொழுது பெரிதாகலின அவவாறு கூறினனெனினு மமை யும. துயிறபெனனு நானகனுருபு விகாரவகையாற றொகுதினறது. மூனனிகழறறது கூறுவானைய உணணினற விவபபாறறுவிதறது ஞெழுஙகெனபதனாலும மரவ தளினெனபதனாலும பாடம ஞெமுஙகல- அழுநதல மரவதள - மரபபடடை மெயபபாடு - உவகை, பயன - லமகளை மகிழவிதறல

நேரிசையாசிரியபபா

குரவ மலாறற குவையிருட கூழலி
யிருவி மொருகா லெரியத றிறாது
விரிதலே ரோனைமூலை வெளவா யெயிறறியாக
கருப புது விருமெனைப பொருநாகிமற றுவாதரு
மிடியுந துயரதுய சுரைகருட மெறிதது
நீணிலேக கூவற றெளிபுன லுணடிம
பழமபுற குரமபை யிடமபுக கிருநறு
மூடஙகத ளுறறத மூஙிணைகை யெயதியு
மூடனுடன பயநத கடஞ்சோலி யேறறு
நடைமலே யெயிறறி னிடைதலே வைதது
மூயாநதவின பதறகின றுவமமுணைடெனின்
மூலேமன றணநத சிறுநதற றிருவினே
யருமறை விதிகஙத திருமணம புணாறது
மதிகுலம வாயதத மனனவ ஞகி
மேதினி புரகுமம விதியுடை நலனு
ணடிவூர நகாசெய தடுபவந துடைகரு

மருட்குறி நிறுதகி யருச்சனை செய்த
தேவ நாயகன் கூடல்வா ழிறைவன்
மூண்டக மலர்த்தி முருகவி ழிருதா
ளுறைகுர முண்ணு மின்ப
மறைய லன்றி மற்றொன்று மடாதே.

குரவமலர்ந்த-மற்றொன்றுமடாதே. பதஞ்-பரத்தையிற் பிரிவு, துறை முனனிகழ்வுரைத் தூடறீர்த்தல்.

குரவ மலர்ந்த குவையிருட் குழலி.
(1—வது வரி.)

(ப-ரை.) குரவம் மலர்ந்த - குரவமலர்விரிந்த, குவை இருள் இருட்கூட்டமபோலும், குழலி - குழலினையுடையாய்.

(வி-ரை.) இல்பொருளுவமை, அபூதவுவமையெனினு மையுமை, மலாந்தகுழ லெனினுமாம. குரவம் - ஆகுபெயர். குவையிருள் என்பதனை முன்பின்னுகமாற்றிப் பொருள் கூறப்பட்டது. குழலி அண்மைவிளி.

'இருவேம்' என்பதுமுதல் 'பொருந்தி' என்பதுவரை.
(2—4 வரிகள.)

(ப-ரை.) இருவேம் - நாமிருவரும், ஒருகால-ஒருசமம், எரியத நிறந்து-எரியினையுடைய சுரத்திறபோய, விரி தலை-விரிந்ததலையினையும தோல் மூலை - நானற முலையினையுமை, வெள வாய - வெள்ளிய வாயினையுமுடைய, எயிற்றியர்கு - பாலைநில மகளிர்கு, அரும் - கிடையாத, புது விருந்து என-புதியவிருந்தெனனுமபடி, பொருந்தி-பொருந்தி.

(வி-ரை.) மற்றவென்பதனைப் பின் கூட்டுக. எரி - எரியாநின்ற எனினுமாம். எரி - நெருப்பு. அதர்-வழி, அது ஈண்டுப் பாலைவழிக்காயிற்று நான்ற - தொலைந்த.

பழம்புற் குரம்பை யிடம்புக கிருந்தும்.
(7—வது வரி.)

(ப-ரை.) பழம்புல் குரம்பையிடம - பழையபுல்லால வேய்ந்த அவர் சிறறிலிடத்து, புகஇருந்தும - புகுந்திருந்தும.

மற றவாதரு
புடங்கத ளுறுதத முகிணகை யெய்திபு
இடியுக துய்ததது

(4—8—5 வரிகள்.)

(ப-ரை) மூடஙகு அதளுறுகத - சுருட்டிவைத்தலால் விரிப்ப, முழிழ் நகை எயதியும் - (அதற்குக) குறுநகை விளைதத ற, மறறவா தரும - அவரிடம, இடியும துயதது - இனனமாவின நுகாதும

(வி-ரை) மறறு - அசை. உமமை - மாறுக. நுகாதல் - உணடல. இடி-ஆகுபெயர்.

'சுரைக்குடம்' என்பதுமுதல் 'உண்டும்' எனபதுவரை.

(5—6 வரிகள்.)

(ப-ரை.) நீணிலை கூவல - ஆழதத நிலையினபுடைய கிணறறில், தெளி புனல - தெளிநதநீரை, சுரை குடம - சுரைகாயாலமைதத குடததில, எடுதது உணடும - எடுதருதியுட.

(வி-ரை.) சுரை - ஆகுபெயர். அருதல - பருகல

'உடனு' என்பதுமுதல் 'வைத்தும்' எனபதுவரை.

(9—10 வரிகள்.)

(ப-ரை) கடல் - கடலானது, உடனுடன - உடனுடனே, பயதத - தநத, ஒலி ஏற்றும - ஓசையைக கேட்டும, நடைமலை-யானபின, எயிறறினிடை - மருப்பினகண, தலை வைததும - தலையினை வைதததும

(வி-ரை) கடவொலி யெனறு பாடஙகூறி யானையொலி யெனறு பொருள் கூறுவதுமுண்டு ஒல்லி யென்பதனை யொலியென விகாரமாகக் ஏற்று மென்பதனை எறறுமெனறு பாடமோதின, யானை நீருண்ணுந துறையிற் பொருநதியதனைப் பெற்றவுடனே வெடடு மருப்பிடதததத தலையைவைதததுமெனக. மருப்பு-கொமபு (தநதம). தலையைவைத்தும் எனறது தலைவைதததறவியு மெனற வாறு.

உயார்ந வினபதற கினறுவம முணடெனின.

(11—வது வரி.)

(பத-ரை) உடாநத இனபதறகு-சிறபபாகிய அவ்வினபதறகு, உவமம இனறு - வேறுவமையுமிலலை, உணடெனின - ஒனறுணடெனறு விசாரிகக்ன

(வி-ரை) உமமை - சிறபப. அது தொகாநினறது

'மூலே' எனபதுமுதல 'நன்னுளி' எனபதுவரை.

(12—15 வரிகள)

(பத-ரை) மதி குலம வாயநத - சநதிர வமசதது்னினறும தப பாறு பெறற, மனனவன ஆகி - பாணடியனுகி, மூலை மூனறு அணநத - மூனறுகப பொருநதிய மூலையினையும, சிறு நுதல - சிறிய நுதலினையுமுடைய, திருவினை - திருவினை, அருமறை விதிகக - பிரமன சடங்கியறற, திருமணமபுணாநது-திருககலியாணஞசெயது, மேதினி புரகக ம - உலகையாளும விதியுடை நனனுள - விதியினை யுடைய நலல காளில

(ப-ரை.) பெருஞ்சேற்று - பெருஞ்சேற்றினையுடைய, கழனி-கழனியாகியதாய், கரும்புபெறகாலே - கரும்பாகிய மகவைப்பெறுங காலத்து, கொள்வோர்க்கு அன்றி-கொள்வோர்க்கல்லாமல், அவ்வயல் சாயா-அவ்வயலாகியதாய அதனைத் தன்பாற் சேர்த்துக்கொள்ளாது.

(வி-ரை.) இது குறிப்புருவகம். பெருஞ்சேறு - மிக்கசேறு. கழனி - வயல்.

'பூம்பணை' என்பதுமுதல் 'முக்கணன்' என்பதுவரை.
(28—37 வரிகள்.)

(ப-ரை.) தென்றல்-தென்றலானது, பூம்பணை திரிந்து-பொலிவினையுடைய வாவியிடத்திற் சஞ்சரித்து, பொதி அவிழ் முளரியில் - மூகையவிழ்ந்த தாமரையில், காம்புபொதி - அடியினை மறைத்த, நறவம் - தேனை, விளரியோடு அருந்தி - விளரிபாடும் வண்டினருந்தி, கந்தி தண்டலே - கமுகஞ்சோலையில், வருது வீற்றிருந்து-வந்து வீற்றிருந்து, கடி மலர் பொழிலில் - வாசனையுடைய மலர்ச்சோலையில், சிறிது கண்படுதல்-சிறிதுகாலம் பொருந்தி, மயக்கறிறை காமத்து - மயக்க நிறைதற்குக் காரணமாகிய விருப்பத்தால், இயக்கங்கொ

ண்டி - அகைநடைகொண்டி (கிடந்தது மிருந்ததுமன்றி,) நின்ற நாரணன் - நின்ற திருமாலின், பரந்த மார்பில் - அகன்ற மார்பில், கலவா குங்குமம் - கூட்டிலாச்சேஞ்சாந்து, நிலவியது என்ன - தங்கியதுபோல, கார்வரன் தந்த-கரியமேகஞ்(செய்யுமிறம்)கொடுத்த, பேர் கொள் செக்கரில் - செவ்வந்தியென்னும் பேர்கொண்ட காலத்தில், மெல்லென்று - மந்தமாக, வீறிவாய் - வீதியில், இயங்கும்-உலாவுதற் கிடமாகிய, மூதூர்க்கூடல் - மதுரை மூதூரில், வந்தருள் முக்கண்ணன் - வந்தருளு முக்கண்ணினையுடையவன்.

(வி-ரை.) வினரி - ஆகுபெயர். வின்னரி - வினரியென விகாரமாக்கித் பாடும் வண்டெனப் பொருளுரைப்பினும் அமையும். ஒடி - வேறுவினையோடி. பெயர் - பேரென மருவிற்று. "பெற்றபேர் விண்டலர் கோதைக்கு விசையை யெனவே" என்றாற்போல. இயங்கு மூதூர் - இடத்துநிகழ் பொருளின்றொழி லிடத்தின்மேலேறி னினறது. கந்தி - கமுரு. செவ்வந்தி-செவ்வந்திக்காலம் (மாலைக்காலம்).

'காமனே' என்பதுமுதல் 'இலே' என்பதுவரை.

(38—44 வரிகள்.)

(ப-ரை.) காமனே - காமனே, கண்ணுல் - கண்ணுல், சுட்டும் - சுட்டும், அயனே - பிரமன் சிரத்தினை, உகிரால் - நகத்தால், கொய்தும் - கொய்தும், நாமக்காலினை-அச்சத்தினையுடைய காலனை, மலர் கொள் காலால்-மலர்களைக்கொண்ட காலால், உதைத்தும் - உதைத்தும், தணித்த -(அவரவர் மதங்களைத்) தணித்த, விட்டொளிர்-விட்டு விளங்காகின்ற, மாணிக்க மலையின் - மாணிக்கமலைபோல்வான், ஒரு பால்-ஒப்பற்ற இடப்பக்கத்தில், அடங்கப்படர்ந்த-அடங்கச்சென்ற, பசுங்கொடியதனை-பசுங்கொடிபோல்வானை, வளர்த்த சேண் மலை - வளர்த்த இமயமலையாகிய தாய், உளத்துயர்கொண்டி - மனத்திற் றுன்பங்கொண்டி, தொடர்ந்ததுமிலை - அவளைத் தொடர்ந்ததில்லை.

(வி-ரை.) இது முறைநிரனிறையு மேகதேச வுருவகமுமாம்; "கூற்றுவனே மன்மதனே யரக்கர் கோவைக், கூனிலலைக் குஞ்சரத்தை யிஞ்சி மூன்றை, யேற்றுலகின் புரவுருவ மானத் தோள்க, ளிற வெறிப்ப விமயப்பெண் வெருவ வேவக், காற்றெழிலா னயனத்தால் விரலாற் கற்றைக், கதிர்முடியாற் காதலத்தாற் கணையாற் பின்னு, மூற்றழிய வுகைத்துருத்து நெரித்துச் சுடி, யுரித்தெரித்தோ னெவனவனெம் மூடையகோவே" என்றாற்போல. நாம் என்னு மூரிச்சொலீறு திரிந்துநின்றது. மலர் கொள் கால் - அன்பர் அர்ச்சிக்கு மலர்

கொண்டகால், "விண்ணுஞ் செலவறியா வெறியார் கழல்" என்றார் மணிவாசகரும்; மலரை யடிமைப்படுத்தலுகா லெனினுமாம். மலர் - தாமரைமலர். மாணிக்கமலை, பசுங்கொடி, குறிப்புவமை; 'பாவை யானே' போல. இன்-சாரியை. பசுங்கொடியெனறது உமாதேவியை. சேணமலை - பெரியமலை (இமயமலை). தொடர்தல் - பின்சேறல்.

கீழ் நடந்தசொற் கிடக்க.

(41—வது வரி.)

(ப-ரை) கீழ் நடந்த சொல் கிடக்க-(ஆதலால்) கீழ் நடந்த சொல் லிப்படி வார்த்தையாயிருக்க.

(வி-ரை.) "ஒன்று முதலாக் கீழ்க்கொண்டு மேலுணர்தலின்" என்றார் பிறரும்.

'பழமை' என்பதுமுதல 'வளாததும்' எனபதுவரை.

(1—2 வரிகள்.)

(ப-ரை.) குன்றம் - குன்றத்தின்கண், பழமை நீண்ட - ஒரு வராலு மறியப்படாத பழமையாகிய, குடியினன் - குடியினையுடைய வனே, வருந்தாது-பிணிமுதலியவற்றுன் வருந்தாமல், வளர்த்தும் - யாதனெதித்து வளர்த்தும்.

(வி-ரை.) "கற்றோன்றி மண்டோன்றுக் காலத்தே தோன்றிய குடி" என்பார் 'பழமை நீண்ட குன்றக் குடியினன்' என்றார்.

குடங்கை துயிற்றியும்.

(2—வது வரி.)

(ப-ரை.) குடங்கை துயிற்றியும்-(கண்டுயில்வதறிந்து) குடங்கை யிடத்திற் றுயிலப்பண்ணியும்.

மானின் குழவியொடு கெடவரல் வருத்தியும்.

(3—வது வரி)

(ப-ரை.) மானின் குழவியொடு-(அழுவதறிந்து) மானின் குழவி யுடனே, கெடவரல் வருத்தியும் - விளையாட்டுண்டாக்கியும்.

(வி-ரை.) மானின் குழவி - மான்கன்று.

பந்துபயிற்றியும்.

(4—வது வரி.)

(ப-ரை) பந்து பயிற்றியும - பந்தாடுதலைக் கற்பித்தும்.

(வி-ரை) பந்து - ஆகுபெயர்.

'போன்' என்பதுமுதல் 'கேட்கவும்' எனபதுவரை.
(4—5 வரிகள.)

(ப-ரை.) பொனகழலகருதவும - பொனனுறசெபத கழகுகினை யாடவும, பாவை சூட்டவும - வனடலம் பாவையைப் பூணவும, பூவை கேடகவும - நாகணவாயப்புளளின வாதனதையை கேடகவும.

(வி ரை) பூவை - ஆகுபெயா, குழலினிது யாழினிது எனபன போல

'உடைமை' என்பதுமுதல் 'உண்டே' என்பதுவரை.
(6—8 வரிகள.)

(ப-ரை) உடமைசெயத - உடைமையாகசசெயத், மடமையள யானெனறு-மடமையையுடையோள யானெனறு, எம எதிர கூறிய-எம முனனே சொலலிய, இமமொழி தனகக - இதத வாதனதைகக, பெருமை நோகுகின - பெருமை விசாரி கின, சிறுமையது உணடு-அதறகுச சிறுமையுமுணடு, அஃதேதெளினை.

(வி-ரை.) ஏகாரமீறறசை. எசசவுமமை தொகைது மடமை அறிவாமை.

'பாலைகழத்தி' என்பதுமுதல 'தாக்க' என்பதுவரை.
(15—17 வரிகள.)

(ப-ரை) பாலைகழத்தி - பததிரகாளி, திருமுன நாட்டிய - திருமுனனே நடட, சூலததலையின-சூலததிறதசியினனறும, தொடாதது-உணடாகி, சிலை படாதது-நீகெதாடுதது தொடாதுபோய, உச்சமடடு - வானதத்திறுசெயிறபடட, கதிர தாக்க - ஆதிதத னமெய யிறறுகுதலால

(வி-ரை) இன - நீகக. பாலைநிலததுக குரியளாதலால பததிரகாளியை 'பாலைகழத்தி' எனறார

'பாடல்தால்' எனபதுமுதல 'படமுழனீக்க' எனபதுவரை.
(18—52 வரிகள.)

(ப-ரை) படம் அழல நீகக-உணடாம வெபபம நீகக, மை இல்-குறறமிலலாத, பாடலதால - உணாவு சொலலுதலமைதத, பசதைக கோடகககாறறை - பசிய குதிரையாகிய காறறினை, காட்சிகொய யுளை நிரப - சோற்றதகிந்குரிய தலையாட்ட மயிரசிலிரக்கு நிரப, இருதால் - இரணடுகாலகள, வயிறறிலிருதது - வயிறறினகணணி

ருந்து, வாய் மூளைத்தென்ன - வாயினிடத்திற் றோன்றினாற்போல, முகனிற்கு அருகா - முகத்துக்கருகாகச் செல்ல, துரந்து - மூடிக்கி.

(வி-ரை) கோடகக்காற்று-அவயவியுருவகம். வாய்மூளைத்தென்ன - இல்பொருளுவமை. கோடகம் - குதிரை. உளை - புறமயிர்.

'குடகடல்' என்பதுமுதல் 'பாலியில்' என்பதுவரை.

(52—53 வரிகள்.)

(ப-ரை.) குடகடல் குளிக்கும் - மேற்கடலிற் குளித்தற்குக் காரணமாகிய, தீவாய் - தழலினதுண்மையை, நாவாய் குறியா-நாவி னையுடைய வாயாலுஞ் சொல்லப்படாத, பாலியில் - பாலியிடத்தில்.

(வி-ரை.) சிறப்பும்மை முருபுந்தொக்கன. வாயுண்மை குறியா வென்பது காரணங் காரியமாய்நின்றது, கருதுதலுஞ் செய்தலோ டொத்தலின்.

'தம்மில்' என்பதுமுதல் 'அறிவே' என்பதுவரை.

(54—58 வரிகள்.)

(ப-ரை.) தம்மில் இன்பம்-தம்முளின்பம், சூளுடன்-சுற்புகிலை தவறுதி, கூடி - கைவந்தி, ஒன்றி - பொருந்தி, வீளாக்-முற்றியது காரணமாக, சென்றுட்கு - போனவளால், பொன்பதி நீங்கி-அழகிய பதியையிட்டு, உடைந்து-வருந்தி, உண்பதும் அடங்கி-புசிப்புமின்றி, முழங்க - (திசையெங்கும்) முழங்க, பெருங்குரல் கூஉய் - வாய்விட் டரற்றி, பழங்கண் எய்தியது - மெலிதற்குக் காரணமாகிய, பேதை மை அறிவே - பேதைமையால் வந்தவறிவே.

(வி-ரை.) சென்றுட்சென்பது உருபுமயக்கம். பதிநீங்கி யென் பது பதியை நீங்கினாள், பதியினீங்கினாளென்க. "தொகையாய் மயங்கி யன்ன பிறவுங், தொன்னெறி பிழையா" எனபதனால் உருபி னும் பொருளினு மெப்பதமொறி யொன்றனினொக்கலத் தொன்று சென்றது. உண்பதுமென்னுமும்மை சிறப்புமும்மை. கூவியென்பது கூஉயெனத் திரிந்தது. எய்தியபேதைமை - நிலம்பூத்த மரம்" என்றாற் போன்றது. பேதைமை - அறியாமை. பேதைமையாலுண் டான வறிவு - இப்பாலியில் வாழினேத்த நினைவு எசாரம்-தேற்றம்.

இவ்வாறு கீழ்நடந்த சொற்கிடக்க, எம்மூன்னுடைமை செய்த மடமையள் யாரென்று கூறிய வார்த்தைக்குப் பெருமைநோக்கின் றமையுமுண்டு. அஃதேதெனில், பாலியிற் றலைவனுடன் சென் றவளால் வருந்துதற்குக் காரணமாகிய பேதைமையால் வந்த அறி வென வினைமுடிவுசெய்க.

திருக்கோவையார் 100-ம் செய்யுள்.

மகிழ்ந்துரைத்தல்.

மகிழ்ந்துரைத்தலென்பது-மணமுரசொலி கேட்டதோழி சிலம்பன்றந்த பெறுதற்கரிய தழைகளே வாடாமல் வைத்து அத்தழையே பற்றுக்கோடாக ஆற்றியிருந்தாளெனத் தலைமகளைத் தன்னுள்ளே மகிழ்ந்து கூறுகிற்றல். அதற்குச் செய்யுள்:—

இருந்துதியென்வயிற்கொண்டவன்யானெப் பொழுதுமுன்னு
மருந்துதிசைமுகன் மாற்கரியோன்றில்லை வாழ்த்தினர்போ
லிருந்துதிவண்டனவா லெரிமுன் வலஞ்செய்திட்டப்பா
லருந்துதிகாணுமளவுஞ் சிலம்பனருந் தழையே.

மன்னிய கடியிற் பொன்னணங் கோதையை
நன்னுதற் றோழி தன்னின் மகிழ்ந்தது.

(ப-ரை.) சிலம்பன் - சிலம்பன்றந்த, அரும் - பெறுதற்கரிய, தழை - தழைகள், (இப்பொழுது) முன்னரி வலஞ்செய்து - முன் நீயை வலங்கொண்டு, இடப்பால்-(பின்விட்டன்) இடப்பக்கத்தித் (தோன்றும்), அருந்துதி - அருந்துதியை, காணுமளவும்-காணுமளவும், இருந்துதி - (அன்பர் துதிப்ப அவர்வயிற் றான் கொள்ளும்) பெருந்துதியை, என்வயின் கொண்டவன் - என்வயின் (உண்டாக்கித்) கொண்டவன், யான்-யான், எப்பொழுதும் உன்னும் மருந்து - எப்பொழுதும் உன்னும்வண்ணம் (சுவையுடைத்தாயதோர்) மருந்து, (இவ்வாறெனக்கெளியனுயினும்) திசைமுகன் மாற்கு - திசைமுகனுக்கும் மாற்கும், அரியோன் - அரியோனது, தில்லை - தில்லையை, வாழ்த்தினர்போல் - வாழ்த்தினரைப்போல, இருந்து - வாடாதிருந்தது, திவண்டன - விளங்கின, எ-று.

(வி-ரை.) திசைமுகன் மாற்கரியோ னென்றது - "பிரமன் மாற்கரியோன்" என்று நிகண்டாதிகளிற் கூறிய சிவராமமாயிற்று. என்றது - தழைகளே வாடாமல்வைத்து அத்தழையே பற்றுக்கோடாக ஆற்றியிருந்தாளெனத் தலைமகளே மகிழ்ந்து கூறியவாறு. திவண்டனவென்பதற்கு வாடாதிருந்து திவளைத் தீண்டியின் புறுத்தின வென் றுரைப்பினு மமையும். தழைவாடாதிருந்தன வென்றது முன்னர்த்தான் அவன்றந்த தழையை யேற்ற முகூர்த்தத்தைக் கொண்டாடியவாறு. மெய்ப்பாடு - உவகை. பயன் - மகிழ்தல் 'வேயினமென்றோள்' என்பதுதொட்டு இதுகாறும் வர இப்பாட்டுப்

பதிதானபதும் அறதொறி நீலியினையும், அதனபினனர வரை தலையும் தூதலினவென்பது.

கேசையாசிரியப்பா.

குங்குமக் கோட்டல ருணங்குலர் கடுக்கும்
பங்குடைச செங்காற் பாட்டளி யரிபிடாக
குருவிற் ரேற்ற வரிகொழு மரகதங்
கல்லெனக கிடபபச் சொலலிய மேனித்
திருநெறி மாலுக கொருவிசை புரிந்து
சேர்திவளர் பாத பீதரு ணீர்த்தன்
முனிவ ரேமுற வெள்ளியம் பொதுவின்
மனமுங் கண்ணுங் கனியக் ருனிகருமை
புதிய நாயகன் பழமறைக் கலைவன்
கைஞ்ஞின் றவன்செங் கால்கண் டனர்போல்
விளகுகமும் புதுமையு மளபபில் காடசியும
வேறெறப் பெறுதுக கூறுவது நீக்கமு
மறிவோர் காணுங் குறியா யிருநதன
விருந்திண் போர்வைப பிணிவிரி முரர
முன்ன மெளளினர் நெஞ்சுகெடதது வைபப
மணங்கொள பேரணி பெருங்களின் மறைதததென்
றெழுமதி சூறைத்த முழுமதிக் கருங்கயல்
வண்டு மருவி யுண்டு களிபாது
மற்றது பூக்த பொற்றிகழ் தாமரை
யிரண்டு முகிழ்செய்து நெஞ்சுறப பெருகும்
வற்ரு மேனி வெள்ளத்தண் மறிய
நுனித்தலை யந்தணர கதழெரி வளர்த்துச
சிவந்த வாய்தோறும் வெண்பொரி சிதற
செம்மாகது மனைத வலிய கூரெரி
முபபுரை சூழன்று ரயருல் மகிழ
வில்லுறை கலலின் வெண்மலர பரபபி
யிலவலர வாட்டிய செங்கால பிடித்துக்
களிதூங் குழதெதிர மெல்லெனச சேர்த்தி

பிரண்டு பெயர்சாத்த தோலாக் கற்பி
முகனுறக் சாணுங் நியோர் போல
விடப்பா னிருத்திப பந்நிரு ழுழ
வுடமீன் காட்டி விவ ரறி பெடுத்துஞ்
குலவாழ்ந்து விமம மனைலயிப பகுங
கட்புலங் கொண்ட விபபரி யளவும்
வாடிநிலை நின்ற மூடியே மாந்து
மென்முக மனத நுங காலக குறிபைத்
தாமரைக் கண்ணு ளுட்புக வறிதது
மூலக மூன்றும பெறுதறு கரியதன்
மெண்ணு வாய்மை யெண்ணிக கூறியுங்
கலனுயா நெடுங்தோ ளண்ணல்
மலனுறத் தகுத வின்தகைமை நானே.

குலகும - சார்தகைசானே. பநநி - மணருறப்புனைத்தல். நுனை - மகிக்துரைசதல்

'வாழ்' என்ப தறுதல சானை வண்பதுவரை.
(36—1] வரிகள.)

(ப-ரை.) கல் உயர் - வரையினுகெடியோ முயர்க த, தெடி தோள - கெடியதோளையுடைய, அண்ணல் - சர்வன, வாடி - (யினுசறசகல் லா மறுமொழி கொடாதையினல்) வாடி, சீலை யினும - (சேட்படுத்த தன முதலியவற் றல) நீகசாயினறா, ஊடியே யாகுமை - (ஆறரு கெஞ்கினேனு) புலக்து ஆம்புலிக விருமபியும், தாமரை கண்ணல் - தாமரைபோன்ற கண்ணுல், என் முகம் - என்னிடத்து, எனகுகு கால - அவலவாவம்பொழு ஏ, அந்ரு நியை - அக்குறியை, உட்புக அறிதலும் - மனத்திறகேறுத வறிதலும, உலக மூனறும - (இத்தழை பூரியதை சொர்க்கமென்று) மூனறுலகதறும், பெறுதறகு அரிய தெனறு - பெறுதறகரியதென்று, எண்ணு-விசாரித்து, வாயமை-தலை மையாகியவுணமை, எணணி கூறியும் - கருதிகூறியும், மல் உற வளமையுற, தகுத - கொடித்த, சார்தழை - சார்தழை.

(வி-ரை.) கல்-மலை, "வடபெருவரை" என்றுற்போல. கெடிந தோள் - பெடர்பிலைகளை, "கேலோன்" என்றுற்போல கல் - ஆகு பெயர். நீக்கப்பொருட்கண்வந்த இனனுஞ் சிறப்புமமையுக தொக கன. எண்ணுமை நாத வென்பதிலேடு முடிந்தது நாதெனினது

இடைமுழுவமைதி. தானுமேகமும் அசை.எண்ணு-செய்யாவென்னும் வாய்பாட் டிறந்தகால வினையெச்சம். மல்லல் மல்லெனத் தொகுத்தல் பெற்றது. ஈர்த்தழை - குளிர்ச்சியாகிய தழை.

'இருந்திண்' என்பதுமுதல் 'துவைப்ப' என்பதுவரை.
(14—15 வரிகள்.)

(ப-ரை.) முன்னம் - களவுகாலத்து, எள்ளினர் - இகழ்ந்தார், நெஞ்சு கெட-மனங்கெடும்படி, இருந்திண்-பெரிய திண்ணிய, போர் வை - தட்டினை, பிணிவிசி - மிகக்கட்டிய, மூசம் - மணமூசம், துவைப்ப - ஓர்ப்ப.

(வி-ரை.) பிணிவிசி-"ஒருபொருட் பன்மொழி சிறப்பின்வழா" என்றமையான் மிருதி யுணர்த்திற்று. நெஞ்சுகெடல்-மனமஞ்சுதல்.

'மணம்' என்பதுமுதல் 'மறிய' என்பதுவரை.
(16—21 வரிகள்.)

(ப-ரை.) மணஞ்சொள் பேரணி-கலியாணவணியாகிய பாசடை, பெருங்கவின் மறைத்தது என்று-எல்லாவற்றினுஞ் சிறந்த அழகான வெள்ளத்தை மறைத்ததென்று, வண்டு - மூலக்கண்ணுகிய வண்டு, மருவி - பொருந்தி, உண்டு - தேனுகர்ந்து, கலியாது - களியாமல், அது - அவ்வண்டு, நிகழ் - நிகழாநின்ற, 'இரண்டு - மூலையாகிய விர ண்டு, பொற்றுமை - பொற்றுமையை, முகிழ் செய்து - அரும்பி, பூத்த-பூத்ச, நெஞ்சு-நெஞ்சாகிய வாவியில்பொருந்த, வற்று பெரு கு-குனரியாது பெருகும், மேனி - நீறமாகிய, வெள்ளத்துள்-வெள் ளத்துள், 'எழுமதி - விண்ணிலெழுக்கமதியை, சூறைத்த-பிறையாக் கிய, முழு மதி - முகமாகிய முழுமதியிடத்துண்டாகிய, கருங்கயல் - விழியாகிய கரியகயல்கள், மறிய - மறிய.

(வி-ரை.) மேனிவெள்ளத்தின் மறியவெனவே கவினையும் வெள்ளமாகவுருவகம்பண்ணினுர்.வண்டுதாமரை நெஞ்சுறவெனவே- "முதலெக்கூறச் சினையறி கிளவி" ஆயிற்று. "தாமச செப்பிணை மூக ட்டித்தண் கதிர்விடு நீலமா மணிதாபித்தனபோன் மனம்பருகு கரு ங்கண்ண வென்றதனைச் சினையிற் கூறு முதலறி கிளவி" என்றுற் போல.'எழுமதி குறைத்த முழுமதி' குறிப்பினுல் வந்த வுவமையுரு வகம். இவையெல்லா மாட்டேறேலா வருவகம். "அஞ்ச வருதானை யமரென்னு நீளவயலில், வெஞ்சினம் வித்திப் புகழ்விளக்குஞ்-செஞ் சுடர் வேற், பைங்கட் பனைத்தாட் பகட்டெழவ னல்லரா, லெங்கட்

கடையரவிடர்'' என்றார் வெண்பாமாலையினும். அது ''மாட்டே மின்றி வருதலு முரித்தே, கூட்டி யாளுங் குறிப்பி னானே'' என் பதனுறிக.

'நுனித்தலே' என்பதுமுதல் 'சிதற' என்பதுவரை.
(22—23 வரிகள்.)

(ப-ரை.) நுனித்தலே-சூடுமிடத்தலையையுடைய, அத்தணர்-வேதி யர், கதழ் எரி - வேகத்தையுடைய அக்கினியை, வளர்த்து - வளர் த்து, சிவந்தவாய்தோறும்-சிவந்தவிடந்தோறும், வெண்பொரி சிதற - வெள்ளைப்பொரியைச் சிந்த.

(வி-ரை.) நுனியையுடைய சூடுமியை நுனியென்ற தாகுபெயர். கூர்த்தலேயுடைய வந்தணரென்று பொருளுரைக்கில் ஐகாரமசை, ''கோணேக் களிற்றுக் கொடித்தே ரிவுளி'' என்றற்போல. சிதறி - சிதற.

'சேம்மாந்து' என்பதுமுதல் 'மகிழ' என்பதுவரை.
(24—25 வரிகள்.)

(ப-ரை.) செம்மாந்து - அகமலர்ந்து, மணந்த-கூடுதற்குக் கார ணமாகிய, அளிய - இருபை மிகுதிபோல், கூரெரி-மிகுந்த வோமாக் கினியை, தாயர் உள் மகிழ - தாயருள்ளமகிழும்படி, மும்முறை சுழன்று - மூன்றுமுறை சுற்றி.

(வி-ரை.) அகரம் - அசை, ''அளிய மொய்ம்ப னிருந்தவப் பூம் பொழில்'' என்றாற்போல.

'இல்லுறைகல்லின்' என்பதுமுதல் 'மெல்லெனச்சேர்த்தி' என்பதுவரை.
(26—28 வரிகள்.)

(ப-ரை.) இல்லுறை கல்லின் - அம்மியில், வெள் மலர் பரப்பி- வெள்ளைப்பூவைப் பரப்ப, இலவு அலர் வாட்டிய-இலவம்பூவை வருத் திய, செங்கால் பிடித்து - சிவந்தகாலைப்பிடித்து, களி அங்கு உளத் தொடும் - களிப்புச்செறிந்த வுள்ளத்தோடும், மெல்லென சேர்த்தி - பையவைத்து.

(வி-ரை.) இல்லுறைகல் - அம்மி. பரப்பி - பரப்ப. ஒடு - உட னிகழ்ச்சி. மெல்லெனவென்பது ''பஞ்சிகொண் டேட்டினும் பையெ னப் பையென வஞ்சிப்பின் வாங்குமடி'' என்றாற்போல நின்றது.

'இரண்டுபெயர்' என்பதுமுதல் 'காட்டி' என்பதுவரை.

(29—32 வரிகள்.)

(பதவுரை.) தோலா - தோலாத, இரண்டு பெயர் - இருவரும், காத்த - காத்ததனால், கற்ற - கற்பினை, முகனுற நாணும் - பொருந்தநாணும், கரியோர் போல - சான்றுயினர்போல, இடப்பாகமுத்தி - கலவியிடப்பாகத் தனக்கு வலமாக நிறுத்தி, பக்கம் சூழ - சுற்றத்தார் சூழும்படி, வடமீன் காட்டி - அருந்ததியைக் காட்டி.

(விளக்கம்.) எண்ணுன்மை தொக்கது. காத்த கற்பு உண்ட வெச்சில்பேல நின்றது. தலைவன் கற்பு வழக்கிற்போலப் பிரியாது வரைந்தமையாலும், கலவி பிறர் வாவுக்களஞ்சி யறத்தொடு நிற்றலானும் இருவரும் காத்தலால் வடகற்பென்றார். இது விபரீதவுவமை. உலமையாய் வருவினைப் பொருளாகிப் பொருளோ யுவமையாக்குதலின் களவிற்வழி வந்த கற்புங் களவின்வழி வாராக் கற்புங் கம்மிடத்திற் பொருத்தமாகாது சானறுயினர்போல வடமீன்காட்டி யெனினுமாம். களவின்வழிவந்த கற்பு கற்றிருவர் கற்பு, களவின்வழி வாராக்கற்பு உலகக்கற்பு. ஈண்டு உலகக்கற்பன்மையானும் கற்றருவுதற்கு மொத்தமையானும் 'கரியோர்போல' என்றார்.

'விளக்கணியெடுத்து' என்பதுமுதல் 'பணியளவும்' என்பதுவரை.

(32—34 வரிகள்.)

(பதவுரை.) விளக்கு ஏணி எடுத்து - ஆயிரம் பெருக்கிரி யெடுத்து, குல வாழ்வு - குலதேசார் வாழ்த்தும் வாழ்த்தொலி பெருக, மணவணி பக்கம் - திருமங்கலியத்தைப் பூட்டும் பருவ, இக்கண்பலம் கொண்ட - இக்கண்ணிடங்கொண்ட, பணியளவும் - மைதிமட்டும்.

(விளக்கம்.) பக்கம் - பருவ. பருவத்திளவிளைப் "பக்கச்சொல்" என்றார் தொல்காப்பியனாரும்.

'குங்குட' என்பதுமுதல் 'நித்தன்' என்பதுவரை.

(1—6 வரிகள்.)

(பதவுரை.) குங்கும கோட்டி - குங்குமமரத்தினது கொம்பில், உணங்கல் - வாதலையுடைய, அலர் கடுக்கும் - பூவைப்போலும்,

பங்குடை செங்கால் - வளைவினையுடைய செய்யகாலினையும், பாட்டி அனி - பாட்டினையுமுடைய வண்டினது, அரி பிடர்-அரிதாற்போலும் பிடரில், குருவில் தோய்ந்த - நிறமுமொளியும் பொருந்திய, அரிகெழு மரகதம் - மரகதமலையானது, கல் என கிடப்ப - கல்லென்று சொல்லுமபடி கிடப்ப, சொல்லிய மேனி - சொன்ன திருமேனியினையுடைய, திரு நெடுமொலுக்கு - விட்டுணுவுக்கு, ஒருவிசை புரிந்து - ஒருதரம் விரும்பி, சோதி வளர் - சோதியாக வளராகின்ற, பாகம் ஈந்தருள் நித்தன் - வலப்பாகத்தைக்கொடுத்த நித்தன்.

(வி-ரை.) உணங்கல் கடிக்கும் பங்குடைச் செங்கால் - தொழிலும் பண்புமபற்றியவுவமை. அரிபிடர் - "வடித்தான் வகிர்க்கண்ணி" போன்றது எண்ணுமமை தெரிக்கத. மரகதங் கல்லெனக் கிடப்பச் சொல்லியமேனி, "கொடியார் கொடிமை யுரைக்குந தொடியொடு தொல்கவின் வாடியதோள்" என்றற்போலுங் குறிப்புச்சொல். தன் சோதிவளர்ந்த பக்கமுமாதலின் வலமாயிற்று.

'முனிவர்' என்பதுமுதல் 'கண்டனர்போல்' என்பதுவரை. (7—10 வரிகள்.)

(பரை.) முனிவர் - பதஞ்சலி முதலோர், மனமும் கண்ணும் கனிய - மனமுங் கண்ணுங் களியும்படி, ஏமுற - விரும்ப, வெள்ளியம் பொதுவில் - வெள்ளியம்பலத்தில், குனிக்கும் - நடிக்கும், புதிய நாயகன் - புதுமையையுடைய முதல்வன், பழமறை தலைவன் - பழைய வேதத்துக்கு முதன்மையானவன், கைஞ்ஞிறவன் - ஒழுக்கத்தினின்றவனது, செம் கால் கண்டனர்போல் - சிவந்த பாதத்தைக் கண்டவர் தஞ்சுத்தாமே யுவமையாயினர்போல.

'விளக்கமும' என்பதுமுதல் 'இருந்தன' என்பதுவரை (11—13 வரிகள.)

(பரை.) விளக்கமும் - காந்தியினலும், புதுமையும - (காணுந் தோறும்) புதுமையினலுட, அளப்பு இல் காட்சியும்-எண்ணப்படாத காட்சியாலும், (தமக்குத்தாமே யொப்பாய்) வேறெருப்பெடுத்துக் கூறுவது நீகமும் - வேறெருப்பிலாமைக்கும், அறிவோர் காணும் - பெரியோர் காணும், குறியாயிருந்தன - இலக்காயிருந்தன.

(வி-ரை.) விளக்கத்தாலும் புதுமையாலும் காட்சியாலுமென்பன உருபு தொடர்ந்தடுக்கிய வேற்றுமைத்தொகைவிரி. "ஒருசொன்னடைய பொருள்சென் மருங்கே" என்றவியலான், "வரிமணித்தூதை

யும் பாவையும்" என்றுற் போன்றன. இது எதுவோடு கூடிய பொது நீங்குவமை. பொருளடையை யுவமைக்கும் வருவிக்க.

இத்தழைகள் மங்கலியத்தைப் பூட்டும் பருதி கண்ணிற் காணு மளவும் வேறொருப்பிலாமைக்குப் பெரியோர் காணுமிலக்கா யிருந்தன வென விறைமுடிவு செய்க. தழைகள் வாடாது வைத்து அது பற்றுக் கோடாக வாற்றினளென வெற்றமுமிழ்த்தத்தைப் பாங்கிகொண்டாடி மகிழ்ந்தாள். (கசு)

திருக்கோவையார் சூள-ம் செய்யுள்.

பிறைதொழுகென்றல்.

பிறைதொழுகேன்றலேன்பது—பிறையைக் காட்டித் தான் றொழுதுகின்று, நீயும் இதனைத் தொழுவாயாகவெனத் தோழி தலை மகளது புணர்ச்சிநினைவறியாகிற்றல். அதற்குச் செய்யுள்:—

மைவார் கருங்கண்ணி செங்கரங் கூப்பு மறந்துமற்றப்
பொய்வான வரிற்புகாததன் பொற்கழற் கேயடியே
னுய்வான் புகவொளிர் தில்லேகின் றேறன்சடை மேலதொத்துச்
செவவா னடைந்த பசுங்கதிர் வெள்ளைச் சிறுபிறைக்கே.

பிறைதொழு கென்று பேதை மாதரை
நறுநுதற் பாங்கி நாண நாட்டியது.

(ப-ரை.) மறந்தும் - மறந்தும், பொய் - பொய்மையையுடைய, மற்றவானவரில் - அவ்வானவரிடத்து, புகாது - புகாமல், தன் - தனது, பொன் கழற்கே - பொன்னலியன்ற கழலேயுடைய திருவடிகளிலே, அடியேன் - அடியேன், உய்வான் - உய்யவேண்டி, புக ஒளிர் - புக விளங்கும், திலேகின் றேறன் - திலேக்கட் கட்புலனுய் நின்றவனு டைய, சடைமேலது - சடைக்கண்ணதாகிய (பிறையை), ஒத்து நிகர்த்து, செவ்வான் அடைந்த - செக்கர்வானேயடைந்த, பசுங்கதிர் செவ்வியகிரையுடைய, வெள்ளை - வெள்ளேயாகிய, சிறு பிறைக்கு சிறியபிறைக்கு, மை - மையையுடைய, வார் - நெடிய, கருங்கண்ணி கரியகண்ணினேயுடையாய், செங்கரம் - நினது செய்யகைகளே கூப்பு - கூப்புவராயாக, எ-று.

(வி-ரை.) மறந்துமென்பது - ஈண்டு அறியாதுமென்னும்பொ ருட்டாய்நின்றது. மற்று - அசைநிலே. மற்றை யென்பது பாடமா யின் அல்லாத பொய்வானவரென்றுரைக்க. இனமல்லாயினும் இன மாக உலகத்தாராற் கூறப்படுதலின் அவ்வாறு கூறினர். "மூவரெ

ன்றே யெம்பிராஞெடி மெண்ணி'' என்பதூஉம் அக்கருத்தேபற்றி வந்தது. பிறர் கூறும் பெருமை அவர்க்கின்மையின், ''பொய்வான வர் என்றார். எனக்குப் பொறியுணர்வல்ல தின்மையின் கண்கவரும் திருமேனிகாட்டி என்னேவசித்தா னென்னுங் கருத்தான், ''உய் வான் புகத்தில்லே நின்றேன்'' என்றார். சடை - செக்கர்வானத்திற் குவமை.

நேரிசையாசிரியப்பா.

நெடுவளி யுயிர்த்து மழைமத மொழுக்கி
யெழுமலே விழுமலே புடைமணி யாக
மீன்புகர் நிறைந்த வான்குஞ் சரமுகம்
வால்பெற மூளாத்த கூன்கோ டானும்
பேச நீண்ட பன்மீ னிலேயிய
வானக் கடலிற் றோணிய தானுங்
கொழுநர்க் கூடுங் காம வுததியைக்
கரைவிட வுகையு நாவா யானுங்
கள்ளமர் கோதையர் வெள்ளணி விழவி
லேங்கணைக் கிழவன் காட்சியுண் மகிழ
விழைத்து வரைத்த கருப்புவில் லானு
நெடியோன் மூதலாம் தேவர் கூடி
வாங்கிக் கடைந்த தேம்படு கடலி
னமுதுடன் றோன்றிய வுரிமை யானு
நின்றிரு நுதலே பொளிவிகம் புடலி
லாடிநிழற் காட்டிய பீடது வானும்
கரையற வணியு மானக் கலனுட்
டலேபெற விருந்த நிலேபுக ழானு
மண்ணக மணித்து நிறைந்தபல் லுயிர்கட்
காயா வமுத மீருக லானும்
பாற்கட லுறங்கு மாயவன் போலத்
தவள மாடத் தகன்முதுகு பற்றி
நெடுங்கார் கிடந்து படும்புனல் பிழியுங்
கூடல்வீற் றிருந்த நாடகக் கடவுள்
பொற்சுடர் விரித்த கொத்தலர் கொன்றையும்
தாளியு மணுகும் வாலுழை யெருக்கமுங் !

சுரிந்தையும வனையு மிடைநுதெஞ் சடையி
லிரண்டைஞ் தூ.' நிர மாடமுக மெடுத்தது
மட்புல னகழ்ந்து திகுகுநிலே மயக்கிய
புரியாக கதமோ டொருபா லடங்குங்
கங்கையிற் படிந்த பொநகு தவத்தாறு
மருகெடு வேணியிற கண்ணியென விருந்து
தூற்றுமறு வொழிந்த வேறறுத தானு
மணிவான் பெற்றவிய பிறையைய
பணிவாய் புரிந்து தாமரை மகளே.

கெடுவல்யிராத்து - காமரைமகளே. பதி - நாணாட்டம். துறை - பிறைதொழுகெனல

தாமரை மகளே.

(35-வது—வ)

(ப-ரை.) தாமரைமகளே - பதுமினியானவளே

(வி-ரை) நிருமகளைப்போல்வாயென்ன ருபிபுவனமாகினு மமையும். மங்கலமாயபொழ்தின முலகமாகி யுடைத்தாய எல வானாலும் நன்கு மதிக்கப்பட்சன்மையு முடைதாய வீளங்குக தாமரையைபோலு மகளெனினு மமையும. இது தொழிலுவ மை. பதுமினி - தாமரைலரில் வாழ்பவள்.

'நெடுவேளி' என்பதுமுதல் 'கோடாணும்' என்பதுவரை.

(1—4 வரிகள.)

(ப-ரை.) (பிறையானது) எழுமலை-உதயகிரி, விழுமலை-அதத மனகிரி (இரண்டு), புடைமணியாக - புடைமணியாக, நெடுவெளி நெடுவெளியாயிய வுயிர்ப்பினை, உயிரகை-உயிரகதுமழை-மழையாகிய, மதம் ஒழுக்கி - மதத நிறைவிட்டு, மீன - மீனுகிய, புகர் நிறைநத - புகர் நிறைநத, வான் - ஆகாயமாகிய, குருசரமுக-யானைமுகத்தில், வால் பெற - தூயமைபெற, மூலாத்த - மூனனிய, கூன கோடாணும் - கூன் கோடாயிலும.

(ப-ரை.) கூன் - வளைவு பெயர்க்கடையாயிற்று "உரையிடத்தியலு முடனிலையறிதல்" எ பதனுல் நினைவேண்டி வளைநத கோ டெனினுமாம். வியலரிலே யருவகம "ஒன்றினை கடபலவிரையு முருபித்து முருபியாது மவயவியு முரைப்பது வியனிலே" எனறமை

யின் ஆகவுயிர்த்தெனப் பிறவினைகொண்டது. நிறைந்தவென்னும் பெயரெச்சம் நிலப்பெயர் கொண்டது. ஆயினு மென்பது ஆனு மெனக் குறைந்து நின்றது, "ஒன்முனுக நீசசொல்" என்முற்போல; இது சேல்வருவனவற்றிறகு மொக்கும். எழுதல் - உதித்தல். விழுதல்-துக், மித்தல். புடை - பக்கம். நெடுவெளி-பெருங்காற்று. உயிர்ப்பு - மூச்சு. மீன-உடுக்கள். புகர் - டள்ளி.

'பேச' என்பதுமுதல் 'தோணியதானும்' என்பதுவரை.
(5—6 வரிகள.)

(ப-ரை) (அது) பேச நீண்ட - சொல்லத்தொலையாத, பன் மீன் நிலைய - பலமீனகணிலேபெற்ற, வானக்கடலில் - வாஞகிய கடலினிடத்தும், தோணியதானும் - (ஆருளாகிய பாசிஞ்சீத் தல கத்தை விளக்கமாகிய கரையிலேற்றும்) தோணியதாயினும்.

(வி-ரை.) "வானக்கடலிற்முணி" "எமப்புணையைச் சுமும்" என்முற்போலு மேகதேசவுருவகம். பன்மீ னிரண்டிற்குஞ் சிலே டை. வானம் - ஆகாயம் தோணி - மரகலம்.

'கோழுநர்' என்பதுமுதல் 'நாவாயானும்' எனபதுவரை.
(7—8 வரிகள.)

(ப-ரை.) (அது) கொழுநர் கூடும் - தலேவரோடு கூடுதற்குக் காரணமாகிய, காமவுதயியைவிட - காமமாகிய கடலே நீங்க, கரை உலையும் காவாயானும் - (இனபமாகிய) கரையிற் செலுத்துஞ் சம்பா ஞியினும்.

(வி-ரை.) இது,வியனிலையுருவகம். உலகத்தல்-செலுத்தல்.

'கள்ளமர்' என்பதுமுதல் 'கருப்புவில்லானும்' என்பதுவரை.
(9—11 வரிகள.)

(ப-ரை.) (அது) ஐங்ஙணைத்தியவன்-பஞ்சபாணத்தையுடைட மன்மதன், கள் அமர் கோதையர் - மதுப்பொருந்திய கோதையினே யுடையார், வெள்ளணி விழவில் - பிறதநாள் விழவில், உள் மகிழ இழைத்து - உள்ளமகிழுமபடி செய்து, வளைத்த - வளைத்த, கருப்பு வில் காட்சியானும் - கருமபுவில்போலக் காணப்பட்டதாயினும்.

(வி-ரை.) வெள்ளணிநாள் - பிறதநாள். வெள்ளணி நாளை 'வெள்ளணி' என்முர். "கரும்பகடுஞ் செம்பொன்னும் வெள்ளணி நாட் பெற்முர்" என்முர் வெண்பாமாலையினும்.

'நெடியோன்' என்பதுமுதல் 'உரிமையானும்' என்பதுவரை.

(12—14 வரிகள்.)

(ப-ரை.) நெடியோன் முதலாம்-விட்ணு முதலாகிய, தேவர் கூடி - தேவர்களெல்லாங் கூடி, வாங்கிக்கடைந்த - வலித்துக் கடைந்த, தேப படு கடலின்-பாற்கடலில், அமுதுடன் தோன்றிய-அமுதமாகப் பிறந்த, உரிமையானும் - உரிமையினாலும்.

(வி-ரை.) தேம்பகிகடல் - பாற்கடல், பாலைத் தேம் என்றது ஆகுபெயர். நெடியோன் என்றது திரிவிக்கிரமனைக் குறித்தது.

'நின்' என்பதுமுதல் 'பீடதுவானும்' என்பதுவரை.

(15—16 வரிகள்.)

(ப-ரை.) நின் திரு முதலை ஒளி - நின் திருமுதலொளியை, ஆடி - கணணடி, நிழல் காட்டிய - நிழலைத் தன்னிடத்திற் காட்டி னற்போல, விசுபு உடலில் - விசுபு தன்னிடத்தில், காட்டிய பீடதுவானும் - காட்டிய பெருமையானும்.

(வி-ரை.) எடுத்துக்காட்டுவமை. பீடது வையுறி அதுவென் பது பகுதிப்பொருள் விகுதி முதலொளியை யெனற்பாலது முதலை யொளியென மெழுத்துமிலை மாறிற்று.

'கரையறவணியும்' என்பதுமுதல் 'புகழானும்' என்பதுவரை.

(17—18 வரிகள்.)

(ப-ரை) கரையற வணியும் - எல்லையின்றியணியும், மானக் கலனுள் - பெருந்தனமையையுடைய ஆபரணங்களில், தலைபெற இருந்த தலையின கணணடாமபடியிருந்த, நிலைபுகழானும் - நிலை புகழப்படுதலானும்.

(வி-ரை.) மானம்-கொண்டாட்டமாம். "மானவேலவன்மடன் மாமிசையானு மேறுவனென வுரைத்து" என்றாற்போல. புகழானு மென்பது உடைதருஞ்சுவிற்றே னென்றுற்போனறது.

'மண்ணகமனைத்தும்' என்பதுமுதல் 'ஈகுதலானும்'

என்பதுவரை.

(19—20 வரிகள்.)

(ப-ரை.) மண்ணகம் அனைத்தும் - பூமியனைத்தும், நிறைந்த பல் உயிர்கட்கு-நிறைந்த பலவுயிர்கட்கு, ஆயா-விசாரித்து, அமுதம் ஈகுதலானும் - அமுதத்தைக் கொடுத்தலானும்.

(வி-ரை.) அனேத்து மென்னு முடமை முறறுமமை. ஆயா செயயாவென்னும் வாயபாட் டிறநதகால வினேயெச்சம்.

'பாற்கடல்' என்பதுமுதல் 'கடவுள்' என்பதுவரை.

(21—24 வரிகள.)

(ப-ரை.) பாற்கடல் - திருப்பாற்கடலில், உறஙகும் - கண்டு யிலும், மாயவன்போல-விட்டுணு கிடநதாறபோல, தவளமாடத்து-சுதை யழுதிய மாடதது, அகல்முதுகுபற்றி-அகன்ற விடத்தைப் பற்றி, நெடி கார் கிடநது - மிகுநத மேகஙகிடநது, படிம புனல் பிழியும் - உண்டாம புனலை சொரியு, கூடல் வீற்றிருந்த-மதுரை யில் வீற்றிருநத, நாடகக்கடவுள - நாடகத்தையுடைய தடவுள.

(வி-ரை.) கிடந்ததற்குக கிடநதது தொழிலுவமை, மற்றது பண்புவமை. முதலொடு சினைக்கொற்றுமை யுண்மையா னுறஙகு மெனனும் பெயரொசதறகு மாயவனென்பது வினேமுதற பெய ராய நினறது "தெறுஙகணணி வநத சிறறமபலவன" எனறுற் போலக் கண்ணென வொருசொல் வருவிக்க. பிழியுபகூடல் - நிலப் பெயர்கொண்டது நாடகமென்றது - கதை தழுவிவருங் கூடத்தை யன்று, கூதலெனனும பொதுமையை. நாடகம் நாடப்பட்ட வகக் கூத் தெனினுமாம். அகக்கூத்தாவது - தேசிவடுகு சிஙகளம் சாத்து விதமுதலிய மூன்றுகுணமும் பற்றி யாடுதலி னகமாகுமாயிற்று. "அகதொழிற் சுவையா னகமெனப்படுமே" "தேசிவடுகுடனே சிங களமென றேதிஞர், பேசிலிவை பிஞ்ஞகன் முனஞடியவா— மோசையா, மொத்துடனே பாணியுடனே யிசையுடனே, வைதது முதலாய வகதிறும' எனறாகலின.

'பொற்சுடர்' என்பதுமுதல் 'தவத்தானும்' என்பதுவரை.

(25—31 வரிகள.)

(ப-ரை.) இரண்டைஞ்ஞூறு திரண்ட - ஆயிரமாகக் கூடிய, மூகம்எடுதது-முகமெடுதது, மண புலனஅகழ்ந்து-மண்ணினிடததை யகழ்ந்து, திகரு நிலை யுயகதி - திக்கு நிலைகளேமயகதி, புரியாகத மோடி - (ஒருகாலமும) வினேயாத கோபகதுடனே, சுடர் - ஒளி யினேயுடைய, பொன (கொதது) - பொற்கொத்தை, விரித்த-விரித் தாறபோன்ற, கொத்தலர் - கொத்தலர்ந்த, கொன்றையும் - கொன் றைமாலேயும, தாளியும் அறுகும - தாளியுமறுகும், வாலுழை எருக்க மும - வாலியவிதழினேயுடைய வெருக்கமாலேயும், கமதையும -

கரந்தைமாலையும், வன்னியும் - வன்னிமாலையும், மிடைந்த - செறிந்த, செஞ்சடையில் - செஞ்சடையில், ஒருபால் அடங்கும் - ஒருபாலடங்கும், கங்கையில் படிந்த - கங்கையிலாடுதற்குக் காரணமாகிய, பொங்கு தவத்தானும் - மிகுந்த தவத்தினையும்.

(வி-ரை) முற்றுமை தொக்கது. விரித்தகொச்சு - "வடித்தான் வகிர்கண்ணி" போன்றது. மிடைந்தசென்னி - நிலப்பெயர் கொண்டது. செஞ்சடை - பெயரிலேக்ஷணவி. அது 'பெயரிலேக் ஷினவியினுகுனவும்" என்பதனை நிக.

'அங்நெடுவேணியில்' என்பதுமுதல் 'ஏற்றத்தானும்'
என் பதுவரை.
(32—33 வரிகள்.)

(ப-ரை.) அங்கெடு வேணியில் - (அக் கங்கையமைந்த) நீண்ட சடையில், கண்ணி எனவிருந்து - சூடும்பூவாகவிருந்து, தூற்றும - (உலகம்) தூற்றுதற்குக் (காரணமாகிய), மறு ஒழிந்த - மறுவொழிந்ததனல்வந்த, ஏற்றத்தானும் - ஏற்றத்தானும.

(வி-ரை.) மதியைக் கண்ணியாகக் கூறினார் 'செழுநீர் மதிக் கண்ணிச் சிற்றம்பலவனே கொய்மலர்க் கொன்றைமாலைக் குளிர் மதிக் கண்ணியார்கு' என்றற்போல. தூற்று மறுநிலம் - பூத்த மரம்போன்றது. ஒழிந்தவேற்றம - உண்டவெச்சில்போன்றது.

'அணிவான்' என்பதுமுதல் 'புரிந்து' என்பதுவரை.
(34—35 வரிகள்.)

(ப-ரை.) அணி வான பெற்ற-அதுகியவானே யிடமாகப்பெற்ற, இப்பிறையை - இப்பிறையை, புரிகது - விரும்பி, பணிவாய் - பணிவாயாக.

(வி-ரை.) தாமரைமகளே! இப்பிறையானது கோடாயினுந் தோணியாயினு நாவாயாயினும் விற்போலக் காணப்படுவதாயினுந் தொழுதற் கமையாதெனினு முரிமையினலும் பெருமையினலும் புகழப்படுதலினலு மீருதலானுந் தவத்தினலு மேற்றத்தினலும் பணிவாயென வினைமுடிவு செய்க. (20)

திருக்கோவையார் ஈரடி-ம் செய்யுள்.

ஆற்றுமைகூறல்.

ஆற்றுமைகூறலென்பது — தலைமகளது வருத்தங்கண்ட தோழி, காதலர் கானகத்தையுடைய சுரத்தைப்போய்ப் பொரு

டேட நினையாநின்றாரென்று யான் சொல்லுமளவில், அவளது முலையுங் கண்ணும் பொன்னும் முத்தந்தாராநின்றன; இனி நீ சேட்சென்று தேடும்பொருள் யாதோவெனத் தோழி தலைமகனுக்கு அவளது பிரிவாற்றுமை கூறுகின்றல். அதற்குச் செய்யுள்:—

வானக் கடிமதிற் றில்லையெய கூத்தனே யேத்தலர்போற்
கானக் கடஞ்செல்வர் காதல ரென்னக் கதிர்முலைகண்
மானக் கனகந் தருமலர்க்கண் கண்முத்தம் வளர்க்குந்
தேனக்க தார்மன்ன னென்னே வினிச்சென்று தேர்பொருளே.

ஏழையழுங்கத்
தோழி சொல்லியது.

(ப-ரை.) வானம் - முகில்களே யுடையதாகிய, கடி - காவலை யுடைய, மதில் - மதிலாற் சூழப்பட்ட, தில்லை - தில்லையில், எம் கூத்தனே ஏத்தலர்போல - எங்கூத்தனே யேத்தாதவர்போல, காதலர் - காதலர், கானக்கடம் செல்வர்என்ன - கானகத்தையுடைய சுரத்தைச் செல்வரென்று சொல்ல, கதிர் முலைகள் - ஒளியையுடைய முலைகள், மானம் - பொண்டாடப்படும், கனகம் - பொன்னை, தரும் - தாராநின்றன; மலர் கண்கள் - மலர்போலுங் கண்கள், முத்தம் - முத்தாதை, வளர்க்கும் - பெருகவுண்டாக்காநின்றன; (அதனால்) தேனகத்தே டி மலர்ந்த, தார்மன்னன் - தாரையுடையமன்னன், இனி சென்று தேடும்பொருள் என்னே - இனிச்சேட்சென்று தேடும்பொருள் யாது, எ-று.

(வி-ரை.) மானமென்றது அளவை, அளவையென்பது பிரமாணம். மாற்றாணிப் பொன்னென் றுரைப்பினு மமையும். மன்னனென்பது ந.டி முன்னிலைக்கண் வந்தது. இயல்பு வினியென் பாருமுளர். மெய்ப்பாடு - இளிவரலைச் சார்ந்த பெருமிதம். பயன் - அது.

நேரிசையாசிரியப்பா.

பொருப்புமலி தோளினு நெருப்புமிழ் வேலினுஞ்
செருத்தரு மதலைக் செயங்கொண் மங்கையை
வற்புக் காதலிற் கொண்ட மதியன்றிக்
களவலர் நூற்றத் தளவுகொடி நடுங்க
வேவுளம் பட்டுப் புலைகண் கறுக்கத்
தண்டா மயல்கொடு வண்டுபரந் தரற்றக்

காலங் கருதித் தோன்றிகை குலைப்பத்
தூன்பு பசப்பருந் தண்ணிழ றன்னீத்
திருமல ரெடுத்துக் கொண்றை காட்ட
விறைவனோ நில்லா தெனபன நிலைக்கக்
கோடல் வளைந்த வள்ளல ருகுப்பக்
கண்டுளி துளிக்குஞ் சாயாப் பையுளைக்
கூறுபட நாடி யாசை-யொடு மயங்கிக்
கருவினோ மலர்நீ ரருகுகின் றுகுப்பப்
பேரழல் வாடை யாருயிர் தடவ
வீனைக்குங் கால மூனைந்த காலை
யன்புஞ் ருஅ நண்பு நிலையும்
தடையா வறிவு மூடையோய் நீயே
பெழுந்து காட்டிப் பாடுசெய் கதிர்போற்
றேரூன்றி நிலனா நிலைப்பொருளை செய்ய
மருங்கிற் பாதி தருகுதுகில் புணருறும்
வினைவய வொடுங்கு மூதிர்கெல் லுணவினுக்
தம்மில் வீழுநர்க ணின்பமென் றறிகுதுக
தண்மதி கடுஞ்சுடர் வெவ்வழல் கண்வைத்
தளவாப் பாத மண்பரப பாகத்
தனிகெழி விசும்பு திருவுட லாக
விருந்திசைப் போக்குப பெருந்தோ ளாக
வ்ழுவறு திருமறை யோசைக ணீண்டு
மொழிதர நிகழும வார்த்தை யாக
வுண்ணிறைந் துழலும் பாடிரண் டியிர்ப்புப்
பகலிர வொடுங்கா வீடிவளி யாக
வடுபடைப் பூழியன் கடுமுரண் பற்றி
யிட்டவெங் கொடுஞ்சிறைய பட்ட கார்க்குலந்
தனையொடு நிறைநீர் வீடுவன போலப்
புரசையொடு பாச மறவுட னிமிர்ந்து
கூடமுங் கந்துஞ் சேறுகின் றலைபப
மூன்றுமத நெடும்புனல் கான்றுமய லுவட்டி
யேழுயர் கரித்திரள் கதமொடு பிளிறும்

பெருநகர்க் கூட துறைதரு கடவுளே
நிறையப் பேசாக் குறைபினர் போலவுங்
கல்லா மனனினுஞ் செல்லுதி பெரும
விளமையு மின்பமும் வளனுங் காட்சியும்
பின்புற நேடின முன்பவை யனறு
தனித்த மேனித் திருவினட் கடைத்த
வினைதரு மடைவி னல்லது
புனையக் காணேன் சொல்லா யினவே.

பொருப்புமலிதோளினும் - சொல்லாயினவே. பததீ - பொருள் வயிற்பிரிதல். துறை - ஆற்றுமைகூறல்.

'பொருப்பு' என்பதுமுதல் 'அன்றி' என்பதுவரை.

(1—3 வரிகள்.)

(ப-ரை.) பொருப்பு - மலையினதயர்ச்சியினும், மலி - மிகுந்த, தோளினும்-தோளின்கண்ணும்,நெருப்பு உமிழ்-அக்கினியைக் கக்கா நின்ற, வேலினும் - வேலின்கண்ணும், வற்ற காதலில் - தணியாத காதலால், செம் திருமகளே-சிவந்த திருமகளேயும், செயங்கொள் மங் கையை - வீரமகளேயும், கொண்ட மதியன்றி-கொண்டதனால் வந்த மதியன்றி.

வி-ரை.) பொருப்பு-ஆகுபெயர். நீக்கப்பொருட்கண்வரு மின் னுஞ் சிறப்பும்மையுந் தொக்கது. இன்னிராண்டுஞ் சாரியை. ஏழா மூருபு விரிக்க.

'அன்பும்' என்பதுமுதல் 'நீயே' என்பதுவரை.

(17—18 வரிகள்.)

(ப-ரை.) அன்பும் - (எல்லாவுயிர்கண்மேலுஞ் செல்லும் அருள் விளக்கும் பயனும் இல்லற மினிதாடத்தற் பயனுந்தரும்) அன்பும், சூளும் - நின்னிற்பிரியேனென்ற ஆணையும், நண்பும் - காதலுடை மையும், நடுநிலையும் - (க ொதுமை னண்பென்னு மூன்றினுமறத் தின்வழுவாது) ஒப்பநிற்கு நிலைமையும், தடையா அறிவும் - கல்வி கேள்விகளிற் றடைபடாவறிவும், உடையோய் நீயே - உடையை நீயாதலால்.

(வி-ரை) தடைபடாவறிவு - உணமையறிவு கல்வியறிவு-அற முதலிய நூலகளோக கற்றவறிவு கேளவியறிவு-அநுபூதிபொருளோக கற்றறிந்தார் கூறகேட்டவறிவு.

'மருங்கிற்பாதி' எனபதுமுதல 'அறிந்தும்' என்பதுவரை.
(21—23 வரிகள.)

(ப-ரை) மருங்கில பாதி தரும - மருங்குலிறபாதி வெளிகாட்டுமெ, துலில புனைதறம - துலியுடுதறம, வீளைவயிலொடுங்கும - வீளைதொடுங்கும வயலில், உதிர மெல - உதிர்ந்த நெலலாலுணடாகிய, உணவினும - உணவினலும, தம மில வீழுநாசகு - தமமி லொழுகுகதறை விருமபினவாகு, இனபமெனறு அறிந்தும - இனபமெனறறிந்தும

(வி-ரை.) நீயேயெனனு மேகாரதறைய பிரிதது விருமபினாக கேயெனற தேறறேகாரமாகக கூடடுக. உமமையெசசவுமமை மறறது கையாற் பொதினமை தோனறிறறு

'இளமையும்' எனபதுமுகல 'அன்றி' எனபதுவரை.
(42—43 வரிகள.)

(ப-ரை.) நேடின முனபவை அனறி - பண்டு நோன பொருளனறி, இளமையம இனபமும - இளமையுமினபமும, வளனும - பெறற செலவமும, காடசியும - காடசியும, பினபுற - பிறபட.

'எழுந்து' எனபதுமுதல 'செய்ய' எனபதுவரை.
(19—20 வரிகள)

(ப-ரை.) எழுந்து - காலையிலெழுந்து, கர்ட்டி - தன கிரணங காட்டி, பாடு செய கதிரபோல - மாலையிறபடுமாதிதனைப்போல, தோனறி நிலலா-உணடாயநிலலாத, நிலைபபொருள செயய-பொருளோதேட.

'தண்மதி' என்பதுமுதல 'வீடுவரியாக' என்பதுவரை.
(24—31 வரிகள)

(ப-ரை) தணமதி - குளிரந்த மதியினையும, கடுஞ்சுடர்-கடிய சுடரினையுடையவாதிதனையும, வெவவழல - வெவவியவழலினையும, கண வைதது - கணணுகபபெறறு, மண பரப்பு - பூமிபரப்பு, அளவா-எவராலு மளக்கபபடாத, பாதமாக-திருவடியாக, தனி நெடு வீசுமபு - ஒபபறற நெடியவாகாயம, திரு உடலாக - திருவடிவாக,

இருந்திசைப்போக்கு - பெருமையினையுடைய திசைப்பரப்பு, பெருந் தோள் ஆக-பெரியதோளாக, வழு அறு திரு மறை-குற்றமற்ற அழகிய வேதத்தின், ஒசைகள் அனைத்தும் - சுரங்களனைத்தும், மொழிதல் நிகழும்-சொல்லுதல் நிகழும், வார்த்தையாக-வார்த்தையாக, பகல் இரவு ஒடுங்கா - பகலுமிரவு மொடுங்காது, விடு வளி - விடுமுயிர்ப்பு, உள் நிறைந்து - உள்ளே நிறைந்து, உழலும் - போக்குவரவுசெய்யும், பாடிரண்டு உயிர்ப்பாக - இரண்டுபக்கத்துயிர்ப்பாக.

'அடைபடை' என்பதுமுதல் 'கடவுளே' என்பதுவரை.

(32—39 வரிகள்.)

(ப-ரை.) அடு படை - சத்துருக்களைக் கொல்லும் படையினையுடைய, பூழியன் - பாண்டியன், கடி முரண்பற்றி-(இந்திரன் விலக்கிய) கொடிய மாறுபாட்டைப்பற்றி, இட்ட வெம் கொடுஞ்சிறை - செய்த வெவ்விதாய கொடியசிறையில், பட்ட கார் குலம் - அகப்பட்ட மேகத்திரளான, தனையொடு-விலங்குடனே, நிறை நீர்-மிகுந்த புனலை, விடுவனபோல - சொரிவனபோல, எழு உயர் கரி திரள்-எழுமுழமுயர்ந்தயானைத்திரளானது, புரசையொடு - கழுத்திலிடுகயிறும், பாசம் - பாசக்கயிறும், அற - அறும்படி, உடல் நிமிர்ந்து - உடனிமிர்ந்து, கூடமும் கந்தும்-தாஞ்சேரிடமும் தறியும், சேறுறின்று - சேறுபட்டு, அலைப்ப - சேர்ந்தோரையலைப்ப, மூன்று மத நெடு புனல்-மும்மதமாகிய மிகுந்தபுனலை, கான்று - விட்டு, மயல் உவட்டி - மயக்கமிகுந்து, கதமொடு பிளிறும் - கோபத்தான் முழங்கும், கூடல் பெருகர் - கூடலாகிய பெரியநகரில், உறைதரு கடவுளே - பொருந்துங் கடவுளே.

(வி-ரை.) தனையொடு வென்ற ஒடு வேறுவினையொடு, புரசையொடு வென்ற தெண்ணூறு, "முரசொடு வரிவளை முழங்கியார்த்தன" என்றற்போல. எழென்பது - ஆகுபெயர். யானைக்குத் தன். னிலக்கண மேழுழமுவுபமாதலின் 'எழுபர் கரித்திரள்' என்றார். கதமொடு வென்னு மொடுவானுயிற்று. ஆக வுறைதருங் கடவுளென வியையும்.

'நிறையப்பேசா' என்பதுமுதல் 'செல்லுதிபெரும'

என்பதுவரை.

(40—41 வரிகள்.)

(ப-ரை.) நிறைய பேசா-முற்றுந்துதியாததனால் வந்த, குறையினர்போலவும் - குறையுடையார்போலவும், கல்லா மனனினும் -

ஒருவழிப்படக் கல்லாத கயவர்மனத்தைப்போலவும், செல்லுதி பெரும - குறையுடையையா யொருவழிப்படாது சுரத்திற் செல்லுகின்றனை.

களவலர் தூற்றத் தளவுகொடி நடுங்க.

(4—வது வரி.)

(ப-ரை.) களவலர் தூற்ற - களவலரைச் சொரியாநிற்ப, தளவு கொடி நடுங்க - முல்லைக்கொடியசைய.

(வி-ரை.) நடுங்கவென்னுஞ் சினைவினை முதன்மேனின்றது.

வேயுளம் பட்டுப் பூவைகண் கறுக்க.

(5—வது வரி.)

(ப-ரை.) வேயுளம் பட்டு பூவைகண் கறுக்க - காயாப் பூத்தத் தன்னிடங் கறுப்ப.

(வி-ரை.) வேய்தல் - மலர்தல், அது வேயுளாயிற்று. செய்தல் - வீளைதல். பாய்தல்-"செய்யுள் வீளையுள்பாய்த்துளாஞற்போல. "மலையினேர் முல்லை மலர்வேய்ந்து வாய்ந்த" என்னுர் சிற்றகத்தியத்தினும். காயாமலரைச் சூடுதல்போன்று கண் கறுப்ப வெனினுமாம். "வீறுசால்" என்னும் பாலைக்கவியில் "மரமெல்லா மலர்வேய" என்னுர்போல. அம் - அசை.

தண்டா மயல்கொடு வண்டுபரந் தரற்ற.

(6—வது வரி.)

(ப-ரை.) வண்டு - வண்கென், தண்டா மயல் கொடு - நீங்காத விருப்பங்கொண்டு, பரந்து அரற்ற - எங்கும் பரந்துபாட.

காலங் கருதித் தோன்றிகை குலைப்ப.

(7—வது வரி.)

(ப-ரை.) தோன்றி - தோன்றியானது, காலம் கருதி - காலத்தைக்கருதி, கை குலைப்ப - கைவிரிந்தாற்போல மலர.

(வி-ரை.) குலைப்பவென்றது-"முல்லை முறுவலிப்ப மொய்கா ந்தள் கைகுலைப்ப" என்னுர்போல.

'துன்பு' என்பதுமுதல் 'காட்ட' என்பதுவரை.

(8—9 வரிகள்.)

(ப-ரை.) கொன்றை - கொன்றையானது, கண் - கண்ணில், துன்பு பசப்பு ஊரும் - துன்பமாகிய பசலையாகப் பரக்கும், நிழல் தன்னை - ஒளியை, திருமலர் எடுத்து காட்ட - அழகிய மலர்பூத்துக் காட்ட

(வி-ரை.) "பூப்போலுண்கண் பொன்போர்த்தனவே" என்றார் ஐங்குறுநூற்றிலும்.

'இறை' என்பதுமுதல் 'வள்ளலருகுப்ப' எனபதுவரை.

(10—11 வரிகள்)

(ப-ரை) கோடல் - கோடல்கள், இறை-கையின்கணணிந்த, வளை நில்லாது என்பன நிலைக்க - வளைகணில்லாதென்று சொல்லுவனபோல, வளைந்த - வளைந்த, வள் அலர் உருப்ப - வளவியவலர் களைசரித்த.

(வி-ரை.) இறை - ஆகுபெயர். "இறைவளை யாழ்தழீஇ" என்றாற்போல. 'உண்ட படை தோய" என்பனபோல நிலைக்கவென்பது உவமவுருபு. அள்ளலர் - கூரியவலருமாம.

'கண்' என்பதுமுதல 'உருப்ப' எனபதுவரை.

(12—14 வரிகள்.)

(ப-ரை.) கருவிளைமலர்-கருவிளைமலர்கள், அருகுநின்று-அருகு நின்று, கண் - கண்ணானது, துளி துளிக்கும் - துளியைச் சிந்துதற்குக் காரணமாகிய, சாயா பையுளை - கெடாத துன்பத்தை, கூறு பட நாடி - பகுதிப்படப் பார்த்து, ஆசையொடு மயங்கி - திக்கொடு பொருந்தி, நீர் உருப்ப - நீரினைச்சிந்த.

(வி-ரை.) இது தற்குறிப்பேற்றம். ஒடி - வேறுவினையொடு நீர்கள்-அது திசைச்சொல்.

பேரழல் வாடை யாருயிர் தடவ.

(15—வது வரி).

(வி-ரை.) ஆருயிர் - பெறுதற்கரியவுயிரை, பேர் அழல் வாடை தடவ - மிகுந்த தழலேகூடிய வாடை வருட.

விளக்குங் கால மூளைத்த காலே.
(16—வது வரி).

(ப-ரை.) விளக்கும் காலம் - உண்டாக்குங்காலம், மூளைத்த காலே - தோன்றியகாலத்து.

(வி-ரை.) செயவெனெச்சவடக்கு விளக்குமென்னும் பெயரெச்சங் கொண்டது.

'நுணித்தமேனி' என்பதுமுதல் 'சொல்லாயினவே' என்பதுவரை.
(44—46 வரிகள்.)

(ப-ரை) நுணித்த மேனி திருவினட்கு - கூர்த்தவுருவழகையுடையாட்கு, அடைத்த - அமைத்த, விளைதரும் அடைவின் அல்லது-விதிதரு முறைமையன்றி, சொல்லாயின-சொல்லுதற்கமைந்த காரியங்களோ, புனைய - புனைந்துசொல்ல, காணேன் - யானறியேன்.

(வி-ரை.) இது எதிர்வினைவிலக்கென்னு மலங்காரம். நுணித்தலென்பு பாடமாயி னுரிமையாகிய வினையென்க. ஆயின - தொழிற் பெயர். ஏகாரம்-ஈற்றசை.

பெரும ! நீ தேளினும் கேவினுங்கொண்ட மதியன்றி யன்பு முதலியனவு முடையையாதலா லிவ்வொழுக்கத்தை விரும்பினர்க்கே யின்பமென் றறிந்து மிளமை முதலிய பிற்படப் பொருளைத் தேடச் செல்லுகின்றனை யதனுள் யான் கார்தோன்றியகாலத் திவட்கமைந்த காரியங்களைச் சொல்ல வறியேனென வினைமுடிவுசெய்க.

எழுந்து காட்டிப் பாடுசெய் கதிர்போற் றோன்றி பென்பது - "நாளது சின்மை கடைநாளிதுவென் றறிந்தாரு மில்லை" என்றுற் போலவும், "உண்டோவுனநாள்" என்றுற்போலவும், காலையிலுதித்த வாதித்தன்மாலையின் மறைந்தா னென்றுரே லெல்லாரு மிறப்பதென் றமையிளளது சின்மையாயிற்று. "புறநதநதிருளிரியப் பொன்னேமி யுய்த்துச், சிறந்த வொளிவளர்க்குந் தேரோன் - மறைந்தாற், புற வாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி, யிறவாது வாழ்கின்றூர் யார்". என்றுர் பிறரும். இளமையுங் காமமும் பிற்படவென்பது-"இளமைய தருமை இளமையுங் காமமு நின்பாலில்லா" என்றுற்போல. தடையா வறிவு முடையோ யென்பது-"தாளாண்பக்கம் அறிவினுண் முயலுதலின் உளனுடை யுள்ளத்தை" என்றுற்போல. நில்லா நிலைப் பொருள் செய்யுமென்பது - தருதியதமைதிதேடும் பொருண்

மூறைமையிற் றேடவேண்டுதலினது பாணிக்கு மென்றலின் சென்றூர் முகப்பப் பொருளுங்கிடவா வென்றுற்போல. மருங்கிற் பரிதருந்துகில் பூணைந்துளென்பது-"இன்மைய திழிவு,ஒசோகை தம்முட்டஇழீயோ சோகையொன்றன் கூறுடை யுடிப்பவரோனுயிம்" என்றுற்போல. கேடினமுன்பவையன்றுவென்பது-"உடைமைய துயர்ச்சி இளமையுங் காமமு மோராங்கு பெற்றூர் வளமைவீளா தக்கதுண்டோ"என்றுற்போல.செல்லுதிபெருமளன்பது-"அன்பினதகலம் பிரிந்துறைக் தன்புபெருத்தல் வேண்டா முதிர்நெல் லுணவினுந் தம்மில் வீழுநற் கின்பமென்றலின் பிரிந்துறைசூழா தியைய" என்றுற்போலவும், "சிறுகனி கீதஞ்சி யொப்பினு மஞ்சு கறுதுத னீத்துப் பொருள்வயிற் செல்வோய்" என்றுற்போலவுமாம. கீன்புபசப்பூரய கண்ணிழறன்னேத் திருமல மெடுத்துக் கொண்மை கூட்டவெனபதும், இறைவளே நில்லா தென்பன நிலைக்கக் கோடல் வேண்டவள்ளல ருகுப்ப வென்பதும்,கண்டுளி துளிக்குஞ் சாயாப் பையுளைக் கூறுபட நாடி யாசையொடு மயங்கிக் கருவிளா மலர்நீ ருருஞின்றுகுப்பவென்பதும்,பேரமல் வாடை யாருயிர் தடவ வென்பதும், "அகற்சிய தருமை என்றே னெழுதிய தொய்யிலும் யாழ்நின் மைத்துடை மார்பிற்சுணங்கு நினேத்துக்காண்"என்றுற்போலவு ர,"இடைமுலைக் கோதை குழைய முயங்கு முறைநாள் கழிந் லுரிமைக் காணடை" என்றுற் போலவுட், இது "நிகழ்ந்தது கூறி நிலையலுந் நினேயே" யென்றமையான் முன்னெற்றுகாற் றலேவன் கூறக்கேட்டுத் தோழியுனே யுட்கொண்டு கூறினுள். நாளது சின்மை முதலியவற்றிற்குக் கூறியவதாரணங் கலித்தொகையிற் பாலேத் நினேயிற் காணுக. "ஒன்றுற்தமரினும் பருவத்துஞ் சுரத்தும்" என்னு மகதநினேச் சூத்திரத்தில் "நாளது சின்மையு மினமைய தருமையுங், தாளாண்பக்கமுங் தருகிய தமைதியு,மின்மைய திழிவுமுடைமைய துயர்ச்சியு,மன்பினதகலமு மகற்சிய தருமையும்" என்றுர் தொல்காப்பியனுர். (உக)

திருக்கோவையார் களவ-ம் செய்யுள்.

தன்னுட்கையாறெய்த்திடுகிளவி.

தன்னுட்கையாறெய்த்திடுகிளவியென்பது—தலைமகனேக் காணலுற்று வருந்தாகின்ற தலைமகள், இக்கண்டல் சான்றுகக்கொண்டு இப்புன்னேயிடத்துக் கலந்த கன்வரை இவ்விடத்து வரக்கண்டிலேயோ, தினேயில்லாதேற்கு ஒருசொல் லருளாயென்று தன்னுட் கையாற்றை மதியொகூறி வினவாநிற்றல். அதற்குச் செய்யுள்:-

விண்டலே யாவர்க்கும் வேந்தர்வண் டில்லேமெல் லங்கழிசூழ்
கண்டலே யேகரி யாக்கன்னிப் புன்னைக் கலந்தகள்வர்
கண்டிலே யேவரக் கங்குலெல் லாமங்குல் வாய்விளக்கு
மண்டல மேபணி யாய்தமி யேற்கொரு வாசகமே.

மின்னுப் புரையு மந்துண் மருங்கு
றன்னுட் கையா றெய்திடு ளிளவி.

(ப-ரை.) கங்குல் எல்லாம் - கங்குன்முழுதும், மங்குல்வாய் - ஆகாயத்திடத்தை, விளக்கும் மண்டலமே - விளக்கு மண்டலமே, விண்டலே யாவர்க்கும் - விண்ணிடத்துள்ளாராகிய எல்லார்க்கும், வேந்தர் - வேந்தராயுள்ளாரது, வண் தில்லே வளவிய தில்லேவரைப் பில், மெல் அம் கழி சூழ் - மெல்லிய கழிசூழ்ந்த, கண்டலேயே கரி யா - கண்டலே சான்றாக, கன்னி புன்னை - இளைய புன்னைக்கண், கலந்த கள்வர் - (என்னைக்) கலந்த கள்வர், வர கண்டிலேயே - (ஒரு கால்) வாக்கண்டிலேயே, தமியேற்கு - துணையில்லாதேற்கு, ஒரு வாசகம் - ஒருசொல், பணியாய் - அருள்வாய், எ - று.

(வி-ரை.) மெல்லங்கழி யென்பதுஉ மொருபண்புத்தொகை முடிபு. மென்மை - நிலத்தின் பெண்மை. கழிசூழ் புன்னையெனக் கூட்டிக. கண்டலேயென்னு மைகாரம அசைநிலே. கரியாகக் கொண்டென வொருசொல் வருவித்து இரண்டாவதாக வுரைப்பினுமமையும். எஞ்ஞான்று மனத்தகொன்றாக தாமொன்று மொழிந்தா ரென்னுங கருத்தால்;'கள்வர்' என்றார். கள்வர்க் கண்டிலே யென்பது பாடமாயின் இரண்டாமுருபுவிரிக்க. கங்குலெல்லாங கண்டிலேயே யென்றுகூட்டி யுரைப்பினுமமையும் கண்டேகூறுகின்றிலேயென்னு முணர்வினளாகலின் எய்திகளவியாயிற்று. அந்தண்மருங்குல் இளவி யென்றியையும். மெய்ப்பாடு-அழுகை. பயன்-அயர்வுயிர்த்தல்.

நேரிசையாசிரியப்பா.

நீர்நிலே நின்று கால்கழுத் தெழுந்து
திக்குநிலே படர்ந்த முகிற்பா சடையு
மிடை யிடை யுகளு மீறுமீற்றுஞ்
செம்முகிற் பழநுரை வெண்முகிற் புதுநுரை
யெங்குஞ் சிதறிப் பொங்கியெழு வனப்பும்
பலதலே வைத்து முடியாது பாயு
மெங்குமுகம் வைத்த கங்கைக் காலுங்

கொண்டுகுளிர் பரந்த மங்குல்வா விக்குண்
முயலெனும் வண்டுண வழுதகற வொழுக்கித்
தேவர் மங்கையர் மலர்முகம் பழித்துக்
குறையாப் பாண்டில் வெண்மையின் மலர்ந்த
மதித்தா மரையே மயங்கிய வொருவே
னின்பாற் கேட்கு மளிமொழி யொன்றுள
மீன்பாய்ந்து மறிக்கத் திரையிடை மயங்கிச்
சூல்வயி றுளைந்து வளைகிடந்து முரலும்
புன்னீயம் பொதும்பரிற் றம்முடை நெஞ்சமு
மீனுண வுள்ளி யிருந்தவெண் குருகெனச்
சோறுநறை கான்ற கைதைய மலருங்
பலதலை யரக்கர் பேரணி போல
மருங்குகூண் டெழுந்து கருங்காய் நெருங்கி
வினைகட் சுமந்த தலைவிரி பெண்ணையு
மின்னுங் காணுக் காட்சிகொண் டிருந்த
வன்னத் திரளும பெருங்கரி யாகச்
சொல்லா வின்பமு முயிருறத் தந்து
நாளிழைத் திருக்குஞ் செயிர்கொளற் றத்து
மெய்யுறத் தணுகுத பொய்யின ரின்று
நெடுமலே பெற்ற வொருமகள் சுணை
நான்முக விதிப தாளத் தக்க
வந்தநான் முகனே யுந்தி பூத்தோன்
விசித்துமிறை பாசத் திடக்கை யிசைப்ப
மூன்ஸபுர தொன்றி லரசுடை வாணன்
மேருக் கினைத்த தோளா யிரத்தொடு
மெழுகடல் கிளர்ந்த திரள்கலி யடங்க
முகம்வே றிசைக்குங் குடமுழ விரட்டப்
புட்காற் றும்புரு மணக்கர் திருவர்
நான்மறைப் பயனு மேழிசை யமைத்துச்
சருக்கரைக் சுன்றிற் றேன்மழை நான்றென
வேழு முனிவர்க டாழு மாதவ
ரன்பின ருள்ளமோ டென்புகரைத் தருக

விரனுன் கமைத்த வணிதூல் வீங்காது
நான்மறை துள்ளும் வாய்பிள வாது
காட்டியுள ளுணர்த்து நோக்கமா டாது
பிதிர்க னன்மணி சூழ்முடி நடுங்காது
வபிறுகுழி வாங்கி யழுமுகங் காட்டாது
நாசி காகுவி வெடிகுரல் வெள்ளே
பேசாக் கீழிசை யொருபுற மொட்ட
நெட்டுயிர்ப் பெறித்த லெறிக்துகின் றிரட்ட
லோசை யிழைத்தல் கழிபோக் கென்னப
பேசுய குற்ற மாசைவொடு மாற்றி
வண்டின் ரூரியுங் கஞ்ச நாதமுஞ்
சிரல்வா னிலேபுங் கழையிலே வீழ்வது
மருவி யோசையு முழுவின் முழக்கமும்
வலம்புரிச் சத்தமும் வெருகின் புளர்ச்சியு
மின்னுமென் றிசைப்பப் பன்னிய விதியொடு
மந்தர மத்திமை தாரமிவை மூன்றிற்
பள்ள மாங்க றெள்ளிதின் மெலிதல்
கூடிய கான வன்பொடு பரவப்
பூதந் துள்ளப் பேய்கை மறிப்ப
வெங்களை வுயிரு மின்பநிறைந் தாட
நாட்க விதியோ டாடிய பெருமான்
மதுரை மாநகர்ச் செழிய ஞகிக்
கதிர்முடி கவித்த விறைவன் மாமணிக்
காறலைக் கொள்ளாக் கையினர் போல
நீங்கினர் போக்கு மீங்குழி வருவதுங்
கண்டது கூறுதி யாயி
னெண்டகப் போற்றி நின்கால் வணங்குதுமே.

நீர்லிலகின்று - நின்றுள்வணங்குதுமே. பதநி - இரவிற்குறி. துறை - தன்னுட்கையாதெய்திடினவி.

'நீர்நிலே' என்பதுமுதல் 'பாசடையும்' என்பதுவரை.
(1—2 வரிகள்.)

(பதவுரை.) நீர் நிலை-கடலினிடத்து, நின்று-இடையருதுண்டு நின்று, கால் கறுத்து எழுந்து-இடங்கறுத்தலர்ந்து, திசை நிலே படர்ந்த - திசைகளே நிலையாகச்சென்ற, முகில் பாசடையும் - மேகமாகிய பசியவிலையையும்.

(விளக்கவுரை.) நிலைநீர்-கடல், அது தினைமொழி நிலையாய் நீர்நிலையாயிற்று; அடைகரைபோல நீர்நிலே நின்றென்பது "வானின் முலகம் வழங்கி" என்றாற்போன்றது.

இடையிடை யுகளும் மீனு மீனும்.
(3—வது வரி.)

(பதவுரை.) இடை இடை உகளும் - இடையிலே யிடையிலே பெயரும், மீனுமீனும் - நாண்மீனுகிய மீனையும்.

'செம்முகில்' என்பதுமுதல் 'வனப்பும்' என்பதுவரை.
(4—5 வரிகள்.)

(பதவுரை.) செம் முகில் - சிவந்தமேகமாகிய, பழதுரை - பழைய நுரையையும், வெள் முகில் - வெள்ளைமேகமாகிய, புது நுரை-புதிய நுரையையும், எங்கும் நிதறி - தன்னிடமெங்குஞ் சிதறி, பொங்கி எழு வனப்பும் - மிகுதெழுச்சியின் றவழகினையும்.

(விளக்கவுரை.) வினைமுதலல்லாத கருவி முதலாயின வல்வினை முதல் வினைக்குச் செய்விப்பனவா மாதலாற் சிதறியெனச் செய்விப்பதாகக் கூறினர். "வேய்ந்த வெண்முத்தஞ் சிந்துபைங் கள்வரை மீன்பரப்பிச், சேய்ந்த வானக மானுஞ் சிலம்ப" என்றாற் போல.

'பலதலே' என்பதுமுதல் 'காலும்' என்பதுவரை.
(6—7 வரிகள்.)

(பதவுரை.) பல தலைவைத்து முடியாத-ஓரிடத்திற் சென்றமையாத பலதலைவைத்து, எங்கும் பாயுமுகம் வைத்த - எங்கும் பாக்குமுகம்வைத்த, கங்கைக்காலும் - கங்கையாகிய காலையும்.

கொண்டுகுளிர் பரந்த மங்குல் வாவிக்குள்.
(8—வது வரி.)

(ப-ரை.) கொண்டு - தன்னிடத்திற் பெற்று, குளிர் பரந்த குளிர்ச்சிமிகுந்த, மங்குல் வாவிக்குள் - ஆகாசமாகிய வாவிக்குள்.

(வி-ரை.) உருபு தொடர்ந்தடுக்கிக் கொண்டென்னும் வினையெச்சத்தோடு முடிந்தது.

முயலெனும் வண்டினை வழுதுறை வொழுக்கி.
(9—வது வரி.)

(ப-ரை.) முயல் எனும் வண்டு - முயலாகிய வண்டு, உண உண்ணும்படி, அமுத நறவு ஒழுக்கி - அமுதமாகிய தேனைச்சிந்தி.

(வி-ரை.) "பிறையது வளரத் தானும் வளர்ந்துடன் பெருகிப் பின்னுட், குறைபடு மதியக் தேயக் குறுமுய றேய்வ தேபோல்" என்ருற்போல 'முயல்' கூறினர். "மான்முழுதுந் தாங்கிவரு மதியம்" என மானைச் சொல்லுவாருமுளர்.

'தேவர்மங்கையர்' என்பதுமுதல் 'தாமரையே' என்பதுவரை.
(10—12 வரிகள்.)

(ப-ரை.) தேவர் மங்கையர்-தெய்வமாதர்கள், மலர் முகம் பழித்து - மலர்போலு முகத்தைப் பழித்து, பாண்டில் குறையா வட்டங்குறையாத, வெண்மையின் மலர்ந்த - வெள்ளியதாக விரிந்த, மதி தாமரையே - மதியாகிய வெண்டாமரையே.

(வீ-ரை.) தாமரைக்கு முகத்திற்குமொத்தபண்பு. செம்மையும் வடிவும் பொலிவும் முகத்திற்கு மதிக்கு மொத்தபண்பு. தட்டினிமையுஞ் சுத்தத்தின் மிக்குப் பொலிதலு மில்வாரிருத்த பண்பு. வேறுபடுதலான் உவமைக்குவமை யில்லென மொழிய வென்னுங் குற்றமாகாதென்க; "கொழுந்தாகைமுகைக் கொண்டலம் பாசடை விண்மடிவி, லெழுந்தார் மதிக்கம லம்மெழி றக்தென விப்பிறப்பி, லழுந்தா வகையென்னே யாண்டவன் கிற்றம் பலமனையாய், செழுந்தா தலிழ்பொழி லாயத்துச் சேர்கி ருத்தகவே" என்ருற்போல. உவமைக்குவமை "வெண்டிங்கள் போன்றிங்கு வெண்சங்கு விண்டனைய, வண்டிலங்கு தாழை வளர்கோடு" என்ருற்போல்வன. இது விபரீத வுவமையோடு கூடிய வியைபுருவகமாதலி னுவமை யுருவகம்.

'மயங்கிய' என்பதுமுதல் 'ஒன்றுள' என்பதுவரை.
(12—13 வரிகள.)

(ப-ரை.) நின்பால் மயங்கிய ஒருவேன் - நின்பால் வருந்திய வொருத்தியாகிய யான, கேட்குமளவிலமொழி ஒன்று உள-கேட்கும் வார்த்தை யொன்றுளது (அஃதாகாமையில்).

'நாளிழைத்திருக்கும்'என்பதுமுதல்'நெஞ்சமும்'என்பதுவரை.
(16—25—26 வரிகள.)

(ப-ரை.) நாளிழைத்திருக்கும - அல்லகுறிப்படாது வருநாளை எண்ணிக்கி யிருந்ததனால் வரும, செயிர் கொள் - குற்றம் பொருந்திய, அற்றத்து - வேளையில், மெய்யுறத் தணந்த - உண்மையாக வந்ததுபோல வந்து பிரிந்த, பொயயினர் - பொய்ச்சூளினையுடையார், தம்முடை நெஞ்சமும் - தம்முடைய மருமும்.

(வி-ரை.) இருந்ததனால் வருங்குற்றம் - நாய்துஞ்சாமை முதலியன.

'மீனுணவு' என்பதுமுதல் 'கைதையமலரும்' என்பதுவரை.
(17—18 வரிகள.)

(ப-ரை.) மீன் உணவு உள்ளியிருந்த - மீனுகியவுணவைக் கருதிப் பார்த்திருந்த, வெள் குருகு என - வெள்ளைக்குருகுபோல, சோறு நறை கான்ற - சோறு நறையைகக்கிய, கைதையமலரும் - தாழைமலரும்.

'பலதலை' என்பதுமுதல் 'பெண்ணையும்' என்பதுவரை.
(19—21 வரிகள்.)

(ப-ரை.) பல தலை - பலவாகிய தலையினையுடைய, அரக்கர் அரக்கர் படைக்கு வகுத்த, போணிபோல - போணிபோல, மருங்கு - பக்கத்தில், கூண்டு எழுந்து - திரண்டெழுந்து, கருங்காய் நெருங்கி - காயகாய் மிடைந்து, வீளை கள் சுமந்த - வீளையுங் கள்ளுத்தரித்த, தலை விரி பெண்ணையும் - தலைவிரிந்த பனையும்.

(வி-ரை.) பொருளடையை யுவமைக்குங் கொள்க.

அன்னத் திரளும் பெருங்கரி யாக.

(23—வது வரி.)

(ப-ரை.) அன்னத்திரளும் - அன்னக்கூட்டமும், பெருங்கரி யாக - மிகுஞ்சான்றாக.

'மீன்' என்பதுமுதல் 'பொதும்பரில்' என்பதுவரை.

(14—16 வரிகள்.)

(ப-ரை.) திரையிடை - திரையிடத்து, மீன் பாய்ந்து மறிக்க மீன்கள் குதித்துத் தடுக்க, வளை - சங்குகள், மயங்கி - மதிமயங்கி, சூல்-கருவோடு பொருந்திய, வயிறு உளைந்து கிடந்து-வயிறு நொந்து கிடந்து, மூலும் - முழங்கும், புன்னையம் பொதும்பரில் - புன்னையி னிளமரக்காவில்.

(வி-ரை.) அம்-சாரியை, அழகுமாம். பொதும்பர்-பகுதிப்பொ ருள் விகுதி.

சொல்லா வின்பமு முயிருறத் தந்து.

(24—வது வரி.)

(ப-ரை.) உயிர் உற - உயிர் பெறும்படி, சொல்லா இன்பமும் இப்படியிருக்குமென்று சொல்லப்படாதவின்பமும், தந்து-தந்து.

(வி-ரை.) உம்மை - எச்சவும்மை, தன்பமும் தருதலின்.

நெடுமலே பெற்ற வொருமகள் காண.

(27—வது வரி.)

(ப-ரை.) நெடு மலே பெற்ற - ஒருகுத்திணுமழியாத விமயவரை யுயிர்த்த, ஒருமகள் காண - ஒப்பற்ற பார்வதிகாண.

(வி-ரை.) பெரியமலே யெனினுமாம்.

நான்முக விதியே தாளந் தாக்க.

(28—வது வரி.)

(ப-ரை.) நான்முகன் - நான்கு முகத்தினையுடைய பிரமன், விதியே - சொன்ன விதிப்படியே, தாளம் தாக்க - தாளமடிக்க.

(வி-ரை.) விதியே தாளந்தாக்கல் - காலமானக்கிரியை முத லிய பிறழாது கூத்துக்கேற்க வொக்கடித்தல். எகாரம் - தேற்றம்.

'அந்த' என்பதுமுதல் 'இடக்கைவிசிப்ப' என்பதுவரை.
(29—30 வரிகள்.)

(ப-ரை.) அந்த நான்முகனே - விதிப்படியேயொக்கடிக்கும் பிரமனே, உந்தி பூத்தோன்-திருவுந்தியிற் படைத்தவன், பாசத்துகயிற்றினல், விசித்து - பிணித்து, மிறை இடக்கை இசைப்ப - இடக்கையினல் இடக்கையென்னும் முதற்கருவியின் ஒருமுகத்திற் பலகிரியை வீளைப்ப.

(வி-ரை.) விசித்துமென்னு மும்மை சிறப்பும்மை. மிறை - ஆகுபெயர். இசைத்தல்-ஒருமுகத்திற்பலகிரியை வீளுத்தல். கட்டி. வளையாகின்ற கயிற்றினையுடைய விடக்கை யெனினுமாம். மிறை - வளவு; "விண்ணிடமன்னர்கொள்ள மிறைக்கொளிதிருத்தினனே" என்றுற்போல.

'மூன்றுபுரத்தோன்றில்' என்பதுமுதல் 'இரட்ட' என்பதுவரை.
(31—34 வரிகள்.)

(ப-ரை.) மூன்று புரத்து ஒன்றில் - மூன்றுபுரத் தொருபுரத்தின்கண், அரசுடை வாணன் - அரசுசெய்யும் வாணன், எழுகடல் கிளர்ந்த-சத்தசாகரத்தினின்றும் பெருகிய, திரள் கலி அடங்க-ஆரவாரத்தின்கூட்ட மடங்கும்படி, முகம வேறு இசைக்கும்-ஐந்து முகமும் வெவ்வேறேசையாக விசைக்கும், குடமுழவு - குடமுழவாகிய முதற்கருவியினை, மேரு வினைத்த தோள் ஆயிரதொடு - மகமேருகம்புவிட்டாற்போன்ற ஆயிரகைகளாலும், இரட்ட - கொட்ட.

(வி-ரை.) கீக்கப்பொருட்கண்வரு மின்னுருபு தொக்கது. ஒடு-உருபுமயக்கம். முற்றும்மை தொக்கது.

'ஏழுமுனிவர்கள்' என்பதுமுதல் 'உருக' என்பதுவரை.
(38—39 வரிகள்.)

(ப-ரை.) ஏழு முனிவர்கள்-சத்தவிருடிகளும், தாழும் மாதவர் - வணங்கு மன்பினையுடைய பதஞ்சலிமுனிவர், அன்பினர் - அன்பினையுடையராய், உள்ளமோடு என்பு கரைத்து உருக - உள்ளமும் மெலும்பு மொன்றுய்க் கரைந்துருகும்படி.

(வி-ரை.) ஒடு - எண்ணேடு.

புட்காற் றும்புரு மணக்கர திருவர்.

(35—வது வரி.)

(ப-ரை.) புள் கால் தும்புரு - புள்ளின்கால்போலுங் காலினை யுடைய தும்புருவும்,மணம் கந்திருவர் - மணத்தினையுடைய கந்திரு வரும்.

(வி-ரை.) புள் - ஆருபெயர். மணம் - களவிற்புணர்ந்து வரை ந்துகொள்ளுதலுங் கொள்ளாமையுமாகிய மணம்.

'நாசி' எனபது முதல் 'அசைவொடுமாற்றி' எல்பது வரை.

(45—49 வரிகள்.)

(ப-ரை.) நாசி - நாசிப்பாட்டும், காகுளி - காகுளிபபாட்டும், வெடிகுரல் - வெள்ளோசையும், பேசாக்கிழிசை - கிழிசையும், ஒரு புறமொட்டல் - ஒருபுறமொட்டலும், நெட்டெயிர்ப்பு எறிதல் - நெட் டெயிர்ப் பெறிந்தாற்போல, எறிந்து நின்றிரட்டல் - எறிந்துநின்றிரட் டலும், ஓசை இழைத்தல்-ஓசையினழைத்தலும், கழி போக்கு என்ன - கழிபோக்குமென்று, பேசுறு குற்றம் - சொல்லப்பட்ட குற்றமும், அசைவொடு மாற்றி - சோம்புவிட்டு.

(ப-ரை.) நாசிப்பாட்டு-ஒரு தானத்தேபாட வொரு தானத்தே நழுவுவது. தானம் - நெஞ்சு முதலியன. காகுளி - பேய் கத்தினாற் போற் பாடுவது. வெடிகுரல்-வெள்ளை வெடித்தகுரலாகிய நிறமில்லா வெள்ளோசை. நிறம் - "மாத்தினாக ளொன்பானுந் தானங்க ளெட் டானு, மேத்துங் கிரியையொன் றீரைந்தங்-கோத்தப், பதின்மூன் றெழுத்தாற் றெழிலேந்தும் பண்ணின், மதியோர் களேந்து நிற மாம்" என்பதனானறிக. கிழிசை-நிறமுந் தானமுங் குறையுங் கட்டை யிசை. ஒருபுறமோட்டல்-பாடு நிறத்தை யொதுக்கிப் பாடுதல். நெட் டெயிர்ப் பெறிந்தாற்போல் நிறுத்தி நிறுத்தி யெறிந்துநின் றிரட்டல் - ஒரு பண் ணேப்பாட வே றொரு பண்ணிலே விலங்கி நின்றிரட்டல். ஓசையினழைத்தல் - காகளி கத்தினுற்போற் பாடுவது. கழிபோக்கு-ஓரோசையான தன்மை நீங் கிப் பலவோசையாய் வருதல். அசைவு. மடி - "பெருங்குரல் கட்டை நழுவல் விலங்க, லொருக்கி யொதுக்கம் புரைத்தல் - விருப்பிலாக், காகுளி சாக சுரமென்னு மிவ்வெட்டி, மாகாவெண்ச் சொன்னு ராய்ந்து" என்றுரிசைமாபுடையார்.

நான்மறைப் பயனு மேழிசை.

(36—வது வரி.)

(பதவுரை.) நான்மறை பயனும் - நான்கு வேதத்தின் பயனுகிய, எழிசை - சத்தசுரத்தினையும்.

(விசேடவுரை.) முற்றும்மை - தொகாக்கது அமைத்தென்பதைப் பின்னே கூட்டுக.

'வண்டின்குரியும்' என்பதுமுதல் 'பன்னியவிதியோடு'

என்பதுவரை.

(50—54 வரிகள்.)

(பதவுரை.) வண்டின் தாரியும்-வண்டினது மூழக்கமும், கஞ்சதாரமும் - கஞ்சக்கருவியினுலியும், வலம்புரி சத்தமும் - வலம்புரிச சங்கின் முழக்கமும், சிரல்-மீனைறி பறவையும், வானிலையும்-வானம் பாடியும் (சிற்சிலியும்), கழையிலை வீழ்வதும் - மூங்கிலினிலை விழுகின்ற தொழிலும், அருவி ஓசையும் - அருவியினுசையும், முழவின் முழக்கமும் - குடமுழவின் முழக்கமும், வெருகின் புணர்ச்சியும் - வெருகின் புணர்ச்சியினெழுமோசையும்போலும், இன்னும் என்றிசைப்ப பன்னிய விதியொடு - உத்தமமானவிசையும் பாடும் பாட்டுந் தொழிற்கிரியையும் பொருந்திய விதியுடனே பின்னு முண்டென்று கருதும்படி.

(விசேடவுரை.) உத்தமமான இசை -குயிலோசையும் வண்டினதமும் வலம்புரிச் சத்தமுமென்க. "தூய்மொழி மென்குயிலுஞ் சேலே வரி வண்டினமும், வையமுதங்கும் வலம்புரியுங் - கையைத்துதித், தும்புருவு நாரதரும் பாடியமூ வோசையென, நற்புகீர் நால்வேதத் தூள்" என்றுரிசைமரபுடையார். பாடுந்தொழிற் கிரியையாவன:— "சிச்சிலி பூனை குடமுழக்கஞ் செம்மைத்தா, முரலிமிலை நீர்வீழ்க்கா டொண்பருந்து—பச்சைகிற, வேயினிலை வீழ்ச்சியுடன் வெங்கானிழற்பறவை, யேயுங்கா லோசை யியம்பு" என்பதனுணர்க. இசையுந் தொழிலும் பருத்தநிலை நுண்ணிலை நிரை நிரை. இன்னுமென்றதனுல் வானம்பாடி பருத்து முதலியன கொள்க. வெருகின்புணர்ச்சி-அன்மொழித்தொகை உறுமுதலைக் குறித்தலின், பன்னுதல் பன்னினவினைமாத்திரையாய் நின்றது இயலுதல்-பொருந்துதல் என்பு என உண்டென வொருசொல் வருவிக்க.

'அமைத்து' என்பதுமுதல் 'மூன்றின்' என்பதுவரை.

(36—55 வரிகள்.)

(ப-ரை.) மந்தரம் - படுத்தல், மத்திமை - சமன், தாரம் - எடுத்தலாகிய, இவை மூன்றின் அமைத்து - இவை மூன்றினிலடக்கி.

(வி-ரை.) "நீடவுங் குறுகவு நிவப்பவுந் தூக்கிப் பாடிய புலவர்" என்னூர் வெண்பாமாலையினும்.

சருக்கரைக் குன்றிற் றேன்மழை ரான்றென.

(37—வது வரி.)

(ப-ரை.) சருக்கரை குன்றில் - சருக்கரைமலையில், தேன் மழை நான்றென - தேன்மழை வீழ்ந்தாற்போல்.

'துள்ளல்' என்பதுமுதல் 'கானம்' என்பதுவரை.

(56—57 வரிகள்.)

(ப-ரை.) துள்ளல் - துள்ளப்படுதலும், தூங்கல் - தூங்கப்படுதலும், தெள்ளிதின் மெலித்தல் - தெள்ளிதாக மெலிக்கப்படுதலும், கூடிய கானம் - பொருந்திய விசைப்பாட்டை.

'வீரனுன்கமைத்த' என்பதுமுதல் 'காட்டாது' என்பதுவரை.

(40—44 வரிகள்.)

(ப-ரை.) வீரல் நான்கு அணி அமைத்த - நான்கு விரலணியாக வமைக்கப்பட்ட, குரல் வீங்காது - மிடறு வீங்காது; நான்மறை துள்ளும் - நான்கு வேதமும் தொனிக்கும், வாய் பிளவாது - வாய் பிளவாது; காட்டி உள் உணர்த்தும் - உள்ளக்கருத்தினை வெளியிற் காட்டி யறிவிக்கும், நோக்கம் ஆடாது - கண்ணிமையாடாது; பிதிர் கனல் - சிதறிய தழல்போலும், மணி சூழ் - மணிசூழப்பட்ட, முடி நடுங்காது - முடியினையணிந்த தலையசையாது; வயிறு குழி வாங்கி - வயிறெக்கி. அழுமுகம் காட்டாது - அழுதாற்போலு முகங்காட்டாமல்.

(வி-ரை.) இனைத்தெனவறிந்த வும்மை தொக்கது. உள்ளும் நோக்கமும் ஆகுபெயர். மணிசூழ்முடி-அன்மொழித்தொகை. அழுமுகம் - ஒற்றுமை நயம்பற்றி யுவமவினை பொருண்மேனின்றது. "கண்ணிமையா கண்டந் தடியா கொடிதசையா, பண்ணளவும் வாய் தோன்ரு பற்றெரியா-வெண்ணிலவை, கள்ளார் நறுந்தெரியற் கை

தவனே கந்திருவ, ருள்ளாளப் பாட லுரை" உள்ளாளப் பாட்டுப் பாடுங்கா லிடை பிங்கலையை யியக்கமறுத்தச சழிமூனையி லியக்க மாக்கிப் பாடுவர்; "உள்ளாளம் விந்து வுடனுதச மொலியுருட்டித், தள்ளாத நாக்கெடுத்த ருன்படுத்தன்-மெள்ளக், கருதி நவிதல் கம்பித் தல் சூடில, மொருபதின்மே லொன்றென் றுரை" என்ரு நிசைமர புடையார். இப்பதினைஞரு வகையினலு முள்ளாளப் பாட்டுப்பாடுவர்.

அன்பொடு பரவ.

(57—வது வரி.)

(ப-ரை.) அன்பொடு பரவ - அன்புடனே பாட.

(வி-ரை.) சருக்கரைக்குன் நிற் றேன்மழைபெய்து நிசிப்பித்தாற் போலாகிக்கம் பிக்கப்பாடலென்ப தபபடிவுவமை.

'பூதந்துள்ள' என்பதுமுதல் 'நீங்கினர்' என்பதுவரை.

(58—64 வரிகள.)

(ப-ரை.) பூசந்துள்ள - பூதகணங்கடுள்ள, பேய்கை மறிப்ப பேய்கொண்டாட, இன்பம் நிறைந்து - இன்பமிருந்து, எங்குள உயிரும்-எவ்விடத்து முளவாகிய வுயிர்களும், ஆட-ஆட, நாடக வித்தி யோடு - நாடகத் தக்தள்ள வித்தியோடு கூடி, ஆடிய பெருமான்-திரு நடனஞ்செய்த பெருமான், மதுரைமாநகர்-மதுரைமாநகரில், செழி யன் ஆதி-பாண்டியனுதி, கதிர்முடி கவித்த இறைவன் - கடை முத லிய கரந்தொளியினையுடைய முடிபுனைந்தவிறைவன், மாமணி கால்-மாணிக்கத்தாலே, தலைக்கொள்ளா கையினர்போல - பொருந் தாத கையினர் பிரிந்தாற்போல, நீங்கினர் - கரியோர் பிறரில்லே யென்று இப்போது பிரிந்தனர்.

(வி-ரை.) உம்மை மாறுக. முடிகவித்தவிறைவன்-அரசனெடுத்த தேவகுலமபோன்றது. "நாளுறத் திங்களு நல்லணி நீக்கினர்" என் ருர் சிந்தாமணியினும். தலைக்கொள்ளாக் கையினர் - பொருந்தாத தனுல் வந்த சிறுமையினையுடையார். கை - கைவாய்க்கால் கைக் குடைபோல நின்றது. கை-சிறுமை. தலைக்கொள்ளாமை - பொருந் தாமை.

இன்னுங் காணக் காட்சிகொண் டிருந்த.

(22—வது வரி.)

(ப-ரை.) இன்னும் காண காட்சி கொண்டிருந்த - (யான் அவற்றைக்) காணுப்படிக்கு அவை யிப்போதும் காண விருந்தன (ஆதலால்).

(வி-ரை.) உம்மை - சிறப்பும்மை. இருநத-பலவின்பால் வினை முற்று.

'போக்கும்' என்பதுமுதல் 'வணங்குதுமே' என்பதுவரை. (61—66 வரிகள.)

(ப-ரை.) போக்கும் - (அவர்) பிரிவும், ஈங்குழி - இவ்விடத்து, வருவதும் - கருதி வருவதும், கண்டு - விசாரித்து, அது - அதனை, கூறுதியாயின் - சொல்லுதியாயின், நின்கால் - நின்பாதத்தை, எண்ணக - நின் கருத்துக் கேற்கும்படி, போற்றி - பாதுகாத்து, வணங்குதும் - வணங்காநின்றேம்.

(வி-ரை.) உள்ளி கருதி வணங்குது மென்பது காலமயக்கு. மதித்தாமையே! நின்பாற் கேட்கும் வார்த்தை யொன்றுளது. அஃ தேதெனின், பொய்க்குஞரைத்தார் நெஞ்சமுந் தாழை மலரும் பனை யும் அன்னக்கூட்டமுஞ் சான்றுக இளமாக்காவி லின்பமுறுதற்கு, கரியோர் பிறரில்லை யென்று பிரிந்தனர், இன்னுமவை காட்சி கொண் டிருந்தனவாதலால் அவர் பிரிவும் வரவும் விசாரித்து அத னைக் கூறுதியாயின் நின்பாதத்தை வணங்குதுமென வினைமுடிவு செய்க. (உஉ)

திருக்கோவையார் சுருக்கம் செய்யுள்.

வேறுபடுத்துக்கூறல்.

வேறுபடுத்துக்கூறலென்பது:—பிறைதொழாது தலை சாய்த்து நாணி நிலங்கிளையா நிற்பக்கண்டு, பின்னும் இவள் வழியே யொழுகி இதனை யறிவோமென உட்கொண்டு, நீ போய்ச் சுனையாடி வாவென்ன, அவளும் அதற்கிசைந்து போய் அவளொடு தலைப்பெய்து வர, அக்குறி யறிந்து அவளை வரையணங்காகப் புனைந்து வேறுபடுத் துக் கூறுகிற்றல். அதற்குச் செய்யுள்:—

அக்கின்ற வாமணி சேர்கண்ட னம்பலவன் மலயத்
திக்குன்ற வாணர் கொழுஞ்சிச் செழுந்தண் புனமுடையா
ளக்குன்ற வாறமர்ந் தாடச்சென் றுளங்க மவ்வவையே
யொக்கின்ற வாதலை கேயிணங் காகு மூனக்கவளே.

வேய்வளைத் தோளியை வேறுபாடு கண்
டாய்வளைத் தோழி யணங்கென் றது.

(பத-ம்ரை) அக்கின் - அக்காகிய, தவாமணி - நல்லமணி, சேர் - பொருந்திய, கண்டன - மிடற்றையுடையவன, அபலவன - அம்பலவன், (அவனது) மலையத்து - மலயத்தினகணுள்ளாகிய, இ குணற வாணர் - இக்குன்றவாணருடைய, கொழுந்து - மகளாகிய, செழு ம - வளவிய, இ தண் புனம் உடையாள் - இத்தண் புனங காவலுடை யவள், அ குளறம ஆழு - அக்குளறத்தினகணுண்டாகியவாறறை, அமர்ந்து-மேவி, ஆட செண்முள் - ஆடபபோயினள் அவகம் - பின் னுமப்புக்கள், அவ்வவையே - அவளுமப்புக்களாகியவற்றையே, ஒக் கின்றவாழு - ஒக்கின்றபடி, அணையேக்(ன்ன) அனையேக், உனக்கு - நினக்கு, அவள் இணையரு ஆதம - அவளிணையகாகும, வ - மு.

(வி-ம.ர.) அதனாலவளோக்கண்டு போவாயாக வெனபதஞ்சி நினறது. இ ன-அல்வழிச்சாரியை. மலயத்திக்குன்றமென்னு இயைப் பாருமூளர். இணையரு - ஒப்பு. குன்றவாணர் - குறவர். கொழுந்து குழகதையெனப் பொருன்படுவதோர் மபுச்சொல்.

நேரிசையாசிரியப்பா.

கண்ட காட்சி சேணின் குறியோ
வெண்ணுழி நிலையா வுள்ளத்தின் மதியோ
சூர்ப்பகை யுலகிற் றோன்றினார்க் கழகு
விதிக்கு மடங்கா வென்பன விதியோ
வெண்ணுடைக் கணணு முபிரு மாகி
யுண்ணித ழின்ப முளவா வொருத்தி
மலைக்குஞ் சரதத்தின் கடைக்குழி யாகி
நெடிமலை விழிதத கண்ணே யாகி
யம்மலைத் திருதுதற் சுழியா தமைத்த
வெள்ளிகொள் சிதுர நல்லணி யாகித்
தூர நடந்த தாளெய்ப் பாறி
யமுதொடு கிடக்கு நிறைமதிப் பக்க
மொருபாற் கிடந்த தூணமதி யாகி
யருவி விசப் பறவைதுடி போகி
விண்டுநற வொழுகும் பாண்டி விழுலா
யிளமை நீங்காது காவல்கொ ளமுதம்
வரையர மாதா சூழுவுட னருந்த

வாக்கியிடப பதிசத வள்ளமு மாகி
யிடைவளி போகாது கெருங்குமுலைக கொடிசசியர்
சிறுமுகங் காணு மாடி யாகிச
சிறந்தன வொருசூன யிமமலை யாட
வளவாக் காதல கைமிக கணிகதன
ளவளே னீயா பென்கண் குறித்த
தெருமர றக்த வறிவுநிலை கிடகசச்
சிறிதுநின் குறுவெயர் பெறுமணங் காறி
யொருகண னிலைக்க மருவுதி யாயி
னிரங்லை பெயர வுன்னுமக் கணத்திற்
றாணடா விளகசி னீண்டவ ளுதவு
மவ்வுழி யுறவு மெய்பெறக கலாதின்
மிருருகட லிரண்டு திருப்பயர தாங்கு
வளைத்த நெடுங்கார்ப புனததிரு வீரு
மணிநிறை பூச ணணிபெற வுகைததுங்
கருங்காற் கவணிடைச் செம்மணி வைத்துப
பொருதே னிருலொடு குறிவிழ வெறிநதும
வெணமண னுடங்கிப் பொன்கொழித தீழியு
மருவி யேற்று முழைமலை கூடயும்
பெருஞ்சூன வீழித்த நீலங் கொய்துங்
கொடுமரம் பற்றி நெட்டிதண் பொலிந்து
தினைக்குர லறையுங் கிளிகணங் கடிதிர்
வெளளி யிரும்பு பொன்னென பெற்ற
மூன்றுபுரம் வேவத் திருநகை விளையாட்
டொருநாட் கண்ட பெருமா னிறைவன்
மாதுட னொன்றி யென்மனம் புகுந்து
பேணு வளளங் காணது நடந்து
கொலைகள வெண்ணும் பழுமரம் பிடுங்கிப்
பவச்சுவ ரிடித்து நெஞ்சமண் டபத்திப்
பாங்குடன் காணத் தோன்றியுண் ணின்று
பன்மலர்ச் சோலை விம்மிய பெருமல

சிமையோர் புரத்தை நிறைமனங் காட்டுங்
50 கூடலம் பதியகம் பீடுபெற விருந்தோ
னிருதாள் பெற்றவர் பெருந்திருப் போல
மருவிய புண்ணே யின்பமொடு விளைகலஞ்
சொல்லுட னமரா நீங்கு
வில்லுடன் பகைத்த செந்திரு நுதலே.

கண்டகாட்சி-செந்திருநுதலே. பதுதி-நாணுகாட்டம், துறை - வேறுபடித்துக்கூறல்.

வில்லுடன் பகைத்த செந்திரு நுதலே.

(54—வது வரி.)

(ப-ரை) வில்லுடன் பகைத்த-வில்லுடனே மாறுபட்ட, செம்-(காணுந்தோறும்) புதுமையாகிய, திரு நுதலே - அழகிய நுதலினே யுடையாய்.

(வி-ரை.) உடன் - "பொறி வரிவரா லினமிரியப் புக்குடன்" என்றற்போன்றது. நிலதத்தினேயுடைய வழகிய நுதலெனின், செம்மை-ஆகுபெயர். வில்லுடன் பகைத்த நுதலினேயுடைய செய்ய திருமகளே யொப்பா யெனினுமாம். நுதல் - நெற்றி. திருநுதல் - அன்மொழித்தொகை. செந்திரு - ஆகுபெயர்.

'என்னுடைக்கண்ணும்' என்பதுமுதல்

'ஒருத்தி' என்பதுவரை.

(5—6 வரிகள்.)

(ப-ரை.) என்னுடை கண்ணும்-என்னுடைய கண்ணும், உயிரும் ஆகி - உயிருமாகி, உள் நிகழ் இன்பம்-உள்ளத்தினிகழுமின்பத்தையும், உள்ளாள் ஒருத்தி - உடையாளொருத்தி.

(வி-ரை.) என்னுடைக்கண்-'என்னுடை நீர்மையும்" என்றற்போன்றது. என் கண்ணுமுயிருமாகி யின்பத்தையுமுடையா ளென்றுள் விரும்பும் பொருளெல்லாவற்றினுஞ் சிறந்தமையானும், தான் அவளென்னும் வேற்றுமை யின்மையானும். அது, "உயிரு நானுமடனு மென்றிவை, செயிர்தீர் சிறப்பி னுல்வர்க்கு மூரிய"என்பதனுனறிக.

அளவாக் காதல் கைமிக்கு.

(22—வது வரி.)

(பா-ரை.) அளவா - அளவுபடுத்தப்படாத, காதல் கைமிக்கு காமங்கையிகந்தவழி யுள்ளதிகழ்ந்து.

மலைக்குஞ் சரத்தின் கடக்குழி யாகி.

(7—வது வரி.)

(பா-ரை.) மலை குஞ்சரத்தின் - மலையாகிய யானைக்கு, கடக் குழியாகி - மதம்படுகுழியுமாகி.

(வி-ரை.) அத்தம் இன்னுஞ் சாரியை. கடம் - மதம்.

நெடுமலை விழித்த கண்ணே யாகி.

(8—வது வரி.)

(பா-ரை.) நெடுமலை - நெடிய மலையாகிய (புருடன்), விழித்த கண்ணேயாகி - விழிக்கப்பட்ட கண்ணுமாகி.

(வி-ரை.) மலை - மாட்டேறெலாது வந்தது. வரைவிழித்துப் பார்த்தாற்போன்ற கண்ணுமாகி யெனினுமாம். ஏகாரம்-ஈற்றசை.

'அம்மலை' என்பதுமுதல் 'நல்லணியாகி' என்பதுவரை.

(9—10 வரிகள்.)

(பா-ரை.) அம்மலை - அம்மலையாகிய, திருநுதற்கு - திருவினது நுதலின்கண், அழியாது அமைத்த - (ஒருகாலமும்) அழியாதிட்ட, வெள்ளை கொள் - வெண்மைகொண்ட, நல் அணி - நல்லணியாகிய, சிந்தூரம் ஆகி - சிந்தூரமுமாகி.

(வி-ரை.) நுதற்கு-உருபுமயக்கம்.

'தூரநடந்த' என்பதுமுதல் 'மதியாகி' என்பதுவரை.

(11—13 வரிகள்.)

(பா-ரை.) தூரநடந்த - தூரத்தினின்றும் வந்த, தாள் எய்ப்பு ஆறி - தாளிளைப்பாறுகின்று, அமுதொடு கிடக்கும் - அமுதத்தோடு

பொருந்திக் கிடக்கும், நிறை மதிப்பக்கம் - பக்க நிறைந்தமதியின், ஒருபால் தூணிகிடந்த-ஒருபாகத்திற் றூணையாகக் கிடந்த, மதியாகி-மதியுமாகி.

(வி-ரை.) பக்கம் நிறைந்தமதி-உவாமதி. எய்ப்பாறிக் கிடக்கு மென்பது "அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப் பகல்கான்று" என்றாற் போன்றது. தான் - கால். ஆறி - ஆற எனினுமாம்.

'அருவி' என்பதுமுதல் 'பாண்டிலிருலாய்' என்பதுவரை.

(14—15 வரிகள்.)

(ப-ரை.) பறவை - (பொருந்திய)வண்டுகள், குடிபோகி-விட்டு நீங்க, விண்டு - விண்டு, அருவி வீச - அருவிபோலச் சிந்தும்படி, நறவொழுக்கும் - தேனைச்சிந்தும், பாண்டில் இருல் ஆய் - வட்ட மாகிய தேன்கூடுமாகி.

(வி-ரை.) பறவை - வண்டு, "தாதுண்பறவை பேதுறலஞ்சி" என்றாற்போல. போகி-போக, செய்தெனைச்சத்திரிபு. விண்டென் பது செய்வதன் றொழிற்கு மேதுவாக்கின் செய்விப்பதன் றொழி ற்குமாம், "காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப், பூமாண்ட நீர்தேன் றொடைநீறி வருக்கை போழ்ந்து, தேமாங்கனி சிதறி வாழைப் பழங்கள் சிந்தும்" என்றாற்போல.

'இளமை' என்பதுமுதல் 'வள்ளமுமாகி' என்பதுவரை.

(16—18 வரிகள்).

(ப-ரை.) வயாயமாதர் - வயாயமகளிர், இளமை நீங்காது தம்மிளமைபோகாது, குழுவுடன் - கூட்டத்துடன், காவல்கொள் காக்கும், அமுதம் - அமுதத்தை, அருந்த - உண்ணும்படி, ஆக்கி உண்டாக்கி, இடம்பதித்த - அவ்விடத்துப் பதிப்ப, வள்ளமுமாகி கிண்ணமுமாகி.

(வி-ரை.) உண்ணும்படி யமுதத்தை வார்த்துப் பதித்த வள் ளம் எனினுமாம். வயாயமகளிர் - மலையில் வாழ்கின்ற தெய்வப் பெண்கள்.

'இடைவளிபோகாது' என்பதுமுதல்
'ஆடியாகி' என்பதுவரை.
(19—20 வரிகள்.)

(பதவுரை.) இடை வளி போகாது - இடையிற் காற்றும் புகாது, நெருங்கு முலை - நெருங்கிய முலையினையுடைய, கொடிச்சியர்-குறத்தியர்களை, சிறு முகம் காணும் - சிறியமுகத்தினழகைப் பார்க்கும், கூர் ஆடி - கண்ணாடியுமாகி.

(விசேஷார்த்தம்.) சிறப்புமை தொக்கது. முகம் : ஆகுபெயர். எண்ணுப்பெயர் தொக்கது.

'சிறந்த' என்பதுமுதல் 'அணைந்தனள்' என்பதுவரை.
(21—22 வரிகள்.)

(பதவுரை.) இம்மலை - இம்மலையிடத்தே, சிறந்த ஒருசுனை-சிறந்த ஒருசுனையில், ஆட அணைந்தனள் - நீராடச்சென்றனள்.

(விசேஷார்த்தம்.) தெய்வதனைச்சமயத்துக்குச் சிறந்ததெய்வமென்னும் பெயரெடுத்தாற்போல்வது உவமைக்குக் கூறியன உருவகத்திற்குமாறாயினமையால், அவை பல பொருளுருவகமாயிற்று.

'கண்டகாட்சி' என்பதுமுதல் 'வீதியோ' என்பதுவரை.
(1—4 வரிகள்.)

(பதவுரை.) சேலையின் - (கின்னைத்) தாதில், கண்ட காட்சிக்கு நிலையா - காணப்படும் பொருளாகக் கண்டவடையாளத்தினாலே, கூளை உள்ளுந்தூறி - என்னுள்ளத்திடத்தில், நிலையாமதியோ - நிலைபெறாத பத்தியினையுடைய குற்றப்பகை உலகில் தோன்றினார்க்கு - குபிலிதத்திற பிறந்தாராகிய, அழகு விதிக்கும் அடங்கா - விதிக்கு மடங்கவேபடாது, என்பன வீதியோ-என்று சொல்லப்படுவதாகிய வினையினாலே.

(விசேஷார்த்தம்.) "தேயோன்மேயமைவரையுலகமும்" என்றமையால், குறிஞ்சிநிலத்தை 'குற்பகையுலகு' என்றார். ஆறுருபு மூன்றாகும் விரிக்க, ஓகார மூன்றும் இன்னதென்று துணியாது கூறினமையின். வரையணங்காக வேறுபடுத்திக் கூறினமையால் 'விதிக்கு மடங்காது' என்றார். விதிவிதித்தலென வினைமேனின்ற வினைப்பெயரன்றி விதியென வினைமாத்திரை யுணர்த்திநின்று

விதிக்குமென வருபேற்று நின்றது. ஓகாரத்தை யெதிர்மறையாக்கி கூறினுமாம்.

'அவனோகீயாய்' என்பதுமுதல் 'கீ—க்க' என்பதுவரை.
(23—24 வரிகள்.)

(ப-ரை) ஆவளே கீயாய் - நீதானே யவளாக, என் கண் குறிந்த - என்கண் குறித்ததனால் வந்த, தெருமரல் - திகைமாற்றத்தை, நிலை தாங்க - நிலையாகத் தந்து, அறிவு கிடக்க - அறிவுகிடக்க.

(வி-ரை) ஆய் - ஆக. நீ யவளாக வென்றதற்கு நின்னே யவளாகவென்க. 'பாங்கனேயா னண்ண பண்பனைக் கண்டிப் பரிசுரைத்தால்' என்றாற்போலத் திரிக்கதன் றிரிபதுவாய் நின்றது. குறித்தறிதற்குக் கணமேனேயாதற் சிறப்பு நோக்கி, உயிர்குளைர்வுகண்டு மேலற்றாய்பட்டது, "குறிப்பிற் குறிப்புணரா வாயி னுறுப்பினு மென்ன னபயத்தவோகண்" என்றாற்போல.

'சிறிது' என்பதுமுதல் 'ஈங்கு' என்பதுவரை.
(25—26—53 வரிகள.)

(ப-ரை) குறுவெயர் பெறும் - குறுவெயர் பெறுதற்குக்காரணமாய், நின் - நினது, சிறிதணங்கு ஆகி - வருந்தஞ் சிறிது திர்வு, ஈங்கு - ஈங்கு, ஒரு கணன்-ஒருகணப்பொழுது, நிலைக்க-நிலைபெற, மருவுதியாயின் - பொருந்துவையாயின்.

(வி-ரை.) கணப்பொழுது -, "அர்க்க ரைசயத் தலரம் புயமாக, லெற்குவளே யாதலித் தேட்டிற்கு - நிற்குமதி, லரிருளே தெறி, த லோரிதழிற் செல்காலை, மாசில் கணமாய் வரும்" இதனுளறிக. நிலைக்கவென்ப தெதிர்கால முணர்த்துமெச்சம். உம்மை ஐயம், தூணியாமைக்கண் வருதலின், "மூளிதேரு தாளினுங் நீ மூனியினும்" என்றாற்போல. ஒரு கணப்பொழுது நிலைபெறச் சேர்வையாயினென்று பொருளுரைக்கின் உம்மை அசை. ஈங்குத் தன்மை யுணர்த்துதல். "செலவினும் வரவினுந் தாவினுங் கொடையினும்" என்னுஞ் சூத்திரத்திற் காண்க. "கண்ணுளார் நுங்காதலா மொழிக காம மீது கென" என்றாற்போலத் தன்மை யுணர்த்திற்று.

'இங்நிலே' என்பதுமுதல் 'அவளுதவும்' என்பதுவரை.
(27—28 வரிகள்).

(ப-ரை.) இங்நிலே - இங்ஙனநின்ற நிலையினின்று, பெயர-நீங்க, உன்னும் அக்கணத்தில்-கருதுமப்பொழுதில், ஈண்டு-இவ்விடத்து,

தூண்டாவிளக்கின் - தூண்டாவிளக்கினைப்போல, அவளுதவும் அவள்வருவள்.

(வி-ரை.) தூண்டாவிளக்கு - மணிவிளக்கு.

அவ்வுழி' என்பதுமுதல் 'உகைத்தும்' என்பதுவரை.
(29—32 வரிகள்.)

(ப-ரை.) அவ்வுழி - அவள் வந்தவிடத்து, இருவீரும்-இரண்டு பேரும், மெய் பெற-உண்மை பெறும்படி, உறவு கலக்து - உறவாடி, இன்று - இப்பொழுது, இரண்டு திரு-இரண்டுதிருவினை, ஒருகடல்-ஒரு பாற்கடலை, பயந்தாங்கு - பெற்றாற்போல, வளைத்த - வளைக்கப்பட்ட, நெடி கார்ப்புனத்து - நெடியதாகிய கரியபுனத்தில், அணி பெற - அழகுபெறும்படி, மணி நிறை - முத்தமணிகளழுத்திய, ஊசல் உகைத்தும் - ஊசலாடுதலானும்.

(வி-ரை.) பாற்கடலென் றுவமைகூறுதலான் மணியூசன் முத்த மணி யூசலாயிற்று.

'கருங்கால்' என்பதுமுதல் 'எறிந்தும்' என்பதுவரை.
(33—34 வரிகள்)

(ப-ரை.) பெருந்தேனொடு-மிகுந்த தேனுடனே, இறால்-தேன் கூடாகிய, குறி வீழ - இலக்கு விழும்படி, கருங்கால் - மயிரால்மைத்த காலினையுடைய, கவணிடை-கவணிடத்து, செம்மணி வைத்து - மாணிக்கத்தை வைத்து, எறிந்தும் - எறிந்ததனாலும்.

(வி-ரை.) ஓடு வுருபை மாறுக. இலக்காக விழும்படி தேனை யுடைய விருட்டின்கண் நெறிந்ததனால் மெனினுமாம். ஓடு: உருபு மயக்கம். இறந்தகாலங் காட்டுஞ் செய்தெனெச்சங் காரியப்பொருட்கண் வின்றது.

'வேண்டுகில்' என்பதுமுதல் 'அருவியேற்றும்' என்பதுவரை.
(35—36 வரிகள்.)

(ப-ரை.) வெள் தகில் - வெள்ளைத்தகில்போல, தூடங்கி - அசைந்து, பொன் கொழித்து - பொன்னைக்கொழித்து, இழியும் - வீழும், அருவி எற்றும் - அருவியிற் றோய்ந்ததனாலும்.

(வி-ரை.) இது தொழிலும் பண்பும்பற்றிய வுவமை, "விரவியும் வருமரபின்" என்ற விதியான்.

முழைமலை கூடியும்.

(36—வது வரி.)

(ப-ரை.) முழைமலை - முழையினையுடைய மலைக்கெதிர்; கூடியும் - கூடுதலானும்.

(வி-ரை.) இகரவீறு திரிந்துநின்றது.

பெருஞ்சுனை விழித்த நீலம் கொய்தும்.

(37—வது வரி.)

(ப-ரை.) பெரு சுனை-பெரிய சுனையினிடத்து, விழித்த-மலர்ந்த, நீலம் கொய்தும் - நீலமலரைக் கொய்ததனாலும்.

(வி-ரை) விழித்த நீலம் என உரிய பொருளன்றி யொப்புடைப் பொருண்மேல் வினைபுணர்த்தலமையால் இது சமாதியென்னு மலங்காரம். நீலம்: ஆகுபெயர்.

கொடுமரம் பற்றி நெட்டிதண் பொலிந்தும்.

(38—வது வரி.)

(ப-ரை.) கொடுமரம் பற்றி - பழுவினைப்பற்றி, நெடு இதண் - நெடிய பரணில், பொலிந்தும் - பொலிவு பெற்றதனாலும்.

(வி-ரை.) இடையிடையிற் கொடுத்த மரமாதலின் 'கொடுமரம் எனறார். இது பொன்னாற் செய்யப்பட்ட குடத்தினைப் பொன்னென்றாற் போலவதோராகுபெயர். 'கொடுமரப் போற்றி' என்று பரடமாயின், நெடிய மிருகங்களான்வரு மேதத்தைப் பாதுகாக்கவேண்டியென்க. இதில் இரண்டிருபும் பொருளு மொப்பவிரிக் திரண்டு மயங்கியவாறு காண்க. இதனை, "ஓம்படைக் கிளவிக் கையுமானும், தாம்பிரி விலவே தொகைவருங் காலே" என்பதனாலறிக.

தினைக்குர லறையுங் கிளிக்கணங் கடிந்தும்.

(39—வது வரி.)

(ப-ரை.) குரல்தினை - கதிரினையுடைய தினையிடத்தில், அறையும்-கூப்பிடும், கிளி கணம் - கிளிக்கூட்டத்தை, கடிந்தும் - ஓட்டுதலானும்.

(வி-ரை.) தினைக்குரல் பின்மொழி நிலையல்.

'வேள்ளி' என்பதுமுதல் 'இறைவன்' எனபதுவரை.

(40—42 வரிகள.)

(ப-ரை.) ஒருகான் - ஒருகாள், திருகை - அழகிய நகையால், வெள்ளி - வெள்ளியும், இரும்பு - இரும்பும், பொன் - பொன்னும், எனபெற்ற-என்று சொல்லும்படி பேர்பெற்ற, மூன்று புரம்-மூன்று டாழம, வேல-வேம்படி, விளையாட்டுக்கண்ட - விளையாட்டுகண்ட, பெருமான் இறைவன் - பெருமானுகியவிறைவன்.

(வி-ரை) எண்ணுற்மை சொக்கது. இனத்தென வறிந்த வும் ரை விகாரச்சாற் பிறக்கது. 'வெறுத்த' என்னும் பாடம்.

'மாதுடன்' எல்பதுமுதல் 'நடந்து' என்பதுவரை.

(43—44 வரிகள்.)

(ப-ரை.) பேணை - தன்னை விரும்பாத, உள்ளம்-உள்ளமானது, சானைது நடந்து - காணைது சென்று, என் மனம் - என்னுள்ளதிலில், மாதுடன் ஒன்றி - அங்கயற்கண்ணம்மையோடு பொருந்தி, புகுந்து - புருந்தொழுகி.

(வி-ரை.) மனம் சுட்டிப்பெயர். ஒன்றி - ஒன்ற.

தொலைகள வென்னும் பழுமரம் பிடிங்கி.

(45—வது வரி.)

(ப-ரை) கொலை - கொலையும், களவு என்னும் - களவுமாகிய, பழுமரம் பிடிங்கி - பழுமரங்களைத் தன்னி.

(வி - ரை.) புலாலுண்ணுங் கூடாவொழுக்கமும் வெகுளுத லும் இன்னுசெய்தலும் அவாவுமோவெனின், கொலையுங களவுமே கூறினாராயினும் "மொழியா ததனையு முட்டின்றி முடித்தல்" என்னு முத்திபற்றிக் கொள்க. "கூடிர்வேனில்" என்ற சூத்திரத்தில் "பெரும்பகை தாங்கும வேலினானும்" என்று கூறியொழிந்த வாயுதமுங் கொண்டார் "சுவையொளியு மூசை நாற்றமென் றைந்தின், வகை தெரிவான் கட்டே யுலகு" என்ற குறளில் உடம்படிபுணர்த்தல் கூறினாராதலான் உத்திவகை செய்யுட்குங கொள்ளக்கிடந்தன. எல்லா வுயிர்க்குந் தொன்முதொட்டு வருதலின். 'பழுமரம்' என்னும் பாடம்.

'பவச்சுவர்' எனபதுமுதல் 'உண்ணின்று' என்பதுவரை.
(46—47 வரிகள.)

(ப-ரை.) பவச்சுவர் - பிறவியாகிய சுவரினை, இடித்தி இடித்து, (கொல்லாமை முதலிய மாஙகளை நாட்டிப் பிறவாமையாகிய சுவரை வைத்து) (புதுக்கக்கட்டி - புதுதாகக்கட்டி, அன்பு கொடு வேய்ந்த - அருளாகிய (பொற்றகடு) கொண்டுவேய்ந்த), நெஞ்சமண்டபத்து - இருதய (தாமரையாகிய) மண்டபத்து, உள் நின்று - உண்ணின்று, பாஙகுடன் காண தோன்றி - யான் பக்கமெல்லாங்காண வெளிப்பட்டு.

(வி-ரை) மாஙகளென்பன ஆருபெயராதலின் அவற்றில் காலுத்திரம் போதிகை முதலியன அடஙகின. அருத்தாபத்தியாலும், கட்டிப்போதத்தாலும், பிறவாமையாகிய சுவரைவைத்தாக கொல்லாமை முதலிய மாஙகளாற் கட்டியென ரூபகம் வருவிக்கப்பட்டது. இது பலமனுசுலையன்று, மாஙகளைத் தனித்தனி கொள்ளக் கிடத்தலின். இது அவயவியை யுருவகஞ் செய்யாது அவயவஙகளை யுருவகஞ் செய்தமையான் அவயவருவகம், அன்பு மாட்டேறே லாது வந்தமையின வியனிலையுருவகமாகாது அவயவி மாட்டேறே லாது வந்தமையின் அன்பினுர்ந்தவரே யன்பென்றதும் நெஞ்சி லிருந்த தாமரையை நெஞ்சென்றதும் ஆருபெயர் சிவன்முத்தனு முன காணுதாழுதி சிவன்முத்தனபின் இதய தாமரையு ணின்று வெளிப்பட்டமை விளஙகிற்று

'பன்மலர்' என்பதுமுதல் 'பெருந்திருப்போல எனபதுவரை.
(48—51 வரிகள.)

(ப-ரை.) பன்மலர் சோலை - பலவாகிய மலர்ச்சோலையில், விம்மிய பெருமலர் - மலர்ந்த நறியமலர்கள், இமையோர் புரத்தை - தேவருலகினைக்கண், நிறை மணம் காட்டும் - நிறைந்த வாசத்தை யுண்டாக்குதற்கிடமாகிய, கூடலம் பதியகம் - கூடலாகிய பதியினிடம், வீடுபெற இருந்தோன் - சிவசந்நியாசவிருந்தவன், இருதாள் பெற்றவர் - இரண்டு பாதத்தையு மடைந்தவர், பெறும் திருப்போல - பெற்ற பெருஞ்செல்வம் இன்பமொடு நன்மையை விளைத்தாற்போல.

(வி-ரை.) பொன்மலர்ச் சோலையெனின் கற்பகத்தருவென்க. விம்முதல்! "சங்கம் விம்மு நிதிலம் கொஙகு விம்மு தோகை" என்றாற்போல நின்றது. பாத்தை : உருபுமயக்கம். இதுகிரன் சாபதீர்

தற் கர்ச்சித்த மலர். காட்டுங் கூடல் நிலப்பெயர் கொண்டது, 'நஞ் சமு தாகுங் கண்டன்'' என்றாற்போல, இந்திரனர்சசித்த மலர்க ளிமையோர் புரத்தை மண்ணிடத்திற் காட்டுத லெனினுமாம். பன் மலரொன்று பாடமாயினமையின் இமையோர் புரமணமாகக் காட்டுங் கூடலென்க. அத்தும் ஐயுஞ் சாரியை. 'பீடுபெற விருந்தோன்' என் றும் பாடம்.

'மருவியபண்ணை' என்பதுமுதல் 'அமராது' எனபதுவரை.
(52—53 வரிகள.)

(ப-ரை) மருவிய பண்ணை - மருவிய வீளையாட்டு, இன்ப மொடு - இன்பமோடு, வீளை - உண்டாகும், நலம் - நன்மையெல் லாம், சொல்லுடன் அமராது - சொல்லுதற்கமையாது.

(வி-ரை.) செய்தெனச்சவடுக்கு காரணகாரியப் பொருட் டாய் வீளைநல மென்பதனோடு முடிந்தது.

தூதலினையுடையாய் ! காட்சியினனே புத்தியினனே விதியி னனே நின்னை யென்றோழியாகக் கருதிய வறிவிடக்க, நங்கு மரு வுவையாயின் அவள்வருவள், வந்தாலிருவீரு முறவாடி, ஊசலாடன் முதலிய தொழில் வீளைத்தலான், மதுரையிலிருந்தவன் சரணடைந் தார் பெற்றசெல்வ மின்பமொடு நன்மை வீளைத்தாற்போல இன்ப மோடுண்டாகு நன்மையெல்லாஞ் சொல்லுதற் கமையாதென வினை முடிவுசெய்க. (உரு)

திருக்கோவையார் களச-ம் செய்புள்.

காமமிக்ககழிபடர்கிளவி.

காமமிக்க கழிபடர்கிளவியென்பது-தலைமகனைக் காணலுற்று வருந்தாநின்ற தலைமகள், தனது வேட்கை மிகவாற் கேளாதன வற்றைக் கேட்பனவாக விளித்து, நீங்கள் என்னை எதற்றழிகின்ரு யென்று ஒருகால் வினவுகின்றிலீர், இதுவோ நுங்காதன்மையென அவற்றொடு புலகது கூறுகின்றல். அதற்குச் செய்யுள்:—

மாதுற்ற மேனி வரையுற்ற வில்லி தில்லைகர்சூழ்
போதுற்ற பூம்பொழில் காள்கழி காளைழிற் புள்ளினங்கா
ளேதுற் றழிகியென் னீர்மன்னு மீர்ந்துறை வர்க்கிவளோ
நீதுற்ற தென்னுக்கென் னீரிது வோநன்மை செப்புமினே.

காம மிக்க தாழ்குழ லேழை
காம மிக்க கழிபடர் கிளவி.

(ப-ரை.) மாது உற்ற மேனி - மாது பொருந்திய மேனியை யுடைய, வரை உற்ற வில்லி-வரையாகிய மிக்கவில்லை யுடையவனது, தில்லை நகர் சூழ்-தில்லைநகரைச் சூழ்ந்த, போது உற்ற-போதுபொரு ந்திய, பூம்பொழில்கள் - மலரினையுடைய பொழில்கள், கழிகள்-(அப்பொழிலைச் சூழ்ந்த) கழிகள், எழில் புள்ளினங்கள் - (அக்கழி களிற் பயிலும்) எழிலையுடைய புள்ளினங்கள், எது உற்று அழிதி என்னீர் - (என்னை நீங்கள்) யாதனையும் றழிகின்றீயென்று ஒரு காற் கூறுகின்றிலீர், ஈர்ந்துறைவர்க்கு - குளிர்ந்த துறைவர்க்கு, இவள் - இவள், தீது உற்றது என்னக்கு என்னீர் - தீதுற்ற தெற் றிற்கென்று கூறுகின்றிலீர், இதுவோ - இதுவோ, நன்மை - (நம் மாட்டு) நும் காதன்மை, செப்பு மின் - செப்புமின், எ-று.

(வி-ரை.) மாதுற்ற மேனியென்பது ஆகுபெயராய் மேனியை யுடையான்மேனின்றதெனினுமமையும். வரையுற்றவில்லி யென்ப தற்கு வரைத்தன்மையைப் பொருந்திய வில்லையுடையா னெனினு மமையும். வரைத்தன்மையைப் பொருந்துதல் - வரையாயிருத்தல். போது-போரும்பு, "காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலரு மிந்நோய்" என்றார் பெருநாவலரும். மன்னுமென்பதனாலும் இவளோவென்னு மோகாரமும் அசைநிலை. மன்னுந தீதுற்றதெனக் கூட்டி மிகுதிக்கண் வந்ததென்பாருமுளர். இதுவோ நன்மை என் பதற்குத் தில்லையைச் சூழ்ந்தவிடத்துள்ளீராகலின் உமக்குண்டாகிய சிறப்புடைமை யிதுவோவெனினுமமையும். அழுதியென்பதனாலும் பாடம். எழையது கிளவியென வியையும்.

நேரிசையாசிரியப்பா.

வானவர்க் கிறைவ னிலங்கிடை மகாண்டு
திருவுட னிறைவிழி யாபிரத் திமளு
மிமையாது வீழித்த தோற்றம் போலக்
களுசக் கொள்ளீ யிடையற மலர்ந்து
5 முணஞ்சூழ் கிடந்த நீள்கருங் கழியே
கருவ்கழி கொடுக்கும் வெளளிற வருந்தக்
கைபார்த் திருக்கு மடப்பெடைக் குருகே
பெடைக்குரு கணங்கின் வீடித்தவெண் சிறையொடு
காவலடை கிடக்கும் கைதையம் பொழிலே

வெம்மைபொடு கூடியுந் தண்மை பொருந்தியு
மூலகரிரு நிரக்குஞ் செஞ்சுடர் வெண்சுடர்
காலங் தோடா முறைமுறை தோற்ற
மலரிலை குயிற்றிய மண்டப மாகிப்
பொறைமரண் டியிர்க்குந் தாயா மண்மகள்
கலையா துதிக்கும் வைதிக லாகி
வேனிற் கிழவன் பேரணி மதிழ
மூழுகதா தழுங்கு மாமுர சாகி
நெடியோன் துயிலா தறிவொடு துயிலப்
பாயற் கமைந்த பளிங்கறை யாகிச
சலபதி யாய்ந்து சேமநிலை வைத்த
மூத்தமணி கிடக்குஞ் செறியிரு ளரக்காய்ப்
புலவடற் பரதவர் தகுடி யோம்ப
நாளுமை விளக்குந் பெருவய லாகிய
கலமெனு நெடுந்தேர் தொலையா தோட
வளப்பறப் பரந்த விதிய தாகிச்
சுறவ வேங்கு நெடும்படை செய்ய
மூழுக்கமொடு வீரர்த்த வமர்களை மாகி
மகரத் தெய்வ நாணிறைத் தூறைய
மணிவிளக்கு நிறைத்த வாலய மாகி
நீர்நெய் வார்த்துச் சகர ரமைந்த
தீவளர் வட்டக் குண்ட மாகி
யெண்டிசைத் பகுவா யினமணிப் பாத்தட்
டண்டினின் றெரியுந் தகவிப தாகிப
பஞ்சவ னிறைந்த வன்படன் வேள்வி
மாறிக் குனித்த நீலமரி பெருமாற்
கமுத வோனகங் கதுமென வுரவு
மடிநதீ மாரு மடைப்பளி யாகி
யின்னும் பலவாய் மன்னுங் கடலே
துங்க னின்பம் பெருந்துணை யென்பார்
நண்ணந் துறைவற் கின்றிவ னொருதகி
நெருப் படுறு மெழுகி னுள்ளம வாடியு

மருவி தூங்கக் கண்ணீர் கொண்டு
மரவின் வாயிற் பலவு நீலுத்து
நிலையாச் சூளி னிலையா நெஞ்சு
கொண்டன னென்னை வென்முக நாடி.
யுற்ற வாய்மை சற்றுங் கருகிலீ
ரன்றெனி னும்மி லொன்றுபட் டொருகா
லிவனோர் நயரம் பெறுவ தென் னென்று
வினவா திருந்தது கேண்மை
மனனு னுடிற் சொல்லினுங் கொடி தே.

வானவர்க்கிறைவன் - சொல்லினுங்கொடிதே. பருதி - இரவுக் குறி, தூவை - காமமிகக சழிபடர்கிளவி.

'வானவர்' என்பதுமுதல் 'கழியே' என்பதுவரை.

(1—5 வரிகள.)

(ப-ரை) வானவர்க்கு இறைவன் - இந்திரன், நிலமகளைக் கொண்டு - மண்ணிற்கிடந்து, திரு உடல் - அழகியவுடலில், நிறை விழி ஆயிரத்திரளும் - நிறைந்த இரளாகிய ஆயிரமகண்ணும், இவை யாது விழித்த தோற்றம்போல - குவியாது விழித்த தோற்றம் போல, கருங்கொள்ளை - தாமரைத்தினள், இடையற மலர்ந்து - மூங்கையின்றி மலர்ந்து, மணம் சூழ் கிடந்த - மணஞ்சூழ்தல் பெற்ற, நீள் கருங்கழியே - நீண்ட கரியகழியே.

(வி-ரை.) இது எதிர்நிரனிறையுவமை. இனைத்தெனவறிந்த வம்மை மாதுக. மலர்ந்தென்னுஞ் செய்தெனெசசம் செயப்படு பொ ருள்கோ ணிலைதிரிந்து ''காழிருறைபட'' என்றாற்போல, இவை பொடு மூதற்கொற்றுமை யுண்மையாற் சினைவினை முதலெ மி மியைத்தெனினு மாம்.

'கருங்கழி' என்பதுமுதல் 'குருகே' என்பதுவரை.

(6—7 வரிகள்.)

(ப-ரை.) கருங்கழி கொடிக்கும் - கரியகழிசொடிக்கும், வெள இற - வெள்ளியவிருமீனை, அருந்த - துகர, கைபார்த்து இருக்கும் - (அதன்) சிறுமைபார்த்திருக்கும், மடப்பெடை குருகே - மடப்பத் தினையுடைய பெடையாகிய குருகே.

(வி-ரை.) கை - இடமுமாம். கழியிலுற்பத்தியாதலால் அது கொடித்தலாயிற்று. கருங்கழியாகிய வள்ளியோன் திரையாகிய கையினு லருந்தக் கொடுக்கும் வெள்ளிறவாகிய பொருளினைப் பெறப் பார்த்திருக்கு மிரவலனுகிய குருகே எனக் குறிப்புருவக மாக்கினுமமையும். "இடுக்கண்காலை கொன்றிட வீழுமடித் தூன்று, நல்லாளில்லாத குடி" என்றுற்போல. இரு - இறவாயிற்று, "குறியுத னிறுதிச் சினைகெட" என்றதனுல்.

'பெடைக்குருகு' என்பதுமுதல் 'பொழிலே' என்பதுவரை.
(8—9 வரிகள்.)

(பதவுரை.) பெடை குருகு - பெடையாகிய குருகு, அணங்கின்-மெய்வருத்தத்தின், விடித்த - ஈன்ற, வெள் சினையொடு - வெள்ளிய முட்டையொடு, காவல் - காவலாக, அடை கிடக்கும் - இரை பெறுதலைவிடைத்தற் கிடமாகிய, கைதையம் பொழிலே-தாழைச் சோலையே.

(வி-ரை.) ஒடு - ஒருவினையொடு, அது மெய்வருத்தப்பட்டுப் பெற்றமையா னுயர்வின்வழித்தாயிற்று. 'குருகடைகிடக்குஞ்சோலை' இடத்துகிழ் பொருளின்றெழி லிடத்தேறி நின்றது, "ஒருகுழையொருவன்" என்னுங் கலியில் "மிஞிறார்க்குங் காஞ்சி" என்றுற் போல. சினைக்குக் காவலாகக் கிடக்குமென வுருபுமயக்கமுமாம். அம் : அசை.

'வெம்மை' என்பதுமுதல் 'மண்டபமாகி' என்பதுவரை.
(10—13 வரிகள்.)

(பதவுரை.) வெம்மையொடு கூடியும் - வெப்பத்துடனே பொருந்தியும், தண்மைபொருந்தியும் - குளிர்ச்சியுடனேபொருந்தியும், உலக இருள் துரக்கும் - உலகத்தின்கண் ணுண்டாகியவிருளைக் கெடுக்கும், செஞ்சுடர் - ஆதித்தனும், வெண்சுடர் - சந்திரனும், காலங் கோடா - பகலிரவென்னுங் காலத்தில் கோடாது, முறை முறை தோற்ற - முறைமுறையாக வுதிக்கும்படி, மணி நிரை குயிற்றிய - மணிகளை நிரையாகக் குயிற்றினாற் போன்ற, மண்டபம் ஆகி - மண்டபமாகியும்.

(வி-ரை.) ஒடுவைப் பின்னுங் [illegible] வார்க்குஞ் செய்யாவிடல்" என்றுற்போலக் கொட[illegible] அமர்க்களம் - கீறகபரம். கோடாவென்னும் வினையெச்சம் தோற்றலை[illegible]
தது.

'போறை' என்பதுமுதல் 'பைந்துகிலாகி' என்பதுவரை.
(14—15 வரிகள்.)

(ப-ரை.) பொறை - (இருவகைத் தோற்றத்தின்) பொறுதி, மாண்டி - மாட்சிமைப்பட்டு, உயிர்க்கும் - பெறும், தாய் ஆம்-தாயாகிய, மண் மகள்-பூதேவி, களையாது-(ஒருபோதும்) நீங்காது, உடுக்கும் - உடுக்கும், பைந்துகில் ஆகி-பசியதுகிலாகியும்.

(வி-ரை.) பொறை: தொழிற்பெயர்; பகுதி: பொறு. விகுதி ஐ இருவகைத் தோற்றம் என்றது இயங்கியற்பொருள் நிலையியற் பொருள் என்பவற்றை. உயிர்த்தல்-பெறுதல்.

'வேனிற்கிழவன்' என்பதுமுதல் 'முரசாகி' என்பதுவரை.
(16—17 வரிகள்.)

(ப-ரை.) வேனிற்கிழவன் - மன்மதன், பேரணி - (படைக்கு வகுத்த) போணி, மகிழ - மகிழும்படி, முழக்காது - (ஒருவராலும்) முழக்கப்படாது, தழங்கும் - முழங்கும், மா முரசு ஆகி - பெரிய முரசாகியும்.

(வி-ரை.) வேனில் - வசந்தருது. கிழவன் - உரியவன். முரசு - முரசம்.

'நெடியோன்' என்பதுமுதல் 'பள்ளியறையாகி' என்பதுவரை.
(18—19 வரிகள்).

(ப-ரை.) நெடியோன் - திருமால், துயிலாது-(மயக்கத்தோடு) துயிலாது, அறிவோடு துயில - யோகநித்திரைபண்ண, பாயற்கு அமைந்த - (சேடனுகிய) பாயற்குப் பொருந்திய, பள்ளிஅறையாகி-திருப்பள்ளியறையாகியும்.

(வி-ரை.) துயில ஆகியென வியையும்; துயிலுமப்பாயற்கென்ன், அகரம் பண்டறிசுட்டு; விட்டுணுபிராட்டி முதலியோர் துயிலாதிருக்கத் தான்துயிலும் பாயற்கென்க. இது "செய்யாமற் செய்த வுதவி" போன்றது. நெடியோன் என்றது திரிவிக்கிரமனை. பாயல்-சயநம். பள்ளியறை - படுக்கையிடம்.

'சலபதி' என்பதுமுதல் 'அரங்காய்' என்பதுவரை.
(20—முதல் வரிகள.)

(பதி-வில் நிலையாக, சலபதி - வருணன், ஆப்பது - ஆடையாக, வைத்த - வைத்தாற்போன்ற, முத்தமணி கிடக்

கும் - முத்துமணிகள் கிடத்தற்கிடமாகிய, இருள் செறி - இருள் செறிந்த, அரங்கு ஆய் - அரையாகியும்.

(வி - ரை.) உலமையொடு பொருட்கொற்றுமை யுண்மையானும் அவ்வினை பொருளொடு மியைந்தது. வருணன் புனற்காசனத்தின் அவன் சேமமிலேயாக வைக்கப்பட்ட முத்துமணிக ளெனினுமாம். புனல் - நீர். செறிதல் - நெருங்குதல், மிகுதலுமாம்.

'புலவு' என்பதுமுதல் 'வயலாகி' என்பதுவரை.

(22—23 வரிகள்)

(ப-ரை.) புலவு - புலாலுற்றத்தையுடைத்தாய, உடல் - உடலினையுடைய, பாதவர் - நெய்தனிலமாக்களாகிய உழவர், தம் குடி ஓம்ப-தங்குடியைப் பாதுகாக்குமபடி, காலும் வினைக்கும்-(மீன் முதலிய பயிர்களை) நாடோறும் விளையப்பண்ணும்,பெருவயல்ஆகி-பெரிய வயலாகியும்.

(வி-ரை.) புலவு: ஆகுபெயர்.

'கலமெனும்' என்பதுமுதல் 'வீதியதாகி' என்பதுவரை.

(24—25 வரிகள.)

(ப-ரை.) கலம் எனும் - மரக்கலமாகிய, நெடு தேர் - பெரிய தேர், தொலையாது ஓட-இடைவிடாமலோட, அளப்பு அற - ஒருவராலு மளக்கப்படாதபடி, பரந்த - பரந்த, வீதியதாகி - தெருவீதியாகியும்.

(வி-ரை.) ஓடப்பரந்த வெனவியையும். பரத்தல்-விரிதல். வீதியதாகி யென்பதில அது பகுதிப்பொருள் விகுதி.

'சுறவவேந்து' என்பதுமுதல் 'அமர்க்களமாகி' என்பதுவரை

(26—27 வரிகள்.)

(ப-ரை.) சுறவவேந்து - சுறவமாகிய அரசன், நெடும்படை செய்ய-மிகுந்த போர்செய்யும்படி, முழக்கமொடு-ஆரவாரத்துடனே, வளைத்த - (பூமியை) வளைத்த, அமர்க்களம் ஆகி-போர்க்களமாகியும்.

(வி-ரை.) ஒடு - உடனிகழ்ச்சி. வளைத்த அமர்க்களம் - கற்கப் படமாசிரியன் போன்றது.

'மகரத்தெய்வம்' என்பதுமுதல் 'ஆலயமாகி' என்பதுவரை.
(28—29 வரிகள்).

(ப-ரை.) மகரத்தெய்வம் - மகரமாகிய தெய்வம், நான்கிறைந்து உரைய-நெடுங்காலம் பொருந்தும்படி, மணி விளக்கு நிறைந்த-மணியாகிய விளக்கு நிறைதற்கிடமாகிய, ஆலயம்ஆகி - சோயிலாகியும்.

(வி-ரை.) மகரம் - மகரமீன். மணிவிளக்கு - ரத்நதீபம்.

'நீர்நெய்வார்த்து' என்பதுமுதல் 'குண்டமாகி' என்பதுவரை.
(30—31 வரிகள்.)

(ப-ரை.) நீர் நெய் வார்த்து-நீராகிய நெய்யை வார்த்து, சகரர் அமைத்த - சகரரால்மைக்கப்பட்ட, தீ வளர்-(வடவா முகாக்கினியாகிய (நெருப்பு வளர்தற்கிடமாகிய, வட்டக்குண்டம்ஆகி - ஓமகுண்டமாகியும்.

(வி-ரை.) சகரர் தோண்ட வுண்டாதலின் அதனை வார்த்ததாகக் கூறினர். அமைக்கப்பட்ட குண்டமெனவியையும். சகரர் சகராஜகுமாரர்.

'எண்டிகழ்' என்பதுமுதல் 'தகளியதாகி' என்பதுவரை.
(32—33 வரிகள்.)

(ப-ரை.) எண் திகழ் - ஆயிரமென்னுமெண்ணால் விளங்காநின்ற, பகு வாய் - பெரிய வாயினையும், இனமணி - இனமணிச் சூட்டினையுமுடைய, பாத்தள்-பாத்தளாகிய, திண்டில் நின்றுளரியும்-தண்டின்மேற் சுரியனுகியபேம் நின்றெரிதற்கிடமாகிய, தகளியுது ஆகி-தகளியாகியும்.

(வி-ரை.) விளங்குதல் - கலைகளான் மேம்படுதல். "இலங்கு நூல் கற்றோர் டேனையவர்" என்றுற்போல, மணியையுடைய சூட்டினை மணியென்று ராகுபெயரான். மணியை யுமிழும் பாத்தனென வுரும் பொருளுந் தொக்கதெனினுமாம், படைக்கைபோல. அது வென்பது பகுதிப்பொருள் விகுதி. மணி : ஆகுபெயர். ஆதித்தவனை யிது தீபமென மாட்டேறேலாது வந்தது.

'பஞ்சவன்' என்பதுமுதல்'மடைப்பள்ளியாகி' என்பதுவரை.
(34—37 வரிகள்.)

(ப-ரை.) நிறைந்த அன்புடன் - அன்பெல்லா நிறைதற்கிடமாகிய, பஞ்சவன் - பாண்டியன், வேண்ட - விரும்ப, மாறி குனித்த -

மாறியாடிய, நீறுஅணி பெருமாற்கு-நீறணிந்த பெருமானுக்கு, அமுத போனகம்-அமுதமாகிய போனகத்தை, கதுமென உதவும்-விரையக்கொடுக்கும், அடிநீ மாறு - (வடவையாகிய) அடிநீ மாறுத. மடைப்பள்ளி ஆகி - திருமடைப்பள்ளியாகியும்.

(வி-ரை.) அமுதமாகிய போனகம் - நஞ்சு. போனகம்-உணவு மாறி = கால்மாறி. நீறு - திருவெண்ணீறு.

இன்னும் பலவாய் மன்னுங் கடலே.

(38—வது வரி.)

(ப-ரை.) இன்னும் - (இங்ஙனஞ் சொன்னவையன்றிப்) பின்னும், பலவாய் - பலவிதமாய், மன்னும் கடலே-நிலைபெறுங்கடலே.

(வி-ரை.) இன்னும் - பின்னும், "அருவரை மார்பிற் சென்ற தறிந்தில ரனேக ரின்னும்" என்றாற்போல. கடற்குப்பலபொருளையு முருவகம் பண்ணினமையாற் பலபொருளுருவகம். மன்னுதல் நிலைபெறுதல்.

'தண்ணந்துறைவற்கு' என்பதுமுதல் 'வாடியும்'

என்பதுவரை.

(40—41—45 வரிகள்.)

(ப-ரை.) இன்று - இப்பொழுது, (என் முகம் நாடி-என்முகம் பார்த்து), இவள் ஒருத்தி - இவளொருத்தி, தண்ணம் துறைவற்கு-குளிர்ச்சியினையுடைத்தாய துறையினையுடையாற்கு, நெருப்பு உறுமெழுகின் - நெருப்பிலுற்ற மெழுகுபோல, உள்ளம் வாடியும்-உள்ளமுருகியும்.

(வி-ரை.) தண்ணந்துறைவன்: விகாரம். நான்கனுருபு காதற்கண் வந்தது. இன்: ஐந்தனுருபு, ஒப்புப்பொருட்டு. உள்ளம்; ஆகுபெயர். அம்: சாரியை.

அருவி தூங்கக் கண்ணீர் கொண்டும்,

(42—வது வரி.)

(ப-ரை.) அருவி தூங்க-அருவியொழுகினாற்போல வொழுகும் படி, கண்ணீர் கொண்டும் - கண்ணீர்கொண்டும்.

(வி-ரை.) தொழிலுக்குத் தொழிலுவமம் கொள்க.

அரவின்வா யரியிற் பலவு நினைந்து.
(43—வது வரி.)

(ப-ரை.) அரவின்வாய் - பாம்பின்வாயிலகப்பட்ட, அரியின் - தேரை (பலவுநினைந்தாற்) போல, பலவும் நினைக்கும்-எல்லாம் நினைக்கும்.

(வி-ரை.) தேரை - தவளை. அரியின் என்பதில் இன் ஐந்தாவது; ஒப்புப்பொருட்டு.

'நிலேயா' என்பதுமுதல் 'தருகிலீர்' என்பதுவரை.
(44—46 வரிகள்.)

(ப-ரை.) நிலேயா - நிலையாத, சூளின் - (வருவேனென்ற) சூள்போல, நிலேயா - (அன்புர் நிறுத்த) நிலைநில்லாத, நெஞ்சும் - நெஞ்சும், கொண்டனள் என்னன-என்பெற்றனளென்று, உற்ற வாய்மை-உற்றவாய்மை, சற்றும் தருகிலீர் - சிறிதாயினுந் தருகின்றிலீர்.

(வி-ரை.) என்முகம் நாடி யென்பதனை முன்னே கூட்டுக. நெஞ்சுமென்னு மும்மை யெச்சவும்மை. சற்றுமென்னும் வினையெச்சந் தருகின்றிலீரென்னு மெதிர்மறையிற் றருதலோடு முடிக்கத்து. "அறியச் சிறிதுமா வியன்றன்ன மென்னெஞ்சு நின்வாய் நிறவாவிடின்" என்றாற்போல. சூள் - ஆணை. சூளின் என்பதில் இன் ஐந்தாவது னெப்புப்பொருட்டு. நெஞ்சு: ஆகுபெயர். வாய்மை-உண்மை.

'அன்றெனின்' என்பதுமுதல் 'கோடிதே' என்பதுவரை.
(47—50 வரிகள்.)

(ப-ரை.) அன்று எனின் - (இது) அல்லாவிடின், நும்மில் ஒன்றுபட்டு ஒருகால் - நும்மிலொன்றுபட்டொருதாம், இவளோ - இவளோ, தயரம் பெறுவது என்னென்று - துன்பப்படுவதென்னென்று, வினவாது இருக்கும் - கேளாதிருக்கும், கேண்மை - உறவாந் தன்மையை, மனஞல் நாடில்-மனத்தினினைக்கினும், சொல்லினும்-நாவாற்சொல்லினும், கொடிதே - கொடிதே (என்றறிகின்றிலீராதலால்).

(வி-ரை.) என்றறிகின்றிலீரென வொருசொல் வருவிக்க. ஓ - இரக்கக்குறிப்பு, அசையுமாம். ஏகாரம்: ஈற்றசை. நாடி என்பது அவ்வத் தொழிலுக்கேற்ப நின்றது. நாடினுமென்னு மெண்ணும்மை தொக்கது. "தன்மை சுட்டலு முரித்து" என்றாற்போல. இன்: நீக்கம். உம்மை - சிறப்பும்மை.

நுங்க ளின்பம் பெருந்துணை யெ ாபால.
(39—வது வரி.)

(ப-ரை.) நுங்கள் இன்பம் - நுங்கள் காதன்மை, என்பால் என்மாட்டு, பெருந் துணை - பெருந்துணையாம்.

(வி-ரை.) பெருந்துணை யென்ப திகழ்ச்சிக்குறிப்பு, அதனுற் புலந்தமை தோனறிற்று. இன்பமென்று காரணத்தைக் காரியமாக வுபசரித்தார். நும்மா லெனைகுவரு மின்பமெனினுமாம்.

கழியே! குருகே! கைதையே! கடலே! இவளொருத்தி துறை வற் குருகியும் கொண்டும் நினைந்தும் நிலைபெரு நெஞ்சுமென் கொண்டனளென் றுற்றவாய்மை கிமிதாயினுந் தருகின்றிலீர், அது வன்றி, நீங்களொன் றபட்டுக் கேளாதிருக்கு முறவாந்தன்மையை நினைக்கினுஞ் சொல்லினுங கொடிதென் றறிகின்றிலீராதலால் நுங் கள் காதன்மை பெருந்துணையாமென வினைமுடிவு செய்க.

கழியே! ஆயிரங்கண்ணுடைய விந்திரன்போலுந் தோற்றத் தினையுடைய நீ யறியாத தொன்றில்லை, எண்ணளவு மறிகின்றிலை யெனவும்; குருகே! நீ யிரவலஞையின் நீ யிரத்தலறிவை, என்னிர வறிகின்றிலை யெனவும்; கைதையே! நீ குருகுகட் காதாரமாவை, எனக்காதர மாகின்றிலை யெனவும்; கடலே! நீ யிருசுடர்க்கு மிடங் கொடுத்தனை எனக் கிடக்கொடுத்திலை; பூமகட்காடையா யபி மானங் காத்தனை, எனக்குக் காத்திலை; மன்மதன் பேரணி பெண்க ளாதலால் பெண்கட்கெல்லா நீ துன்பஞ் செய்திலை, எனக்குத் தீன் பஞ் செய்தனை; பள்ளியறையாய் விட்டுணுவின் துயிலறித்தனை, யான்றுயிலாத தறிந்திலை, வருணன்வைத்த முத்துமணிகட் கறை யாய்நீக்கா்து காத்தனை, எனக்கு நீங்காது காத்திலை, பரதவர்க்கு வயலாயுணவாக்கினை, எனக் குணவாக்கிலை; தேரோட வீதியான நீ அவர் செல்ல வீடங்கொடுத்தனை, எனக்கு வீதியா யிடங்கொடுத் திலை; அமர்க்களமான நீ பொரப்படுவை, தலைவரோடு பொரப்பட் டிலை; ஆலயமான நீ சேவிக்கப்படுவை, என்னுற் சேவிக்கப்பட்டிலை; ஓமகுண்டமான நீ அடித்தார்க்குப் பலன் கொடுப்பை, யான் பலன் பெற்றிலன்; விளக்கெரியுந் தகளியான நீ யெங்கும் விளங்கப்பண் ணுவை, யான் விளங்கப்பண்ணிலை; மடைப்பள்ளியான நீ பெண்க ளிட்ட வழக்காகுவை, எனக் கப்படியாயிலை யெனவுஞ் சொல்லெச்ச மும் குறிப்பெச்சமும் கொள்ளக் கிடந்தன. ஆயிரங்கண்ணும் விழித் தத் தெய்வேந்திரன் கிடந்தாற்போல மலர் விரிந்து கிடந்தனை,

எல்லாமுனக்குத் தெரியுமென அக்கூற்றுச் செய்யுஞ் செய்யுட் சிதைவின்மையிற் கூற்றெச்சமாம். என்னளவு முனக்கொன்றுந தெரிந்திலில்லே யென்பது குறிப்பிற கிடந்தமையிற் குறிப்பெச்சம். "செக்கள்படக்கொன்றவுணர்த்தேய்த்த" என்னும் பாட்டி லிரண்டும் காண்க. "சொல்லிய நன்மை யில்லாச் சுணங்கனிவ் வுடம்பு நீங்கி" என்னும் பாட்டில், "கூரிரும் பிரதங் குத்த வெல்லையில் செம்பொனூரு, மெரிநிறம் பெற்ற தன்றே" இதுவுமத்தன்மைத்தென்றது சொல்லெச்ச மென்னூர். "படைமலர் நெடுங்கண்ணுள்" என்ற பாட்டில் "அல்குன் மிடைமணி மேகலே நோற்றயானே நோலாதேன்" என்பது குறிப்பெச்சமென்னூர். "சொல்லொடுங் குறிப்பொடு முடிவு கொளியற்கை, புல்லிய கிளவி பெசுற மாகும்" என்பது விதி. இது "நோயு மின்பமும்" என்றுஞ் சூத்திரத்தில் அழுகைபற்றிச செய்யாமாபிற் றெழிற்படுத்தடக்கியது. (உசா)

திருக்கோவையார் கரு-ம் செய்யுள்.

இடமணித்துக்கூறி வற்புறுத்தல்.

இடமணித்துக்கூறி வற்புறுத்தலேர்பது—அருட்குணமுரைத்து வற்புறுத்சவும் ஆற்றுமை நீங்காத தலேமகட்கு, நும்மூரிடத்திற்கு எம்மூரிடம் இத்தன்மைத்தெனத் தன்னூரினணிமை கூறி வற்புறுத்தாகிற்றல். அதற்குச் செய்யுள்:—

> வருங்குன்ற மொன்றுரித் தோன்றில்லே யம்பல வன்மலயத்
> திருங்குன்ற வாண ரிளங்கொடி யேயிட செய்தலெம்மூர்ப்
> பருங்குன்ற மாளிகை நுண்கள பத்தொளி பாயநும்மூர்க்
> கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுக மேய்க்குங் கனங்குழையே.
>
> மடவரலே வற்புறுத்தி
> இடமணிதென் றவனியம்பியது.

(ப-ரை.) வரும் குன்றம் ஒன்று - இயங்குமலே யொன்றை, உரித்தோன் - உரித்தவன், தில்லேயம்பலவன் - தில்லேயம்பலத்தையுடையான், மலயத்து - (அவனது பொதியின்) மலேயிடத்து, இருங்குன்றவாணர் - பெரியகுன்றத்தின்கண் வாழ்வாருடைய, இளங்கொடியே - மகளே, இடர் எய்தல் - வருத்தத்தைவிடு, கனங்குழை - கனங்குழாய், எம்மூர் - எம்மூரிடத்து, பருங்குன்றம் - பெரியகுன்றம்போலும், மாளிகை - மாளிகைகளின், நுண்களபத்து - நுண்ணிதாகிய சாந்தின், ஒளி பாய - ஒளிபரந்து, நும் ஊர் கருங்குன்றம் - நும்மூர்க்கணுண்டாகிய கரிய குன்றம், வெண்ணிறம் - வெள்ளே

(வி-ரை.) கடவுள் தெய்வமென்னும் பொருட்டா யஃறிணை முடிபுகொள்ளு முயர்திணையாய் நின்றது. நாவலந்தீவில் வட கூற்றில் கிரவுஞ்சமென்னும் வரையைக் குருகுப்பெயர்க்குன்றமென்றார். ஈண்டுக் குருகென்றது அன்றிலை, அதற்கு வடமொழிப்பெயராதலின், "நாவலந் தண்பொழிலாயிடைக் குருகொடு பெயர்பெற்ற மால்வரை யுடைத்து" என்றார் பரிபாடலினும். "குருகு பெயரிய குன்றெறிந்தானும்" என்றார் வெண்பாமாலையினும். குருகுபெயர் வரகுகதிர்போனின்றது. "ஒற்றிடை யிகா மொழியு மாருள, வெத்திறத்தில்லே வல்லெழுத்து மிகலே" என்பது விதி.

'மயில்' என்பதுமுதல் 'கூண்டு' என்பதுவரை.
(3—4 வரிகள்.)

(ப-ரை.) மயில் - மயிலினையும், கொடி-கொடியினையுமுடைய, முன்றில் - முற்றத்தில், பெருங்கிளை - மிகுந்த கிளைகள், கூண்டு - திரண்டு.

'வேட்சிமலர்' என்பதுமுதல் 'வைத்து' என்பதுவரை.
(4—6 வரிகள்.)

(ப-ரை.) நாற்றிசை - நாற்றிசையினும், தேக்கிலே விரித்து - தேக்கிலையை விரித்து,வெட்சிமலர் (அளாய)-வெட்சிப்பூவோடு (கலந்த),செந்தினை - சிவந்த தினையரிசியை, பரப்பி - பரப்பி, இறல் நற அளாய - இருட்டித்தேனோடு கலந்த, வெள்ளிடி - வெள்ளிய தினை மாவை, வைத்து - வைத்து.

(வி-ரை.) நாற்றிசையினு மென்னு மினைத்தென வறிந்தவும் மை தோக்கது; அதனோடு மயங்கற்கண் வீந்த வொடுவென்னுரு பிரண்டிடத்துந் தொக்கது. அளாய வென்பதனே மலரோடுங் கூட்டுக.

'மனவணி' என்பதுமுதல் 'கூற' என்பதுவரை.
(7—8 வரிகள்.)

(ப-ரை.) மனவு அணி-சங்குமணியணியும், முதியோள்-மூதுபெண்டிர், வரையணங்கயர்ந்து - வரைதெய்வமுண்டாகச் செய்து, மூன்று காலமும் - மூன்றுகாலத்து நிகழ்வனவும், தோன்றக்கூற - வெளிப்படக்கூற.

(வி-ரை.) வரை : ஆகுபெயர். முதியோள் - கட்டிலிச்சி. அணங்கு - தெய்வம்.

வேலன் சுழன்று குறுமறி யறுப்ப.

(9—வது வரி.)

(ப-ரை.) வேலன் - வெறியாட்டாளன், சுழன்று - சுற்றி, குறு மறி - குறியவாட்டுமறியினை, அறுக்க - அறுக்க.

(வி-ரை.) முருகன்றனக் கடையாளமாகக்கொண்டு திரிதலின் 'வேலன்'என்றார். "வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்"என்றார் புறத்திணையினும்.

'கருவிநுணிகோள்' என்பதுமுதல் 'குடித்து' என்பதுவரை.

(10—11 வரிகள்.)

(ப-ரை.) கருவி தளிகொள் - படைக்கலத்தி னுணிபோல தனியைக்கொண்ட, நெறி இலை - நெறித்தலிலையினையுடைய, ஈந்தின் - ஈந்திலில், முற்றிய - வீளைந்த, பெருந்தேறவு-மிகுந்த நறவெல் லாம், எண்ணுடன் குடித்து - கருத்தாகவருந்தி.

(வி ரை.) நறவு - தேன். ஈந்து - ஈச்சமரம்.

'நேட்டிலே' என்பதுமுதல் 'மலேநாடர்' என்பதுவரை.

(12—16 வரிகள்.)

(ப-ரை.) நெடி இலை - நெடிய இலையினையுடைய, அரம்பை - வாழையினது, குழாங்காய் மானும் - குறிய காயைப்போலும், முளியந் தறிந்த - முளியாலொப்பிட்ட, கணைகொள் வாய்-நிரட்சிகொண்ட வாயினையுடைய, நிரிகீலொப்புடைத்தாய - நிரிசைபோன்ற, வட்ட வரய் - வட்டவாயினையுடைய, தொண்டகம் - குறிஞ்சிப்பறையை, கோல்-கடிப்பால், தலேபனிப்ப-அதனிடத்தடித்தலால், வான் விடு-வானளவுஞ் செல்லும், பெருங்குரல் - மிகுந்தவோசை, வீயாது - கெடாது, துவைக்கும் - முழங்குதற்கு, கடன் - காரணமாகிய (தெய்வத்திற்குச் செய்யுஞ் சிறப்பினையுடைய), மலேநாடர் - மலேநாடர்.

(வி-ரை.) அம் : சாரியை. தறிந்த - தறிந்த, விகாரம்; பனிப்ப வென்பது காரணகாரியப்பொருட்கண் வந்த இறந்தகாலம். துவைக் குங்கடன்"நிலம்பூத்தமரம" போன்றது.கடவுட்குக் கிளேகள் கூண்டு பரப்பி வைத்துகூற அழுக்க வருந்தி அடித்தலான் முழங்குவ கடன் மலேநாடரென்க.

வருந்தியீன் றெடுத்த செந்திரு மடமகள்.

(17—வது வரி.)

(ப-ரை.) வருந்தி ஈன்றெடுத்த - தவம்பண்ணிப் பெற்றெடுக்கப்பட்ட, செந்திரு - செந்திருவினைப்போலும், மடமகள் - மடப்பத்தினையுடைய மடமகளே.

(வி-ரை.) சுடல்கடைந்து வருந்திப் பெற்றெடுத்த திருவெனினுமமையும். மடமகள் - அண்மைவிளி. செந்திரு - இலக்குமி. மடப்பம் - இளமை.

ஒருவுக வுள்ளத்துப் பெருகிய நடுக்கம்.

(18—வது வரி.)

(ப-ரை.) உள்ளத்து-உள்ளத்தின்கண், பெருகிய நடுக்கம் - மிகுந்த துன்பத்தை, ஒருவுக - விட்டு நீங்குக.

கொடிபுரை நுசுப்பிற் பெருமூலை யோளே.

(36—வது வரி.)

(ப-ரை.) கொடிபுரை-கொடிபோலும், நுசுப்பின்-இடையினையும், பெருமூலையோளே - பெரிய மூலையினையுமுடையாய்.

'எம்மூர்' என்பதுமுதல் 'இருப்பும்' என்பதுவரை.

(19—20—35 வரிகள்.)

(ப-ரை.) எம்மூர்-எம்முடைய ஊர்க்கும், நும்மூர் குன்றமும் - நும்முடையூர்க் குன்றத்திற்கும், (எல்லே யெவ்வளவெனில்), பெருந்தவர் குழுவும்-அரிய தவத்தினையுடையார் கூட்டத்திற்கும், அருங்கதியிருப்பும் - வீட்டிருப்பிற்கும், (எல்லே) எவ்வளவு - (எல்லே) எவ்வளவோ, அதுவாம் - அவ்வளவெல்லையாம், (அதுவன்றி).

(வி-ரை.) அதுவென்பது எல்லையைச் சுட்டிற்று.

பொதியமுங் களிப்ப விரிதரு தென்றலும்.

(21—வது வரி.)

(ப-ரை.) பொதியமும் - பொதியமலைக்கும், களிப்ப-எல்லாருமகிழும்படி, விரிதரு - பரவாகின்ற, தென்றலும் - தென்றற்கும், (எல்லே எவ்வளவு - எல்லே யெவ்வளவோ, அதுவாம் - அவ்வளவெல்லையாம், (அதுவன்றி).

கனைகடல் குடித்த முனிவனும் தமிழும்.
(22—வது வரி.)

(ப-ரை.) கனை கடல்-முழங்காநின்ற கடலினை, குடித்த-முகர்ந்த, முனிவனும் - அகத்தியற்கும், தமிழும் - தமிழிற்கும், (எல்லை எவ்வளவு - எல்லை யெவ்வளவோ, அதுவாம் - அவ்வளவெல்லையாம்), (அதுவன்றி).

மேருவு மூவர்க் கோதிய புரமும்.
(23—வது வரி.)

(ப-ரை.) மேருவும் - மேருவிற்கும், மூவர்க்கு-பீஷ்மா முதலிய மூவர்க்கும், ஓதிய - சொன்ன, புரமும் - கோயிற்கும், (எல்லை எவ்வளவு - எல்லை யெவ்வளவோ, அதுவாம் - அவ்வளவெல்லையாம்), (அதுவன்றி).

உலகமீன் றளித்த வுமையுமா வறனும்,
(24—வது வரி.)

(ப-ரை.) உலகம்-பதினாலுலகத்தையும், ஈன்று அளித்த-படைத்துக்காத்த, உமையும் - உமைக்கும், மா அறனும் - பெரிய அறத்திற்கும், (எல்லை எவ்வளவு-எல்லை யெவ்வளவோ, அதுவாம் - அவ்வளவெல்லையாம்), (அதுவன்றி).

வி-ரை.) மாவறம் - முப்பத்திரண்டறமாம்.

தேவர்க் கரசனுங் காவற் றருவும்.
(25—வது வரி.)

(ப-ரை.) தேவர்க்கு அரசனும் - தேவேந்திரனுக்கும், காவல் (அவன்) காவலையுடைய, தருவும் - கற்பகத்தருவிற்கும், (எல்லை எவ்வளவு - எல்லை யெவ்வளவோ, அதுவாம்-அவ்வளவெல்லையாம்), (அதுவன்றி).

வழுவா வீதியு மெழுதா மறையும்.
(26—வது வரி.)

(ப-ரை.) வழுவா வீதியும் - (படைப்பு முறையில்) தப்பாத பிரமாவுக்கும், எழுதா மறையும்-எழுதப்படாத வேதத்திற்கும், (எல்லை எவ்வளவு - எல்லை யெவ்வளவோ, அதுவாம்-அவ்வள வெல்லையாம்), (அதுவன்றி).

செங்கோல் வேந்தும் தங்கிய குடியும்.

(27—வது வரி.)

(பதவுரை.) செங்கோல் வேந்தும்-செவ்விய கோல்போலு முறை மையினையுடைய வேந்தனுக்கும், தங்கிய - அவன் செங்கோற்கீழ் தங்கிய, குடியும் - குடிக்கும், (எல்லே எவ்வளவு - எல்லே யெவ்வள வோ, அதுவாம் - அவ்வளவெல்லையாம்), (அதுவன்றி).

(விசேடவுரை). செவ்விய கோல்போலு முறைமையைச் 'செங்கோல்' என்றார் ஆகுபெயரான்.

தலைஞரு ழிமயமுங் கமஞ்சூன் மழையும்.

(28—வது வரி.)

(பதவுரை) தவம் சூழ் - தவத்தோர் சூழ்ந்த, இமயமும் - இமய மலைக்கும், கமம் சூல் - நிறைந்த சூலினையுடைய, மழையும் - மேகத் திற்கும், (எல்லே எவ்வளவு - எல்லே யெவ்வளவோ, அதுவாம்-அவ் வள வெல்லையாம்), (அதுவன்றி).

(விசேடவுரை.) இல்லென்பதனைச் சேர்ந்து கூட்டி யிங்ஙனை சொல் லிய வன்றியெனப் பின்னுரைக்க.

கண்ணன்' என்பதுமுதல் 'அதுவாம்' எனபதுவரை.

(30—35 வரிகள்.)

(பதவுரை.) கண்ணன் கரமும் - விட்டுணுவின் கையும், வெண் ணெயுரீபோல - அதனிலிருந்த வெண்ணெயும்போல, பாகடை - பசியவிலே, புதைத்த - மறைத்த, கெட்டாற்று - தெடியவொழுங் கினையுடைய, வரி-வாய்கண், பூத்தலர் விரித்த-பூத்திதழ்விரித்த, சேப்படி - செம்மை யடித்த, வள் வாய் - வள்ளம்போன்ற வாயினை யுடைய, தாமரையுள்-தாமரையுள், வரோ உறங்கும் சங்கங்கிடத்துறங் கும், கூடல் - மதுரையில், நிறைதுறை - பூரணகலையாயுறையும், மூக்கண் - மூக்கண்ணினையும், பெருந்திறல் - பெருந்திறலினையு முடைய, அடிகள் - அடிகட்கும், அடியவர்க்கு - அடியவர்க்கும், எவ் வளவு எல்லே - எவ்வளவெல்லையோ, அதுவாம்-அவ்வளவெல்லையாம்.

(விசேடவுரை.) அடிகட்குமென வுருபு மும்மையுந் தொக்கது. அடி யார்க்குமென வும்மை விரிக்க.

ஈங்கிவை சொல்லிய வென்றி—சேணில்.
(29—19 வரிகள்.)

(ப-ரை.) ஈங்கிவை சொல்லிய வன்றி - இங்ஙனஞ்சொல்லப் பட்ட வினையன்றி, சேண் இல் - தூரமில்லே.

மானே! நடிக்கமொருவுக. பெருமுலையையுடையாய்! எம்மூர்க்கு நம்மூர்க்குன்றிற்கு மெல்லே யினையன்றித் தூரமில்லே யென வீனே முடிவு செயக. (உரு)

திருக்கோவையார் கூகை-ம் செய்யுள்.

நின்குறைநீயே சென்றுரையென்றல்

நீயே கூறென்று மறுத்தலென்பது—இவன் இவ்விடத்து நீலே மையை மறையாது எனக்குரைப்பானாயது என்கூட்கிடந்த பரிவினனன்றே, இத்துணைப் பரிவுடையான் எனக்கிது முடியாமை யில்லே யெனத் தலைவன் உட்கொண்டுபோய்ப் பிற்றைஞான்று செல்ல, தோழி! யான்குற்றேவன் மகளாகலிற் றுணிந்து சொல்லமாட்டுகின் றிலேன், இனி நீயே சென்று நின்குறையுள்ளது சொல்லெனத் தானுடம்படாது மறுத்தற் கூருகிற்றல். அதற்குச்செய்யுள்:—

அந்தியின் வாயெழி லம்பலத் தெம்பர னம்பொன் வெற்பிற்
பந்தியின வாய்ப்பல வின்சுளே பைந்தே னெறுங்குவன்
மந்தியின் வாய்க்கொடித் தோம்புஞ் சிலம்ப மனங்கனிய
மூந்தியின் வாய்மொழி நீயே மொழிசென் றம்மொய்குழற்கே.

அஞ்சுதும் பெரும் பஞ்சின்மெல் லடினயக்
கூறுவ நீயே கூறு கென்றது.

(ப-ரை.) அந்தியின்வாய் - அந்தியின்கணுண்டாகிய, எழில் - (செவ்வானின்) எழிலேயுடைய, அம்பலத்து - அம்பலத்தின்கணுளனாகிய, எம் - எம்முடைய, பரன் - (எல்லாட்பொருட்கும்) அப்பாலாயவனது, அம் - அழகிய, பொன் வெற்பில் - மேரு வேயுடைய வெற்பிடத்து, பந்தியின்வாய் - பந்தியாகிய நிரையின்க , பைந்தேனெறுங்கும் - செவ்வித்தேனேறும், பலவின் சுளே - பலாச்சுளேயை, கடிவன் - கடிவன், மந்தியின்வாய் - மந்தியின்வாயில், கொடித்தி-(அருந்தக்) கொடித்தி, ஓம்பும் - பாதுகாக்கும், சிலம்ப - சிலம்பையுடையாய், மனம் கனிய - (அவன்) மனநெகிழ, மூந்தி - வினவுதி, இன் - இவ்வினிய, வாய்மொழி - வாய்மொழிகளே, அம்மொய்குழற்கு -

அம்மொய்த்த குழலேயுடையாட்கு, நீயே - நீயே, சென்று - சென்று; மொழி - சொல்லுவாயாக, எ - று.

(வி-ரை.) எல்லாப்பொருளேயுங் கடந்தாளுயினும் எமக்கணிய னென்னுங் கருத்தான் 'எம்பான்' என்றார். வெற்பிற் சிலம்ப வென வியையும், பத்திபலாநிரை யென்பாருமுளர். சிலம்பென்றது வெற்பி னெருபக்கத்துளதாகிய சிறுகுவட்டை. வாய்மொழி - மொழியென்னுந்துணேயாய் நின்றது. மனங்கனியு மென்பதனுலும், நின்வாய் மொழியென்பதனுலும் பாடம். மந்தி உயிர்வாழ்வதற்குக் காரணமாகியவற்றைக் கவென்தானே கொடுத்து மனமகிழ்வித்தாற்போல அவள் உயிர்வாழ்வதற்குக் காரணமாகிய நின்வார்த்தைகளே நீயே கூறி அவளே மனமகிழ்விப்பாயாகவென உள்ளுறையுவமங் கண்டு கொள்க. மெய்ப்பாடும் பயனும் அவை.

நேரிசையாசிரியப்பா.

வேற்றுப் பிடிபுணர்ந்து நீராப் புலவி
சுற்றமொடு தீர்க்க வுய்த்த காதலிற்
கருங்கைவெண் கோட்டுச் சிறுகட் பெருங்களிர்
முளத்துநின் றளிக்குந் திருத்தகு மருநூல்
பள்ளிக் கணக்கர் பாற்பட் டாங்குக்
குறிஞ்சிப் பெருந்தே னிருலொடு சிதைத்து
மென்னடைப் பிடிக்குக் கைப்பிடித் தூதவி
யடிக்கடி வணங்குஞ் சார லுடை
வந்தண நிருக்கை யகல்வோர் சூழ்ந்தென
நன்னயங் கிடந்த பொன்னகர் மூடிப்
புலிசெய் துடன்று நிலேநிலே தேய்க்குந்
தள்ளா மொய்ம்பி னுள்ளுடைந் தொருகால்
வேதியன் முதலா வமரரு மாசனும்
போதுதூ யிரப்பப் புணரா மயக்க
நாரண னடித்த வெழுவாய்த் தருக்கத்
தறிவுநிலே போகி யருச்சனே விடித்த
வெள்ளமூ ணாக்கர் கள்ளமதின் மூன்று
மடுக்குநிலே சுமந்த வலித்தடப் பொன்மலே
கடுமுரண் குடிக்கு நெடுவிழ் கூட்டி

யாயிரந் தீவா யரவுநாண் கொளுவி
மாதவ னங்கி வளிகுதை யெடுநீண
செஞ்சரம் பேருரு ளரு ளகன் மதியாகத்
தேர்வரை வைய மாகத் திருகுதிச்
சென்னிமலி யின்ற கன்னிலிற் பிடிப்ப
வொருகான் மூல்வைத் திருகால் வளைப்ப
வீளுதலவ்வல வட்டங் கிடைத்தது கண்டு
சிறுநகை கொண்ட வொருபெருந் தீயி
னேழுயர் வானம் பூழிபடக் குருக்கி
யருச்சுனீ விடாதங் கொருப்படு மூவரி
லிருவரைக் காவன் மருவுத லீந்து
மற்றொரு வற்கு வைத்தநட மறிந்து
குடமுழ விசைப்பப் பெறுமரு ணல்கி
யொருநா ளருச்சுனீ புரிநா டலர்க்கு
மரும்பெற வுளதாம் பெரும்பதங் காட்டி
யெரியிடை மாய்ந்த கனல்விழி யரக்கர்க்
குலவாப் பொன்னுல கடைதர வைத்த
சுந்தரக் கடவுள் கந்தரக் கறையோன்
மாமி யாடப் புணரி யழைத்த
காமரு கூடற் கிறைவன் கழலீனை
களிப்புடை யடியர்க்கு வெளிப்பபட் டென்ன
வொருநீ தானே மருவுதல் கிடைத்துக்
கள்ளமும் வெளியு முள்ளமுறை யணைத்தும்
விரித்துக் கூறிப் பொருத்தமுங் காண்டி
யீயா மாந்தர் பொருடேய்ப் தென்ன
நுண்ணிடை சுமந்தாற் றுது
கண்ணிய சுணங்கின் பெருமுலை யவட்கே.

வேற்றுப்பிடிபுணர்ந்து - பெருமுலையவட்கே.

—, துறை - நின்குறைநீயேசென்றுரையென்றல்.

வேற்றுப்பிடி' என்பதுமுதல் 'சாரஞட' என்பதுவரை.
(1—8 வரிகள.)

(ப-ரை.) கருங்கை - கரியகையினையும், வெள் கோட்டு-வெள்ளிய கோட்டினையும், சிறு கண்-சிறிய கண்ணினையுமுடைய, பெருங

களிறு - பெரியயானையானது, வேற்றுப்பிடி - தான் அயற்பிடியை, புணர்ந்து - புணர்ந்ததிலுலே, நீராப்புலவி - நீராதபுலவியை, சுற்ற மொழி நீர்க்க - தன்சுற்றமொழி நீர்க்கும்படி, உய்த்த காதலின் - தன்னிடத்தில் செலுத்திய காதலிலுலே, பள்ளிக்கணக்கர்பால் - பள்ளியோதுவிப்பாரிடத்து, உள்ளத்தகின்று - உள்ளத்தில் விடை விடாதகின்று, அளிக்கும் - கொடுத்தற்குக் காரணமாகிய, திருத் தகும் - சிறப்புத்தகும், அருநூல்-அரியநூல், பட்டாங்கு-(சிதைவு) பட்டாற்போல, குறிஞ்சி - குறிஞ்சிநிலத்துண்டாகிய, இருலொடு சிதைத்து - இருட்டையழித்து, மெல் கடை - மெத்தென்ற கடை யினையுடைய, பிடிக்கு - பிடிக்கு, பெருந்தேன் - மிகுந்ததேனை, கை பிடித்து - (அதன்) கையைப்பிடித்து, உதவி - கொடுத்து, அடிக் கடி வணங்கும் - அடிக்கடி வணங்குதற்கிடமாகிய, சரல்-மலைப்பக் கத்தினையுடைய, நாட - நாடனே.

(வி-ரை.) யானையானது பிடியின் வெறுப்புத்தீர்த்து அதற்குயிர் வாழ விருட்டைச் சிதைத்துத் தேனைக் கொடுத்து மனமெகிழும்படி யடிக்கடி வேண்டிக்கொண்டாற்போல, அவளுயிர் வாழும்படி மனத் தூயர் நீக்கி அவள் மனமெகிழும்படி கின்குறைகளை நீயேகூறிவேண் டிக்கொள்வாயென வள்ளுறை யுவமங்கொள்க. "கிழவோட் குவம மீரிடத் துரித்தே" என்னுஞ் சூத்திரத்திற் சிறுபான்மை குறிஞ்சி மூதலியவற்றிற்கு முவமப் பொலிவுங் கொள்க. 'என்றவின், குறி ஞ்சியிலுவமப் பொலிவு கொண்டார் பள்ளியோதுவிப்பாரிடத் தகிய நூல் சிதைவுபட்டாற்போல" என்ற வேனையுவமங் குறிஞ்சிப் பெருந் தேனிருலொடு சிதைக்குமென்ற வள்ளுறை யுவமத்தைத்தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக்கொடுத்துகின்றது. இது உடனுறை யுவமஞ் சுட்டுநகை சிறப்பென்க. "கெடலரு மரபி னுள்ளுறை யை நதே" என்ற சூத்திரத்திற்போன்ற வுள்ளுறை. புணர்ந்தவென்னு பாடமாயின் உண்ட வெச்சில்போலக் கொள்க. சுற்றமொழி என்ற ஒடி ஒருவினையொடி உபகாரப்பதிலின். இருலொடி என்ற ஒடி உருபுமயக்கம்.

'பேருருளருக்கன்' என்பதுமுதல் 'ஆகத்திருத்தி' என்பதுவரை. (22—23 வரிகள.)

(ப-ரை.) அருக்கன் மதி - ஆதித்தனும் சந்திரனும், பேருருள் ஆக - பெரிய வண்டியாக, வையவரை - பூமியெல்லே, தேராக திரு த்தி - தேராகப்பண்ணி.

'மாதவன்' என்பதுமுதல் 'செஞ்சரம்' என்பதுவரை.
(21—22 வரிகள்.)

(ப-ரை.) வரி குதை - வாயுகுதையாக. அங்கி - அக்கினி, எழு தூனி-தோன்று முனையாக, மாதவன்-விட்டுணு, செஞ்சரம் - சிவந்த வம்பாக.

(வி-ரை.) இது எதிர்நிரனிறை, இதனே மயக்கநிரனிறையுமா மென்பர்.

சென்னிமலி யீன்ற கன்னிவிற் பிடிப்ப.
(24—வது வரி.)

(ப-ரை.) சென்னி - உச்சியினையுடைய, மலை ஈன்ற-இமயமலை பெற்றதனால் வந்த, கன்னி - பார்வதி, வில் பிடிப்ப-வில்லைப் பிடிக்கும்படி.

(வி-ரை.) சிவனுக் கிடப்பாகங் கன்னியாதலில், 'கன்னிவிற் பிடிப்ப' என்றார்.

'அடுக்குநிலே' என்பதுமுதல் 'நாண்கொளுவி' என்பதுவரை.
(18—20 வரிகள.)

(ப-ரை.) அடுக்கு நிலை - அடுக்காகிய வுலகத்தை, சுமந்த - பரித்த, வலி-வலியையும், தடம்-பெருமையையுமுடைய, பொன் மலை - மகாமேருவை, கடி முரண் - கடிய பகையை, குடிக்கும் - கெடுக்கும், நெடி வில் கூட்டி-நெடிய வில்லாகத்திருத்தி, ஆயிரம் தீ வாய்-விடத் தையுடைத்தாய அயிரம் வாயினையுடைய, அரவு நாண் தொளுவி - பாம்பு நாணுகவேற்றி.

(வி-ரை.) "உண்டற்குரிய வல்லாப்பொருளை, யுண்டனபோலக் கூறலுமாமே" என்றமையாற் 'குடிக்கும்' என்றார். "நீருஞ்சு நச்சு நாகத்தி னுரஞ்சீற்றத்தன்" என்றற்போல.

'ஒருகால் முன்வைத்து' என்பதுமுதல் 'பெருந்தீயின்' என்பதுவரை.
(25—27 வரிகள்.)

(ப-ரை.) ஒருகால் முன்வைத்த-ஒருகாலே முன்னே வைத்து, இருகால் - இருகாலே, வளைப்ப - வளைக்கும்படி, வளைத்த-வளைக்கப் பட்ட, வில்வட்டம்-வில்வட்டம், கிடைத்தது கண்டு-பெற்ற தொழில்

களைக்கண்டு, சிறு நகை கொண்ட - புன்மூரல் செய்ததனால் வந்த, ஒரு பெருந்தீயின் - ஒப்பற்ற பெருநெருப்பில்.

(வி-ரை.) ஒருகான் முன்னவத்தினவே-ஒருகால் வளைத்தமை தோன்றிற்று; அதனால் ஆலீட நிலையும் விரத்தியாலீடமு மடங்கின. இரட்டிற மொழிதலால் ஒருகான முன்போல் வைத்தென்னவே யொருகால் வளைந்தமை தோன்றிற்று. அதனைப் பைசாசநிலை யடங்கிற்று. "ஒருபொரு ளிருசொற் பிரிவில வரையார்" என்றமையானமைக்க. "குழல்வளர் மூல்லையிற் கோவலர் தம்மொடு" என்றாற்போலவும், "பாடுதும் பாவை போற்பே" என்றாற்போலவும், இருகால் வளைப்பவெனவே மண்டிலநிலை யடங்கிற்று. "நிலையோர் நால்வகை நிலைபை சாச, மாலீட மண்டிலம் பிரத்தியா லீடம், ஒருகா னிலைகின் றிருகான் மூடக்கும், பரியா யமெனப் பைசாச நிலையே", "வலக்கான் மண்டலித் திடக்கான் மூந்தாறு, மதற்பெய ராலீட நிலைய தாகும், இருகான் மண்டலித் திடதன்மண் டிலநிலை வலக்கான்முந்தூற் றிடக்கான் மண்டலிப் பிற்பிரத்தி யாலிட மெனப்பெய ராகும்" இவற்றுனறிக. வில்லி னெருகாலை முன்னே யூன்றி, அதனிருகாலும் வளைத்ததனால் அவ்வில் வட்டமாகப்பெற்ற தொழில்களை யெனினுமாம். வட்டம் - இடமுமாம், "மற்றநாடு வட்டமாக" என்றற்போல. வில்லிடத்துக் கற்றதொழில்களைப் பார்த்தெனினுமாம்.

'அந்தணரிருக்கை' என்பதுமுதல் 'மொய்ம்பின்' என்பதுவரை.

(9—12 வரிகள்.)

(ப-ரை.) அந்தணர் இருக்கை - பெரியோராசிரமத்தில், அகல் வோர் சூழ்ந்தெனை - நீழ்மக்கள் சூழ்ந்து நீட்டிச்செய்தாற்போல, நல் நயம் கிடந்த-மிகவு நன்மையாகக் கிடந்த, பொன் நகர் மூடி-தெய்வ லோகமுற்றும், புலை செய்து - நீட்டிச்செய்து, உடன்று - கோபித்து, நிலைநிலை தேய்க்கும் - அடிக்கடி தெடிக்கும், தள்ளா-ஒருவராலு நீக்கப்படாத, மொய்ம்பின் - வலியினால்.

(வி-ரை.) சூழ்ந்தென: விகாரம், "பரப்புக் கிடந்தென" என்றாற்போல. உடன்று என்பதற்குப் பகுதி உடல். மொய்ம்பு - வலி. இன் என்னும் ஐந்தாவது மூன்றாவதன் கருவிப்பொருளில் வந்தது.

எழுவாய் கள்ளமதின் மூன்றும்.

(15—17 வரிகள்.)

(ப-ரை.) எழுவாய் - ஓரிடத்திரா தெழுதல்பெற்ற, கள்ளமதில் மூன்றும் - கள்ளத்தையுடைய முப்புரமும்.

(வி - ரை.) எழுவா யிரண்டும் வினைமாத்திரையாய் நின்றன. கள்ளம் - வஞ்சம். மதில் : ஆகுபெயர்; மூப்புரமும் அது. உம்மை பிரிந்து மதிலோ டியைந்தது.

ஏழுயர் வானம் பூழிபடக் கருக்கி.

(28—வது வரி.)

(ப-ரை.) ஏழுயர் வானம்—, பூழிபடக் கருக்கி - தூள்பட வெரித்து.

(வி-ரை.) இது பாண்டரங்கக் கூத்தென்க. என்னே "எரியீ ரெருவ விரிசடைக் கடவுள், திரிபுர மெரித்தல் காரண மாக, வரியீ லெலி வளைத்து வாளிரும் சோத்துத், தேரோ யாகுக மாக வாடிய, கூத்தே பாண்டரங் கம்மே" என்றாகலின்.

'உள்ளுடைந்து' என்பதுமுதல் 'அரக்கர்' என்பதுவரை.

(12—17 வரிகள்.)

(ப-ரை.) வேதியன் முதலா - பிரமா முதலான, அமரரும் தேவர்களும், அரசனும் - தேவேந்திரனுர், ஒருகால் - ஒருமுறை, உள் உடைந்து - உள்ளம் வருந்தி, போது தூய் - மலரைச் சிந்தி, இரப்ப - வேண்டிக்கொள்ள, நாணன் - விட்டுணுவானவன், புணரா மயக்கம்-(முன்னின்றறியேயிற்) பொருந்தாது மயக்கும்படி, நடித்த - நடிப்புச்செய்த, தருக்கத்து-(உலோகாயத சமயத்) தருக்கத்தினுலே, அறிவுதிலே போதி - அறிவுதிலேகெட்டு, அருச்சனே விடுத்த - (சிவ) வழிபாடு தவிர்த்த, மூரண் - பகையினேயுடைய, அரக்கர் - அரக்கர், வெள்ளம் - வெள்ளத்துள்;

(வி-ரை.) புணராதென்பது குறைந்தின்றது. பிரமனே 'வேதியன்' என்றார், அவன் வேதியர் தலேவனுதலான். அமரர் சென்றதை யடித்துவந்ததனுல் அரசன் என்றது தேவேந்திரனேக் குறித்தது.

அருச்சனே விடாதங் கொருப்படு மூவரில்.

(29—வது வரி.)

(ப-ரை.) அங்கு - (காரணன் வீளையாட்டினுல்) அவ்விடத்து, அருச்சனே விடாது - சிவார்சசனேயை விடாது, ஒருப்படு மூவரில் - ஒருவழிப்படு மூவர்க்குள்.

'இருவரை' என்பதுமுதல் 'சுந்தரக்கடவுள்' என்பதுவரை

(30 37 வரிகள்.)

(ப-ரை.) இருவரை - வாணுசரனுழித்த வீருவர்க்கு, காவல் மருவுதல் ஈந்து-வாயில் காவற்றொழில் பெறுதலேச்செய்து,மற்றொரு

வற்கு - மற்றொருவனுகிய வாணனுக்கு, வைத்த - தான் மெய்யிற் காட்டிய கோப்பு முதலியவற்றையுடைய, நடம் அறிந்து - நடத்தின் சதியறிந்து, குடமுழவு இசைப்ப - குடமுழவைக்கொட்ட, பெறும்-பெறுதற்குக் காரணமாகிய, அருள் நல்கி - திருப்பையளித்து, ஒரு நாள் - ஒருநாளில், அருச்சனை - அருச்சனை, புரி - செய்ய, நாடலர்க்கும் - விரும்புதலில்லாதவர்க்கும், அருப்பெறல் - பெறுதற்கரிய, பெரும்பதம் உளதாம் - பெரும்பத மூண்டாகுமென்பது, காட்டி - காட்டவேண்டி, எரியிடை மாய்ந்த - புன்னகைத்தீயா லிறத்தற்குக் காரணமான, கனல்-கனலினையுடைத்தாய, விழி-விழியினையுடைய, அரக்கர்க்கு - அரக்கர்க்கு, உலவா - கெடாத, பொன்னுலகு-சுவர்க்கம், அடைதர வைத்த - பெறவைத்த, சுந்தரக்கடவுள்-நன்மையினையுடைய கடவுள்.

(வி-ரை.) மற்று: அசை. வைத்த: தொழிற்பெயர். நடம்: ஆகுபெயர். பெருமருள்: காரண காரியம். கருவிக் கண்டங்கும், நாடலர்க்குமென்னு மும்மை சிறப்பும்மை. என்பதென வொரு சொல் வருவிக்க. காட்டி - காட்ட, எரிநகைத்தீ - மாய்ந்த கனல்விழி. அரக்கர் காரணகாரியமன்றி முதற்பெயர் கொண்டதுமாம். கனலைவிழியரக்கர்-முன்சொன்ன சிவார்ச்சனைவிட்ட வரக்கர். 'கனல் விழியரக்கர்' என்றார் முன் கோப்புத்து மாய்தலின். அடைதர என்பதற் கும் பகுதி அடைதர. கடவுள்: ஆகுபெயர், தத்துவாதீதனென்பது பிறாருள்.

'கந்தரக்கறையோன்' என்பதுமுதல் 'வெளிப்பட்டேன்ன' என்பதுவரை.

(37—40 வரிகள்.)

(ப-ரை.) கந்தரக் கறையோன் - மிடற்றுக் கறுப்பையுடையோன், மாமி ஆட - மாமியாகிய மேனைநீராட, புணரி ஆழைத்த - கடலினையழைத்த, காமரு - அழகுமருவிய, கூடமுகு நிலவன் - மதுரைக்கிறைவன், களிப்பு உடை அடியார்க்கு - பேரன்பைத்தவன்களிப்பினையுடைய அடியார்க்கு, கழலிணை-அவர்தம் கழலினைகள், வெளிப்பட்டென்ன - வெளிப்பட்டாற்போல.

(வி-ரை.) கறை - கறுப்பு, "காரென்ன வாருங் கறைமிடறு" என்றாற்போல. கந்தரக்கறையோன்-இனையோடு முதற் பொருத்துமை யுண்மையால் "செவிச்செஞ் சேவலுங் கூகையும்" என்றாற்போன்றது. காமர் மருவும் - காமருவென விகாரமாயிற்று, 'காமருபூங்கோதாய்" என்றார் சிற்றகத்தியத்தினும். கறை: ஆகுபெயர். கந்தரம்:

வடசொல், சிதசதைத தாஙகிககொணடிருப்பது எனபது பொருள். கழல - திருவடி. இணை - இரண்டு வெளிப்பட்டாலெனன வெம பது வெளிபபடடெனனவென விகாரமாயிறது.

'ஈயாமாந்தர்' என்பதுமுதல் 'பெருமூலே' என்பதுவரை.
(41—46 வரிகள.)

(ப-ரை.) ஈயாமாநதர் - கொடாத லோபிகளுடைய, பொருள் தேயநதெனன-பொருடேயந்தாறடோலத தேயநதெனனும, தூண இடை-நுண்ணிய இடையானது, சுமநது ஆறறு-தான சுமநதாற் றுமல, கண்ணிய - கருதுதறகுக காரணமாகிய, சுணஙகின-சுணஙகினையுடைய, பெரு மூலே - பெரிய மூலேயினேயுடையாளை.

(வி-ரை) தேயநதென்ன வெனபது விகாரம. செயபபடடபொருள் வினே முதலபோனினறது, "இலவாழவானபான" எனறுற் போல கண்ணியமூலே - தனவினேயனறிப பிறவினேயெனின எனறன வொருசொல வருவிக்க கணணுதல - கருதுதல சுணஙகு - தேமல. பெருமூலே அனமொழித தொகைகாரணபபெயர. இது ஈணடணடைவிளியாயினறது.

மருவுதல கிடைதது.
(41—வது வரி.)

(ப-ரை) மருவுதல கிடைதது - கிடதிதலேப் பெற்று.

(வி-ரை) மருவுதல என்பதனிறறில இரண்டனுருபு தொகதது.

ஒருநீ தானே.
(41—வது வரி.)

(ப-ரை) ஒரு நீ தானே-(யாம குறறேவல மகளாயிற் சொலல மாட்டோம) ஒப்பறற நீதானே

(வி-ரை) ஏகாரம பிரிநிலே.

'அவட்கு கள்ளமும்' எனபதுமுதல் 'பொருத்தமுங்காண்டி' என்பதுவரை.
(42—43—46 வரிகள.)

(ப-ரை) அவட்கு - அவளுககு, உளளம உறை - நினனுளளத திற் பொருநதிய, கள்ளமும வெளியுடை-பொயயுமெயயுமாகிய, அனேதமும - எலலாம, விரிதது கூறி - மனம நெகிழ) விரிதததச சொலலி, பொருததமுங காண்டி - உடனபடுவதுங காணபாயாக.

(வி-ரை.) உள்ளமுறை - உள்ளபடியெனினுமாம். யான்சொன்ன பொய்யு மெய்யுங் கருதும்படி யவட்கு நின்மனத்திற் கிடைபெல்லா முறையாக விரித்துக்கூறி யெனினுமாம்.

சாரஞட ! அன்பர்க்கிறைவன் கழலிணைவெளிப்பட்டாற்போல, பெருமூலையாளே மருவுதல் பெற்று நீதானே யவட்குப் பொய்யுமெய்யுஞ் சொல்லி யுடன்படுவதுங் காண்பாயாகவென வினைமுடிவு செய்க. (உசு)

திருக்கோவையார் கதை-ம் செய்யுள்.

இரவுக்குறி வேண்டல்.

இரவுக்குறி வேண்டலென்பது — பதிநோக்கி வருந்தாநின்ற தலைமகன், இற்றையிரவிற் கியானுங்கள் சீறூர்க்கு விருந்து, என்னை யேற்றுக்கொள்வாயாக வெனத் தோழியை யிரவுக்குறி வேண்டா நிற்றல். அதற்குச் செய்யுள்:—

மருந்தாம் மல்லற்பிற விப்பிணிக் கம்பலத் தமிர்தா
யிருந்தனர் குன்றினின் றேங்கு மருவிசென் றோங்கிழப்
பொருந்தின மேகம் புதைந்திரு டூங்கும் பூணியறும்பின்
விருந்தினன் யானுங்கள் சீறூ ராதனுக்கு வெள்வளையே.

நள்ளிருட் குறியை வள்ள னினைந்து
வீங்கு மென்முலைப் பாங்கிக் குரைத்தது.

(ப-ரை.) வெள் வளையே - வெள்வளையையுடையாய், நம் அல்லல் பிறவி பிணிக்கு - நம்முடைய அல்லலைச் செய்யும் பிறவியாகிய நோய்க்கு, மருந்தும் - (அருந்தி) மருந்தாய் (வைத்தும்), அம்பலத்து - அப்பலத்தின்கண், அமிர்தாயிருந்தனர் - (சுவையால்) அமிர்தமுமாயிருந்தவரது, குன்றினின்று-குன்றின்கணின்று, எங்கும்-ஒலிக்கும், அருவி - அருவிகள், சென்று - பாய்ந்து, ஏர் திகழ - அழகு விளங்கும்வண்ணம், மேகம் - மேகங்கள், பொருந்தின - வந்து பொருந்தின (அதனால்), புதைந்து-(அம்மேகத்தின்கண்) புதைந்து, இருள் அங்கும் - இருள் செறியும், பூணியறும்பின் - செய்காட்டையுடைய, உங்கள் சீறாதனைக்கு-நுமது சீறூரதற்கு விருந்தினன் யான்-யான் விருந்தினன், எ-று.

(வி-ரை.) என்னை யேற்றுக்கொள்வாயாக என்பது எஞ்சிநின்றது. மேகம் வந்து பொருந்தின வென்றதனால், தனிநீர்க்குப்போத

ருமை கூறுவான்போன்று இரவுக்குறி மாட்சிமைப்படு மென்ரு ளும். 'இருடீங்கும் புனையிறும்பு' என்றதனுல், யாவருங் காணுராகலி ஞண்டி வந்து நிற்கின்றே னென்ரு ளும். மாலே விருந்தினரை மாற் றுத லறனன்றென்பது தோன்ற 'விருந்தினன்' என்ரு ன். குன்றி னின்றேங்கு மருவியோ திகழ்சென்று பொருந்தின மேகமென்க. அருவி யோ்பெற மேகம் பொருந்தின வூர் நின்னூராகலான், என் னினேப்பற்று யாணுமோ்பெற நின்னை வந்து சேர்ந்தே னென்பது போதரும். மெய்ப்பாடு-பெருமிதம். பயன்-இரவுக்குறிதோ்வித்தல்.

நேரிசையாசிரியப்பா.

வள்ளியோ ரீதல் வரையாது போல
வெண்டிசைக் கருவிருந் தினமழை கான்றது
வெண்ணைகைக் கருங்குழற் செந்தளிர்ச் சீறடி
மங்கைய ருளமெனக் கங்குலும் பரந்தது
தெய்வங் கருநாப் பொய்யினர்க் குரைத்த
நல்வழி மானப் புல்வழி புரண்டது
கால முடியக் கனக்கின் படியே
மறலி விடுக்க வருத தூ தவ
ருபிர்தொறும் வளேந்தென வுபிர்சுமந் தழுலும்
புகர்மலே யியங்கா வகையரி சூழ்ந்தன
வெள்ளுடம் பேழ்வாய்த் தழல்விழி மடங்க
லுரிவை மூடிக் கரித்தோல் விரித்துப்
புள்ளி பரந்த வள்ளுகிர்த் தரக்கி
னதள்பிறக் கிட்டு குதிபாய் நவ்வியின்
சரும முடித்துக் கருமபாம்பு கட்டி
முன்புகு விதியி னென்புகுரல் பூண்டு
கருமா வயிறு திருமார்பு தூக்கி
வையகத் துயிர்கள வழகறல் கருதித்
தொய்யி லாடுங் கடலுடைக கன்னிய
ரண்ணைந்த வனமூலேச சுண்ணமு மளறு
மெழுவான சுழலப் பிரிறுதுறற் பகட்டினங்
துறைநீ ராடப் பரந்தகார மதமும்
பொய்கையுங் கிடங்குஞ் செயினும் புகுந்து
நிஞ்சை யிடங்கரைப மைப்ரிலேச் சேலை

25 யுடற்புலவு மாற்றும் படத்திரை வையை
நிறைநீர் வளைகுகும் புகழ்நீர்க் கூடல்
வெளவியய பாதுலிற் களைவிழ் குழலொடு
மின்பரடம் புரியுந் தேவ நாயக
னருவியுடற் கயிறுஞ் சுணைமதக் குழியும்
30 பெருந்தேன் செவியுங் கருந்தேன் றொடர்ச்சியு
மோவாப் பெருமலைக் குஞ்சர மணக்க
வளந்தரு முங்க டொல்குடிச் சிறார்க்
கண்ணிய விருந்தின ஞகி
நண்ணுவன் சிறுநுதற் பெருவிழி யோளே.

வள்ளியோர்தல்-பெருவிழியோளே. பதந்-தொறும் குறிநுவை-இரவுக்குறிவண்டல்.

சிறுநுதற் பெருவிழி யோளே.
(1—வது வரி)

(ப-ரை.) சிறு நுதல் - சிறியநுதலினையும், பெருவிழியோளே-பெரியவிழியினையு முடையாய்.

(வி-ரை.) நுதல் - நெற்றி. விழி - கண், இது ஆகுபெயர்

'வள்ளியோர்' என்பது முதல் 'பரந்து' என்பதுவரை
(1—2 வரிகள்.)

(ப-ரை.) வள்ளியோர்-வள்ளன்மையுடையோர், வகையாது நுதல் போல - ஏழையாதி கொலிப்பதுபோல, இம்-கூட்டமாகிய, மழை - மழையானது, கருவிருது-சூற்கொண்டு, எண் திசை - எட்டுத்திக் கின்களினும், கலந்தது - கலாவினைந்தது.

(வி-ரை.) செயலாதலி னுடைதென்க்கது. கான்றது காலநயக்கம், "மடையடைத் தினையம் மாக்க ளீட்டமே" வைறற் போல.

'வெண்ணகை' என்பதுமுதல் 'பரந்து' என்பதுவரை.
(3—4 வரிகள்.)

(ப-ரை.) கங்குலும் - கருகுலானது, வெள் நகை - வெண் ணிய பல்லினையும், கருங்குதல் - கரிய கூந்தலையும், செம் தளிர் - செவ்வந்தளிர்போன்ற, சிறுஉடி-சிறிய அடிகளினையுமுடைய, மலைகையர் உள்ளம் என - பெண்கள் உள்ளம்போல், பரந்தது - (இருண்டு) பரந்தது.

(வி-ரை.) இது பண்புவமை, "அகங்குன்றி கண்டனைய சோனு மூங்கு குன்றி, மூக்கிற் கரியார்" என்றதுபோல. உமமை : இசை நிறை.

'தெய்வங்கருதா' என்பதுமுதல் 'புரண்டது' என்பதுவரை.
(5—6 வரிகள்.)

(ப-ரை.) தெய்வம் கருதா - தெய்வமுண்டென்று கருதாத, பொய்யினர்க்கு - பகற்றளத்தார்க்கு, உரைத்த - சொன்ன, நல் வழி மான - நல்லொழுக்கந் தெரியாத தறுமரியபோல, புல் வழி புரண்டது - புல்லால் வழிதெரியாது தடுமாறியதென்க.

(வி-ரை.) கருதல் - நினைத்தல். மானல் - நிகர்த்தல்.

'காலமுடிய' என்பதுமுதல் 'சூழ்ந' னை' என்பதுவரை.
(7—10 வரிகள்.)

(ப-ரை.) மறலி - காலதூதனவன், கணக்கின்படியே - (உயிர் டகு விதித்த) விதிப்படியே, காலமுடிய - காலக்கடவு விறக்கு படி, விடுக்க வந்த - விடவந்த, தூதுவர் - தூதுவர், உயிர்தொறும் - அவ்வுயிர்தோறும், வினைகொள - வந்த வினைத்தாற்போல, ஒழுலும் - தேடித் திரியும், அரி-நிறங்களங்கள், உயிர் சுமந்து - உயிரினைச் சுமந்து, புகர் மலை - புகரினையுடைய பானைக்கு, இயங்காவகை - சஞ்சரியாத படி, சூழ்ந்தன - சுற்றி நின்றனவென்க.

(வி-ரை.) காலதெனல்முறை - காலக்கடவுளே; அது "காலமுலக மூழிதோ" என்றதனுனறிக. கணக்கு - அவரவர்க்கு விதித்தகாலின் நிறுகை. விடுக்க - ஏவ. வினைதது: விகாரம். புகர்மலையெனவே யானையாயிற்று, "தாமச் செப்பினை" முதட்டென்றுற்போல. யானை நிலைமென்பன சாதியருமை. ஒழுலுதல் - தேடித்திரிதல். "வாட துழுவை" என்னு மகப்பாட்டில், "பேதுற்ற லத்தனே னுழல்வேன் கொல்லோ" என்றார். சுமந்தியலுகா வெனவியையும்.

'வெள்ளுடல்' என்பதுமுதல் 'விரித்து' என்பதுவரை.
(11—12 வரிகள்.)

(ப-ரை.) வெள் உடல் - வெள்ளையுடலினையும், பேழ் வாய் - பெரிய வாயினையும், தழல் விழி-தழல்போலும் விழியினையுமுடை ய, மடங்கல் உரிவை-சிங்கத்தோலையும், கரித்தோல் - யானைத்தோலை யும், விரித்து மூடி - விரித்துப் போர்த்தென்க.

(வி-ரை.) "அண்ணன் மடங்கல தளம்பலவன்" என்றார் சோ வையினும். கரி - துதிக்கையையுடையது.

'புள்ளிபரந்த' என்பதுமுதல் 'சருமமுடித்து' என்பதுவரை.
(13—15 வரிகள்.)

(ப-ரை.) வள் உகிர் - கூரியவுகிரினையுடைய, தரக்கின் - புலியினது, புள்ளி பரந்த - புள்ளி விரிந்த, அதன் - தோலையும், பிறக்கிட்டு - பிறகுகாட்டிக்கிடந்து, குதிபாய் - தாவும், கவ்வியின் - மானின், சருமம் உடித்து - தோலையு முடித்தென்க.

(வி-ரை.) பிறக்கு - பிறகு. உகிர் - நகம். தரக்கு - தரகூ-ம என்னும் வடசொற்றிரிபு. குதிபாய் : ஒருசொல்.

'கரும்பாம்பு' என்பதுமுதல் 'திருமார்புதூக்கி' என்பதுவரை.
(15—17 வரிகள்.)

(ப-ரை.) கரும் பாம்பு - கரிய பாம்பினை, கட்டி - (கங்கணமுதலாகக்) கட்டி, முன்புகு வீதியின் - ஆதிப்பிரமாவின், என்பு - எலும்பினை, குரல் பூண்டு - கழுத்திலணிந்து, கருநா யெறு - பன்றிக் கொம்பினை, திருமார்பு தூக்கி - திருமார்பிற்றூக்கி.

(வி-ரை.) கருமா - பன்றி. வீதி - பிரமன்.

'வையகத்து' என்பதுமுதல் 'சுண்ணமுமளறும்'
என்பதுவரை.
(18—20 வரிகள்.)

(ப-ரை.) கன்னியர்-கன்னியர் (நதித்தலைமை ஸ்ரீமாதேவரால்), வையகத்து - பூமியின்கண் ணுண்டாகிய, உயிர்கள் - உயிர்கள், வழக்கறல் கருதி - சஞ்சாரமின்மை கருதி, தொய்யில் ஆகம் - தொய்யிலெழுதிய, கடன் உடை - முறைமையினையுடைய, அண்ணந்த - இறுமாந்த, வனமுலை - அழகிய முலையிலணிந்த, சுண்ணமும் அளறும்-சுண்ணமுங் குங்குமக்குழம்பும்.

(வி-ரை.) வழக்கு - சஞ்சாரம், "ஆள்வழக்கற்ற சுரத்திடை என்றாற்போல. தொய்யில் - பத்திக்கீற்று, சந்தனக்கோலம். அண்ணந்த இறுமாந்த என்பவற்றிற்குப் பகுதிகள் முறையே அண்ணு இறுமா என்பன.

'எழிலிவான்' என்பதுமுதல் 'மதமும்' என்பதுவரை.
(21—22 வரிகள்.)

(ப-ரை.) எழிலி வான் சுழல - (கார்காலத்து) மேகம் வானில் தழைத்ததனால், பிளிறு-(மாறென்று கருதி) முழங்காரின்ற, குரல் -

குரலினையுடைய, பகட்டினம்-யானைத்திரள், துறை நீர் ஆட - தந்தித் துறையில் மூழ்கலால், பாந்த கார் மதமும் - பாந்த கரியமதமும்.

(வி-ரை.) நீராட வென்பதனைக் கன்னியர் நீராட வெனவுங் கூட்டுக. எழிலி : ஆகுபெயராற் காலம், "கடன் முகந்து" என்னும் அகப்பாட்டில், "இன்குர லெழிலியாமே கொய்தகைமுல்லை" என்றார். சுழல - தழைக்க, "சுழற்கலவ மேல்விரித்த தோகை" என்றார் பிறரும். வானிடத்து மேகஞ்சுற்றவெனப் பின்மொழிலேயலாக் கினுமாம். பகடு - யானை.

பொய்கையும் கிடங்குஞ் செய்யினும் புகுந்து.

(23—வது வரி.)

(ப-ரை.) பொய்கையும் - வாவியினிடத்தும், கிடங்கும் - அகழிடத்தும், செய்யினும் - வயலினிடத்தும், புகுந்து - சென்று.

(வி-ரை.) உம்மை எண்ணிலுருபு. "தொகல் வரையார்" என்றமையா லுருபுதொக்கது. வாவி - தடாகம்.

'சிஞ்சையிடங்கரை' என்பதுமுதல் 'வெள்ளியம்போதுவில்' எனபதுவரை.

(24—27 வரிகள்.)

(ப-ரை) சிஞ்சை இடங்கரை - முழக்கத்தினையுடைய முதலைக்கும், பைஞ்சிலை சேலை - சிவந்த வாலையுடைய கெண்டைக்கும், உடல் புலவு மாற்றும-உடலின்கண்ணுண்டாகிய புலாலுற்றத்தைத் தீர்த்தற்குக் காரணமான, படம் - வெள்ளைப்படத்தை விரித்தாற் போன்ற, திரை - திரையினையுடைத்தாய, நிறை நீர் - நிறைந்த நீரினையுடைய, வையை வளைக்கும் - வையையைச் சுற்றும், புகழ் நீர் - புகழ்நீர்மையையுடைய, கூடல் - மதுரை, வெள்ளியம்பொதுவில் - வெள்ளியம்பலத்தில்.

(வி-ரை.) 'படர்திரை' என்று பாடமாயிற் பரந்தநிரையென்க. புகுந்து மாற்றுதற்குக் காரணமாகிய நீரையுடைய வையையென்க. இடங்கர் - முதலை. சேல் - கெண்டை. படம் - தணி. திரை : ஆகுபெயர். வையை - வையையாறு. நீர்மை - தன்மை. பொது-சபை.

'கள்ளவிழ்' என்பதுமுதல் 'தேவநாயகன்' என்பதுவரை.

(27—28 வரிகள்.)

(ப-ரை.) கள் அவிழ் - தேன்பொழியு மாலைபொருந்திய, சூழலொடும் - குழலினையுடைய வுமையோடுங்கூடி, இன்ப · (நவரசத்

தால் வருந) இன்பத்தினையுடைய, நடம் புரியும் - நடனஞ்செய்த, தேவநாயகன் - தேவர்களுக்கு முதன்மையானவன்.

(வி-ரை.) "வாலெயி றூறிய நீர்" என்றதற்போல இடத்துநிகழ் பொருளின்மேறுழி விடத்தின்மே லேற்றப்பட்டன. வெவிழ்குழல்: அன்மொழித்தாசாகை. அவிழ்தல் - சொரிதல், "கள்ளாவிழ் தார் வென்றிக் கழல் வெய்யோய்" என்றார் வெண்பாமாலையிலும். மாலே யென்பது வருவிக்கப்பட்டது. கள்ளாவிழ் முதலவிழ்தல். சினவிளைப் பாற்பட்டு முதல்வினையாயிற் றென்னுமாம். அதற்கு மலர்சினே போலக்குழற்கின்றியமையாமையிற் சினைப்பாற்பட்டதென்க, "மலர் சூழ்ந் திருடுகைப் புரள்வனவே" என்றாற்போல. உமையொருபாக மாதலினா ரவ்வளைங்கூடியென்ற வற்மை யென்னுமை. இன்ப நடம் - அகட்கூத்து, அத்தகாரிசுமாம் என்க. உம்மையை யிழிவு சிறப்பக்கின் காளியாடிய கண்ணுங்கின்பாகிய கூத்தைச் செய் தவனென்க. உம்மை: அசையுமாம். பார்ப்பதற்கு மின்பத்தினல்ல நடத்தை யுண்டாக்கிய தெய்வநாயக னெனினுமாம். உமை: எசச வும்மை, தனக்கும் நடத்தை யுண்டாகலின். குழலொடு: உருபு மயக்கம். இன்பத்தினல்லவரு நடமாவது - இலையப்பருப்பதத்திற் சிவ னோடு கூடுதற்பொருட் டானேகதோடிகாலசரவபண்ணிக்காணு யோகத்திற் பார்த்துக் கூம்படி யாடிய விலாசமும், அதற்குக் சித் திரகுண்டலி யென்றபெயர்.

'அருவியுடல்' என்பதுமுதல் 'நண்ணுவன்' என்னுமளவரை.
(29—34 வரிகள்.)

(பதவை) அருவியுடல் சயிலம் - அருவியாகிய புறோகைக்கயி றும், சுரும்பதக்குழியும்-சுரும்பாகிய மதக்குழிபுழ, பெருந்தேன் செவி யும் - பெருகிய தேன்கூடாகிய செவியும், கருந்தேன் தொடர்சசி யும் - கருவண்டி னெழுங்காகிய சங்கிலியும், ஓவா - நீயகாத, பெரு மலை குஞ்சரம் - பெரிய மலையாகிய யானையின்கண், மணக்க வளம் தரும் - பொருந்த வளங்கொடுக்கும், உங்கள் தொல் குடி - உங்கள் பழைய குடியினையுடைய, சிறார்-சிறார்க்கு, கண்ணிய விருந்தினன் ஆம் - பொருந்திய விருந்தினனாகி, நண்ணுவன் - யான் பொருந்து வேன் (என்னை யேற்றுக்கொண்மின்).

(வி-ரை.) 'இனமழை கான்றது' என்றதனால் போதலருமை கூறுவான்போன் றிரவுக்குறி மாறிவைப்படுமென்றும், 'கங்குல் பரந்தது' என்றதனல் ஒருவருங்காணச்குறிவந்து நிற்கின்றனனென் றும், 'வழிதெரியாது' என்றதனல் ஆண்வெவேண்டுமென்றும், 'சிங

கஞ் சூழ்ந்தனை' எனறதனுல் ஒஞ்சுவாணபோனறு கொலுகுடன் படுத லருளனெறனறு, இவ்வெந்த விருநதினை மாற்ற லறனன் றெனபது தோனற 'விரநதினனை' எனறமை கூடபினுஞ்ச 'வளரகரு முகங கொடாங குழ்கிறூர்'எனறமையான, யானும வளரபெறினனை வநது மோசேசி ரமபது போ ரு ம. சரஸ்மெனபது "மெலலவினும் வலவுறு " வினனுஞ சூத்திரவிதி. புமோசை - கழுதறி கயிறு. சிறூர - சிறநதூர்.

பெரிய விரியினையுடையாய! எண்டிகையினு மணமுரைன்றது, கருகுல பாரர, புவடது, கிளை ஞ சூழ்ந்தனை, ஆலால நாய கன் வரையில உயரள பரமுப முயினையுடைய சிறூர்து. விருந தினருகிய யான பொருநருனை எற்றுகொணமின எனபதனை முடிவு செயக

திருக்கோவையார் உரை-ம் செய்யுள்.

நகரணிமை கூறல்.

நகரணினை கூறுவிலீபது—இருவருக் தம்மு ளினபுழ்ச செலலாநினாமை கணடு, இனிச சிறிதுநெறி சென்று அருளுறத் தைக் கடதகால் நம்பதியாகிய நகர் விளங்கித் தோனறாநிற்கும, அதனுளளுங் கடிது செல்வீராமினென எதிர் வருவார் அவர் நக ணிமை கூறுகிறதல். அதறகுச செய்யுள் —

மின்றங் கிடையொடு நீயின் றில்லச சிற்றம்பலவா
குனறங் கடந்துசென றுனின்று தோன்றுங குரூஉக்கமழுக்
குனறங் கிடங்குந் துறைதுறை வள்ளூ வெளளைகையார்
சென்றங் கடைதிட மூமபுடை சூழ்தரு சேணகரே.

வண்டமர் குழலியொடு
கண்டவ ருரைத்தது.

(ப-ரை.) மின்றங்கு இடையொடு - மின்போலு மிடையை யுடையாளோடு, நீ - நீ, யியன் றில்லை - அகன்றதில்லையில், சிற்றம் பலவர் - சிற்றம்பலத்தை யுடையாதது, குனறம் கடந்து - குன்ற தைக்கடந்து, சென்றுல் - (அப்பாற் சிறிதுநெறியைச) சென்றுல், குரூஉக்கமலம் - நிறத்தையுடைய தாமரைப்பூ, துனறு - நெருங்கி யிய, அம் கிடங்கும் - அழகிய கிடங்கும், வள்ளை - வள்ளைப்பாடலைப்

பாடும், வெள்ளை நகையார் - வெள்ளை முறுவலையுடைய மகளிர், திறை திறை - துறைதொறும் துறைதொறும், சென்று - போய், அங்கு-அவ்விடத்து, நடைதடமும்-சேரும் பொய்கைகளும், புடை சூழ்தரு - பக்கத்தச்சூழ்ந்த, சேண் நகர் - (அத்தில்லையாகிய) உயர்ந்தநகர், நின்றுதோன்றும் - இடையறுதுதோன்றும், (அத்தினையுங் கடிது செல்வரயாக), எ-று.

(வி-ரை.) மின்தங்கு என்பதில் தங்கு உவமவுருபு. இடை ஆகுபெயர். மின்றங்கிடை: அன்மொழித்தொகையாகக் கோடலு மாம். முறுவல்-பல். சூழலியொடி கண்டவர் - சூழலியொடி தலைமக னைக்கண்டவர். மெய்ப்பாடு - பெருமிதம், பயன் - இடமணித்தென் றல்.

நேரிசையாசிரியப்பா.

புயற்கார்ப் பாசடை யென்படப் படர்ந்த
வெள்ளப் பெருநதி கொள்ளைமுகம் வைத்து
நீடகிறை பாயும் வான வாவிக்கு
ளொருசெந் தாமரை நடுமலர்ந் தென்ன
மூவடி வழககிற் கோரடி மண்கொண்
டோருதாள் விண்ணைத் திருமைபெற நீட்டிய
கருங்கடல் வண்ணன் செங்கருங் கரத்
தொன்று லிருமலை யன்றேந் தியதென
வுந்தியொழுக் கேந்திய வனமுலை யாட்டியும்
வரைபொரு பருமத் தொருதிற னீயு
முழைவா யமக்கர் பாடுகிடங் தொத்த
நிறைகிடைப் பொற்றை வரைகடந் திறந்தா
னெரிதழற் குஞ்சிப் பொறிவிழிப் பிறழெயிற்
றிருளுட லந்தகன் மருள்கொள வுதைத்த
மூவாத் திருப்பதத் தொருதனிப் பெருமா
னெண்ணிற் பெருத வண்டப் பெருந்திர
ளடைவீன் றளித்த பிறைநுதற் கன்னியொடு
மளவாக் கற்ப மளிவைத்து நிலைய
பாசடை நெடுங்காடு காணிகொ ணீர்நாய்
வானவி னிறத்த நெட்டுடல் வானோர்
பேழ்வா யொளிப்ப வேட்டுவப் பெயரளி

யிடையுறழ் தூசுப்பிற் குரவைவாய்க் கடைகிய
கனைகடிக் தொழில்விடித் துழவுசெறு மண்டட்
பண்கா லுழவர் பகடுபிடர் பூண்ட
முடப்புது நாஞ்சி லள்ளல்புக நிறுத்திச்
சூடுநிலை யுயர்த்துங் கடுங்கூலை பேறப்
பைங்குவளை தூய்க்குஞ் செங்கட் கவரி
நாகொடு வெருண்டு கழைக்கரும் புழுக்க
வமுதவாய் மொழிச்சியர் நச்சுவிழி போல
நெடுங்குழை கிழிப்பக் கடுங்கயல் பாயுந்
தண்ணம் பழனஞ் சூழ்ந்த
கண்ணிவர் கூடற் பெருவளம் பதியே.

புயற்கார்ப்பாசடை - பெருவளம்பதியே. பததி-உடன்போக்கு. தூறை - நகரணிமைகூறல்.

'புயற்கார்' என்பதுமுதல் 'வானவாவிக்குள்' என்பதுவரை.
(1—3 வரிகள்.)

(ப-ரை.) எண்பட படர்ந்த - (உலகம்) கருதலுண்டாகப் பரந்த, புயல் கார் - நீரினையுண்ட மேகமாகிய, பாசடை - பசியவிலையினையும், நீட - காலநீட்டிப்ப, கொள்ளை முகம் வைத்து - ஆயிரமுகம்வைத்து, நிறை பாயும் - பெருகப்பாயும், வெள்ளப் பெருநதி - கங்கையாகிய நீரினையுமுடைய, வானவாவிக்குள் - ஆகாசமாகிய வாவிக்குள்.

(வி-ரை.) எண் வினைமாத்திரையாய் நின்றது. புயல் - நீர், "சோறாபுயன் முகிறலை விலங்கி" என்றாற்போல. நிறையென்பது நிறையென விகாரம், "அறுகா னிறைமல ரம்பா னிறையணிக் தேன்" என்றாற்போல; இது வியனிலையுருவகம், ஒன்றினங்கம் பல வற்றையுமுருவகித்தும் உருவகியாதும் அவயவியு முரைத்தமையின்.

'ஒருசெந்தாமரை' என்பதுமுதல் 'இருமலையன்றேந்தியதென' என்பதுவரை.
(4—8 வரிகள்.)

(ப-ரை.) நடு - நடுவே, ஒரு செந்தாமரை - ஒரு செந்தாமரை, மலர்ந்தென்ன - மலர்ந்தாற்போல, மூவடி வழக்கிற்கு-(மாவலிபால்)

மூவடி மண்கேட் டோரடி மண பெறும் வழக்கிற்காக, ஓர் அடி - ஒரு தாளால், மண் கொண்டு-மண்ணேயளந்து, இருமை பெற - பெருமை பெற, ஒரு காள் - ஒரு சீபாதத்தை, விண்ணதது - விண்ணிடத்தில், நீட்டிய - நீடமய, கரும் கடல் வண்ணன - கரிய கடல்போலு நிறத்தினேயுடையான, செ கரும - சிவந்த கரிய, கரத்து ஒன்றல்-லையொன்றினால, இரு மலே அனறு எதிபது எண்ண - கோவர்த் தனகிரி யேந்திய காள ஒனறனறி இரண்டு மலேயைத் தாங்கியது போல.

(வி-மை.) மலர்ந்தாற்போலத் தாணீட்டியது சொழிலுவமம். ஒரு கையி லிரண்டிரலே யேந்தியது அபூகம. அத்து : அல்வழிச் சாரியை. நீது: பகுதிப்பொருள் விகுதி. செங்கருங்கமெனவே அகங்கை சிவப்பாதல் கூறினர்.

'உந்தி' என்பது முதல் 'நீயும்' என்பதுவரை.
(9—10 வரிகள.)

(ப-ரை.) உந்தி - கொப்பூழினின்று, ஒழுக்கேந்திய - எழுந்த மயிராழுங்ஙன மேற்ருயை, வளம முலேயாட்டியும் - அழகிய முலேயினேயுடையாளும், வரை பொரும - மலேயகன்றுற்போலுமகன்ற, மருமதது - மாபினேயும, ஒரு - ஒப்பற்ற, நிறன - வெறறியினேயுமுடைய, நீயும - நீயும.

(வி-மை) மருமம் - மார்பு ஒழுக்கம் : ஆகுபெயர்.

'மூழைவாய்' என்பது முதல் 'நிறந்தால்' என்பதுவரை.
(11—12 வரிகள.)

(ப-ரை) மூழைவாய் - மலேமுழைபோலும் பெரிய வாயினேயுடைய, அரகர் - அரக்கர், பாடுகிடந்ததாத - உடல்கிடந்தாற் போனற, நிறை கிடைப்பொற்றை - நிறையாகிய நிறமலேக் கிடக்கையினேயுடைய, வரை கடந்திறந்தால் - மலேயைக் கடந்தப்பாற் சென்ருல்.

(வி-மை.) பட்டது-பாடு, அது உடலாயிற்று. "வழக்கினிற் பாடெடுக்க" என்ருர். கிடந்தது: விகாரம், வழியிடத் தரக்கர் கிடந்தாலேயை பொற்றை யெனினுமாம், "பாடிடை மயிலக் தோகை" என்ருற்போல.

"எரிதழல்" என்பது முதல் "தணிப்பெருமான்" என்பதுவரை.
(13—15 வரிகள.)

(ப-மை.) எரி தழல் - எரியாகின்ற தழல்போன்ற, குஞ்சி - மயிரினேயும், பொறி விழி - அழற்பொறியினேயுடைய கண்ணினேயும்,

பிறது எயிறு - நிலையே எயிற்றினையும், இருள் உடல - இருண்ட வுடலினையு முடை, அகத்தகண - யாதானும், மருளகொள-மருடகொள்ளுமபடி, உதாசீன - உதாசீனத்தை, மூவா-தளர்வுகாணப்படாத, திருப்பத்தது - திருவடியினையுடைய, ஒரு - ஒப்பற்ற, தனிபெருமான - ஏகநாயகன.

(வி-ரை.) உதைத்த வடியென வியையும். மருட் வினைமாத்திரையாய நின்றது. சிறப்புமமை கொளகது. காலவழுவுதியான் மயின 'மருளகொள' எனறார். மூவாததிருவடி-"மூவாமுதலாவுலம எனறதம்பாலக கொளக. நிலை - வினைச. எயிறு - பல.

'எண்ணிப்' எனபது முதல் 'நிலையிய' எனபதுவரை.
(16 ஆம் வரி.)

(ப-ரை.) எலலாவி ர னனால, பெருக - தளரவுபடாதிருக, ந டமெ-ரு நல - பெரிய பல கட்டளைகளுக், கைவை - மூனற முனைமாக, ஈனறிரு - மடலாக நிறுத்த, பிறை நுதல பிறைநிலா ந துதலிரு யுடைய கலலெழு மாரி - உலகமேலெழு, ஆவா - ஐவா ' ராறு மனபெரு கடலாக, ரபா - கபாலம், அதனைகைத் (தூனறிராவாய பல ஊன யுர) சிருரபாத்து, நிலையிய மெ ரன

'பாசடை' எனபதுமுதல் 'ஒளிப்ப' எனபதுவரை.
(19—21 வரிகள.)

(பதவு) பாசடை நெடமகாடி - அளவிறகு பசியவடைநிரனை, நாளதி ெ ரவு-தாணியாகக்கொணட, நீர நாய - நீராநாயனை, வானவில - இநதிரவிலலினை, நிறதத-நிறதனையுடைதாகிய, நெட்டிடல் - நெடியவுடலினையுடைய, வாவே - வாளமீனகளினது, ெ பரி வாய - பெரியவாய்ல, ெ வளிபப - புக.

(வி-ரை.) அலை - இலை.

'வேட்டுவப்பெயர்' எனபதுமுதல் 'மண்ட' எனபதுவரை.
(21—23 வரிகள.)

(ப-ரை.) வேட்டுவப்பெயர்-வேட்டுவர், அளியிலை உற - எளியரடிபோல, நுசுபபின - நுசுப்பினையும், ரா ம வாப - ரா வ யி ம வ யினையுடைய, கை டகியர் - உழுகுடியர, கலைகடிம - கனை கனையும, ெ ழி ப விடுதல-பாயாழி மண்ட, உழவு செறு-உழவினையுடைய வயலில, மண்ட - நிரபட.

(வி-ரை) கடிதல் - களைதல், கடிதொழிலென விகாரமாயி ற்று. கடி யெண்ணு முரிச்சொ லீறுதிரிந்ததாக்கி வரைதற்பொருளாக் கினுமமையும்.

'பண்காலுழவர்' என்பதுமுதல் 'கடுங்குலையேற்' என்பதுவரை.

(24—26 வரிகள்.)

(ப-ரை) பண்காலி உழவர்-பண்ணினைப்பாடப்பட்ட வுழவரா னவர், பகடு - பகடானது, பிடர் பூண்ட-தன் பிடரிற்சுமக்க, முடப் புது நாஞ்சில் - வளைவினையுடைய புதிய கலப்பையை, அள்ளல் புக நிறுத்தி - சேற்றிலழுந்த வூன்றி, சூடுகிறை யுயர்தலும் - அரியைப் போராத வுயர்தலும், கடுங்குலையேற-சிறப்பினையுடைய செங்கரையி லேற.

(வி-ரை.) பண்காலுழவர் - "பண்ணெழுத் தியல்படப் பரப்பி யிட்டனர், தண்வயலுழவர்" எனறாறபோல. பண் - மருதப்பண். உழவர் நிலத்தியென விலையும், ப டது பிடரினெனினு மமையும். சூடு - கெல்லரி அரியை மேலோக வுயர்த்தவெனவே போராயிற்று. கடுங்குலை - உரிசி ாலி ப திர ருங்கினற ரு.

'பைங்குயினீ' என்பதுமுதல் 'உழக்க' என்பதுவரை.

(27—28 வரிகள்.)

(ப-ரை.) பைங்குவினை - பசிய குவளைமலரை, தூய்க்கும் - அருந்தும், செம் கண கவரி நாகு - சிவந்த கண்ணினையுடைய இளைய வெருமையோடு முதியவெ நமை, வெருண்டு-பயந்து, கழை கரும்பு உழக்க - கரும்பினை யுழக்க.

(வி-ரை.) "சொல்லிய மயபி னிளமை தானே, சொல்லுங் காலை யவையல தில்லே" என்ற சூத்திரத்திற் சொல்லுங்காலை யென் றதனால் நாகு பெண்மையேயன றி யினமையு முணர்த்திற்று, "எரு மை நல்லான கருநாகு பொருஞ்ம்" எனறாறபோல. இளைவெருமை யெனவே யதற்கு மறுதலையாகிய முதிவெருமையும் வருவிக்கப் பட்டது.

'அழுதவாய்' என்பதுமுதல் 'பாயும்' என்பதுவரை.

(29—31 வரிகள்.)

(ப-ரை.) அழுதவாய் மொழியினர் - அழுதம்போலும் வாய் மொழியினையுடையார், நசை வழுதி போல - விடம்போலும் விழியா னவை, குழை கிழிப்ப - குளையை கிழிக்கப் பாய்ந்தாற்போல,

நெடும்-நெடிதாகிப் பரியவிலைகளைக் கிழிக்கும்படி, கடுங்கயல பாயும்-மிகுந்தகயல்கள் பாயும்.

(வி-ரை) அழுதமொழி வீரவிலக்த வுவமை, நஞ்சிற்கும் விழிக்கு மொத்த பண்பு - குரூரம், விழிக்குங் கயற்கு மொத்த பண்பு-தமோற்றம், ஆதலா லுவமைக்குவமையன்று. நஞ்சு விழிக்கடை யெனினுமாம். "செந்தொத் தலர்ந்த செழுந்தாமரை யன்ன வாட்கண்" போல, குழைகிழிப்பவென்பது சிலேடை. செயவெனச்ச வடுக்குப் பாயுமென்னும் பிறவினை கொண்டது. கடுங்கயல்-உலுரிச் சொலீறு திரிந்தது.

'தண்ணம்' என்பதுமுதல் 'வளர்ப்பதியே' என்பதுவரை.

(31—32 வரிகள்.)

(ப-ரை.) தண்ணம் பழனம் சூழ்ந்த-குளிர்ச்சியினையுடைய வயல்கள் வளைந்த, கண்ணிவர் - நோக்கினர் கண்கள் விரும்பப்பட்ட, பெரு வளம் - பெருவளத்தினையுடைய, கூடற்பதி-கூடலாகிய பதி தோன்றும், (அத்துணையுங் கடிதிற் செல்வீராகவென்க).

(வி-ரை.) தோன்றுங் கடிதிற் செல்வீராகவென்பது வருவிக்கப்பட்டது. தண்ணம்பழனம்: விகாரம். சூழ்தற்கிடமாகிய பதியெனவும் சூழ்தற்குக் காரணமாகிய பெருவளமெனவுமாம். கண்ணிவர் பெருவளம, "உறைபதி செய்குன்று" போலகின்றது. கண் விரும்புதற்குக் காரணமாகிய வளமெனினும் கண் விரும்புதற் கிடமாகிய கூடலெனினுமாம். இவர்தல் - ஏறுதலுமாம்.

மூலையாட்டியு நீயு மிம்மலையைக்கடக் தப்பாற் சென்று லொரு தனிப்பெருமா னுமையொடு நிலேபெற்ற கூடற்பதி தோன்றும், அத்துணையுங் கடிதிற செல்வீராகவென விணைமுடிவுசெய்க. (உ-அ)

திருக்கோவையார் கடை-ம் செய்யுள்.

அறியாள்போன்று நினைவுகேட்டல்.

அறியாள்போன்று நினைவுகேட்டலென்பது—தலைமகனது மதிழ்ச்சிகண்டு இவன் கூடாமற் றழைவரங்குவேனென உட்கொண்டு, என்னுடைய தோழிமார்பலர், அவருள் நின்கருத்து எவர்க்கண்ணதோவெனத் தோழி தானறியாள்போன்று அவனினைவு கோரித் றல். அதனருச் செய்யுள்:

வணணிறந சாரிலம விணடல ரெனனு மிக காரிருவா
கணணிறக தாதிலலே யமபலத தாகழுக குனறினினறு
தணணறக தாதிவா சகதனச சோலேபபக தாடுகினரு
ரெணணிறக தாவர யாகணண தோமனன னினனருளே.

வேகதன சொனன மாகதளிர மேனிலய
வெறியார கோதை யறியே னெனறது

(ப-ரை) விண இறகதா - விணணேகடகதவர், நிலம விணட வர்-நிலததைப பிளகதவர, எனனும-எனனு சொலலபபடும, மிகசார இருவா - பெரியோரிருவருடைய, கண இறகதா - கணணேகடக தவர, திலலே அபலததா - திலலேயமபலசசி ராகணணர, கழுக குனறில னினறு (அவரது) கழுகுகுனறினைகணி ராய,தனைநபம தண ணிதாகிய நபிய, தாதி இயா-தாது பாரக, சகனசசோலே-சகதனச சோலேயிடதது, பகதாடுகினறா பகதாடுகினறவா, எண இறகதா-இறபபபலா, மனன - மனனனே, நின அருள - நினதருள, அவா-அவருள, யார கணணதோ - யாரகணணதோ (கூவுவாயாக), எ-று

(வி-ரை) விணணிறாதாரா - பிரமன. நிலமவிணடவா - விட் டெறு தாது-மகாதகம. இறபப - மிக விணட வரெனபதறகு முன னுரைதத துரைகக அனனோரகு அரியாயிர ம, எமமனோரகு கரியரெனறுங கருதாரால தலலேய மபலசசா ரெனறார சோலேகக ளிறனறு கூடடினு மமையும. எனன னிறாதாரா பலரெனப ரூஉ டடம. மெயபபாடு மருடகையைச சாராத பெருமிதம. தும மாற கருப - வோரே அறியே னெனறாளாக எனகுறை இனனுள சுணணஙதன ஆ வீதிதால இவள மூடிககுமென னினைநது ஆறறு வானுமெனபது - ப பல.

நெசையாசிரியப்பா.

பறறலாத தெறுதலு மூவகதோப பரிததலும
வெஞசுடா தணமதி யெல படாழ நிறீஇய
ரெடடிலக குமபுகக குருத பலவ
வேதிபன படைகக மாலவன காகப
பெரறகதோ திருவிருத தானபெரி தாதிதத
யபுதபில வாழகைத தேவாகோ னிழிதிய
மதமலே யிருநானகு பிடாசுமந தோனறிச
செமபொனமணி குயிறறிய சிகரக கோயிலு

ளமையாத் தண்ணளி யுமையுட னிறைந்த
வாலவா யுறைகரு மூலக் கொழுஞ்சுடர்
கருவி வான மடிக்கடி பொழியுங்
கூடஞ் சூழ்ந்த நெடுமுடிப பொதியத்துக்
கண்ணுழை யாது காட்சிகொளத் தோற்றிய
வெறிவீச சாந்தி னிரையிடை யெறிந்து
மற்றது வேலிகொள வளைத்து வளரேன
னெடுங்காற் சுற்றுழி யிதணுழை காத்துந்
தேவர் கோமான் கிறையரி புண்ணினுக்
காற்றுது பெருமுழை வாய்விட்டுக் கலுழ்ந்தேனக்
கமஞ்சூற் கொண்மூ முதுகுடி யிருந்து
வானுட்க முரற்று மலைசூழ் குடைந்தும்
பிரசமும் வண்டு பிரவிதெறு மணியும்
வயிர மம்பொன்னு நிரைநிரை கொழித்துத்
துகிரனை நுடங்கு மருவி யேற்று
மறுவறு செம்மணி காற்கவ னிறுத்தி
நிறைமதி னிடக்கு மிருள்வீழ வெறிந்து
மெதிர்சொற் கேட்பக கால்புகத் திகைத்த
நெருக்குபொழிற் புக்கு நெடுமலை கூயு
நுசுப்பின பகைகத நூபுர மரற்றப்
பைங்காடி நிரைத்த வெண்மலர் கொய்து
மனததொடு கண்ணு மலக்கடி கொடுபோஞ்
செம்பொன் செய்த வாபபதத் துரகது
மிளைய பன்னெறிப பண்ணை யெங்கு
மளவாக் கன்னிய நிவரு
ளுளமாம வேட்கைய னின்னளென் றுரையே.

பற்றலர்த்தெறுதலும் - இன்னளென்றுரையே.
துறை - அறியாள்போன்மை வினவுகேட்டல்.

'பற்றலர்' என்பதுமுதல் 'வேலவ' என்பதுவரை.
(1—3 வரிகள்.)

(ப-ரை.) பற்றலர் - சத்துருக்களை, தெறுதலும் வெஞ்சுடர் - தெறும்படி யாதித்தனைக் காய்தலும், உவதோர் - மித்துருக்களை,

பரித்தலும் தண்மதி என - காக்கும்படி சந்திரனைக் குளிர்த்தலும் போல, புகழ் நிறீஇய - புகழை நிறுத்திய, நெடு இலை - நெடிய தகட்டினையும், குறு - குறிய, புகர் குருதி - குருதிப்பொறியினையுமுடைய, வேலவ - வேலினையுடையாய்.

(வி-ரை.) எண்ணும்மை தொக்கது. இது நிரனிறையுவமை. தெறுதலும் பரித்தலு மென்னுமும்மீற்று வினையெச்சம், "வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய" என்பதனுட் கொள்க. "நனவிற் புணர்ச்சி நடக்கலு மாகுகே, காண்டலு மியைவ" என்றாற்போல தெறுதலானும் பரித்தலானு மெனினுமாம். நிறீஇய வேலவனெ வியையும்.

'வேதியன்' என்பதுமுதல் 'கோழஞ்சுடர்' என்பதுவரை.

(4—10 வரிகள்.)

(ப-ரை.) ஆலவாய் - (தான் பொருந்தும்) ஆலவாயென்னுந் திருப்பதியில், அமுது அயில் வாழ்க்கை - அமுதமுண்ணும் வாழ்க்கையினையுடைய, தேவர்கோன் - தேவேந்திரன், மதமலை - அயிராவத முதலிய, இரு நான்கு - யானையெட்டும், பிடர் சுமந்து - தம்பிடரிற் சுமந்து, ஒங்கி - ஒங்கும்படி, வேதியன் படைக்க - பிரமாபடைக்கவும், மாலவன் காக்க - விட்டுணுகாக்கவும், பெருததோள் திரு - பெருததோழனிய, உருத்தான் பெரிது-உருவினைப் பெரிதாக, நிறுத்தி - நிறுத்தி, இழிச்சிய - இறக்கிய, செம்பொன்-செம்பொன்னும், மணி - மணியும், குயிற்றிய - அழுத்திய, சிகரம் - முடியினையுடைய, கோயிலுள் - கோயிலுள், அமையா - அடங்கி, தண்ணளி - இருபையினையுடைய, உமையுடன் - அங்கயற்கண்ணம்மைசமாக, நிறைந்த - பொலிவுபெற்ற, மூலம் - முதன்மையாகிய, கொழுஞ்சுடர் வளரிய சோதியானவன்.

(வி-ரை.) இருநான்குமென்னு மூற்றும்மை தொக்கது. எண்ணும்மை தொக்கது. காக்கப்படைக்கவென்னுஞ் செயவெனெச்சம் பெருததென்னு மெதிர்மறையுட் பெறுதலோடு முடிந்தது, தான்: அசை. ஒங்க நிறுத்தியிழிசிய கோயிலென வியையும். ஆகவென வொருசொல் வருவிக்க, "உடனுக வைம்பொறியும்" என்றூர் கேமசரியிலம்பகத்தினும். உடலோடுகூடி நிறைந்தவெனினுமாம்.

'கருவி' என்பதுமுதல் 'பொதியத்து' என்பதுவரை.

(11—12 வரிகள்.)

(ப-ரை) அடிக்கடி - அடிக்கடி, கருவி - (மின்னுமிடியு முத லிய) கூட்டத்தினையுடைய, வானம் - மேகம், பொழியும் - பொழிதற் கிடமாகிய, கூடம் சூழ்ந்த - கூடஞ்சூழ்ந்த, நெடு முடி - நெடிய முடி யினையுடைய, பொதியத்து - பொதியமலையிடத்து.

(வி-ரை) கருவி - தொகுதி. கூடம்-மன்றகச்சூழப்பட்டதோர் தேவகோட்டம், "கூடஞ்செய்சாரல்" என்றாற்போல. சூழ்ந்த - வளை ந்த. முடி - சிகரம்.

'கண்ணுழையாது' என்பதுமுதல் 'காத்தும்' என்பதுவரை.

(13—16 வரிகள்.)

(ப-ரை.) கண் நுழையாது - தன்னிடத்திலொருவருஞ் செல் லப்படாது, காட்கொள-புறத்திற் காணுதல்கொள்ள, தோற்றிய - தோற்றிய, வெறி - வாசத்தினையுடைத்தாகிய, வீ - பூவினையுடைய, சந்தின் நிரை - சந்தகநிரையை, இடை எறிந்து - புனத்திடையில் வெட்டி, மற்றது - வேற்றுமரத்தினை, வேலிகொள வளைத்த-வேலி யாக வளைத்ததினுல், வளர்-வளராகின்ற, எனல்-தினையினை, நெடிய கால் - நெடிய காலினையும், குற்றழி - சிறியவிடத்தினையுமுடைய, இதண் உழை - பரணிடத்திருந்து, காத்தும் - காத்தும்.

(வி-ரை.) கண்ணென்பது—"கண்ணகன்ஞாலம்" போன்றது, முழுதுஞ் செல்லாமையின் கண்ணுனது நுழையாதெனினுமாம். உம்மை:சிறப்பும்மை. மற்று வினைமாற்று.வளைதென்னு முதல்வினை பிறமுதல்வினையோடு முடிந்து காரணகாரியப் பொருட்டாய் நின் றது. இருந்தென வொருசொல் வருவிக்க.

'தேவர்கோமான்' என்பதுமுதல் 'குடைந்தும்' என்பதுவரை.

(17—20 வரிகள்.)

(ப-ரை.) தேவர்கோமான் - இந்திரன், நிறை அரி - (முன்) நிறை யரிந்ததனுல் வந்த, புண்ணினுக்கு-புண்ணேவுக்கு, ஆற்றது - ஆற்றது, பெருமுழை-பெரிய முழைபோன்ற, வாய்விட்டு-வாயினைப் பிளந்து, கலுழ்ந்தென - அழுதாற்போல, கமம் சூல்-நிறைந்தசூலினை யுடைய, கொண்மூ - மேகமானது, முதுகு குடியிருந்து - தன்புறத் திற் குடியாகவிருந்து, வரான் உட்க - தேவர்களுமூட்கும்படி, மூரற்

றும் - முழங்குந், மலைச்சுனை - மலையினிடத்திற் சுனையை, குடைந்தும் - குடைந்தாடியும்.

(வி-ரை.) அரிதல் - வெட்டுதல். ஆற்றாது - பொறுக்காமல்; முழை - குகை. அரிபண்-"உண்டவெசில்" போன்றது புண்ணும் வாணும் ஆகுபெயர். கலுழ்ந்தது: விகாரம். அழுதாற்போல முழங்குமென்பது, "அன்னபோலெனனு மவைவழுத லாகிய, சொன்னிலை விளக்கந் தோற்றமு முடைத்தே" என்பதனால் வந்த தற்குறிப்பேற்றம். வினைமுதலல்லாத சருவி முதலாயின அவ்வினைமுதல் வினைக்குச் செயலியபதாகக் கூறினார், "பேயதாகத வெண்முத்தஞ் சிந்து பைங் கார்வரை மீன்பரப்பி" என்றாற்போல.

'பிரசமும்' என்பதுமுதல் 'அருவியேற்றும்' என்பதுவரை.

(21—23 வரிகள.)

(ப-ரை.) பிரசமும் வண்டும் - தேனையும் வண்டையும், இரவி தேறு மணியும் - மாணிக்கத்தையும், வயிரமும் - வயிரத்தையும், பொன்னும் - பொன்னையும், நிரைநிரை - பத்தியதாக, கொழித்து - கொழித்து, துகில் - (பலநிறத்) துகிலானது, நான்று - தாழ்ந்தாற் போல, நூடங்கும் - வீழ்ந்தசையும், அருவி ஏற்றும் - அருவியாடியும்.

(வி-ரை.) இரவிதெறுமணியெனவே சாதாரங்களென்னும் வருணத்தையுடைய மாணிக்கமெனபது விளங்கிற்று. ஆதித்தனுக்கு மணிகருமொளிபற்றியும் மணிக்குருதுகிற்கு நிறம்பற்றியுமுவமை கூறலினுவமைக்குவமையன்று. துகிலென்பது பலநிறத் துகிலுக்கும் பொதுப்பெயர். நான்றென்னு முவமவினையொற்றுமை நயத்தாற் பொருளின்மொழின்மே னின்றது, இது தொழிலு நிறமும் பற்றியவுவமம், '·விரவியும் வருஉ மரபின வென்ப'' என்பது விதி. கொழித்து வீழ்ந்தசையுமன விலையும். உம்மையிரிந்து நின்றது முருபு தொக்கது, "தூதையும் பாவையும் வீளையாட" என்றதற்போல.

'மறுவறு' என்பதுமுதல் 'எழிந்தும்' என்பதுவரை.

(24—25 வரிகள.)

(ப-ரை.) மறுவறு - குற்றமற்ற, செம்மணி - மாணிக்கத்தை, கால் கவண் நிறுத்தி - காலினையுடைய கவணில்வைத்து, நிறை மதி கிடக்குட் - பூரணசந்திரன் கிடந்தாற்போலக் கிடக்கும், இரும் வீழ - இருட்டி விழும்படி, எறிந்தும் - (அதனை) எறிந்தும்.

(வி-ரை) ஆற்றமாவன - திட்டையேறு சிவந்த விகாயமுதலியன. மதிலெட்டாநிரல் "வடித்தான் வகிர்மலர்க் கண்ணி" போன்றதெனினுமாம்.

'எதிர்சோல் கேட்ப' என்பதுமுதல் 'கூயும்' என்பதுவரை.
(26—27 வரிகள்.)

(ப-ரை.) எதிர் சொல் கேட்ப - கூவிய சொல் லெதிர்கேட்ப, நெடி மலை - நெடியமலை, கூயும் - எதிர்கூவியும், கால்புக திகைத்தெதிர்ந்தடி ஈ கப்படாத, நெருக்கு பொழில-நெருங்கிய சோலையில், புக்கும் - புகுந்தும்.

(வி-ரை) காலானது புகத்திகைத்தவெனவே எடுத்தடி கைக்கப்படாயிற்று. உயிரானது பொழில் துணையாகிய காலின்மேலேற்றப்பட்டது, காற்றுஞ் செல்லப்படாத வெனினுமாம் உம்மை - சிறப்பு.

'நுசுப்பின்' என்பதுமுதல் 'கோய்தும்' என்பதுவரை.
(28—29 வரிகள்.)

(ப-ரை.) எண் மலர் - எண்ணப்பட்ட மலர்கள், நுசுப்பின் பகைக்கு - நுசுப்பொடு பகைத்தற்கு, பைஙகாடி - பசியசோலை, நிரைத்த - நிரைத்த அமலர்களை, நூபுரம் அரற்ற - இகஙிணிகள் அரற்றும்படி, கொய்தும் - கொய்தும்.

(வி-ரை.) நுசுப்பு - இடை. இன். உருபுமயக்கம். பகை: வினைமாத்திரையாய்கின றுருபேற்றது காடி-தான். பைஙகாடி: ஆன்மொழித்தொகை. நிரைத்த: தொழிற்பெயர். மலர்களுதல் இடைக்குப் பகையாதலின் 'பகைத்தற்குக் கொய்தும்' எனறார். நிலைபரற்றக் கொய்தெனவே நடந்து கொய்தமை விளஙகிற்று. அரற்றல் - சத்திதல். கொய்தல் - பறித்தல்.

'மனத்தோடு' என்பதுமுதல் 'துரந்தும்' என்பதுவரை.
(30—31 வரிகள.)

(ப-ரை.) அடிக்கடி - அடிக்குதோறு மடிக்கடி, மனத்தொடு கண்ணும் - மனமுஙகண்ணும், கொடுபோம் - கூடக்கொணடுசெல்லும், செம் பொன் செயத - சிவந்த பொன்னைச் செய்த, வரி - வரியினையுடைய, பந்து துரந்தும் - பந்தாடுதலை முயன்றும்.

(வி-ரை.) ஒடி - எண்ணெடி.பொன்னென்பதனீற்றில் மூன்தனுருபு தொக்கது. பந்து: ஆகுபெயர்.

'இனைய' என்பதுமுதல் 'உரையே' என்பதுவரை.
(32—34 வரிகள்.)

(ப-ரை.) இனைய-இத்தன்மையதாகிய, பல் நெறி-பலமுறைமைகளையுடைய, பண்ணே எங்கும் - புன்முதலிய விடங்களோறும்' அளவா - அளவுபடுத்தப்படாத, கன்னியர்-கன்னியர், இவருள் - இவர்க்குள், உளம் ஆம் - நின்னுள்ளத்திலுண்டாம், வேட்கையள் - வேட்கையையுடையவள், இன்னள் என்று - இத்தன்மையளென்று, உரை - சொல்லுவரையாக.

(வி-ரை.) அளவாக் கன்னியரெனவே பலராயினர். வினையெச்சவகைக்கு ஆகிய வென்பதனோடு முடிந்தது.

வேலவ! சோதியானவன் பொதியத்திடத்துக் காத்தும் குடைந்தும் எற்றும் எறிந்தும் கூவியும் புகுந்தும் கொய்தும் முயன்றும் இத்தன்மையவாகிய பல முறைமைகளையுடைய விடந்தோறும் அளவாக் கன்னியர் பலர், அவர்க்குள் நின்னுள்ளத்திலுண்டாம் வேட்கையினையுடையாள் இன்னளென்று நீ சொல்லென வினைமுடிவுசெய்க.(உ

திருக்கோவையார் உரை-ம் செய்யுள்.

சுடரோடிரத்தல்.

சுடரோடிரந்தலென்பது—இளிமொழிகேட்டிரங்காதின்றவள் பெற்ற வெண்ணெடி தன் இளியிருந்து வருந்த இதனையுந் துறந்து அறிவு முதிர்ந்து, அழற்கடன் சென்றுண் முகத்தை, நின்கிளர்களான் வாட்டாது, தாமரைமலர்போல மலர்த்துவாயாகவெனச் சுடரோடிரந்து கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்:—

பெற்றே ணெடுங்கிள்ளை வாடமு துக்குறை பெற்றிமிக்கு
நற்றேன் மொழியழற் கானடந் தாண்முக நானணுகப்
பெற்றேன் பிறவிபெருமற்செய் தோன்றில்லைத் தேன்பிறங்கு
மற்றேன் மலரின் மலர்த்திரு தேன்சுடர் வானவனே.

வெஞ்சுரந் தணிக்கெனச் செஞ்சுட ரவற்கு
வேயமர் தோளி தாயர் பாராயது.

(ப-ரை.) சுடர் வானவனே - சுடராகிய வானவனே, பெற்றே ணெடும்-பெற்றவென்னெடும், கிள்ளை வாட - தன் இளியிருந்து வரு

ந்த (இதனையுந் திறந்தி), முதுக்குறை - அறிவு முதிர்ந்த, பெற்றி மிக்கு - இயல்புமிக்கு, நல்தேன் மொழி - நல்ல தேன்போலு மொழி யையுடையாள், அழல்கான் நடந்தாள்-அழலேயுடைய காட்டின்கணட ந்தவளது, முகம்-முகத்தை (நின்வெங்கதிர்களான்வாட்டாது), நான் அணுகப்பெற்றேன் - ஒருவாற்றுற் றன்னையணுகப்பெற்றேனெனிய யான், பிறவி பெருமல் செய்தோன் - பின்பிறவியைப் பெறுதவண் ணஞ் செய்தவனது, தில்லை - தில்லையில், தேன் பிறங்கும் - மது மிகுந்த, மல் தேன் மலரின்-வளவிய வண்டையுடைய தாமரைமலர் போல, மலர்த்து - மலர்த்துவாயாக, இரதேன் - (நின்னை) யானிரந் தேன், எ - று.

(வி-ரை.) சுடர் - சூரியன். வானவன்-தேவன். தேன்மொழி: அன்மொழித்தொகை. பெற்றேனெடுமென்பது எண்ணெஞ்சு டாம். தணிக்கவென்னு மிறுதியகாய குறைதுதின்றது. மெய்ப்பாடும் பய னும் அவை. நணுகப்பெற்றேன் எனப் பிரித்தலுமாம். மலரின் என் பதில் இன் ஐந்தாவது ஞெப்புப்பொருட்டு.

நேரிசையாசிரியப்பா.

ஈன்றவென் னுளமுந் தோன்றமொழி பயின்ற
வேவாய்க் கிள்ளையும் வரிபபூஞ் பந்தும்
பூவையுங் கோங்கின் பொன்னலர் சூட்டிய
பாவையு மாணுந் தெருள்பவ ருரு
நெடுந்திசை நடக்கும் பொருணிறை கலத்தினைப்
பெருவளி மலக்கச் செயன்மறு மறந்தாங்குச்
சேர மறுக முதுக்குறை வுறுத்தி
யெரிதெறங் கொடுஞ்சுரத் திடந்தன ளாக
நதிக்கடத் தறுகட் புகர்க்கொலை மறுத்த
கல்லிப மதனைக் கரும்புகொள வைத்த
வாலவா யமர்ந்த நீலநிறை கண்டன்
மறிதிரைப் பரவைப் புடைவயிறு குழம்பத்
தூலக்குமலை யொருநாட் கலக்குவ போல
வுழுவைபுகு ருழக்கு மேந்துகோட் டும்ப
லுரிவை மூடி யொளியினை மறைத்துத்
தரைபடு மறுக்கந் தடைந்தன போல

விண்ணுற விரிதத கருமுகிற் படாங்கொடு
மண்ணை முருகக கனற்றுமழன் மேனியை
யெடுத்து மூடி யெறிதிரைப பழனத்துப்
பனிச்சிறுமை கொள்ளா முள்ளரை முளரி
வண்டொடு மலர்ந்த வண்ணம் போலக்
கண்ணு மனமுங் களிவர மலர்த்துதி
மலர்தலே யுலகத் திருளெறி விளக்கு
மன்னுயிர் விழிக்கக் கண்ணிய கண்ணு
மறையுகு நீர்கருக் கருவுங் கரியும்
வடிவ மெட்டினுண் மகிழ்ந்த வொன்றுஞ்
சேண்குள மலர்ந்த செந்தா மரையுஞ்
சோற்றுக்கடன் கழிக்கப் போற்றுயிர் கழிக்கு
மாசைச் செருநர்க் கடைந்துசெல் வழியு
மருளும் பொருளு மாகித்
திருவுல களிக்கும் பிரிதிவா னவனே.

ஈன்றவென்னுளமும் - பரிதிவானவனே. பதங்கி-உடன்போக்கு, துறை - சுடரோடிசைத்து கூறல்.

மலர்தலே யுலகத் திருளெறி விளக்கும்.

(23—வது வரி.)

(ப-ரை.) மலர்தலே உலகத்து - பரந்தவிடத்தையுடைய பூமியின்கண் ணுண்டாகிய, இருள் எறி - இருளை நீக்கும், விளக்கும் விளக்குமாகி.

மன்னுயிர் விழிக்கக் கண்ணிய கண்ணும்.

(24—வது வரி.)

(ப-ரை.) மன்-அவ்வுலகத்து நிலைபெற்ற, உயிர் விழிக்க-உயிர்கள் விழிக்கும்படி, கண்ணிய கண்ணும் - கருதவேண்டிய கண்ணுமாகி.

(வி-ரை.) கண்ணிய கண்ணுமாகி யென்றதற்குக் கருதப்பட்ட கண்ணுமாகி யெனினுமாம். "உயிரிடத்தியலு முடனிலை யறிதல்" என்பதனாற் கண்ணியவென்பது வினையெச்சமாகவும் பெயரெச்சமாக

வுங் கொள்ளக்கிடந்தது. எல்லாப்பொருளும் விளக்குதற்குக் கருவியாதலின் ஆதித்தனைக் 'கண்' என்றார், "எண்ணெண்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங், கண்ணென்ப வாழ முயிர்க்கு" என்றாற் போல.

மறையுகு நீர்க்குக் கருவுங் கரியும்.

(25—வது வரி.)

(ப-ரை.) மறை உகு நீர்க்கு-மறையோர் அர்க்கியங் கொடுத்தற்குக் காரணமாய நீர்க்கு, கருவும்-கருவுமாகி, கரியு ம-(எல்லாப்பொருட்குஞ்) சான்றுமாகி.

(வி-ரை.) மறை: ஆகுபெயர். தன் கிரணங்களான் மழையைப் பெய்வித்தலின், 'கரு' என்றார். சான்று - சாகுபி.

சேண்குள மலர்ந்த செந்தா மரையும்.

(27—வது வரி.)

(ப-ரை.) சேண் - ஆகாசமாகிய, குளம் - வாரியில், மலர்ந்த - (பொருந்தும்படி) மலர்ந்த, செந்தாமரையும் - செந்தாமரையுமாகி.

(வி-ரை.) சேண்: ஆகுபெயர்.

'சோற்றுக்கடன்' என்பதுமுதல் 'செல்வழியும்' என்பதுவரை.

(28—29 வரிகள்.)

(ப-ரை.) சோற்றுக்கடன் கழிக்க - (பகைவர் வேற்றுப்புலத்தை நமக்குத் தருவதொன்று கொடுத்து) சோற்றுத்திரளை வாங்கிய கடன்நீர, போற்று உயிர் - போற்றுகின்றவுயிரை, கழிக்கும் - அமர்க்களத்தினீங்கும், ஆசை செருநர்க்கு - ஆசை பொருந்திய வீரர்க்கு, அடைந்து செல்வழியும் - வீரசொர்க்கமடையுஞ் செல்லாநின்ற வழியுமாகி.

(வி-ரை.) சோறு: ஆகுபெயர். சோற்றுக்கட னுரு'ம் பொருளுந தொக்கன "திருந்தார் தம்மூரை தருகுவரிவரொனப், பெருஞ் சோறுடவர் பெறுமுறை வகுத்தன்று" என்றார்வெண்பாமாலையினும். கதிபெறவார்க்குத் தன் மண்டலத்தூடு செல்ல விடங்கொடுத்தலான் 'வழியாகியும்' என்றார். அடைந்து - அடைய, வீரசொர்க்கமென ஒருசொல் வருவிக்க. அமர்க்களம்-யுத்தபூமி.

'அருளும்' என்பதுமுதல் 'வானவனே' என்பதுவரை.

(30—31 வரிகள.)

(ப-ரை) அருளும் - (எவ்வுயிர்க்கண்ணுந் தொடர்பின்றி யியல் பாற் செல்லும) கருணையுமாகி, பொருளும ஆகி - (இவை யொழிந்த வெல்லாப்) பொருளுமாகி, திருவுலகு அளிக்கும்-உலகத்தினை யளிக கும், பரிதி வானவனே - பரிதியாகிய வானவனே.

(வி-ரை.) விளக்காயச சிறப்பினைக கொடுத்தலானும், கண்ணு யெல்லாப் பொருளுந தெரியப்பண்ணுதலானும, கருவா யெல்லாப் பொருளையு முண்டாக்குதலானும, சானருயவரவர் செயத நல்வினை தீவினை தவரு துண்மையாய நிறறலானும, தாமரையாயக கண்டோ ர்க்கு உவகையும விருப்பமுமுண்டாகுதலானும, வழியாய்க்கதியிற் செலுததலானும தருளுந பொருளுமா யிடுகண் டீர்த்தலானும் 'அளிக்கும்' எனறார் இது - பலபொருளுருவகம ஆகி யெனபதனை எகுவ கூட்டுக.

'தேருள்பவர்' என்பதுமுதல் 'மறந்தாங்கு' என்பதுவரை.

(1—6 வரிகள்.)

(ப-ரை) தெருள்பவர்-திசையறிந்து செலுத்துவார், ஊரும் - செலுததும, நெடுந்திசை நடகும-திசை பிழைகும்,பொருள்நிறை கலதினை - பொருணிறைநத சமபானை, பெருவளி-பெருங்காற்று, மலகக - மலக்குதலால், செயன மறு மறநதாஙகு - செயன மறநது மறுகினற்போல.

(வி-ரை.) தெருள்பவர் மறுகினற்போல வெனவியையு ம.புயல் சொரிநதாஙக கெனபதும பாடம. மலகுதல - சுழற்றுதல். செயல் - தொழில மறுகல் - மயஙகுதல்.

'ரன்ற' என்பதுமுதல் 'சேரமறுக' என்பதுவரை.

(1—4—7 வரிகள.)

(ப ரை.) ஈன்ற என் உளமும் - பெற்ற என்னுளமும், தோன்ற - (ரட்டாராகு) வெளிப்பட, மொழி பயினற - வார்த்தை யைகளற , வளை வாய கிளையும் - வளைநத வாயினையுடைய கிளியு ர, பூவையும-நாகணவாயப்புள்ளும, மானு ம-மானும, வரிப்புனை பநதும- (பரமபுரிடோலக்குதலியேறிட்ட) வரியினையுடையபநதும, சோஙகின-

கோங்கினது, பொன் அலர்-பொன்போலு மலரை, சூட்டிய பாவை யும் - சூட்டியபாவையும், சேரமறுக - கூடவருந்தும்படி.

(வி-ரை.) பந்தும் பாவையு மறுகவெனமிகுதிபற்றிக் கூறினர். பாவை-பிரதிமை. வரிப்புனை பந்து என்பதற்கு வரிந்து புனையப் பட்ட பந்து என்றுரைப்பினுமாம்.

'மூதுக்குறை' என்பதுமுதல் 'இறந்தனளாக' என்பதுவரை. (7—8 வரிகள்.)

(ப-ரை.) மூதுக்குறை - (தான் பெற்ற)பேரறிவினை, உறுத்தி-எல்லாருமறியும்படி பண்ணி, எரிதெறும் - நெருப்புச்சுடுதற்கிடமா கும், கொடுஞ்சுரத்து - கொடியபாலையில், இறந்தனளாக-செல்லா னாக.

(வி-ரை.) "ஆகவாக லென்ப தென்னு,மாவயின்மூன்றும் பிரி வி லகைநிலை" என்பதனுன் இறந்தனளாகவென்பதுசெயவெனெச்ச முற்றாய்த் திரிவுழி, ஆகவென்னு மிடைச்சொல் வந்ததன்பொருளுணர்த்திப் பிரிவிலகைநிலையாய்ச் செயவெனெச்சமாய் நின்றது, "னேகலாளனாகிகொல் விற்பாணி நின்றனளாக" என்றாற்போல.

'நதிக்கடம்' என்பதுமுதல் 'மகிழ்ந்தவொன்றும்' என்பதுவரை. (9—11—26 வரிகள்.)

(ப-ரை.) ஆலவாய் - ஆலவாயென்னும் பதியில், நதி-நதிபோல வொழுகும், கடம் - மதத்தினையும், தறுகண்-தறுகண்மையினையும், புகர் - புகரினையும், கொலைமறுத்த - கொலைத்தொழிலையுநீத்த, கல் இபமதனை - கல்யானையை, கரும்புகொள வைத்த - (யானையைப் போலக்) கரும்பு தின்னும்படி வைத்த, நீலநிறைகண்டன் - கருமை நிறைந்த கண்டன், அமர்ந்த - பொருந்திய, வடிவம் எட்டினுள் - வடிவமெட்டில், மகிழ்ந்த ஒன்றும் - எல்லாரு மகிழ்தற் கிய வொருவடிவமுமாகி.

(வி-ரை.) ஆலவாய் - கூடற்பதி. தறுகண்மை - அஞ்சா புகர் - புள்ளி. அன்னும் ஐயும் அசை. அதுவென்பதியானை யைச் சுட்டிற்று, "யாதே பதுவந்தது" என்றாற்போல. விளக்கே கியன்றதெனைக் கொள்ளின் அது வழக்கிற்கென மறுக்க. இச் தைக் "கல்லார் மணிப்பூண்" என்னுஞ் சிந்தாமணிப் பதி காண்க. வடிவமெட்டாவன:—பஞ்சபூதமும் இருசுடரும் இ னும். உம்மை ஆக்கவும்மை. ஆகியென்பது வருவிக்கப்பட்ட.

'உழுவையுகிர்' என்பதுமுதல் 'படாங்கோடு' எனபதுவரை. (14—17 வரிகள.)

(பதவுரை) உழுவை உகிர் - (அவன) புலியுகிரால், உழச்சும் - உழக்குதறகிடமாகிய, எரது கோரட்டு - உயாந்த கோடடினேயுடைய, உமபல உரிவை மூடி - யானேயின தோலைப் போாதது, ஒளியினே மறைதது - சுடரினே மறைதத திஞல, தரைபடு - பூமியினகண் ணுண்டாகிய, மறுக்கம - மறுகுகஙகள, தடைநதனபோல - தடை பட்டனபோல, விணணுற - விண்ணுகிய வடிவதறிற பொருநதத வால், விரிதத கருமுகிற்படாம கொடு - அவ்வடிவிற போாதத திகி லாகிய மேகதத்திஞல,(மூடபபட்டு)- ஒளிமறைநது அவன் வடிவமாய பூமியிலகணுண்டாகிய மறுகஙகளேத தடிதது.

(விளகக.) உகிர் - நகம். தடைதல - தடைபடுதல் கோடு கொமபு மறுகம - தடுமாறறம "சமஞ்செபது சாநாக்குங கோல போல மைநதொருபாற், கோடாமை சானரோர்க கணி" எனறாற் போல உவமையடையை பொருட்குங் கொளக.

'மறிதிரை' என்பதுமுதல 'அழன்மேனியை' என்பதுவரை. (12—13—18 வரிகள.)

(பதவுரை.) மறிதிரை ஒருநாள் - அவள் ஒருநாள் மறியுந திரை யையுடைய, பரவை புடைவயிறு - கடலினடுவிடம, குழம்ப - குழம பபடி, திலஙரு மலே - விளஙகாினற மலேயிஞல, கலகருவபோல- (நேதவா பயனகொளளுக) கலகியபதுபோலப (புனலாகிய வடிவத திஞல), மண்ணக முருக - அமமண்ணுகிய வடிவமுருகுமபடி, கனற மம - கனலப்பண்ணும, அழல மேனியை - அழலாகிய வடிவை யுடைய நீ.

(விளகக.) கலசகுவதுபோலக் கனற்றுமழல் எனவியையும. உருகிவெனவே புனல வருவிகபபட்டது. இது பயனுவ தத்தின பகுதி எனனே? கலக்கியதிஞலுணடா மழுதருமு கனறுதலா ணடாகிய டனலுமாகரும எனத சொழினமுகத்தாற கூறிஞ ரேனும, "மாரியனன வணகை" எனறாற்போல மழைதொழிலா கிய பெயலாற்பயந்த பொருளிடையிட்டபோ யுவமங்கொள்ளாது தோறறும பொருளிரண்டு மொததலையிற நெழிலுவமமெனப் படாது கொளவாகரும் பயமொதலால ஜயவுவமத்தின்வகையா யிறறும. "வானின நுலகம வழங்கி வருதலாறற, நுனமிழத மெனறு

ணாற் பாற்று''என்றமையால், புனலையும் அமுதம் என்றார். ''வினை, யெஞ்சு வினையும் வேறுபல் குறிய' என்றதனால் முன்னிலைக் குறிப்புமுற்றப் பெயரெச்சக் குறிப்பாயிற்று. ''எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி, யவ்வய னிலையல் செவ்வி தென்ப'' என்பதனால் தோன்றுவெழுவாய் வருவிக்கப்பட்டது. கனற்றல் - சுடப்பண்ணுதல்

'எடுத்துமுடி' என்பதுமுதல் 'மலர்த்துதி' என்பதுவரை.

(19—22 வரிகள்.)

(பதவுரை.) எடுத்த மூடி எறிதிரை - திரைதள்ளி மறியாநின்ற நீர், பழனத்து - அப்பழனத்து, பணிச்சிறுமை கொள்ளா - பனியால் வாடாது, மூன் அரை - முன்னையரையிலேயுடைய, மூளரி - தாமரையானது, வண்டொடு மலர்ந்த - வண்டிருக்க மலர்ந்த, வண்ணம் போல - தனதைபோல, கண்ணும் மனமும் களிவர-அவள் கண்ணு மனமுங் களிபெறுமபடி, மலர்த்துதி - (நின் கதிர்களால் வாட்டாது) மலர்த்துவாயாக.

(விரை) எடுத்து உயர்த்தெனினுமாம். கொள்ளாதென்பது குறைந்துநின்றது. ஒடு-வேறுவினையொடு. ''நில்லாங்கு'' என்னுமருதக்கலியுள், முகந்தானே காட்டிக்கொடிக்கும் குறிப்பென்று மனத்தை முகமென்றமையால், இவரும் முகத்தை 'மனம்'என்றார். மனதறிவுணர்த்தை முகங்காட்டலி னெனற்றுமைபற்றித் தீனையாதற் சிறப்புநோக்கி உயிர்க்களிப்புக் கண்ணினு முகத்தினு மேற்றப்பட்டது. மனத்தாமரையை மலர்த்துதியெனி னுவமைக்கொவ்வாமையுணர்க. பழனம் - வயல்.

வானவனே! மறுகிஞற்போல மறுகச்சென்றனனாக, அழலாகிய வடிவையுடைய நீ, அவள் முகத்தை வாட்டாது மலர்த்துவாயாகவென விவ்வாறுடிவுசெய்க. பின்னுறுதிபயப்பிறவுங் கொடுமையு மருமையுப்பற்றி வாட்டாது மலர்த்துதியென்றார். (கு ம)

திருக்கோவையார் உரை-ம் செய்யுள்.

இன்னலெய்தல்.

இன்னலெய்தலென்பது—வெறியாடுதற்குத் தாயார் வேலனை யழைப்பக்கேட்ட தலைமகள், இருவாற்றாலும் நமக்குயிர்வாழுநெறி

யில்லையெனத் தன்னுள்ளேகூறி, இன்னலெய்தாகிற்றல். அதற்குச் செய்யுள்:—

அயர்ந்தும் வெறிமறி யாவிசெ குத்தும்வி ளர்ப்பயலார்
பெயர்ந்து மொழியா விடினென்னே பேசுவ போர்த்திருவ
ருயர்ந்தும் பணிந்து முணரா னதம்பல முன்னலரிற்
முயர்ந்தும் பிறிதி னெழியினென் னுதுந் துறைவனுக்கே.

ஆடிய வெறியிற் கூடுவ தறியாது.
ஈன்னறுங் கோதை யின்னலெய் தியது.

(பத-ரை.) வெறி அயர்ந்தும் - வெறியை விரும்பி யாடியும், மறி-மறியினது, ஆவி செகுத்தும் - ஆவியைக் கெடுத்தும், பெயர்ந்தும்-பின்னும், ஒழியாவிடின் - நிற வேறுபா டொழியாதாயின், அயலார் என்னே பேசுவ - அயலார் கூறுவனவென்னகும், பிறிதின் - (வெறியாட்டாகிய)பிறிதினால்,விளர்ப்பு ஒழியின்-இவ்விளர்ப்புஒழியுமாயின், இருவர்-(யான் தலைவன் யான் தலைவன் என்று தம்மூன் மாறுபட்ட) பிரமனு மாலுமாகிய விருவர், போர்த்த - (தம் நிலைமையினின்றும்) பெயர்த்து (தழற்பிழம்பாகிய தன்வடிவை யறியலுற்று), உயர்ந்தும்-ஆகாயத்தின்மேற் சென்றயர்ந்தும், பணிந்தும் - நிலத்தின்கீழ்ப் புக்குத் தாழ்ந்தும், உணரானது - அறியப்படாதவனது, அம்பலம்-அம்பலத்தை, உன்னலரின் - நினையாதாரைப்போல, துயர்ந்தும் - துயரமுற்றும், துறைவனுக்கு என்னுதும் - அத்துறைவனுக்கு நாம் என்னுதும் (இருவாற்றானும் உயிர் வாழ்தலரிது), எ-று.

(வி-ரை.) மறியறுத்தற்கு முன்னுரைத்த துரைக்க. பெயர்ந்து மென மெலிந்து நின்றது. உணராவென்றது செயப்படு பொருட்கண் வந்தது. தன்னைப் பிரிதல் தன்பமாய் இன்றியமையாத யாம் இத்தன்மையமாகவும் அளிக்கின்றிலனென வுட்கொண்டு, அவனை நாமுன்ன நெருங்க முயங்கு மன்பாமா றெல்லாம் இன்றென்னு மென்னுங் கருத்தால் 'என்னுதும்' என்றாள். பிறிதுமொழியினென் பது பாடமாயின், வெறியினுற் றணியாதாதலின் இந்நோய் பிறி தென்று பிறர்மொழியினென் றுரைக்க. மெய்ப்பாடு - அச்சத்தைச் சார்ந்த மருட்கை, பயன் - தலைமகன் தன்னெஞ்சொடு சொல்லியாற்றுதல்.

நேரிசையாசிரியப்பா.

வள்ளுறை கழித்துத் தளைக்குவேன் மகனு
மன்புமி யிற்கழுத் தும்மலை யடியு

நெற்பிடித் துமைக்குங் குறியி னேரு
நடுங்கரு நுற்ற பழங்கணன் னியரு
மயரா வெறியிற் றண்டா வருநோ
யீயா தூண்ணுநர் நெடும்பழி போலப்
போகாக் காலைப் புணர்க்குவ வென்னும்
நான்கெயிற் றிருருத்தற் பிடர்ப்பொலி வரைப்பகை
யதுகால் குளிக்கு மதுததொடை யேந்த
மூட்டாட் செம்மலர் நான்முகத் தொருவ
ணெண்ணிநெய் யிறைத்து மனைவழ லோம்பப்
புவியளந் துண்ட திருநெடு மாலோ
னிருகர மடுக்கிப் பெறுநீர் வார்பப
வொற்றை யாழியன் முயலுடற் றண்சுட
றண்டம் விளர்ப்பப் பெருவிளக் கெடுப்ப
வளவாப் புலன்கொள விஞ்சைய ரெண்மரும்
வளலிற் கருவியிற் பெரும்புகழ் விளைப்ப
மூனிவர் செங்கரஞ் சென்னி யாக்க
வருப்பசி முதலோர் முன்வாழ்த் தெடுப்ப
மும்முலீ யொருத்தியை மணந்துல காண்ட
கூடற் கிறைவ னிருதா னிருத்துங்
கவையா வென்றி நெஞ்சினர் நோக்கப்
பிறவியுங் குற்றமும் பிரிந்தன போலப்
பீரமு நோயு மாறின்
வாரித் துறைவற் கென்னு தும்மே.

வள்ளுறைகழித்து - என்னுதும்மே. பதவி - வரைபொருட்பிரி தல். துறை-வெறிக்கின்னலெய்தல்.

'தாண்டாவருநோய்' என்பதுமுதல் 'பழிபோல' என்பதுவரை. (5—6 வரிகள்.)

(ப-ரை.) ஈயாது உண்ணுநர்-வழங்காதுண்பார்க்கு, நெடும்பழி போல - அதனல் வரும் பழி நீங்காததுபோல, தண்டா வருநோய் - நீங்காது வருநோய்.

(வி-ரை.) வழங்காதுண்டல் - ஐயம்பெய்யாதுண்டல். தண் டாது என்பது ஈறு தொகுத்தலாய் தண்டாவென நின்றது.

வளஞுறை கழித்துத் துளதுவேல் மகனும்.
(1—வது வரி.)

(ப-ரை) வள்ளுறை கழித்து – வலிய வுறையினை நீக்கி, துள க்கு - திரியாகின்ற, வேல் மகன் - வேலன.

(வி-ரை.) உம்மையை அபர்கலோடி கூட்டுக. நிரித்தல் சுழற் றல் வேலன-வெறியாட்டாளன (படிமதானை)

புயரா வெறியின்.
(5—வது வரி.)

(ப-ரை.) அயரா வெறியின - வெறியாடியும்.

(வி-ரை) "இன்னிசைச செல்லாசை செலம்பின் வள்வார் சிறு பறை' போல அயரா வென்பது, "கல்லாக களிப்பா தலையாயா' எனபது தோன்றது. உம்மை-சிறப்பு, எசச வுமமையுமாம், மறிஎசகு தலுமென வருதலின்.

போகாக் காலை.
(7—வது வரி.)

(ப-ரை.) போகாக் காலை - (அதனால்) நீராதபோது.

'அன்பும்' என்பதுமுதல் 'பழங்கணன்னெயரும்'
என்பதுவரை.
(2—4 வரிகள.)

(ப-ரை.) நெற்பிடித்து - பரப்பிய நெல்லினை மூன்றிரண்டொ னறுபடப் பிடிதது, அன்பு - முருகணஙகினவெலிது, பயிற கழுத தும - கழுதது தினையுடைய மயிலது, மலையடியும - சோழிக கொடி யிது, உரைகும் - (தோன்றுகினறனவெனறு) சொலலும, குறியி னெரும - கட்டுவிதது குறியினைற் றெயவதது தினைனுசெனறறித லால், நகுகு-(அவரும) நகுகுதறகுக காரணமாகிய, ஆளர் உற்ற - தனபத்தினால் வநத, பழஙகண் அனனெயரும் - மெலிவினையுடைய தாயரும.

(வி-ரை.) குறிகிலக்கணம் - தென் மூன்று மிரண்டு மொன் றும் பகை. அஃதாவது—அனபுங கொடியு மயிலும, "குயிலிதன் றேயென னாஞ்சொல்லி கூறன்றிற் றமபலத்தா, னியலிதன் றே யென னாகா விறைவிறற் சேய்கடவு, மயிலிதன் றேகொடி வார ணஙு காண்கவன் சூர்தடிநத, வயிலிதன் றேயிதன்றே நெல்லிற் றோன்று மவனவடிவே" என்னும் பாட்டில், பேராசிரியர் குறிகில

க்கணம் கூறுதற்க ணுபகைமைய வேலென்றுற்போல, அன்பென்றது வேலாயிற்று. போர் செய்யாநின்ற வடியினையுடைய கோழியை மலையடியென்று ரன்மொழித்தொகையான். மயிற்கழுத்துப் பின் மொழிநிலையல்-மயிற்கழுத்தைத்த தோன்றிய தெளிணுமாம். உம்மை - எச்சவும்மை. மலைதல் - சண்டை செய்தல். அடி - கால். இதுபற்றி யன்றே இதனைக் காலாயுதமென வழங்குவது.

புணர்க்குவ வென்னும்.

(7—வது வரி.)

(ப-ரை.) புணர்க்குவ - இங்ஙனஞ் சொல்லப்படுவன், என்னும்-என்னுஞ்சொல்.

(வி-ரை.) போகாக்காலை யென்னுமென வியையும்.

'நான்கெயிற்ற' என்பதுமுதல் 'ஏந்த' என்பதுவரை.

(8—9 வரிகளை.)

(ப-ரை.) நான்கு எயிறு - நான்கு மருப்பினையுடைய, ஒருத்தல் - அயிராபதத்தின், பிடர்ப்பொலி - பிடரிற் பொலியும், வரைப்பகை - தேவேந்திரன், அறுகால் - வண்டுகள், குளிக்கும் - மூடுதற்கிடமாகிய, மதுத்தொடை - மதுவினையுடைய மாலையினை, ஏந்த - ஏந்த.

(வி-ரை.) வரைக்குப் பகையாதலி னிந்திரனை 'வரைப்பகை' என்றார், பனிப்பகை சூர்ப்பகை யென்றுற்போல.

'முட்டாள்' என்பதுமுதல் 'மணவழலோம்ப' என்பதுவரை.

(10—11 வரிகள்.)

(ப-ரை.) முள் தாள்-முள்போற் தாளின்கணுடைய, செம்மலர் - சிவந்த தாமரையிலிருக்கும், நான்முகத்தொருவன் - நான்கு திருமுகங்களையுடைய பிரமன், எண்ணி - விதிப்படி விசாரித்து, நெய் இறைத்து - நெய்யினை வார்த்து, மணவழல் ஓம்ப - மணவேள்வித் தீயினை வளர்க்க.

(வி-ரை.) தேவரன்றித் தெய்வமானிடராதலின் 'எண்ணி' என்றார். தாள் - நாளம். நான்முகத்தொருவன் என மேல்வருதலால் மலர் தாமரைமலரைக் குறித்தது.

'புலியளந்து' என்பதுமுதல் 'பெறுநீர்வார்ப்ப' என்பதுவரை.

(12—13 வரிகள்.)

(ப-ரை.) புலி அளந்து - பூமியையளந்து, உண்ட - பின்னுகர்ந்த, திருமேனியோன் - விட்டுணு, இருகரமடக்கி - இருகையுங் கூட்டி, பெறு நீர் வார்ப்ப - உதகக்கிரியை பண்ண.

(வி-ரை.) பெறுதற்கிடமாகிய நீர் பெறுநீர்.

'ஒற்றையாழியன்' என்பதுமுதல் 'பேருவிளக்கேடுப்ப' என்பதுவரை.

(14—15 வரிகள்.)

(ப-ரை.) அண்டம் விளர்ப்ப - அண்டமெங்கும் விளங்கும்படி, ஒற்றை ஆழியன் - ஒற்றை வண்டியினையுடைய வாதித்தனும், முயலுடன் - உடலில் முயலினையுடைய, தண்சுடர் - சந்திரனும், பெருவிளக்கு எடுப்ப - பெருவிளக்கேற்ற.

(வி-ரை.) "மின்னேர் தன்யாழி வெங்கதி ரொன்று" என்றார் பிறரும். அண்டம் - உலகம். ஆழி - உருளை, இது ஆகுபெயராய்த் தேரை யுணர்த்திற்று.

'அளவா' என்பதுமுதல் 'பெரும்புகழ்விளைப்ப' என்பதுவரை.

(16—17 வரிகள்.)

(ப-ரை.) விஞ்சையர் எண்மரும் - விஞ்சைய ரெண்மரும், அளவா - எட்டித்தானங்களினு மந்தந்தத் தானங்களுக்குச் சொன்ன வளவாக, புலன் கொள - தொழில் கொள்ளும்படி போர்த்த, வள்ளியில் - தோலினையு மழகினையுமுடைய, கருவியில் - யாழில், பெரும் புகழ் விளைப்ப - மிக்க புகழை வாசிப்ப.

(வி-ரை.) புலன்-சாதியொருமை. உம்மையுமுருபுந்தொக்கன. புலன்களெனவே தான மெட்டாயிற்று. அவை: நெஞ்சு முதலியன. இடைபிங்கலை யியக்கமறுத்து மூலாதாரமுதற் பிரமரந்திரமளவு மியக்கமாக்கி நடுவே தொழில்கொள்ளப் பாடுதன்மரபு. வள்-தோல், 'விளக்கழ லுருவின் விசியுறு பச்சை" என்றார் பாணற்றிறனும் கருவி பாழ்முனிவர்.

முனிவர் செங்கரஞ் சென்னி யாக்க.
(18—வது வரி.)

(ப-ரை.) முனிவர் - முனிவர்கள், செங்கரம் சென்னி ஆக்க சென்னியில் செய்ய கரத்தைக் கூப்ப.

(வி-ரை.) ஆக்கவெனவே கூப்பவென்றுரையிற்று.

உருப்பசி முதலோர் முன்வாழ்த் தெடுப்ப.
(19—வது வரி.)

(ப-ரை.) உருப்பசி முதலோர் - உருப்பசி முதலாகிய பஞ்ச வேசையர், முன்வாழ்த்து எடுப்ப - பழைய வாழ்த்தினைச் சொல்ல.

'மும்மூலை' என்பதுமுதல் 'நெஞ்சினர்' என்பதுவரை.
(20—22 வரிகள்.)

(ப-ரை.) மும்மூலை ஒருத்தியை - மூன்று மூலையினையுடைய தடாதகையை, மணந்து - கல்யாணம் பண்ணி, உலகு ஆண்டஉல் கினைப்புரந்த, கூடற்கு இறைவன்-மதுரைக்கிறைவனுனவனுடைய, இரு தாள் - இரண்டு பாதங்களையும், இருத்துங்கையர் - வேறு படா திருத்துதற்கிடமாகிய, வென்றி நெஞ்சினர் - வெற்றியினை யுடைய நெஞ்சினர்.

(வி-ரை.) கவைத்தல் - இருகூறுபடுதல். கவையாதென்பது விகாரம். வென்றி - புலன்களின்வழி மனத்தை விடாமை.

'நோக்க' என்பதுமுதல் 'என்னுதுட்டே' என்பதுவரை.
(22—25 வரிகள்.)

(ப-ரை.) நோக்க - கருதிநோக்க, பிறவியும் - பிறவியும், குற்ற மும் - (பிறந்ததனால் வந்த) குற்றமும், பிரிந்தன போல - நீங்கினாற் போல, பீரமும் - பசலையும், நோயும் - (பசலை முதிர்ந்ததனால் வந்த) தின்பமும், மாறின்-நீங்குமாயின், வாரித்துறைவற்கு - கடற்றுறை வற்கு, என்னுதும் - யாமென்னுவேம் (இருவாற்றானு முயிர்வாழ்த லரிதென்க).

(வி-ரை.) நோய் - தின்பம், "நோயு மின்பமு மிருவகை நிலை யின்" என்றாற்போல. பீரம் - முதிர்நோய், பசப்புறுபருவால்போல. போன்றது - சுட்டாய்நின்றது. உம்மை - சிறப்பும்மை. எவனென் னும் வினுப்பெயர் என்னென்னு யீண்டின்மை குறித்துநின்றது.

பிரிதகரிய யாம வருந்தவு நிங்கிலெனக கருதி முனகூடிய வன பெலலா மினறெனனு மெனனுங கருததானா' எனனுதம' எனறாள

வேலன வெறியாடியும கோய நீஙகாதாயின் அனனையா புணரப பதுமெனனும அகோய நீஙகிற கடறறுறைவாக கியாமெனனு வேர, இவவிருவாறருணு முயிவாழத லரிதென வினறுடிவுசெயக வகாரம - றறுறை (கூக)

திருக்கோவையார் கூசஉம் செயயுள்.

நெஞ்சொடுநேதல்

நேரநொடு நோகலேம்பது—மீளகினேனத கலமக , பின னும பெருனமேன செலலாகினற வுளளதனனையினம மீளமாட டாது, இவவிராடடனள இபபொழுது நீ யேதுசருப போகமுல கினருயெனத தனனெஞசொடு கொனது கூறுகிறறல நதறகுச செயயுள —

பொன்னணி மீடடிய வோடடரு நெஞச மிப் பொங்குதிவகா னினனணி நிறகுமி தெனனெனப தேயிறை யோரிறைருசு மனனணி நிலலே வளநக ரனனமன னநகடையாண மினனணி நுண்ணிடைக கோபொருட் கோநீ விடைகினறதே.

வலலழற கடதது மெலலியலே நினேனது
வெஞ்சுடா வேலோ னெஞ்சொடு கொனதது

(ப-ரை.) பொன அணி - பொறறிரளை, ஈட்டிய - ஈட்டிவான, ஓட்டரு - ஓட்டறகரும, நெஞ்சம-நெஞசமே ம, நீ விடைகினறது (இப பொழுது) நீவிரைகினறது, இமையோர-இமையோர, இறைஞ்சு ம-சென று வணஙகும, மன - இறைவனது, அணி - அழகிய, நிலலே - நிலலேயாகிய, வளம நகர அனன-ளள மபொருந்திய நகரையொகும, அனன நடையான - அனனது தினது நடைபோறு நடையையுடை யாளது, மின அணி-மினபோலும, நுண்ணிடைகோ - நுண்ணிய விடைகோ, பொருடகோ - (எதிதறகுகொணட) பொருளுகோ (அனறிது இரண்டிறகு மலலவோ), இபபொழுகு இவவழல பொருகு கிற, வெம கானில - வெங்கானததை, நண்ணி - சோரது, கிறகும - (போவதும மீளவதுஞ செயயாது) நிறகினற, இது - இகனில, என எனபது - யாதெனறு சொலலப்படுவது, எ - று

(வி-ரை.) நண்ணி யென்பது நணியென விடைக்குறைநது கின்றது. அணியெனனு பிரிதது வெங்கானினக ணணிதறகுறைப

தென முரைப்பினுமையும. இமையோ நினறஞசுக திலலைவளாக சென வியையும

நேரிசையாசிரியப்பா.

பொருளசெய லருதநியி னெண்வழி தடைநது
நாறறிசை நடகசு மனைகின வயவத
தலைதரு தட்டைக கருமபுற மலைமடல்
கடறறிரை யுகளுங் குறுஙகய மாணுங்
5 கடுஙகான் றளளித தடைதரு நெஞசங
சரிலைத தென்பாற கானகந தனிப்ப
தேவரிஞ் சுடைகசு தாமரை யேயின்
மணகமோ றாத குளைமோ மதனைத
திருகதுள முளளத தடாத மரைமெ நாடி
10 தெனபிழத திரையோ ஞகிய தனிமுகற்
நிருமா மதுரை யெனுந்திருப பொறிமுடி
யெனனுபி ரடைதத பொன்முலை செபபி
னளவம நின்பங கருதியோ வனறிப
புறன்பயன கொடுகசும் பொருடகோ வாழி
15 வானமூலை யினபெனின் மறிதநோக குமதி
பெருமபொரு ளினபெனிற பிறிதுகடை யினறே
யோதல வேணடும வாழிய பெரிதே.

பொருளசெயலருதநியின - வாழியபெரிசே. பநதி - பொருள வயிறபிரிதல. துணை - நெஞசொகோதல.

'போருள்செயல்' என்பதுமுதல 'கடுங்கான்றள்ளி' எனபதுவரை.

(1—3—5 வரிகள.)

(பதவுரை) பொருள செயல் - பொருளோத தேடுதலையுடைய, அருதநியின - ஆசையினால, அலைதரும - எனனை யலைதலைசெய யும, கடுஙகான றள்ளி - கடிய காணிடசதிற செலலுதறகு.

(வி-ரை) அலைதரும எனபதறகுப பகுதி அலைதா.

எண்வழி தடைநது.
(1—வது வரி.)

(பத-ரை.) எண்வழி தடைநது - எணங்கினை எண்ணுது பண்ணி.

(வி-ரை.) எண்ணும் வழியைத் தடைபடுத்தியது எண்ணத் பண்ணியதென்க.

'நாற்றிசைநடக்கும்' என்பதுமுதல் 'வாழிய' என்பதுவரை.
(2—5—17 வரிகள்.)

(ப-ரை.) நாற்றிசை நடக்கும் - (பார்க்கும்பொழுது) நான்கு திசையினும் வெளிப்படும், தட்டைக் கரும்புற - கரும்புறு மூங்கிலும், மலை - (அழகிய) மலையும், மடல் - பூவிதழும், கடல் திரை - திரைக்கடலில், உகளும் - திரியும், குறுங்கயல் மானும் - குறிய கயலும்போலும், அணங்கின் அவயவத்து - கரும்பெழுதிய தோளும் அழகிய முலையும் வாயும் கண்ணுமாகிய அணங்கினுடைய அவயவத்தால் வரும், அருத்தியில் - ஆசையில், எண்வழி தடைதரும் - பொருளீட்டுதலே யெண்ணுது பண்ணும், நெஞ்சம - நெஞ்சமே, வாழிய - நீ வாழ்வாயாக.

(வி-ரை.) அருத்தியிலெண்வழி யென்றதை அவயவத்திற்குங் கூட்டுக. உவமை "ஆய்தூவி யனமென வணிமயிற் பேடையெனத், தூதணும் புறுவெனத் தூதைத்தின் னெழினலம்" என்றற்போலக் கொள்க.

'கயிலைத்தென்பால்' என்பதுமுதல் 'கோமதனே'
என்பதுவரை.
(6—8 வரிகள்.)

(ப-ரை.) கயிலைத்தென்பால்-கைலைலைக்குத் தெற்காய, காணகம் - கார்ட்டதத்தில், தனித்த - தேவியைவிட்டுப் பிரிந்த, தேவர் நெஞ்சு - தேவர் மனத்தை, உடைக்கும் - உடைத்தற்குக் காரணமாகிய, தாமரை எவின் - தாமரையம்பை யேவினாற்போல, மணக்கோல் தரத்த - சில தாமரையம்பை யேவுதற்கேதுவாய், குணம் குணத்தினையுடைய, கோமதனே - கோவாகிய மன்மதனே.

(வி-ரை.) மணக்கோலென்றமையின் மலராயிற்று. தரத்த குணம் - ஏவுதலான் வந்த சிலையொலி யெனினுமாம்.

'திருக்குளம்' என்பதுமுதல் 'போற்றுடி' என்பதுவரை.
(9—11 வரிகள்.)

(ப-ரை.) திருக்குளம் - அழகிய தெற்றியில், மூளைத்த-தோன்றிய, கண் தாமரை கொடு - கண்ணாகிய தாமரையைக்கொண்டு,

தென் கீழ்த்திசையோன் ஆக்கிய - தெருப்பாக்கிய, தனி முசல்-ஒப் பற்ற முதலானவன், திரு மா-அழகினையும் பெருமையினையு முடைய, மதுரை என்னும் - மதுரைபோலும், திரு பொற்பொடி - அழகினை யுஞ் செல்வத்தினையுமுடைய பொற்பொடி.

(வி-ரை.) சிறப்புவிலக்களைக வுவமை வந்தது கொடு சென் ண்டு என்பன மூன்றுவதன சொல்லுருபுகள். தென்கீழ்த்திசை யோன்-நீ தனிமுதல் எனறது சிவபிரானை.

'என்னுயிர்' என்பதுமுதல் 'பொருட்கோ' என்பதுவரை.

(12—14 வரிகள்.)

(ப-ரை.) என் உயிர்-என்னுயிராகிய, பொன் அடைத்த-பொன் னையடைத்த, மூலை - மூலையாகிய, செப்பின் அளவு அமர் - செப்பி னளவாயமர்ந்த, இன்பம கருதியோ - இன்பத்தைக் கருதியோ, அனறி - அதுவன்றி, புறன்பயன-பின் பயனை, கொடுக்கும்-கொடுக் கும, பொருடகோ - பொருளைக கருதியோ.

(வி-ரை.) கருதி யென்பதனைப் பொருளைக் கருதியோவென வுங கூட்டுக. பொருட்கென்ப தருபுமயக்கம அளவமாதல்—"அல் குல்போல வளர்ந்தனறது" எனறுற்போல நினறது.

'ஆழிவளர்' என்பதுமுதல் 'பெரிதே' என்பதுவரை.

(14—17 வரிகள்.)

(ப-ரை.) ஆழிவளர் - (கடைப்பட்டது யாதினுல் இவற்றுள்) வட்டமாக வெழுபினறது, மூலை இரண்டினை - மூலையால்வரு மின பத்தினுலெனின, மற்றது கேடகு - திருமபிச செலவாயாத, பெ ரும - அதுவன்றி பிறிதுக, பொருள இரண்டினில்-பொருளால் வரு மன்பத்தினுலெனில, பிறிது தடை இனறேற-அதற்கு வேறு தடை யிலையாதலால், (யாதினிடத கருதியதானறை-நீ கருதியதை) முதல் வேணடும் பெரிது - பெரிதாகச செலவாய.

(வி-ரை.) மதி - முண்ணிலையசைசசொல். யாதினையென்பது உருபுமயக்கம்.

பொருளாசையாற் சானிற்றள்ளி யணங்கினை யெண்ணுது பண்ணி அவயவத்தாசையாற் பொருளீட்டுதலை யெண்ணுது பணமு நெஞ்சமே, வாழ்வராக, இனபத்தைக கருதியோ பொருளைக் கருதி யோ தடைப்பட்டது யாதினுல, இவற்றுளினபத்தினுலெனின மீள

வாயாக, பொருளாலெனிற் செல்வாயாக, ஆதலாலிவற்றுட் கருதிய தொன்றை சொல்வாயாகவென வினைமுடிவு செய்க.

இது "நோயுமின்பமும்" என்னும் பொருளியற் சூத்திரத்து "உறுப்புடையதுபோ லுணர்வுடையதுபோல், மறுத்துரைப்பதுபோ னெஞ்சொடு புணர்த்தும்" என்பதனால், உணர்வுடையதுபோலவு மூறுப்புடையதுபோலவு மறுத்துரைப்பதுபோலவுங் கூறினர்.

ஆணங்கினை யெண்ணுதபண்ணிப் பொருளீட்டுதலை யெண்ணுதபண்ணு நெஞ்சே யென்றமையான் உணர்வுடையதுபோல வுங் கூறி, செல்வாயாக மீள்வாயாக என்றமையான் உறுப்புடை யதுபோலவும், செல்வாயாக என்றமையான் மறுத்துரைப்பதுபோல வுங் கொள்க. (கூ2)

திருக்கோவையார் நூற்கம் செய்யுள்.

வெழம் விண்ணுதல்.

வெழம் விண்ணுலேன்பது—குறைகூறத் தணியாரின்றவன் னெனகுறை யின்னதென்று இவளுக்கு வெளிப்படக் கூறவேண்டியன, இவள் மறக்கவுங் கூடுமென உட்கொண்டு, என்குறை இன்னதெ னறு இவடானே யுணருமளவும் காத்த மொழியாற் சில சொல்லிப் பின குறையுறுவதே காரியமென, வேட்டை கருதிச்சென்றனுக, ,வவிருவருழைச் சென்று கின்ற, தன் காதல் தோன்ற இவ்விடத் தொரு மதயானை வரக்கண்டமைபோலவென வேழம் விண்ணுதற்றல். அதற்குச் செய்யுள்.—

நீருகளி யாயின்றி யாளிறு மாப்பவின் பம்பணிவோர்
ருகளி யாவன லாடவல் லோன்றில்லை யான்மலையீ
கொருகரி யார்ப்ப வுதிர்த்தும் மதத்திரு கோட்டொருகீள்
கருகளி யார்மத யானையுண் டோவரக் கண்டதுவே.

ழையரிருவரு மிருந்த செவ்வியுள்
வேழம விணுஅய் வெற்பன் சென்றது.

(பதவுரை.) பணிவோர் மருகு - அடியவரிடத்தே யவரொடு கூடி, இருகுகளியாய் - பெரியகளிப்பையுடையனெனும், இன்று யான் நினைப்ப - யானின்றி நினைக்கும்வண்ணம், இன்பம் - இன்பத்தை, தனியா - எனக்களித்து, அனல் ஆட வல்லோன் - தீயாடல் வல் லோன், தில்லையான - தில்லையான், மலை-(அவனது) மலையின்கண்,

ஈங்கு - இவ்விடத்து, ஒருங்கு அளி ஆர்ப்ப - அளிகளொருங்கார்ப்ப, உமிழ் - உமிழப்படாகின்ற, மும்மதத்து - மூன்றுமதத்தையும், இரு கோட்டு - இரண்டு கோட்டையுமுடைய, நீள் - நீண்ட, கரு - கரிய, களி ஆர் - களியாரர்ந்த, ஒரு மதயானை-ஒருமதயானை, வர-வரகாதிப்ப, கண்டது உண்டோ - கண்டதுண்டோ (உரைமின்), எ-று.

(வி-ரை.) மருங்கு மாப்பவெனக் கூடிற்று. அனலாடவென் பது அனலோடாடவென விரியும். ஆர்ப்ப வரவெனக் கூட்டுக. ஆர்ப் பவு மிழுமெனினுமமையும். நீட்சி-விலங்குண்டாகிய பெருமை. களி-உள்ளச்செருக்கு. மதயானை - மதமிடையறுத யானை.

நேரிசையாசிரியப்பா.

தன்னுட லன்றிப் பிறிதுண் கனியிருள்
பகல்வலிக் கொதுங்கிய தோற்றம் போலப்
பெருநிலவு காண்ற நீறுகெழு பரப்பி
லண்ட நாடவர்க் காருயிர் கொடுத்த
கண்டக் கறையோன் கண்டரு நாதலோன்
மூன்றெரு நாளி னுற்படை யுடன்று
செழிய னடைத்த செண்ணி பாட
வெளளருங் கருணையி னள்ளிரு ளகிநா
ளவனெனத் தோன்றி யருஞ்சிறை விடுத்த
முன்னவன் கூடன் மூதூ ரன்ன
வெண்ணைகைச் செவ்வாய்க் கருங்குழன் மகளிர்
செம்மணி கிடந்தநம் பசும்புனத் துளறி
வாய்செரி மழைமதத் தழைசெவிப் புழைக்கைக்
குழிகட் பரூஉத்தாட் கூர்ங்கோட் டொருத்தல்
சினைதழை விளைத்த பழுமர மென்ன
வறுகாற் கணமும் பறவையுங் கிணையு
மேகமும் பிடியுந் தொடர
வேகிய முண்டே கூறுதிர் புரிந்தே.

தன்னுடலன்றி - கூறுதிர்புரிந்தே. பதுமி - மதியுடம்படித்தல். துணை - வேழம்விளைதல்.

'தண்ணுடல்' என்பதுமுதல் 'நுதலோன்' என்பதுவரை.
(1—5 வரிகள்.)

(ப-ரை.) தண்ணுடல் அன்றி - (ஆதித்தன்) தண்ணுடலையன்றி, நீறுகெழுபரப்பில் - நிலப்பரப்பில், பெருநிலவு காண்ற - மிகுந்த நிலவைக்காண்ற, பிறிதுண்-பிறிதுடலே மறையாகின்ற, கனையிருள்-செறிந்த விருளானது, பகல்வலிச்சு-ஆதித்தன்வலிக்காற்றது, ஒத்துங்கிய தோற்றம்போல - அவனிடத்தொத்துங்கிய தோற்றம்போல, அண்டநாடவர்க்கு - தேவர்க்கு, ஆருயிர் - அவர்களாற் பெறுதற்கரியவுயிரை, கொடுத்த - கொடுத்தருள்ளந்த, கண்டக்கறையோன்-கண்டத்திற் றோன்றுங் கறுப்பையுடையோனும், கண் தரு நுதலோன் -கண்ணேயுண்டாக்கிய நுதலினையுடையோன்.

(வி-ரை) இது இல்பொருளுவமை. ஆதித்தனுக்குப் பிறிதுமதி, பிறிது-ஆருபெயர், "உண்டற் குரிய வல்லாப் பொருளே, யுண்டன போலக் கூறலு மரபே" என்றமையால் 'பிறிதுண் கனையிருள்' என்றார். "வாயவன் காக்கையுங் கூகையுங் கூடி" என்றற்போலக் கண்டக்கறையோனென்பது நவம்பற்றி மயங்கிவந்தது.

'முன்னெரு' என்பதுமுதல் 'மகளிர்' என்பதுவரை.
(6—11 வரிகள்.)

(ப-ரை) செழியன் - பாண்டியன், நாற்படை - சதுரங்கசேனையால், உடன்று - போர்செய்து, அடைத்த - முன்காவலிடப்பட்ட, சென்னி - சோழன், பாட - பாட, முன்னெருநாளில் நள்ளிருணடுநாள் - ஒருநாள் செறிந்த விருளினையுடைய யாமத்தில், அவனைனத்தோன்றி - பிறரையாமம் பாண்டியனைனத்தோன்றி, எள்ளருங் கருணையின் - இகழ்தற்கரிய கருணையினால், அருஞ்சிறை விடுத்த - விடப்படாத சிறையினைவிட்ட, முன்னவன் - எல்லாப் பொருட்கு முன்னவன், கூடல் - மதுரையாகிய, மூதூர் அன்ன - முதியவூர் போனற சிறப்பினையுடைய, வெள் நகை - வெள்ளிய நகையினையும, செவ்வாய்-சிவந்தவாயினையும், கருங்குழல்-கரிய குழலினையுமுடைய், மகளிர் - மகளிர்.

(வி-ரை.) நாற்படை-"ஆறறியந்தணர்' என்றற்போல, நான்கு குணத்தினையுடைய படையெனினுமாம். அது - "மறமான மாண்ட கழிசெலவு தேற்ற, மெனநான்கே யேமம் படைக்கு" என்பதனுனறிக. நாற்படை : கூலிப்படை, துணைப்படை, நாட்டுப்படை,

காட்டிப்படை எனினுமாம். உடன்றடைத்தவென்பது "முகனமர்ந்து செய்யா ளுறையும்" என்றாற்போல நின்றது. அடைத்த வென்னும் பெயரெச்சஞ் செயப்படுபொருள் கொண்டது. மகளிர் - அண்மைவிளி.

'சேம்மணி' என்பதுமுதல் 'புரிந்தே' என்பதுவரை.

(12—18 வரிகள.)

(ப-ரை.) சொரி மழை - மழைபோலச் சொரியாநின்ற, மதம் - மதத்தினையும், தழை செவி - தழைத்த செவியினையும், புழைக்கை-தூனையுடைக் கையினையும், குழி கண்-குழிந்த கண்ணினையும், பருத்தாள் - பெரியகாலினையும், கூர் கோட்டு - வளைந்த கோட்டினையு மூடைய, ஒருத்தல் - யானையான தது, அறுகால் கணமும்-வண்டின் கூட்டமும், பறவையும்-பறவைகளும் (இத்தைத் தொடர்ந்தாற்போலத் தொடாவும்), கனையும் - என்னம்புள், மேகமும் - மேகமும், பிடியும் தொடா - பிடியும் தொடர்ந்தாற்போல, தழை விளைத்த - இலை தழைத்த, சினை-கோட்டினையுடைய, பழமாம் என்ன-பழமாம் பின்றொடரவும், வாய் உலறி - வாய்விட்டலறி, செம்மணி கிடந்த - சிவந்தமாணிக்கங்கள் கிடந்த, நும் பசும்புனத்து - நும்முடைய பசிய புனத்திடத்து, எதியது உண்டே - வந்ததுண்டோ, புரிந்து - விரும்பி, கூறுநிர் - சொல்வீராக.

(வி-ரை.) பழுமரம் பெயராய்நின்றது. எனவெனபதனைப் பின்னுங்கூட்டி உம்மை யிரண்டு மாறுக.

மகளீர், யானையான தது நும் புனத்திடத்து வந்ததுண்டோ, வீரும்பிச் சொல்வீரென வினைமுடிவு செய்க. (கக)

திருக்கோவையார் எசு ம் செய்யுள்.

உலகின்மேல் வைத்துரைத்தல்.

உலகின்மேல்வைத்துரைத்தலெ ன்பது—அற்றுமை கூறி அது வழியாகநின்று, ஆடவர் தம்முள்ளமாகியமீன் மகளிரது கண் வலைப்பட்டால் அதனைப் பெறுதற்கு வேறுபாய மில்லாதவிடத்து, மடலூர்ந்தும் அதனைப் பெறுவரென, உலகின்மேல் வைத்துக் கூறு நிற்றல். அதற்குச் செய்யுள்:—

காய்சின வேலன்ன மின்னியல் கண்ணின் வலைகலந்து
வீசின போதுள்ள மீனிழந் தார்வியன் றெண்புலியூ

நீசன சாகது மெருக்கு மணிக்தோர் கிழிபிடித்துப்
பாய்சின மாவென வேறுவர் சிறார்ப் பணைமடலே.

புலவேலண்ணல் புனைமடலேற்
றுலகின்மேல்வைத் துய்த்துரைத்தது.

(ப-ரை.) காய் சினம் - சாய் சினத்தையுடைய, வேல் அன்ன - வேல்போலும், மின் இயல் - ஒளியியலும், கண்ணின் - கண்ணையை, வலை கலந்து - வலையை மகளிர்கலந்து, வீசினபோது-வீசினபோது, உள்ளம் மீன் பிழந்தார் - அவ்வலைப்படுசலான் உள்ளமாகிய மீனை யிழந்தவர்கள், வியன் - பெரிய, தென்புலியூர் - தென்புலியூர்க்கணுள்ளதை, ஈசன - ஈசனுடைய, சாகரும் - நீற்றையும், எருக்கும் - எருக்கம்பூவையும், அணிந்து - அணிந்தது, ஓர் கிழி பிடித்து-ஒருகிழியைக் கையிற்பிடித்து, பாய்சினம்-பாயவல்ல சினத்தையுடைய, மா என - மாவென, பணைமடல் - பனைமடலை, சிறார் - சிறார்க்கண், ஏறுவர் - ஏறுவர் (தம்முள்ளம் பெறுதற்கு வேறுபாயமில்லாத விடத்தில்), எ-று.

(வி-ரை.) மின்னியல் வேலென்று கூட்டினுமமையும். இன் - அல்வழிச்சாரியை. 'கண்ணென் வலை' என்பதூஉம் பாடம். மகளிரென ஒருசொல் வருவியாது கருவி கருத்தாவாக உரைப்பினுமமையும். உள்ளமிழந்தவர் உள்ளம் பெறுமளவும் தம் வயமன்றி மடலின் வயத்தராய் நிற்றலால் கருவி கருத்தாவாகக் கொள்க. சாகரும் எருக்குமென இரண்டாகலின் ஈசனவெனப் பன்மையுருபு கொடுத்தார். பாய்சின மென்பழிச் சினம்-உள்ளமிகுதி. உய்த்துரைத்தது - குறிப்பாலுரைத்தது.

நேரிசையாசிரியப்பா.

இருளொடு தாரகை யிரண்டினை மயக்கிக்
குழலென மலரென மயல்வரச் சுமந்து
வில்லினைக் குனித்துக் கணையினை வாங்கிப்
புருவங் கண்ணென வுயிர்விடப் பயிற்றி
பலையினைத் தாங்கி யழுதினைக் கடைந்து
மூலையெனச் சொல்லென வரவர வைத்து
மெய்யினைப் பரப்பிப் பொய்யினைக் காட்டி
யல்குலிடை யெனநெஞ் சுழலக் கொடுத்து
முண்டக மலர்த்தி மாந்தளிர் மூடி

யடியென வுடலென வலமர நிறீஇ
மூரி வீழ்ந்த நெறிச்சடை முனிவர்
சருக்கங் காட்டு மருமறை சொல்லி
யுள்ளங்கற்றுத்துக் கண்கிவர் திட்ட
மாதிரத் தழற்குழி தொட்டுவயிறு வருக்கி
முன்பி னின்ற பேழ்வாய்ப் புலியினைக்
கைதைமுட் செறிந்த சுரையிற் றரவினைக்
காருடல் பொற்ற நீலிக குறளினை
யுரிசெய் துடுத்துச் செங்கர நரித்துச்
செம்மலர் பழித்த காட்சிப்ப கிடந்தி
யருணடம் புரிந்த தேவர் நாயக
னெருநாண் மூன்று புரந்தீக் கொளுவ
பொனமலி பிடிக்கை கார்முக மெனவ
வனைந்த ஞாண்று மெடுவின் டடையச்
காவ்கொடித் தன்ன காதிகணிபிரித்து
நெருக்குபொழிற் கூட லன்னெம மகளிர
கண்ணெனு தெய்வக் காட்சியுட் பட்டோர்
வெண்பொடி யெருகக மெண்புபின கிழியினை
நுசி யணிந்து நூண்டபரி கடவிக்
கரத்தி தாக்கி யகலோ
வருகதி பீட்டர் நிலைவல் லோரே.

இருளொடுதாரகை - நிலைவல்லோரே. பதி - மடல், நிறை-உலகின்மேல்வைத்துரைத்தல்.

'இருளோடு' என்பதுமுதல் 'சுமந்து' என்பதுவரை.

(1—2 வரிகள்.)

(ப-ரை.) மயல்வர - எல்லாமயங்கும்படி, இருளொடு தாரகை-இருளுந்தாரகையுமாகிய, இரண்டினை மயக்கி - இரண்டினையுமயக்கி, குழல் என-குழலெனவும், மலர் என-மலரெனவும், சுமந்து-சுமத்தி.

(வி-ரை.) இது உண்மையுவமை ஒடு எண்ணொடு, எண்ணும்மை தொக்கது.

'வில்லினைக்குனித்து' என்பதுமுதல் 'பயிற்றி' என்பதுவரை.

(3—4 வரிகள்.)

(ப-ரை.) உயிர் விட - நோக்கினருயிர்விடும்படி, வில்லினை குனித்து - வில்லினை வளைத்து, கணையினை வாங்கி-கணையையேற்று, புருவம் கண் என - புருவமெனவுங் கண்ணெனவும், பயிற்றி பயிலப்பண்ணி.

'மலையினைத்தாங்கி' என்பதுமுதல் 'வரவரவைத்து என்பதுவரை.

(5—6 வரிகள்.)

(ப-ரை.) மூலை என வர - மூலையென்று சொல்லவரும்படி, மலையினைத் தாங்கி - மலையினைத்தாங்கி, சொல் என்வர - சொல்லென்று சொல்லவரும்படி, அழகினைக் கடைத்துவைத்து-அழகினைக் கடைந்து வைத்து.

'மெய்யினை' என்பதுமுதல் 'கோடித்து' என்பதுவரை.

(7—8 வரிகள்.)

(ப-ரை.) அல்குல் என-அல்குலுண்டென்னும்படி, மெய்யினை பரப்பி - உண்மையைக்காட்டி, இடை (என) - இடையில்லை யென்னும்படி, பொய்யினை காட்டி - பொய்யினைக்காட்டி, நெஞ்சு உழல கோடித்து - நோக்கினர் நெஞ்சு திகைமாறப்பண்ணி.

(வி-ரை.) உண்டில்லை யெனவிருக்க, அல்குலுண்மையி னுண்மையைப் பரப்பி என்றும், இடையென்றுங் கட்புலனுகாமையிற் பொய்யினைக்காட்டி யென்றுங் கூறினர்.

'முண்டகம்' என்பதுமுதல் 'அலமரநிறீஇ' என்பதுவரை.

(9—10 வரிகள்.)

(ப-ரை.) அடி என-அடியென்னும்படி, முண்டகம் மலர்த்தி - தாமரையை மலரப்பண்ணி, உடல் என-மேனியென்னும்படி, மாத்தளிர் மூடி - மாத்தளிரைப் போர்த்து, அலமர நிறீஇ - நோக்கினரை மயக்கப்பண்ணி.

(வி-ரை.) இவையெல்லாம் விகாரம்பண்ணி யுருவகமாக்கலின் விகாரவுருவகமாம்.

மூரிவீழ்ந்த' என்பதுமுதல் 'தேவர்நாயகன்' என்பதுவரை.
(11—20 வரிகள்.)

(ப-ரை.) மூரிவீழ்ந்த - முதன்மையாக வீழ்ந்த, நெறி சடை - நெறித்தலையுடைய சடையினையுடைய, முனிவர்-தாருகவனத்திருடிகள், கண் சிவந்த-கண்சிவப்ப, உள்ளம் கறுத்து-உள்ளமெவ்வுண்டு, தழல் குழி தொட்டு-ஓமகுண்டந் தோண்டி, சருக்கம் காட்டும் - அதனிடத்து சருக்கங்காட்டும், அருமறை மந்திரம்சொல்லியிட்ட-அரிய வேதமந்திரத்தைச் சொல்லியிட்ட, வயிறு வருந்தி முன்பினின்ற - ஓமத்தீயி லுண்டாக்குதலாகிய, பேழ்வாய்-(பல்வலியோடு கூடினின்ற) பெரிய வாயினையுடைய, புலியினை - புலியினை, உரிசெய்து உடுத்து - உரித்துடித்து, கைதை மூள் செறித்த - தாழைமுள்ளினைச் செறித்தாற்போன்ற, கூர் நயிறு அரவினை - கூரியபல்லினையுடைய பாம்பினை, செம் கரம் தரித்து-செய்யகரத்திலணிந்து, கரு உடல்பெற்ற-கரிய வுடலினையும், நீலிழி-நெருப்புமிழ்ந்த விழியினையுமுடைய, குறளினை-முயலகனை, செம்மலர் பழித்த-செந்தாமரையைப்பழித்த, தாள் ஓர் இடத்தில்-திருவடியின் ஓரிடத்தில், அருள்-எல்லார்க்குங் கிருபை பண்ணுகின்ற, நடம் புரிந்த - திருநடஞ்செய்த, தேவர்நாயகன் - தேவர்நாயகன்.

(வி-ரை.) அருணடம்-அருளுதற்குக் காரணமாகிய நடம், பஞ்சாக்கரமே திருக்கூத்தாதலின், "வயிறு நடுகடல் வண்ணன் பண்டொருநாட் கடல்வயிறு கலக்கினே" என்றார் சிலப்பதிகாரத்தினும். எண்ணும்மை தொக்கது. இது பெயரினை நிரனிறை.

'ஒருநாள்' என்பதுமுதல் 'உட்பட்டோர்' என்பதுவரை.
(21—26 வரிகள்.)

(ப-ரை.) மூன்று புரம் - மூன்றுபுரமும், ஒருநாள் - ஒருநாளையில், தீக்கொளுவ - தீப்பற்ற, பொன்மலை பிடுங்கி - மகமேருவைப் பிடுங்கி, கார்முகம் என்ன வளைத்த-வில்லென வளைத்த, ஞான்று - அன்று, நெடி விண் தடைய - நெடியவாகாசம் வீழாது தடைபடும் படி, கால்கொடுத்தன்ன-காலாகக் கொடுத்தாற்போல, கங்கிகள் நிமிர்ந்து - கழுகுகளுயர்ந்து, நெருக்கு-நெருங்குகின்ற, பொழில்-சோலை சூழ்ந்தற்கிடமாகிய, கூடல் அன்ன - மதுரைபோன்ற, செம்மகளிர் - அழகினையுடைய பெண்களுடைய, கண் எனும் தெய்வம் - கண்ணாகிய தெய்வத்தினது, காட்சியுள் பட்டோர்-தோற்றத்தில் அகப்பட்டோர்.

(வி-ரை) இம்மையுகமென்னு மகத்திற் காட்சியை அழகென் றமையா லழகிலகப்பட் டெனினுமாம். தெய்வம், சூரமகளீர், அவர் கள் தங்களே வழிபட்டணேந்தாரை வருத்தாமையு மணேயாதாரை வருத்துதலு முடைமையின் 'கண்ணெனுந் தெய்வம்' என்றார். இனைத்தென வறிந்த வுண்மை தொக்கது. நெருங்குதல் - நெருக்கு தல், விகாரம். "ஓசை அரிதிலே பெறுது" என்னு மகப்பாட்டில் தோற்றத்தைக் காட்சி யென்றமையாற் காட்சி தோற்றமாயிற்று.

நிலேவல் லோரே.
(30—வது வரி.)

(ப-ரை.) நிலேவல்லோர் - நிற்றற்கு மாட்டாதார்.

(வி-ரை.) உள்ளம் பெறுமளவுந் தம்வயமன்றி மடல் வயத்த ராய் நிற்றற்கு வல்லமையுடையோரெனப் பொருள்கூறிற் செய்யு ளாய் மறையாகாது வழக்காய் உடன்பா டினர்த்திற்று, 'வேண்டுவ னென்று சொன்னுன் வில்வலான்" என்றற்போல.

'வேண்போடி' என்பதுமுதல் 'மீட்பர்' என்பதுவரை.
(27—30 வரிகள.)

(ப-ரை) வெண் பொடி பூசி - உள்ளம் பெறுதற்கு வேறுபாய மில்லாதவிடத்து திருநீற்றைப் பூசி, எருக்கம் அணிந்து - எருக்கம் பூவையணிந்து, என்பு பூண்டு-எலும்பினைப்பூண்டு, பலே பரிகவி-பரியெனப் பலேமடலேச் செலுத்தி, கிழியினேக் கரத்ததாக்கி - கிழி யைக் கையிற் பிடித்து, அகோ வருத்தி - அவரைப் பெறவேண்டு மென்னும் வருத்தமுடைய வுள்ளத்தை, மீட்பர்-தன்வயமாக்குவர்.

(வி-ரை.) அருத்தி - ஆகுபெயர்.

மகளிர் காட்சியா லகப்பட்டு நிற்றற்கு மாட்டாதார் பூசியணி ந்து பூண்டு கடவியாக்கி யங்ஙோவையுடைய வுள்ளத்தை மீட்பரென வினேமுடிவு செய்க. (ஈச)

திருக்கோவையார் கஎஉ-ம் செய்யுள்.

அல்லதுறி யறிவித்தல்.

அல்லதுறி யறிவித்தலென்பது — குறியல்லாத குறியெதிர்ப் பட்டு மீண்டமை, பிற்றைஞான்று தலேமகன் சிறைப்புறம் வருது நிற்ப, தோழி தலேமகளுக்குக் கூறுவான்போன்று, அன்னத்தின் மேல்வைத்து அறிவியாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

மீனனங கலருஞ சடைமுடி யோனவியன நிலலேயனஞ
யெனனங கலமர லெயதிய தோவெழின முதகத தொதகதிப்
பொனனங கலாபுனனச சேகனையின வாயபபுலம பறறுமுறறு
மனனம புலரு மளவுங துயிலா தமுஙகினவே.

வலலி யனனவ ளலல ருநிபபா
டறைபபனற துறைவருகுச சிறைபபுறத துரைதத்து.

(ப-ரை) மின அங்கு அலருமை-ஒளி யவவிடத்துவிரியும், சடை முடியோன - சடையாலியன்ற முடியை யுடையவனது, விபன திலலே அனனைய - அகன்ற நிலலேயை யொபபாய, எழில - எழிலை யுடைய, முதகம தொதகதி - (அருமபாகிய) முதகதகொதகதி, பொன அங்கு அவர புனனை-அவவிடத்தருகி (தாதாகிய) பொனனலநீர புனனை கருணணடாகிய, சேகனையின வாய தம பகனையிடத்து, அனன முறறும - அனனமெலலாம, புலமபுறறு - கனவுறறு, புலரு மளவும - புலருமளவும, துயிலாது துயிலாது, அழுஙகின - ஆர வாரிதன, அங்கு வெயதிய-துவவிடத வெயபபிய காலை, அலமரல-கருதகம, என - எனனும (அறிகினறிலேம), எ - று

(விசேடம) மினனங்கலருமெனபதற்கு நினை யவிடத தலாத தாறபோலு ஞ சடை யெனறுமமையு. எனனங கலமர லெயதிய தோ வெனபதனகு எனன ஆரவல ஆணடிட கிறபோவெனபு கூடடியுரைபபினுமமையு இபபொருடகு எனனவெனபது கடைக குறைநினறது முதகத தொசசுகையும பொனமலாதவுமாகிய ஈறபினறொடரபில முதகனமேலேறி னினறன சேகனையினவாயபுலம கனவென வியையும தெரிவபபழுது துயினறில வெனபாள, புலரு மளவு எனருன பிறனைருனன பதறகுறி வகது கிறபதகு நீஙகொனறுமமையும. அழுகலல - இராகதமமினறுமம யும அழுகப புனல-அனறு லயுடைய புனல. செபபபாடு-தடை. பயன-ஆலல குறிபபடடமை தலேமகற குறறநதுல இனிதபபோன தெயதல.

நேரிசையாசிரியபபா.

வறறிய நரமபி னெடியகுரற பேழவாயக
குழிவிழிப பிறறற்பற றறறற கருங்கா
ருனிப போதகின றருமபிப பெருந்தலே
வி னடைத தபபுமம மினகுறற குணங்கினங
5 கானம பாடி சுறறினின றுடச

சுழல்விழிச் சிறுகைகைக் குடவயிற் றிருகுழைச்
சங்கக் குறுந்தாட் பாரிடங் குனிப்பத்
தேவர்கண் பனிப்ப முனிவர்வாய் குழறக்
கல்லவ டகந்திரண் மணிவாய்த் தண்ணுமை
மொக்தைகல் லலசு துதிரி யேங்கக்
கட்செவி சுழலத் தாழ்சடை நெறிபட
வீதழிதா துதிர்ப்பப பிறையமு ளுகுக
வெளரியம் பலத்துட் டுளரிய பெருமான்
கூடன் மாநக ரன்னே பொற்கொடி
பிரவிக் கண்ணிய வைகறை காறு
மேமர லெண்ணெகொ லறிநதிலம் யாமே
வெண்முத் தரும்பிப் பசும்பொன் மலர்நறு
கடைநதசெம் பவளத் தொத்துடன் காட்டு
மிரும்புக வைக்குன்ன கருங்கோட்டுப புன்னைச்
சிறுங்முக மேநதிய வினர்கொளவாய்க் குடம்பை
னெகர் புனிலம் வெண்மையிட மறைநகுஞ்
சிறைவிரி தூவிச செங்கா லன்னங்
குயம்பார்ப பீனநதும பெடையொடு வெரிஇச்
சேவலு மினமுஞ சூழங்
காவின் மாரிந துபிலழங் குதற்கே.

வற்றியரம்பு - தயிலழுங்குதற்கே. பதிந்-இரவிற்குறி. நுரை-லகுதியறிவித்தல்.

'வற்றிய' என்பதுமுதல் 'நிற்றுட' என்பதுவரை.

(1—5 வரிகள்)

(ப-ரை.) நெடுங்குரல் - மிகுந்த சத்தத்தினையும், பேழ் வாய் - பெரியவாயினையும், குழி விழி - குழிந்த கண்ணினையும், பிறழ் பல் - நிரையொவ்வாப் பல்லினையும், வற்றிய நரம்பின் - வற்றிய நரம்பினையும், தெற்றற்கருங்கால்-தெற்றுதலையுடைய கரியகாலினையும், தாளிப் போந்தின் - பனைத்தலை விரித்தாற்போல, தருமயிர் - விரிந்தமயிரினையுடைய, பெருந்தலை - பெரிய தலையினையும், விண்புடைத்தப் புறம் - விண்ணின்றும் புறம்புடைத்து, விளங்குடல்-விளங்காநின்ற வுடலினையுமுடைய, குணங்கினம் - பேய்கள், காணம்பாடி - கானத்தைப்பாடி, சுற்றி நின்றுட - சூழ்ந்துநின்றுட.

(வி-மை.) எண்ணும்மை தொக்குடைய வென்பதனோடு முடிந்தது. கருமை பெருமையுமாம். தாளிப்பணை - பணைவிசேடம். போதின்றருமயிர்-தொழிலுவமம். புடைத்து-தட்டியெனினுமாம். காளமிசைப்பாட்டன்று.

'சுழல்விழி' என்பதுமுதல் 'குனிப்ப' என்பதுவரை.

(6—7 வரிகள்.)

(ப-மை.) சுழல் விழி-சுழன்ற கண்ணினையும், சிறு நகை-சிறிய நகையினையும், குடவயிற்று - குடம்போன்ற வயிற்றினையும், இரு குழைச சங்கம் - இரண்டு சங்கக் குழையினையும், குறுந்தாள் - குறிய தாளினையுமுடைய, பாரிடம் குனிப்ப - பூதமாட.

(வி-மை.) குழைச் சங்கம் - பின்மொழி நிலையல்.

தேவர்கண் பனிப்ப

(8—வது வரி.)

(ப-மை) தேவர் - தேவர்களெல்லாரும், கண் பனிப்ப-ஆக்தமாகிக் கண்ணீர் சொரிய.

(வி-மை.) கண் - ஆகுபெயர். பனிப்பவெனச் சினைவினை முதலோடு முடிந்தது, "குடமொழுகும்" என்புழிப்போல நின்றதன்று.

முனிவர்வாய் குழற.

(8—வது வரி.)

(ப-மை) முனிவர்-இருடிகளெல்லாம், வாய்குழற-வாய்குழற.

(வி-மை.) குழறலெனச சினைவினை முதலோடு முடிந்தது.

'கல்லவடத்திரள்' என்பதுமுதல் 'ஏங்க' என்பதுவரை.

(9—10 வரிகள்.)

(ப-மை.) கல்லவடத்திரள்-கல்லவடத்திரளென்னும் வாச்சியமும், மணிவாய-அழகிய வாயினையுடைய, தண்ணுமை-தண்ணுமையென்னும் வாசியமும், மொகுடை - ஒரு கட்பறையாகிய மொகுடையென்னும் வாசியமும், கல்லலக - கலலலசென்னும் வாச்சியமும், துத்திரி - துத்திரியென்னும் வாச்சியமும், ஏங்க - முழங்க.

(வி-மை.) ஏங்கவெனக் கருவி கருத்தாவாய் நின்றது, "ஏங்கொலிநீர் ஞாலம்" என்னுர் பிறரும்.

'கட்செவிசுழல' என்பதுமுதல் 'பொற்கோடி' என்பதுவரை.

(11—14 வரிகள்.)

(ப-ரை.) கட்செவி சுழல-புனைந்த பாம்பு சுற்ற, இதழி-கொன்றைமலர், தாது-தாதினை, உதிர்ப்ப-உதிர்ப்ப, பிறைஅமுது உருக்க-பிறை அமுதினைத் துளிப்ப, தாழ் - இவை தங்கிய, சடை நெறிப்ப - சடையானது நிமிரும்படி, வெள்ளியம்பலத்துள் - வெள்ளியம்பலத்தில், துள்ளிய-மாறியாடிய, பெருமான்-பெருமானுறையும், கூடன் மாநகரன்ன-கூடன்மாநகர்ப் பொலிவுபோன்ற, பொற்கொடி-பொலிவினையுடையாய்.

(வி-ரை.) கட்செவி, பொற்கொடி-அன்மொழித்தொகை. கழல உதிர்ப்ப உருப்ப நெறிப்ப என்பன "குளநிறைய மழைபெய்ததுபோல நின்றன.

சூழுங் காவின்.

(24—25 வரிகள.)

(ப-ரை.) சூழும் காவில் - நாற்சூழ்ந்து விளையாதற் கிடமாய காவிடத்தில்.

'எக்கர்' என்பதுமுதல் இனமும் என்பதுவரை.

(21—24 வரிகள்.)

(ப-ரை) எக்கர் - இமெணலாகிய, புளினம் - மணற்குன்றின், வெண்மையிட மறைக்கும் - நிறந்தெரியாது மறைக்கும், சிறை-சிறகினையும், விரி தூவி - விரிந்த சூட்டினையும், செம் கால் - செவ்விய காலினையுடைய, அன்னச்சேவலும் - அன்னசேவலும், இனமும் - அதனினமும். சூழும்பார்ப்பு அணைக்கும்-சூழியபார்ப்பினையணைக்கும், பெடையொடு - பெடையொடு, வெரீஇ - வெருவி.

(வி-ரை.) ஒடுவொருவினை, எண்ணெஞ்சுவுமாம்.

இரவிக் கண்ணிய வைகறை காறும்.

(15—வது வரி.)

(ப-ரை.) இரவிக் கண்ணிய - ஆதித்தனுதிக்கும், வைகறை காறும் - விடியற்காலமளவும்.

(வி-ரை.) இரவி-ஆகுபெயர். கங்குல் வைகிய வழுதியாதலின் 'வைகறை' என்றார்.

'வெண்முத்தரும்பி' என்பதுமுதல் 'குடம்பையின்'
என்பதுவரை.

(17—20 வரிகள்.)

(ப-ரை.) வெண்முத்து அரும்பி - அரும்பாகிய வெண்முத்தரும்பி, பசும்பொன் மலர்ந்து-தாதாகிய பசியபொன் மலர்ந்து, கடைந்த-பூங்கொத்தாகிய வொப்பமிட்ட, செம்பவளத் தொத்துடன் காட்டும் - செம்பவளக் கொத்தெல்லாங் காட்டும், இரும்புகவைத்தன்ன-இரும்பகவை பட்டாற்போன்ற, கருங்கோட்டு - கரிய கோட்டினையுடைய, புன்னை - புன்னையினது, சினைமுகம் - கொம்பிடத்தில், எங்கிய - வாயாலெடுத்த, இணர்கொள்வாய்க் குடம்பையின் - மலராற் சேக்கையாகக்கொண்ட கூட்டினிடத்து.

(வி-ரை) அரும்புதலும் மலர்தலும் காட்டுதலுமாகிய வுறுப்பின்முழின் முதன்மேலேறி நின்றன. ஒப்பமிட்ட பவளமும் பொன்னு முத்துடனரும்பி யலர்ந்தாற்போன்ற பூங்கொத்தினைக் காட்டுதற் கிடமாகிய வெனினுமாம். அது மலர்ந்தவென்பது "புகழ்புரிந்திலிலோர்க் கில்லை" என்றாற்போல மலர்ந்தென விகாரமாய்க் "குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச் செவ்வாயிக் கொடியிடை" என்றாற்போல நின்றது. "முத்தொடு பொன்பவள மழுத்த முப்புன்னைக்கீழ்" என்றார் சிற்றகத்தியத்திலும், "காவிற்கூடங்கிய கவ்விக்கொண் டிருந்தை" என்று சிந்தாமணியிற் கூறியவதனாலன்னம் பூவாற் கூடெடுத்தல் மரபன்றும்.

மாறித் துயிலழுங் கூஉம்.

(25—வது வரி.)

(ப-ரை.) மாறித் துயிலழுங்குதற்கு - துயில் கொள்ளாதொழிதற்கு.

(வி-ரை.) ஏகாரம் - ஈற்றசை. அழுங்கல் - இரக்கமுமாம்.

அலமர லெண்ணெகொ லறிந்திலம் யாமே.

(16—வது வரி.)

(ப-ரை.) அலமரல் - அவ்விடத்தெய்திய அலமரல், என்னெகொல் - என்னும், அறிந்திலம் யாமே - யாமறிகின்றிலம்.

(வி-ரை.) கொல் - அசை.

பொற்கொடி சூழுங்காவி லன்னமு மினமும் பெடையொடு வெருவிப் புலருமளவுங கூட்டிற் றுயில்கொள்ளாத தாரவாரித்தற்கவ் விடத்தெய்திய வலமாலென்னு மறிகின்றிலமென வினைமுடிவு செய்க. புலருமளவுமென்றது - பிற்றைஞான்று பகற்குறி வந்து நிற்பக் கூறினுளெனினுமாம். (கூடு)

திருக்கோவையார் கக-ம் செய்யுள்.

நலம்புனைந்துரைத்தல்.

நலம்புனைந் துரைத்தலென்பது — கிளவி வேட்டு வருத்தக் கண்ட தலைமகன் மூரன் முறுவல் செய்ய, தலைமகன் அது பெற்றுச் சொல்லாடாமையா னுண்டாகிய வருத்த நீங்கி, தமதகன்ற மருத நிலத்துக் குறிஞ்சிநிலத்து இவள் வாய்போல நாறும் ஆம்பற் பூக்க ளுளவோவென அந்நிலத்து வண்டோடு வினவாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

கூம்பலங் கைத்தலத் தன்பரென் பூடுரு கக்குணிக்கும்
பாம்பலங் காரப் பரன்றில்லே யம்பலம் பாடலரிற்
றேம்பலஞ் சிற்றிடை யீங்கிவ டீயுகனி வாய்கமழு
மாம்பலம் போதுள வோவுளி காணும் மகன்பணையே.

பொங்கிழையைப் புனைநலம்புகழ்ந்
தங்கதிர்வேலோ னயர்வுநீங்கியது.

(ப-ரை.) அளிகாள்-வண்டுகாள்! கூம் அகன் பணை-தமதகன்ற மருதநிலத்து, கூம்பு கைத்தலஞ்சோ-கூம்புங் கைத்தலஞ்சோயுடைய, அன்பர்-அன்பரது, ஈ-பு ஊடுருக - என்பு முள்ளுருக, குணிக்கும் - கூத்தாடாநின்ற, பாம்பு அலங்காரம்-பாம்பாகிய வணியையுடைய, பரன்-தனது, தில்லேயம்பலம்-தில்லேயம்பலத்தை, பாடலரின் - ஊதாரைப்போல, தேம்பு சிறு இடை-தேம்புஞ் சிறிய விடையை யுடைய, ஈங்கிவள் - இவளது, தீம் கனி வாய்-இனியதாகிய கனித்த வாய்போல, கமழும் - நாறும், ஆம்பல்போது உளவோ-ஆம்பற் பூக்க ளுளவோ சொல்லுமின், எ - று.

(வி-ரை.) அல்லும் அம்மும் அல்வழிச்சாரியை. பாம்பலங்கா ரம் மெலிந்து நின்றது. ஈங்கிவளென்பது ஒருசொல். கனிவாய்-கனி போலும் வாயெனினு மமையும். புனைநலமென்றது புனையப்பட்ட வியற்கைநலத்தை. அயர்வு நீங்கியது - சொல்லாடாமையி னுண்டா கிய வருத்த நீங்கியது. மெய்ப்பாடு - உவகை. பயன்-யெயபுணர்த்து

தல். இயற்கை யன்பினுலும் அவள் குணங்களாற் றேர் ன்றியசெய றகை யன்பினுலும் கடாவப்பட்டு நின்ற தலைமகன் தனதன்பு மிதகிலையை யுணர்த்துதல் நயப்புணர்த்துத லென்பது.

நேரிசையாசிரியப்பா.

அருடரும் கேளவி யமையத் தேக்கப்
பற்பல வாசான் பாங்குசெல் பவர்போன்
மூன்றுவகை யறிதத தேன்றரு கொழுமலர்
கொழுதிப பாடுங் குரைச்சுரும் பினங்கா
ளுளத்துவே டடக்கி முகமன் கூறி
வேட்கையி னீயிர் வீழ்ந்தாட் பூவினத்துட்
காருடற் பிறையெயிற் றரக்கரைக் கொன்று
வசரிதத் தடக்கை வரைபபகை சுமந்த
பழவுடற் காட்டுங் தீராப் பெரும்பழி
பனிமலை பயந்த மாதுடன் பிர்ந்தருளை
பெம்மான் வாழு பெருகர்க் கூட
லொப்புறு பொற்கழுடிச சிற்றிடை மடந்தைதன்
கொலையின ருவளமுங் குறைகொள விருண்டி
நான நீவி நாண்மலர் மிலைந்து
கூடி யுண்ணுங் குரைத்தினர் கிளேபோ
லீடிச் பெறிந்து கெய்தலுடல் குளிர்ந்த
கருங்குழற் பெருமனம் போல
வொருங்கு முண்டேல் பேசுவி ரெமக்கே.

அருடரும் கேள்வி-பேசுவிரெமக்கே. பதவி - இயற்கைப்டணர்ச்சி. துணை-நலம்புனைந்துரைத்தல்.

'அருடரும்' என்பதுமுதல் 'சுரும்பினங்காள்' என்பதுவரை.

(1—4 வரிகள.)

(ப-ரை.) அருடரும் - கற்றவரிவன்றி அருளே விளைக்கும், கேள்வி - கேள்வியாலுய வறிவினே, அமைய தேக்க - நிறைத்தடங கும்படி, பற்பல ஆசான் - பலபலவாசாரியன், பாங்கு - இடத்தி, செல்பவர்போல்-சென்று கேட்கின்றவர்போல, மூன்றுவகையெடுத்த தேன்தரு - உண்டதேனன்றிப் பலமலர் தருந்தேனே யுண்டமை

யும்படி சோட்டுப்பூ கொடிப்பூ நீர்ப்பூவென்னு மூன்று வகையாக வகித்த, கொழுமலர்-கொழுவிய மலர்களே, கொழுதிபாடும்-கோதிப் பாடாநிற்கும், குணம் குணத்தினையுடைய, சுரும்பினங்காள் - வண்டினங்காள்.

(வி-ரை.) உண்ட தேனுக்குக் கற்றவறி வுவமை அது வருவிக்கப்பட்டது. மலர்த்தேனுக்குவமை கேள்வியாலுயவறிவு. கேள்வி-ஆகுபெயர். மூவகைப் பூவிற்கும் பலவாகிரிய ருவமை. தேக்கியமை வரவென்பதனைப் பொருட்டாக கொள்க. செல்பவரெனக் காரியமாகக் கூறினர். மயக்கத்தா னெதிர்காலசொல் நிகழ்கால மூணர்த்திற்று, ''நறைப்பாடலம் பூவேவார் நினைவார்'' என்றாற்போல ஆகிரிய னென்ப தொருமைப் பன்மை மயக்கம். கேட்டின்றார்-மகிழ்சியெய்தினாற்போலப் பாடிவண்டு மகிழ்சியெய்துமெனத் தொழிலுவமங கொள்ளக்கிடந்தது, ''இணருழ்த்து நாறுமலரினேயர் கற்றதுணாவிரித்துரை யாதார்'' என்றாற்போல.

'உளத்துவேறடக்கி' என்பதுமுதல் 'நாட்பூவினத்துள்'
என்பதுவரை.
(5—6 வரிகள்.)

(பதவுரை.) உளத்து வேறடக்கி-ஒரு நிலத்து வண்டாயினு மந்தினவுவாகக் கண்டதிருக்க, வேட்கையின் - வேட்கையாக, முகமன் கூறுது - முகமன் சொல்லாது, நீயிர்வீழ் - நீங்கள் சேரத்தங்கும், நாட்பூ இனத்துள் - நாண்மலர்க் கூட்டத்துள்.

(வி-ரை.) இதனுல் நிலமொன்றுதல் பெற்றும்.

'காருடல்' என்பதுமுதல் 'பெருப்பழி' என்பதுவரை.
(7—9 வரிகள்.)

(பதவுரை.) காருடல் - கரிய வுடலினையும், பிறை எயிறு - பிறைபோன்ற வெயிற்றினையுமுடைய, அரக்கனே - அரக்கனே, கொன்று - கொன்றதினுல், வச்சிரம் - வச்சிராயுதத்தையுடைத்தாய, தடக்கை - தடக்கையினையுடைய, வலைப்பகை-இந்திரன், சுமந்த - சுமக்கும், பழவுடல் - பழைய வடிவினே, காட்டும்-காட்டுதற்குக்காரணமாகிய, நீரா பெரும்பழி - நீராத பெரும்பழியினே.

(வி-ரை.) பழவுருக் காட்டுதல் - கொல்லப்பட்ட வடிவத்தைக் காட்டுதல். நீராப்பழி-ஒரு காலத்தினும் நீராத பிரமகத்தி, வீரகத்தி காதலின் 'பெரும்பழி' என்றார். உம்மை - சிறப்புமை.

'பனிமலி' என்பதுமுதல் 'எமக்கே' என்பதுவரை.

(10—18 வரிகள்.)

(ப-ரை.) பனிமலை பயந்த-இமயவரைபெற்ற, மாதுடன்-உமை யுடன்கூடி, தீர்த்தருள்-தீர்த்தருள் செய்யாநின்ற, பெம்மான் வாழும்-பெம்மான் வாழாநிற்கும், பெருநகர்-பெரிய நகராகிய, கூடல்ஒப்புமதுரையைப்போலும், சிறு இடை - சிற்றிடையினையும், பொன் தொடி-பொன்னாற்செய்த தொடியினையுமுடைய, மடந்தைதன்-மடந்தைதனது, கொலையினர் உள்ளமும் - கொலைசெய்வாருள்ளமும், குறைகொள - குறைய, இருண்டு-இருண்டு, நானம் நீவி-புழுகினைப் பட்டு, நாள் மலர் - காலத்துக்கேற்ற மலர்களை, மிலேந்து-அணிந்து, கூடி உண்ணும் - இருவகை விருந்தினையும் கூட்டி நுகர்தற்குக் காரணமாகிய, குணத்தினர்-குணத்தினையுடையார், கிளைபோனீடி - கிளைநீண்டாற்போனீண்டு, செறிந்து - செறிந்து, நெய்த்தூடல் குளிர்ந்த - நெய்த்தூடல் குளிர்ச்சிபெற்ற, கரு குழல் - கரிய குழலில், பெருமணம்போல-மிகுந்த வாசம்போல, ஒருங்குமுண்டேல்-மணக்கும் பூக்களுண்டாயின், பேசுவீர் எமக்கு - நீங்களெமக்குச் சொல்வீராக.

(வி-ரை.) இருவகை யன்பினனுஞ் சொல்லப்பட்டு கின்ற தலைமகன், அவள்பெருநாணினளாதலி னன்பு மிகுதியை யுவகையி னுல் வண்டொடு கூறினனென்க. "இது கோயுமின்பமும்" என்னுஞ் சூத்திரத்தானழுகைபற்றிக் கூறியதன்று. "வண்டுக் தூமபியும் நான் கறி வினவே, பிறவுமுளவே யக்கிளைப் பிறப்பே" என்னுஞ் சூத்திரத்தில் நான்கறிவன்றி யையறிவு கூறிற்றிலரேனும் வாராதகூனுல் வந்துமுடித்தலென்னு முத்தியாற் பிற்கூறிய "மாவுமாக்க ளுமையறி வென்ப" என்னுஞ் சூத்திரத்திற் செவியறிவுங் கூறினர்.

ஆதலின் முன்னிலையாக்கினர். "மங்கை நல்லவர் கண்ணு மனமும் போன் றெங்குமோடி யிடறுஞ் சுரும்புகாள் வண்டுகாள் மலிழ்தேனினங்காள் மதுவுண்டு தேக்கிடு மொண்மிஞிதீட்டங் காள்" என்றாற்போல.

சுரும்பினங்காள்! முகமன் கூறுது நீங்கள் சோத்தங்கு நாட் பூவிணுண் மடந்தை தன் குழற் பெருமணம்போல வுண்டேலெமக் குப் பேசுவீரென வினமுடிவுசெய்க. (கூசு)

திருக்கோவையார் உபமா-ம் செய்யுள்.

நாணிழந்து வருந்தல்.

நாணிழந்து வருந்துதலைப்பது—உடன்சொண்டு போசைக்குக் காரணங் கேட்ட தலைமகள், ஒருநாளு மென்னைவிட்டு நீங்காது என்னுடனே வதிந்த பொலிவடைத்தாகிய நாண் கற்பினதிர் நிற்கமாட்டாது தன்னைவிட்டு நிற்காத என்னைக் கழிவதாக மகளிர் எழுபிறப்பின்கண்ணுங் குடியிற் பிறவா தொழிகவெனத் தானதற் குப் பிரிவாற்றுமையான் வருந்தாநின்றல். அதற்குச செய்யுள்:—

மற்பாய் வீடையோன் மகிழ்புலி யூசென் ஞெடும்வளர்ந்த
பொற்பார் திருநா ன் பொருப்பர் வி ருப்புப் புகுத்துநந்தக்
கறபார் கடுங்கால் கலக்கிப் பறித்தெறி யக்கழிக
விற்பாற் பிறவற்க வேழையர் வாழி யெழுமையுமே.

கற்பு நாணினு முற்சிறந் தமையிற்
சேணெறி செல்ல வானுற வுணிந்தது.

(ப-ரை.) மல் - வளர்ச்சையுடைய, பாய்-பாயும், வீடையோன் - வீடையையுடையவன், மகிழ் - விரும்புந், புலியூர் - புலியூரில், என் ஞெடும் - என்னெடுநேர்ந்தோன்றி, வளர்ந்த-என்னெடொக்க வளர்ந்த, பொற்புவூர்-பொலிவார்ந்த, திருநாண்-திருவையுடைய நாண், பொரு ப்பர் - பொருப்பர்மேல் யான்வைத்த, விருப்பு-விருப்பம், புகுத்து - இடையே புகுத்து, நந்த - தன்னதின்றனிலேகுலைக, கற்பார் - கற்பாகிய நிறைத்த, கடுங்கால் - கடிய காற்று, கலக்கி - அலைத்து, பறித்து - பிடுங்கி, எறிய - என்வயிற் கிடவாமைப் புறத்தெறிய, கழிக - என்னைக் கழிவதாக, எழையர் - ஆகலான் (இனி) மகளிர், எழுமையும் - எழுபிறப்பின்கண்ணும், இற்பால் - குடியில், பிற வற்க - பிறவாதொழிக, எ - று.

(வி-ரை.) நாண்கழிக வெனவினையும். வாழி - அசைநிலை. 'கற் பாங் கடுங்கால்' என்பதூஉம் பாடம். மூற்சிறந்தமையின்-முன்னெ ண்ணச் சிறந்தமையின். மல்லல் மல்லெனக் கடைக்குறைத்து நின் றது. மெய்ப்பாடு - அது. பயன்-உடன்போக்குவலித்தல்.

நேரிசையாசிரியப்பா.

மைமருளுழைத் தன்ன தொல்லியற் செறுவீர்
கூர்வாய்ப் பறைதபு பெருங்கிழ நாரை

வஞ்சனை தாங்கி யார னுணர்ந்து
நீங்காப பழன்ப பெருநகாக கூடற
கரமான றரிதத பெருமா னிறைவன
பொனபழித தெடுதத வினபுது திருவடி
யுளமவிழ்ந்த காத களவினா போலவென
னுயிரொடுமெ வளாநத பெருநாண டறியினை
வெறபன காதூற காலுலை வேலையின
வலியுடைக கறபி லொடுவளி சழறறிக
கடபுலங காணுன காடடைகெட வுதலி
னெனமோ லிநதிலை னீனறவா படைகதும
பேருந சொழிக மபருநாண கறபின
ரேறபே றுடைய ராயிற
கறபிற றேனைருக சட னுகவே.

மைகுழைத்தனன - கடனுகுகவே பதத்தி - உடனபோகுகு. தூறை - நாணிழநதுவருநதல.

'மைகுழைத்தன்ன' எனபதுமுதல் 'கூடல்' எனபதுவரை
(1—4 வரிகள.)

(ப-ரை) மை குழைத்தனன-மையினைக குழைதசாறபோனற. தொளளியுஞ செறவில - சருஞசேறறினையுடைய வழிய வயலிடகு துல, பறைதபு - பறததலிலலாத, பெரு கிழகாரை - பெரிய கிழடகு நாரை, வஞ்சனை - வஞ்சனையாக, தூங்கி - தூஙகியிருநது, நீங்கா - வாயதலவழி நீங்காது, கூர வாய-கூரிய வாயினுல, ஆல உணனும - ஆரனமீனை நுகரதறகிடமாகிய, பழன - மருதநிலஞசூழநதி, பெருநகர - பெரியநகராகிய, கூடல - மதுரையிடதது.

(வி-ரை.) பறைதபுநாரை - கிருஷ்ணாந காரை யெனினுமாம வஞ்சனையாகத தூங்கல - ஆல வகதெயதுமளவு மிருது பிழையாம லுறஙகுவனபோலத தூங்கல. வாயதத வழியென வொருசொல வருவிகக. நீங்காதெனபது நீங்காவென கினறது.

'கரமான்றரித்த' எனபதுமுதல 'களவினர்போல'
எலபதுவரை.
(5—7 வரிகள.)

(ப-ரை) கரம மான தரிதத - கையின மாவினதரிதத, பெருமான-பெருமான, இறைவன-இரணியவனமன, பொன - செலவத

தினை, பழித்து - வெறுத்து, எடுத்த-உயர்த்த, இன்பு உறு - இன்பம் பெறுதற்குக் காரணமாகிய, திருவடி - திருவடியை, உளம் விழுங் காத-உள்ளத்தடக்காத, களவினர்போல - கூடாவொழுக்கத்தாரை நீக்குதல்போல.

(வி-ரை.) பெருமானது திருவடி யெனவியையும். இறைவன தடியென்னிற் பொன்னேப்போன்றுயர்ந்த வடியென்க.

'என்னுயிரோடும்' என்பதுமுதல் 'வேலையில்' என்பதுவரை.
(7—9 வரிகள்.)

(ப-ரை.) என் உயிரொடும் - என்னுயிரோடு கூடி, வளர்ந்த - வளர்வந்த, பெருநாண்-பெரிய நாணுகிய, தறியினை-தூணினை, வெற் பன் - சீலவன்மேல், காதல்-(யான் வைத்த) காதலாகிய, காலுலை - காற்றுலைக்கும், வேலையில் - பொழுதில்.

'வலியுடை' என்பதுமுதல் 'உந்தலின்' என்பதுவரை.
(10—11 வரிகள்.)

(ப-ரை.) வலியுடை - அங்ஙாணிலும் வலியுடைய, கற்பின்-கற் பாகிய, கெடு வலி-பெருங்காற்று, சுழற்றி-சுற்றி, கட்புலம் காணுது-மிகவுமென்னிடத்திற் காணுது, காட்டை-காட்டையென்னுங் கால த்தில், கெட - கெடும்படி, உந்தலின் - புறத்துத் தள்ளுதலால்.

(வி-ரை.) கட்புலம்-மீமிசைபோன்றது. கணமெட்டிக்கொண் டது இலவம். இலவமெட்டிக்கொண்டது காட்டை யென்க.

'என்போல்' என்பதுமுதல் 'ஆங்கோழிக' என்பதுவரை.
(12—13 வரிகள்.)

(ப-ரை.) என்போல் - என்னேப்போல, இங்கிலை னின்றவர் - நாணழியு நிலையுணின்றவர், படைக்கும் பேறு - படைத்தலால் வரும் பிறவியிடத்தய்ய, ஆங்கு ஒழிக - ஐயோ குடியிற் பிறத்தலொ ழிக.

(வி-ரை.) படைக்கும் பேறெனவே பிறவியாயிற்று.

'பெருநாண்' என்பதுமுதல் 'கடனுருகவே' என்பதுவரை.
(13—15 வரிகள்.)

(ப-ரை.) பெருநாண் கற்பினெற்பேறுடையார் ஆயின் - என் னேப்பெற்றவர் பெருநாணோடு கூடிய கற்பினையுடையராயின், கற் பிற்றேன்று - கற்பிறத்தலையுடைய குடியிற் பிறந்த, கடனுருகவே-

முறைமையையுடையராக, கற்பினெதிர் நிற்கமாட்டாத நாண் பிரிய அதற்காற்றுமையான் வருந்தாகின்றாள்.

(வி-ரை.) களவினரை நீக்குதல்போல நாணுயிர தூணினைக் காதலாகிய காற்றுலைக்கும்போதிற் கற்பாகிய காற்றுத் தள்ளுதலால் என்னைப்போன்றவர் பிறவியிடத்து ஐயோ ஐயோ குடியிற் பிறத்த லொழிக, என்னைப் பெற்றவருடையராயிற் குடியிற் பிறந்த முறை மையை யுடையராகுகவென வினைமுடிவு செய்க. (ஈ)

திருக்கோவையார் ஈஎசு-ம் செய்யுள்.

தோழியிற்பழித்தல்.

தோழியிற்பழித்த லென்பது—பாணன் வாவுரைத்த தோழி, இவள் வருந்த அயலாரிடத்து நல்குதலால் எம்முடைய வள்ளல் இன்று தக்கிருந்திலனெனத் தலைமகனை யிற்பழித்துக் கூறுதிற் றல். அதற்குச் செய்யுள்:—

திக்கினி லங்குதிண் டோளிறை தில்லைச்சிற் றம்பலத்துக்
கொக்கி னிறகத ணிக்குகின் றுடிதென் கூடலன்ன
வக்கின் னலகையிவ ணேயவ யல்வயி னல்குதலாற்
றகுகின் றிருந்தில னின்றசெவ் வேலெந் தனிவள்ளலே.

தலைமகனைத் தகவிலனெனச்
சிலைதுதற்பாங்கி நீக்குசெப்பியது.

(ப-ரை.) திக்கின் - திக்கின்கண், இலங்கு - விளங்காகின்ற, திண் தோள் - திண்ணிய தோள்களையுடைய, இறை - இறைவன், தில்லைச்சிற்றம்பலத்து - தில்லையிற்சிற்றம்பலத்தின்கண், கொக்கின் இறகு அணிந்து - கொக்கினிறகதனையணிந்து, நின்றுடி - நின்றுடு வான், தென் கூடல் அன்ன - (அவனது) தெற்கின்க ணுண்டாகிய கூடலையொக்கும், அககு - அக்குமணிபோலும், இன்னகை இவள் - இனிய நகையையுடையவிவள், கைய - வருந்த, அயல்வயின் - அயலா ரிடத்து, நல்குதலால் - நல்குதலால், நின்ற-எல்லாரானு மறியப்பட்டு நின்ற, செவ்வேல் - செவ்வேலையுடைய, எம் - எம்முடைய, தனி வள்ளல் - ஒப்பில்லாத வள்ளல், தக்கு இன்று இருந்திலன் - இன்று தக்கிருந்திலன், எ-று.

(வி-ரை.) அயல்வயி னென்பதற்குப் பொருணசை யுள்ளத்தி காகலிற் காமத்திற் கயலென் முரைப்பினு மமையும். தலைமகனது தகவின்மை யென்பதூஉம் பாடம்.

நேரிசையாசிரியப்பா.

வடமீன் கற்பினெம் பீடுகெழு மடந்தை
பெருங்கடன் முகந்து வயிறுநிறை நெடுங்கார்
விண்டிரிந்து முழங்கி வீழா தாகக்
கருவொடு வாடும் பைங்கூழ் போலக்
கற்புநாண் மூடிய பழங்கண் கொள்ள
வுயாமர முளைத்த வூரி போல
வோருடல் செய்து மறுமனங் காடு
மாணிழை மகளிர் வயினல் குதலாற்
கருமுகிற் கணிநிறக் கமற்கட் பிறையெயிற்
றீரிதரு குடடி யாயபன் னிரண்டினீர்
செங்கோன் முனையிட் டருணீர் தேக்கித்
கொலைகள வென்னும் படர்களை கட்டுந்
திக்குப் படரா வீணவேலி கோலித்
தருமப பெரும்பயி ருலகுபெற விளைக்கு
நாற்படை வன்னிய ராக்கிய பெருமான்
முள்ளுடைப வ்பழவாய்ச் செங்கண் வராலினம்
வலோவாய்த் தூண்டிற் கருங்கயிறு பரிந்து
குவளை பாசடை மூண்டக முழக்கி
நெடுங்கால் பாய்ந்து படித்த வொண்டொழிற்
சுருங்கைவழி யடைக்கும் பெருங்கழிப பழனக்
கூடற் றிறைவ னிருதாள் விடுத்த
பொய்யினர் செய்யும் புல்லம் போலப்
பேரா வாய்மை யூரன்
றாெடி மயங்கிய பெருமையு மிலனே.

வடமீன்கற்பின் - பெருமையுமிலனே. பததி - பரத்தையிற் றுணை - தோழியியற்பழித்தல்.

'வடமீன்' என்பதுமுதல் 'கோள்ள' எனபதுவரை.

(1—5 வரிகள்.)

(ப-ரை) பெருங்கடல்-பெரிதாகிய சமுத்திரத்தை, முகந்து முகத்தற்குக் காரணமாகிய, வயிறு நிறை -வயிறு நிறைதலை, நெடுங்

கார்-நெடிய மேகம், விண் இரிந்து-விண்ணிற் சஞ்சரித்து, முழங்கி - முழங்கி, வீழ்தாரை - பெய்யாதிருக்க, கருவொடி - கருவோடுகூடி, வாடும் - வாடும், பைங்கூழ்போல - பயிர்போல, வடமீன் - அருந்ததியின், கற்பின் - கற்பினையுடைய, எம் - எமது, பீடு கெழு-பெருமைபொருந்திய, மடந்தை - மடந்தையானவள், கற்பு நாண் மூடி - பெருமிதம்பொருந்திய கற்பு நாணு மேலிடாதென, பழங்கண் கொள்ள - மெலிய.

(வி-ரை.) கற்பு நாணு மேலிடின் வருந்துதலின்மையி னடக்கங் கூறினர். பெய்யாது வாடினும்போல மேலிடாது மெலியவென் றமையிற் றொழிலுவமம்.

'பேரவாய்மை' என்பதுமுதல் 'மயங்கி' என்பதுவரை.
(23—24 வரிகள்.)

(ப-ரை.) வாய்மை பேரா ஊரன் - வாய்மை தவறுதலிலூரன், தாரொடு மயங்கி - இன்பத்தளவுடனே மயங்கி.

(வி-ரை.) பேரவாய்மை - பிறிதோருயிர்க்குத் தீங்கு சிறிதும் பயவாத சொன்னிலே. இது இகழ்ச்சிக் குறிப்பு. ஒடு - உடனிகழ்ச்சி.

'உயர்மரம்' என்பதுமுதல் 'நல்குதலால்' என்பதுவரை.
(6—8 வரிகள்.)

(ப-ரை.) உயர் மரம் - உயர்ந்த மரத்தில், மூளேத்த - ஒன்று பட்டதின்வேறுகாட்டித் தோன்றிய, ஊரிபோல - ஊரிபோல (கல்லுருவிபோல), ஒருடல் செய்து - (கூடிஞருடன்)வேறுபடாதொன்றுபட்டு, மறுமனம் காட்டும்-வேறு மனம் வைக்கும், மாண் இழை-மாட்சிமையுடைத்தாய விழையியையுடைய, மகளிர் வயின்-பரத்தையரிடத்து, நல்குதலால் - அருள் செய்தலால்.

(வி-ரை.) மரம்: உயர்ச்சியானுமெல்லாப்பொருட்கு கிழலானு மடைந்தபொருளைத் தாங்குதலானுந் தலேவற் குவமை. ஊரி-ஒன்று பட்டுத் தன்னே வேறு காட்டுதலாற் பரத்தையர்க் குவமை.

'கருமுகிற்கு' என்பதுமுதல் 'பன்னிரண்டினே' என்பதுவரை.
(9—10 வரிகள்.)

(ப-ரை.) கருமுகிற்கு-கரிய முகிலினிறம்போல, அணி நிறம்-நிறைந்த நிறத்தினையும், தழல் கண் - தழல்போலுங் கண்ணினையும், பிறை எயி - பிறை வளேந்தாற்போல வளேந்த கொம்பினையு

மூடைத்தாய, அரிதரு குட்டியாய - பன்றியின் குட்டியாகிய, பன்னிரண்டினே - பன்னிரண்டினையும்.

(வி-மை.) முற்றும்மை தொக்கது.

'செங்கோல்' என்பதுமுதல் 'பெருமான்' என்பதுவரை.
(11—15 வரிகள்.)

(ப-ரை) செங்கோல் - செங்கோல்போலச் செவ்விய முறைமையாகிய, மூளையிட்டு - மூளையினை வித்தி, அருள் நீர் தேக்கி-அருளாகிய நீரைநிறைத்து, கொலை களவு என்னும்-கொலையுங்களவுமாகிய, படர் களை கட்டி - மிகுந்த களையைப்பறித்து, திக்குப்படர் ஆணை-திக்கெங்குஞ் செல்லுமாக்கினையாகிய, வேலி காலி - வேலியையிட்டு, தருமப்பெரும்பயிர் - தருமமாகிய பெரும்பயிரினை, உலகு பெற விளைக்கும் - உலகமாகிய செய்யிற் பயன்பெற விளையப்பண்ணும், நாற்படை-நாற்படையினையுடைய, வன்னியராக்கிய-வன்னியராக்கிய, பெருமான் - பெருமான்

(வி-ரை) உருவக அவயவியை வாளாது கூறி அவயவத்தை யுருவகஞ்செய்தமையின் செங்கோலெனவுவமையின் பெயர்பொருண்மேனின்றது. பன்னிரண்டினையும் வன்னியராக்கிய வெனவியையும்.

'மூள்ளுடை' என்பதுமுதல் 'புல்லம்போல' என்பதுவரை.
(16—22 வரிகள்.)

(ப-ரை.) மூள் உடை - மூள்ளினையுடைய, பேழ் வாய்-பெரிய வாயினையும், செம் கண்-சிவந்த கண்ணினையுமுடைய, வரால் இனம்-வராலின் கூட்டங்களானவை, வளை வாய்-வளைந்த வாயினையுடைய, தூண்டில்-தூண்டிலிலிட்ட, சருங்கயிறு-பெரிய கயிற்றினை, பரிந்து-அறுத்து, குவளை குவளையினது, பாசடை - பசியவிலையினையும், முண்டகம் - தாமரையையும், உழக்கி-கலக்கி, நெடுங்கால் - நெடிய வாய்க்கால்களில், பாய்ந்து - குதித்து, படுத்த-நீர்பாயவுண்டாக்கிய, ஒன்தொழில் - தண்ணிய தொழிலினையுடைய, சுருங்கை வழி - மதின் வழியை, அடைக்கும்-(நீர் பாயாது) மறித்தற்கிடமாகிய, பெருகழி - மிகுந்த சிறப்பினையுடைய, பழனம் - மருதநிலஞ்சூழ்ந்த, கூடற்கு - மதுரைக்கு, இறைவன் - தலைவனனவன், இருதாள்-இருதிருத்தாளில், விடுத்த - பற்றுவிட்டதனால் வந்த, செய்யும்பொய்யினர் - தீழ்மைக் குணஞ்செய்யும் பொய்யினர்க்கு, புல்லம்போல - பெருமையில்லாததுபோல.

(வி-ரை.) வரால் - ஓர்வகைமீன். கருமை - பெருமை. விடித்த-காணப்பொருட்டாகிய பெயரெச்சம். புல்லம் என்பதில் அம் பண்புப்பெயர், விகுதி (புன்மை).

பெருமையு மிலனே.

(24—வது வரி.)

(ப-ரை.) பெருமையும் இலன் - பெருமையுமிலனுமினன்.

(வி-ரை.) பெருமை - பழியும் பாவமு மஞ்சுதல். (கூஅ)

திருக்கோவையார் கஅஅ-ம் செய்யுள்.

பொழுதுகண்டு மயங்கல்.

போழ்நுகரூடு மயங்கலென்பது—சுடரொடு புலம்பாகின்றவள், கதிரவன் மறைந்தானை, காப்பவர் சேயர், அதன்மேலிவ்விடத்து மீனுண்ட வன்னங்களும் போய்த் தஞ்சேக்கைகளே யடைந்தன, இனியாஞற்றுமா றென்னெனவென மாலைப்பொழுதுகண்டு மயங்காகிற்றல். அதற்குச் செய்யுள்:—

பகலோன் கந்தனன் காப்பவர் சேயப்பற் றற்றவர்க்குப்
புகலோன் புகுநர்க்குப் போக்கரி யோனெவ ரும்புகலத்
தகலோன் பயிறில்லைப் பைம்பொழிற் சேக்கைக ணேக்கினவா
லகலோங் கிருங்கழி வாய்க்கொழு மீணுண்ட வன்னங்களே.

மயறரு மாலை வருவது கண்டு
கயறரு கண்ணி கவலை யுற்றது.

(ப-ரை.) பகலோன் - கதிரவன், கந்தனன் - மறைந்தான்; காப்பவர் சேயர் - (இம்மாலைக்காலத்து வருத்தன்பத்தைக்) காக்குமவர் சேயராயிருந்தார்; (அதுவேயுமன்றி) அகல் ஓங்கு இரும் கழி வாய் - அகன்று நீருயர்ந்த பெரிய கழியிடத்து, கொழுமீன் உண்ட-கொழுமீனேயுண்ட, அன்னங்கள்-அன்னங்களாமும், (இவ்விடத்தை விட்டு) பற்று அற்றவர்க்கு-புலன்களிற் பற்றற்றவர்க்கு, புகலோன்-புகலிடமாயுள்ளவன், புகுநர்க்கு-தன்கட் புகுவார்க்கு, போக்கு அரியோன் - பின்போதரவரியவன், எவரும் புகல-எல்லாரு மேத்த, தகலோன்-தகுதலேயுடையவன், பயில்-(அவன்)பயிலும், இல்லை-தில்லை வரைப்பில், பைம்பொழில் - பசிய சோலைகளின்கணுளவாகிய, சேக்கைகள் நோக்கின - இவ்விடத்தை விட்டுத் தஞ்சேக்கைகளே நோக்கின (இனி யென்செய்வேன்), எ-று.

(வி-ரை.) ஒங்குதல் - ஓதமெறிநீருயர்தல். கொழுமீனென்பது ஓர் சாதிமீன். ஆல் - அசை. சேக்கை - கூடி. பொழில்-சோலை. பயிலல் - நடித்தல். (சுஅ)

நேரிசையாசிரியப்பா.

கோடிய கோலினன் செருமுகம் போலக்
கனைகதிர் திருகிக் கல்சேர்ந்து முறைபுகப்
பதினெண் கிளவி யூர்துஞ் சியபோற்
புட்குலம் பொய்கை வாய்தாட் கொள்ள
வேல்சரத் துடைகுநர் கோல நோக்கி
யிருண்மகள் கொண்ட குறுநகை போல
மூல்லையு மௌவலு முருகுயிர்த் தவிழத்
தணந்தோ ருளத்திற் காமத் தீப்புக
மணந்தோர் நெஞ்சத் தமுத நீர்விட.
வன்றில்புற் சேக்கை புக்கல்கு பெடையணைய
வந்தண ரருமறை யருங்கிடை யடங்க
முதிர்கனி மூல முணிக்கண மறுப்பக்
கலவையும் பூவுந் தோண்முடி கமழ
விரிவலை தூளியர் நெய்த லேந்தித்
துத்தங் கைக்கிளை யளவையின் விளிப்ப
நீரர மகளிர் செவ்வாய் காட்டிப்
பசுந்தாட் சேக்கொ ளாம்பன் மலரத்
தோளு மிசையுங் கூறிடுங் கலியு
மருட்டிரு வெழுத்தும் பொருட்டிரு மறையும்
விரும்பிய குணமு மருந்திரு வுருவு
முதலெண் கிளவியும் விதமுட னிரையே
யெட்டு மேழுஞ் சொற்றன வாறு
மைந்து நான்கு மணிதரு மூன்றுங்
துஞ்சலி லிரண்டுஞ் சொல்லரு மொன்று
மாருயிர் வாழ வருள்வர நிறுத்திய
பேரருட் கூடற் பெரும்பதி நிறைந்த
முக்கட் கடவுண் முதல்வனை வணங்கார்
தொக்கதீப் பெருவினை சூழ்ந்தன போலவுந்

துறவா லறனுற் பெறலின் மாந்தர்
விளளா வறிவி னுளளமு மென்னவுஞ்
செக்கர்த் தியொடு புக்கனன் மாலை
யென்னுயிர் வளைந்த தோற்றம் போல
நாற்படை வேந்தன் பாசறை
யோர்க்கு முளியோ மனததிற னெனுகவே.

கோடிய கோலின்ன் - திறனெனுகவே. பதநி-ஒருவழிதணத்தல். துறை - பொழுதுகண்டு மயங்கல்.

கோடிய கோலினன் செருமுகம் போல.
(1—வது வரி.)

(ப-ரை) கோடிய-மாறுபட்ட, கோலினன்-கோலினையுடையவனிய அரசன், செருமுகமபோல-போர்க்களத்தில் வீழ்ந்ததுபோல.

(வி-ரை.) கோடியகோல் - கொடுங்கோல்

கணைகதிர் திருகிக் கல்சேர்ந்து முறைபுக.
(2—வது வரி.)

(ப-ரை) கணை-நெருங்கிய, கதிர்-கிரணங்களையுடைய சூரியன், திருகி - மாறுபட்டு, கல் சேர்ந்து-அத்தமனகிரியைச சேர்ந்து, முறை புக - முறையேபுகவும்.

(வி-ரை) கதிர் - ஆகுபெயர், கல்லும் அது

'பதினெண்கிளவி' என்பதுமுதல் 'தாட்கோள்ள'
என்பதுவரை.
(3—4 வரிகள்.)

(ப-ரை) பதினெண்கிளவி - பதினெண்பாடைச சொற்களும், ஊர் - ஊரிடத்து, துஞ்சியபோல - அடங்கியனபோல, புள் குலம-பலபறவைத்திரள்கள், பொயகைவாய-பொயகையினிடத்து, தாள் கொள - தயிலுதலாகிய முயற்சியைக் கொள்ளவும்.

(வி-ரை) 'தாழ்க்கொள்ள' எனவும் பாடமுளது, தங்காதிற்கவும் என்பதிதன்பொருள். பொயகை - தடாகம். தாள் - முயறசி. தயிலுதல் - தாழ்தல்.

'வேள்சரத்து' என்பதுமுதல் 'அவிழ' என்பதுவரை.
(5—7 வரிகள.)

(ப-ரை) வேள் சரத்து - மன்மத பாணங்களினுல், உடைகுநர்-தளர்பவர்களாகிய மாதரது, கோலம-அழகை (வேடததை), கோகில-பார்த்து, இருள் மகள் - இருளாகிய பெண், கொண்ட - தான் கொண்ட, குறுகைபோல - இளகைபோல, முல்லையும் - முல்லையரும்பும், மௌவலும் - வனமல்லிகையரும்பும், முருகு உயிர்த்து - மணம்வீசி, அவிழ - மலரவும்.

(வி-ரை) சரம்-பாணம். உடைதல் - மனந்தளர்தல். முல்லை மௌவல் என்பன ஆகுபெயர்கள்.

'தணந்தோர்' என்பதுமுதல் 'அமுதநீர்விட' என்பதுவரை.
(8—9 வரிகள.)

(ப-ரை.) தணந்தோர் - (தலைவனைப்) பிரிந்த மாதரது, உளத்தில் - மனத்தில், காமதீ - காமமாகிய நெருப்பு, புக-நுழையவும், மணந்தோர் - தலைவரைக் கூடியமாதரது, நெஞ்சத்து - மனத்தில், அமுத நீர்விட - இனிய நீர்மை சுரக்கவும்.

(வி-ரை) தணத்தல் - பிரிதல், அமுதம் - இனிமை. நீர்மை - குணம்.

அன்றில்புற் சேக்கை புக்கலகு பெடையணைய.
(10—வது வரி.)

(ப-ரை.) அன்றில் - அன்றிற் பறவைகள், புல் சேக்கை புக்கு-பனைமரத்திற் கட்டிய கூட்டிற் புகுந்து, அலகு பெடை - மூக்கினையுடைய தத்தம் பெடைகளை, அணைய - தழுவியுறங்கவும்.

(வி-ரை.) புல் - பனைமரம். பெடை - பெண்ணன்றில்.

'அந்தணர்' என்பதுமுதல் 'மறுப்ப' என்பதுவரை.
(11—12 வரிகள.)

(ப-ரை.) அந்தணர் - அந்தணர்க்குரிய, அருமறை - எழுதற்குரிய வேதங்கள், அருங்கிடையடங்க - அரிய கிடையினிடத்தடங்கவும், முதிர் கனி மூலம் - கனிந்த பழங்களையுங் கிழங்குகளையும், முனிக்கணம்-முனிவர் கூட்டங்கள், மறுப்ப-(அகாலமென்று) மறுக்கவும்.

(வி-ரை.) அருமை-எழுதற்கருமை, இதுபற்றியன்றே இதனை எழுதாக்கிளவியென வழங்குவது. கிடை - வேதமோதுமிடம்.

'கலவையும்பூவும்' என்பதுமுதல் 'விளைப்ப' என்பதுவரை.
(13—15 வரிகள்.)

(ப-ரை.) கலவையும் பூவும் - சுக்தனக் குழம்பும் மலர்மாலைகளும், தோள் மூடி கமழ-தோளினு மூடியினும் பரிமளிக்க, விரி வலை-விரிந்த வலையினையுடைய, நுளையர் - நெய்தனிலமாக்கள், நெய்தல் எக்தி - நெய்தற்றழையைக் கையிற்றாங்கி, துத்தம் - துத்தமென்னு மொலியையும், கைக்கிளை - கைக்கிளையென்னு மொலியையும், அளவையின் - தூலளவைபெற, விளைப்ப - எழுப்பவும்.

(வி-ரை.) கலவை - கலவைச்சாந்து. பூ-ஆகுபெயர்.

'நீரமகளிர்' என்பதுமுதல் 'மலர' என்பதுவரை.
(16—17 வரிகள்.)

(ப-ரை.) நீர் அமகளிர் - நீரமகளிரது, செவ்வாய் காட்டி-சிவந்த வாய்போற்காட்டி, பசுந்தாள்-பசிய தாளினையும், சேக்கொள்-சிவந்த நிறத்தையுங்கொண்டிருக்கின்ற, ஆம்பல் - செவ்வல்லியரும்புகள், மலர - விரியவும்.

(வி-ரை) நீரமகளிர் - நீரில்வாழும் தெய்வமாதர். தாள் காளம். ஆம்பல்-ஆகுபெயர்.

'தோளுமிசையும்' என்பதுமுதல் 'சூழ்ந்தனபோலவும்' என்பதுவரை.
(18—28 வரிகள்.)

(ப-ரை.) தோளும் - தோள்களும், இசையும் - இசைகளும், கூறிடும் கலையும் - சொல்லாகின்ற சாத்திரங்களும், அருள் திரு எழுத்தும் - அருளாகிய அழகுளவக்காங்களும், பொருள் திரு மறையும்-பொருளையுடைய சிறப்புள்ள வேதங்களும், விரும்பிய குணமும்-யாவரும்விரும்பிய குணங்களும், அருந்திரு உருவும் - கிடைத்தற்கரிய அழகாகியவடிவும், முதலெண் கிளவியும் - இவை முதலாகிய வெட்செ்சொற்களும் (மூன்னெழுத்தாக வெண்ணுஞ் சொல்லும்), விதமூடனிரையே-பகுப்பான முறையே முதலில், எட்டும்-எட்டாகவும், எழும் - எழாகவும், சொற்றனவாறும் - சொல்லின ஆறுகவும், ஐந்தும் - ஐந்தாகவும், நான்கு - நான்காகவும, அணிதரு மூன்றும் - அணிமை தருகின்ற மூன்றுகவும், துஞ்சல் இல் இரண்டும்-கெடாத

விசண்டாகவும், சொல் அரும் ஒன்றும் - சொல்லுதற்கரிய வொன்றுகவும், ஆருயிர் வாழ-அரியவுயிர்ப்பரப்புக ளுடலோடு வாழ்ந்திருப்ப, அருள்வய நிறுத்திய - அருள்வருமாறு நிலைபெறச்செய்த, பெரு அருள் - மிகுந்த இருபையுள்ள, கூடல் பெரும்பதி - கூடலென்னும் பெரிய நகரத்தில், நிறைந்த - நிறைந்திருக்கின்ற, முழுக்கண் கடவுள்-திரிநேத்திரத்தையுடைய சோமசுந்தரக் கடவுளாகிய, முதல்வனே - தலைவனே, வணங்கார் - தொழாதவரை, தொக்க நீப்பெருவினை - கூடிய கொடிய பெருவினைகள், சூழ்ந்தனபோலவும் - மூடிக்கொண்டாற்போலவும்.

'துறவால்' என்பது முதல் 'உள்ளமுமென்னவும்' என்பதுவரை.
(29—30 வரிகள்.)

(ப-ரை.) துறவால் - துறவினாலும், அறனால் - இல்லறத்தினாலும், பெறல் இல் மாந்தர்-(பயனேப்பெறுதல) மனிதர்களது, விள்ளா அறிவின் - புடைபெயர்ச்சி யில்லாதவறிவும், உள்ளமுமென்னவும்-விளக்கமில்லாத மனமும்போலவும்.

(வி-ரை.) விள்ளல் - புடைபெயர்தல். விளக்கம் - ஒளி.

செக்கர்த் தீயொடு புக்கநன் மாலே.
(31—வது வரி)

(ப-ரை.) செக்கர் தீயொடு - செவ்வானமாகியவக்கினியோடு, புக்க நல் மாலை - வந்தமிக்க மாலைக்காலமே.

(வி-ரை) மாலை - அண்மைவினி.

'என்னுயிர்வளைந்த' என்பதுமுதல் 'ஒதுகவே' என்பதுவரை.
(32—34 வரிகள்.)

(ப-ரை.) என் உயிர் வளைந்த - என்னுயிரை நீ சூழ்ந்த, தோற்றம்போல - காட்சியைப்போல, நாற்படை வேந்தன் - நால்வகைச சேனைகளையுடைய வரசனையும், பாசறையோர்க்கும் - அவன் பாசறையி லுள்ளோரையும், உளையோ - சூழ்ந்துகொண்டனையோ, மனத்திறன் - உன்மனக்கூறுபாட்டை, ஒதுக - சொல்லக்கடவை.

(வி-ரை.) பாசறையோர்க்கென்பது உருபுமயக்கம். பாசறை படைவீடு.

செக்கர்த் தீயொடு புக்க நன்மாலையே! என்னுயிர் வளைந்த தோற்றம்போல நாற்படைவேந்தன் பாசறையோர்க்கு முளையோ மனத்திற னெனுதகவென வினைமுடிவு செய்க. (கூ)

திருக்கோவையார் கசு-ம் செய்யுள்.

ஆடிடத்துய்த்தல்.

ஆடிடத்துயிந்த லென்பது—அணிமைகூறி யகலாரின்றவன், இனி நீ முற்பட்டு விளையாடு, யான் இங்ஙனம்போய் அங்ஙனம் வாராகின்றேனென்ன அவளை ஆடிடத்துச் செலுத்தாகிற்றல். அதற்கு செய்யுள்:—

தெளிவளர் வான்சிலை செங்கனி வெண்முத்தந் திங்களின்வாய்த்
தளிவளர் வல்லியன் னுமுன்னி யாடுபின் யானளவா
வொளிவளர் தில்லை யொருவன் கயிலையுகு பெருந்தேன்
துளிவளர் சாரற் கரந்துங்ங னேவந்து தோன்றுவனே.

வன்புறையின் வற்புறுத்தி
அன்புறுமொழியை யருககன்றது.

(ப-ரை.) வளர்-கால் நிமிர்ந்த, வான் சிலை - பெரிய சிலைகளாற், செம் கனி - சிவந்த கொவ்வைக்கனியும், வெள் முத்தம் - வெள்ளிய முத்தங்களும், திங்களின் வாய்ந்து-(ஒரு) திங்களின்கண்ணே வரப்ப, அளி வளர் - வண்டுகள் தங்கும், வல்லி அன்னம் - சொடியையொப்பாய், தெளி-(யான் சொன்னவற்றைத்) தெளிவாயாக;முன்னி ஆடு-இனிமுற்பட்டு விளையாடுவாயாக; ஒளி வளர் - ஒளிவளராகின்ற, தில்லை - தில்லைக்கணுளஞ்சிய, அளவா-அளக்கப்படாத, ஒருவன் - ஒருவனது, கயிலை - கைலையிடத்து, உகு-சிந்தாகின்ற, பெருந்தேன் துளி - பெருந்தேன்துளிகள், வளர் சாரல்-பெருகுஞ்சாரற் (பொதும்பரில்), கரந்து - ஒளித்து, யான் பின் - யான்பின்னும், உங்ஙனே வந்து - உல்விடத்தே வந்து, தோன்றுவன்-தோன்றுவேன், எ - று.

(வி-ரை.) தெளிவளர் வான்சிலை என்பதற்கு ஒளிவளருஞ் சிலையென்றுரைப்பினு மமையும். இங்ஙனே வல்லிக் கண்ணதாகக்கொள்க. வாய்ப்தென்பது வாய்ப்பவென்பதன்றிரிபாகலின், தளிவனென்னும் பிறவினே கொண்டது. சாரலென்பது ஆகுபெயர். வன்புறையின் - ஏற்புறுத்துஞ் சொற்களால். மெய்ப்பாடு-அது. பயன் - இடங்குறித்து வற்புறுத்தல்.

நேரிசையாசிரியப்பா.

முன்னி யாடுக முன்னி யாடுக
குமுகமும் வள்ளியு நீலமுங் குமிழுந்
தாமரை யொன்றிற் றடைகுவளர் செய்த
மூளாநிறைசெம்மகண் முனைநி யாடுக

நிற்பெறு தவத்தினை முற்றிய யானும்
பலகுறி பெற்றிவ் வுலகுயி ரளித்த
பஞ்சின் மெல்லடிப் பாவைகூ முகிக்
கருங்குரு விக்குக் கண்ணருள் கொடுத்த
வெண்டிரு நீற்றுச் செக்கர் மேனியன்
கிடையிற் றுபதர் தொடைமறை முழக்கும்
பொங்கர்க் கிடந்த சுல்காக்க குளிர்ஹும்
வல்லியைப் பரியும் பகடிவிடு குரலும்
யாணர்க் கொடிஞ்சி நெடுந்தே நிசைப்பு
மொன்றி யழுங்க நின்றகில் பெருகி
மாதிரக் களிற்றினைச் செவிடுறக் கொடுக்கும்
புண்ணியக் கூட லுண்ணிறை பெருமான்
றிருவடி சுமந்த வருளினர் போலக்
கருந்தே னுடைத்துச் செம்மணி சிதறிப்
பாகற் கோட்டிற் படர்கறி வணக்கிக்
கல்லென் றிழிநது கொல்லியிற் பரக்குங்
கறங்கிசை யருவிய ஞ் சாரற்
புறம்பு தோன்றிநின் கண்ணு குவனே.

முன்னியாடுக - கண்ணுகுவனே. பருதி - இயற்கைப்புணர்ச்சி. துணை - ஆடிடத்தித்தல்.

முன்னி யாடுக முன்னி யாடுக.

(1—வது வரி.)

(ப-ரை.) முன்னி - (தோழிகளுடன்) மூற்பட்டு, ஆடுக-விளை யாடச்சுடவாய், முன்னியாடுக—.

(வி-ரை.) முன்னல் - முற்படல்.

'குமுதமும்' என்பதுமுதல் 'செம்மகள்' என்பதுவரை.

(2—4 வரிகள.)

(ப-ரை.) குமுதமும் - குமுதமலரும், வள்ளையும் - வள்ளைக் கொடியும், நீலமும் - நீலோற்பலமலரும், குமிழும் - குமிழமலரும், தாமரை ஒன்றில் - ஒரு தாமரைமலரில், தடைத்து - அடங்கி, வளர்செய்த - வளர்த்தலைக்கிசெய்த, முளரிறிறை - தாமரைமலரின்கண் அழகுநிறைந்த, செம்மகள - இலக்குமிபோல்வாய்.

(வி-ரை.) குமுதம் வள்ளை நீலம் குமிழ் தாமரை மூளரி என்பன ஆருபெயர்கள். வளர் - முதனிலைத்தொழிற்பெயர். செம்மகள் - அண்மைவிளி.

முன்னி யாடுக.

(4—வது வரி.)

(ப-ரை.) முன்னி ஆடுக - (நெருங்கல் வினையாட்டைக்) கருதி வினையாடக்கடவாய.

'பலகுறிபெற்று' என்பதுமுதல் 'அருளினர்போல'

என்பதுவரை.

(6—17 வரிகள்.)

(ப-ரை.) பலகுறி பெற்று-பலவகைத் தோற்றத்தைப்பெற்ற, இவ்வுலகு - இவ்வுலகத்தின்கண், உயிர் - ஆன்மகோடிகளே, அளித்த - ஈன்றருளிய, பஞ்சின் - பஞ்சினும், மெல்லடி - மென்மையாகிய திருவடிகளேயுடைய, பாலை-பாவைபோலும் உமை, கூறு ஆகி-ஒரு பாகமாகி, கருங்குருவிக்கு - (பரத்துவாசமென்னும்) கருங்குருவிக்கு, கண்ணருள் - தனது கண்ணருளே, கொடித்த - கொடித்துப் பாதுகாத்த, வெள் திருநீற்று - வெள்ளிய திருநீறுள்ள, செக்கர் மேனியன் - செவ்வானம்போன்ற திருமேனியையுடையவனுகிய, கிடையில் தாபதர் - முனிவர் தமதிருக்கையிலோதும், தொடை - தொடையோடுங் கூடிய, மறை முழக்கும் - வேதவொலியும், பொங்கர்-சோலையின்மீது, கிடந்த-இருந்த, சூல் கார்-சூலேயுடைய மேகங்களின், குளிறலும் - ஒலியும், வல்லியை - கால்விலங்கை, பரியும் - அறுத்தற்குக் காரணமான, பகடு விடு குரலும் - யானைகள் வெளிப்படுத்துகின்ற வொலியும், யாணர் - அழகு பொருந்திய, கொடிஞ்சி - மேன்மொட்டினையுடைய, நெடு - நெடுமையாகிய, தேர் இசைப்பும் - தேரினதொலியும், ஒன்றி - கூடி, அழுங்க - ஒலித்தலால், நின்ற நிலே பெருகி - அவ்வொலிகணின்றநிலேயினின்றும் பெருகி, மாதிரக் களிற்றினே - திசையானைகளே, செவிடுறக் கொடிக்கும் - செவிடு படித்துகின்ற, புண்ணியக்கூடலுள் - புண்ணியத்தைத் தாராகின்ற மதுரையினிடத்து, நிறை பெருமான் - பெருமையோடெழுந்தருளியுள்ள சோமசுந்தரப்பெருமானது, திருவடி - திருவடிகளே, சுமந்த - மனத்தின்கட்டாங்கிய, அருளினர்போல - அருளாளர்போல.

(வி-ரை.) பாவை - பிரதிமை; இது ஆருபெயராய் உமாதேவியை யுணர்த்திற்று. பரிதல் - அறுத்தல்.

நிற்பெறு தவத்தினை முற்றிய யானும்.
(5—வது வரி.)

(ப-ரை.) நின் பெறு தவத்தினை - நின்னையடையுந் தவத்தை, முற்றிய யானும் - நிறைவேற்றிய யானும்.

'கருந்தேன்' என்பதுமுதல் 'கண்ணுதுவனே' என்பதுவரை.
(18—22 வரிகள்.)

(ப-ரை.) கரு - பெரிய, தேன் - இருட்டை, உடைத்து - கிழித்து, செம் மணி - சிவந்த மாணிக்கங்களை, சிதறி-பலவிடங்களிலுஞ் சிதறி, பாகல் கோட்டில் - பலாவினது கிளைகளில், படர் கறி - படர்ந்த மிளகுக்கொடிகளை, வணக்கி - வளைத்து, கல்லென்றிழிந்து-கல்லென்னு மொலியினிழிந்து, கொல்லையில் - புனங்களில், பரக்கும் - பரவுகின்ற, கறங்கிசை - மிகுந்த வொலியுள்ள, அருவி-அருவிநீரினையுடைய, அம் சாரல்-அழகிய மலைச்சாரலின், புறம்பு தேன்றி-புறத்திற்சென்று, நின் கண்ணுதுவன் - உன்னிடத்து வருவேனுக.

மூளரிநிறை செம்மகள், புண்ணியக்கூட லுண்ணிறை பெருமான் றிருவடி சுமந்த வருளினர்போல, நிற்பெறு தவத்தினை முற்றியயானும் கறங்கிசை யருவியஞ்சாரல் புறம்புதேன்றிநின்கண்ணுதுவனென வினைமுடிவு செய்க. (சு)

திருக்கோவையார் உகஉ-ம் செய்யுள்.

விரதியரை வினவல்.

விரதியரைவினவலென்பது—குராவொடுவெருக்கிச்செல்லாகின்றவள், பத்தியர்போல ஒரு பித்தி தன் பின்னேவர ஒரு பெருந்தகை முன்னே செல்லக் கண்டீரோவென விரதியரை வினவாறிற்றல். அதற்குச் செய்யுள்:—

சுத்திய பொக்கணத் தென்பணி கட்டங்கஞ் சூழ்சடைவெண்
பொத்திய கோலத்தி னீர்புலி யூரம் பலவர்க்குற்ற
பத்தியர் போலப் பிணைத்திறு மாந்த பயோதரத்தோர்
பித்திதற் பின்வர முன்வரு மோவிலர் பெருந்தகையே.

வழிவரு கின்ற மாவிர தியரை
மொழிமின் களென்னு முன்னி மொழிந்தது.

(ப-ரை.) சுத்திய - சுத்தியையுடைத்தாகிய, பொக்கணத்து பொக்கணத்தையும், என்பு - என்பாகிய, அணி - அணியையும், கட

டங்கம்-கட்டங்கமென்னும் படைக்கலத்தையும், சூழ் சடை-சூழ்ந்த சடையினையும், வெண் பொத்திய கோலத்தினீர் - மெய்ம்மூழுது மூடிய வெண்கோலத்தையுமுடையீர், புலியூர் - புலியூர்க்கணுண்டாகிய, அம்பலவர்க்கு உற்ற பத்தியர்போல - அம்பலத்தையுடையவர்கண் மிக்க பத்தியையுடையாரைப்போல, பணைத்து இறுமாந்த - பெருத்திறுமாந்த, பயோதரத்து ஓர் பித்தி - முலைகளையுடையாளொருபேதை, தன் பின் வர - தனக்குப்பின்வர, ஓர் பெருந்தகை - ஒருபெருந்தகை, முன் வருமோ - முன்னே வருமோ (உரைமின்), எ - று.

(வி-ரை.) சுத்தி - பிறர்க்குத் திருநீறு கொடுத்தற்கு இப்பி வடிவாகத் தலையோட்டானமைக்கப்படுவதொன்று. என்பணியென்பு புழி இயல்பும், கட்டங்கமென்புழித் திரிபும் விகாரவகையாற்கொள்க. கடங்கமென்பது மழு; இது கட்டங்கமென நின்றது. வெண்கோலம் - நீறணிந்தகோலம். பத்தியர்க்குப் பணைத்தல் - உள்ளத்து நிகழும் இன்புறவால் மேனிக்கண் வருமொளியும், ஒங்காமையும். இறுமாத்தல் - தாழாத வுள்ளத்தராயச் செம்மாத்தல். முலைக்குப் பணைத்தல் - பெருத்தல். இறுமாத்தல் - ஏந்துதல். வெண்பத்திய கோலத்தினீரென்ற பாடத்திற்கு வெண்ணீற்றுரு பத்திபடவிட்ட மூண்டத்தையுடைய கோலமென்றுரைக்க. இப்பி - முத்துச்சிப்பி. இறுமாத்தல் செம்மாத்தல் என்பவற்றிற்குப் பகுதிகள் முறையே இறுமா செம்மா என்பன. பெருந்தகை - அன்மொழித்தொகை.

நேரிசையாசிரியப்பா.

நிலவுபகல் கான்ற புண்ணிய வருட்பொடி
இருவினை துரந்த திருவுடன் மூழ்கி
நடுவுடல் வரிந்த கொடிக்காய்ப் பத்தர்
சுத்தியமர் நீறுடன் றேர்ள்வலன் பூண்டு
5 மூடங்குவீ முன்ன வேணிமுடி கட்டி
யிருநான்கு குற்ற மடியறக் காய்ந்திவ்
வாறெதிர்ப் பட்ட வருந்தவத் திருவினீர்
தணியாக் கொடுஞ்சுரந் தருந்தழ லுவிப்
பொன்னுடற் றேவ ரொக்கலொடு மயங்கிக்
10 கொண்மூப் பஃறிரைப் புனலுடன் சுழற்றிப்
பொதுளிய தருவினுட் புகுந்திமை யாது

மருந்துபகுத் தண்மி வல்லுயிர் தாங்கும்
வட்டைவந் தனையென வழங்குமொழி நிற்க
தாய்கா முழ்ந்தன ளாயம் வினவினள்
பாங்கியைப் புல்லின ளயலுஞ் சொற்றனள்
மக்கட் பறவை பிரிந்துள மாழ்கினள்
பாடலம் புதுத்தார்க் காளைபின் ஞெண்ணுற்
றள்ளா விதியிற் செல்குர னென்று
தழல்விழிப் பேழ்வாய்த் தரக்கின் 'றுளிமுலை
பைங்கட் புல்வாய் பாலுணக் கண்ட
வருணிறை பெருமா னிருணிறை மிடற்றிருண்
மங்குணிறை பூத்த மனையுடுக் கணமெனப்
புன்னீயம் பொதும்பர்ப் பூநிறை கூடலும்
பொன்வடி வரும்பியுங் கூடி
யன்னியர்க் குதவல் வேண்டுமிக் குறியே.

நிலவுபகல்காண்ற - வேண்டுமிக்குறியே. பருதி-உடன்போக்கு. துணை - விரதியபோலைத்தல்.

'நிலவுபகல்' என்பதுமுதல் 'அருந்தவத்திருவினீர்' என்பதுவரை.

(1—7 வரிகள்.)

(ப-ரை.) நிலவுபகல் - சந்திரசூரியரதொளியை, காண்ற - வீசா நின்ற, புண்ணிய - நல்லமையான, அருட்பொடி - அருளே கவசமாக அணியத்தக்க திருநீற்றில், இருவினை - நல்வினை தீவினைகளை, தூளத் - ஒட்டிய, திருவுடல் - திருமேனியானது, மூழ்கி - மூழ்கப் பெற்று, உடல் நடு வளர்த் - உடலின் நடுவிற் கட்டிய, கொடிக்காய்-கொடியிற் காய்க்குஞ் சுரைக்காயாகிய, பத்தர் - கமண்டலம், சுத்தியமர் நீருடன்-பரிசுத்தியுள்ளநீற்றுப்பையொடு, தோள்வலன் பூண்டு-வலத்தோளில்மாட்டி, முடங்கு வீழ் அன்ன - முடங்கிய விழுதுபோன்ற, வேணி-சடையை, முடி கட்டி-முடியாக முடித்து, இருநான்கு குற்றம் - ஞானாவரணியமாதி யெட்டுக்குற்றங்களையும், அடியறக் காய்ந்து - மூதலறக்கெடுத்து, இவ்வாறு எதிர்ப்பட்ட-இவ்வழியிலெதிர்ப்பட்ட, அருந்தவத்திருவினீர் - செய்தற்கரிய தவச்செல்வத்தையுடையீர்.

(வி-ரை.) நிலவுபகல்-ஆகுபெயர்கள். வலன்-போலி. ஆறு-வழி.

'தணியாக்கோடுஞ்சுரம்' என்பதுமுதல் 'நிற்க' என்பதுவரை.
(8—13 வரிகள்.)

(1-ரை.) தணியா - (வெப்பம்) தணியாத, கொடுஞ்சுரம் - கொடியவிப்பாலேயிலமானது, தரும்-தராதின்ற, தழல்-அக்கினியானது, தாலி - மேலெழுந்துபோய், பொன் உடல்-பொன்னிறமான வுடலையுடைய, தேவர் - தேவர்கள், ஒக்கலொடு - தத்களுஞ்சுற்றத்துடனே, மயங்கி - (அவ்வுட்டணத்தால்) மயக்குற்று, கெண்மூ-மேகங்களே, பஃறிரை - பல அலைகளையுடைய, புனலுடன் தாழ்த்தி - ஆகாயகங்கையுடன் தம்முலகின்கீழிருத்தி, பொதுளிய - நன்றாகத் தெரிந்த, தருவினுள் - கற்பகசோலையுள், புகுந்து - நுழைந்து, இமையா நீ - கண்களிமையாமல், மருந்து-அமிர்தத்தை, பருந்து உண்டி-ரும்முட் பருந்துண்டு, வல் உயிர் - தமது வலியவுயிரை, தாங்கும் படியுள்ள, வட்டை-பாலைவழியில், வந்தனை என - நீ வந்தாயென்று, வழங்கும் மொழி நிற்க - நீவிரென்னை யுபசரிக்கின்ற மூகமனுரை யொழிக.

(வி-ரை.) தரு - ஆகுபெயர். மூகமனுரை - இன்சொல்.

'பாடலம்புனுத்தார்' என்பதுமுதல் 'செல்சுருளென்று' என்பதுவரை.
(17—18 வரிகள.)

(ப-ரை.) புது பாடலம் தார் - புதுமைபான பாதிரிமலர்மாலையையணிந்த, காளைபின் - காளைப்பருவத்தை யுடையவனேடு, என்றால் - எவ்வகை யுபாயத்தினுலும், தள்ளா விதியில் - நீக்கக்கூடாத வூழ்காரணமாக, செல்சுருள் எனறு - செல்லுந லிலைவியானவள் செல்லின்றுளென்று.

(வி-ரை.) பாடலம் - ஆகுபெயர்.

'தாய்தாழ்ந்தனள்' என்பதுமுதல் 'மாழ்கினள்' என்பதுவரை.
(14—16 வரிகள்.)

(ப-ரை.) தாய் கால் தாழ்ந்தனள்-தாயினது பாதங்களே வணங்கினளென்றும், ஆயம் வினவினள் - தன்னுபத்திலுள்ளாரையுசாவினளென்றும், பாகினியை புல்லினள் - தோழியைத் தழுவினளென்றும, அயலும் சொற்றனள்-மற்றையோருக்கு மூபசாரஞ் சொல்லினளென்றும், மக்கட்பறவை - கிள்ளே முதலிய பறவைகளே (உன்னி), பரிந்து உளம் மாழ்கினள் - இரங்கியுள்ளமயங்கினளென்றும்.

(வி-ரை.) ஆயம்-தோழிக்கூட்டம். அபல் - ஆருபெயர். இன்னே முதலியவை மக்களோடு பழகி வாழ்வனவாதலான் அஃறை 'மக்கட் பதவை' என்றார். மாழ்கல் - மயங்கல்.

'தழல்விழி' என்பது முதல் 'வருந்தியுங்கூடி' எனபதுவரை.
(19—24 வரிகள்.)

(ப-ரை.) தழல் விழி - கனல்கின்ற விழியினையும், பேழ் வாய் பெரிய வாயினையுமுடைய, தாக்கின் - புலியினது, துளி முலை-பால் துளிக்கும் முலையின்கண், பைங்கண் - பசிய கண்களையுடைய, புல் வாய் - மான்கன்று, பால் உணக்கண்ட - பாலுண்ணும்படி யரசியல் செய்தருளிய, அருள்நிறை பெருமான்-அருணிறைந்த எம்பெருமான், இருண்நிறை மிடற்றோன்-இருண்மலிந்தகண்டத்தினையுடையோன் அவனது, மங்குல் நிறை பூத்த-ஆகாயம்நிறைவதாகத்தோன்றிய, மணி உடுக்கணம் என - அழகுள்ள தாராகணம்போல, புன்னை பொதும்பர் - புன்னைச்சோலைகளில், பூ நிறை - மலர்கள் நிறைந்த, கூடல் - மதுரையில், நும் பொன்னடி - அழகிய நுமது இருவடி, வருந்தியும் - வருத்தப்பட்டாயினும், கூடி - போய்ச்சேர்ந்து.

(வி-ரை.) தழல்விழி-வினைத்தொகைநிலைத்தொடர். தாக்கு - தாக்ஷு- என்னும் வடசொற்றிரிபு. புன்னையம் பொதும்பர் என்பதில் அம் சாரியை.

அன்னையர்க் குதவல் வேண்டுமிக் குறியே.
(25—வது வரி.)

(ப-ரை.) அன்னையர்க்கு - என்னன்னைமார்களுக்கு, இக்குறி இக்குறிகளே, உதவல் வேண்டும் - சொல்லல்வேண்டும்.

(வி-ரை.) உதவல் ஈண்டுச் சொல்லுதன் மேற்று. அருந்தவத் திருவினிர், வட்டை வந்தனையென வழங்கு மொழிநிற்க, காளையின் ஞெண்ணல் தள்ளாவீதியிற் செல்குநளெனவும், தாழ்ந்தனள் வினவினன் புல்லினள் சொற்றனள் மாழ்கினளெனவும், அன்னையர்க்கு இக்குறியுதவல் வேண்டுமென வினைமுடிவு செய்க. (சக)

திருக்கோவையார் கஅம் செய்யுள்.

அவயவங்கூறல்.

அவயவங்கூற லென்பது — இன்னும் அவளை யிவள் அறிக்கிலள், அறிந்தானாயிற் றழைவாங்குவாளென உட்கொண்டின்று,

என்னும் கருதப்பட்டாளுக்கு அவயவம் இலையெனத் தோழிக்குத் தலைமகன் அவளுடைய அவயவங் கூறுகிற்றல். அதற்குச் செய்யுள்:-

தவவினை கொங்கை குரும்பைகுழல் கொன்றை கொவ்வைசெவ்வாய்
கவவின வாணகை வெண்முத்தங் கண்மலர் செங்கழுநீர்
தவவினை தீர்ப்பவன் முழ்பொழிற் சிற்றம் பலமனையாட்
குவவின நாண்மதி யோன்முளிர் இன்ற தொளிர்முகமே.

அவயவ மவளுக்
கிலையிவை யென்றது.

(ப-ரை.) தவ வினை தீர்ப்பவன் - (விரதங்களான் வருந்தாமல்) தவத்தைதாழிலே நீக்கி (அன்பர்க்கின்புறுதெறி) அருளியவனது, முழ் பொழில் - தாழ்ந்த சோலையையுடைய, சிற்றம்பலம் அனையாட்கு - சிற்றம்பலத்தை யொப்பவளுக்கு, குவவின - குவித்த, கொங்கை - கொங்கைகள், குரும்பை - குரும்பையையொக்கும்; குழல் - குழல், கொன்றை - கொன்றைப்பழத்தை யொக்கும்; செவ்வாய் - செவந்த வாய், கொவ்வை - கொவ்வைக்கனியை யொக்கும்; கவவின - (அதனகத்து இடப்பட்ட, வாள் நகை - ஒளிபொருந்திய பற்கள், வெள் முத்தம் - வெண்முத்தையொக்கும்; கண் மலர்-கண்மலர்கள், செங் கழுநீர்-செங்கழு நீர்மலரையொக்கும்; ஒளி முகம் - ஒளியையுடைய முகம், உவவின - பூரணையின்க ணுளதாகிய, நாள் மதி போன்று-செவ்விய சந்திரனையொத்து, ஒளிர்கின்றது-பிரகாசிக்கின்றது, எ-று.

(வ்-ரை.) தவவினை தீர்ப்பவன் என்பதற்கு மிகவும்வினைகளைத் தீர்ப்பவ னெனினுமமையும். உவவினமதி - பலகலைகள் கூடி நிறைந்தமதி. நாண்மதி - உவாவான நாளின்மதி.

நேரிசையாசிரியப்பா.

வீதி குத்திய குறுந்தாட் பாரிடம்
விண்டலை யுடைத்துப் பிறைவாய் வைப்பக்
சூணங்கினந் துளளக் கூளியுங் கொட்ப
மத்தி யந்தணன் வரஞ்சொலி விடுப்பத்
5 தில்லை கண்ட புலிக்கான் முனிவனுஞ்
சூயை கைவிடப் பதஞ்சலி யாகிய
வாயிரம் பணடவி யருந்தவத் தொருவனுங்
கண்ணுல் வாங்கி நெஞ்சறை கிறைப்பத்
திருநட நவின்ற வுலகுயிர்ப் பெருமான்

கடன்மாக் கொன்ற கீபபடர் நெடுவே
ஆருளிணர்க் கடம்பி னெடுத்தார்க் கண்ணிய
னரிமகள் விரும்பிய பாகஞ் செய்து
களியுட னிறைத்த வொருபரங் குன்றமும்
பொன்னக தோகையு மணியரிச் சிலம்பு •
நிரைத்தலைச் சுடிகை நெருப்புமி ழாரமும்
வண்டுகிளை முரற்றிய பாசிலைத தூஉ
மரகத மூடற்றிய வடிவொடு மயங்க
மரக்கா லாடி யரகுகர்க கொன்ற
கவைத்தலை மகிலேவற் பிறைத்தலைக் கன்னி
வடபாற் பரிதி பலமணக் கோட்டமுஞ்
சூடகஞ் சோளவளை கிடந்துவில் விச
யாவ ரும் பகையும் யாவையிற் பகையும்
வளனிற் காக்கு வருவன வருளு
மூழிபுங் கனைமென வுயர்மகன் பளளியு
முவாமதி கிடக்குங் குண்டுகடல் கலகி
மருந்துகைக் கொண்டு வானவர்க் கூட்டிய
பாகப் பக்க நெடியோ னுறையுளுந்
தும்பி யுண்ணுத் தொங்கற் றேவர்
மக்களொடு நெருங்கிய மீதிப் புறமு
மதுநிறை பிலிற்றிய பூவொடு நெருங்கிச்
சூரரக் கன்னிய ருடல்பனி செய்யுங்
கடைக்கான் மடியும் பொங்கர்ப் பக்கமு
மூடி யாடுகர்த் திரையொடு பிணங்கித்
தோழியிற் றீர்க்கும் வையைத் துழனியு
மளவா வூழி மெய்யொடு சூழ்தரு
நின்றுநின் றேங்கி நிலையறம் பெருக்கு
மானுப் பெரும்புக முருணைகர்க் கூடற்
பெண்ணுடல் பெற்ற சென்னியம் பிறையோன்
பொற்றகடு பரப்பிய சருமணி நிரையென
வண்டுத் தேனு மருள்கிளை முரற்றி
யுடைந்துமிழ் நறவுண் டெங்குதார்க் கொன்றையன்

திருவடி புகழுநர் செல்வம் போலு
மண்ணுந் தெறித்த வணியுறு வனமுலை
யவன்கழல் சொல்லுந ருருவினை மானு
மலைமுலைப் பதையட மாழ்குறு நுசுபபு
மற்றவ னன்சைத்த மாசுணம் பரபபி
யமைத்தது கடிக்கு மணிப்பாம பல்கு
லாங்கவன் றிகத கலைமான் கடம்பு
மிருதுழை கிழிகரு மிமதர் மலர்க்
புகாமுகப் புழைகரை துபிறரு கண்
மூடங்குளே கண்ட பெருநதயர் போல
வுபிரிறு தனித்த வ டய வுகொடி
பொன்மலை பனிப்பிறும பரி
வென்னுயிர் வாட்டிய தெடியிளங் கொடிபோ.

வீதிகுத்திய - தொடியிளங்கொடிக்கே. பதுதி - சேட்படை. தூறை - அவயவங்கூறல்.

'புகர்முகம்' என்பதுதல் 'இளங்கொடிக்கே' என்பதுவரை.
(50—54 வரிகள்.)

(பதவுரை) உயிரிறும் துனித்த - (மிகவும் நட்பான) உயிரினும் அருமையாகிய, அவ்வவ்வுருக்கொடி - அந்தந்த அவயவத்தைக் கொண்டு, பொன்மலை - மாமேருவானது, பனிப்பினும் - நடுங்கினும், பனிபா - நடுங்குகுறச, என் உயிர் - எனதுயிரை, புகர் முகம் - புள்ளிகளுடைய முகத்தினையும், புழை கை - துளையுள்ள கையினையுமுடைய யானையினது, துயில்தரு கனவில் - நித்திரையிற் காண்டற்குரிய கனவிலே, மூடங்கு உளே கண்ட - இருந்ததைக்கண்ட, பெரு துயர் போல - மிக்கதுன்பம்போல, வாட்டிய - துன்பப்படுத்திய, தொடிவளையலணிந்த, இளங்கொடிக்கு - இளங்கொடிபோன்ற தலைவிக்கு.

(விளை) கொடி கொண்டு என்பன மூன்றுவதன்சொல்லுருபுகள். புழைகை-அன்மொழித்தொகை, மூடங்குளேயும் அது. இளங்கொடி - ஆகுபெயர்.

'வீதிகுத்திய' என்பதுமுதல் 'பெருமான்' என்பதுவரை.
(1—9 வரிகள்.)

(பதவுரை) வீதி குத்திட - ஓடியாடுதல் புரிந்த, குறுந்தாள்பாரிடம் - குறுமையாகிய கால்களையுடைய பூதங்கள், விண்தலை உடை

பவ வீண்ணிடத்தைக் கிழித்து, பிறை வாய் வைப்ப - ஆங்குள்ள பைங்கூழை வாயின்கண்வையாநிற்பவும், குணங்கு இனம் துள்ள - தாடிகள் துள்ளாநிற்பவும், கூளியுங் கொட்ப-பேய்களுந் திரிந்து வரவும், வீரவும், மத்தியந்தணன் - மத்தியந்தனனென்னு முனிவில்லே கசொலி விடுப்ப - வரம்பெறமாறு சொல்லியனுப்புதலும், தில்லேயென்னுந் தலத்தைக்கண்ட, புலிக்கால் முனிவனும் - தில்லேயென்னுந் தலத்தைக்கண்ட, புலிக்கால் முனிவனும், சூயை கைவிட - அகத்தால், பதஞ்சலியர்ப்பினி தனது கையிலிருந்து தரையில் விட்ட ஆயிரம் படஅரையுள்ள பதஞ்சலிமுனிவனுமிய, ஆயிரம் பணடவிழோருவனும், கண்ணிருந்தவத்து ஒருவனும் - தவத்தால் அரிய மனமாகிய வீட்டில், நிறை - கண்களாற் பெற்று, நெஞ்சு அறை - நிலை நிறக்காரிக்கவும், திருநடம் கவின்ற - முகித்திருவை யளி ஞற்குரிய டனஞ்செய்த, உலகு உயிர் பெருமான் - உலகிற்குயிராகின்ற பிரானனவனும்.

(வி-ரை) அருசூயை யெனபாலது முதற்குறையாய் சூயை யென நின்றது பண்டுவி - படகதட

'கடன்பாக்கொன்ற' என்பதுதல் 'குன்றமும்' என்பதுவரை.

(10—13 வரிகள்.)

(ப-ரை.) கடல் மா கொன்ற - கடலிடத்து மூளைத்து நின்ற மாமரமாகிய சூரபற்பனேத்தடிந்த, நீபடர் நெடுவேல் - நீத் தவழாநின்ற நெடிய வேலாயுதத்தையுடைய, உருள இணை கடம்பின் நெடுந்தார்க் கண்ணியன் - தேருருள்போலுங் கடப்ப கொத்துக்களாகிய பெரிய மலர்மாலேயையுடையவன், அரி மகன் - இந்திரன்மகனாகிய தெய்வயானே நாய்சியாரை, விரும்பி - விரும்பி, பாகம் செய்து - (பராசரன் புத்திரைப்) பரிபாகமுற்றுலவித்து, களியுடன் - களிப்போடு, நிறைந்த - நிறைந்துள்ள, ஒரு பாங்குன்றமும் - ஒப்பற்ற திருப்பரங்குன்றமும்.

(வி-ரை.) தடிதல் - வெட்டல்.

'பொன்னங்தோகை' என்பதுமுதல் 'மயங்க' என்பதுவரை.

'உவாமதி' என்பதுமுதல் 'உறைபுளும்' என்பதுவரை.

(14—17, 25—27 வரிகள்.)

(ப-ரை.) பொன்னங்தோகையும் - பீதாம்பரமும், மணி அரி சிலம்பும் - மணிப்பரல்களையுடைய சிலம்பும், நிரைத்தலேச் சுடிகை-

நிரையான தலைச்சுடிகையுள்ள, நெருப்பு உமிழ் ஆரமும் - நெருப்புப் போலும் ஒளியை வெளிப்படுக்கின்ற கௌத்துவாபரணமும், வண்டு இளை மூரற்றிய - வண்டுகள் இசைபாடுகின்ற, பாசிலை துளவம்-பச்சிலையாகிய துழாய்மாலையும், மாகதம் உடற்றிய-மாகதமணி நிறத்தை மாழ்கப்பண்ணின, வடிவொடு - திருமேனியிடத்து, மயங்க - தலை மயங்கும்படி, உவாமதி இடக்கும் - நிறைமதியிருத்தற் இடமாகிய, குண்டுகடல் - ஆழமானகடலை, கலக்கி - (மந்தரமத்தால்) கலக்கி, மருந்து கைக்கொண்டு - அமுதத்தைக் கையிலேந்தி, வானவர்க்கு ஊட்டிய - தேவரையுண்பித்த, பாகப்பக்கம் - பாமேச்சுரனது ஒரு பாகத்திலுள்ள, கெடியோன் - திருமால் வீற்றிருக்கின்ற, உறையுளும் - கோயிலும்.

(வி-ரை.) பொன்னர் தோகையென்பதில் அம் சாரியை, அழகெனினுமாம். தோகை - ஆடை. பீதம்-பொன். அம்பரம் - ஆடை. சுடிகை - உச்சி. தலைமயங்கல் - கலத்தல்.

'மரக்காலாடி' என்பதுமுதல் 'கோட்டமும்' என்பதுவரை.

(18—20 வரிகள்.)

(ப-ரை.) மரக்கால் ஆடி-மரக்கால் என்னும் தனது ஆடல் புரிந்து, அரக்கர் கொன்ற - அரக்கரை வீழ்த்தின, பிறைத்தலை-பிறைத்திலேபோலும், கவைத்தலை - கவராகிய தலையுள்ள, மணி வேல் - வலிய சூலமேந்திய, கன்னி - துர்க்கையானவள், வடபால் - வடக்கின்கண், பரிந்த - விரும்பிய, பலி மணம் - ஊன்மணங்கொண்ட, கோட்டமும் - ஆலயமும்.

(வி-ரை) மரக்கால்-ஓர் வீளையாட்டு. மணிவேல்-அழகிய வேல் எனினுமாம்.

'சூடகம்' என்பதுமுதல் 'பள்ளியும்' என்பதுவரை.

(21—24 வரிகள்.)

(ப-ரை.) சூடகம் - கங்கணமும், தோள்வளை - தோள்வளையும், இடந்து-இருந்து, வில் வீச - ஒளிபெருக்காதிற்ப,யாவர்த்தம் பகையும்-யாவரது பகைமையையும், யாவையின் பகையும் - யாதொன்றனது பகைமையையும், வளனில் காத்து - (ஒழியும்படி தனது) வளத்தால் பாதுகாத்து, வருவன அருளும் - வருகின்ற நன்மைகளைத் தந்தருள்

கின்ற, ஊழியும் - ஊழிக்காலமும், கணம் என - ஓர்கணப்போதாக, உயர்மகன் பள்ளியுமை - வளர்கின்ற வடிகக்கடவுளது ஆலயமும்.

(வி-ரை.) வளனிற் காத்து என்பதில் இன் மூன்றுவதன் கருவிப்பொருளில் வந்தது.

'தும்பி' என்பதுமுதல் 'வீதிப்புறமும்' என்பதுவரை.

(28—29 வரிகள்.)

(ப-ரை) தும்பி உண்ணு - வண்டுகளாலுண்ணப்படாத, தொங்கல் தேவர் - பொன்னரிமாலைகளையுடைய தேவர்களும், மக்களொடு-மனிதர்களும், நெருங்கிய - நெருங்கியுலாவுகின்ற, வீதிப்புறமும் - வீதியினிடங்களும்.

(வி-ரை.) தொங்கல் - மாலை, அது ஈண்டைக்கேற்பப் பொன்னரிமாலை யெனப்பட்டது.

'மதுநிறை' என்பதுமுதல் 'பொங்கர்ப்பக்கமும்' என்பதுவரை.

(30—32 வரிகள்.)

(ப-ரை) மதுநிறை பிலிற்றிய - நிறைந்த மதுவைத் துளிக்கின்ற, பூவொடு நெருங்கி-மலர்களொடு நெருக்குற்று, சூரக்கன்னியர் - சூரமகளிர்கள், உடல்பனிசெய்யும்-தமதுடலை நடுங்குதல் செய்கின்ற, கடைக்கால் மடியும் - ஊழிக்காற்றுத் தடைபடுகின்ற, பொங்கர் பக்கமும் - சோலைப்பக்கங்களும்.

(வி-ரை.) மது-தேன். பிலிற்றல் - துளித்தல், பனித்தல்-நடுங்கல்.

'ஊழியாடுனர்' என்பதுமுதல் 'வையைத்துழனியும்' என்பதுவரை.

(33—34 வரிகள்.)

(ப-ரை.) ஊழி ஆடுநர் - தத்தந்தலைவரோடு நீராடுமகளிரை, திரையொடு - அலைகளாகிய கையைக்கொண்டு, பிணங்கி - பின்னி, தோழியின் - தோழியைப்போல, நீர்க்கும் - அவ்வுடலைத் நீர்க்காகின்ற, வையைத்துழனியும் - வையைநதியினெளியும்.

(வி-ரை.) தோழியின் என்பதில் இன் ஐந்தாவதனெப்புப் பொருட்டு.

'அளவாவுழி' என்பதுமுதல் 'அருணகாக்கூடல்'
என்பதுவரை.
(35—37 வரிகள்.)

(ப-ரை.) அளவா ஊழி-அளவுபடுத்தொணாத வுகாந்தத்திலும், மெய்யாடி சூழ்ந்து - மெய்மையாற் சூழப்பெற்று, நின்று நின்று - என்றும் நிலைபெற்று, ஒங்கி - உயர்ந்து, நிலை அறம் பெருக்கும் - கேடிலாத தருமத்தை வளர்க்காநின்ற, ஆஞ பெரும்புகழ் - நீங்காத மிக்க புகழையுடைய, அருள் நகர் கூடல் - சத்திபீடங்களுயர்வாகிய கூடன்மாநகரத்தே.

(வி-ரை.) அளவாவுழி - பல்லூழிக் காலங்கள்.

'பெண்ணுடல்' என்பதுமுதல் 'கோன்றையன்'
என்பதுவரை.
(38—41 வரிகள்)

(ப-ரை.) பெண்ணுடல் பெற்ற - பெண்ணைத் தன்னுடற்பாதியிற்கொண்ட, சென்னி பிறையோன் - முடியிற் பிறையைதரித்தவனும், பொற்றகடு பரப்பிய - பொற்றகட்டின்மேற் பரப்பிய, கருமணி மிசையென - நீலமணியிலெழுதுகென்ன சொல்ல, வண்டும சேணும் - ஆண்வண்டுகளும் பெண்வண்டுகளும், மருள்கிளை மூற்றி - மருளப்படும் இசையைப்பாடி, உடைந்து உமிழ்-மலர்தலாலுமிழாநின்ற, நறவு உண்டு - தேனையுண்டு, உறங்கு - தங்காநின்ற, தார் கொன்றையன் - கொன்றைமாலையையுடையவனுமாகிய சோமசுந்தரக்கடவுளது.

(வி-ரை) சென்னியம்பிறை யென்பதில் அம் சாரியை, அழகெனினும் சுவகையெனினு மமையும். உடைதல் - மலர்தல். உறங்கல்-ஈண்டுத் தங்கலென்னும்பொருட்டு.

'திருவடி' என்பதுமுதல் 'வனமுலை' என்பதுவரை.
(42—43 வரிகள்.)

(ப-ரை.) திருவடி புகழுநர் - பூபாதத்தைப் புகழ்வோரது, செல்வம்போலும் - செல்வம வளர்வதுபோலும் வளராநிற்க, அண்ணாந்து எடுத்த - மேலோங்கித் தலைநிமிர்ந்த, அணி உறு வன முலை - ஆபரணங்கள் முற்றிய அழகுள்ள முலைகளானவை.

'அவன்கழல்' என்பதுமுதல் 'நுசுப்பு' என்பதுவரை.
(44—45 வரிகள்.)

(ப-ரை.) மலை மூலைப்பகை அட - மலைபோன்ற மூலைப்பகை வருத்துதலால், மாழ்குறும் நுசுப்பு - ஒல்குதலைப் பொருந்திய இடையானது, அவன் கழல்-அக்கடவுள் திருவடியை, சொல்லுகர்-பாடுகின்றவரது, அருவினை மானும் - தேய்தற்கரியவினை தேய்வது போன்றிருக்கும்.

(வி-ரை.) மலைமூலை-உவமைத்தொகைநிலைத்தொடர். அடி-காரணப்பொருட்டாகிய வினையெச்சம். மாழ்கல் - ஒல்கல் (தூவளல்). கழல் - ஆகுபெயர்.

'மற்றவனசைத்த' என்பதுமுதல் 'அல்குல்' என்பதுவரை.
(46—47 வரிகள்.)

(ப-ரை.) மணிப்பாம்பு அல்குல் - மணிமுற்றிய பாம்பின் படமாகிய அல்குலானது, அவன் அசைத்த - அச்சோமசுந்தரமூர்த்தி அசையிற்கட்டின, மாசுணம் பரப்பி அமைத்தது கடுக்கும் - பாம்பானது படத்தை விரித்ததை யொக்கும்.

(வி-ரை.) மற்று - அசை, வினைமாற்றெனினும் பிறிதெனினுமாம். அசைத்தல் - கட்டல். கடுத்தல் - நிகர்த்தல்.

'இருகுழை' என்பதுமுதல் 'கலைமான்கடுக்கும்' என்பதுவரை.
(48—49 வரிகள்.)

(ப-ரை.) இரு குழை இழிக்கும் - இரண்டு காதையுங் கிழித்தருவுகின்ற, அரிமதர் மலர் கண் - செவ்வரி பரந்த மதர்த்த மலர்க் கண்களானவை, அங்கவன் தரித்த - அப்பெருமான் கையின்கணேந்திய, கலைமான் கடுக்கும் - கலைமானை யொத்திருக்கும், எ-று.

(வி-ரை.) அங்கவன் - ஒருசொல், "ஈங்கிவள் வாய்கமழும்", "ஆங்கதுங்காட்டிடென்று", "ஆங்கவன் பூங்கழல்" என்புழிப் போல.

என்னுயிர் வாட்டிய தொடியிளங்கொடிக்கு, அண்ணற்தெடுத்த வணியுறு வனமுலை தார்க்கொன்றையன் திருவடிபுகுமுரை செல்வம்போலும், மாழ்குறும் நுசுப்பு அவன்கழல் சொல்லுக ருவினை மானும், அணிப்பாம்பல்குல் மறவனசைத்த மாசுணம்பரப்பி யமைத்துகடுக்கும், அரிமதர்மலர்க்கண் ஆங்கவன்தரித்த கலைமான்கடுக்கும் என வினைமுடிவுசெய்க.

திருக்கோவையார் ககக-ம் செய்யுள்.

அன்னமோடழிதல்.

அன்னமோடழிதலென்பது — பங்கயத்தை நோக்கிப் பரிவுறுகின்றவன், உலகமெல்லாம் துயிலாகின்ற விந்நிலைமைக்கண்ணும் யான் துயிலாமைக்குக் காரணமாகிய என் வருத்தத்தைச் சென்று அவர்க்குச் சொல்லாது, தான் தன் சேவலைப்பொருந்திக் கவற்சியின்றித் துயிலாகின்றதென, அன்னத்தோடழிந்து கூறுகின்றல். அதற்குச செய்யுள்:—

மூவறழீ இயவருண்முதலோன்றில்லேச்செல்வன்மூங்நீர்
நாவறழீ இயவிந்நானிலந்துஞ்சுநயந்தவின்பச்
சேவறழீ இச்சென்றதான்றுஞ்சும்யான்றுயிலாச்செயிரோ
காவறழீ இயவர்க்கோதாதகளியன்னமே.

இன்னகையவ எரவருதுயர
மன்னத்தோ டழிந்துரைத்தது.

(ப-ரை.) மூவல் தழீஇய - மூவலைப்பொருந்திய, அருள் முதலோன் - அருளையுடைய முதல்வன், தில்லை செல்வன் - தில்லைகணுளராகிய செல்வன், மூங்நீர் நாவல் தழீஇய - (அவனுடைய) கடலாற் சூழப்பட்ட நாவலைப்பொருந்திய, இ நால் நிலம் துஞ்சும்-இந்த நானிலமுழுதுந் துஞ்சாநின்றது; யான் துயிலா செயிர் - (இப்பொழுதினும்) யான் துயிலாமைக்குக் காரணமாகிய வருத்தத்தை, எம் காவல் தழீஇயவர்க்கு-எமது காவலைப் பொருந்தினவர்க்கு, ஓதாது-உரையாதே, அளிய - அளித்தாகிய, கவி அன்னம் - களியன்னமானது, சென்று-(இவ்விடத்தினின்றும்) போய், நயந்த இன்பம் - தான் நயந்தவின்பத்தைச் செய்யும், சேவல் தழீஇ-சேவலைத்தழுவி, தான் துஞ்சும் - (ஒரு கவற்சியின்றித்) தான்துயிலாகின்றது (இனி யிது கூறுவார் யாவர்), எ - று.

(வி-ரை.) பாலைக்கு நிலமின்மையின் நானிலமென்றார். ஓதாது என்பது முற்றெனினுமமையும்.

நேரிசையாசிரியப்பா.

கவைத்துகிர் வடவையிற் றிரட்சிகை பரப்பி
யரைபெறப் பிணித்த கற்சுளி மாக்க
ளுள்ளந் தீக்குறு மூவர்க்கட வூடித்த
நாவலந் தண்பொழி லின்புடன் றுயில

வுலகற விழுங்கிய கள்ளென் கங்கு
றுயிலாக் கேளுட னுயிரிரை தேரு
நெட்டுடற் பேழ்வாய்க் கழுது முறங்கப்
பிள்ளையும் பெடையும் பறைவரத் தழீஇச்
சுற்றமுஞ் சூழ்ந்து குருகுகண் படுப்பக்
கீழுரும் பணைத்த முளளரை முளரி
யிதழ்க்கத வடைத்து மலர்க்கண் டுயில
விரிசினை பொதுளிய பாசிலை யொடுக்கிப்
பூவொடும் வண்டொடும் பொங்கரு முறங்கப்
பான்முகக் களவின் குறுங்காய்ப் பச்சிணர்
புட்காற் பாட்டினர்க் குறையுள கொடுத்த
மயிர்குறை கருவித் துணைக்குழை யலைப்ப
வரிந்தவிந் தனச்சுமை மதியர வீதழி
யகன்றுகட் டவிழ்ந்த சேகரத் திருத்தி
வீதியுங் கவலையு மிகவளம் புகன்று
பொழுதுகண் மறைந்த தீவாய்ச் செக்கர்
தணந்தோ ருள்ளத் துள்ளுறப் புகுந்தபின்
காருடல் காட்டிக் கண்டகண் புதைய
அல்லெனு மங்கை மெல்லெனப் பார்க்க
முரன்றெழு காக முயன்றுவா தியைந்த
வடபுல விஞ்சையன் வைகிடத் தகன்கடைத்
தென்றிசைப் பாண னடிமை யானெனப்
போகா விறகுடன் றலைகடை பொருந்தி
யுந்தித் தோற்ற மோசைநின் றெடுங்கப்
பாலியி லெழுப்பி யமரிசை பயிற்றித்
தூங்கலுந் துள்ளலுஞ் சுண்டிநின் றெழுதலுந்
தாரியிற் காட்டித் தருஞ்சா தாரி
யுலகுயி ருள்ளமு மொன்றுபட் டொடுங்க
விசைவிதி பாய விசைப்பகை தரந்த
கூடற் கிறையோன் றுள்விடுத் தோனென
என்கண் டுஞ்சா நீர்மை
முன்கண் டோதா தவர்க்குங் குருகே.

கவைத் துகிர்வடவை - அவர்க்கு நங்குருகே. பகுதி-ஒருவழித் தணத்தல். துணை - அன்னமோடழிதல்.

'கவைத்துகிர்' என்பதுமுதல் 'இன்புடன்றுயில' என்பதுவரை.
(1—4 வரிகள்.)

(ப-ரை.) கவை - கிளைகளாகிய, துகிர்-பவளக்கொடிகள், வடவையின் - வடவாமுகாக்கினியைப்போல, நிரள் சிகை பரப்பி - நிரட்சியுள்ளனவாய்ப் பக்தங்களிற் பரப்பி, அரை பெற பிணித்த-அரையிற் கயிறுபெறக்கட்டிய, கல் குளி மாக்கள் - முத்து முதலிய மணிகளைக் குளித்தெடுக்கு மாந்தர்களது, உள்ளம் நீக்கும் - உள்ளத்தை யெரிக்காநின்ற, உவர் கடல் உதித்த-உப்புக்கடல்சூழ்ந்த, நாவலம் தண் பொழில்-தட்பமான நாவலந்தீவிலுள்ளார், இன்புடன் துயில-இன்புடனே கண்ணுறங்காநிற்பவும்.

(வி-ரை.) வடவையின் என்பதில் இன் ஐந்தாவத ஞெப்புப் பொருட்டு.

'உலகற' என்பதுமுதல் 'உறங்க' என்பதுவரை.
(5—7 வரிகள்.)

(ப-ரை.) உலகு அற வீழுங்கிய - உலகத்தை முழுதும் வீழுங்கிய, நள்ளென் கங்குல் - நடுராத்திரியில், துயிலா கேளுடன் - உறங்குதலில்லாத சுற்றத்தோடு, உயிர் இரை தேரும் - உயிர்களாகிய இரையைத் தேடுகின்ற, நெடி உடல் - நெடிய வுடலினையும், பேழ் வாய் - பெரிய வாயினையுமுடைய, கழுதும் உறங்க - பேய்க்கணங் களுந் தூங்காநிற்பவும்.

'பிள்ளையும்' என்பதுமுதல் 'கண்படுப்ப' என்பதுவரை.
(8—9 வரிகள்.)

(ப-ரை.) பிள்ளையும் - தம்முஞ்சுகளையும், பெடையும்-பெடையையும், பறைவரத்தழீஇ - சிறகினுள்ளே தழுவி, சுற்றமும் சூழ்ந்து - தஞ்சுற்றத்தோடுஞ் சூழ்ந்து, குருகு - குருகினங்கள், கண் படுப்ப - கண்ணுறங்காநிற்பவும்.

(வி-ரை) பறை - ஆகுபெயர், பறத்தற் றொழிலுள்ள தென் பதுபொருள். குருகு-பறவை, "கோலித்திகழ்சிற கொன்றினெடுக் கிப் பெடைக்குருகு" என்றார் பிறரும்.

'கீழருட்பணைத்த' என்பதுமுதல் 'கண்யேில' என்பதுவரை.
(10—11 வரிகள்.)

(ப-ரை.) கீழ் அரும்பு அணைத்த - கீழே யரும்புகளேயணைத்த, மூள்ளரை முளரி-முள்ளரைத் தாமரைகள், இதழ் கதவு அடைத்து-இதழ்களாகிய கதவங்களே மூடிக்கொண்டு, மலர் கண் துயில-மலர்களாகிய கண்ணுறங்காநிற்பவும்.

'விரிசினேபோதுளிய' என்பதுமுதல் 'பொங்கருமுறங்க' என்பதுவரை.
(12—13 வரிகள்.)

(ப-ரை.) விரிசினே பொதுளிய - விரிந்த இலேகளிற்றளிர்த்த, பாசிலே ஒடுக்கி - பசியவிலேகளே யொடுக்கிக்கொண்டு, பூவொடும் வண்டொடும் - மலர்களோடும் வண்டுகளோடும், பொங்கரும் உறங்க - சோலேகளுந் துயிலாநிற்பவும்.

(வி-ரை.) பொதுளல் - தளிர்த்தல்.

'பான்முகம்' என்பதுமுதல் 'அலேப்ப' என்பதுவரை.
(14—16 வரிகள்.)

(ப-ரை.) புள் கால் பாட்டினர்க்கு - புள்ளின் கால்களேயுடைய திப்புருநாரதராகிய யாழ்வலவர் பாடலுக்கு, உறையுள் கொடுத்த - உறையுளாகக் கொடுத்த, பால் முகம் - பாலேத் தன்னிடத்திலுள்ள, களவின் - களவினது, குறுங்காய் பச்சிளர் - குறிய காயுடன் பொருந்திய பச்சிலேக்கொத்துகள், மயிர் குறை கருவி - மயிரைக் குறைக்கின்ற கத்திரிகையோன்ற, தூணே குழை - இரண்டு காதிலும், அலேப்ப - அலேயாநிற்ப.

(வி-ரை.) தும்புரு நாரதர்கள் பறவைக்காலும் பாடல் வளமையுமுடையராதல்பற்றி அவர்களேப் 'புட்காற் பாட்டினர்' என்றார். மயிர்குறைகருவி - கத்திரிகை.

'வரிந்த' என்பதுமுதல் 'சேகரத்திருத்தி' என்பதுவரை.
(17—18 வரிகள்.)

(ப-ரை.) வரிந்த - கட்டப்பட்ட, இந்தனச்சுமை - விறகுக் கட்டை, மதி அரவு இதழி-திங்களும் பாம்புங் கொன்றையும், அகன்று-நீங்கி, கட்டி அவிழ்ந்த-கட்டு நீங்கிய, சேகரத்து இருத்தி-முடி மேல்வைத்து.

(வி-ரை.) இத்தகம் விறகென்னும் பொருள் பயப்பதோர் வட சொல். சேகரம் - திருமுடி.

'வீதியுங்கவலையும்' என்பதுமுதல் 'மேல்லெனப்பார்க்க' என்பதுவரை.

(19—23 வரிகள்.)

(ப-ரை.) வீதியும் கவலையும் - வீதிகளினுஞ் சந்துகளினும், மிக வளம் புகன்று - அதிகலிலேபகர்ந்து, பொழுது கண் மறைந்த - சூரியன் கண்ணினின்று மறைந்த, நிவாய் செக்கர் - நியைபொத்த செவ்வானமானது, தணந்தோர் உள்ளத்துள் - பிரிந்தோருள்ளத்தூடே, உற புகுந்தபின் - உருவி நுழைந்தபின்னர், காருடல் காட்டி-கரியவுடலே யாவருக்குங்காட்டி, கண்ட கண் புதைய-கண்ட கண்கள் தன்னிற்புதையுமாறு, அல் எனும் மங்கை - இருளென னும் பெண்ணும், மெல்லென பார்க்க - மெல்லப்பாராகிற்கவும்.

(வி-ரை) வளம்புகறல் - விலைகூறல். தணத்தல் = பிரிதல்.

'முரன்றெழுகாகம்' என்பதுமுதல் 'தலைக்கடைபொருந்தி' என்பதுவரை.

(24—27 வரிகள்.)

(ப-ரை.) முரன்று எழு காகம் - சத்தித்தெழுகின்ற இசை நூலில், முயன்று-முயற்சியுள்ளவனுகி, வாது இயைத்த-வாதுசெய்ய விஞ்சத்த, வடபுல விஞ்சையன் - வடதேயத்தினின்றும் வந்த (ஏம நாதனென்னும்) பாணன், வைகு இடத்து அகன் கடை-தங்கியிருக் கும் வீட்டின்கண் பெரிய வாற்தலில், தென் திசை பாணன்-தென் மதுரையிலுள்ள பாணபத்திரனது, அடிமை யான் என-அடிமையா னவ னென்றுரைத்து, போகா விறகுடன்-விலைபோகாத விறகோடு, தலைக்கடை பொருந்தி - தலைக்கடையிலிருந்து.

(வி-ரை.) முரலல் - சத்தித்தல். காகம்-இசைநூல். வைகல் - தங்கல். விஞ்சையன் - (காந) வித்தையையுடையவன். புலம்-இடம், இது ஆகுபெயராய் தேசத்தை புணர்த்திற்று.

'உந்தித்தோற்றம்' என்பதுமுதல் 'விடித்தோரென' என்பதுவரை.

(28—34 வரிகள்.)

(ப-ரை.) உந்தி தோற்றம் - நாபியினின்றுந் தோற்றமாகிய, ஒசை நின்று ஒடுங்க-ஒசையானது அங்ஙனநின்றொடுங்க, பரலையில்

எழுபபி - பாலேயெனனும பணணில ஆரோகணமாக எழுபபி அம ரிசை பயிறறி - அவரோகணமாக இறகவி, தூங்கதும - தூங்குலுக, துளளலும - துளளலும, சுணடிநினறு எழுதலும - மெலிநதுநினறெ ழுதலும, தாரியிறகாட்டி-ஒழுங்காகக்காட்டி, தரும-தாத, சாதாரி - சாதாரியெனனும இசையை, உலகு உயிர - உலகதிலுளள உயிர கள, ஒனறுபடடு ஒதிங்க-ஒருமைபபட்டடங்க, இசை விதி பாடிய - கநதருவ நூனமுறை பாடியருளிய, இசை பகை தூரநத-பதினான பகைவஞ்சிய பாணனை ஓட்டிய, கூடறகு இறையோன - மதுரைக கிறைவஞ்சிய சோமசுநதரமூரதியினது, தாள விடதோ எனன - திருவடியை நினையாதுவிட டாபோல

(வி-ரை) தாரி - ஒழுங்கு பகை - ஆகுபெயர தூரதல - ஓட்டல.

'எண்கண்டுஞசா' என்பதுமுதல 'நங்குருகு' எனபதுவரை.

(35—36 வரிகள.)

(ப-ரை.) என கணதுஞசா - என கணணுறங்காத, நீளமை - தன்மையை, நம குருகு-நமது குருகானது, முன கணடு-முனனறிவ திம, அவாகது - அநதத தலைவாகது, ஒபாது-சொலலாது (எனசெய கேன).

(வி-ரை) துஞசல - உறஙகல.

நாவலந தண்பொழி லினபுடன துயில,கழுதிமுறங்க,முளளரை முளரி இதழகததவடைதது மலாகணடுயில, பூவொடிம வண்டொ டிம பொங்கருமுறங்க, இநதனசுமை சேகரதிருததி, அலலெனு மஙகையு மெலலெனப் பாகக, வாநியைக வட்புல விஞசையன வைகிடத தகனகடை தெனதிசைப பாண னடிமை யானெனப் போகா விறகுடன தலைக்கடைப பொருநதி இசைவிதிபாடிய இசை ப்பகை தூரநத கூடற் கிறையோன முளவிதிதோ ரென, எனகண ஞ்சாரிமை, நங்குருகு அவாகது ஒதா தெனசெயகேனென, வினை முடிவுசெயக (கச)

திருக்கோவையார் உரை - ம் செய்யுள்.

சொல்லாதேதகல்.

சோல்லாதேதகலென்பது—நீயே கூறென்ற தோழிக்கு, யா னெல்வாறு கூறினும அவள பிரிவுடமபடா ளாதலின ஒருகாலும வரைதுசொன்னையில்லை, யான விரைய வருவேன், அவ்வளவும

நீ யாற்றுவித்துக்கொண் டிருப்பாயாகவெனக் கூறித், தலைமகன் றலைமகளுக்குச் சொல்லாது பிரியாதிற்றல் அதற்குச் செய்யுள்.—

வருட்டிற் றிகைக்கும் வகிக்கிற் குளங்கு மனமகிழ்ந்து
தெருட்டிற் றெளியலன் செப்பும் வகையில்லை சீரருக்கன்
குருட்டிற் புகச்சென்ற கோன்புலி யூர்குறு கார்மனம்போன
றிருட்டிற் புரிகுழலாட் கெங்ஙனே சொல்லி யேகுவனே.

நிரைவளே வாட
வுரையா தகன்றது.

(ப-ரை.) வருட்டில் - (துகலுங்கோளு முதலாயினவற்றைத்) தைவந்து ஒன்றுசொல்லக் குறிப்பேனுயின், திகைக்கும் (நீஇதென் கருதிச்செய்கின்றனென்று) மயங்கோதிற்கும்; வகிக்கில்-இன் சொல்லின் வகித்து ஒன்று சொல்லலுறவேனுயின், குளங்கும் - (அக் குறிப்பறிந்து) உள்நடுங்காதிற்கும்; தெருட்டில்-(இனி வெளிப்படப் பிரிவுணர்த்திப் பொருண்முடித்துக் கடிதின் வருவலென்று சூளுற்றுத்) தெளிவிப்பேனுயின், மனம் மகிழ்ந்து - மனமகிழ்ந்து, தெளிய வல்-(அதனைத்) தேறுவள்; (ஆகலான்) செப்பும் வகை இல்லை-(இவ்வரலுழிய) அறிவிக்கும் வகை வேறில்லை; சீர் அருக்கன்-பெருமையையுடைய அருக்கன், குருட்டில் புக - குருடாகிய இழிபிறப்பிற் பகும் வண்ணம், செற்ற கோன்-(அவனை) வெகுண்ட தலைவனது, புலியூர்-புலியூரை, குறுகார்-அணுகாதாரது, மனம்போன்று-மனம்போன்று, இருட்டின் - இருட்டுதலையுடைய, புரிகுழலாட்கு - சுருண்ட குழலையுடையாட்குப் (பிரிவை), எங்ஙனே - எவ்வண்ணம், சொல்லி ஏகுவன் - சொல்விப்போவேன் (ஒருவாற்றானுமரிது), எ - று.

(வி-ரை.) வருடல் - தைவரல். தளங்கல்-நடுங்கல். அருக்கன்-சூரியன். செற்ற என்பதற்குப் பகுதி செறு. வியாக்கிரபாதரால் பூசிக்கப்பட்டமையாற் றில்லை 'புலியூர்' எனப்பட்டது.

நேரிசையாசிரியப்பா.

இலதெனி னுளதென் றுள்ளமொடு விதித்துஞ்
சொல்லா நிலைபெறுஞ் சூளுறின் மயங்கிச்
செய்குறி குணனுஞ் சிந்தையுட் டிரிவு
முழைநின் றறிந்து பழங்கண் கவர்ந்துங்
5 கண்ணெதிர் வைகி முகன்கொள்ளிற் கலங்கியும்
வழங்குரு கிளவியிற் றிசையென மாழ்கியு

மொருதிசை நோக்கினு மிருக்கினு மூடைந்தும்
போக்கென வுழைய ரயர்ப்பிடை கிளப்பினு
மூலைக்குவட் டொழுக்கிய வருவிதன் டரளஞ்
செம்மணி கரிந்து நீக்கர வுயிர்த்தும்
போமென் வாய்ச்சொற் கேட்பினும் புகைந்துங்
கொள்ளா ரறுதியுங் கொண்டோ ரிசைதது
மீதெனக் காட்டிய மயின்மட வரற்கு
முன்னொரு வணிகன் மகப்பே றின்மையின்
மருமான் றன்னை மகவெனச் சடங்குசெய்
தூளனமுங் கரணமு மவனுழி யொருக்கி
மூக்கவர்த் திருநதி துணையுடன் மூழ்கி
யப்புலத் துயிர்கொடுத் தருட்பொருள் கொண்டபின்
மற்றவன் முயம் வவ்வுறு மாக்கள
காணிகைக் கொண்ட மறுநிலை மைந்தன
நிரைத்துக் கினேகொ ணெவெழக் குய்த்தனு
மைந்தனுங் கேளிரு மதிமுடிக சுடவுணின்
புநதியொன் றன்றிப் புகலில னெனறய
வவ்வுழி யொருசா ரவன்மா தலனென
வறிவொளி நிறைவே யோருநத தரித்துவ
அருயவழக் கேறி யவர்வ டிவ குடைத்த
கூட ஞயகன் முள்பணி யாரென
வவ்வுழிக் கிளவியிற் கூறிச்
செவ்விதிற் செல்லுந திறனினி யானே.

இலதெனினுளதென்று-திறனினியானே. பதகி-வரைபொருட் பிரிதல். துணை - சொல்லாதேகல்.

'இலதெனில்' என்பதுமுதல் 'சிந்தையுட்டிரிவும்' என்பதுவரை.

(1—3 வரிகள்.)

(ப-ரை.) இலது எனில் - யான்பிரிவேனில்லையெனச் சொல்லின், உளது என்று-(பிரிவு) உளதென்று கருதி, உள்ளமொடு விதித்தும் - தன்னுள்ளத்தி னிச்சயித்தும், சொல்லா நிலைபெறுத -

ஒன்றும் சொல்லாது மௌனமாகவிருக்கும், சூள் உறினை-சபதங்கொண்டால், செய்குறி குணனும்-செய்கைகளுங் குணங்களும், மயங்கி-பிறழ்ந்து, சிந்தையுள் திரிவும் - மனம் வேறுபட்டும்.

(வி-மை) திரிந்ததுமென்பது திரிவுமென நின்றது. வியந்தல் நிச்சயித்தல். சொல்லாதிலே - மௌனங்கிலே.

'உழைநின்று' என்பதுமுதல் 'கலங்கியும்' என்பதுவரை.
(4—5 வரிகள.)

(ப-ரை.) உழை நின்று-பக்கங்களினின்று, அறிந்து - (பேசுஞ் சொல்லிற் குறிப்பு) அறிந்து, பழங்கண் கவாந்தும் - துன்பப்படுதற்குக் காரணமானதைக் கிளந்ததும், கண் எதிர் வைகி - கண்முனே நின்று, முகன் கொளின - முகத்தைப் பார்த்தால், கலங்கியும் மனங்கலங்கியும்.

(வி-ரை.) பழங்கண் - துன்பம். முகன் - போலி.

'வழங்குறு' என்பதுமுதல் 'உடைந்தும்' என்பதுவரை.
(6—7 வரிகள.)

(ப-ரை.) வழங்குறு கிளவியில் - பேசுஞ்சொற்களில், திசை என - திசையென்று சொன்னவளவில், மழுகியும் - மயங்கியும், ஒருதிசை நோக்கினும் - யாதொரு திசையை நோக்கினலும, இருக்கினும் - (அத்திசையில்) இருக்கினும், உடைந்தும்-(இஃது பிரிவின் குறியென) மனமுடைந்தும்.

(வி-ரை.) கிளவி - சொல் மாழ்கல் - மயங்கல். வழங்குறல் ஒருசொல்லாய பேசுதலெனப் பொருள்பட்டு நின்றது.

'போக்கென' என்பதுமுதல் 'உயிர்த்தும்' என்பதுவரை.
(8—10 வரிகள.)

(ப ரை) உழையர் - ஏவலாளிகள், ஆயர்ப்பிடை போக்கென கிளப்பினும - போக்குளதென்று மறலியிற் சொலலினும், மூலே குவட்டு ஒழுக்கிய-மூலைகளாகிய மலைகளின்மேல் வீழ்த்திய, அருவி-கண்ணருவியுடன், தண் தாளம் - தட்பமாகிய முத்துக்களும், செம் மணி - சிவப்பாகிய மணிகளும, கரிந்து நீக்கா - நீங்காது கரியுமாய, உயிர்த்தும் - நெருப்பாக பெருமூசசெறிந்தும்.

(வி-ரை) தட்பம் - குளிர்சசி. உயிர்த்தல்-பெருமூசசெறிதல்.

'போமென்' என்பதுமுதல் 'மடவரற்கு' என்பதுவரை.
(11—13 வரிகள்.)

(ப-ரை.) போம் என்-(நீவிர்) செல்லுமென்னும், வாய் சொல் கேட்பினும்-பிறர் வாய்ச்சொல்லைக் காதாற்கேட்பினும், புகைந்தும்-மனம் பகைத்தும், கொள்ளார்-(பிரிவென்னும் துன்பினைக்) கொள்ளாதவர்களது, அறுதியும்-முடிவும், கொண்டோர்-(பிரிவென்னும் தீமையினைக்) கொண்டோரது, இசைத்தலும்-சொல்லுதலாகிய முடிவும், ஈது என காட்டிய-இத்தன்மையுதென்று வெளிப்படுத்திய, மயில் மடவரற்கு-மயில்போலும் தலைவிக்கு.

(வி-ரை.) இசைத்தல்-சொல்லுதல். மயின்மடவரல்-உவமைத்தொகை நிலைத்தொடர். மடவரல்-ஆகுபெயர்.

'இனியான், முன்னெரு' என்பதுமுதல் 'கொண்டபின்' என்பதுவரை.
(29, 14—18 வரிகள்.)

(ப-ரை.) இனி யான்-இப்பொழுது யான், முன்-முற்காலத்தில், ஒரு வணிகன்-ஒரு வணிகனுனவன், மகப்பேறு இன்மையின்-பிள்ளைப்பேறில்லாமையால், மருமான் தன்னை-மருமகனை, மகவுஎன-பிள்ளையாக, சடங்கு செய்து-ஸ்வீகாரஞ் செயதுகொண்டு, உள்ளமும் காணமும்-தன்னுயிரு மந்தக்காணமும், அவனுழி ஒருக்கி-அப்பிள்ளையினிடத் தொருங்குவைத்து, முக்கவர் திருநகி-கங்கையுமுனை வாணியென்னு முக்கூடலாகிய மாதீர்த்தத்தில், தீணையுடன் மூழ்கி-மனையவளோடு ஸ்நாநஞ்செய்து, அப்புலத்து-அவ்வடகாரியில், உயிர் கொடித்து-வியோகமடைந்து, அருள் பொருள்-அருளாகிய பொருளை, கொண்டபின்-(அவ்வணிகன் மறுமையில்) கைக்கொண்ட பின்னர்.

(வி-ரை.) வாணி-சரசுவதி. தீணை-ஆகுபெயர். வியோகம்-மரணம். பிள்ளைப்பேறு-பிள்ளைபெறுதல், இதனை புத்ரலாபம் என்பர் வடநூலார். காரணம் மேல்வருதலால் உள்ளம் என்றது ஈண்டு உயிரைக் குறித்தது.

'மற்றவன்றாயம்' என்பதுமுதல் 'உய்த்தலும்' என்பதுவரை.
(19—21 வரிகள்.)

(ப-ரை.) மற்று அவன் தாயம்-அவனுக்கு ஞாதியாகிய, வவ்வுறும் மாக்கள்-பொருள்கவருஞ் சுற்றத்தார், காணி கைக்கொண்ட-முன்னம் அவன் காணியைக் கைக்கொண்டிருந்த, மறுமிலை மைந்

தலை - வேறுகோத்திரப் புதல்வனை, நிலை கொள் - சுற்றத்தாரைக் கொண்டி, நிரைத்து - சபைகூட்டி, நெடு வழக்கு - நெருங்கிய வழக்கில், உயதலும் - செலுத்தித்தாங்காணி கைகொள்ளுதலும்.

(வி-ரை) *தாயம்-ஆஸ்தி. காணி - பூமி. நிலை இவருக்கோத்திரத்தை யுணர்த்திற்று. நிரைத்தல் - சபைகூட்டல்.*

'மைந்தனும்' என்பதுமுதல் 'ஓருருத்தரித்துவந்து' என்பதுவரை.

(22—25 வரிகள்.)

(பதவுரை) *மைந்தனும் - அப்புதல்வனும், சேரிரும் - பற்றையுறவினரும், மதி மூடி கடவுள்-மூடியினகண் மதியைத்தரித்த கடவுளே, நின் புகழ் ஒன்று அனறி - உனது திருவுளமாகிய ஓர் புகலிடனல்லாமல், புகல இலன என்று - வேறுதாவிலலேனென்று, அயா - வருந்துகின்ற, அவ்வுழி-அந்நிலையில, ஒருசார்-ஒருபக்கத்திலிருந்து, அவன மாதுலன எனை - அவன மாமனேப்போல, அறிவு ஒளி நிறைவே - அறிவாகிய பூரணப்பிரகாசமே, ஓர் உரு தரித்து வந்து - ஓர் திருமேனியாகக கொண்டுவந்து.*

(வி-ரை) *மைந்து - உறுதி மைந்தன் - மறுமைக்குறுதியாய் பவன (நற்கதியிற செலுத்துவோன). மதிமுடிகடவுள் - அணைமவிளி.*

'அருள்வழக்கேறி' என்பதுமுதல் 'செல்லுந்திறம்' என்பதுவரை.

(26—29 வரிகள்.)

(பதவுரை) *அருள வழககு எறி-அருளால் வழக்குப்பேசி, அவர் வழககு உடைத்த - அத்தாயதகேர் து வழக்கைக கெடுத்தருளிய, கூடல நாயகன்-மதுரைக்கு நாயகனுகிய சோமசுந்தரமூர்த்தியினது, தான - திருவடிகளே, பணியார் என-வணங்காதார்போல, எவ்வழி - எவ்வாறாறும், நிலையின கூறி-சொலலாற்சொல்லி, செவ்வி தின - நேர்மையாக, செல்லும திறன - பிரிந்துசெல்லும் வகை.*

(வி-ரை.) *உடைத்தல்-கெடுத்தல். நிலையின் என்பதில் இன் என்னுமைந்தாவது மூனரு வதன டாட்டில்வந்தது.*

வீதித்தும் திரித்தும் கவர்த்தும் கலங்கியும் மாழ்கியும் உடைதும் உயிர்த்தும் புகைந்தும் அழுதியும் இசைத்தலும் காட்டிய மடவாற்கு யாளினிக் கூடலையன்முள் பணியாரென எவ்வழிக் கிளவியிற் கூறிச செல்லுத்திறனென வினைமுடிவு செய்க. (சூத்)

திருக்கோவையார் கூ-ம் செய்யுள்.

தெளிதல்.

தெளிதலென்பது—ஐயுற்ற பின்னர் அவயவ மியங்கக்கண்டு இவள் தெய்வமல்லளென்று தெளியாநிற்றல். அதற்குச் செய்யுள் —

பாயும் விடையரன் றில்லையன் ஞள்படைக் கண்ணிமைக்குந
தோயு நிலத்தடி தூமலர் வாடுந துயரமெய்தி
யாயுமனை னேயணங் கல்லளம் மாமுலை சுமந்து
தேயு மருங்குற் பெரும்பணைத் தோளிச் சிறுதகலே.

அணங் கல்லளென் றயில்வேலவன்
குணங்களே கோக்கிக் குறித்துரைத்தது.

(ப-ரை.) பாயும்-பாய்தலி செல்லும், விடை-விடையையுடைய, அரன் - அரனது, தில்லை அன்னள் - தில்லையை யொப்பாளுடைய, படை கண் - படைபோலுங கண்கள், இமைக்கும் - இமையாநின்றன, நிலத்து - நிலத்தின்கண், அடி தோயும் - அடி தீண்டாநின்றன, தூ மலர்-தூய மலர்கள், வாடுமே-வாடாநின்றன; (ஆதலின்)-தூயம் எய்தி-துயரத்தையெய்தி, ஆயும் மனனே - ஆராயுமனனே, அம்மா - அழகிய பெரியவாகிய, முலை சுமந்து - முலைகளைச் சுமந்து, தேயுமருங்குல்-தேயாநின்ற, மருங்குல்-மருங்குலையும், பெரும் பணை - பணை போலும் பெரிய, தோள் - தோள்களையுடைய, இ சிறு தகல் - இச் சிறுதகலாள், அணங்கு அல்லள - தெய்வமல்லள், எ - று.

நேரிசையாசிரியப்பா.

நின்றறி கல்வி யொன்றிய மாந்தர்
ஐனபெருங் கவியுட் டருபொரு ளென்ன
வோங்கிய புடைபரந் தமுதமூள் ளூறிக்
காண்குறி பெருத்துக் கச்சது கடிந்தே
ஒ யெழுத்துமணி பொன்பூ மலையென யாப்புற்

மணிபெரு முலைமேற் கோதையு மொடுங்கின
செங்கோ லரசின் மூறைத்தொழில் போல
வழுதமுங் கடுவும் வாளும் படைத்த
மதர்விழித் தாமரை மலர்ந்திமைத் தமர்த்தன
செய்குறை முடிப்பவர் சென்னம் போலப்
பதமலர் மண்மிசைப் பற்றிப் படர்ந்தன
வழுதம் பொடிக்க முழுமதி யென்ன
முகம்வியர்ப் புறுத்தின வளைமுரு சுழன்றன
விதழியுந் தும்பையு மதியமுங் கரந்து
வலைவிலை மாக்கள் வடிவெடுத் தருளி
முத்தமிழ் நான்மறை முனிந்தருள் வாக்கால்
விதி கூறி விதித்ரமூன் வரத்நாற்
கருமுகில் விளர்ப்ப வறநீர சுவிப்பக்
கண்புதை யாப்புத் திணிபிரு விடிய
வுடலெழும் பிணித்த பாவமும் புலரக்
கண்டநீள் கதுப்பினர் கைகுவி பிடித்துக்
குருகணி செறிந்த வனிமுத் றைபகன்
குருகு மன்னமும் வல்வலைக் குப்பையை
யண்டமும் பார்படி மாமென வணைக்கும்
மிகுநீர்ப் பழன முதுநகர்க் கூட
லொப்புடைத் தாயவிப் பொறிமெழி மடந்தை
யணங்கிவ ளாமென நினையல்
பிணங்கி வீழ்ந்து மாழ்குறு மனனே.

நின்றறிகல்வி - மாழ்குறுமனனே. பதநி-இயற்கைப்புணர்ச்சி. துணை - தெளிதல்

பிணங்கி வீழ்ந்து மாழ்குறு மனனே.
(28—வது வரி.)

(ப-ரை.) பிணங்கி - (என்னெதி) மாறுபட்டு, வீழ்ந்தது - இச்சித்து, மாழ்குறும் - மயங்குகின்ற, மனனே-மனமே (கேட்பாயாக).

(வி-ரை.) பிணங்கல் - மாறுபடல். வீழ்தல்-இச்சித்தல். மாழ்கல் - மயங்கல். வினிச்சல் கேட்பித்தற்காதலின், கேட்பாயாக வென்பது வருவித்துரைக்கப்பட்டது.

இதழியும்' என்பதுமுதல் 'வடிவேடுத்தருளி' என்பதுவரை.
(14—15 வரிகள்.)

(ப-ரை.) இதழியும் - கொன்றைமலர் மாலையையும், தும்பை யும் - தும்பைமலர் மாலையையும், மதியமும்-இளமதியையும், கரந்து-மறைத்து, வளைவேல மாக்கள் - வளையல் விற்பவரது, வடிவு எடுத்த ருளி - உருவங்கொண்டருளி.

(வி-ரை.) இதழி தும்பை என்பன ஆகுபெயர்கள். மதியம் என்றது ஒரு கலையாகிய பிறையை.

முத்தமிழ் நான்மறை மூலத்தருள் வாக்கால்.
(16—வது வரி.)

(ப-ரை.) முத்தமிழ் - இயலிசை நாடகமாகிய முத்தமிழும், நால்மறை - நான்குவேதங்களும், மூலதத்தருள்-பிறந்தருளிய, வாக் கால் - திருவாக்கால்.

'வீதிகூறி' என்பதுமுதல 'புலப' என்பதுவரை.
(17—20 வரிகள.)

(ப-ரை.) வீதி கூறி-வீதியின்கண் விலைகூறி, முன் விதித்த வரத்தால் - முற்காலத்திற் கட்டளையிட்ட வரம் காரணமாக, கரு முகில் விளர்ப்ப - கரியமேகங்கள் வெளிறுகவும், அறல் நீர் குளிப்ப-கருமணல்நீரிற் குளிப்பவும், கண்புதை - (பார்க்கின்றோர்) கண்கள் புதைந்திடத்தகக, யாப்புத் திணியிருள் - திணிந்த இருட்பிழம்பா னது, விடிய-விடியவும், உடல்தொறும்-உடல்தோறும், பிணித்த - யாத்த, பாவமும்-பாவங்களும், புலர-வாடவும்.

(வி-ரை.) விளர்த்தல் - வெளிறுதல். பிழம்பு - கூட்டம். விடி தல் - புலர்தல். யாத்தல் - கட்டல். புலர்தல் - வாடல்.

'கண்ட' என்பதுமுதல் 'தனிமுதலுயகன்' என்பதுவரை.
(21—22 வரிகள்.)

(ப-ரை.) கண்ட - செய்த, நீள் கதுப்பினர் - முடிகூடிய கூந் தலேயுள்ள வணிமாதர்களுடைய, கை குவி பிடித்து - கைகளே குவித்துப் பிடித்து, குருகு அணி-வளையலென்னும் அணியை,செறி த்த - இசைத்த, தனிமுதல் நாயகன் - தனக்கொப்பு முயர்வுமில் லாத தலைவனது.

(வி-ரை.) காண்டல் - செய்தல். கதுப்பு - கூந்தல். அணி - ஆபரணம்.

'குருகும்' என்பதுமுதல் 'மடந்தை' என்பதுவரை.
(23—26 வரிகள.)

(ப-ரை.) குருகும் - நாரைகளும், அன்னமும் - அன்னப்பறவைகளும், வால் வளைக்குப்பையை - வெள்ளிய சங்கினங்களே, தண்டமும் - (தாந்தாமீன்ற) முட்டைகளும், பார்ப்பும் - குஞ்சுகளுட, ஆம் என - ஆகுமென்று கருதி, அணைகரும் - அடைகிடக்கின்ற, அலை நீர் - அலைபொருந்திய நீரினையுடைய, பழனம் - வயல்கிலங்களாற் சூழப்பட்ட, முதுநகர் கூடல்-(நகரங்களுள்) முதுநகராகிய கூடலை, ஒப்புடைத்தாய - ஒப்புடையளாகிய, இப்பொன் தொடி மடந்தை - இத்தப் பொற்றொடியினையுடைய பெண்ணானவள்.

(வி-ரை.) ஒப்புரிகர். பொன்தொடி-பொன்வளையல். மடந்தை-ஈண்டுப் பெண்பொதுப்பெயராய் நின்றது.

'நின்றறிகல்வி' என்பதுமுதல் 'ஒடுங்கின' என்பதுவரை.
(1—6 வரிகள.)

(ப-ரை.) நின்று அறி கல்வி-நிலைபெற்றறியத்தக்க கல்வியை, ஒன்றிய மாந்தர் - பொருந்திய அறிஞர்களால் செய்யப்பட்ட, புனை பெருங்கவியுள்-அலங்கரித்துச் சொல்லிய பெரியகவிதைகளிடத்தே, தரு பொருள் என்ன-தந்தபொருளேப்போல, ஒங்கி-உயர்ந்து, புடை பரந்து - பக்கங்களிற் பரந்து, அமுதம் உள் ஊறி - உள்ளே யமுதமூறி, காண் குறி பெருத்து-காணுங்குறியுடன் பெருத்து, கச்சு கடிந்து-வாரைக்கிழித்து, எழுத்து (என)-எழுத்தெனவும், மணி (என)-மணியெனவும், பொன் (என)-பொன்னெனவும், பூ (என)-பூவெனவும், மேல் என - மேலெனவும், யாப்புற்று - அச்செய்யுள்போற் கொண்டு, அணி பெறு முலைமேல்-அழகுபெற்ற முலைமேற்றரித்த, கோதையும் ஒடுங்கின - மாலைகளும் வாடிநின்றன.

(வி-ரை.) அறிஞரை நின்றறி கல்வி யொன்றிய மாந்தர் என்றது அவரது நிகரறு புலமை நிலவுதற்பொருட்டென்க. குறி-அடையாளம். கவிக்கு அணி அலங்காரம் எனக்கொள்க.

'செங்கோலரசன்' என்பதுமுதல் 'இமைத்தமர்த்தன'
என்பதுவரை.
(7—9 வரிகள்.)

(ப-ரை.) செங்கோல் அரசன்-செங்கோலையுடைய அரசனது, முறைதொழில்போல - முறைமுறை செய்கைபோல, அமுதமும்

கடுவும் வாளும் படைத்த-அமுதமும் விஷமும் வாளும் பெற்ற, மதர் விழி - மதர்த்த விழிகளாகிய, தாமரை-தாமரைமலர்கள், மலர்ந்து - விரிந்து, இமைத்து அமர்த்தன - அமர்செயதலுட னிமையா நின்றன.

(வி-ரை.) செல்விய கோல்போறலின் செருகோலெனப்பட்டது, இது உவமையாகுபெயர். அமுதம் கடுவாள் எனபனவும் அவை; தாமரை யெனபதும அது. அமர்த்தல்-அமர்செயதல்.

'செய்குறை' என்பதுமுதல் 'படர்ந்த' என்பதுவரை.

(10—11 வரிகள்.)

(ப-ரை) செய் குறை-(முன்) செய்துவிட்ட குறையை, மூடப்பகர் - நிறைவேற்ற வந்தவரது, செனனம்போல - பிரமீலையப் போல, பதமலர் - பாதங்களாகிய மலர்கள், மணமிசைபபற்றி-பண் மீது பொருந்தி, படர்ந்தன - நடவாநின்றன.

'அமுதம்பொடித்த' என்பதுமுதல் 'சுழன்றன' என்பதுவரை.

(12—13, 27 வரிகள.)

(ப-ரை.) அமுதம் பொடித்த - அமுதத்துளிகளாரும்பின; மூழுமதி என்ன-நிறைமதி பென்னுமாறு, முகம் வியர்ப்புறசுதின-முகத்தின்கண் வியாவு அரும்பாநின்றன; உள்ளமும சுழன்றன - இவை ஞள்ளமுஞ் சுழலாநினறன; (ஆதலால்) அணங்கினள ஆம என - தெய்வப்பெண்ணுமென்ற, நினையல - நீ கருதாத

(வி-ரை.) பொடித்தல் - அரும்புதல. நிறைமதி-பூர்ணசந்திரன்.

மாழ்குறுமனனே! இதழி முதலிய கரதது, வேலிவிலைமாகளள் வடிவெடுத்து, நீள்கதப்பினா கைகுவி பிடித்தது, குருகணி செறித்த நாயகனது கூடலொப்புடைத்தாய மடலதை முலைமேற் கோதையு மொடுங்கின, விழித்தாமரை மலர்ந்திமைத் தமர்த்தனள், பதமலர் மண்மிசைப்பற்றிப் படர்ந்தன, முகம வியர்ப்புறுத்தின, உள்ளமுஞ் சுழன்றன, ஆதலால், அணங்கினளாமென நினையலென விணைமுடிவு செயுக. (சசு)

திருக்கோவையார் ஈகக-ம் செய்யுள்.

கூதிர்கண்டு கவறல்.

கூதிர்கண்டு கவறலென்பது—வீழாநின்ற பனியிடத்து எல்லாரும் நெருப்புதிரளே மேவாநிற்ப, மலைதிரளேயேறித் தூணை

யில்லாதாரைத் தேடும் புயலினம் நமக்கேயன்றித் தம்மை யடைந்தார்க் குதவிசெய்யச் சென்றூர்க்குஞ் சென்று பொருந்துமோ, பொருந்துமாயின் நம்மை நினைந்து ஆறறுமாய் அவ்வினை முடிக்கமாட்டா ரெனத் தலைமகள் கூறிக்கண்டு கவலாமிற்றல். அதற்குச செய்யுள்:—

கருப்பின மேவிப்பொ ழிற்றில்லை மன்னன்கண் ணூருளால்
விருப்பின மேவசென் றூர்க்குஞ்சென் றல்குங்கொல் வீழ்பனிவாய்
நெருப்பின மேநெடு மாலெழி றோன்றசென் றூங்குநின்ற
பொருப்பின மேறித தமியரைப் பார்க்கும் புயலினமே.

இருளுகூ தி நெறிர்புகண்டு
கருகுகுழலி கவலையுற்றாது.

(ப-ரை) வீழ் பனிவாய் - வீழாநின்ற பனியிடத்து, நெருப்பு இனம் மேவ-எல்லோரும் நெருப்புத்திரளே மேவாநிற்ப, நெடு மால்-நெடிய மாயவனது, எழில் சோன்ற சென்று - அழகு கண்டார்க்குப் புலப்படச்சென்று, ஆங்கு நின்ற-அவ்விடத்தேநின்ற, பொருப்பினம் ஏறி-மலைத்திரளே யேறி, தமியரை பார்க்கும்-துணையில்லாதாரைத் தேடும், புயல் இனம் - புயலினங்கள், கருப்பு இனம் மேவும் - கரும் புகைதான் பொருதலும், பொழில் இல்லை - பொழிலேயுடைய தில்லையின், மன்னன்கண் - மன்னனைவேண்டாதிய, ஆர் அருளால் - மிக்க வருளால், விருப்பு இனம் மேவ சென்றூர்க்கும்-விருப்பையுடைய தம்மினம் (தம்மாலுதவிபெற்றும்) பொருதலும்வண்ணஞ் சென்றூர்க்கும், சென்று அல்குங்கொல் - சென்று தங்குமோ, எ - று.

(வி-ரை.) மேவ என்பது ஈறுதொகுத்தலாய் மேவியென நின்றது. கரும்பு கருப்பு என வலித்தலாயிற்று. அல்குதல் - தங்குதல். நெருப்பினமே யென்பதனைப் புயன்மேலேற்றி இடிநெருப்பென்றும், சென்றென்பதனை மலைமேலேற்றி உயர்தென்றும் உரைத்தலுமாம். கூதிர்-பனிகாற்று.

நேரிசையாசிரியப்பா.

பசுமயல் பிணித்த பிளவுவண் டரற்ற
வாசையிற் செறிந்த பொங்கர்க் குலத்தா
யருப்பு முலைக்கண் டிறந்துமிழ் மதுப்பால்
கிணைமலர்த் துணைக்கரத் தன்புட னணைத்துத்
தேக்கிட வருத்தி யலர்மலர்த் தொட்டில்
காப்புறத் துயிற்றுங் கடிநகர்க் கூட

ளருளுட னிறைந்த கருவுயிர் நாயகன்
குரவரும் புடைத்த வாலெயிற் றழல்வீழிப்
பகுவாய்ப் பாம்பு முடங்க லாக
வாலவாய் பொதிந்த மதிமுடித் தனிமுதல்
சேக்கொண் முளரி யலர்த்திய திருவடி
கண்பரு காத களவின ருளம்போற்
காருடன் மிடைந்த குளிறுகுரற் கணமுகி
லெம்முயி ரன்றி யிடைகண் டோர்க்கு
நெஞ்சறை பெருந்துய ரோவா துடற்றக்
கவையா நெஞ்சமொடு பொருவினைச் சென்றோர்
கண்ணினுங் கவருங் கொல்லோ
வுண்ணிறைந் திருந்த வாழிய மனனே.

பசியல்பிணித்த - வாழியமனனே. பதுதி - பகைதணிவினைப் பிரிவு. துறை - கூதிர்கண்டு கவலல்.

'பசியல்' என்பதுமுதல் 'போங்கர்க்குலத்தாய்' என்பதுவரை.
(1—2 வரிகள்.)

(ப-ரை.) பசி மயல் பிணித்த - பசியாகிய மயக்கத்தாற் கட்டுண்ட, பிள்ளை வண்டு அயற்ற - பிள்ளையாகிய வண்டுகள் கோஷிக்க, ஆசையின் செறிந்த - ஆசையின் மிக்க, பொங்கர் குலத்தாய்-சோலையாகிய தற்றாய்.

(வி-ரை.) பிணித்தவென்ப தீண்டிச் செயப்பாட்டு வினைப் பொருளில் வந்தது. குலத்தாய் - சிறந்ததாய் (தற்றாய்).

'அருப்பு' என்பதுமுதல் 'அன்புடனணைத்து' என்பதுவரை.
(3—4 வரிகள்.)

(ப-ரை.) அருப்பு முலைக்கண் - அரும்புகளாகிய முலைக்கண்களே, நிறைந்து - நிறைந்து, உமிழ் மது பால் - உமிழாநின்ற மதுவாகிய பாலே, மலர்ச்சினை - பூங்கொத்துகளாகிய, தூணைக்காத்து-இருகாங்களால், அன்புடன் அணைத்து - ஆசையோடு தழுவி.

(வி-ரை.) அரும்பு அருப்பென வலித்தல்பெற்றது. மது-தேன். தூணை - இரண்டு. கரம் - கை.

'தேக்கிட' என்பதுமுதல் 'நாயகன்' என்பதுவரை.
(5—7 வரிகள.)

(ப-ரை) தேக்கிட அருத்தி - தெவிட்ட வுண்பித்து, அலர் மலர்த்தொட்டில் - விரிந்த மலர்தொட்டில், காப்புற - சோவற, துயிற்றும் - துயில்வியாகின்ற, கடிநகர்-சிறப்பினையுடைய நகராகிய, கூடல - நானமாடக்கூடலில், அருளுடன் நிறைந்த - அருட்சத்தி யுடனிறைந்தருளிய, கருவுயிர் நாயகன - கருவுயிராததற காதாரத் தலைவன்.

(வி-ரை) தேக்கல் - தெவிட்டல் அருத்தல் - உண்பித்தல் மலாததொட்டில் - மலராகிய தொட்டில் துயிறறல் - துயிலவிக் தல

'சூரவரும்பு' எனபதுமுதல் 'களவினருளமபோல்
என்பதுவரை.
(8—12 வரிகள்.)

(ப-ரை.) சூரவு அரும்பு - சூராவரும்புகள், உடித்த - சூழ்நதா லொத்த, வால் எயிற்று - வெள்ளிய பற்களையும், அழல் விழி- அழலு கின்ற விழியினையும, பகு வாய - பிளவாகின்ற வாயினையுடைய, பாமபு - (தனது சரகங்கணமாகிய) பாம்பு, முடங்கல் ஆக - உடலை வளைதது எல்லே காட்டுதலால், ஆலவாய பொதிந்த - ஆலவாயாகச செயதருளிய, மதிமுடி - சநதிரசேகரனிய, தனி முதல் - ஒப்பறற முதல்வனது, சேககொள் - செஞ்சிறமுளள, முளரி - தாமரைபோல், அலர்த்திய - விரித்தாடியருளிய, திருவடி - திருவடியை, கண் பரு காத - கண்ணிஞற் தரிசியாத, களவினர் உளமபோல் - வஞ்சகருள் ளத்தைப்போல.

(வி-ரை.) சூவு - சூராமரம். அரும்பு - மொட்டு வால் - வெண் மை. அழல்விழி - வினைத்தொகை நிலைதொடர், பகுவாயும் அது. முடங்கல்-வளைதல் மதியென்ற தீண்டொரு கலையாகிய சநதிரனே. அலர்த்தியது ஆதிதற்காதலால் அலர்த்திய வென்பதற்கு விரித்தா டிய வெனப் பொருளுரைக்கலாயிற்று. பருகல் - தரிசித்தல்.

'சூருடன்மிடைந்த' என்பதுமுதல் 'மனனே' என்பதுவரை.
(13—18 வரிகள.)

(ப-ரை) சூருடன் மிடைந்த-சூருமையாகி நெருங்கிய, மூகில் கணம - மேகஜாலம், குளிறு குரல்-முழங்காகின்ற குரலுடனே, எம

உயிர் அனறி - எமுமையாகவும், இடை கணடோராகவும - இடையிலே தனனைக்கணட எனனேபோருயிராகவும, நெஞசு அறை பெரு தூயா ஓவாது உடறற - நெஞசானது அறைபோதலாகிய நெடுதூய சொழி யாவணண தமமை வருததாறிற, கவையா - துனபமுறுத, நெஞச மொடு - மனதுடனே, பொருவினை செனறோ - பகைவாமேற பொருஙதொழிலிற செனறோது, கணணினும கவரும கொலலோ - (மனதறிலிலையாயினும) கணணிறலேனும இகாரபபருவய காணபபடுமோ, உள - எனனுளளே, நிறைதிருநத-நிறைநதிருநத, மனனே - என மனனே.

(வி-ரை.) வாழிய வெனபது முனனிலே யசைசசொல மிடை தல் - நெருஙகுதல. ஓலம - கூடட ம குளி லை - முழஙகல அறை போதல் - ஊடறுதது செலலல. கவைதல - துனபுறல. பொருந் தொழில - போரசெயயுதொழில. கவரும - செயப்பாடுவினை.

மனனே ! கடிநகாக கூடலை ஆலவாய பொறிநத கனிமுதற றிருவடி பருகாதா ருளமபோல நிடைநத கணமுகில, ஒவாதுறற, பொருவினைச செனறோ கணணிறுய கவருவகொலலோவென வினமுடிவு செயக. (சு)

திருகோவையார் சுருக்-ம் செயயுள்.

முகிலொடு கூறல்.

முகிலொடுகூற லென்பது — பருவங்கணடிரஙகி விரைவோடு வாராநினற தலைமகன, இவவிட தறிதலலாம முறபடடாயினும முதுபெணமா திரணடி அவரினஞசையை நீகநறது இவறுறை கட வுட்படு பூசலை செயயாறிறும நீணகாகதிரு என்னின முறபடா தொழிவாயாகவென, மூகதுறுச செலலாநினற முகிலொடு கூறு கிறறல அதறகுச செயயுள —

அறபடி காட்டினின முடிகிற் றப்பல தான நிடறறின
முறபடி நீணமுகி லெனனினமுன னேனமுது வோருழுமி
விறபடி வாணுத லாளசெலல நீரபபான விரை லாதூய
நெறபடி வானபலி செயதய ராகிறகு நீணகாகதே.

எனேப்பல தூயாமோ டேகா நின்றவன
தூனேகா ரதறகுத துணிந்து சொலலியது

(பு-ரை) அல் படி காட்டின-(மாலேகாலதது) இருளுண்டாகா நினற மயானதினகண, நினறு ஆடி - நினறுமிவான, சிறற பலத

தான் - சிற்றம்பலத்தின்கண்ணன், மிடற்றின்-(அவனது) மிடறு போல இருண்டு, முற்படு-முற்பட்டோடுகின்ற, நீள் முகில் - நீண்ட முகிலே (இவ்விடத்தெல்லா முற்பட்டாயாயினும்), முதுவோர் குழுமி - முதுபெண்டிர் திரண்டு, வில் படி வாள் துலாள் - வில் சாழும்படி ஒளியையுடைய துலாளாது, செல்லல் தீர்ப்பான் - இன்னுமையை நீக்கவேண்டி, விரை மலர் தூய் - நறுமாற்றத்தையுடைய மலர்களைத் தூவி, நெல் பலி - நெல் விரவிய, வான் பலி செய்து-தூய பலியைக் கொடுத்து, அயராநிற்கும் நீள் நகர்க்கு - (இல்லுறை கடவுட் பூசனை) செய்யாநிற்கும் பெரிய இல்லத்திற்கு, என்னின் முன்னேல் - என்னின் முற்படாதொழிவாயாக, எ-று.

(வி-ரை.) துணைதல் - விரைதல். படுகாடு - புறங்காடு. மிடறு - கண்டம். நீண்முகில் - அண்மைவிளி. குழுமல் - திரளல். துதல் - நெற்றி. இன்னுமை - துன்பம். நகர்-ஈண்டில்லத்தைக் குறித்தது.

நேரிசையாசிரியப்பா.

கருங்குழற் செவ்வாய்ச் சிற்றிடை மடந்தைக்
குளத்திய ரீந்து கண்டிபில் வாகிய
வானு வின்ன லழிபடக் காண்பான்
விரிபொரி சிந்தி மணமலர் பரப்பித்
தெய்வக் குலப்புகை விண்ணெடும் விம்ம
விருநாற் றிசையு முண்பலி தூவி
நானூன் பாக்க ளளிக்குறி பொற்றுப்
பக்கஞ் சூழ்ந்த மெடுநகர் முன்றிற்
கோடகழ்ந் தெடுத்த மறிநீர்க் காலும்
வெண்கார் பெய்யு நாள்குறித் தூழருஞ்
சூனிறைந் தலையுஞ் சுரிவளைச் சாற்று
மினக்கய லுண்ணுங் களிக்குரு கினமும்
வரைப்பறை யரிந்த வாசவற் றொழுது
நிரைநிரை விளம்பி வழிமுடி நடுகரு
நாறுகழி தறுற்ற சகடர்க் குருங்
காமரை பாடு மறுகாற் கிளியு
முறைத்தெறி நம்பலை யும்பரைத் தாவி
முடித்தலை திமிர்ப்ப வடிக்கடி கொடுக்கு

மள்ளற் பழனத் தணிநீர்க் கூட
னீங்கா றுறையு நிமிர்சடைப் பெருமா
னுரகன்வாய் கீண்ட மாதவன் போல
மண்ணகழ்ந் தெடுத்து வருபுனல் வையைக்
கூலஞ் சுமக்கக் கொட்டா ளாகி
நரைத்தலை மூதியோ ளிடித்திடு கூலிகொண்
டடைப்பது போல வுடைப்பது நோக்கிக்
கோமக னடிக்க வவனடி வாங்கி
யெவ்வுயி ரெவ்வல கெத்துறைக் கெல்லா
மவ்வடி கொடுத்த வருணிறை நாயகன்
றிருநமிடற் றிருளெனச் செறிதரு மாமுகி
லெனதுகண் கடந்து நீங்கித்
தூணிவுடன் செல்ல லொருங்குபு புரிந்தே.

கருங்குழற்செவ்வாய - ஒருங்குபுபுரிந்தே. பதத்-பொருள்லயிம் பிரிவு. துறை - முகிலொடுகூறல்.

'சருங்குழல்' என்பதுமுதல் 'காண்பான்' என்பதுவரை.
(1—3 வரிகள்.)

(ப-ரை.) கருங்குழல் செவ்வாய் - கருங்குழலினையுஞ் செவ்வாயினையும், சிறு இடை - நுண்ணிடையையுமுடைய, மடந்தைக்கு - தலைவிக்கு, உளத்துயர் ஈந்து-உள்ளத்திற் றன்பத்தைக் கொடுத்து, கண்துயில் வாங்கிய - கண்ணுறக்கத்தை நீக்கிய, ஆஞ இன்னல் - நீங்காத தின்பத்தால், அழிபடக் காண்பான் - வருந்தக்காணும் பொருட்டு.

(வி-ரை.) அழிபட-ஒருசொல், அழியவென்பது பொருள். பான்-செயவென் வாய்பாட்டு வினையெச்சம்.

'விரிப்பாரிசிந்தி' என்பதுமுதல் 'சோற்று' என்பதுவரை.
(4—7 வரிகள்.)

(ப-ரை.) விரிபொரி சிந்தி-வாய்விரிந்த பொரிதெளித்து, மண மலர் பரப்பி - மணத்த மலர்களைப் பரப்பி, தெய்வக் குலப்புகை - தேவர்கோயில்களி லாராதிக்கும் குங்கிலியப்புகை, விண்ணெறும் விம்ம-ஆகாயமெங்கும் பரவ, இரு நால் திசையும் - எட்டுத் திசையிலும், உண்பலி தூவி-சோற்றுப்பலி யிறைத்து, நால் தூல் மாக்கள்-

நாலுகின்ற வுபவீதத்தையுடைய வேதியர், நணிக்குறி சொற்று - வந்து குறிகளைச் சொல்லியதால்.

(வி-ரை.) குலம்-கோயில். ஒடு ஏழாவதன் பொருளில் வந்தது. நாலல் - தொங்கல். தூல் - பூணூல். நண்ணி நணியென விகாரமாயிற்று.

'பக்கஞ்சூழ்ந்த' என்பதுமுதல் 'களிக்குருகினமும்' என்பதுவரை.

(8—12 வரிகள்.)

(ப-ரை.) நெடி நகர் முன்றில்-நெடியநகரத்தினது முன்றிலின் கண், பக்கம் சூழ்ந்த-பக்கங்களிற்சூழ்ந்துள்ள, கோடுஅகழ்ந்தெடுத்த-கரையையகழ்ந்தெடுத்த, மறி நீர்கலாம் - மறிக்கப்பட்ட நீ ரொழுகும் வாய்க்காலும், வெள் கார் பெய்யும்-வெள்ளிய கார்நெல்லிவிதைக்கும், நாள் குறித்து - நாளே நிச்சயித்து, உழுநரும் - உழுகின்றவர்களும், சூல் நிறைந்து உளையும் - சூல் நிறைந்து வருந்தாநின்ற, சுரிவளே சாற்றமும் - சுரிந்ததுமுகமுள்ள சங்கினிரையின் கோஷமும், இனக் கயல் உண்ணும்-மீனினத்தை யுண்ணுகின்ற, களி குருகு இனமும் - களிப்பினையுடைய குருகினங்களும.

(வி-ரை.) முன்றில் - முற்றம். அகழ்தல் - தோண்டுதல். கார் - ஆகுபெயர். குறித்தல் - நிச்சயித்தல். உளைதல்-வருந்துதல். நிரை வரிசை. குருகு - பறவைப்பொது. கொயயடி-நாரையுமாம்.

'வரைப்பறையரிந்த' என்பதுமுதல் 'முடிநருரும்' என்பதுவரை.

(13—14 வரிகள்.)

(ப-ரை.) வரை பறை யறிந்த - மலைச்சிறகறுத்த, வாசவன் தொழுது-மருத நிலத்தேவை வணங்கி, நிரை நிரை விளம்பி - அணியணியாயகின்று பிரார்த்தித்து, வழி - முறையே, முடி நருரும் - நாறறுமுடிகளே நடுகின்றவர்களும்.

(வி-ரை.) பறை - ஆகுபெயர். வாசவன் - இந்திரன். விளம்பல்-ஈண்டுப் பிரார்த்தித்தலைக் குறித்தது.

நாலுகழி தூற்ற சகடூர்க் குரவரும்.

(15—வது வரி.)

(ப-ரை.) நாலுசழி தூற்ற - நாற்றுமுடிகள் நிறையப்பெய்த, சகடு - வண்டில்களே, ஈர்க்குரவும் - ஈர்த்துச் செல்கின்றவர்களும்.

(வி-ரை.) கழியத்துற்றவென்பது கழிதுற்றவென விகாரமா யிற்று. ஈர்த்தல் - இழுத்தல்.

'தாமரைபாடும்' என்பதுமுதல் 'பெருமான்' என்பதுவரை.
(16—20 வரிகள்.)

(பதவுரை.) தாமரை பாடும் - தாமரைமலரிலிருந்து பாடாநின்ற, அறுகால் இளியும் - வண்டுகளின் பண்ணோசையும், உறைத்து-அதிர்த்து, எறி - ஒலிக்கின்ற, கம்பலை-பேரொலியானது, உம்பரை-தேவரை, தாவி - அடைந்து, மூடித்தலை - அவர் முடித்தலைகளே, நிமிர்ப்ப - நிமிரேற, அடிக்கடி கொடுக்கு-இடைவிடாமற் செய்கின்ற, அள்ளல் - சேடையுழுத, அணி நீர் - மிக்க நீரையுடைய, பழனத்து-வயல்களாற் சூழப்பெற்ற, கூடல் - மதுரையின்கண், நீங்காது உறையும் - நிலைபெற்று வசித்தருளுகின்ற, நிமிர்சடை பெருமான் - நிமிர்ந்த சடையையுடைய எம்பெருமான்.

(வி-ரை.) வண்டுகள் அறுகாற்பறவைகளாதலான் அவற்றை 'அறுகாற்இளி' என்றார். உம்பர்-ஒருபெயர். அள்ளல் - சேறு எனினுமாம். பழனம் - வயல். நிமிர்சடை - நீள்சடை.

'உரகன்வாய்கீண்ட' என்பதுமுதல் 'உடைப்பதுநோக்கி'
என்பதுவரை.
(21—25 வரிகள.)

(பதவுரை.) உரகன் வாய் கீண்ட - பாம்பினது வாயைக் கிழித்த, மாதவன்போல-திருமால்போல, மண் அகழ்ந்து எடுத்து-மண்ணைப் பிளந்தெடுத்து, வரு புனல் - பெருகிவருகின்ற புனலையுடைய, வையை - வையையாகியின், கூலம் - கரையை, சுமக்க - (அடைக்கு மாறு) மண்சுமக்க, கொட்டாள் ஆய்-கொட்டுதொழிற்குரிய ஆளாகி வந்த, கரை கலை மூதியாள் - கரைத்தலையுடைய மூதாட்டியாகிய வந்தியென்பவள், இடித்த அடி - இடித்தமையால் அட்டபிட்டிணைவை, கூவிகொண்டு - கூலியாகப்பெற்ற, அடைப்பதுபோல-கரையையடைக்கிறதுபோல, உடைப்பது நோக்கி - உடைத்திடுவது பார்த்து.

(வி-ரை.) உரகன் - பாம்புருவான வோரசுரன். கீளல் - கிழித்தல். மாதவன் - திருமகட்கு நாயகன். அகழ்தல்-பிளத்தல். புனல் - நீர். கொட்டுத்தொழில் - மண்டொழில். இடித்த அடி இடித்ததடி வென விகாரமாயிற்று. அடி - ஆகுபெயர்.

'தோமகன்' என்பதுமுதல் 'நாயகன்' என்பதுவரை.

(26—28 வரிகள்.)

(ப-ரை.) கோமகன் - பாண்டியன், அடிக்க - (பிரம்பால்) அடிக்க; அவன் அடி வாங்கி-அவனடியையேற்று, அ அடி-அந்தவடியை, எவ்வுயிர் - எந்தவயிர்களுக்கும், எவ்வுலகு - எந்தவுலகத்திற்கும், எத் திறைக்கு - எவ்வகைக், கருவினுக்கும், எல்லாம்-முழுதுமாக,கொடுத்த - படும்படிதந்த, அருள் நிறை நாயகன் - அருணிறைந்த சோம சுந்தரமூர்த்தியினது.

(வி-ரை.) கோமகன் - அரசன், அது ஈண்டைக்கேற்ப பாண்டியனே யுணர்த்திற்று.

திருமிடற் றிருளெனச் செறிதரு மாமுகில்.

(29—வது வரி.

(ப-ரை.) திரு மிடற்று-அழகிய கண்டத்தின்கணுள்ள, இருள் என்ன - இருள்போல, செறிதரும்-நெருங்கிவந்த, மா முகில்-பெரிய முகிலே.

(வி-ரை.) மாமுகில் - அண்மைவினி.

'எனதுகண்' என்பதுமுதல் 'புரிந்தே' என்பதுவரை.

(30—31 வரிகள்.)

(ப-ரை.) எனது கண் - என்னுடைய கண்ணே, கடந்து நீங்கி - தாண்டிப்போய், ஒருங்குபு புரிந்து - ஒன்றுய்க்கூடி, தூனேவுடன் வேகத்தோடும், செல்லல் - நீ செல்லற்க.

(வி-ரை.) ஒருங்குபு - செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம். தூனேவு - விரைவு.

இந்திரபாப்பி விம்மதூவி சொற்று, நகர்முன்றிலில் நீர்க்காலும் உழுநரும் வளைசாத்தும் குருகினமும் பகடுக்குருவும் அறுகாற் இனையும் தூவி திமிர்ப்பக் கொடுக்கும் நீர்க்கூடற் பெருமான், மாத வன்போல வரும் வையைக் கூலஞ்சுமக்க ஆளாகிக் கூலிகொண்டு அடிவாங்கி அவ்வடி தொடுத்த நாயகன், மிடற்றிருளெனச் செறிதரு முகிலே, கண்கடந்து நீங்கி மடந்தைக்குத் துயரீந்து, துயில் வாங்கிய இன்னல் காண்பான், புரிந்து செல்லலென வினைமுடிவு செய்க

திருக்கோவையார் கருத்து - ம் செய்யுள்.

தலைவிருப்புரைத்தல்.

தலைவிருப்புரைத்தலென்பது—தலைமகளைத் தழையேற்பித்த தலைமகனுழைச் சென்று, நீதந்த தழையை யான்சென்று கொடுத்தேன், அது கொண்டு அவள் செய்தது சொல்லிப் பெருகுமென தலைமகளது விருப்பங கூறுதற்கண். அதற்குச் செய்யுள்:—

பாசத் தலையறுத் தாண்டுகொண் டோன்றில்லை யம்பலஞ்சூழ்
தேசத்தன செம்மனீ ரந்தன சென்றியான் கொடுதேன்
பேசிற் பெருகுஞ் சுரும்பரு மருவுகுல் பெயர்த்தரைத்துப்
பூசித்நில னன்றிச் செயாதன வில்லை பூந்தழையே.

விருப்பலோழி
பொருப்பற் குரைத்தது.

(ப-ரை.) பாசம் - பாசமாகிய, தலை - தலையிற்பட்டு கிடப்ப, அறுத்து - அத்தலையை யறுத்து, ஆண்டுகொண்டோன் -(தனக்குகுற்றேவல் செய்ய) எனவே யடிமைகொண்டோனது, தில்லையம்பலம் சூழ் - தில்லையம்பலத்தைச சூழ்ந்த, தேசத்தன - தேசத்தின்கணுள்ளன; (அசரிறப்பேனறி) செம்மல்-அரசனே, நீ தந்தன - நின்னுற்றாய்ப்பட்டன; சென்று யான-(அவற்றைச்)சென்று யான்,கொடுத்தேன் - கொடுத்தேன் (மகாரப்ப), பேரின் - ஆண்டு (நிகழ்ந்தனவற்றைச) சொல்லுவேனுயின், பெருகும் - பெருகும்; சுருவுகும் - சுருங்கிய, மருவுகுல் - மருங்குலையுடையாள், பூந்தழை - அப்பூந்தழையை, அரைத்து - அரைத்து, பூசித்நிலன் அன்றி - (தன் மேனிபெங்கும) பூசிக்கொள்ளவில்லையே யன்றி, பெயர்த்து செய்யாதன இல்லை - பெயர்த்துச செயயாதவைகளொன்றுமில்லை, எ - று.

நேரிசையாசிரியப்பா.

ஓதுகுந் தும்பையு மணிந்தசெஞ் சடையுங்
கலைமான் கனிசெயுங் கட்டிய வரவமும்
பிறவுங் கரந்தொரு மானவ ணுரி
யருட்சுன னருகுவ மழித்தமர் செய்தவன்
5 கொடுமரத் தருமபு திருமுடிக் கணிந்து
பொலனுடை யாவ ணொலையர்து சுரக்கப்
பாசுப தக்கணை பயிற்றுவ செய்தோன்

வாசவன் மகட்புணர்ந்து மூன்றெரி மொழுக்
தென்கட னடுத்திடர் செய்துறைத் திமையவ
ருருடைத் துண்ணுஞ் சுருட்டு மணித்த
மணிவேற் குமரன் களிமகிழ் செய்த
பேரருட் குன்ற மொருபாற் பொலிந்த
வறபெருங் கூடற் பிறைசடைப் பெருமான்
றிருவடிப பெருந்தேன பருகுநர் போல
மணமுடன் பொதுளிய வாடா மலர்த்தழை
யொருதீ விடுதலி னானைவை கெடுத்தன
னவ்வழி கூறி னதுதழை வருது
கண்மலர் கவர்ந்துக கைம்மலர் குவித்து
மெடுபியாப பெரிய மூலமுக மெருகிபு
மூடியும வணங்கியு முவந்தவி கூறியும்
பொன்னையழி கடரிய னாகி
நிறையழிந் தவட்கு நீயா யினவே.

அறுகும் - நீயாயினவே. பந்தி - சேட்படை. துவறு-தழை விருப்புரைத்தல்.

'அறுகும்' என்பதுமுதல் 'கானவனுகி' என்பதுவரை.
(1—3 வரிசை.)

(ப-ரை.) அறுகும் - அறுகம்புல்லையும், தும்பையும் - தும்பை மலரையும், அணிந்த - தரித்த, செஞ்சடையும் - சிவப்பாகிய சடை யையும், கலைமான - கலைமானையும், கணிசையுடமழுவையும், கட்டிய அரவமும - அரைக்கு அசைத்த பாம்பையும், பிறவும - மற்றவைக ளையும, காதல (தேதானமுமல்) மறைத்தி, ஒரு கானவன்ஆகி - ஒரு வேடுவனுகி.

(வி-ரை.) துப்பை - ஆகுபெயர். அரைக்கு - உருபுமயக்கம், அசைத்தல் - கட்டல். காதல் - மறைத்தல். வேடுவன் காடே வீடாகக்கொண்டு சஞ்சரிப்பவனுதலால் அவ்னக்'கானவன்'என்றார்.

'அருச்சுனன்' என்பதுமுதல் 'செய்தோன்' என்பதுவரை.
(4—7 வரிசை.)

(ப-ரை.) அருச்சுனன் - அருச்சுனனது, வருந்தவம் அழித்து - செயற்கரிய தவத்தை யழியுமதித்தி, அமர் செய்து - போராடி, அவன்

கொடுமரத்தழும்பு - அவன் வில்லாலடித்த வடுவை, திருமுடிக்கு அணிந்து - தனது திருமுடியிற்றரிக்கி, பொன் உடை ஆவம் - அழகு வையுடைய அம்புக்கூடு, தொலையாது சுரக்க - வற்றாது வீளையுமாறு, பாசுபதக்கணை - பாசுபதமென்னும் சிவாஸ்திரத்தை, பரிந்து - அன்பாய், அருள் செய்தோன் - அருள்புரிந்தவனது.

(வி-ரை.) கொடுமரம் - வில், இது கோடுமரம் என்பதன் விகாரம், கோடுங்கோல் கொடுங்கோ லென்றுமயவாறுபோல. பொன் - அழகு. ஆவம் - அம்புக்கூடு (அம்பறாத்தூணி), இதனைத் தூணீரம் என்பர் உடதூலார்; 'அம்பஞ்சியாவப்புக மிக நீண்டரி ஒந்து கண்ணுள்' என்றார் மேலோரும்.

'வாசவன்' என்பதுமுதல் 'குன்றம்' என்பதுவரை.

(8—12 வரிகள்.)

(ப-ரை.) தென் கடல் நடு - தென்சமுத்திரத்தை நடுவிடத்தை, திடர் செய்து - (மகேந்திரமென்னு நகரால்) திடர்பண்ணி, உறைந்து - அதிலிருந்து, இமையவர் - தேவர்களுடைய, ஊர் உடைத்து உண்ணும் - பட்டினங்களே யழித்துண்ட, சூருடல் - சூரபன்மனுடலே, மூன்று எரிவாழ - அந்தணர் மூதலியோரது மூவகைத் தழலும் வளருமாறு, தணித்த - இருகூறுசெய்து, மணிவேல் குமான் - மணிகட்டிய வேலுடைக் குமாரக்கடவுள், வாசவன் மகள்புணர்ந்து - தெய்வயானை நாய்ச்சியாரை மணந்து, களி மகிழ் செய்த - மிக மகிழ் சிறக்க, பேரருள் குன்றம் - பாசசான் புதல்வர்க்கு அருள்செய்தற் கிடனுகிய திருப்பரங்குன்றம்.

(வி-ரை.) திடர் - மேடு. தேவரை இமையவர் என்றது மங்கல வழக்கு.

'ஒருபால்' என்பதுமுதல் 'பெருந்தேன்' என்பதுவரை.

(12—14 வரிகள்.)

(ப-ரை.) ஒருபால் பொலிந்த - ஒருதிசையில் விளங்கியுள்ள, அறம் பெரும் கூடல் - மிக்க புண்ணியப்பலனைத் தருகின்ற கூடலிலே, பிறைச்சடை பெருமான் - சடையிற் பிறையணிந்த பெருமானது, திருவடி பெருந்தேன் - பீபாதங்களி னருட்பெருந்தேனை.

(வி-ரை.) ஒருபால் - ஒருபக்கம் எனினுமாம். அறப்பெருங் கூடல் - மிகப்பெரியகூடல் என்றலுமொன்று. பிறைச்சடைப் பெருமான் என்றது சிவபிரானை.

'பருகுநர்' என்பதுமுதல் 'கொடித்தனன்' என்பதுவரை.

(14—16 வரிகள்.)

(ப-ரை.) பருகுநர் போல - உண்கின்றவர்போல, மணமுடன் பொதுளிய - மணத்தோடு தளிர்த்த, வாடா மலர் தழை - வாடாத மலருள்ள தழைகளே, ஒரு நீ விடுத்தனை - ஒப்பற்ற நீ விடுத்தாய், யான் அவை கொடித்தனன் - அவற்றைத் தலைமகட்கு யான் கொடுத்தேனுக.

(வி-ரை.) பொதுளல் - தளிர்த்தல். தழை - ஆகுபெயர். விடுத்தல் - அனுப்புதல்.

'அவ்வழி' என்பதுமுதல் 'நீயாயினவே' என்பதுவரை

(17—22 வரிகள.)

(ப-ரை.) அவ்வழி கூறின் - அம்முறையைச் சொல்லுங்கால், அத்தழை வந்து - அந்தத் தழைகள்வந்து, கண் மலர் கவர்ந்தும் - தலைவி கண்மலர்களாற் கவரப்பட்டும், கை மலர் குவித்தும் - கைம் மலர்களால் அஞ்சலிக்கப்பட்டும், நெடி உயிர்ப்பு எறிய - பெருமூச் செறியுமாறு, முலைமுகம் - முலையிடத்தே, நெருங்கியும் - ஒற்றிக் கொளப்பட்டும், ஊடியும் - சற்றே பூடப்பட்டும், வணங்கியும் - மீண்டு தொழப்பட்டும், உவந்து அளி கூறியும் - களித்து முகமனுரைக்கப்பட்டும், பொறை அழி காட்சியன் ஆகி-காமநோய் பொறுத்தலில்லாத் தோற்றத்தையுடையனாய், நிறை அழிந்தவட்கு - நிறையாற் கைவிடப்பட்ட அத்தலைவிக்கு, நீயே ஆயின-நீயேயாயினீர்ம்.

(வி-ரை.) கண்மலர் - கண்களாகிய நீலமலர். கைம்மலர் - கைகளாகிய தாமரைமலர். முலைமுகம் என்பதில் முகம் எழனுருபு. முலைமுகம் என்பதற்கு முலைமுகடு என்றுரைப்பினுமமையும், முலை தனியுமாம். ஊடல் - பிணங்கல். முகமன் - இன்சொல் (உபசார வார்த்தை).

கானவனுகித் தழும்பணிந்து கணையருள் செய்தோன் மூன் றெரிவாழச் சூருடனுணித்த வேற்குமரன் புணர்த்தமிழ்செய்த சூன் றம்பொலிந்த கூடற்பெருமான் அடித்தேன் பருகுநர்போல,நீவிடுத்த மலர்த்தழை யான் கொடித்தன னத்தழை நிறையழிந்தவட்கு நீயே யாயினவென வினைமுடிவுசெய்க. (சுசு)

திருக்கோவையார் அகம் தெய்யுள்.

விரவிக்கூறல்.

விரவிக்கூறு லெனிபது—வன்மொழியாற் கூறின் மனமெலியு மென்றஞ்சி ஓலவன் தன்பெடைக்கு நாவற்கனியை நல்ககண்டு ஒருபெருந்தகை பேயகண்டாறபோல கினருன், அகலிலமையை நீ கண்டாயாயின் உயிர்வாழமாட்டாய,யான் வன் னமையெனதலாற் ஆற்றியுளேனுப்ப் போர்தேனென, மென்மொழியோடு சிறிது வன மொழிபடக் கூறுதல். அதற்குச செயயுள்:—

நீகண் டனையெனின் வாழலே நேரிழை யம்பலத்தான்
தேய்கண் டனையன் றென்றுகோ லலவன்றன சிர்ப்பெடையின்
வாய்வண் டனையதொர் நாவற் கனிகனி நல்கக்கண்டு
பேயகண் டனையதொன் றுகினின் றுனைப் பெருந்தகையே.

வன்மொழி யின்மன மெலிவ தஞ்சி
மென்மொழி விரவி மிகுத்து மைத்தது.

(பதவுரை.) நேரிழை - நேரிழாய, அமபலத்தான் - அம்பலத்தானது, சேய் கண்டனையன் - புதல்வனை கண்டாற்போனிருக்கு மொருவன், ஆங்கு ஓர் அலவன் - அவ்விடத்து ஓரலவன், தன சிர் பெடையின் - தனதழகையுடைய பெடையின், வாய் - வாயின்கண், வண்டனையது ஓர் - வண்டனையதொரு, நாவல் கனி நாவற்கனியை, சென்று - சென்று, நனி நல்க-மிகவுங கொடுப்ப, கண்டு - (தனதுகை) கண்டு, அ பெருந்தகை - அப்பெருந்தகை, பேய் கண்டனையது ஒன றுகின்றுன் - பேயாற் காணப்பட்டாற் போல்வதோர் வேறுபாட்டையுடையவனுகி கின்றுன், (அதலிலையை) நீ கண்டனை எனின - நீ கண்டாயாயின், வாழலே - (உயிர) வாழமாட்டாய், (யான வனகண் மையேனுகலின் அதனைக்கண்டும் ஆற்றியுளேனுயினேன்), எ-று.

(விளக்கம்.) நேரிழை - அன்மொழித்தொகை, அண்மைவிளி அம்பலத்தான் என்பதனிற்றில் ஆறனுருபு தொக்கது. அம்பலத் தான் சேய் - பொன்னம்பலவனது புதல்வனுகிய முருகவேள். அல வன - ஞண்டு.

நேரிசையாசிரியப்பா.

வியரமு தரும்பி முயற்கண் கலுத்துத்
தண்ணைநின் றுதவலி னிறைமதி யாகிப்
பொன்னம் பொருட்டித் தாமரை குவித்து

நிறையளி புரக்கும் புதுமுகத் தணங்குநின்
ஞெலிவிளர் நோக்க முற்றுநீ யாயி
னின்னுயிர் வாழ்க்கை யுடலொடும் புரக்கலே
யொருதனி யடியாற் குகவுதல் வேண்டி
மன்னலர் காவ வட்டணை வாளெடுத்
தாதி சாரணை யடர்கிலைப் பார்வை
வாளுட னெதிர்கன் மார்பொடு முனைதல்
பற்றிரி னுடர்ந்தவுட் கையின் முறித்த
லொருங் கொளாட்ட லணிமயிற் புரோக
முட்கலந் தெடுத்த லொளிதிட மழைத்தல்
கையொடு கட்டல் சடிந்நுன் னளைதுழ்தலென்
னிவ்வகைப் பிறவு மெதிரம சேறி
யவன்பதை முறித்த வருட்பெருங் கடவுள்
கூடலங் கானற் பெடையுடன் புல்லிச்
சேவ லன்னக் கிளாலிச் சுளனினை
யம்மலர் வள்ள மாகிய நுதலுதல்
கண்டுதன் டொருவன் பாற்கி
விண்டியிர் சோர்ந்த குறிநிலை மயக்கே.

வியரமுதரும்பி - குறிநிலைமயக்கே. பாதி - குறைபயப்பித்தல். துணை - விரவிக்கூறல்.

'வியரமுது' என்பதுமுதல் 'மதியாகி' என்பதுவரை.
(1—2 வரிகள்.)

(பதவு.) வியர் அமுதம் - வியர்வாகிய அமுதம், அரும்பி-மூழ்த்து, மூயல் கண் கறுத்து - போர் முயலுகிலையுடைய கண் கறுத்து, தண்ணம் - குளிர்ச்சியை, நின்று உதவலின் - தங்கி நிற்றலால், நிறைமதி ஆகி - உவாமதியாகி.

(வி - ரை.) தண்ணம் என்பதில் அம் பண்புப்பெயர்விகுதி. நிறைமதி - பூர்ணசந்திரன்.

'பொன்னம்பொகுட்டு' என்பதுமுதல் 'புதுமுகத்தணங்கு' என்பதுவரை.
(3—4 வரிகள்.)

(பதவு.) பொன்னம் பொகுட்டு-பொன்னிறமாகிய கன்னிகை யுள்ள, தாமரை குவித்தி - தாமரைப்பூவைக் கூம்பச்செய்து, நிறை

அளிபுரக்கும் - குறைவில்லாத தண்ணளியைத் தன்னிடத்துப் பரதுகாவாகின்ற, புதுமுகத்து அணங்கு-(பார்க்குந்தோறும்) புதுமைபயகுமுகத்தையுடைய திருவே.

(வி-ரை) பொன்னம் என்பதில் அம் அழகெனினுமாம். தாமரை-ஆகுபெயர். தண்ணளி-இருபை. அணங்கு-அண்மைவிளி.

'நின்னொளிவளர்' என்பதுமுதல் 'புரக்கலே' என்பதுவரை.
(4—6 வரிகள.)

(ப-ரை.) நின் ஒளிவளர்-உன்னுடைய விளக்கமிக்க, நோக்கம்-கண்களாலே, உற்றனையாயின் - நோக்குமையாயின், இன் உயிர் வாழ்க்கை - இனிய உயிர்வாழ்க்கையை, உடலொடும் புரக்கலை - நின்னுடலிடத்தே காப்பாற்றவல்லேயல்லே.

(வி-ரை.) உயிர்வாழ்க்கை - உயிரோடுகூடி வாழ்தல். புரத்தல்-காப்பாற்றல்.

'ஒருதனியடியாற்கு' என்பதுமுதல் 'ஆரந்தோட்டல்' என்பதுவரை.
(7—12 வரிகள.)

(ப-ரை.) ஒருதனி அடியாற்கு - தனிமையான அடியாறுக்கு, உதவுதல் வேண்டி - உதவி செய்யும்படி திருவுளங்கொண்டு, மண்ணவர் காண - பூமியிலுள்ளார் அறியுமாறு, வட்டவேணை - கேடகமும், வான் - வாளும், எடுத்து - கையிலெடுத்து, ஆதிசாவேண - முதலில் சார்ந்து நிற்றலும், அடர்கிலே பார்வை - நெருங்குங்கூயிலே பார்வை வைத்தலும், வாளுடன் நெருக்கல்-வாளொடு கிட்டுதலும, மார்பொடு மூனைதல் - வாளே மார்பிலேற்று எதிர்த்தலும், பற்றிகின்று அடர்த்தல் - ஒருவரொருவரைப்பற்றிநின்று பொருதலும், உட்கையின் முறித்தல் - கைக்குள்ளடக்கி முறித்தலும், ஆரந்தோட்டல் (கேடகத்துள் தாழ்ந்து) முகத்தோ டடங்குதலும்.

(வி-ரை.) வட்டவேணை - வட்டவடிவு, அது அவ்வடிவையுடைய கேடகத்துக் காயிற்று, ஆரம்-முகமென்னும பொருள் பயப்பதோர் வடசொல்.

'அணிமயிர்ப்புரோகம்' என்பதுமுதல் 'உள்ளழைத்தல்' என்பதுவரை.
(12—14 வரிகள்.)

(ப-ரை) அணிமயிற் புரோகம்-அழகுள்ள மயில்போலும் ஞமலி போலு முறையே பின்னே பறிந்து முன்னே நடத்தலும், உள் கல

த்து எடித்தல் - ஒருவருட லொருவருடலொடுமயங்கி மேலுறவெடித் தலும், ஒசிந்து - வளைந்து, இடம் - இடம்புறமாக, அழைத்தல் - அறைகூவலும், கையொடு கட்டல - ஒருவர்கையொ டொருவர் கையேறச் சேர விறுக்குதலும், கடிதல - குறிவழிபிழைத்து, உள் அழைத்தல் - நீராந்தாரிற்கு நிலைக்களத்தே யீர்த்தலும்.

(வி-ரை.) அறைகூவல் - வலாற்காரித்தல்.

'என்றிவ்வகை' என்பதுமுதல் 'பெருங்கடவுள்' என்பதுவரை. (14—16 வரிகள.)

(உ-ரை.) என்று - என்று சொல்லப்படும், இவ்வகை-இவ்வகைப் புள்களாகிய, பிறவும் - பிறவாள் விஞ்சைத் தொழில்களும், ஆதிர் - காணப்படுகின்ற, அமர் எறி - வாட்போரின் மிகமுயன்று, அவண் - அவ்வடியவனது, பகை - பகைவனுகிய சித்தனென்னுஞ் சாதகனை, முறிதத - அவன் அங்கங்களைத் தனித்தனி சிதிந்த, அருள் பெருங் கடவுள் - அருளே திருமேனியாகிய மாதேவனது.

(வி-ரை.) பிறவுமென்றதனால் வாள்வித்தல் சாரிகை திரி தல் வெட்டிவிலக்கி மீளுதல் சுழன்றுவிளித்தல் ஆண்மைகூறல் முதலியவுங் கொள்க. வாள்விஞ்சை - வாள்வித்தை. அமர் - வாட் போர் சாதகன் - பூதன். மாதேவன் - பரமசிவன்.

'கூடல்' என்பதுமுதல் 'குறிநிலேமயக்கே' என்பதுவரை. (17—21 வரிகள.)

(உரை) கூடல் - மதுரையினிடத்தே, அம் கானல் - அழ குள்ள நெய்தலில், சேவல் அன்னம் - ஆணன்னம், பெடையுடன் புல்லி - தனது பெடையைத் தழுவி, திரு மலர் கள்ளினை - திரு மகட்கிடனுகிய தாமரைப்பூவின் மதுவை, அம் மலர் - அந்தத் தாம ரை மலரே, வள்ளம் ஆக-கிண்ணமாகக்கொண்டு, நின்று-தானின்று, உதவுதல் - உண்பிதத்தலே, கண்டு கண்டு - பார்த்து பார்த்து, ஒரு வன் - ஓரசன். மாழ்கி - மயங்கி, விண்டு-நிலேமாறி, உயிர் சோர்ந்த- உயிர் தளர்ந்த, குறிநிலே மயக்கே - மயக்கநிலைக் குறிப்பினை.

(வி-ரை.) திருமகட்கிடனுபிருத்தலின் தாமரை மலரைத் திரு மலர் என்றார்.

புதுமுகத்தண்கே! வேண்டி வாளெடித்தமரேறி பகைமுறி த்த கடவுள் கூடற்கானலன்னம் பெடையுடன் புல்லி கள்ளினை

யுகவுதல் கண்டுகண்டொருவன்மாழ்குயுயிர்சோர்ந்த குறிப்பைநோக்க முற்றுணையாயின் உயிர்வாழ்கதை புரக்கலெனை வினைமுடிவுசெய்த.

திருக்கோவையார் கூஅகூ-ம் செய்யுள்.

ஊடறணிவித்தல்.

ஊடறணிவித்தலென்பது — லிருந்தேற்றுக்கொண்ட தலைமக ளூடைச்சென்று நம்முடைய தோன்றலுக தனக்குக துணையாகக் கொண்டுவந்து தோன்றுகலான், தினதளத்துக் கவற்சியை யொழி கது இனி நம்மரசற்குகுற்றேவல்செய்வாயாகவெனத்தோழி அவளை யூடறணிவியாகிற்றல். அதற்குச் செய்யுள்:—

கவலுகொள் பேய்த்தொகை பாய்சரக் காட்டிடை யாட்டிவெற்ப
தவலுகி லாசிவன் றில்லையன் றம்பழ வீரமுழுவிச்
சுவலுகி ருந்தநந் தோன்றலுக் கேதுணை யென்றுதோன்
றவலங் களைகநு பணிசெயற் பாலை யரசனுக்கே.

தோன்றலைத் துணையொடு தோழி கண்டு
வானறகை மடநகையை வருத்தந் தணிக்கது.

(ப-ரை.) கவலம் பொள் - கவற்சிகொள்ளுகற்கேதுவாகிய, பேய்த்தொகை - பேய்த்திரள், பாய்சர - காணுகளைப்பாயாகிற்ப, காட்டிடை-புறங்காட்டின்கண், ஆட்டிஉவந்த-ஆடுதலே விரும்பிய, தவல் அங்கு இல்லா-கேடகுகில்லாத, சிவன்-சிவனது, தில்லை அன்ன - தில்லையை யொப்பாய், சுழுவி முழுவி - சுழுவி முத்தங்கொண்டு, சுவல் அங்கு இருந்த - சுவலிடத்தேதியிருந்த, நம் தோன்றல் - நம் முடைய தோன்றலை, துணை என - தமக்குத் துணையெனக் கருதி வந்து, தோன்றுதலால் - தோன்றுதலான், அவலம் களைந்து - தினதுள்ளத்துக் கவற்சியை நீக்கி, அரசனுக்கு-(இனி) அரசனுக்கு, பணி செயற்பாலை - குற்றேவல் செயற்பாலை, எ-று.

(வி-ரை) கவலம்-சொழிற்பெயர். பாய்சர என்பதற்குப் பகுதி பாய்சர. தவல்-கேடு, பகுதி தவு. முழுவல் - முத்தங்கொளலை. சுவல் - பிடர். தோன்றல் - புதல்வன். கவற்சி - கவலை.

நேரிசையாசிரியப்பா.

அவ்வழி யவ்வழிப் பெய்புண வுண்ணி
முகன்முரு மிருசெய லகன்பெறக் கொளுமும்
புல்லப் பாண்மகன் சில்லெயு மின்றி

பின்பக் களஞ்சி யவையினர்ப் போகவி
முடிதகுலை மன்னர் செருக்குறில் யொருவிப
பொன்னுறு நூழ் பூவுடன் கடுகும்
பேழ்வாய்ப் பலியர்ப் பிறுகுரல் விளங்க
வழுதும் அவிகுரு குழுதவாய் ருகட்டிப
பழங்கொ டதைக வழர்குசொற் போலு
மழலைக் கிளவியர் பிறிலத நிள்பழு
மொருவழி யளிக்கு பிருவகநிச சிறுவீனத்
தழல்விழி மடப்ர, வெகிலையரிக குருளையைப்
பொன்மலை கண்ட பொலிவர் போல
மணிகெழு மார்ப்ப கலிபெறுப புகுத்தலிற்
கறைஞிசை யருவி யறைகுபிறை நிவலயர்த்
தூருதிவா யதுர்ப குங்குமக் காண்டமும்
சூறமகார் கொழிகுரு சமழிக நிலமு
நெடுநில யரணிபு நிபெறு நலனும்
புனமடப வெறிக, சாரலிற் ரூமழு
மருதவர் பெருகவி செருநிப புகையும்
வேங்கையின முருவ விருப்பி கரும்புங்
சந்திவிரி படிகுத பெய்கிறை வண்டுஞ்
சருனப பொதர சுறைறை மயிறு
முன்றிலம் பெண்டி ன குடம்பைகொ ளன்றிலு
மொன்றினே டொரு றென்றுதலை மயங்குங்
குழகுன் குல்லைக் ரு லை பதிறை
மருசடை முடிவே ரிலெஞ்சடைப பெருமா
னருதமிழ்க் கீத பெருதமிழ்ப பனுவல்
வாணியிற் கோட கயெங கலைதினன்
றிருக்கண் கண்ட பெருகினர் போல
முளரியங் கோயிற் ளாவிட வந்து
கல்லறம் பூத முலையைத் திருனை
ணின்னுளத் தினரா மன்னரைக் கினாறு
பொருதகை வஞ்சி டாரு
மருதியை கோதை டன்னவன் பாலே.

அவ்வழி யவ்வழி-மன்னவன்பாலே. பதங்-பரத்தையிற்பிரிவு. துறை-ஊட றணிவித்தல்.

'கறங்கிசை' என்பதுமுதல் 'குங்குமக்காண்டமும்' என்பதுவரை.

(15—16 வரிகள்.)

(பதவுரை) கறங்கு இசை - முழங்காநின்ற வொலியையுடைய, அருவி-அருவியானது, அறைந்த-எறிய, நிமிர்-எழுகின்ற, திவலையும்-துளிகளும், தருத்திவாய்-நீர்சொரி கருவியின்வாயை, அதுக்கிய-அழுத்துவதாற் சிதறும், குங்குமக் காண்டமும்-குங்குமமகலநத நீரும்.

(வி-ரை.) அறைந்த-எச்சத்திரிபு காண்டம்-நீர்.

'சூற்மகார்' என்பதுமுதல் 'தாரமும்' என்பதுவரை.

(17—18 வரிகள்.)

(பதவுரை) சூறமகார் - சூறப்பெண்கள், கொழிக்கும - (வண்டலாடலிற்) கொழிக்கின்ற, கலழ நிதநிலமும் - மூங்கின் முதற்கங்களும், நெடி நிலை - நெடிய மேனிலையினையுடைய, அரங்கில்-நர்த்தநசாலையில், பரிபெறு தாளமும் - மாலைகளி லறுத்து சிந்துகின்ற முத்தங்களும்.

(வி-ரை.) நர்த்தநசாலை - காட்டியசாலை. மேனிலை - மேல் முற்றம். முத்தம் - முத்து.

'புனம்பட' என்பதுமுதல் 'வண்டும்' என்பதுவரை.

(19—22 வரிகள்.)

(பதவுரை.) புனம்பட எறிந்த-சாடுகெட வெட்டிய, சாரில் தூமமும் - சேசாகிய ஏதிற்கட்டையின் புகையும், அநதணர் பெருக்கிய - அநதணரால் வளர்க்கப்பட்ட, செம் தீ புகையும் - சிவந்த வேள்வித்தியின் புகையும், வேங்கையின் தாதுடன் - வேங்கைமலர்த தாதுகளோ, விரும்பிய சுரும்பும் - இசைத்த பெடைவண்டுகளும், விரிகநதிவிரிவாகிய கழுகில், படிந்த-தங்கிய, மெல் சிறை - மெல்லிய சிறைகளையுடைய, வண்டும் - ஆண்வண்டுகளும்.

(வி-ரை.) படுதல் - கெடுதல். எறிதல் - வெட்டுதல். தாது - மகரந்தம்.

'சந்தனப்பொங்கர்' என்பதுமுதல் 'அன்றிலும்' என்பதுவரை.

(23—24 வரிகள்.)

(ப-ரை.) சந்தனப் பொங்கர் - சந்தனச் சோலையில், தழை சிறை மயிலும் - சிறைவிரித்தாடுகின்ற மயில்களும், மூன்றிலம் பெண்ணை - நீட்யொகிய பனைமரத்தின்மேல், குடம்பைகொள் - கூட்டிற்றங்குகின்ற, அன்றிலும் - அன்றிற்பறவைகளும்.

'ஒன்றினுெடொன்று' என்பதுமுதல் 'பெருமான்'

என்பதுவரை.

(25—27 வரிகள்.)

(ப-ரை) ஒன்றினுெடு ஒன்று - ஒன்றுடனொன்று, சென்று - சேர்ந்து, தலைமயங்கும் - தமமில் மயங்குதற்கிடமாகிய, குழிகன் - மூருகக்கடவுளது, குன்றம் - திருப்பரங்கிரிசூழ்ந்த, கூடலம்பதி நிறை - கூடலென்னும்பதியில் நிறைந்திருக்கின்ற, மஞ்சு அடை குழல் பெறு - மேகத்தையொத்த அளகத்தையுடைய கங்கைப்பெண் தனக்கிடமாகப் பெற்றுள்ள, செஞ்சடை பெருமான் - செஞ்சடைக் கடவுள்.

(வி-ரை.) தலைமயங்கல்-ஒருசொல், கலத்தல் என்பது பொருள். செஞ்சடைக்கடவுள் - சிவபிரான்.

'அருந்தமிழ்' என்பதுமுதல் 'பெருக்கினர்போல'

என்பதுவரை.

(28—30 வரிகள்.)

(ப-ரை.) அருந்தமிழ் - அரிய தமிழிற் கைவந்த, கீரன் - நக்கீர தேவன், பெருந்தமிழ் - பெரிய தமிழாகிய, பனுவல்-பெருமையுள்ள தமிழ்ப் பனுவலே, வாவியில்-பொற்றுமரையினின்று பாட, கேட்ட - காதாற் கேட்டருளிய, காவியங்களைத் தினன் - நீலகண்டனது, திருக் கண் கண்ட - திருக்கோலத்தைக் கண்ணாற்கண்ட, பெருக்கினர் போல - (செல்வப்) பெருக்கினர்போல.

(வி-ரை.) கைவரல் - தேறுதல். காவி - ஆகுபெயர். காவி - நீலமலர். திரு - திருக்கோலம்.

'முளரியங்கோயில்' என்பதுமுதல் 'திருவினள்' என்பதுவரை.

(31—32 வரிகள்.)

(ப-ரை.) முளரியங்கோயில் - தாமரையாகிய ஆலயமானது, தளைவிட வந்து-இதழ்க்கதவந்திறக்கவந்து, நல் அறம் பூத்த முல்லையந்திருவினள் - நன்மை பயக்கும் இல்லறத்தருமமுண்டான அறக்கற்பினையுடைய திருமகளே.

(வி-ரை.) நல்லறம் என்றது இல்லறத்தை. முல்லை - கற்பு. திருவினள் - அண்மைவிளி.

'அவ்வுழியவ்வுழி' என்பதுமுதல் 'நிலையோரு' என்பதுவரை.

(1—5 வரிகள.)

(ப-ரை.) அவ்வுழி அவ்வுழி - வீடுகள்தோறும், பெய் உணவு உண்ணி-இடப்பட்ட பலியைக்கருதி, முகன் தரும் இரு செயல்-முகந்தாமின்ற வுவப்பு வெறுப்பென்னு மிருசெயலையும், அகன் பெற - மனத்திற் பொருந்த, கொளவும் - கொள்ளுகின்ற, புல்லப்பாண்மகன் - புன்மையுள்ள பாணன், சில்லையும் இன்றி - கீழ்மகளுமில்லாமல், இன்பக்கிளவி-இன்பம்போல்வதாகிய சொற்களுடன், அன்பினர் - அன்மையுடைய பரத்தையரை, போக்கி - நீக்கி, முடித்தலை மன்னர் - முடியணிந்த தலையினையுடைய அரசர்க்குரிய, செருக்கு - (நிலையான) செருக்கையும், நிலை ஒருவி - தன்னினீங்கி.

(வி-ரை.) உழி - இடம். உவப்பு - விருப்பு. செயல் - தொழில். முகன் அகன் - முகம் அகம் என்பவற்றின் போலிகள். புல்லப்பாண் மகன்-கீழ்மகளுகிய பாணன். சில்லை-கீழ்மகள். இளவி - சொல். ஒருவல் - நீங்கல்.

'போன்னுறு' என்பதுமுதல் 'சிறுவனே' என்பதுவரை.

(6—11 வரிகள்.)

(ப-ரை.) பொன்னுறு-பொன்மையாகிய, ஞாழல் பூவுடன் கடுக்கும் - ஞாழற்பூவையொத்த, பேழ்வாய் புலி உகிர்-வாயாற் பெரிய புலிநகமாகிய அணி, சிறு குரல் விளங்க - சிறிய கழுத்தில் விளங்காநிற்க, அமுதம் துளிக்கும் - அமுதஞ் சிந்துகின்ற, குமுதவாய் குதட்டி-செங்குமுதம்போலும் வாயைக்குதட்டி, பழம் கொள்-பழத்தை நுகர்கின்ற, தத்தை - கிள்ளை, வழங்கு சொல்போலும் - பேசுஞ் சொற்கள் போல்கின்ற, மழலை இளவியும் - மழலைச்சொல்லும், இரு

நிலத்து இன்பமும்-இகபரங்களினின்பமும், ஒருவழி அளிக்கும்-ஓரிடத்தாவுகின்ற, இருங்கதி - பெருங்கதியிற் செலுத்தத்தக்க, சிறுவனே - பிள்ளையை.

(வி-ரை.) வாய்க்குவமையாகப் புணர்க்கப்பட்டமையால் குமுதம் செங்குமுதத்தினை யுணர்த்திற்று. மழலைச்சொல் - நிரம்பாமொழி. இருநிலம் - இவ்வுலகமும் அவ்வுலகமும். இருங்கதி யென்பதில் இருமை பெருமை.

'தழல்விழி' என்பதுமுதல் 'புகுத்தலில்' என்பதுவரை.

(12—14 வரிகள்.)

(ப-ரை.) தழல் விழி - அழற்கண்களையுடைய (வேற்றுமிருகங்கள்), மடங்கல் - மடங்குதற்குக் காரணமாகிய, கொலை அரிக்குருளையை - கொலைத்தொழிலையுடைய சிங்கக்குருளையை, பொன்மலை கண்ட-பொன்மலைமேற்கண்ட, பொலிவுபோல - காட்சியையொப்ப, மணிகெழு-மணிவடமணிந்த, மார்பகத்து-(அவன்) மார்பினிடத்தே, அணி பெற - இனிமைபெற, புகுத்தலின் - எந்திவிளையாடலால்.

(வி-ரை.) தழல் அழல் என்பன நெருப்பின் பரியாயநாமங்கள். அணிபெற என்பதற்கு அழகுபெற என்றுரைத்தலுமாம். குருளை - குட்டி, இது மரபுப்பெயர்; "சிங்கக்குருளைக் கிடுதீஞ்சுவையூணாயின், வெங்கட் கடுங்குட்டியை யூட்ட விரும்பிஞயே" என்றார் மஹாகவியும்.

'நின்னுளத்தின்னல்' என்பதுமுதல் 'மன்னவன்பாலே' என்பதுவரை.

(33—35 வரிகள்.)

(ப-ரை.) வண்டு ஆரும் - வண்டுகள் மொய்த்தற் கேதுவாகிய, அருத்தி - ஆசைதாத்தக்க, அம் கோதை - அகவிதழ் செறிந்த மலர் மாலை பூண்ட, மன்னவன்பால்-(நமது) தலைவனிடத்தேயுள்ள, நின் உளத்து இன்னல்-உனது மனக்கோட்டத்தை, மன் அற களைந்து - முழுது மறக்களைந்து, பொருத்தம் காண்டி - ஒற்றுமை கொள்வாயாக.

(வி-ரை.) இன்னல் - துன்பமுமாம். மன்-மிகுதி, அது ஈண்டு முழுதுமெனப் பொருள்பட்டு நின்றது. களைதல்-கல்லுதல். காணுதி காண்டி யென்றுமியற்று.

திவலைமுத லன்றில்காறும் தலைமயங்கும் குன்றக்கூடற் பெரு மானுகிய காவிக்களத்தினன் திருக்கண்டார்போலத் திருவினளே! இன்றி போச்சி ஒரு இருங்கதிர் இறவினை, மலைகண்ட பொலிவு போல மார்பகத்துப் புகுத்தலால், மன்னவன்பால் உன் இன்னல் களைக்து பொருத்தங் காண்டியென வினைமுடிவு செய்க. (நிக)

திருக்கோவையார் கoo-ம் செய்யுள்.

குலமுறைகூறி மறுத்தல்.

குலமுறைகூறி மறுத்தலேன்பது—நீயே கூறெனச் சொல்ல கேட்டு, உலகத்து ஒருவர்கண் ஒருவர் ஒருகுறை வேண்டிச்சென் ருல் அக்குறை நீயே முடித்துக்கொள்ளென்பாரில்லை, அவ்வாறன்றி, இவளிங்ஙனெல்லாம் என்குறை முடித்துத் தருவேனென்று என்னை யவமே யுழற்றி, இன்று நின்குறை நீயே முடித்துக்கொள்ளென்ரு நின்ருளெனத், தலைமகன் ஆற்ருது நிற்ப, அவனை யாற்றுவிப்பது காரணமாக, நீர் பெரியீர், யாஞ்சிறியேம், ஆதலான் எம்மோடு தமக் குச் சொல்லாதுதல் தகாதெனக் குலமுறைகூறி மறுத்துரையா நிற் றல். அதற்குச் செய்யுள்:—

தெங்கம் பழங்கமு கின்குலை சாடிக் கதலிசெற்றுக்
கொங்கம் பழனத் தொளிர்குளிர் நாட்டினை நீயுமைகூர்
பங்கம் பலவன் பரங்குன்றிற் குன்றன்ன மாபதைப்பச்
சிங்கந் திரிதரு சீறூர்ச் சிறுமியெந் தேமொழியே.

தோழுகுலத்தீர் சொற்காகேம்
இழிகுலத்தே மெனவுரைத்தது.

(ப-ரை.) தெங்கம் பழம் - (மூக்கூழ்த்து விழுகின்ற) தெங்கி னது பழங்கள், கமுகின் குலை - பாக்குமரத்தின் குலையை, சாடி - (உதிர) மோதி, கதலி செற்று - வாழைகளை முறித்து, கொங்கு - பூந்தாதையுடைய, அம் பழனத்து - அழகிய (பழனத்திற்) கிடந்து, ஒளிர் - விளங்கும், குளிர் நாட்டினை நீ - குளிர்ந்த நாட்டினுள்ளாய் நீ, எம் தே மொழி - எம்முடைய தேமொழி, உமை - உமையை, உளது, கூர் - சிறந்த, பங்கு - பாகத்தையுடைய, அம்பலவன் - சிற்றம்பல வனது, பசங்குன்றில் - திருப்பரங்குன்றினிடத்து, குன்று அன்ன - மலைபோன்ற, மா - யானைகள், பதைப்ப - நடுங்க, சிங்கம் - சிங்கங் கள், திரிதரு - (வேட்டம்) திரியும், சிறு ஊர் - சிறிய ஊரினிடத்து

உள்ளானாகிய, சிறுமி-(ஓர்) சிறியாள் (அதஞல் எம்மோடு சீ சொல் லாடுதல் தகாது), எ - று.

(வி-ரை.) தெங்கம்பழம் - முதிர்ந்த தேங்காய். சூலை - தாறு. சாடல் - மோதல். பழனம் - வயல். குளிர்நாடு - மருதநிலம். தே மொழி - அன்மொழித்தொகை. மா - விலங்கின் பொதுப்பெயரேயா யினும் சிங்கத்திரிதரு என மேல் வருதலால் யானையெனப் பொருள் கூறலாயிற்று. வேட்டம் - வேட்டை. திரிதரு என்பதற்குப் பகுதி திரி தா.

நேரிசையாசிரியப்பா.

பெருமறை நால்பெறு கோன்முறை புரக்கும்
பெருந்தகை வேந்த னருங்குணம் போல
மணஞசேர்க் கமுதுந் தணந்தோர்க் கெரியும்
புக்குழிப் புக்குழிப புலன்பெறக் கொடுக்கு
மலையத் தமிழ்க்கால் வாவியுட் புகுந்து
புல்லித ழ்த்தா மரைப் புதுமுகை யவிழ்ப்ப
வண்டினம் படிந்து மதுக்கவர்ந் துண்டு
சேயிதழ்க் குவளையி னிரைநிரை யுறங்கு
நீலநீர் நாட னீயே யிவளே
மலையுறை பகைத்து வானுறைக் கணக்கும்
புட்குலஞ் சூழ்ந்த பொருப்புடைக் குறவர்தம்
பெருந்தேன் கவருஞ் சிறுகுடி மகளே
நீயே, ஆபமோ டார்ப்ப வரிகிணை முழக்கி
மாயா நல்லறம் வளர்நாட் டினையே [ந்து
இவளே, தொண்டகந் துவைப்பத் தொழிற்புனம் வளை
பகட்டினங் கொல்லும் பழிநாட் டவளே
நீயே, எழுநிலை மாடத் திளமுலை மகளிர்
நடஞ்செயத் தரள வடந்தெறு நகரோய்
இவளே, கடம்பெறு கரிக்குல மடங்கல் புக்கமுத்
தெறித்திடு முத்தந் திரட்டிவைப் பினளே
நீயே, அணிகெழு நவமணி யலரெனத் தொடுத்த
பொற்கொடித் தேர்மிசைப் பொலிகுவை யன்றே
இவளே, மணிவாய்க் கிள்ளை துணியா தகற்ற
நெட்டித ணேறு மிப்புனத் தினளே

யாதலிற் பெரும்புக ழூணேகுதி யாயி
ஞாணன் படாத் தேவர்கெட் டோட
வளிசுழல் விசும்பின் கிளர்முக டணவிக்
கருமுகில் வளைந்து பெருகிய போல
நிலைகெடப் பரந்த கடல்கெழு விடத்தை
மறித்தவ ருயிர்பெறக் குறித்துண் டருளித்
திருக்களங் கறுத்த வருட்பெரு நாயகன்
கூடல் கூடினர் போல
நாட னீயிவள் கழைத்தோ ணசையே.

பெருமறைநூல்பெற - கழைத்தோணசையே. பதுதி - சேட் படை. துறை - குலமுறைகூறி மறுத்தல்.

'நீயே. பெருமறை' என்பதுமுதல் 'அருங்குணம்போல' என்பதுவரை.

(1—2 வரிகள்.)

(ப-ரை.) நீயே - நீயோவென்றல், பெரு மறை-பெரிய வேதத் தினின்றும், நூல் பெறமதநூல் விதிவழியே பிறந்த, கோல்-செங் கோலாகிய, முறை புரக்கும் - அரசியல் செய்யும், பெருந்தகை-மேம் பாடுள்ள, வேந்தன்-அரசனது, அருங்குணம்போல-(பிறராற்பெறல்) அரிய நற்குணமென்ன.

(வி-ரை.) மதநூல் விதிவழியே பிறந்த என்றதனால், கோல் செங்கோலென் றுரைக்கலாயிற்று.

'மணந்தோர்க்கு' என்பதுமுதல் 'நீலநீர்நாடன்' என்பதுவரை.

(3—9 வரிகள்.)

(ப-ரை.) மணந்தோர்க்கு-பிரிவில்லாதவர்களுக்கு, அமுதம் - அமுதத்தையும், தணந்தோர்க்கு - பிரிந்தவர்க்கு, எரியும் - அழலை யும், புக்குழி புக்குழி - புகுந்த புகுந்த விடங்களில், புலன்பெற கொடுக்கும் - இந்திரிய வுணர்ச்சிபெறக் கொடுக்காநின்ற, மலையத் தமிழ்க்கால் - தமிழுக்கிடமாகிய பொதிகையினின்றும் தென்றலா னது, வாவியுள் புகுந்து - தடங்களிற் படிந்து, புல் இதழ் தாமரை - பூவிதழ்த் தாமரைகளின், புது மூகை அவிழ்ப்ப-புதியவரும்புகளே மலர்த்தலால், வண்டு இனம் படிந்து - வண்டினம் புகுந்து, மது - தேனை, கவர்ந்து உண்டு - விரும்பியுண்டு, சேபிதழ்க்குவளையினிரை-

நிரையாகிய செவ்விதழ்க் குவளைமலர்களில், நிரை உறங்கும் - வரிசையாகத் தங்குதற்கிடமாகிய, நீர்நிலை யாடன்-நீர்நிலைசூழ்ந்த மருதத் தலைவனுடைய.

(வி-ரை.) மணக்தோர் என்றதனால் பிரிவின்மை பெறப்பட்டது. மணத்தல-கூடுதல். தணத்தல் - பிரிதல். பொதியத்தினின்றும் வருதலால் 'தென்றலைத் தமிழ்க்கால்' என்றார். வாவி-வாபியென்னும் வடமொழித் திரிபு. அவிழ்த்தல் - மலர்த்தல். கவர்தல் - விரும்புதல்.

'இவளே மலையுறை' என்பதுமுதல் 'சிறுகுடிமகளே'
என்பதுவரை.

(9—12 வரிகள்.)

(பதவுரை.) இவளே - (உன்னால் விரும்பப்பட்ட) இவளோவென்றால், மலை உறை-மலையருவியை, பகைத்து-வெறுத்து, வான் உறைக்கு - மழைத்துளிக்கு, அணக்கும் - அங்காத்தல் செய்கின்ற, புள்குலம் - (சக்கிரவாகப்) புள்ளினம், சூழ்ந்த-சூழ்ந்திருக்கின்ற, பொருப்பு உடை - மலையையிடமாகவுடைய, குறவர்தம் - குறவர்களது, பெருந்தேன் - இருலிலுள்ள தேனை, கவரும் - விரும்புகின்ற, சிறுகுடி - சிறிய குடியிற்பிறந்த, மகளே - பெண்ணுவள்.

(வி-ரை.) உறை - நீர், அது இங்கு அருவிக்காயினமையால் ஆகுபெயர். உறை - மழைத்துளி. அணத்தல் - அங்காத்தல் (வாய் திறத்தல்). குறவர்தம் என்பதில் தம் சாரியை. இறுல் - தேன்கூடு.

'நீயே, ஆயமோடு' என்பதுமுதல் 'நாட்டினையே'
என்பதுவரை.

(13—14 வரிகள்.)

(பதவுரை.) நீயே - நீயோவென்றால், ஆயமோடு-மகளிர் கூட்டத்தோடு, ஆர்ப்ப - ஆரவாரிக்க, அரிவினை முழக்கி - மாவலியரத்தாற் செய்த மருதப்பறை கொட்டி, மாயா நல் அறம் - அழியாத நல்லறத்தை, வளர் நாட்டினை - வளர்க்காநின்ற நாட்டினையுடையாய்.

(வி-ரை.) அரி-மாவலியரம். இனை-மருதநிலப்பறை. வளர்நாடு - வினைத்தொகை நிலைத்தொடர்.

'இவளே, தொண்டகம்' என்பதுமுதல் 'பழிநாட்டவளே' என்பதுவரை.

(15—16 வரிகள்.)

(பதவுரை) இவளே-இவளோவென்றால், தொண்டகம் - குறிஞ்சிப்பறை, துவைப்ப - முழங்க, தொழில்-தனஞற் காதற்றலைவனால் செயயப்பட்ட, புனம வளைந்த - புன்பயிர்க் கொல்லைகளைச் சுற்றி, பகடு இனம - யானைக்குலங்களே, கொல்லும் - வருத்துகின்ற, பழிநாட்டவள் - சீறூருடையவள.

(விளக்கம்.) தொண்டகம் - குறிஞ்சிநிலப்பறை. துவைத்தல் - முழக்கல். கொல்லைத்தொழினிகழுமிடமாதலால சீறூரைப் 'பழிநாடு' எனறார.

'நீயே, எழுநிலைமாடத்து' என்பதுமுதல் 'நகரோய' என்பதுவரை.

(17—18 வரிகள.)

(பதவுரை.) நீயே - நீயோவென்றால், எழுநிலை மாடத்து - நிலைமைகளான மேலெழுந்த மாளிகைகளில், இளமூலை மகளிர் - பருவமங்கையர், நடம் செய - ஆடல்செயய, தாளவடம் - முத்துவடங்கள, தெறும - சிதறுதற்கிடமாகிய, நகரோய - நகரத்தையுடையாய.

(விளக்கம்) நிலை - நிலைமை. வடம் - மாலை.

'இவளே, கடம்' என்பதுமுதல் 'வைப்பினளே' என்பதுவரை.

(19—20 வரிகள.)

(பதவுரை.) இவளே - இவளோவென்றால், கடம் பெறு-மதமொழுக்காறின்ற, கரிக்குலம் - யானைக்குலங்களே, மடங்கல் புக்கு-சிங்கமெதிர்ந்து, அகழ-மத்தகத்தைப் பிளத்தலால், தெறிதிதிமுத்தம்-தெறித்திட்ட முத்தங்களே, திரட்டு-சேர்க்கின்ற, வைப்பினள்-நிலத்தினளாவள்.

(விளக்கம்.) குலம் - கூட்டம். அகழ்தல் - பிளத்தல், அதற்குமுத்தகத்தைப் பிளத்தலென்னும் பொருள் போதவா றென்னெனின், கரிக்குலம் என்றதனாலென்க,

'நீயே, அணிகெழு' என்பதுமுதல் 'போலிகுவையன்றே' என்பதுவரை.

(21—22 வரிகள்.)

(ப-ரை.) நீயே - நீயோவெனின், அணிகெழு நவமணி - அலங்கரிக்கப்பட்ட வொன்பான்மணிகளும், அலர் என தொடுத்த - மலர் மாலைபோலக் கோத்துள்ள, பொன்கொடி தேர்மிசை - கொடிகளாடாநின்ற பொற்றேர்மேல், பொலிகுவை - விளங்குவை.

(வி-ரை.) அலர்-ஆருபெயர். மிசை-ஏழனுருபு, இடப்பொருட்டு.

'இவளே, மணிவாய்க்கிள்ளே' என்பதுமுதல் 'ஆதலின்' என்பதுவரை.

(23—25 வரிகள்.)

(ப-ரை.) இவளே - இவளோவெனின், மணிவாய் கிள்ளை செவ்வாய்க்கிளிகளே, தணியாது - தெளியாமல், அகற்ற-ஒச்சுமாறு, நெட்டிதண் - நெடுமையாகிய பரண்மேல், எறும் - எறுதற்கிடமாகிய, இப்புனத்தினன் - இத்தினைப்புனத்தினள், ஆதலின்-ஆகையால்.

(வி - ரை.) கிள்ளையின்செவ்வாயைக் குறிக்கவேண்டுதலால் மணியென்ற நீண்டுச் செம்மணியைக் குறித்தது. செம்மணி-மாணிக்கம்.

'பெரும்புகழ்' என்பதுமுதல் 'கழைத்தோணையே' என்பதுவரை.

(25—33 வரிகள்.)

(ப-ரை.) பெரும்புகழ் - மிக்கபுகழை, அணங்குறியாயின்-பெறவேண்டினையாயின், நாரணன் படர - திருமால் பின்னிட, தேவர் கெட்டு ஓட - தேவர்க ணிலெகெட் டோடாநிற்ப, வளி சுழல் - வீசுகின்ற காற்றுக்கிடனாகி, விசும்பின் இளர் முகடு அணவி-மாசில்லாத விண்மீதிலளாவி, கரு முகில் - கரியமுகில்கள், வளைந்து - சூழ்ந்து, பெருகியபோல - பரந்தாற்போல, நிலெ கெட - கீழ்மேலாக, பரந்த - பரவிய, கடல் கெழு - கடலிற்பிறந்த, விடத்தை-ஆலாலத்தை, மறித்து - தடுத்து, அவர் உயிர் பெற-அத்தேவர் முதலியோ ருயிருடன் வாழுமாறு, குறித்து - கடைக்கணித்து, உண்டருளி - உட்கொண்

டருளி, திரு களம் கறுத்த-ஸ்ரீகண்டங்கறுத்த, அருள்பெருநாயகன்-போருட்கடவுளது, கூடல் - மதுரையை, கூடினர்போல - அடைந்தவர் (பற்றற்றோர்) போல, இவள் - (இழிகுலத்தளாகிய) இவளது, கழைத்தோள் - (பசிய) மூங்கில்போலும் தோளைப் புணரும், நசையை - ஆசையை, நாடல் - நீ நாடாதொழிக.

(வி-ரை.) அணவல் - அளாவல். ஆலாலம் - பாற்கடல் கடையப்பட்டபோழ்தத் தினின்றெழுந்த நஞ்சு. கடைக்கணித்தல்-கடாகூறித்தல். கழை - மூங்கில், அது ஈண்டுப் பசிய மூங்கிலை யுணர்த்திற்று, மகளிர் தோளுக்குவமையாகப் புணர்க்கப்பட்டமையின்.

நீயே நிலைகீர்நாடன், இவளே சிறுகுடிமகள்; நீயே அறம் வளர் நாட்டினை, இவள் பழிநாட்டவள்; நீ நகரோய், இவள் முத்தந்திரட்டி வைப்பினள்; நீ தேர்மிசைப் பொலிகுவை, இவள் இதணேறு மிப்புனத்தினள்; ஆதலின், புகழணேகுதியாயின், அருட்பெருநாயகன் கூடல் கூடினர்போல, இவள் தோணசை நாடனீயென வினை முடிவு செய்க. (இஉ)

திருக்கோவையார் ஈகஉ-ம் செய்யுள்.

காவற்பிரிவறிவித்தல்.

பிரிவறிவித்தலென்பது—தருமதாரம் விதியால் நமர் உலகத்தைப் பாதுகாப்பான் பிரியக் கருதாநின்றமொனத் தலைமகன் காவலுக்குப் பிரியக் கருதாநின்றமை தோழி தலைமகளுக் கறிவியாகிற்றல். அதற்குச் செய்யுள்:—

> ழுப்பா னிலையவன் முன்னவன் பின்னவன் மூப்புரங்கள்
> வீப்பான் வியன்றில்லை யானரு ளால்விரி நீருலகங்
> காப்பான் பிரியக் கருதுகின் றார்நமர் கார்க்கயற்கட்
> பூப்பா னலமொளி ரும்புரி தாழ்குழற் பூங்கொடியே.
>
> இருநிலங் காலற் கேகுவர் நமரெனப்
> பொருசுடர் வேலோன் போக்கறி வித்தது.

(ப-ரை.) கார் - கரிய, கயல் - கயல்போலும், கண் - கண்ணினையும், பூப்பால் - பூவின்கண், நலம் ஒளிரும் - (தமதாற்றமுடைமையாகிய) நன்மை விளங்கும், புரி தாழ் குழல் - சுருண்ட தாழ்ந்த குழலியுமுடைய, பூங்கொடியே - பூங்கொடியை யொப்பாய், மூப்பான் - (எல்லார் யாக்கைக்கு மூன்னே தனதிசையாற் கொள்ளப்

பட்ட திருமேனியை யுடையனுதலின் எல்லார்க்கும் தான்) மூப்பான், இளையவன் - (பின்றேன்றிய யாக்கையையுடையா செல்லாரு மூப்பவுங் தானிலேபெற்ற விளமையை யுடையனுதலின் எல்லார்க்கும்) இளையான், முன்னவன் பிறனவன் - உலகத்திற்கு முன்னுளோன் அதற்குப் பின்னுமுள்ளோன், மூப்புரங்கள் - மூனறு புரங்களையும், வீப்பான் - கெடுப்பான், வியன் தில்லையான் - அகன்ற தில்லைக்கண்ணன், அருளால்-(அவனது) எவலால், நமர்-நமமவர், விரி நீர் உலகம் - விரிந்த நீராற் சூழப்பட்ட வுலகத்தை, காப்பான் - காக்க வேணடி, பிரியக் கருதுகின்ருர் - பிரியக் கருதாகின்ருர், எ - று.

(வி-ரை.) பூப்பால் என்பதில் பால் ஏழனுருபு. மலருக்கு நறு நாற்றமுடைமையே நன்மையாதலான், பூப்பானலம் என்றதற்கு பூவின்கண் நறுநாற்றமுடைமையாகிய நன்மையென விரித்துரைக்க வாயிற்று. வீத்தல் - கெடுத்தல் (அழித்தல்). காப்பான் என்பதில் பான் செயவெனெச்ச வாய்பாட்டு வினையெசசம்.

நேரிசையாசிரியப்பா.

நடைத்திரைப் பரவை நாற்கட லீணைத்து
வரையறுத் தமைந்த வகைகான் காக
விதிவரத் திருத்திய மேதினிப் பொறையைக்
குருமணி விரித்தலிற் றேனெடு கிடந்து
மாயாது தொடுத்த மணமலர் சுமத்தலின்
வரையென நிறுத்திய திருவுறை பெருந்தோ
டரித்து மணைத்துந் தானெனக் கண்டுஞ்
செய்தது மன்றித் திருமனம் பணைத்துக்
காக்கவுங் குரிசில் கருத்துறும் போலும்
விடையா வடங்தைசெய் வெள்ளியுஞ் சிலம்பினுந்
தென்கால் விடுக்குஞ் செம்பிற் பொருப்பினுங்
கொண்டல்வந் துலவு நீலக் குவட்டினுங்
கோடைசென் றுடற்றுங் கொல்லிக் கிரியினும்
பிறந்தவர் பிறவாப் பெரும்பதி யகத்து
முடிந்தவர் முடியா மூதூ ரிடத்துங்
கண்டவர் காணாக் காட்சிசெய் நகரினும்
வேதத் தலியினும் விதியாக மத்தினுங்

கல்வியு ருளத்துங் கவர்நெஞ் சகத்துங்
தெய்வம் விடுத்துப பொய்கொளசிக் தையினுங்
கொலையினர் கண்ணுங் குன்ரு தியைந்து
வெளியுறத் தோன்றி யிருளுற மறைந்த
விஞ்சைவந் தருளிய நஞ்சணி மிடற்மோன்
ரந்தமும் பதமுஞ் சருக்கமு மடகமுஞ்
சின்னக் குறளுஞ் செழுங்கா போலப
பெருமறை முழங்குந திருநகர்க் கூட
லொபபுற் றடைமலர் சுமந்த
மைபபுறக் கூந்தற் கொடிவணங் கிடையே.

ஈடைத்தினைப்பாலை - கொடிவணஙகிடையே பதஇ - காவற் பிரிவு. தூறை -பிரிவறிவித்தல்.

'விடையா' என்பதுமுதல் 'கோல்லிகிரியினும்' எல்பதுவரை.
(10—13 வரிகள.)

(ப-ரை.) விடையா - வருத்தஞ்செயயாத, வடந்தை - வடகாற்றை, செய-விடுக்கின்ற, வெள்ளியஞ் சிலமபினும்-கைலேக்கிரியினும், தென் கால் - தென்றற்காற்றை, விடுக்கும் - வெளிப்படுத்தாகின்ற, செமபிற் பொருப்பினும் - தாமிரபர்ணியென்னு நதியையுடைய பொதிகைமலையினும், கொண்டல்-கீழ்காற்று, வாதுலவும்-வாதுலவுகின்ற, நீலக்குவட்டினும் - நீலமலையிலும், கோடை - மேல்காற்று, சென்ரு-வந்து, உடற்றும்-வெப்பஞ்செய்கின்ற, கொல்லிக்கிரியினும்-கொல்லி மலையினும்.

(வி-ரை.) விடைதல் - வருத்துதல். வெள்ளியஞ்சிலம்பு என்பதில் அம் சாரியை, அழகெனினுமாம்; வெள்ளிசசிலம்பு - வெள்ளியாளியன்றமலை.

'பிறந்தவர்' என்பதுமுதல் 'வேளியுறத்தோன்றி' என்பதுவரை.
(14—21 வரிகள.)

(ப-ரை.) பிறந்தவர் - (தன்னிடத்தில்) பிறந்தவர்கள், பிறவா-(பின்னும்) பிறவாத, பெரும்பதி அகத்தும்-பெருமையாகிய திருவாரூரிலும், மூடிநதவர் - இறந்தவர்கள், மூடியா - பின்னும் பிறநதிறவாத, மூதூரிடத்தும் - பழமையான வடகாடியிலும், கண்டவர் - தரிசித்தவர்கள், காணு - பின்னும்பிறந்து காணப்படாத, காட்சி செய் -

தம்மை அறிவுருவாக்குகின்ற, ஈகரினும் - சிதம்பரத்திலும், வேதத் தலையினும் - வேதத்தினுச்சியிலும், விதி ஆகமத்தினும் - விதித்த ஆகமங்களிலும், கல்வியர் உளத்தும் - கற்றறிந்தவ ருள்ளத்திலும், குன்றாது இயைத்து - குறையாது பொருந்தி, வெளியுற தோன்றி - வெளிப்படத் தோன்றியும்.

(வி-ரை) முடிதல் - இறத்தல். காட்சி - அறிவு.

'கவர்நெஞ்சகத்தும எனபதுமுதல் 'கோலையினர்கண்ணும்' என்பதுவரை.

(18—20 வரிகள்)

'இருளுற' எனபதுமுதல் 'மிடற்றோன்' என்பதுவரை.

(21—22 வரிகள்.)

(ப-ரை.) கவர் நெஞ்சகத்தும் - சிவத்தினிடையூறாய ஈன மூள்ள மனத்தினிடத்தும், செய்வம் விதித்து - தெய்வமுண்டென் பதைவிட்டு, பொய் கொள் - பொய்மையை மேற்கொண்ட, சிதை யினும் - உள்ளத்தும், கொலையினர் கண்ணும்-கொலைத்தொழிலின ரிடத்தும், இருள் உற - இருளாகப்பொருந்த, மறைத்த - மறை யும், விஞ்சை வந்தருளிய-வித்தையிற் கைவந்த, நஞ்சு அணி மிடற் றோன் - விடத்தைத் தரித்த கண்டத்தையுடையவனது.

(வி-ரை.) கவர்-இடையூறு. விஞ்சை வித்தை என்பன வித்யா என்னும் வடசொற்றிரிபு. மிடறு - கண்டம்.

'சந்தமும்' என்பதுமுதல் 'வணங்கிடையே' என்பதுவரை (23—27 வரிகள்.)

(ப-ரை.) பெருமறை - பெருமையான வேதத்தினுள, சந்த மும் - சந்தங்களும், பதமும் - பதங்களும், சருக்கமும் - சருக்கங் களும், அடக்கமும் - அடக்கங்களும், சின்னக்குரலும் - சின்னக் குரலுமாகிய சாகைகள், செழுங்கார்போல - கார்கால மேகம்போல, முழங்கும் - முழங்குகின்ற, திருநகர் - அழகிய நகராகிய, கூடல் ஒப் புற்ற - மதுரைக்கு ஒப்பாகி, அடை மலர் - தேன்பொருந்திய மலர் கள், கமழ்ந்த - பரிமளித்த, புறம - பின்புறத்திலுள்ள, மை - கரிய, கூந்தல் - கூந்தலையும், வணங்கு - வளைகின்ற, கொடி - கொடிபோ லும், இடையே - இடையையும் உடையாய் (கேள்).

(வி-ரை) முழங்குதல - முழங்குதற இடமாயிருத்தல். கமழ தல் - பரிமளித்தல்.

'நடைத்திரை' என்பதுமுதல் 'குரிசில்' என்பதுவரை.

(1—3, 9 வரிகள்.)

(ப-ரை) குரிசில் - நமதரசனுக்கு, நடை-எழுதலுளள, திரை - அலைசூழ்ந்த, பரவை - பரப்பாகிய, நாறகடல அணைத்து-நாற்றிசைக கடலகளாற தோலி, வரையறுத்து - எலலைபபடுத்தி, அமைந்த-(எல லாவளமும்) நிறைந்த, வகை நான்கு ஆக-நானகுவகை நிலத்தரக, விதிவர திருத்திய-மநுநூல விதியோடு பொருந்துமாறு திருத்திய, மேதினி பொறையை - பூமியாகிய பாரத்தை

(வி-ரை) பரவை - பரத்தல். வரையறுத்தல் - எலலைபபடுத தல அமைத்தல - நிறைதல நூல-ஆருபெயர். நாலவகை நிலமாவன - குறிஞ்சி, மூலலை, மருதம, நெயதல எனபன

'குருமணிவிரித்தலின்' எனபதுமுதல 'கருத்துறும்போலும' எனபதுவரை.

(4—9 வரிகள்.)

(ப-ரை.) குருமணி விரித்தலின - (தோளணியில) குருவிந்த மணிகள பதிந்திருத்தலாலும, நேஞ்சு கிடந்த - வண்டுகளோடு பொருந்தி, மாயாது தொடுத்த - வாடாது தொடுக்கபபட்ட, மண மலர - நறுமலர மாலைகளே, சுமந்தலின - மேறசொணடிருத்தலா லும, வரை என - மலைகளிலவையென, நிமிர்திய - மேலேபபொதிய, திரு உறை - சயமகள வசிக்கின்ற, பெருந்தோள - திரணட தோளி னிடத்தே, தரித்தும - தாங்கியும, அணைத்தும - தழுவியும, தான என கணடும - (மனனுயிராகவேத) தனனுயிரென நினைந்தும, செய தற்கு அனறி-(அரசியல)செயதுவருதறகுமலலாமல, திரு மனம பிணை தது - மாசினமையான மனம பூரித்து, காதலும - (பகைகருபபடா வணணம) பாதுகாக்கவும, கருத்துறும்போலும - கருத்தினான போலும.

(வி-ரை) மலர் - ஆருபெயர். திரு - வெற்றித்திரு. தான் என் றது தனனுயிரை பிணைத்தல - பூரித்தல்.

கூடலே யோபபாகிய கொடிவணங்கிடையாய! குரிசில் வீதி வரத்திருத்திய மேதினிப பொறையைப் பெருந்தோடாரித்தும அணை

த்தும் தானெனைக் கண்டும் செய்ததுமன்றி, திருமணம் பேணத்துக் காக்கவுங் கருத்துறும்போலுமென வினைமுடிவு செய்க. (இ)

திருக்கோவையார் கூடுக-ம் செய்யுள்.

உண்மகிழ்ந்துரைத்தல்.

உள்மகிழ்ந்துரைத்தலென்பது—பொருண் முடித்து இளைஞ ரெதிர்கொள்ள வந்த பகுத்தலேமகன், தலைமகளுடன் பள்ளியிட த்தழுயிருந்து, இம்மரீனைப் பிரித்து பொருள்தேட யான் வெய்ய சுரஞ் சென்ற துன்பமெல்லாம் இவள் கொங்கைகள் என்னுறுப்புக்க ளிடை மூழ்க இப்பூவணமே யணையாமுன்னம் துவள்வுற்றதென னைத் தன்னுள்ளே மகிழ்ந்து கூறுகிற்றல். அதற்குச் செய்யுள்:

மயின்மன்னு சாயலிம் மானைப் பிரிந்து பொருள்வளர்ப்பான்
வெயின்மன்னு வெஞ்சுரஞ் சென்றதெல் லாம்விடை யோன்பிலியூர்க்
குயின்மன்னு சொல்லிமென் கொங்கையென் னங்கத் திடைக்குளிப்
துயின்மன்னு பூவணை மேலணை யாமுன் றுவளுற்றதே. [பத்

பெருநிதி யோடு நிருமனை புகுந்தவன்
வளமனைக் கிழத்தியோ டளமகிழ்ந் துரைத்தது.

(ப-ரை.) மயில் மன்னு சாயல் - மயில்போலு மென்மையை யுடைய, இ மானை பிரிந்து - இந்த மானைப்பிரிந்து, பொருள் வளர்ப் பான் - பொருளை யீட்டுதற்கு, வெயில் மன்னும்-வெயில் நிலைபெற்ற, வெம் சுரம் சென்றது எல்லாம்-வெய்யசுரத்தைச் சென்ற துன்பமெ ல்லாம், விடையோன் - விடையையுடையவனது, புலியூர் - புலியூ ரிடத்துளளாகிய, குயில் மன்னு சொல்லி - குயிலோசைபோலுஞ் சொல்லியுடையாளுடைய, மெல் கொங்கை - மெல்லிய கொங்கை கள், என் அங்கத்திடை குளிப்ப-என்னுறுப்புக்களிடையே மூழ் கும் வகை, துயில் மன்னு - துயினிலேபெறும், பூவணைமேல்-பூவணை யிடத்து, அணையாமுன் - அனைவதன்முன்னம், துவளுற்றது-மாய் ந்தது, எ - று.

(வி-ரை.) மான்-ஆகுபெயர். வளர்ப்பான் என்பதில் பான் செய வெனும் வாய்பாட்டி வினையெச்சம். ஈட்டல்-சம்பாதித்தல். விடை-இடபம். விடையோன் - இடபவாகனன் (சிவபெருமான்). வியாக்கி பாதர் பூஜித்த தலமாதலின் சிதம்பரம் புலியூர் எனப்பட்டது. குளித் தல் - அழுந்தல் எனினுமாம். அங்கம் என்றது மார்பு முதலிய வுறுப் புக்களை. பூவணை - மலர்ச்சேக்கை. துவளல் - அழிதல்.

நேரிசையாசிரியப்பா.

நுனிக்கவி னிறைந்த திருப்பெரு வடிவின
ளுயிர்வைத் துடல முழன்றன போல
நெடியபொரு ளீட்ட நிற்பிரிந் திறந்து
கொன்றுண லஞ்சாக் குறியினர் போகுங்
கடுஞ்சுரந் தந்த கல்லதர் வெப்பந்
தேவர் மருந்துந் தென்றமிழ்ச் சுவையு
மென்னுயிர் யாவையு மிட்டடைத் தேந்திக்
குருவியுங் குன்றுங் குரும்பையும் வெறுத்தநின்
பெருமுலை முழ்கவென் னுளத்தினிற் றொடாமுன்
விழ்சுற் றெழுக்கிய பராரைத் திருவடக்
குளிர்நிழ லிருந்து குணச்செயன் மூன்று
முடலொடு படரு நிலைநிழல் போல
நீங்காப் பவத்தொகை நிகழ்முத னுன்கு
முடனிறைத் தொழியா வட்பகை யைந்து
மதினுரிற் பழித்த வடிவிரு மூன்று
மணுகா தகற்றிப் பணிமுனி நால்வர்க்
கறமுத னுன்கும் பெறவருள் செய்த
கூடற் பெருமா னீடருண் மூழ்கி
யிருபத முள்வைத் திருந்தவர் வினைபோம்
போயின தூணிலி னோக்கி
யேகின வெனக்கே யற்புதத் தருமே.

நுனிக்கவினிறைந்த - அற்புதத்தருமே. பதந் - பொருள் வயிற்பிரிவு நுறை - உண்மயிழ்ந்துரைத்தல்.

நுனிக்கவி னிறைந்த திருப்பெரு வடிவினள்.

(1—வது வரி.)

(ப-ரை.) நுனி கவின் - (உணர்வுடையோர்) நுனிக்கத்தக்க அழகு, நிறைந்த-குறைபடாத, திரு பெரு வடிவினள்-திருமகளினு மிக்க வடிவையுடையாய்.

(வி-ரை.) நுனித்தல்-ஆராய்தல். வடிவினன் - அண்மைவிளி.

'உயிர்வைத்து' என்ப முதல் 'பிரிந்திறந்து' என்பதுவரை.
(2—3 வரிகள்.)

(ப-ரை.) உயிர் வைத்து - உயிரை யோரிடத்தேவைத்து, உடலம் - தேகமானது, உழுன்றனபோல - தனியே நிகர்த்தாற்போல, கெடு பொருள் - பெரிய பொருளை, எட்ட - சம்பரிக்கும் பொருட்டு, நின் பிரிந்து இறந்து - நின்னைவிட்டுப் பிரிந்துபோய்.

(வி-மை.) உடலுட்-ஒருபெயர். இதில் அம் சாரியை. இறத்தல்-போதல்.

'கொன்று' என்பதுமுதல் 'வெப்பம்' என்பதுவரை.
(4—5 வரிகள்.)

(ப-ரை.) கொன்று - (உயிர்களைக்) கொன்று, உணல் அஞ்சா - உண்ணுதற்கு அச்சப்படாமையாகிய, குறியினர்-குணமுடையார் (பாவிகள், போகும்-செல்லுமிடமாகிய, கடு சுரம் தந்த-கொடிய பாலையுண்டான, கல் அதர் வெப்பம் - கல்வழியின் வெம்மையானது.

(வி-மை.) அஞ்சாமை அஞ்சா என ஈறு தொகுத்தது, "பொய்யா விளக்கு" என்புழிப்போல. அதர்-வழி.

'தேவர்' என்பதுமுதல் 'தோடாமுன்' என்பதுவரை.
(6—9 வரிகள்.)

(ப-ரை.) தேவர் - தேவருண்ணுகின்ற, மருந்தும்-அமிர்தமும், தென் தமிழ் சுவையும் - இனிமையுள்ள தமிழின் மதுரமும், என் உயிர் யாவையும் - என்னுயிரெல்லாமும், இட்டு அடைத்து எந்தி - தமக்குள்ளே யடைத்துவைத்து நிறுமாந்து, குருவியும் - சக்கரவாகப் பறவையையும், குன்றும் - மலைகளையும், குரும்பையும்-இளநீரையும், வெறுத்த-கோபித்த, நின் பெரு முலை - நினது பெரிய தனங்களில், மூழ்க - மூழ்குதற்கு, என் உளத்தினில் - என் மனத்தே, தொடாமுன் - நினைப்பதற்கு முன்னே.

(வி-மை.) எந்தல்-இறுமாத்தல். தனத்துக்குவமையாகப் புணர்க்கப்பட்டமையால் குருவியென்ற தீண்டிச் சக்கரவாகப் பறவையைக் குறித்தது. தொடல் - நினைத்தல்.

'வீழ்' என்பதுமுதல் 'நிலநிழல்போல' என்பதுவரை.
(10—12 வரிகள்.)

(ப-ரை.) வீழ்-விழுதுகளே, சுற்று ஒழுக்கிய - சுற்றிலுமிறக்கிய, பரு அரை-பருமையான அடியுள்ள, திரு வடம் - அழகாகிய கல்லால

மரத்தின், குளிர் நிழல் இருந்து - குளிர்ந்த நிழலின்கண ருருமூர்த்த மாக விருந்தருளி, குணச்செயல் மூன்றும - இராசத முதலிய முக் குணசெய்கைகளும், உடலொடு படரும் - உடலோடு செல்கின்ற, நிலைநிழல்போல - நிழலின் தன்மைபோல.

(வி-ரை.) ஒழுக்கல் - இறக்கல். ஆரை - அடிமரம். வடம்-வட சொல்; ஆலமரமென்பது பொருளாயினும் ஈண்டைக்கேற்பக் கல் லாலமரமென் றுரைக்கலாயிற்று; "கல்லா னிழன்மலே, வில்லா ருளிய, பொல்லா ரடிமலர், நல்லார் புனைவரே" என்றார் மேலோரும்.

'நீங்கா' என்பதுமுதல் 'அணுகாதகற்றி' என்பதுவரை.

(13—16 வரிகளை.)

(ப-ரை.) நீங்கா - (தம்மைவிட்டு)நீங்காத, பவம் தொகை - பிற விக் கேதுவாகிய வினைக்கூட்டம், நிகழ் முதல் - நிகழ்தற் காதாரமா யை, நான்கும் - மனமுதலிய நான்கும், உடன் நிறைச்து-தம்முடன் அநாதியாயிருத்து, ஒழியா-நீங்கற்கரிய, உள் பகை ஐந்தும்-உட்பகை யாகிய ஆவாணமைந்தும், மதிஞரின்-அறிஞரால், பழித்த-பழிக்கப் பட்ட, வடி இருமூன்றும்-காமமுதலிய குற்றங்களாறும், அணுகாது அகற்றி - தம்மை நெருங்காமற்றூரத்தி.

(வி-ரை.) பவம்-வடசொல், பிறப்பு என்பது பொருள். முதல்-ஆதாரம், காரணம் எனினுமாம். மனமுதலிய நான்கு என்றது மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்பவற்றை. ஆவாணம் - மறை ப்பு. காமமுதலிய குற்றங்களாறு என்றது, காமம் க்ரோதம் லோ பம் மோகம் மதம் மத்ஸரம் என்பவற்றை.

'பணி' என்பதுமுதல் 'வினைபோல்' என்பதுவரை.

(16—19 வரிகள்.)

(ப-ரை.) பணி-(தன்னை) வணக்கப்பெற்ற, முனி நால்வர்க்கு-சனகாதி நான்கு பிரமருஷிகட்கும், அறமுதல் நான்கும் - அறமுத லிய புருடார்த்த நான்கையும், பெற-(அவர்கள்) அடையுமாறு, அருள் செய்த - சொல்லாமற் சொல்லியருளிய, கூடல் பெருமான்-மதுரை நாயகனது, நீடி அருள்-அழிவில்லாத திருவாசமுத்திரத்தில், மூழ்கி-முழுகி, இருபதம் - (அவனது) இரண்டு திருவடிகளோடு, உள் வைத்து-உள்ளத்திலிருத்தி, இருந்தவர் - சிவாநுபூதியிலிருந்தவர்க ளுடைய, வினைபோல் - வினை ஒழிந்தாற்போல.

(வி-மை.) சனகாதி நான்கு பிரம விருடிகளாவார்:-ஸநகர், ஸநந்தனர், ஸநத்குமாரர், ஸநத்ஸுஜாதர் என்பவர். அறமுதலிய புருடார்த்தம் நான்காவன: அறம் பொருள் இன்பம் வீடு என்பன. சொல்லாமற் சொல்லல் - கைகாட்டல். "கல்லாலி னீதறனி லொருதல் வர்க்கும், கடவுளரியுணர்த்தியதுங் கைகாட்டென்றுற்,சொல்லாலே சொலப்படுமோ சொல்லுந் தன்மை, தருப்புயற்நிக கடல்கடக்குந் தணிபே யன்றே." "கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்க முதற் கற்ற கேள்வி, கல்லார்க ளுவ்வருக்கும் வாக்கிறந்த பூண மாய் மறைக்கப் பாலாய், எல்லாமா யல்லவுமா யிருந்தென்றை யிருந்தபடி யிருந்து காட்டிச, சொல்லாமற் சொன்னவரை நினையாம னினைந்துபவத் தொடக்கை வெல்வாம்" என்றார் பிறரும்.

'போயின' என்பதுமுதல் 'தருமே' என்பதுவரை.

(20—21 வரிகள்.)

(பதவுரை) போயின - நீங்கிப்போன, தினைவினை - விளைவை, நோக்கி - ஆராயுமிடத்து, எனின எனக்கே - பொருண்மேற் சென்ற வெனக்கே, அற்புதம் தரும்-அதிசயத்தைத் தராகிற்கும், எ - று.

(வி-மை.) நோக்கி என்பது வினையெச்சத்திரிபு. தினைவு - விளைவு.

திருப்பெரு வழிவினளே! நிற்பிரிந் நிறந்துபோகுங் கடுஞ்சுரக் தந்த கல்லதர் வெப்பமானது (நின்பெருமூலை மூழ்க வென்னுளத்தினிற் றெடராமுன் கூடற்பெருமா னீடருண்மூழ்கி யிருபத மூள்வைத் திருந்தவர் வினைபோற்) போயின தினைவினை நோக்கி, எனின வெனக்கே யற்புதந் தருமென வினைமுடிவு செய்க. (இசை)

திருக்கோவையார் ஈகூக-ம் செய்யுள்.

புனலாட்டுவித்தமைகூறிப்புலத்தல்.

புனலாட்டுவித்தமை கூறிப் புலத்தலென்பது:— அணைத்த வழி யூடானின்ற தலைமகன், ஊடறீராகின்ற தலைமகளோடு, இவர் செய்த பிழையெல்லாம் பொறுக்கலாம், பலருமறிய வொருத்தியைப் புனலாட்டுவித்து அது செய்யாதார்போல என் மனையின்கணிவர் வந்து நிற்கின்றவிது எனக்குப் பொறுத்த லரிதெனத் தணிக்கத் தணியாது, பரத்தையைப் புனலாட்டுவித்தமை கூறிப் புலவாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

தொத்தார் நறுங்கொன்றைச சித்றம் பலவர் திலலைகமோர்
பததார் விரலியைப் பாயபுனலாட்டிமன் பாவியேற்கு
வததார் பரிசுமன நுயநிறகு மாறென் வளமனையிற்
கொததார் தடநதோள் விடஙகா லயிற்படைக் கொற்றவனே.

ஆஙகதறுக் கழுக்கமெய்தி
வீஙகுமெனமூலை விட்டுரைத்தது.

(பொ-ரை) கொதது ஆர்-கொத்துமாலை நினறநத, தடம் தோள்-பெரிய தோளினையும், விடம் கால்-நஞ்சைக்காலுர, அயில் படை-கூரிய படையினையுமுடைய, கொற்றவர்-தலைவர், பாவியேற்கு-தீவினையேற்கு, வந்தார்-வநது, என் வளமனையில் நிற்குமாறு-எனது வளமனையில் நிற்கின்றபடி, பதது ஆர்-பதுபயினற, ஓர் விரலியை-விரலாலொருதநியை, செம்தார்-செயயதாராகிய, நறுங்கொன்றை-நறிய கொனறைப்பூவினையுடைய, சிற்றம்பலவர்-சிற்றம்பலவரது, தில்லைநகர்-தில்லையாகிய நகர் (வரைப்பில்), பாய-பாய்நத, புனல் ஆட்டி-புனலே யாட்டுவித்து, வநதார-(வெளிப்படத் தவறுசெய்து) வநதார், பரிசும் அன்றுய்-(சிலர் நிற்கும) பரிசுமன்றுய், (மனநதவறு செய்யாதார் வநது வநது நிற்குமாறு வநது நின்றுராயின், அது பொறுத்தலரிது), எ-று.

(வி-ரை.) கொத்து கொந்து என மெலித்தலாயிற்று. தடம்-ம்லேயுமாம். காலல்-உமிழ்தல். படை-ஆயுதம், படைத்தற்குரியது. படைததல்-கொல்லுதல். வநதார்-வநது என்னும் பொருடரலால் முற்றெசசம். வளம்-செல்வம் பயிலல்-பழகல் (ஆடல்). பததார் விரலியென்றது பாத்தையை. நறிய-மணமுள்ள. புனலாட்டல்-நீராட்டல்.

நேரிசையாசிரியப்பா.

கொன்றையக் துணரிற் செவ்வழி குறித்தும்
வாலுழை பெருக்கில் வளருழை பாடியுங்
கூவிளங் கண்ணிபிற் குலக்கொ முரற்றியும்
வெண்கூ தளத்தின் விளரிகின் றிசைத்தும்
வண்டுந் தேனு ஞிமிறுஞ் சுரும்பு
முமிழ்மற வருநதி யுறங்குசெஞ் சடையோன்
மதுமலர் பறித்துக் திருவடி நிறைத்த
நான்மறைப் பாலனை நலிந்துயிர் கவருங்
காலனைக் காய்ந்த காலினன் கூடற்

திருமருங் கணைந்து வருபுனல் வையை
வரைபுரண் டென்னத் திரைநிரை துறையகத்
கணைக்கதுத் தேக்கிய வரும்புமிழ் முலையோண்
மதகுதற் பெருமதி மலர்முகத் தொருத்தியை
யாட்டியுள் மணைத்துங் கூட்டியுங் குலவியு
மேந்தியு மெடுத்து மொழுக்கியு மீர்த்து
மூழுக்கியுந் தடுத்தியு முலையொளி நோக்கியும்
வினிமொழி யேற்றும் விதலையிற் றினைத்தும்
பூசியும் புனைந்தும் பூட்டியுஞ் சூட்டியு
நிறுத்திய நிறைத்து நெறித்துஞ் செறித்து
மெழுதியுந் தப்பிய மியைத்தும் பிணித்துங்
கட்டியுங் கலத்தியுங் கமழ்த்தியு மறைத்துச்
செய்தன வெல்லாஞ் செய்யலர் போலவென்
னெட்டிலை பொலிந்தபொன் னிறைதிரு வுறைபுளிற்
பாசடைக் குவளைச் சூழன்மணக் காட்டினைக்
கருவரிச் செங்கண் வராலினங் கலக்க
வெரியலர் முண்டகத் தடவிதிக் கெறிய
வெள்ளுடற் கருங்கட் கயனிரை யுகைப்ப
மரகதப் பன்னத் தாம்பலங் குப்பையைச்
சொரியெயிற்றுப் பேழ்வாய் வாளைகடு வைப்பப்
படிந்துசே டெறியுஞ் செங்கட் கவரியு
மலைசூழ் கிடந்த பெருங்குலப் பரபபை
மலைகொடு மலர்த்த முதுநீர் வெளளமு
மிடைந்துவயல் திரிந்து முதுகுசனிர் துடைந்து
நிறியோன் செருவென முரியப் போகி
யுழவக் கணத்தைக் குலக்குடி பருத்தும்
பெருவீ ரூரர் நிறைநீர் விடுத்துச்
செறித்த தென்னெனக் கேட்டி
மறிந்துழை விழித்த மறிநோக் கினளே.

சொன்றையந்துணரில் - மறிநோக்கினளே. பந்தி - பரத்தை யிற்பிரிவு. துறை - புனலாட்டுவித்தமைகூறிப் புலத்தல்.

மறிந்துழை விழித்த மறிநோக் கினளே.
(30—வது வரி.)

(பதவுரை) மறிந்துழை - மறிபட்ட இடத்தே, விழித்த - விழிக்கின்ற, மறி நோக்கினளே - மான்போலும் பார்வையினையுடையாய.

(விளக்கவுரை.) மறிந்தவுழை மறிந்துழையென நிலைமொழியீற்றகரம் தொகுத்தது. மறிபடல் - வலையால் தடுக்கப்படல்.

'பாசடை' என்பதுமுதல் 'கலக்க' என்பதுவரை.
(24—25 வரிகள்.)

(பதவுரை.) சுழல் - சுற்றுகின்ற, மணம் - மணம் பொருந்திய, பாசடை-பசியவிலைகளையுடைய, குவளைக்காட்டினை - குவளை மலர்த்திரளை, கரு வரி - கரிய வரியினையும், செம கண் - சிவப்பாகிய கண்களையுமுடைய, வரால் இனம்-கூட்டமாகிய வரால்கள், கலக்க-கலக்காநிற்கவும்,

(விளக்கவுரை.) குவளை - ஆகுபெயர். வரி - கிற்று.

எரியலர் அடவி' என்பதுமுதல் 'உகைப்ப' என்பதுவரை.
(26—27 வரிகள்.)

(பதவுரை.) முண்டகத்து - தாமரைகளின், எரி அலர் அடவி - எரிபோல மலர்கின்ற பூத்திரளை, திகழ எறிய-திசைதோறும் விளங்க வீசுதலாலே, வெள் உடல் - வெள்ளிய வுடலையும், கருமணி - கரிய கண்ணையுமுடைய, கயல் நிரை - சேனமீன கூட்டம், உகைப்ப - பாயாநிற்பவும்.

(விளக்கவுரை.) எரி - நெருப்பு. அடவி - காடு, அது இங்குத் திரளுக்காயிற்று. உகைத்தல் - பாய்தல்.

'மரகதப்பன்னத்து' என்பதுமுதல் 'துவைப்ப
என்பதுவரை.
(28—29 வரிகள்.)

(பதவுரை.) மரகதப்பன்னத்து - மரகதமணிபோன்ற இலைகளோடு, ஆம்பலங்குப்பையை - ஆம்பற்பூத்திரளை, சொரி எயிறு - சொரிந்தாலொத்த பற்களையும், பேழ் வாய் - பெரிய வாயையுமுடைய, வாளைகள் - வாளைமீன்கள், துவைப்ப-பாய்ந்து துவைக்காநிற்கவும்.

(விளக்கவுரை) மரகதமணி - பச்சைமணி. ஆம்பல் - ஆகுபெயர். துவைத்தல் - மிதித்தல்.

'படிந்து' என்பதுமுதல் 'முறியப்போகி' என்பதுவரை.
(30—34 வரிகள்.)

(ப-ரை.) படிந்து - (நீரில்) குளித்து, சேடு எறியும்-சேறாக்கு கின்ற, செம் கண் - சிவப்பாகிய கண்ணையுடைய, கவரியும் - எருமை களும், மலை சூழ் கிடந்த-மலை சூழ்ந்திருந்தாலொத்த, பெரு - உயர் வாகிய, கூலப்பரப்பை-கரையின் பரப்பை, மலைதொடு-தான் பேர்த் துக்கொண்டு வரும் மலைகளால், மலைந்த - உடைக்கின்ற, முதுநீர் வெள்ளமும் - கடல்போலு நீர்ப்பெருக்கும், பிணைந்து - நெருங்கி, வயல் திரிந்து - வயல்கள் மாறுபட்டு; முதுகு சரிந்து உடைந்து-அவ் வரப்பு மேடுகள் சரிந்துடைபட்டு, சிறியோன் - குறுநிலமன்னன் செய்யும், செரு என - போர்போல, முறியப்போகி - முறியுமாறு சென்று.

(வி-ரை.) படிதல் - குளித்தல். கூலம் - கரை, அது குலம் எனக் குறுகிற்று. மலைதல் - உடைத்தல். முதுநீர்-கடல். பிணைதல்-நெருங்குதல். திரிதல் - மாறுபடல்.

'உழவக்கணத்தை' என்பதுமுதல் 'பெருநீரூர்' என்பதுவரை.
(35—36 வரிகள்.)

(ப - ரை) உழவக்கணத்தை - உழவர் கூட்டங்களே, குலக் குடி புருத்தும் - செய்கையினிடத்துக் குடிபோகச் செய்கின்ற, பெரு நீர் ஊரர்-பெருமைத் தன்மையுள்ள காட்டையுடைய தலைவர்.

(வி-ரை.) கணம் - கூட்டம். குலம் - செய்கை. நீர்-தன்மை. ஊர் என்றது ஈண்டு நாட்டுக்காயிற்று.

'கோன்றையந்துணரில்' என்பதுமுதல் 'செஞ்சடையோன்' என்பதுவரை.

(1—6 வரிகள்.)

(ப-ரை.) கொன்றையந்துணரில்-கொன்றைப் பூங்கொத்தில், செவ்வழி குறித்தும்-செவ்வழியென்னும் பண்ணை இசைத்தும், வால் உழை எருக்கில் - வெண்மையான எருக்கமலரிடத்தே, வளர் உழை பாடியும் - உழையென்னும் பண்ணை மிகப்பாடியும், கூவிளம் கண் ணியில் - வில்வமாலையில், குலக்கிளை முறற்றியும் - சிறப்புள்ள கிளை யென்னும் பண்ணைப்பாடியும், வெள் கூதளத்தில்-வெள்ளிய கூதள மலரில், விளரிகின்று இசைத்தும் - விளரியென்னும் பண்ணை ஒழி வறப்பாடியும், வண்டமை தேனுளி றிறம் சுரும்பும் - ஆகிய இக்கால்

வகை அளிக்குலம், உமிழ் நறவு அருத்தி - அம்மலர்க ளுமிழ்கின்ற மதுவையுண்டு, உறங்கும் - களிகூர்தற் கிடனுகின்ற, செஞ்சடை யோன் - செஞ்சடையன்.

(வி-மை.) கொன்றையந்தணர் என்பதில் அம் சாரியை; அழ கெனினுமமையும். தணர் - பூங்கொத்து. செவ்வழி-ஓர்பண். எரு க்கு - ஆகுபெயர். உழை - ஓர்பண். இளை - ஓர்பண். வண்டு, தேன், ஈ முதலியன சுருமபு என்பன வண்டின் வகைகள். அளிகுலம்-வண்டின் கூட்டம். நறவு - தேன். மதுவும் அது.

'மதுமலர்பறித்து' என்பதுமுதல் 'காலினன்' என்பதுவரை.
(7—9 வரிகள்.)

(ப-மை.) மது மலர் பறித்து-தேனுள்ள மலர்களைக் கொய்து, திருவடி நிறைத்த - திருவடியின்கண் ணருச்சித்து நிறைத்த, நான் மறை பாலனே - வேதியச் சிறுவனே, நலிதல - வருத்தி, உயிர் கவ ரும் - அவனுயிரைக் கவர்வதை, காலனே - இயமனே, காய்ந்த - சின ந்த, காலினன் - திருவடியுள்ள கடவுளது.

(வி-மை.) பறித்தல் - கொய்தல். நான்மறைப் பாலன் என்றது மார்க்கண்டனே. நலிதல் - வருத்தல்.

'கூடல்' என்பதுமுதல் 'முகத்தொருத்தியை' என்பதுவரை.
(9—13 வரிகள்.)

(ப-மை.) கூடல்-மதுரைநகரின், திரு மருங்கு அணைந்து-செல்வ மிக்க அக்நகரி னருகணேந்து, வரும் - பெருகிவருகை, புனல் - நீர் நிறைந்த, வையை - வையையாறியின், வரை புரண்டென்ன - மலை புரண்டாற்போன்ற, நிரைநிரை - நிரையாகிய அலைகள்வீசும், நிறை யகத்து - நிறையிளிடத்தே, அணைந்து எடுத்து வந்திய - அண்ணுந் துயர்தோங்கிய, அருப்பு-அரும்பு முகிழ்த்தாலொத்த, முகிழ் மூலை யோள் - குவிந்த மூலையையுடையாளாகிய, மதி நுதல் - இளமதி போன்ற நெற்றியையும், பெருமதி - நிறைமதிபோன்ற, மலர் - பர ந்த, முகத்து ஒருத்தியை - முகத்தையுமுடைய வொருத்தியை.

(வி-மை.) மருங்கு - அருகு. திரு - செல்வம். அண்ணுந்து என்பது அண்ணாந்து எனக் குறுகிற்று. அண்ணுத்தல் - நிமிர்தல். முகிழ்த்தல்-குவிதல். பெருமதி-பூர்ணசந்திரன். இளமதி-பூர்வபக்ஷத் தஷ்டமீ சந்திரன்.

'ஆட்டியும்' என்பதுமுதல் 'செய்யலாபோல' என்பதுவரை.
(14—22 வரிகள.)

(ப-ரை.) ஆட்டியும் - நீராடச்செய்தும், அணைத்தும்-தோளோர் டணைத்தும், கூட்டியும் - தோழிகளோடு சேர்த்தும், குலவியும் - கொண்டாடியும், எத்தியும்-தாங்கியும், எடுத்தும்-நாக்கியும், ஒழுக்கியும் - நடத்துவித்தும், ஈர்த்தும் - இழுத்தும், முழுக்கியும் - நீரின் முழுக்கியும், தபுத்தியும் - மேலேயெடித்தும், மூலியொளி - மூலியி னிறமாப்பை, நோக்கியும் - பார்த்தும், விளிமொழி - தன்முகமாக வழைக்கும் விளிமொழியை, ஏற்றும்-காதாற்கேட்டும், விதலையில் - அவள் சூளினால் நடுங்கும்போது, இணைத்தும் - கட்டியணைத்தும், பூசியும் - சந்தன முதலிய சாந்தங்களைப் பூசியும், புனைதும் - மாலை அணிந்தும், பூட்டியும் - பூணதற்க அணிகளைப் பூட்டியும், சூட்டி யும - சூட்டத்தக்கவற்றைச சூட்டியும், நிறுத்தியும் - ஊடாவகை நிறுத்தியும், நிறைதும் - திருத்திசெய்தும், நெறித்தும் - பெருமித மூற்றும், செறித்தும் - நெருக்கியும், எழுதியும்-தொய்யிலெழுதியும், தப்பியும் - எழுதுங்கால் தப்பியும், இயைத்தும் - பின்னும் திருகி யும், பிணித்தும் - கச்சைத்தனைதில் விசித்தும், கட்டியும் - துகிலை யுடித்தும், கலத்தியும் - கலப்பூறத்தியும், கமழ்த்தியும்-பனிநீர் முக வியவற்றால் பரிமளிக்கப்பண்ணியும, மறைத்து - மறைவாய் செய தன எல்லாம் - தாம்செயத குற்றங்களெல்லாம், செய்யலர்போல - செயயாதவர்போல.

(வி-ரை.) ஒழுக்குதல் - நடத்தல். ஈர்த்தல் - இழுத்தல். தபுத் தல் - மேலெடித்தல். இறுமாப்பு - நிமிர்வு. விளிமொழி - அழைக் குஞ் சொல். விதலை - நடுக்கம். அணிகள் - ஆபாணங்கள். தொய் யில் - சந்தநக்கோலம். விசித்தல் - கட்டல். கலத்தல் - கலக்கப் பண்ணுதல்.

'என்' என்பதுமுதல் 'கேட்டி' என்பதுவரை.
(22—23, 36—37 வரிகள்.)

(ப-ரை.) என் - எனது, பொன் நெடி இலை பொலிந்த - நெடிய பொற்றகட்டால் விளங்கிய, திருநிறை - எல்லா வளத்தாலும் நிறை ந்த, உறையுளில் - மாளிகையினின்றும், நிறை நீர் விடுத்து - மேன் மைக்குணத்தைக் கைவிட்டு, செறிந்தது - நெருங்கி வந்தது, என் எனை - யாது காரணமென்று, கேட்டி - நீ கேட்பாயாக, எ-று.

(வி-ரை.) நிறை நீர் - நிறைகுணம் (மேன்மைக்குணம்).

மறிகோக்கினளே ! பெருநீரூர், செஞ்சடையோன் காலினன் கூடற் நிருமருங்கணேத்து, வருபுனல் வையகத் துறையதத்து, மலர் முகத் தொருத்தியை மறைத்துக் செய்தனவெல்லாம், செய்யலர் போல வென் னுறையுளிற் செறிந்த தென்னெனக் கேட்டி என வினைமுடிவுசெய்க. (நிடு)

திருக்கோவையார் கூளஉ-ம் செய்யுள்.

தன்னே வியந்துரைத்தல்.

தன்னே வியந்துரைத்தலென்பது — சேடிமார் பின்வருந்தாது முன்னுறக் காப்பேமென்று தம்முட் கூறுவதனைக் கேட்டு, இவனே அமரப் புல்லும் பரத்தையாமாட்டி இவனருள் செல்லாமல் விலக்கே ஞயின், என்மாட் டிவனேத்தத் தழாகின்ற இவன் மனைக்கிழத்தியா கின்றேனெனப் பரத்தைத் தலைவி, தன்னே வியந்து கூறுகிற்றல். அதற்குச் செய்யுள்:—

கனலூர் கணேதுணே பூர்கெடச் செற்றசிற் றம்பலத்தெம்
மனலூர் சடையோ னருள்பெற் றவரின மாப்புல்லு
மினலூர் நகையவர் தப்பா லருள்விலக் காவிடின்யான்
புனலூ ரனேப்பிரி யும்புன லூர்கண்ணப் பூங்கொடியே.

அரத்தித் துவர்வாய்ப் பரத்தைத் தலைவி
முனிவு தோன்ற னளிபு கன்றது.

(ப-ரை.) கனல் ஊர் - கனல்பாக்த, கணே - கணேயான், துணே ஊர் கெட - ஒத்த வூர்கெட, செற்ற - வெருண்ட, சிற்றம்பலத்து - சிற்றம்பலத்தின்கணுளஞகிய, எம்-எம்முடைய, அனல் ஊர் சடை யோன் - அனலேயாக்குஞ் சடையையுடையவனது, அருள் பெற் றவரின் - அருளேப்பெற்றவர்போல, அமர புல்லும் - (செம்மார்து அவனேச்) செறியப்புல்லாகின்ற, மின்னல் ஊர் - ஒளிபரக்த, நகை யவர் - நகையையுடையவர், தம்பால் - தம்மிடத்து, அருள் விலக்கா விடின் - அவன் அருள் செல்லாமை விலக்கேனுயின், யான் புனலூ ரனே-யான் புனலூரனே, பிரியும் - பிரிக்திருக்கும், புனல் ஊர் கண் - புனல் பரக்குங் கண்ணையுடைய, அ பூங்கொடியே - (அவன் மனைக் கிழத்தியாகிய) அப்பூங்கொடியே யாகின்றேன், எ-று.

(வி-ரை) கனல் - நெருப்பு. கணே-அம்பு. துணே-ஒப்பு. ஊர்-என்றது முப்புரத்தை. அனல் - நெருப்பு. மின்னல் மினல் என விகாரமாயிற்று. நகை - பல். புனல் - நீர். பூங்கொடி - அன்மொழித் தொகை.

நேரிசையாசிரியப்பா.

விடங்கொதித் துமிழும் படங்கெழு பருவாய்க்
கண்டன்முண் முனீத்த கடியெயிற் றரவக்
குழுவினுக் குடைந்து குளிர்மதி யொதுங்கத்
தெய்வப் பிறையிருந்த திருநுதற் பேதையைக்
கண்டுகண் டரவ மயிலெனக் கலங்க
நெடுஞ்சடைக் காட்டினை யடுத்துக் கொழுந்தெனத்
தலையே தலையா நகுதலை தயங்க
வணிதலை மாலையை நிறைமதித் திரளெனப்
புடைபுடை யொதுங்கி யரவுவாய் பிளப்ப
வொன்றினுக் கொன்று துன்றிய நடுக்கொடு
கிடந்தொளி பிறழ நெடுஞ்சடைப் பெருமான்
படைநான் குடன்று பஞ்சவற் றுரந்து
மதுரை வவ்விய கருநடர் வேந்த
னருகர்ச் சார்ந்துகின் றரன்பணி யடைப்ப
மற்றவன் றன்னை நெடுத்துயில் வருத்தி
யிறையவன் குலத்து முறையினை மையிஞற்
குருதித் தாரை கல்லெடு பிறங்க
மெய்யணி யளறுக் கைம்முழந் தேய்த்த
பேரன் புருவப் பசுகரா வல்லை
யுலகினிற் றமது முக்குறி யாக
மணிமுடி வேணியு முருக்திரக் கலனு
நிலவுமிழ் புண்ணியப் பாணிறச் சாந்தமு
மணிவித் தருளகொடுத் தரச ளுக்கி
யடுமா லகற்றி நெடுநாள் புரக்க
வையக மளித்த மணியொளிக் கடவு
ணெடுமதிற் கூடல் விரிபுனல் வையையுட்
பிடிகுனி செய்யுங் களிறது போல
மயிலெணுஞ் சாய லொருமதி தலையை
மருமமுந் தோளினும் வரையறப் புல்லி
யாட்டுறு மூர் னனபுகொ ணலதகினைப்
பொன்னுல குண்டவர் மண்ணுல கின்பந்

தலைஉடுக் குற்ற தன்மை போல
வொன்றற வகற்றி யுடன்கலந் திலினே
லன்ன வூரணை யெம்மிற் கொடுத்துத்
தேரினுங் காலினு மடிக்கடி கண்டு
நெட்டுயிர்ப் பெறிந்து நெடுங்கணீ ருகுத்துப்
பின்னுந் தரூவ வுன்னுமவ் வொருத்தி
யவளே யாகுவல் யானே தவலருங்
கருநீர்க் குண்டக முடுத்த
பெருநீ ராழித் தொல்லுல குழிக்கே.

விடங்கொதித்துமிழும்-தொல்லுலகுழிக்கே. பந்தி - பரத்தையிற் பிரிவு. துணர - தன்னை வியந்துரைத்தல்.

'விடங்கொதித்து' என்பதுமுதல் 'தொல்லுலகுழிக்கே' என்பதுவரை.

(1—3, 38 - 40 வரிகள்.)

(ப - ரை.) தவல் அரும் - வற்றுதலில்லாத, கரு நீர் - கருநீரை நீராகிய, குண்டு அகழ் உடுத்த - ஆழ்கடலைத் துகிலாயுடுத்த, பெரு நீர் - பரப்பாகிய நீர்மையுள்ள, ஆழி - வட்டவடிவாகிய, தொல் உலகுழிக்கு-பழைமையான இவ்வுலகினிடத்தே, குளிர் மதி-தண்ணிலவான து, விடம் கொதித்து - நஞ்சு கொப்புளித்து, உமிழும்-வெளிப்படுக்கின்ற, படம் கெழு - படமுள்ள, பகு வாய் - பிளவுபட்ட வாயிடத்தே, கண்டல் முள் - தாழை முட்போல், மூனைத்த - அரும்பியுள்ள, கடி எயிறு - கடிக்கும் பற்களையுடைய, அரவக்குழவினுக்கு - பாம்பினத்தை, உடைந்து - அஞ்சி, ஒதுங்க - ஒதுங்கவும்.

(வி-ரை.) தவல் - வற்றல். குண்டு-ஆழம். உடுத்தலென்னும் வினைக்கேற்பத் துகிலாயென்பது வருவிக்கப்பட்டது. உலகுழிக்கு-உருபுமயக்கம்.

'தேய்வப்பிறையிருந்த' என்பதுமுதல் 'உகண்கேலங்க' என்பதுவரை.

(4—5 வரிகள்.)

(ப - ரை.) அரவம் - அப்பாம்பினம், தெய்வப்பிறை இருந்த அழியாத்தன்மையுள்ள, திரு நுதல் பேதையை-நன்னுதற் பிராட்டியை, கண்டு - நோக்கி, மயில் என - மயிலென்று கருதி, உகண். கலங்க - நெளித்து மனங்கலங்கவும்.

(வி-ரை.) தெயவம - தைவிகம் (அழியாததன்மை). உகளல் - தெளிதல்.

'நெடுஞ்சடைக்காட்டினே' என்பதுமுதல் 'தயங்க' என்பதுவரை.
(6—7 வரிகள.)

(பா-ரை.) நகுதலை - நகுவெண்டலையானது, நெடுஞ்சடை காட்டினை - நெடிய சடாடவியை, அடும் - கொல்லுத்தக்க, நீ கொழுநனை என - தனைக்கொழுநன் நீக்கொழுநனென்றெண்ணி, தலை ஏந்தி என - இனி நமக்கிடமேதென்று, அலையா-அலைந்து, தயங்க - தயங்கவும்.

(வி-ரை) சடா அடவி - சடைக்காடு அடுதல் - கொல்லுதல். கொழுநன் - சிவை. தலை - எழுறுரு, இடப்பொருட்டு. அலையா - செயாவெனனும் வாய்பாட்டு வினையெச்சம். தயங்கல்-விளங்கல்.

'அணி' என்பதுமுதல் 'வாய்பிளப்ப' என்பதுவரை.
(8—9 வரிகள.)

(பா-ரை) அரவு - பாம்புகள், அணி - அணியப்பட்ட, தலை மாலையை - பிரமாலையை, நிறை மதி நிரள என-முழுமதிக் குலமென்று சூழ, புடைபுடை யொதுங்கி-பக்கங்களிற் பதுங்கி, வாய் பிளப்பதம் வரையத் திறக்கவும்.

(வி-ரை) ஒதுங்குதல் - பதுங்குதல்.

'ஒன்றினுக்கொன்று' என்பதுமுதல் 'பெருமான்' என்பதுவரை.
(10—11 வரிகள்.)

(பா-ரை.) ஒன்றினுக்கு ஒன்று - (இவ்வாறு) ஒன்றின்பொருட்டு மற்றொன்று, தன்னிய நடுக்கொடு-மிக்க அசசதுடனே, இடந்து-இருக்க, ஒளி பிறழும் - ஒளிமிகுத, நெடுசடை பெருமான் - நெடுஞ்சடையையுடைய பெருமான்.

(வி - ரை) தன்னிய - மிக, இது செய்யியவென்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

'படைநான்கு' என்பதுமுதல் 'அடைப்ப' என்பதுவரை.
(12—14 வரிகள.)

(பா-ரை.) படை நான்கு - நாற்கருவிச் சேனையுடன், உடன்று - போருமுத்தி, பஞ்சவன் தாரதி - பாண்டியனைத் தாரத்தி, மதுரை

வல்லிய - மதுரையைக் கைக்கொண்ட, கருநடர் வேந்தன்-கருநடர் நாட்டரசன், அருகர் சார்ந்து - சமணரைச் சார்ந்து, நின்று - ஆருகதநெறியிலொழுகி, அரன் பணி - சிவபணிவிடையை, அடைப்ப-செய்யாதும் நடித்ததனால்.

(வி-மை.) படை நான்கு - கதம், கஜம், துரதம், காலாள்.

'மற்றவன்றன்னை' என்பதுமுதல் 'பசுக்காவலனை' என்பதுவரை.

(15—19 வரிகள்.)

(ப-ரை.) மற்றவன் தன்னை - அக்கருநாட்டரசனை, நெடு துயில் வருத்தி - நெடுந் தூக்கத்திலிறக்க, இறையவன் குலத்து - அம்மன்னவன் குலத்திலே, முறையர் இன்மையினால் - அரசியற்குரியோ ரில்லாமையால், குருதி தாரை - இரத்தத் தாரை, கல்லொடு பிறங்க - சந்தனக்கல்லிற் பெருகுமாறு, மெய் அணி - சிவபிரான் திருமேனிப் பூச்சாகிய, அளகு-சந்தனக் குழமபாக, முழங்கை தேய்த்த - முழங்கையாற் றேய்த்த, போன்பு உருவம் - சிவநேச வுருவமாகிய, பசுக்காவலனை - சோவைசியாகிய மூர்த்திநாயனாரை.

(வி-மை.) மற்று - அசை. முறையர் - அரசியற்குரியவர். மெய் யணி - ஈண்டைக்கேற்பச் சந்தனப்பூச்சுக்காயிற்று. முழங்கையெனற்பாலது கைமுழம் என முன்பின்னாக மாறிநின்றது.

'உலகினில்' என்பதுமுதல் 'சாந்தமும்' என்பதுவரை.

(20—22 வரிகள்.)

(ப-ரை.) உலகினில் - இவ்வுலகத்தின்கண், தமது - சிவபிரானதது, மூக்குறி ஆக - அடையாள மூன்றும் விளங்குமாறு, மணி முடி வேணியும் - சடைமுடியாகிய அழகிய மகுடமும், உருத்திரக் கலனும் - உருத்திராக்கமென்னு மாபரணமும், நிலவு உமிழ்-சந்திரிகையை விரிக்கின்ற, பால்நிறப் புண்ணியச் சாந்தமும், தூய்மை யாகிய நிறமுள்ள திருநீறும்.

(வி-மை.) புண்ணியச்சாந்தம் - திருவெண்ணீறு.

'அணிவித்து' என்பதுமுதல் 'கடவுள்' என்பதுவரை.

(23—25 வரிகள்.)

(ப-ரை.) அணிவித்து அருள் கொடித்து - அணியும்படியனுக் கிரங்கியருளி, அரசன் ஆக்கி - (மதுரைக்கு) அரசனாகச்செய்து, அடி

மால் அகற்றி - கெடுத்தற்குக் காரணமாகிய ஆருகதசமயக்கத்தைத் தொலைத்து, நெடுநான் புரக்க-பல்லாண்டுகின்று புரக்குமாறு, மையகம்மண்ணுயிர்களை, அளித்த-(புறச்சமயங்களினின்றும்) பாதுகாத்த, மணி ஒளி கடவுள் - மணியுமொளியும்போலுமுள்ளங்களைக் கடவுளது.

(வி-ரை.) அடுதல் - கெடுத்தல். மால் - மயக்கம், அது ஈண்டைக்கேற்ப ஆருகதசமய மயக்கத்தைக்காயிற்று.

'நெடுமதில்' என்பதுமுதல் 'களிறதுபோல' என்பதுவரை.
(26—27 வரிகள்.)

(ப-ரை.) நெடு மதில்-நெடியமதில் சூழ்ந்த, கூடல்-நான்மாடக் கூடலில், விரி புனல் வையையுள் - புனனிறைந்த வையையாற்றில், பிடி குளிசெய்யும்-பெண்யானையை நீராட்டுகின்ற, களிறதுபோலயானைப்பகடுபோல.

(வி-ரை.) பிடி - பெண்யானை. பகடு - ஆண்யானை.

'மயிலெனுஞ்சாயல்' என்பதுமுதல் 'நலத்தினை' என்பதுவரை.
(28—30 வரிகள்.)

(ப-ரை.) மயில் எனும் சாயல் - மயிற்சாயலையும், ஒரு மதிறுதலியை - மதிறுதலையுமுடைய ஒருத்தியை, மருமமும்-மார்பினிடத்தும், தோளினும் - தோளினிடத்தும், வரையற புல்லி - பலகாற்றழுவி, ஊட்டுறும்-தன்னுட னீராடல் செய்வித்த, ஊரன்-தலைவன், அன்புகொள் - அன்பானுகர்ந்த, நலத்தினை - இன்பத்தை.

(வி-ரை.) மதிறுதல்-பூர்வபக்ஷத்து அஷ்டமீசந்திரன்போலும் தேற்றி. வரையற-எல்லையற, இது பலகாற்றழுவி யென்னும்பொருட்டு. நலம் - இன்பம்.

'போன்னுலகு' என்பதுமுதல் 'அவளே யாகுவல்யானே'
என்பதுவரை.
(31—38 வரிகள்)

(ப-ரை.) பொன் உலகு - சுவர்க்கலோகத்தில், உண்டவர் - போகதுகர்ந்தோர், மண் உலகு இன்பம் - மண்ணுலகத்தினின்பத்தை, தலைகெடுக்குற்ற தன்மைபோல - அருவருப்புற்ற தன்மைபோலாமாறு, ஒன்று அற அற்றி - ஒருங்கே நீகருவித்து, உடன் கலந்திலனேல்-அத்தலைவனுடன் கலவேனையின், யானே-நான்ருனே, அன்ன

ஓரளை - அத்தலைவனை, எம் இல் கொடுத்து - எமதில்லின்கண் போக விடுத்து, தேரினும் - சேர்மேற் செல்லுங்கோறாம், காவினும் - சோலை களிற் பாங்கருடன் விளையாடுங்கோறாம், அடிக்கடி கண்டு - இடை விடாமற் கண்டு. கெடவுயிர்ப்பு எறிந்து - பெருமூச்சு விட்டு, கெடுகண் நீர் உகுத்து - கண்ணினிடத்தே மிகவும் நீர்சிந்தி, பின்னும் - மீண்டும், தழுவ - புணர, உன்னும - எண்ணுகின்ற, அவ்வொருதலி - அவ் வொருதலியாகிய, அவளே ஆகுவல் - பொதுமகளேயாகக்கடவ ள.

(வி-ரை.) தலைநடுக்குறல் - அருவருத்தல். கா - சோலை.

(வி-ரை) கெடுஞ்சடைப் பெருமான், வேந்தன் சார்த்தி, பணியடைப்பத் துயில்வருதி, முழங்கை தேய்த்த பசுக்காவலனே மூக்குறியாக வேணியுங் கலனுஞ் சாதனமு மணிவித் தாசனுகளிப், புகழ வளித்த கடவுளது கூடல் வைபையுள், களிபோல மதிறுதலியைப் புல்லி யாட்டுறு மூனது நலததை யகற்றிக் கலதநிலனேல், ஊர னைக் கொடித்துக் கண்டு எறிந்து நீருகுத்துத தழுவ வுன்னுவளே யாகுவது இதனொல்லுலகிலென வினைமுடிவு செய்க. (நிக)

திருக்கோவையார் கூகூசு-ம் செய்யுள்.

புதல்வன்மேல்வைத்துப் புலவிதீர்தல்.

புலவன்மேல்வைத்துப் புலவிதீர்தலே ரீபரு — தனி மொழித்துக் கூடிப் பிரிதலழிப் பினனும் பரதத்தைமாட்டுப் பிரிதனை னென்று கேட்டுப் புலதது வாயின்மறுக்க, வாயிற்கணின்று விளை டாடாநின்ற புதல்வனை பெடித்தணைத்துத தபெலமிட்டு முத்தங கொடுத்து அதுவாயிலாகக்கொண்டு தலைமகன செல்லாநிற்ப, அப் புதல்வனை வாங்கி யணைத்துக்கொண்டு, அவன்வாயிற் றம்பலத தன் மெய்யிற் படுதலான் எல்லார்க்கும் பொதுவாகிய தம்பலத்தைக் கொண்டுவந்தோ நீ யெம்மைக் கொண்டாடுவது, அதுகிடக்க, இதனை நினக்குத் தந்தவாறு சொல்லுவாயாக வெனப் புதல்வன் மேல்வைத்துத் தலைமகள் புலவி தீராகிற்றல். அதற்குச் செய்யுள்:—

கதிர்த்தநகை மன்னுஞ் சிற்றவை மார்களைக் கண்பிழைப்பித்
தெதிர்த்தகெனகு நின்றெப் பரிசளித் தானிமை யோரிறைஞ்சு
மதத்தங் கியகொன்றை வார்சடை யீசர்வண் டில்லேரல்லார்
பொதுத்தம் பலங்கொணர்ந் தோபுதல் வாவெம்மைப் பூரிப்பதே.

புதல்வனது நிறம்புகன்று
மதரரிக்கண்ணி வாட்டநதவிர்ந்தது.

(ப-ரை.) மது கங்கிய - தேன் தங்கிய, கொன்றை - கொன்றைப் பூவையுடைய, வார் சடை ஈசர் - நீண்ட சடையையுடையவீசர், இமையோர் இறைஞ்சும் - இமையோரால் வணங்கப்படும், வண்தில்லை - வளவிய தில்லையிலுளராகிய, நல்லார் - நல்லோர் செல்லார்க்கும், பொது தம்பலம் கொணர்ந்தோர் - பொதுவாகிய தம்பலத்தைக் கொண்டுவந்தோர், புதல்வர் - புதல்வனே, எம்மைப் பூசிப்பது - நீ யெம்மைக் கொண்டாடுவது; (அது நிற்க - இது நினக்குத் தருகின்றவிடத்து நின்றதை), கதிர்த்த - ஒளிவிட்ட, நகை மண்ணும் - முறுவல் பொருந்திய, சிறு அவ்வை மார்களோ - நின் சிறிய அன்னைமாரை, கண் பிழைப்பித்து - கண்ணைத் தப்புவித்து (அவர் ஆணை வண்ணம்), எதிர்த்து - ஒருவாற்றல் நின்னை யெதிர்ப்பட்டு, எங்கு நின்று - எவ்விடத்து நின்று, எப்பரிசு - எவ்வண்ணமிதனை, அளித்தான் - நினக்குத் தந்தான் (நீ யிது சொல்லவேண்டும்), எ-று.

(வி-ரை) கொன்றை - ஆகுபெயர். இமையோர் - தேவர். நல்லார் - மாதர். புதல்வன் - மகன். கதிர்த்தல்-ஒளிசெய்தல், இது, கதிரென்னும் பெயரடியாகப் பிறந்தவினை. முறுவல்-பல்.

நேரிசையாசிரியப்பா.

அடியவ ருளத்திரு ளகற்றலின் விளக்கு
மெழுமலை பொடித்தலி னனறெறு மசனியுங்
கருங்கடல் குடித்தலிற் பெருந்தழற் கொழுந்து
மாவுரி வெளவலிற் றீவிழி கூற்று
மென்னுள மிருத்தலி னிலையுணு ருயிரு
நச்சின கொடுத்தலி னளிர்தரு வைகலுங்
கருவழி நீக்கலி னுயர்நிலைக் குருவு
மிருநில காத்தலின் மதியுடை வேந்து
மாகிய மணிவேற் றேவலங் கொடியோன்
வானக மங்கையு நீண்வரை வள்ளியு
மிருபுற நிழைத்த திருநிழ லிருக்கு
மொருபரங் குன்ற மருவிய கூடற்
பெருந்திரு சடைமிசைச் சிறுபிறை சூடிய
நாயகன் றிருவடி நண்ணலர் போலப்
பொய்பல புகன்று மெய்யொழித் தின்பம்
விற்றுணுஞ் சேரி விடாதுறை யூர

ஞாருணி யொத்த பொதுவாய்த் தம்பல
நீயுங் குதட்டினை யாயிற் சேயாய்
நரம்பெடுத் தமிழும் பெருமுலைத் தீம்பாற்
குள்ளமுந் தொடாது விள்ளமு தொழுகுங்
குகலேவாய் துடிப்பக் குலக்கடை யுணங்கியு
மண்ணுறு மணியெனப் பூழிமெய் வாய்த்தும்
பொலன்மணி விரிந்த வுடைமணி யிழுக்கியுஞ்
சுட்டியுஞ் சிகையுஞ் சோர்ந்துகன் பனித்தும்
பறையுந் தேரும் பறிபட் டணங்கிபு
மறிக்கட் பிணைவின ரிழைக்குஞ் சிற்றிலிற்
சென்றழி யாது நின்றயர் காண்ப
னுறுவது மிப்பய னன்றேற்
பெற்றுவ தென்பா லின்றுநின் பேறே.

அடியவருளத்திருள் - இன்றுநின்பேறே. பதந்தி - பாத்தையிற் பிரிவு. நுறை - புதல்வன்மேல்வைத்துப் புலவிதீர்தல்.

'அடியவர்' என்பதுமுதல் 'அசனியும்' என்பதுவரை.

(1—2 வரிகள்.)

(ப-ரை.) அடியவர் - அடியவரது, உளத்து இருள்-மனவிருளை, அகற்றலின் - நீக்கலால், விளக்கும - தீபமும், எழுமலை - எழுமலையையும், பொடித்தலின் - நீறுசெய்தலால், அனல் தெறும் - அனல் போல விழுங்கின்ற, அசனியும் - இடியேறும்.

(வி-ரை.) மனவிருள்-அறியாமை. அகற்றலின் பொடித்தலின் என்பவற்றின் னுருபுகள் மூன்றுவதன் கருவிப்பொருள.

'கருங்கடல்' என்பதுமுதல் 'கூற்றும்' என்பதுவரை.

(3—4 வரிகள்.)

(ப-ரை.) கரும் கடல் - கரியகடல்நீரை, குடித்தலில் - உண்ணுதலால், பெருந்தழற்கொழுந்தும் - வடவாத்தினியும், மா உயிர் - மாமரவுருவாகிய சூனியரை, வெளவலின் - கைக்கொள்ளுதலால், நீ லிழி - நீக்கண்ணையுடைய, கூற்றும் - இயமனும்.

(வி-மை.) கடல் - ஆகுபெயர். கருங் டல் குடித்தலின் என்ற மையால் பெருந்தற்கொழுந்து வடவைத்தீயை யுணர்த்திற்று. மா-ஆகுபெயர்.

'என்னிளம்' என்பதுமுதல் 'ஐந்தும்' என்பதுவரை.

(5—6 வரிகள்.)

(ப-ரை.) என் உளம் - எனதுள்ளத்தே, இருத்தலின்-இருத்தலால், இயைந்து - பொருந்தி, உணர் - அறிவாகிய, உயிரும் - ஆன்மாவும், நச்சின - விரும்பினவற்றை, கொடுத்தலின் - கொடுத்தலால், களிர் தரு ஐந்தும - பெருமையுள்ள ஐந்தருவும்.

(வி-ரை) உணர் - மூதறிவிலக் தொழிற்பெயர். நச்சல் - விரும்பல். ஐந்தருவாவன:—அரிசந்தனம, கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என்பன.

'கருவழி' என்பதுமுதல் 'வேந்தும்' என்பதுவரை.

(7—8 வரிகள்.)

(ப-ரை) கரு வழி - பிறவி ருதற்கேதுவாகிய வழியை, நீக்கலின் - அடைத்தலால், நிலை உயர் - நிலைமையுயர்ந்த, குருவும் - ஆசிரியனும், இரு நிலம் - பேருலகத்தை, காத்தலின் - பாதுகாத்தலால், மதியுடை வேந்தும் - மந்திரியின் அரசனும்.

(வி-ரை.) இருமை - பெருமை. மதிமரபு - சந்திரவமிசம்.

'ஆகிய' என்பதுமுதல் 'மருவியகூடல்' என்பதுவரை.

(9—12 வரிகள்.)

(ப-ரை.) ஆகிய - நிகராகிய; மணி மேல் - மணியுள்ள வேலை (வந்தி), சேவல் அம் கொடியோன் - சேவற்கொடியை யுயர்த்த கடவுள், ஏனக மங்கையர்-தெய்வயானை நாடச்சியாரும், தேன் வரை-தேனொழுகுகின்ற மலையிடத்தே வளர்த்த, வள்ளியர்-வள்ளி நாய்ச்சியாரும், இரு புறம் - இரு பக்கங்களிலும், தழைத்த - தழைத்திருக்கின்ற, திரு நிழல் - தன்னிழலின்கண், இருக்கும் - வீற்றிருத்தற்கிடமாகிய, ஒரு ப்ரஹ்மாண்டம் - ஒப்பற்றதான ஸ்ரீ பாசலம், மருவிய கூடல்-பொருந்திய மதுரை.

(வி-ரை.) சேவலஞ்சொடியோன் என்பதில் அம் சாரியை யென்றேனும் அழகென்றேனும் கொள்க. பராசலம் - பரங்குன்றம். வடமலை, ஆருபெயர். திரு சட்பத்தை யுணர்த்திற்று, கட்புலஞ்ஞாமையின். பராசலம் என்பதை பரம் அசலம் எனப் பிரித்துக் கொள்க; பரம் - மேன்மை, அசலம் - மலை, அசையா நிலையுள்ளது என்பது பொருள். சலம் - அசைவு, அ - இன்மை.

'பெருநதிச் சடை' என்பதுமுதல் 'நண்ணலர்போல' என்பதுவரை.

(13—14 வரிகள்.)

(ப-ரை.) பெரு நதி சடைமிசை - பெரிய கங்கையை யேற்ற சடைமேல், சிறு மதி - இளநிலவை, சூடிய-தரித்தருளிய, நாயகன் திருவடி - இறைவனது திருவடியை, நண்ணலர்போல - அடையார் சார்பைல.

(வி-ரை.) கங்கையின் மிக்க நதிதொன் றின்மையான் அதனை 'பெருநதி' என்றார். நில-பிறை.

'போய்பலபுகன்று' என்பதுமுதல் 'உணங்கியும்' என்பதுவரை.

(15—21 வரிகள்.)

(ப-ரை.) சேயாய் - புதல்வனே, பல பொய் புகன்றும் - பல பொய்களைச் சொல்லியும், மெய் ஒழித்து-உண்மையைக் கைவிட்டு, இன்பம்-இன்பத்தை, விற்று உறும்-விற்றுண்டு வாழ்கின்ற, சேரி-பரத்தையர் சேரியில், விடாது உறை - இடைவிடா திருக்கின்ற, ஊரன் - உன் தந்தைபோல், ஊருணி ஒத்த - ஊர்ப்பொதுவாகிய ஊருணியையொத்த, பொது - யாவர்க்கும் பொதுவாகிய, வாய் தம் பலம் - பரத்தையர் வாய்த்தம்பலத்தை, நீயும் - நீயும், குதட்டினையாயின் - மென்றனையாயின், நம்பு எடித்து - நம்பு தோன்றி, உமிழும்-வெளிப்படுகின்ற, பெருமுலை நீம் பாற்கு உள்ளமும் தொடாதமிக இனிய முலைப்பாலைக்குறித்து மனத்தாலும் நினையாமல், விள் அமுது ஒழுகும்-அமுதம் விண்டொழுகாநின்ற, குதலை வாய்-மழலை வாயானது, துடிப்ப - துடிக்கும்படி, குலக்கடை - பெரிய கடை வாய்தலில், உணங்கியும் - வருந்தியும்.

(வி-ரை.) ஊருணி-ஊராரெல்லாரும் நீருண்ணுங்குளம். குதட்டல் - மெல்லல். குலம் - பெருமை. மழலைவாய் - மழலைச்சொல்லையுடையவாய்.

'மண்ணுறும்' என்பதுமுதல் 'அணங்கியும்' என்பதுவரை.

(22—25 வரிகள்.)

(ப-ரை.) மண் உறும் - மண்ணிற் புதைத்த, மணி என - மணிபோல், பூழி - மட்புழுதி, மெய் வாய்த்தும் - உடலிற் பொதிய வும், பொலன் மணி விரித்த-பொன்னுமணியும் விரித்த, உடைமணி-அரைமணியான தூ, இழுக்கியும் - சரிந்தும், சுட்டியும் - நெற்றிச்சுட் டியும், சிகையும் - தலைமயிரும், சோர்ந்து - அவிழ, கண் பனித்தும்-கண்ணீர் சிந்தியும், பறையும் - (மூழங்ஙு) சிறுபறையும், தேரும் - (சிறு) தேரும், பறிபட்டு - பறிதலுக்கொள்ளப்பட்டு, அணங்கியும் - நொந்தும்.

(வி-ரை.) வாய்த்து சோர்ந்து - செயலெனைச்சத் திரிபுகள். கண்-ஆகுபெயர். பனித்தல் - சிந்துதல். அணங்குதல்-நோதல். பொ லன்மணி என்பவற்றீற்றில் எண்ணும்மைகடொக்கன. உடைமணி. அரைமணி; "உடைமணி கட்டிச் சிறுதே ருருட்டி யுலாத்தரு மிந் நடை மணியைத் தந்தபின்னர்" என்றார் மணிவாசகர்.

'மறிக்கண்' என்பதுமுதல் 'இப்பயன்' என்பதுவரை.

(26—28 வரிகள்.)

(ப-ரை.) மறி கண் - மான்போற்கண்களையுடைய, பிணவினர்-பெதும்பைப் பெண்கள், இழைக்கும்-அமைத்த, சிறு இல்லில் - சிறு வீட்டினிடத்தே, சென்று - போய், அழியாது - அழித்திடாமல், நின்று - (மயங்கி) நின்று, அயர் - தளர்ச்சியுறுதலே, காண்பன்-யான் காண்பேன், உறுவதும் - நீ யடைவதும் (பொதுவாய் நீயும் தம் பலங் குதட்டினதால்), இப்பயன் - இத்தப்பயனுமும்.

(வி-ரை.) பெதும்பைகள்-ஒன்பதாண்டுப் பெண்கள். இழைத் தல்-அமைத்தல்.

'அன்றேல்' என்பதுமுதல் 'நின்பேறே' என்பதுவரை.

(28—29 வரிகள்.)

(ப-ரை.) அன்றேல் - அங்ஙன நீ இனிச் செய்யாயாஞல், என் பால் - எனது முலைப்பாலை, பெறுகுவது - பெறுவது, இன்று - இப் பொழுதே, நின் பேறு - நின்னுடைய பேருமும்.

(வி-ரை.) அன்றேல் என்பதில் எல் எனின் என்பதன் மரூஉ. பேறு - பெறுதற்குரிய பொருள்.

சேயாய்! சேவலங் கொடியோ னிருக்கு மொரு பரங்குன்ற மருவிய கூடலுயகன் றிருவடி நண்ணலர்போல, ஊரான் ஊருணியொத்த பொதுவாய்த்தம்பல நீயுங் குதட்டினையாயின், தூடிப்பவுணக்கியும் வாய்த்து மிழுக்கியும் பனித்தும் அணங்கியும் நின்றயர்தல் காண்பன், உறுவது மிப்பயனும், அன்றேல் என் பால் பெறுவதின்று நின் பேறென விணைமுடிவு செய்க. (நிக)

திருக்கோவையார் ரூகூஉ-ம் செய்யுள்.

கலவிகருதிப் புலத்தல்.

கலவிகருதிப்புலத்தலென்பது—புனலாட்டுவித்தமை கூறிப் புலவாநின்ற தலைமகள், ஊடநீர்க்க நுதலுந் தோளுமுதலாயினவற்றைத் தைவந்து வருடித் தலைவளி செய்யாநின்ற தலைமகனோடு, எம்முடைய சிறியவில்லின்கண் வந்து அன்று நீயிர் செய்த தலைவளி எங்கட்கு அன்று வேண்டுதுமாயினும் இன்று உமது திருவருள் எங்கட்கு நீயிர்வந்த இத்தினையுமமையும், வேறு நீயிர் தலைவளிசெய்ய வேண்டுவதில்லை யெனக் கலவிகருதிப் புலவாகிற்றல். அதற்குச் செய்யுள்:—

கலவி - கலத்தல் (புணர்ச்சி). புலத்தல்-பிணங்கல்; ஊடலும் அது. தைவரல் - தடவல். வருடல்-நெருடல். இத்தினையும் - இவ்வளவும்.

மின்றுன் னியசெஞ் சடைவெண் மதியன் விதியுடையோர்
சென்றுன் னியகழற் சிற்றம் பலவன் றென்னம்பொதியி
னன்றுஞ் சிறியவ ரில்லெம தில்லநல் லூரமன்னே
வின்றுன் றிருவரு ளித்தினை சாலுமன் னெங்களுக்கே.

கலவள லல்கு றலைமகன் றன்னொடு
கலவி கருதிப் புலவி புகன்றது.

(ப-ரை.) மின் துன்னிய - மின்னையொத்த, செஞ்சடை-செஞ் சடைக்கண்வைத்த, வெண்மதியன் - வெண்பிறையை யுடையான், விதியுடையோர் - நற்பாலை யுடையோர், சென்று உன்னிய - (சிற்றின்பத்திற்குக் காரணமான புலன்களை விட்டுச்) சென்று நினைந்த,

கழல் - கழலேயுடைய, சிற்றம்பலவன் - சிற்றம்பலவன், தென்னம் பொதியில்- (அவனதா) தெற்கின்க ணுண்டாகிய பொதியிலிடத்து, எமது இல்லம் - எமதுகுடி, நன்றும் சிறியவர் இல் - பெரிதுஞ் சிறியவராத குடி (அதனுள்), நல்லூர-நல்லவூரையுடையாய், மன்னே, முற்காலத்து நின்றலேயளி வேண்டுதுமாயினும், இன்று - இப்பொழுது, உன் திருவருள் - உனது திருவருள், எங்களுக்கு - எங்கட்கு, இத்தனை சாலும் - (நீவந்த)இத்தனையுமைமையும்(நீ தலேயளி செய்ய வேண்டுவதுண்டோ), எ-று.

(வி-ரை.) தன்னல்-ஒத்தல் என்னும்பொருட்டு. செஞ்சடை வெண்மதி மூரணடொடை. நற்பால் - நல்லூழ். கழல் - ஆகுபெயர். நன்றும் நல்லூர என்பவற்றுள் நன்மை பெருமை குறித்து நின்றன, நல்லமழை யென்புழிப்போல.

நேரிசையாசிரியப்பா.

நடைமலே பிடித்த சொரியெயிற் றிடங்கரை
யாழி வலவ னடர்த்தது போலப்
புன்றலே மேதியைப் புனலெழ மூட்டிய
வரியுடற் செங்கண் வராலுடன் மயங்க
வுட்கவைத் தூண்டி லுரம்புகுந் தழக்கு
நிறைநீ ரூர நெஞ்சகம் பிரிக்கும்
பிணிமொழிப் பாண னுடனுறை நீக்கி
நூலொடு துவளுந் தோறிரை யுரத்தின்
மால்கழித் தடுத்த நரைமுதிர் தாடிசெய்
வெள்ளி முகிழ்த்த வொருகட் பார்ப்பான்
கோலுடன் படருங் குறுநகை யொருவிப்
பூவிலேத் தொழின்மகன் காவல்கை விட்டுத்
திக்குவிண் பெருகத் திருமதி கைலே
நாமகள் பெருங்கட னுற்கோட் டொருத்தல்
புண்ணிய மிலைமுதல் வெள்ளுடற் கொடுக்கும்.
புகழ்க்கவிப் பாடகர் புணர்ச்சியின் பகற்றி
யெல்லாக் கல்வியு மிகழ்ச்சிசெய் கலவியர்
பெருநகைக் கூட்டமுங் கழிவுசெய் திவ்விடை
மயக்குறு மாலே மாமக னெதிர

20 வொருவழி படர்ந்த தென்னத் திருமுக
மாயிர மெடுத்து வான்வழி படர்ந்து
மண்ணே ழுருவி மறியப் பாயும்
பெருங்கதத் திருநதி யொருங்குழி மடங்க
வைம்பகை யடக்கிய வருந்தவ முனிவ
25 னிரந்தன வரத்தா லொருசடை யிருத்திய
கூடம் பெருமான் குரைகழல் கூறுஞ்
செம்மையர் போலக் கோடா
தெம்மையு நோக்கிச் சிறிதுகண் புரிந்தே.

நடைமலை பிடித்த - சிறிதுகண்புரிந்தே. பததி - பரத்தையிற் பிரிவு. துறை - கலவிகருதிப் புலத்தல்.

'நடைமலை' என்பதுமுதல் 'அடர்த்ததுபோல' என்பதுவரை. (1—2 வரிகள்.)

(ப-ரை.) நடை மலை - நடையுள்ள மலையையொத்த யானையை, பிடித்த - பற்றிக்கொண்ட, சொரி - (புழு)சொரிகின்ற, எயிறு - பற்களையுடைய, இடங்கரை - முதலையை, ஆழி வலவன் - சக்கரத்தை வலக்கையிலேந்திய திருமால், அடர்த்ததுபோல - கொன்றதுபோல.

(வீ-ரை.) நடை மலையோடு வேற்றுமை தோன்ற யானையை 'நடைமலை' என்றார். இடங்கர் - முதலை. ஆழிவலவன் - சக்ராயுத ப்ரயோகத்தில் வல்லவன் எனினுமாம்.

'புன்றலை' என்பதுமுதல் 'நிறைநீரூர' என்பதுவரை. (3—6 வரிகள்.)

(ப-ரை.) புன் தலை-புன்மையாகிய தலையையுடைய, மேதியை-எருமையை, புனல் எழ - நீரினின்று மேலே எழுமாறு, முட்டிய - தாக்கிய, வரி உடல் செம் கண் - வரியுடலையும் சிவந்த கண்களையு முடைய, வரால் - வால்மீன், உடன் மயங்க-உடனே மயங்கும்படி, உட்ட கலவு - உண்டில்-உள்ளே பிளப்பாகிய தூண்டிலினுள்ளே, உரம் புருத்து - வீசையுடன் புகுந்து, உழக்கும்-கலக்காகின்ற, நிறை நீர்-நிடாகளை சூழ்ந்த, ஊர - ஊரனே.

(வீ-ரை.) உடற்கேற்றதலை மேதிக்கின்மையால் 'புன்றலை' என்றார். வரி - [illegible]ம். விசை - வேகம்.

'திருமுகம்' என்பதுமுதல் 'திருநுதி' என்பதுவரை.
(20—23 வரிகள்.)

(ப-ரை.) திரு முகம் ஆயிரம் எடுத்து - வடம்பயக்கும் அந்த முகமுடனே, வான்வழி படர்ந்து - விண்ணில் பரவி, மண் ஏழ் உருவி - ஏழுலகமும் ஊடுருவி, மறிய - அங்கங்குள்ளவை தலைதடுமாறும்படி, பாயும் - பெருகின, தப்பெருங்கதம் - அந்த மிக்க வேகமுள்ள, திருநுதி - ஆகாய நதியானது.

(வி-ரை.) மறிதல் - தலைதடுமாறல், இது ஒருசொல். ஆகாய கங்கையின் மிக்க அழகுள்ள நதி வேறொன்று நின்மையின் அதனைத் 'திருநுதி' என்றார்.

'ஒருங்குழி' என்பதுமுதல் 'செம்மையர்போல' எனபதுவரை.
(23—27 வரிகள்.)

(ப-ரை.) ஒருங்குழி - ஓரிடத்து ஒருங்கே, மடங்க - அடங்குமாறு, ஐம்பகை அடக்கிய - புலப்பகையைந்தையும் தன்னுள் தணிய அடக்கிய, அருந்தவமுனிவன்-செய்தற்கரிய தவத்தை மூப்பதினைய ராம் ஆண்டளவு கோற்ற பகீரதனென்னு முனிவன் (தன் மூதாதைகள் கதியடைய), இரந்தன - கேட்டனவாகிய, வரத்தால் - வரங்களால், ஒருசடை இருத்திய - சடை யொன்றில் வைத்தருளிய, கூடற்பெருமான் - மதுரைநாயகனது, குரை கழல் - வேதனூபுர மடைந்த சீர்பாதங்களே, கூறும் - எத்துகின்ற, செம்மையர்போல - நடுவு நிலைமையுடையார்போல.

(வி-ரை.) பகீரதன் அரசனேயாயினும் செய்தற்கரிய தவஞ் செய்தமையான் அவனை 'முனிவன்' என்றார்.

'கோடாது' என்பதுமுதல் 'கண்புரிந்தே' என்பதுவரை.
(27—28 வரிகள்.)

'நெஞ்சகம்' என்பதுமுதல் 'நீக்கி' என்பதுவரை.
(6—7 வரிகள்)

(ப-ரை.) கோடாது - மாறுபடாமல், எம்மையும் - எம்மையும், நோக்கி - நோக்கி, சிறிது கண்புரிந்து - சிறிது கடாக்ஷித்து, நெஞ்சகம் - மனத்தை, பிரிக்கும்-வேறுபடுத்துகின்ற, பிணிமொழி பாணனுடன் - பிணிப்பையுள்ள பாடல்வல்ல பாணனுடன், உறை நீக்கி-உறைதலேவீட்டி.

(வி-ரை.) கோடுதல் - கோணுதல், அது ஈண்டு மாறுபடுதலுக் காயிற்று. உறை - முதனிலைத் தொழிற்பெயர்.

'நூலோடுதுவளும்' என்பதுமுதல் 'ஒருவி' என்பதுவரை.

(8—11 வரிகள்.)

(ப-ரை.) நூலொடு துவளும் - மூன்நூலொடு அசைகின்ற, தோல் திரை - தோல் திரைந்த, உரத்தின் - மார்பினிடத்தே, மால் கழித்து - கருமைநீங்கி, அடுத்த - நெருங்கிய, நரை முதிர் - நரை மிகு, தாடி செய் - தாடியையுடைய, வெள்ளி - சுக்கிரன்போல, முகிழ்த்த-அரும்பின, ஒருகண் பார்ப்பான் - ஒற்றைக்கண் பார்ப்பா னாகிய, கோலுடன் - ஊன்றுகோலுடனே, படரும் - உண்டா கின்ற குறு நகை - சிறுநகையை, ஒருவி - விட்டு.

(வி-ரை.) மால் - கருநிறம். செய்தல் - வளர்த்தல் ஒருவல் - விடல்.

'பூவிலைத்தொழின்மகன்' என்பதுமுதல் 'அகற்றி' என்பதுவரை.

(12—16 வரிகள்.)

(ப-ரை.) பூ வீலை தொழில் மகன்-பூவிற்குத் தொழிலையுடைய வனது, காவல் - பாதுகாத்தலை, கைவிட்டு - நீங்கி, திக்கு - எட்டுத் திசையினும், விண் - விண்ணுலகத்தினும், பெருக - பெருகும்படி, திருமதி - நிறைமதியும், கைலை - கைலைமலையும், நாமகள் - கலைமக ளும், பெருங்கடல் - பாற்கடலும், நால் கோட்டு - நற்கொம்புள்ள, ஒருத்தல்-ஐராவதமும், புண்ணியம் - புண்ணியமும், இவை முதல்-இவை முதலானவற்றிற்கு, வெள் உடல் - உடல் வெளுத்தலை, கொடுக்கும் - செய்யாகின்ற, புகழ் - புகழை, கவிப்பாடகர் - கவியிற் கட்டிப் பாடுகின்றவரது, புணர்ச்சி இன்பு - சேர்க்கையின்பத்தை, அகற்றி - விட்டு.

(வி - ரை.) நிறைமதியைத் 'திருமதி' என்றார் அழகிற் சிறந் திருத்தலான். ஒருத்தல்-யானை, அது ஈண்டைக்கேற்ப ஐராவதத் தைக் குறித்தது. கவிப்பாடகர்-புலவர். கடல் என வாளா கூறினரே னும் ஈண்டைக்கேற்ப வெண்மை குறிக்கவேண்டுதலின் பாற்கட லென் றுரைக்கலாயிற்று. நிறைமதி முதலாயின வெளுப்படைத்தது புகழுக்குத் தோற்றென்க.

'எல்லாக்கலவியும்' எனபதுமுதல் 'கழுவுசெய்து' என்பதுவரை.

(17—18 வரிகள.)

(பதவுரை) எல்லாக்கலவியு மாசகலகல்விகளோயும், இகழ்ச்சிசெய்பழிக்கின்ற, கலவியர் - கலவி தொழிலில வல்ல பரத்தையரது, பெருமை - மிகுந்த மதிழ்சிக்குக் காரணமாகிய, கூட்டமும் சோகசையையும், கழிவுசெயது - தொலைது.

(வி-ரை.) நகை மகிழ்சி.

'இவ்விடை' என்பதுமுதல் 'டடர்ந்ததேன்' என்பதுவரை.

(19—20 வரிகள.)

(பதவுரை.) இ இடை - இந்த நேரத்தில், மாலை மயக்குறு-மாலை இருளுகின்றகாலமென்னும், மா மகள் எதிர-பெரிய பெண்ணெதிர்ப்ப, ஒருவழி - ஒரோவழியாய், படர்ந்தது என் - வந்தது யாதுகாரணம்.

நிறைநீரூர! கூடற்பெருமான்நுமைகழல் கூறுஞ்செம்மையர்போலதோடாது எமமையு நோக்கி,சிறிதுநகண்புரிந்தது, பாணனுடனுறைநீக்கி, பார்ப்பான் கோலுடன் படருங் குறுகையொருவி, பூவிலைத் தொழினமகன் காவல்கைவிட்டு, கவிபாடசர் புணர்ச்சி யின்பகற்றி, பெருநகைக்கூட்டமுங கழிவுசெய்தது, இவ்விடைமாலைமாமக னெதிர ஒருவழிபடர்ந்த தென்னென வினைமுடிவு செயக. (டு அ)

திருக்கோவையார் ஈக-ம் செய்யுள்.

வழிபாடு கூறல்.

வழிபாடுகூறலென்பது—மணஞ்செய்தபின்னர் மணமனைகாணவந்த செவிலிக்கு, காவலர் உடமபு முயிருமபோல ஒருவரையொருவர் இன்றியமையாமல் இவள் கருத்தைக் கடவார், கமலங்கலந்ததேனுஞ் சந்தனமரமும்போல விலையாது இவள் கற்புவழியிலே நிற்றலையுடையராய் இவள்வழியே நின்றொழுகா நின்றனரென்று, தோழி தலைமகன் நிலைமகள் வழி யொழுகாநின்றமை கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்:—

நீரிய லாவியும் யாக்கையு மென்னச் சிறந்தமையாற்
காரியல் வாட்கண்ணி யெண்ணகலார்கம லங்கலந்த

வேரியுஞ் சந்தும் வியற்தேனக்கற்பி னிற்பானனே
காரியல் கண்டர்வண் டில்லேல ணங்குமெங் காவலரே.

மணமனே காண வந்த செவ்வேலிக்குச்
தூணைமலர்க் குழலி சோழி சொல்லியது.

(பதவுரை.) அன்னே - அன்னாய், கார் இயல் 'கண்டர்-கார்போலும் கண்டத்தை யுடையவராகிய சிவபெருமானுடைய, வள் தில்லை - வளவிய தில்லையை, வணங்குர்-வணங்குகிற, எம் காவலர்-எம்முடைய காவலர், சீர் இயல் - சீர்மையியலும், ஆயியும்-யாக்கையும் என்ன - உயிருமுடம்பும்போல, சிறந்தமையால் - ஒருவரை யொருவர் இன்றியமையாமையால், கார் இயல் - கரிய வியல்பையுடைய, வாள் கண்ணி - வாள்போலுங் கண்ணையுடையாளது, எண் அகலார்-எண்ணத்தைக் கடவார்; கமலம் கலந்த-தாமரைப்பூவைச் சேர்ந்த, வேரியும் சந்தும்-தேனுஞ் சந்தனமரமும், வியல் தந்தென-(இடத்துக்கும் பொருஞ் மிடமுமாயியைந்து) தம்பெருமையைப் புலப்படுத்துதற் போலவியைந்து, கற்பில் நிற்பர் - இவளது வழிபாட்டின்கண்ணே நிற்பர், எ-று.

(விரை.) 'எண்ணகலார்' என்றமையால் காதலியாதலும், 'கற்பினிற்பர்' என்றதனால் வாழ்க்கைத் துணையாதலுங் கூறப்பட்டன. ஆவியும் வேரியும் தலைமகட் குவமையாகவும், யாக்கையும் சந்தும் தலைமகற் குவமையாகவு முரைக்க. பிரித்துவமையாக்காது இவ்வாறு கூட்டத்திற்குஅவற்றது கூட்டமுவமையாக வுரைப்பினுமாம். ''காரியல் கண்டர்வண் டில்லேல ணங்குமெங் காவலர்'' என்றமையால் இவரது இல்வாழ்க்கை இன்றுபோல என்றும் நிகழுமென்பது கூறினாயிற்று.

நேரிசையாசிரியப்பா.

நிறையிதழ் திறந்து மதுவண் டருந்தும்
விரிந்துகொண் மலரும் புரிந்துறை மணமுஞ்
செந்தமிழ்ப் பாடலுந் தேக்கிய பொருளும்
பாலுஞ் சுவையும் பழமு மிதமு
முடலு முயிரு மொன்றிய தென்னச்
கண்டுந் தெளிந்துங் கலந்தவுள் ளுணர்வாற்
பாலு மமுதமுந் தேனும் பிலிற்றிய
இன்பமர் சொல்லி நண்புமனக் குறியும்

வாய்மையுஞ் சிறப்பு நிழலெனக் கடவார்
விண்ணவர் தலைவனும் யீயா மருந்து
மளகைக் கிறையு மரும்பொரு ளீட்டமுங்
கண்ணனுங் காவலு முனியும் பசுவு
மொன்றினுந் தவறு வொருங்கியைந் தனபோ
னீடிநின் றுதவுங் கற்புடை நிலையினர்
தவங்கற் றின்ற நெடுங்கற் பன்னே
முன்னெரு நாளின் முதற்றொழி லிரண்டினர்
பன்றியும் பறவையு மென்றிரு வெடுத்துக்
கவையா வுளத்துக் காணுங் கழலுங்
கல்லியி லறிவிற் காணு முடியு
மளவுசென் றெட்டா வளவின ராகி
மண்ணு மும்பரு மகழ்ந்தும் பறந்து
மளவா நோன்மையி னெடுநாள் வருந்திக்
கண்ணினிற் காணு துளத்தினிற் புணராது
நின்றன கண்டு நெடுப்பயன் படைத்த
திருவஞ் செழுத்துக் குறையா திரட்ட
விருநில முருவிய வொருதழற் றாணத்
தெரிமணி நவ்வி தமருக மமைத்த
நாற்கர் நூதல்விழித் தீப்புகை கடுக்கள
மூலருபெற் றெடுத்த வொருதனிச் செல்வி
கட்டிய வேணி மட்டலர் கடுக்கை
யாயிரந் திருமுகத் தருணதி சிறுமதி
பகைதவிர் பாம்பு நகைபெறு மெருக்கமு
மொன்றிய திருவுரு நின்றுநனி காட்டிப்
பேரருள் கொடுத்த கூடலம் பதியோன்
பதமிரண் டமைத்த வள்ளக்
கதியிரண் டாய வோரன் பினரே.

நிரையிதழ்திறத்து-ஓன்பினரே. பதிஇ - மணச்சிறப்புரைத்தல். துறை - வழிபாடுகூறல்.

'விண்ணவர்' என்பதுமுதல் 'ஒருங்கியைந்தனபோல்' (10—13 வரிகள்.)

(ப-ரை.) விண்ணவர் தலைவனும் - விண்ணிலுள்ளார்க்கு அரையனும், யீயா மருந்தும்-(அவனது) இறவாமைக்குக் காரணமான அமிர்த

மும், அளகைக்கு இறையும் - அளகைக்குத் தலைவனும், அரும் பொருள் ஈட்டமும் - (அவனது) கிடைத்தற்கருமையான பொருட் குவையும், கண்ணனும் - திருமாலும், காவலும் - அவனது காத்தற் றொழிலும், முனியும் - வகிட்டழகிலுறும், பசவும் - அவனது காம தேனுவும், ஒன்றினும் - யாதொன்றிலுறும், தவறு - தவறுபடாமல் ஒருங்கியைந்தனபோல் - ஒன்றுபட்டியைந்தனபோல்.

(வி-ரை.) விண்ணவர்தலைவன் - இந்திரன். வீதல்-இறத்தல். அளகைக்கிறை - குபேரன்.

'நீடிநின்று' என்பதுமுதல் 'அன்னே' என்பதுவரை. (14—15 வரிகள்.)

(ப-ரை.) நீடிநின்று - மிகவு நிலைபெற்று, உதவும் - பயனைத் தருகின்ற, கற்புடை நிலையினர்-கற்பைத் தம்மிடத்தேயுடைய நிலை யினரது, தவம் கற்று - தவத்தை நோற்று, ஈன்ற - தலைவியைப் பெற்ற, நெடும் கற்பு-மிகுந்த கற்பினையுடைய, அன்னே - தாயே.

(வி-ரை.) நெடுமை-ஈண்டு மிகுதிப் பொருட்டாய் நின்றது.

'முன்னெருநாளில்' என்பதுமுதல் 'முடியும்' என்பதுவரை. (16—19 வரிகள்.)

(ப-ரை.) முன் ஒருநாளில் - முன்னொரு காலத்தில், முதல் தொழில் இரண்டினர் - (முத்தொழிலுள்) முதலனவாகிய இரண்டு தொழில்களையுடையவ ரிருவரும், பன்றியும் பறவையும் - வராகமு மன்னப்பறவையும், என்று - என்று சொல்லும்படியான, உருவுகரந்து - உருவமெடுத்து, கவையா உளத்து - பேதியாத வுள்ளத்தி னாலே, காணும் - காணத்தக்க, கழலும் - திருவடியையும், கல்வி யில் - நூற்கல்வியினாலும், அறிவில் - அறிவினாலும், காணும் - காணத்தக்க, முடியும் - திருமுடியையும்.

(வி-ரை.) முதற்றொழிலிரண்டு - படைத்தல் காத்தல்; இவ் விரண்டு தொழில்களையுடையராவார்-பிரமவிட்டுணுக்கள். கவைத் தல் - பிளவுபடல், அது ஈண்டுப் பேதித்தலுக்காயிற்று.

'அளவுசென்றேட்டா' என்பதுமுதல் 'வருந்தி' என்பதுவரை. (20—22 வரிகள்.)

(ப-ரை.) அளவு சென்று எட்டா-தம்மாற்கூடிய அளவினாலே சென்றும் எட்டாத, அளவினர் ஆகி - அளவினையுடையவராகி, மண்

ணும் - பூமியினும், உம்பரும் - ஆகாயத்தினும், அகழ்ந்தும் - பிளந்தும், பறந்தும் - பறத்தலும், அவை-அணியாகாக, நோன்மையின் - வலிமையினாலே, நெடுநாள் - நெடுங்காலம், வருந்தி-வருத்தமுற்று.

(வி-ரை.) அகழ்தல் - பிளத்தல்.

'கண்ணினில்' என்பதுமுதல் 'குறையாதிரட்ட' என்பதுவரை.
(23—25 வரிகள்)

(உ-ரை) கண்ணினில் - கண்களிலும், காணுது - காணுமல், உளத்தினின் - உள்ளத்தினாலும், புணராது-அணுகாமல், நின்றன கண்டு - நின்ற நிலைகளைக்கண்டு, நெடும்பயன் படைத்த - அழியாப் பயன் பொதிந்துள்ள, திரு ஞானப்பழுத்து - ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை, குறையாது இரட்ட - சிறிதாகவுரைக்க.

(வி-ரை.) கண்ணினின் உளத்தினின் என்பவற் றிற்றின்னுருபுகள் மூன்றுவதன் கருவிப்பொருடருவன.

'இருநிலமுருவிய' என்பதுமுதல் 'கடிக்களம்' என்பதுவரை.
(26—28 வரிகள்.)

(ப-ரை.) இரு நிலம் உருவிய-பெரிய பூமியைக்கடந்துசென்ற, ஒருதழல் தூணத்து - ஒரு அக்கினிஸ்தம்பத்தினின்றும், எரி - எரிகின்ற, மழு - மழுவும், நவ்வி - மானும், தமருகம்-தமருகமும், அமைத்த - வைத்த, நால் கரம் - நான்முகைகளும், நுதல் விழி - நெற்றிக்கண்ணும், தீ புகை - தீப்புகையாகின்ற, கடி களம்-காளகண்டமும்.

(வி-ரை.) தமருகம் - உடுக்கை. கடிக்காளம் என்பன நஞ்சின் பரியாய நாமங்கள்

'உலகு' என்பதுமுதல் 'அருணதி' என்பதுவரை.
(29—31 வரிகள்.)

(ப-ரை.) உலகு - உலகங்களெல்லாம், பெற்று எடுத்த - பெற்றுவளர்த்த, ஒரு தனி செல்வி - ஒப்பற்ற தன்னுடன் பிரிவில்லாத அருட்சத்தியும், கட்டிய - சுற்றிக்கட்டிய, வேணி - சடைமுடியும், மட்டு அவர் கடுக்கை - தேனெடுமலர்ந்த கொன்றைப்பூமாலையும், ஆயிரம் திருமுகத்து - பலனுள்ள அநந்தமுகங்களாயொழுகும், அருள் நதி - அருள்போலுள்ள கங்கையும்.

(வி-ரை.) கடுக்கை - ஆகுபெயர்.

'சிவமத்' என்பதுமுதல் 'கூடலம்பதியோன்' என்பதுவரை.
(31—34 வரிகள்.)

(ப-ரை.) சிறு மதி - இளம்பிறையும், பகை தவிர் - நண்புள்ள, பாம்பும் - அரவமும், நகை பெறும் எருக்கமும் - வெண்மைபெற்ற எருக்கலர்மாலையும், ஒன்றிய திருவுரு-பொருந்திய திருவுருவத்தை, நின்று - நீங்காமல், நனி காட்டி - வெளிப்படக்காட்டி, பேரருள் கொடுத்த - பேரருளைத்தந்த, கூடலம்பதியோன் - மதுரைத் திருப் பதியை யிடமாக வுடையவனது.

(வி-ரை.) பகைதவிர்என்றதனால் நண்புண்மை பெறப்பட்டது. நகை-ஈண்டு வெண்மை குறிக்கவந்தது. எருக்கம் - ஆகுபெயர். கூட லம்பதியோன் - சிவபிரான்.

'பதமிரண்டமைத்த' என்பதுமுதல் 'ஓரன்பினர்' என்பதுவரை.

'பாலுமமுதமும்' என்பதுமுதல் 'இன்பமர்சொல்லி' என்பதுவரை.
(7—8 வரிகள்)

(ப-ரை.) பதம் இரண்டு அமைத்த - இரண்டு திருவடிகளையும் வைத்த, உள்ளம் - உள்ளத்தையுடைய, கதியிரண்டாய - அநுசந்தா னராகிய, ஓர் அன்பினர் - பருப்பற்ற அன்பையொத்த தலைவரும், பாலும் - ஆன்பாலும், அமுதமும் - தேவாமிர்தமும், தேனும் - செந் தேனும்போல, பிலிற்றிய - வெளிப்படுகின்ற, இன்பு அமர் சொல்லி- இனிமை பயக்கும் சொல்லையுடைய தலைவியும்.

(வி-ரை.) ஓர் என்றமையால் பருப்பறுதி பெறப்பட்டது. ஆன்- பசு.

'நிரையிதழ்' என்பதுமுதல் 'ஒன்றியதென்ன' என்பதுவரை.
(1—5 வரிகள்.)

(ப-ரை.) நிரை இதழ் - நெருங்கிய விதழ்களை, திறந்து-விரித்து, வண்டு - வண்டுகள், விருந்து - விருந்தினர்போல, கொண்மது - உள்ளதேனை, அருந்தும் - அருந்துகின்ற, மலரும் - மலரும், புரிந் தனை - அம்மலருட னீங்காதிருக்கின்ற, மணமும் - மணமும், செந் தமிழ் பாடலும் - செந்தமிழ்ச்செய்யுளும், தேக்கிய பொருளும் - நிறைந்த அதன் பொருளும், பாலும் - பாலும், சுவையும் - அதன்

மதுரமும், பழமும் - பழமும், இரதமும் - அதன் இரசமும், உடலும் உயிரும் - உடலும் அதனுள் உயிரும், ஒன்றியது என்ன - பொருந்தியதுபோல.

(வி-ரை.) கிரை - வரிசை, அது ஈண்டு நெருக்கத்துக்காயிற்று. புரிதுறை யென்றலின்மையால் நீங்காமை பெற்றும்.

கண்டிரு தெளித்துங் கலந்தவுள் ளுணர்வால்.
(6—வது வரி.)

(பதவுரை) கண்டும் - கண்டோ, தெளித்தும்-தெளித்தும், கலந்த உள்ளுணர்வால்-இருவரிடத்தும் வேறின்றிக் கலந்த வுள்ளுணர்ச்சியால.

(வி-ரை.) உணர்ச்சி - அறிவு.

'நண்பும்' என்பதுமுதல் 'கடவார்' என்பதுவரை.
(8—9 வரிகள)

(பதவுரை.) நண்பும் - நண்பினாலும், மனக்குறியும் - மனக்குறிப்பினாலும, வாய்மையும் - உண்மையினாலும், சிறப்பும் - சமக்குரிய பலவகைச சிறப்பினாலும, நிழல் என - அதற்கும் நிழலேப்போல, கடவார்-பிரிதலிலர்.

(வி-ரை.) நண்பு முதலிய நான்கினீற்றும் மூன்றனுருபு தொக்குநின்றது.

நெடியநற்பன்னூயே! கூடலம்பதியோன் பதமிரண்டமைத்த வுள்ளக் கதியினராய வோரன்பினரும, இன்பமர் சொல்லிபும, நண்பும் மனக்குறியும் வாயமையும் சிறப்பும் நிழலெனக் கடவாரென வினைமுடிவு செயக. (டுக)

திருக்கோவையார் உரை-ம் செய்யுள்.

ஆதரங்கூறல்.

ஆதரங்கூறலென்பது—போக்கருமை கூறிய தலைமகனுக்கு நின்னெஞ்சு போகப்பெறின் அவளுக்கு வெஞ்சுரமும் தண்சுரமாம். நீ யருமை கூறுது அவளைக் கொண்டுபோவெனத் தோழி தலைமகளாதராய் கூறுகின்றதல். அதற்குச செய்யுள்:—

பிணையுங் கலையும்வன் பேய்த்தேரி னேப்பெரு நீர்நசையா
லிணையுமு ரம்புரி ரம்பிய வத்தமு மையமெய்யே
யிணையு மளவுமில் லாவிறை யோனுறை தில்லைத்தண்பூம்
பணையுந் தடமுமன் றேசின்ஞெ டேகினெம் பைந்தொடிக்கே.

அழற்றடம்புரையு மருஞ்சுரமதுவு ம
நிழற்றடமவட்கு நின்னெடேகினென்றது.

(ப-ரை.) பிணையுங் கலையும் - பிணையுங்கலையுட், பெருநீர் நசை யால்-மிக்க நீர்வேட்கையால், வன் பேய்த்தேரினை - பெரியபேயத் தேரினை, அணையும் - சென்றணுகும், முரம்பு கரம்பிய - முரம்புகரம் பின, அத்தமும் - சுரமும், ஐய - ஐயனே, நின்னெடு ஏகின் - நின் னோடு செல்லின், மெய்யே - மெய்யாகவே, எம் பைந்தொடிக்கு - எம் பைந்தொடிக்கு, இணையும் அளவும் இல்லா-ஒப்புமெல்லையு மிலலாத, இறையோன் உறை - இறையோனுறைகின்ற, தில்லை-தில்லைவரைப் பில், தண் பூம்பணையும் - பூக்களையுடைய குளிர்ந்த மருதநிலமும, தடமும் - பொய்கையும், அன்றே - அல்லவோ (நீ யிவ்வாறு கூறுவ தென), எ-று.

(வி-ரை) பிணை - பெண்மான். கலை-ஆண்மான். பேய்த்தேர்-கானற்சலம். முரம்பு-கல்லிவரையுயர்நிருக்கு நிலம். எனினும் விணையெச்சம் பணையுந்தடமுமாமென விரியுமாக்கத்தோடு முடிக் கிது. தடா - தடமென விகாரமாயிற்று.

நேரிசையாசிரியப்பா.

நெடுவரைப் பொங்கர்ப் புனமெறி காழகிற்
கடும்புகை வானங் கையுறப் பொதிந்து
தருநிழற் றேவர் தம்முடல் பனிப்பப்
படர்ந்தெறி கங்கை வீடுங்குளி ரகற்றும்
பொன்னம் பொருப்ப நின்னுளத் தியையிற்
கனறலைப் புழுத்த திரள்பரண் முரம்பு
வயல்வளை கக்கிய மணிநிரைப் பரப்பே
யதர்வியிர் தெழுஞது படர்புகை நீழல்
பொதுளிய காஞ்சி மருதணி நிழலே
தீவாய்ப் புலிப்பற் செறிருர லெயிற்றியர்
கழுநீர் மலையும் வயன்மா தினரே
யயற்புல மெறியு மெயினர் மரத்துடி

நெடுநக ரிரட்டுங் களியரி கிணையே
யிருட்கலர் புனனெனச் சுழற்றருஞ் சூறை
மதமல ரணிந்த மலயக் காலே
யெழுசிறை தீயு மெருவையும் பருந்துங்
குவகீரயழ் காட்டுக் குருகொடு புதாவே
வலியழி பகடு வாய்கீர்ச செச்சாய்
தழைமடி மேதியும் பிணரிடங் கருமே
பட்டுலர் கள்ளி நெற்றுடை வாகை
சுருள்விரி சாலியுங் குலையரம் பைபுமே
வடதிரு வால வாய்திரு நமிவூர்
வெள்ளி யம்பல நள்ளா நிருதிரை
பஞ்சவ னீச்சர மஞ்செழுந் தமைத்த
சென்னி மாபுரஞ் சோன் நிருத்தளி
கன்னிசெங் கோட்டங் கரியோன் நிருவுறை
விண்ணுடைத் துண்ணும் சுண்ணிலி யொருத்தன்
மறிதிரைக் கடலுண் மாவெனக் கவிழ்ந்த
களவுடல் பிளந்த வொளிகெழு திருவேற்
பணிப்பதை யூர்தி யருட்கொடி யிரண்டுடன்
முன்னும் பின்னு முதுக்கொள நிறைந்த
வருவியஞ் சார லொருபரங் குன்றஞ்
சூழ்கொள விருந்த கூடலம் பெருமான்
முழுதுற நிறைந்த விருபதம் புகழார்
போம்வழி யெனுஞ்சர மருந

மாமை யூர்தரு மணிநிறத் திவட்கே.

நெடுவரைப்பொங்கர் - மணிநிறத்திவட்கே. பதாதி - உடன் போக்கு. நுகறை - ஆசாங்கூறல்.

'நெடுவரை' என்பதுமுதல் 'உடல்பனிப்ப' என்பதுவரை.
(1—3 வரிகள்.)

(ப-ரை.) நெடு வரை - நெடிய மூங்கில் (செறிந்த), பொங்கர் - மலைச்சார்பினில், புனம் - தினைப்புனம் (ஓம்பும்பொருட்டு), எறி வெட்டப்படுகின்ற, காழ் அகில் - வயிரம்பற்றிய அகில் மரங்களைக்

(கொளுத்துகின்ற), கடும்புகை - மிக்கபுகையானது, வானம் - விண் ணில், கையுறப்பொதிந்து - மூடிக்கொண்டு, தரு நிழல் - கற்பக நீழலே யிடமாகவுடைய, தேவர்தம் - தேவர்களது, உடல் பனிப்ப - உடல் நடுங்கும்படி.

(வி-ரை.) எறிதல் - வெட்டுதல். கடுமை - மிகுதிப்பொருட்டு. கையுறப் பொதிதல்-மூடுதலெனப் பொருடரு மொருசொல். தேவர் என மேல் வருதலால் தரு என்னு மரப்பெயர் கற்பகத்தருவை யுணர்த்திற்று. பனித்தல் - நடுங்கல்.

'படர்ந்து' என்பதுமுதல் 'இயையின்' என்பதுவரை.

(4—5 வரிகள்.)

(ப-ரை.) படர்ந்து-பரவி, எறி-(அலைகளே) வீசுகின்ற, கங்கை - ஆகாயகங்கை, விடம் - தருகின்ற, குளிர்-குளிரை, அகற்றம் - நீக்கு கின்ற, பொன்னம் பொருப்ப - அழகிய மலையையுடையாய், நின் உளத்து - உன்னுளத்தே, இயையின் - சம்மதிப்பையாஞல்.

(வி-ரை.) பொன்னம் பொருப்ப என்பதில் அம் சாரியை, பொன்மலைபோல அழகிய பொருப்பினையுடையாய் என்றுரைத்தலு மாம்.

மாமை யூர்தரு மணிநிறத் திவட்கே.

(56—வது வரி.)

'கனறலைப்பழுத்த்' என்பதுமுதல் 'பரப்பே' என்பதுவரை.

(6—7 வரிகள்.)

(ப-ரை.) மாமை ஊர்தரும்-இளமைப்பருவமிக்க, மணி நிறத்து இவட்கு - மணிபோலு நிறத்தினளாகிய இத்தலைவிக்கு, கனல் தலை பழுத்த - அழலுதல் தம்மிடத்து முதிர்ந்த, நிரல் - நிரண்ட, பரல்-பரற்கற்களையுடைய, முரம்பு - பாறைகள், வயல் வளை - வயற்சங்கு கள், கக்கிய - உமிழ்ந்த, மணி நிரை பரப்பே - கூட்டமாகிய முத் தினமேயாகும்.

(வி-ரை.) தலை - ஏழனுருபு. மாமை - வேறுபாடான் நிறம் (பசலைநிறம்), இதனை வைவர்ண்யர் என்பர் வடநூலார். கனல்-முத னிலைத் தொழிற்பெயர். நிரல் பரல்-வினைத்தொகை நிலைத்தொடர்.

'அ எனபதுமுதல் 'அணங்கிழலே' எனபதுவரை.
(8—9 வரிகள்.)

யசர் வீரிதது - அக்கல்வழியிற் கிளைத்து, எழுந்து - மேலே ர் - படராகின்ற, புகை நீழல் - புகைநிழலாண, பொதுளிய - தளிர்கிறைந்த, காஞ்சி - காஞ்சியும், மருது - மருது மகிய மாஙகளின், அணி நிழலே - கல்லநிழலேயாகும்

(வி-ரை) அசர் - வழி, அதாண்டுக் கல்வழிக்காயிற்று. பொதுளல் - தழைததல். அணிநிழல் - அழகிய நிழல் எனறலுமொனறு; நிழலுகணியாவது குளிரசசி.

'தீவாய்' என்பதுமுதல் 'வயன்மாதினரே' எனபதுவரை.
(10—11 வரிகள்.)

(ப-ரை.) தீ வாய - தீப்போற்புகையாகின்ற வாயினையுடைய, புலிபபல் - புலிப்பற்கள், செறி - அணிநதுள்ள, குரல் - கழுத்தை யுடைய, எயிற்றிப் - பாலைநிலப்பெண்கள், கழுநீர் - கழுநீராகிய கணகளை, மலையுட்-பறிகின்ற, வயன்மாதினரே-கடைசியரேயாவர்.

(வி-ரை.) தீவாய்ப்புலியென வியையும்.

'அயற்புலமெறியும்' என்பதுமுதல் 'அரிகிணையே' எனபதுவரை.
(12—13 வரிகள்.)

(ப-ரை) அயல் புலம் எறியும் - (அப்பாலையின்) அயலிடத்தில் முழக்குகின்ற, எயினர் - மறவர்களது, மரதடி - மரத்தாற் செயத திடிப்பறையான து, நெடு நகர இரட்டும-நெடிய நகரத்தில் முழக்கா கினற, கவி - இனிமையகக்கும், அரிகிணையே - இநதிரனுக்குரிய மருதநிலப்பறையேயாகும.

(வி-ரை) எறிதல் - முழக்குதல் இரட்டல் - முழக்கல். கவி - களிப்பு, அது இவ்விடத்து இனிமைப்பொருட்டு. பயத்தல் - தருதல். அரி - இநதிரன்.

'இருட்கலர்' என்பதுமுதல் 'மலயக்காலே' என்பதுவரை.
(14—15 வரிகள)

(ப-ரை.) இருள் கலர்-மயக்கமேலிட்ட கீழ்மக்களது, புலன்என-ஐம்புலனபோல, சுழல்தரும்-சுழற்சியைததருகின்ற, சூறை-சூறைக்

காற்றுணது, மலர்மது அளைந்த-மலர்த்தேனெடு பரந்து வீசுகின்ற, மலயக்காலே - தென்றற்காற்றேயாகும்.

(வி-ம.) சூறை - சுழற்காற்று. கலர் - கீழ்மக்கள். "அம்பலம் பணியாக் கலரைப்போ ருச்சிறி யானென்னை கொல்லோ கருதியதே" என்றார் மணிவாசகரும்.

'எழுசிறைதீயும்' என்பதுமுதல் 'குருகோடுபுதாவே' என்பதுவரை.

(16—17 வரிகள்.)

(ப-ரை.) எழு சிறை நீயும்-எழாநின்ற சிறைகள் நீங்திடுகின்ற, எருவையும் - கழுகுகளும், பருந்தும் - பருந்துகளும், குவளையங்காட்டுகுவளைமலர்களாகிய வனத்திலுள்ள, குருகோடு புதாவே-நாரைகளுங் கொக்குகளுமேயாகும்.

(வி-ரை.) எழுசிறை - வினைத்தொகை நிலைத்தொடர். சிறை - சிறகு. குவளையங்காடு என்பதில் அம் சாரியை.

'வலியழிபகடு' என்பதுமுதல் 'பிணரிடங்சருமே' என்பதுவரை.

(18—19 வரிகள்.)

(ப-ரை.) வலி அழி பகடு-(வெப்பத்தால்)வன்மைகுன்றிய யானைகளும், நீர் வாய் - நீர் சொரியும் வாயுள்ள, செந்நாய் - செந்நாய்களும், தழை மடி - பால்பெருகும் மடியினையுடைய மேதியும்-எருமைகளும், பிணர் இடங்கருமே-பொருக்குடலுள்ள முதலைகளுமேயாகும்.

(வி-ரை.) அழிபகடு - வினைத்தொகை நிலைத்தொடர். பிணர் - சருச்சரை. இடங்கர் - முதலை.

'பட்லேர்கள்ளி' என்பதுமுதல் 'குலவரம்பையுமே' என்பதுவரை.

(20—21 வரிகள்)

(ப-ரை) பட்லெர் கள்ளி - கிளைகள் வெந்து உலர்ந்த கள்ளிமரமும், நெற்று உடை வாகை-நெற்றையுடைய வாகைமரம், சுருள்விரிசுருள்விரிந்த, சாலியும் - நெற்பயிரும், குலை அரம்பையுமே - குலைகள் தாங்குகின்ற வாழையுமேயாகும்.

'வடதிருவாலவாய்' என்பதுமுதல் 'திருவுறை' என்பதுவரை.
(22—26 வரிகள்.)

(ப-ரை.) வட திருவாலவாய்-(இடைக்காடன் பொருட்டுக் கோயில்கொண்டருளிய) வடமதுரையும், திருஏடகூர் - திருஏடகமென்னுந் திருப்பதியும், வெள்ளி அம்பலம்-வெள்ளியம்பலமும், கள்ளாறு-திருகள்ளாறும், இந்திரை - இந்திரையும், பஞ்சவன்னீச்சரம் - பஞ்சவன்னீச்சரமும், அஞ்செழுத்தமைத்த-பஞ்சாக்ஷரமமைத்த, சென்னி மாபுரம்-பெருமையுள்ள சோழபுரமும், சோன்றிருத்தளி-சோன்றிருத்தளியும், கன்னி செங்கோட்டம் - அழிவில்லாத திருச்செங்கோட்டமும், கரியோன்-திருமாலது, திருவுறை - அழகிய சோலையும்.

(வி-ரை.) சென்னி - சோழன். கன்னி - அழிவின்மை..

'விண்ணுடைத்துண்ணும்' என்பதுமுதல் 'திருவேல்' என்பதுவரை.
(27—29 வரிகள்.)

(ப-ரை.) விண் உடைத்துஉண்ணும்-விண்ணுலகத்துள்ளாரையழித்துண்ட, கண் இலி - கண்ணேட்டமில்லாதனவும், ஒருத்தன் - ஒரு சூரபன்மனுடைய, மறி திரை கடலுள் - மறித்து வீசாநின்ற அலைகடலில், மா என கவிழ்ந்த - மாமரமாகத் தலைகீழாக மூழ்ஏத்த, களவுடல் பிளந்த - களவானவுடலைக் கூருக்கிய, ஒளி கெழு - ஒளியிடைவிடாத, திரு வேல் - கூரியவேலேந்திய.

(வி-ரை.) கண் - கண்ணேட்டம், இலி - இல்லாதவன்; இது பிளந்தவேல் என மேல் வருதலால் சூரனே யுணர்த்திற்று. வேலுக்கழகு கூர்மையாதலால் அதனைத் 'திருவேல்' என்றார்.

'பணிப்பகையூர்தி' என்பதுமுதல் 'குன்றம்' என்பதுவரை.
(30—32 வரிகள்.)

(ப-ரை.) பணி பகை ஊர்தி - பாம்புக்குப் பகையாகிய மயிலை நடத்து முருகக்கடவுள், அருள் கொடி இரண்டென - தன தருளாகிய தெய்வயானைநாச்சியாரும் வள்ளிநாச்சியாருமாகிய விரண்டு தேவியருடனே, முன்னும் பின்னும்-முன்னரும் பின்னரும், மூதுக் கொள் நிறைந்த - பழமை கொள்ளும்படி நிறைந்துள்ள, அருவி அம்சாரல் - அருவிய சாரலையுடைய, ஒரு பாங்குன்றம் - ஒப்பற்ற திருப்பாங்குன்றமும்.

(வி-ம்.) பணிப்பகை - மயில். அருவியஞ்சாரல் என்பதில் அம் சாரியை.

'சூழ்கோளவிருந்த' என்பதுமுதல் 'மருதம்' என்பதுவரை.
(31—35 வரிகள்.)

(பத-ரை.) சூழ்கொள இருந்த-புடைசூழவிருந்த. கூடலம்பெரு மான் - மதுரைநாயகனது, முழுதுற நிறைந்த - இடையற நிறைந்த, இரு பதம்-இரண்டுநிருவடிகளையும், புகழார்-புகழ்ந்தவரையார், போம் வழி எனும் - போதுநர்வழியென்று சொல்லப்படுகின்ற, சுரம-பாலை நிலமும், மருதம் - மருதநிலமேயாகும்

(வி-ரை.) சூழ்கொள - ஒருசொல். சுரம் - வெப்பம், அதனை இடையறு தடைத்தாதலால் பாலைநிலத்தைச் சுரமென்றே வழ ங்கலாயினர். மருதநிலம் - வயல்சூழ்ந்த நிலம்.

பொன்னம் பொருப்ப! கின்னுளத்தியையின், மணிநிறச் திகவட்கு, பான்முரம்பு மணிநிரைப் பரப்பே, புகைநிழல் மருதணி நிழலே, எயிற்றியர் வெண்மா னினரே, எயினர் மரத்துடி கலியரி னிணமே, சுறை மலயக்காலே, எருவையும் பருந்தும் குருகொடு புகாவே, பகடு செந்நெ ய் மேதியுமிடங்கருமே, கள்ளிவாகை சாலியு மராபையுமே. கூடற் பெருமான் பதம் புகழார் போம்வழியெனுங் கடுஞ்சுரம் மருதமேயென விணைமுடிவு செய்க. (சூ 0)

திருக்கோவையார் சுருக்கம் செய்யுள்.

முகங்கண்டு மகிழ்தல்.

முகங்கண்டு மகிழ்தலென்பது—மருங்கணைவிறுதிக்கண் தலை மகளது முகமகிழ்தல் கண்டு, இவளும் யானும் மலருமதியுமெனத் தலைமகன் தன்னையப்புணர்த்தி மகிழாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

அழுந்தே னரகத் தியானென் றிருப்பவத் தாண்டுகொண்ட
செழுந்தேன் றிகழ்பொழிற் றில்லைப் புறவிற் செறுவகத்த
கொழுந்தேன் மலர்வாய்க் குமுதமிவள் யான்குருஉச் சுடர்செண்
டெறிந்தாங் கதுமலர்த் தும்மூயர் வானத் திளமதியே

முகையவிழ் குழலி முகமதி கண்டு
திகழ்வே லண்ணல் மகிழ்வுற்றது.

(ப-ரை.) அழுந்தேன் நரகத்து யான் என்று இருப்ப-யானினி நரகத்திற் புக்கழுந்தேனென்று செம்மாந்திருக்கு ; வண்ணம், வந்து ஆண்டுகொண்ட - (தானே) வந்தாண்டுகொண்ட, செழுந்தேன் திகழ் பொழில் - செழுந்தேன்போல்வானது விளங்கும் பொழிலையுடைய, தில்லை புறவில் - தில்லையைச சூழ்ந்த (இளங்) காட்டில், செழு அகத்த - செய்யின்கணணவாகிய, சொழு தேன் - கொழுவியதேனையுடைய, மலர் வாய் - மலராகின்ற வாயையுமுடைய, குமுதம் இவள் - குமுதமலர் இவள், யான் குரூஉச்சுடர் கொண்டு எழுத்த - யான் நிறத்தையுடைய நிலாவைக்கொண்டெழுத்த, அங்கது - அக்குமுதத்தை, மலர்த்தும் - மலர்த்தும், உயர் வானத்து இளமதி - உயர்ந்த வானத்தின்கண் திகழ் முதிராமதி, எ-று.

(வி-ரை) செம்மாந்திருத்தல்-இறுமாந்திருத்தல் செழுந்தேன்-ஆகுபெயர். புறவம் - இளங்காடு. அங்கது-ஒருசொல். குமுதம் - ஆகுபெயர்.

கேரிசையாசிரியப்பா.

நிறைமதி புரையாது நிலாமதி புரையாது
தேரான் றெளிவெனுந் திருக்குறட் புருத்தும்
குறைமதி மனனே நிறைமதி புரையா
தவர்க்கடற் பிறக்குங் குறையுடற் கோடியும்
கருங்கவைத் தீநாப் பெருமபொறிப் பகுவாய்த்
தழல்விழிப் பாந்த டாரிரை மாந்தியு
மிச்சி லுமிழ்ந்து மெய்புட் கறுத்துங்
கணக்கோர்ச் சினத்து மணங்கோர்க் கனிக்குங்
குமுத மலர்த்தியுங் கமலங் குளிப்பவுங்
கடல்சூ ழுலகின் மதிநடு விகந்தும்
பெருமறை கூறி யறனிகி தோறு
முத்தழற் குடையோன் முக்கட் கடவுளென்
றறுத்திடும் வழக்குக் கிடக்க வொருகால
வான்வர நதிக்கரை மருங்மக மெடுத்த
நீக்குணத் தக்கன் செருக்களந் தன்னுட்
கண்டொறும் விசைத்த கருப்புத் தானமும்
வளையுமி ழாரமுஞ் சுரிமுகச சங்கும்
வலம்புரிக் கூட்டமுஞ் சலஞ்சலப் புஞ்சமு

நக்கினக் குழலும் வளவயி னங்கி
யுழவக் கணத்தர் படைவா ணிறுத்துங்
கூடற் கிறையோன் குரைகழற் படையா
லீரெண் கலியும் பூழிபட் டுதிர
நிலஞெடு தேய்ப்புண் டலமத் தலறியுஞ்
சிதைந்துறைச் செழுபழித் தீமதி புரையாது
முண்டகம் விளர்த்தி முதிரா தலர்ந்து
மழுதநின் னுளறத் மறிவறி வித்துங்
தீக்கதி ருடலுட் செல்லா திருந்துங்
திகோயாத் தாரைகள் சேரா
மூலையா வென்றி யிவண்முக மதிக்கே.

நிறைமதிபுரையாது - இவண்முகமதிக்கே. பதத்-இரவுக்குறி. துறை - முகமகண்டுமெழிற்றல்.

'நிறைமதி' என்பதுமுதல் 'புரையாது' என்பதுவரை.
(1—3 வரிகள்.)

(டீகை.) தேரான்றெளிவுஎனும்-தேரான்றெளிவுஎன்னு முதற் குறிப்பையுடைய, திருக்குறள் புகுந்தும் - திருக்குறளின் பொருளை யாராய்ந்தறிந்தும், குறைமதி மனனே - அறிவுகுறைந்த மனனே, நிறைமதி புரையாது - முழுமதி என்று மொவ்வாது, நிறைமதி புரை யாது - முழுமதி யெத்தனையு மொவ்வாது, நிறைமதி புரையாது - முழுமதி எவ்வாற்றானு மொவ்வாது.

(வி-கை.) தேரான் றெளிவெனுந் திருக்குறள்— "தேரான் தெளிவுந் தெளிந்தான் கணேயுறவும், நீரா விடும்பை தரும்" என் பது. புகுதல் - தண்ணிதாயாராய்தல். புரைதல் - நிகர்த்தல்.

"உவர்க்கடற்பிறந்தும்' என்பதுமுதல் 'கறுத்தும்'
என்பதுவரை.
(4—7 வரிகள்.)

(டீகை.) உவர் கடல் பிறந்தும் - உப்புக்கடலிற் பிறந்தும், குறை உடல் கோடியும் - குறைகின்ற வுடலான தி கூனியும், கரு - கருணையாகிய, கலை - பிளவுள்ள, தீ நா-நெருப்பு நிழ்கின்ற நாக்கை யும், பெரு - பெரிய, பொறி - புள்ளிபொருந்த, பகு வாய் - பேழ்

வாயையும், தழல் விழி-கனலும் விழியையுமுடைய, பாக்தன் - இராகு வென்னும் பாம்பினுல், இரை மாக்கியும்-இரையாகவுண்டும், மிச்சில் உமிழ்ந்து - உச்சிட்டமாக உமிழப்பட்டு, மெய்யுள் கறுத்தும் - தன்னுடலினுண் மறுப்பட்டும்.

(வி-ரை.) கோதிதல் - கூனுதல் பேழ்வாய்-பெரியவாய். தழல் விழி - வினைத்தொகை. இலைதொடர். தான்-அசை. மாக்தல்-உண்டல். உமிழ்தல் - கக்குதல்.

'தணங்தோர்' என்பதுமுதல் 'மதிநடுங்கும்' என்பதுவரை.

(8—10 வரிகள்.)

(ப-ரை) தணங்தோர் சினத்தும் - பிரிந்தவரைக் கோபித்தும், மணங்தோர் களித்தும் - புணர்ந்தவரைத் தண்ணளிசெய்தும், குமுதமலரைத் தியும் - குமுதமலரை யலரசெய்தும், கமலமருவித்தும்-தாமரைமலரைக் கூபசெய்தும், கடல் சூழ் உலகில்-கடலாற் சூழப்பட்ட வுலகத்தே, மதிநடுங்கும் - மாதமத்தியின் மறைதும்.

(வி-ரை.) தணத்தல்-பிரிதல். சினத்தல் - கோவித்தல். தண்ணளிசெய்தல் - க்ருபைசெய்தல். குமுதம் - ஆகுபெயர்; கடலும் அது. மதி-ராசம். இரத்தல் - மறைதல்.

'பெருமறை' என்பதுமுதல் 'கிடக்க' என்பதுவரை.

(11—13 வரிகள.)

(ப-ரை.) பெரு மறை-பெரிய வேதீங்கள், கூறி அறை-வெளிப்படையாய் மூசறைகின்ற, விதிதோறும் - விதிகளெல்லாம், முத்தழற்கு உடையோன் - மூத்தழலாலாகியவேள்விக்கருத்தன், மூக்கண் கடவுள் என்று - சோம சூரியாக்கினிகளாகிய மூன்று கண்ணுள்ள பரமசிவனென்று, அறத்திடும் வழக்கு - கண்டித்துச் சொல்லிய முறைமை, கிடக்க - ஒருசாரிருக்க.

(வி-ரை.) முத்தழல் - த்ரேதாக்நி. முதனூலாதலன் வேதத்தைப் 'பெருமறை' என்றார். கூறியறை யென்றமையான் வெளிப்படையாய் மூசறைதலென் றுரைக்கலாயிற்று. வேள்விக்கருத்தன் - யாககர்த்தா.

'ஒருகால்' என்பதுமுதல் 'தக்கன்' என்பதுவரை.
(13—15 வரிகள்.)

(பரை.) ஒருகால் - ஓர்காலத்தில், வான் - தேவர்களுடனே, வாருகிக்கரை - (காசிக்) கங்கைக்கரையிடத்திச, மருள் - தனதுமருளால், மகம் எடுத்த - யாகம் பண்ணத்தொடுத்த, நீடுகுணம் தக்கன் - குணத்தால் நீடியதக்கனுடைய.

(வி-ரை.) கங்கையிற் சிறந்தன வேறொன்றின்மையான் அதனை 'வாருகி' என்றார்.

'சேருக்களத்தன்னுள்' என்பதுமுதல் 'நத்தினக்குழுவும்' என்பதுவரை.
(15—19 வரிகள்.)

(பரை.) சேருக்களத்தன்னுள் - போர்க்களத்தில், கண்டொடும் - கண்ணுக்கள்தோறும், விசைத்த - சிதறிய, கருப்பு தரளமும் - 'கருப்பின் முத்தங்களும், வளை உமிழ் ஆரமும் - சங்கங்களீன்ற முத்தங்களும், சுரி முகம் சங்கும் - சுரித்த முகமுள்ள இடம்புரிச் சங்கங்களும், வலம்புரி கூட்டமும் - வலம்புரிச்சங்கின் கூட்டமும், கலஞ்சலப்புலுமும் - கலஞ்சலச் சங்கத்தினாலும், கதி இனம் குழுவும் - இப்படியென்னும் சங்கக்கூட்டமும்.

(வி-ரை.) தன்-சாரியை. கண் - கண்ணு. வளை-ஆகுபெயர். புரி - முறுகு.

'வளையினத்தி' என்பதுமுதல் 'அலமந்தலறியும்' என்பதுவரை.
(19—25 வரிகள்.)

(பரை.) வளையின் நத்தி - வளத்தவிடத்தே பெருகி, உழவக் கணத்தர்-கூட்டமாகிய உழவர்கள் (ஓட்டும்), படை வாள்-கலப்பைக் கொழுவை, நிறுத்தும் - இடறப்பண்ணு மருதஞ்ஞ்ஞ்ச, கூடற்கு இறையோன் - மதுரைநாயகனது, குரை கழல் படை யால் - ஒலிபுரி மொலிக்கின்ற திருவடியாகிய ஆயுதத்தால், இருவெண் கலையும் - பதினாறு கலைகளும், பூழிபட்டு உதிர - புழுதிபட்டுச் சிக்குமாறு, நிலனெடு தேய்ப்புண்டு - நிலத்தோடு தேய்க்கப்பட்டு, அலமந்து அலறியும் - சுழன்றலறியும்.

(வி-ரை.) வயின் - இடம். நத்தல் - பெருகல். அலமந்து என் பதற்குப் பகுதி அலமர. நிலன்-போலி.

சிதைந்துறைக் தெழுபழித் தீமதி புரையாது.

(19—வது வரி.)

(ப-ரை.) சிதைத்து உறைக்து - அழிந்திருந்து, எழும் - எழா கின்ற, பழி - பழியுள்ள, தீ மதி புரையாது - கொடியதிங்க ளொவ் வாது.

(வி-ரை.) சிதைதல்-அழிதல். புரைதல் - நிகர்த்தல்.

'முண்டகம்' என்பீதுமுதல் 'முகமதிக்கே' என்பதுவரை.

(25—29 வரிகள்.)

(ப-ரை.) முண்டகம்-செந்தாமரைப்பூவை, விளர்த்தி-வெளுக் கச்செய்து, முதிராது அலர்ந்தும் - வாடாது எப்போது மலர்ந்தும், அமுதம் கின்று உறைந்தும் - அமுதம் ஒழியாமற் பொருந்தியும், அறிவு அறிவித்தும்-தன்கருத்தை யறிவித்தும், தீ கதிர் உடலுள்-வெம்மையான கதிருடலில், செல்லாதிருந்தும் - மறையாதிருந்தும், தாரைகள் இளையா - விண்மீன்களோடுகூடி, சோரா - சோராம லும், முளையா - (காலையிற்பட்டு மாலையில்) முளையாமலுமுள்ள, வெ ன்றி - வெற்றிகொண்ட, இவள் முகம் மதிக்கு - இவள் முகமாகிய மதிக்கு.

(வி-ரை.) முண்டகம்-ஆகுபெயர். இளைத்தல் - கூடல். மதி - சந்திரன்.

குறைமதி மனனே! இவள் முகமதிக்கு, கூடற் பெருமான் கழற்படையால் தக்கன் யாகசாலையாகிய செருக்களத்தில் நிலவெறி தேய்ப்புண்டலறிச் சிதைந்தெழுந் தீமதியாகிய நிறைமதி புரையாது புரையாதென வினைமுடிவுசெய்க. (சுக)

திருக்கோவையார் கூற்றும் செய்யுள்.

கற்புப்பயப்புரைத்தல்.

கற்புப்பயப்புரைத்த லென்பது — கற்பறிவித்த செவிலி அவள் அவனெயொழிய வணங்காமையின், அவனூருங்களிறும் வினை வயிற் சென்றூர் அவ்வினை முடித்துக்கொடுத்து வந்து, தன்பந்தி யிற்சேர்ந்தது ஆண்டெ தங்காதாதலான், அவளது கற்பு, அந்திக் காலத்து வடமீனையும் வெல்லுமென, அவளது கற்புப்பயத்தமை கற்றாய்க்குக் கூறுகிற்றல். அதற்குச் செய்யுள்;—

சிற்பக் திகழ்தரு திண்மதிற் றில்லைச்சித் றம்பலத்துப்
பொற்பத்தி யன்ன சடையவன் பூவண மன்னபொன்னின்
கற்பந்தி வாய்வட மீனுங் கடக்கும படிசடகத
மிற்பந்தி வாயன்றி வைகல்செல் லாதவ னீர்ங்களிறே.

கற்புப் பயத்த
அற்புத முரைத்தது.

(ப-ரை.) சிற்பம் திகழ்தரு-துண்டொழில் விளங்கும், திண் மதில் - திண்ணிய மதிலையுடைய, தில்லை சிற்றம்பலத்து - தில்லையிற் சிற்றம்பலத்தின்கணுளதாகிய, பொன் பரந்த அன்ன - பொற் றகட்டு நிழைபோலும், சடையவன்-சடையையுடையவனது, பூவணம் அன்ன - பூவணத்தை யொக்கும், பொன்னின - பொன்னினது, கற்பு - கற்பு, அந்திவாய் - அந்திக்காலத் தளதாகிய, வடமீனும் கடக்கும் - வடமீனையும் வெல்லும், (அதனால் எடுத்துக்கொண்ட வினையை யிடையூறின்றி யினிதின் முடித்து) அவன் ஈர் களிறு - அவனூரும் (மதத்தான்) ரியகளிறு, படி கடந்தும்-நிலத்தைக் கடந்தும், இல் பந்திவாயன்றி - இல்லின்கண் தன்பந்தியிடத்தல்லது, வைகல் செல்லாது - தங்காது, எ-று.

(வி-ரை) பொன்பந்தி - பொற்றகட்டிவரிசை. பூவணம் - ஓர் திருப்பதி பொன் - ஆகுபெயர். வடமீன் - அருந்ததி. கடத்தல் - வெல்லல். வைகல்செல்லாது - ஒருசொல்.

நேரிசையாசிரியப்பா.

ஏழ்கடல் வலைத்த பெருங்கட னுப்படர்
பதுதுடை நூறு பொற்பமர் பரப்பு
மாயிரத் திரட்டிக் கீழ்மே னிலையும்
யோசனை யடுத்த மாசுறு காட்சிப்
பலிக்கப் பொருப்பிற் றிடர்கொண் மூதூர்
களவுடை வாழ்க்கை யுளமனக் கொடியோன்
படர்மலை யேழுங் குருகமர் பொருப்பு
மாவெனக் கலிழ்ந்த மறிகட லொன்றுங்
கடுங்கனற் பூழி படும்படி நோக்கிய
நாரையெட் டுடைய கூரிலை நெடுவேற்
காற்படைக் கொடியினன் கருணையோ டமர்ந்த
புண்ணியக் குன்றம் புடைபொலி கூடற்

பிறைச்சடை மூடியினன் பேரரு ளடியவர்க்
கொருகாற் றவரு வுடைமைத் தென்னப்
பிரியாக் கற்பெனு நிறையுடன் வளர்ந்த
நெடுங்கய லெறிவிழிக் குறுந்தொடித் திருவின
டெய்வ மென் றெருகாற் றெளியவு மூளத்திலள்
பலவுபிர் தழைக்க வொருகுடை நிழற்று
மிருபுல வேந்தர் மறுபுலப் பெரும்பகை
நீர்வடுப் பொருவ நிறுத்திடப் படரினு
மேழுய நிரட்டி மதலைநட் டமைத்த
கன்பமுங் கடந்தனிலை யன்றி
யுடுநிறை வானப் பெருமுத லுயரச்
செய்யுமோர் கூடம் புணர்த்தி
னெய்ம்மிதி யுண்ணு நவன்கடக் களிறே.

எழ்கடல்வளைந்த - அவன்கடக்களிறே - பதஞ். மணஞ்சிறப் புரைத்தல், துணை-கற்புப்பயப்புரைத்தல்.

'ஏழ்கடல்' என்பதுமுதல் 'மாசறுகாட்சி' என்பதுவரை.

(1—4 வரிகள்.)

(ப-ரை.) எழ்கடல் வளைந்த-ஏழுகடலாற் சூழப்பெற்ற, பெரு ங்கடல் நாப்பண் - பெரும்புறக்கடனடுவில், பத்தடைநூறு - ஆயி ரம், யோசனை - யோசனையளவுள்ள, பொற்பு அமர் பரப்பும் - சிற்ப விதியமைந்த அகலமும், ஆயிரத்துஇரட்டி-இரண்டாயிரம், (யோசனை-யோசனையளவுள்ள), கீழ்மேல் நிலையும் - கீழ்நிலையு மேனிலையும், அடுத்த-பொருந்திய, மாசு அறு காட்சி-குற்றமற்ற தோற்றத்தினை யுடைய.

(வி-ரை.) பொற்பு - அழகெனினுமாம்.

'பளிங்கப்பொருப்பில்'என்பதுமுதல் 'நோக்கிய'என்பதுவரை.

(5—9 வரிகள்.)

(ப-ரை.) பளிங்கப்பொருப்பின் - பளிங்கு மலைபோலும், திடர் கொள் - உயர்ச்சிகொண்ட, மூதூர் - (மகேந்திரமென்னும்) பேரு நிடத்தே, களவு உடை-மாயமுடைய, வாழ்க்கையுள்-வாழ்க்கையுள்ள, மனக்கொடியோன் - கொடியமனத்தை யுடையோன், படர்மலை

எழும்-அகன்றுள்ள வேழமலையும், குருகு அமர் பொருப்பும்-கிரவுஞ்சமென்னும் பறவைவடிவாகிய மலையும், மாஎன கவிழ்ந்த - மாமரமாகத் தலைகீழாகவிருந்த, மறி கடல் ஒன்றும் - அலைகளே மறித்தெதிரியாகின்ற கடலொன்றும், கடுங்கனல் பூழி படும்படி - வேகமாகிய நெருப்புப் பொடிகளாகும்படி, நோக்கிய - சினந்த.

(வி-ரை.) குருகு - பறவை.

'தாரையேட்டுடைய' என்பதுமுதல் 'புடைபோலி' என்பதுவரை.

(10—12 வரிகள்.)

(ப-ரை.) தாரை எட்டு உடைய-எட்டுக் கண்களையுடைய, கூர் இலை நெடு வேல் - கூரிய இலைத்தொழில்வாய்ந்த நெடியவேலையேந்திய, கார்ப்படை கொடியினன் - கோழிக்கொடியை யுடையவன், கருணையோடு-இருபையோடு, அமர்ந்த-எழுந்தருளிய, புண்ணிய குன்றம்-மோக்காரணமாகிய திருப்பரங்குன்றம், புடை பொலி - பக்கத்தில் விளங்கப்பெற்றிருக்கின்ற.

(வி-ரை.) காலில் ஆயுதமாக முள்ளையுடையதாதலால் அதனைக் 'கார்ப்படை' என்றார். புண்ணியம் அதன் பயனாகிய மோக்ஷத்தைக் குறித்தது.

'கூடல்' என்பதுமுதல் 'தவருவுடைமைத்தென்ன' என்பதுவரை.

(12—14 வரிகள்.)

(ப-ரை.) கூடல் - மதுரையில், பிறை சடை முடியினன் - பிறையைத்தரித்த சடைமுடிக்கடவுட்குரிய, போருள் முடியவர்க்குப்போருள்பெற்ற தொண்டர்க்கு, ஒருகால் - ஒருகாலத்திலும், தவரு உடைமைத்து என்ன - தப்பிப்போகாத பொருள்போல.

(வி-ரை.) பிறைச்சடை முடியினன் - சிவபெருமான்.

பிரியா' என்பதுமுதல் 'தேளியவழுளத்திலள்' என்பதுவரை.

(15—17 வரிகள்.)

(ப-ரை.) பிரியா - (தன்னை) விட்டு நீங்காத, சுற்பு என்னும் - சுற்பென்று சொல்லுகின்ற, நிறையுடன் வளர்ந்த - மாட்சிமையுடன் வளர்ந்த, நெடு சுயல் எறி விழி-நெடுமையாகிய கயலைத் தோல்வித்த

விழியையும், குழுத்தொடி - சிறிய தொடியையுமுடைய, திருவினள்- திருவையொத்தவள், ஒருகால் - ஒருகாலத்திலேனும், உளத்து-தன துள்ளத்தில், செய்யம் என்று - (நாயகனைப்பார்க்கிலும்) பிறதெய்வ முண்டென்று, தெரியவும் இலள் - ஆராயவுமெண்ணுள்.

(வி-ரை.) மாட்சிமை - மேன்மை, எறிதல் இவ்விடத்தில் வேறல் என்னும் பொருளது. தொடி - வளையல்.

'பலஉயிர்தழைக்க' என்பதுமுதல் 'படரினும்' என்பதுவரை. (18—20 வரிகள்.)

(ப-ரை.) பல உயிர் தழைக்க-பலவுயிர் களுந்தழைக்குமாறு, ஒரு குடை நிழற்றும் - ஒருகுடையால் தண்ணளிசெய்கின்ற, இருபுல வேந்தர் - இரண்டுதேயத் தரையர்களுக்குள், மறு புலம் - வேறிடப் புலத்தின்பொருட்டு வீளேற்ற, பெரும்பகை-நெடுநாட் பகைமையை, நீர் வடு பொருவ - நீரானது பிளவபடவந்த வடுவைப்போல, நிறுத்திட - நீக்கி பொன்றுபடுத்தும்படி, ... ணும்-அரசன் சென்றுழும்..

(வி-ரை.) புலம் - தேயம். பொருவல் - ஒத்தல், படர்தல் - செல்லுதல்.

'ஏழுயரிராட்டி' என்பதுமுதல் 'கடக்களிறே' என்பதுவரை. (21—25 வரிகள்.)

(ப-ரை.) ஏழிராட்டி-பதினெண்குழுவளவையின், உயர்-உயர்ந் துள்ள, மதலை நட்டு - தூண்களை நிறுத்தி, அமைத்த-செய்த, தண் பதங்கூடம் தனிலேயென்றி - தனது பழமையான கூடமாகிய ஒரே விடத்தன்றி, அவன் கட களிறு - தலைவனது மதயானையானது, உடு நிறை - உடுக்கணிறைந்த, வானம் - வானளவும், பெரு முகடு - நெடிய சிகரமானது, உயர செய்யும் - உயரும்படி இயற்றப்பட்ட, ஓர் கூடம்-பிரிதோர் கூடத்தில், புணர்த்தின்-இருத்தினால், நெய்ம் மிதி - நெய்யோடி கலந்த கவளத்தை, உண்ணுது-உண்ணப்பெறாது.

(வி-ரை.) யானைக் குண்பிக்குங் கவளம் காலால் துவைத்துச் செய்யப்படுவதாதலால், அதனை 'நெய்ம் மிதி' என்றார். மிதவை யென்பது மிதியென்றுயது செய்யுள் விகாரம் என்பாருமுளர். மத லை - தூண். கடம் - மதம். கூடம் - யானைப் பந்தி.

தாற்படைக் கொடியினன் புண்ணியக்குன்றம் புடை பொலி கூடம் சடைமுடியினன் பேரரு ளடியவர்க்குத் தவமுறுவுடைமைத் தென்ன, பிரியாக் கற்பெனு நிறையுடன் வளர்ந்த திருவின ளுளத்

தில் பிறதெய்வமுமை டெனத் தெளிதில னாதலால், தலிலவன் வேத சிர் பெரும்பலகையை நீர்வடுப்பொருவ நிதத்திடப் படினும அவன் கலிஅ தன் பழய கூடதனன்றி பிறிதோர்கூடம் புனர்த்தின் செயம் மிதி யுலை டுபதன வினைமுடிவு செய்க. (சூஉ)

தீருக்தோவைடார் ஈoஉ-ம் செய்யுள்.

வாழ்ந்னைநலங்கூறல்.

வாழ்நீனைநலங்கூறு லென்பது—மணமக்னைக்கண்ட செவிலி, மகிழ்வோடி சென்று நின்மகளுடைய இல்வாழ்க்கை கலத்திற்கு உவமை கூறின் நின்மகளுடைய இல்வாழ்க்கை கலமல்லது வேறுவகை யில்லெடியன கற்புயக்குத் தலைமகளது வாழ்க்கைகலங கூறுகிற்கல் அதற்குச செய்யுள் —

நேரண்டின மேவுஞ் சுடர்க்கழு லோன்றில்லேத் தொண்ணகரிற்
கண்டின மேவுமி னீய ணிள்கொழு கன்செழுமென்
றண்டின மேவுதிண் டோளவன் யானவ டப்பணிவோள்
வண்டின மேவுங குழலா ளயன்மன்னு மிவ்வயலே.

மணமனைச் சென்று மகிழ்தரு செவிலி
யணிமனைக் கிழத்திக் கதன்கிறப் புரைத்தது.

(ப-ரை.) தொண்டு இனம் மேவும் - தொண்டாகிய இனத்தைப் பொருந்தும், சுடர் கழலோன் - சுடர்க்கழலே யுடையவனது, தில்லே - தில்லையாகிய, தொல் நகரில் - பழைய நகரிடத்து, கண்ட இல் - (யான்) கண்ட (அவளது) இல்லம், மேவும் நம்இல்-மேவப்படு நமதில்லத்தோடொக்கும், அவள் நீ - அவள் நின்னேடொக்கும், தண்டு இனம் மேவுமை - தண்டாகிய இனத்தை யொக்கும், செழு மெல் - வளவியல் மெல்லியவாகிய, திண் தோளவன் - திண்ணிய தோள்களேயுடையான், நின் கொழுநன்-நின் கொழுநனேடொக்கும், அவள்தன் பணிவோள் - அவடன்னேப் பணிந்து குற்றேவல் செய் வாள், யான் - என்னேடொக்கும், வண்டு இனம் மேவுங் குழலாள் அயல்-வண்டினம் பொருந்துங் குழலேயுடையாளது அயல், இ அயல்- இவ்வயலோடொக்கும் (வேறு சொல்லலாவதில்லே), எ-று.

(வி-ரை.) தண்டு - தூண். கொழுநன் - கணவன்.

ஈசு ஈ. நேரிசையாசிரியப்பா.

பெண்ணெனப் பெயரிய பெருமகட் குலனு
ளுணர்நில னுண்டு பராயவப் பெருந்தவங்

கரைபொரு பாகுபெறுக கடலிய தென்னாக
சாதவுபிரத் தெய்தத குழுமுத லனலில
திரையவ கடஉத தவனவ ரெருசற
பரிகடன மழுகிப பெறுமருள பெறற
நிரமகட கடருத நலனவள பொறையே
யிருவினை நாடி யுயிரொரு மைமருத
தழைபுன கடந்தது வாபமையின மதலை
சறபகம பேசுஅ மறபுதம பழுத
நிலாவிலக கடநத தவனவ லிலமை
பேரா வாயமைனை னூரசீலக கடருது
மறறவ ளுரன கொறறவெண் குடையே
யேபுனப பரவியோ டெழுகதி நோகதிய
சிறறில நிரிஞநிறு பொறபூ வென்ன
நினமுகக கிளையினா தமமையுங சடநதனர
மறறவட பாதத மநிகதிளை யிளரே
யுடனிழுன் மான வனதரு னிறகு
மெனசினையும் கடநதன னனனவட கிளியோள
கொலைமதின மூன்று மிகலறக கடருது
பெருகில வெறிநத புகாமுகத துளைகைப
பொழிமதக கறையடி யழிதரக கடருது
களவுத தொழிலசெ யரிமக னுடலத
திருநுக னுக்கத தெரிபெறக் கடருது
மாறுகொண் டுறையு மதிநூற் கடல்களர்
சமயக கணககா நநிறங் கடருது
புலனெறி தியங்கும பொய்யுளங் கடநத
மலருட னிறைாது வான்வழி கடகும
பொழினிறை கூடற புதுமதிச சடையோன்
மன்னிலை கடவா மனததவா போல
வொன்னல நிடுநதிறைச செலினுக
தன்னிலை கடவா தவன்பரித தேரே.

பெண்ணைனப்பெயரிய - அவன்பரிததேரே. பதடி - மணஞ் சிறப்புரைததல். துறை - வாழகைகலெங் கூறல்.

'பெண்ணென' என்பதுமுதல் 'பெருந்தவம்' என்பதுவரை.
(1—2 வரிகள்.)

(ப-ரை.) பெண் என-பெண்ணென்று, பெயரிய-பெயருள்ள, பெருமகள் சூலனுள் - நல்ல மகளிர் கூட்டத்துள், உணு-உணவை, நிலன் உண்டு - நிலத்தை மெழுகி அழுதுண்டு, பாய்ந்த (மகட்பேறு கருதி) தோற்ற, அப்பெருந்தவம் - அம்மாதவமானது.

(வி-ரை.) மகட்பேறு - மகளைப்பெறுதல்.

'கண்ணுற' என்பதுமுதல் 'குடிமுதலன்னை' என்பதுவரை.
(3—4 வரிகள்.)

(ப-ரை.) கண்ணுற - கண்கூடாகக் காணுமாறு, உருப்பெறும் - ஓர்வடிவெடுத்துவந்த, காட்சியது என்ன - காட்சிபோல, கரு உயிர்த்தீ எடுத்த - கருப்பங்கொண்டு பெற்றெடுத்த, குடி முதல் அன்னை - நங்குடிக்கு முதல்வியாகிய அன்னையே.

(வி-ரை.) கண்கூடு - பிரத்தியக்ஷம். காட்டியது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. முதல்வி - தலைவி.

நின்னையுங் கடந்த தன்னவ ளருங்கற்பு.
(5—வது வரி)

(ப-ரை.) அன்னவள் - அம்மகளது, அருங்கற்பு-பெறுதற்கரிய கற்பு, நின்னையும் கடந்தது - தனது கற்பினு மேற்பட்டது.

(வி-ரை.) கடத்தல் - ஈண்டு மேற்படலென்னும் பொருளில் வந்தது.

'அரிகடல்' என்பதுமுதல் 'நல்னவள்போறையே'
என்பதுவரை.
(6—7 வரிகள்.)

(வி-ரை.) நலன் அவள் பொறை - அந்நல்லாளது பொறுமை, கடல் சூழ்ந்த - கடலின் சூழ்ந்த, அரி - திருமாலிடத்தே, பெறும் அருள் பெற்ற - பெறத்தக்க அருளைப்பெற்ற, நிலமகள் - நிலமகள் பொறுமையினும், கடந்தது - மேற்பட்டது.

(வி-ரை.) கடல்சூழ்ந்த என்பதை கடன்சூழ்ந்த வென்றது இலக்கணை. நிலமகள் - ஆகுபெயர்.

'இருவினைநாடி,' என்பதுமுதல் 'வாய்மையின்மதனே' என்பதுவரை.

(8—9 வரிகள்)

(ப-ரை.) வாய்மையின் மதன் - அவளது சத்திய நிலைமையானது, இருவினை நாடி-இருவினை காரணமாக, உயிர்தொறும் அமைத்த - எல்லாவுயிரிடத்தமைத்த, ஊழையும் கடந்தது - ஊழ்முறைமையினும் மேற்பட்டது.

'கற்பகம்' என்பதுமுதல் 'அன்னவளில்லம்' என்பதுவரை.

(10—11 வரிகள.)

(ப-ரை.) அன்னவள் இல்லம் - அவளது மனைச்செல்வமானது, கற்பகம் போலும் - கற்பகத்தருப்போலும், அற்புதம் பழுத்த-அதிசயமிருந்த, நின் இல்லம் கடந்தது - உனது மனைச்செல்வத்தினும் மேற்பட்டது.

(வி-ரை) இல்லம் - ஆகுபெயர்.

'பேராவாய்மை' என்பதுமுதல் 'வெண்குடையே' என்பதுவரை.

(12—13 வரிகள.)

(ப-ரை.) அவள் - அவள், ஊன் - தலைவனது, கொற்றம் - வெற்றியாலாகிய, வெண்குடை - அரசியல், பேரா வாய்மை - தவறுபடாத வாய்மையுள்ள, நின ஊரனை - உனது தலைவனரசியலினும், கடந்தது - மேற்பட்டது.

(வி-ரை.) வெண்குடை-ஆகுபெயர் ஊரனை-ஆகுபெயர் (உருபுமயக்கம). மற்று-அசை.

'ஏழிளம்பூரவி' என்பதுமுதல் 'கிளையினரே' என்பதுவரை.

(14—17 வரிகள்.)

(ப-ரை) அவள் - அவளை, பார்த்த - ஆதரவாக நோக்கியுள்ள, மதி - மதிப்புள்ள, கிளையினர் - உறவினர், உளை - பிடரிமயிரினையுடைய, ஏழு பாவியோடி - ஏழுபரிவித்தேரோடி, எழும் - தோன்றுகின்ற, கதிர் நோக்கிய - ரூரியனைப் பார்த்திருந்த, சிறு இலை - சிறிய இலை நெருங்கிய, நெரிஞ்சில் பொன் பூ என்ன - நெரிஞ்சிச்செடியின் பொன்மையுள்ள மலர்போல, நின முகம் - நின்முகநோக்கிய,

இனையினர் தம்மையும் - உறவினரைப்பார்க்கினும், கடந்தனர் - அதிகரித்தனர்.

(வி-ரை) மற்று - அசை. பொன்மை - பொன்னிறம்.

'உடனிழன்மான' என்பதுமுதல் 'இனியோள்' ஏன்பதுவரை.
(18—19 வரிகள்.)

(பதவுரை.) அன்னவட்கு - அத்தலைவிக்கு, இனியோள் - அன்புள்ள பாங்கியானவள், உடல் நிழல்மான - உண்ணுடலி னிழலைப் போல, உனது அருள் நிற்கும் - உனதருள்வயதே நிலைபெற்ற, என்னையும் - என்னினும், கடந்தனள் - உயர்ந்தனள்.

(வி-ரை.) மாறுதல - போலுதல்.

'புலனெடுதியங்கும்' என்பதுமுதல் 'சடையோன்'
என்பதுவரை.
(27—29 வரிகள்.)

(பதவுரை.) மலருடன் நிறைத்த-மலர்களுட னிறைத்து,வான்வழி கடக்கும் - ஆகாயவீதியை யூடுருவிச செல்லுகின்ற,பொழில் நிறைசோலைகளா னிறைத்த, கூடல் - மதுரையினிடத்து, புலனெடு தியங்கும் - புலனெடுகூடி மயங்குகின்ற, பொய் உளம் கடந்த - உண்மைப்பொரு ளறிதலில்லா உள்ளத்தைக்கெட்டாத, புதுமதி-இளமதியைத்தரித்த, சடையோன் - வேணியனுகிய கடவுளது.

(வி ரை.) புலன் - ஐம்புலன்கள். புதுமதிச் சடையோன் - சிவபெருமான்.

'கோலே' என்பதுமுதல் 'கறையடி' என்பதுவரை.
(20—22 வரிகள்.)

(பதவுரை.) கொலை - கொலைத்தொழில்கண்ட, மதில் மூன்றும் - மூப்புரத்தையும், இகல் அற கடந்து - பகையறவென்று, பெரு நில எறித்த - மிகுந்த சக்திரிகையையீகிய தந்தங்களுள்ள, புகர் முகம் - புள்ளியுள்ள முகத்தினிடத்து, தூலை கை - தூலையாகிய துதிக்கையையும், மதம் பொழி - மதமழையையுமுடைய, கறையடி - யானையானது.

(வி-ரை.) மூப்புரம் மதிலுருவா யிருத்தலின் அவற்றை 'மதில்' என்றே கூறினர். இவை இரும்பு பொன் வெள்ளி யென்பவற்று

னியன்றுள்ளன; "இரும்புபுடை மாமதில்பொன்னிஞ்சி வெளளிப்புரிசை யனரேறர், துரும்புதுச செற்ற கொற்றத் தெய்வபிரான் நிலலேசுழ் பொழிறதே" எனபது நூருகேகோவையார் நில - ஆருபெயர்.

'அழிதரக்கடந்து' என்பதுமுதல் 'எரிடோறக்கடந்து' என்பதுவரை.

(22—24 வரிகள்.)

(ப-ரை) அழிசர கடகது - அழிபபடிவென்ற, களவு தொழிலில செய - களவாகிய போர்த்தொழிலபுரிந, அரிமடை டலம - மனமதனுடலானது, திரு நூல தோகைத்து - அழகிய தெறிதிக கண்ணினலை, எரிபற கடகது - நெருப்பற பொசிபபழி வென்ன.

(வி-ரை) அழிச ஒருசொல், பகுதி அழிசா அரிமகன-ஈண்டு ஆரவினமகன.

'மாறுகொண்டு' என்பதுமுதல் 'கடந்து' என்பதுவரை.

(25—26 வரிகள்.)

மனனிலை கடவா மனத்தவா தோல.

(30—வது வரி)

(ப-ரை) மாறுகொண்டு - ஒனறுகொளனறெரிவாமல், அறையும - தருகனை செயகிறற, மதி நூலகடல கிளா - புதியாரனது பனனூறபொருளை யாராயநலி னூகமிக்க, சமடகணகக்கம-சமய வாதிகளது, திறம கடகது - விகறபஙகளை சப்பாலாய, மன - நிலை பெற்ற, நிலை கடவா - அருணிலையிற் பிறழாத, மனத்தகரபோல - மனமூள்ள அன்பாபோல.

(வி-ரை) மதிநூல் - அறிவுநூல்.

'ஒன்னலர்' என்பதுமுதல் 'பரித்தேரே' என்பதுவரை.

(31—32 வரிகள்.)

(ப ரை) ஒன்னலர் - பகைவரால், இடு - செலுத்தப்படுகின்ற, திறை - திறைப்பொருட்டு, செலினும் - அரசன செனறாலும், அவன் - அத்தகலேவனது, பரிதேர் - குதிரைபூணட தேரான்து, தன நிலை கடவாது - தனனிடமவிட்டுத் தகாருதலில்லை.

(பி-ரை.) ஒன்னலர் - சேராதவர் (பகைவர்). திறை - இறைப் பொருள்.

கருவுயிர்த்தெடுத்த அன்னை, அன்னவள் கற்பு நின்னையுங் கட
ந்தது, அவள் பொறை நிலமகட் கடந்தது, வாய்மையின் மதன்
ஊழையுங் கடந்தது, அன்னவ ளில்லம் நின்னில்லங் கடந்தது, மற்
றவ ளூரன் கொற்ற வெண்குடை நின்னூரனைக் கடந்தது, மதிக்
கினையினர் தம்மையும் கடந்தனர், பொன்னவட் கினியோள் என்னை
யுங் கடந்தனள், புதுமதிச் சடையோன் மன்னிலே கடவா மனத்தவர்
போல ஒன்னல ரிடுந்திறை செலினும் அவன் பரித்தேர் தன்னிலே
கடவாதென வினைமுடிவு செய்க. (கூ)

திருக்கோவையார் ஈரடி-ம் செய்யுள்.

பள்ளியிடத்தூடல்.

பள்ளியிடத்தூடலென்பது—வாயின் மறுத்ததிலமகள், ஆற்ரு
மையே வாயிலாகப்புக்குப் பள்ளியிடத்தானுகிய தலைமகனேடு,
நின்னை யிடைவிடாது நுகர்தற்கு, முற்காலத்துத் தவத்தைச் செய்
யாத தீவினையேனே நோவாதி, இன்றிவ்வாரு கிய நின்னை நோவ
தென்னை அதுநிடக்க, நின்காதலிமார் புறமேகற்று நினக்குப் புதி
தாகச்செய்த அப்புல்லுதலே யாஞ்செய்யமாட்டோம், அதனலெம்
மைத் தொடாதே, எங்கலேயை விடுவாயாகவெனக் கலவிகருதிப்
புலவாநிற்றல். அதற்குச செய்யுள்:—

நலஞ்செய் திலாதவெந் தீவினை யேம்புன்மைத் தன்மைக்கெள்ளா
தெலஞ்செய்து நின்றினி யின்றுனை நோவதெ னத்தன்முத்தன்
சிவன்செய்த சீரரு ளார்தில்லை யூரனின் சேயிழையார்
நலஞ்செய்த புல்லங்கண் மாட்டேற்தொ டல்விடு நற்கலேயே.

பீடிவர் கற்பிற் ரேடிவர் கோதை
ஆடவன் றன்னே டேடி புரைத்தது.

(ப-ரை.) அத்தன்-(உலகத்துள்ளா ரெல்லாருக்கும்)தந்தை, முத்
தன் - (இயல்பாகவே) பாசங்களி னீங்கியவன், சிவன் - (எவ்வுயிர்க்
கும் எப்பொழுதும் நன்மையைச் செய்தலாற்) சிவன், செய்த-அவனுற்
செய்யப்பட்ட, சீர் அருள் ஆர்-சீரிய அருளிறைஞ்ச, தில்லே ஊர-தில்
லேயிலூரனே, தவம் செய்திலாத - முற்காலத்துத் தவத்தைச் செய
யாத, வெம் தீவினையேம் - வெய்ய தீவினையையுடைய யாம், புன்மை
தன்மைக்கு - (நின்னு லாதரிக்கப்படாத எமது) புன்மைத்தன்மை
காரணமாக, எள்ளாது-எம்மையெகழாது, எவ்வம் செய்து நின்று -
நினக்குத் துன்பத்தைச் செய்யாகின்று, இன்று-இப்பொழுது, இனி

உன்னை நோவது என் - இனி உன்னை நோதலென்னும், (அது கிட க்க) நின் சேயிழையார் - நின்னுடைய சேயிழையார், நவம் செய்த - னைக்குப் புதிதாகச் செய்த, புல்லங்கன்-புல்லுதல்களே, மாட்டேம் - யாமாட்டேம், (அதனுல் எமது) நல் கலே - நல்ல மேகலையை, தொ டல் - தொடாதொழி, விடு - விடுவாயாக, எ-று.

(வி-ரை.) முதுதன-முகுதன என்னும் வடசொற்றிரிபு; முச்தம்- விடுதல். நீவினே-துஷ்கர்மம், எள்ளல் - இகழ்தல். எவ்வம்-துன்பம், அது எவம் என விகாரமாயிற்று. நின்சேயிழையார் என்றது பரத்தை யரை. நவம் - புதுமை.

நேரிசையாசிரியப்பா.

நீரர மகளிர் நெருங்குறப் புகுந்து
கண்முகங் காட்டிய காட்சிய தென்னப்
பெருங்குலே மணந்த நிறைநீர்ச் சிறைப்புனன்
மணிநிறப் படாமுது கிடையறப் பூத்துச்
சுரும்பொடு கிடந்த சொரிபிதழ்த் தாமரை
கண்ணினுங் கொள்ளா துண்ணவும் பெறுது
நிழறலே மணந்த புனல்கிட வாது
வின்னுடைத் துண்ணும வீனச்சூர் சுவர்ந்த
வானவர் மங்கையர் மயக்கம் போலப்
பிணர்க்கரு மருப்பிற் பிதிர்பட வழுக்கி
வெண்கார்க் கழனிக் குருகெழப் புகுந்து
கடிக்கைச் சிறுகா யமைத்தவாற் கருப்பை
யிணையெயி றென்ன விடையிடை மூட்டபயில்
குறும்புதன் முண்டகங் கரும்பெனத் துய்த்துச்
செங்கட் பகடு தங்குவய வூரர்க்
கருமறை விதியு மூலகியல் வழுக்குங்
கருத்துறை பொருளும் விதிப்பட நினைந்து
வடசொன் மயக்கமும் வருவன புணர்த்தி
யைந்திணை வழுவா தகப்பொரு ளமுதினைக்
குறுமுனி தேறவும் பெறுமுதற் புலவர்க
ளேழெழு பெபருங் கோதறப் பருகவும்
புலனெறி வழக்கிற் புணருல கவர்க்கு

முற்றவம் பெருக்கு முதற்றே பதர்க்கு
நின்றறிக் துணர்த்தவுந் தமிழ்ப்பெயர் நிறுத்தவு
மெடுத்துப் பரப்பிய வீமையவர் நாயகன்
மெய்த்தவக் கூடல் வீளைபொருண் மங்கையர்
முகத்தினுங் கண்ணினு முண்டக முலையினுஞ்
சொல்லினுந் தொடக்கும் புல்லம் போல
வெம்மிடத் திலதா லெண்ணே
தம்முளாந் தவறிப் போந்ததிவ் விடனே.

நீராமகளீர் - போந்ததிவ்விடனே. பதுதி - பாத்தையிற்பிரிவு. துறை - பள்ளியிடத்தூடல்.

'நீராமகளீர்' என்பதுமுதல் 'காட்சியதென்ன' என்பதுவரை.

(1—2 வரிகள்.)

(ப-ரை.) நீர் அராமகளீர் - நீரில்வாழும் அராமகளிர், நெருங்குற புகுந்து - நெருங்கப்புகுந்து, கண் முகம் காட்டிய - கண்களு முகமு காட்டுகின்ற, காட்சியது என்ன - தோற்றத்தைப்போல.

(வி-ரை.) அராமகளிர் - தெய்வப்பெண்கள். நெருங்குற - ஒரு சொல்.

'பெருங்குலைமணந்த' என்பதுமுதல் 'சோரியிதழ்த்தாமரை' என்பதுவரை.

(3—5 வரிகள்.)

(ப-ரை.) பெருங்குலை மணந்த - பெரியகரை செறிந்த, நிறை-நிறைவுள்ள, நீர் நிறைப்புனல்-நீர்த்தடாகத்தின், மணிநிறப்படாம்-மணிநிறமாகியபடாம் போர்த்த, முதுகு - முதுகில், இடையற பூத்து - வெற்றிடையின்றி மலர்ந்து, சுரும்பொடு கிடந்த - வண்டுகள் சூழவிருந்த, சோரி இதழ் தாமரை - தேன்சொரியுமகவிதழ்த் தாமரைப்பூவை.

(வி-ரை.) குலை - செய்கரை. படாம் - ஆடை. வெற்றிடை - வெற்றிடம். சுரும்பு - வண்டு. அகவிதழ் - உள்ளிதழ். தாமரை - ஆகுபெயர்.

'கண்ணினுங்கொள்ளாது' என்பதுமுதல் 'புனல்கிடவாது' என்பதுவரை.

(6—7 வரிகள்.)

(ப-ரை.) கண்ணினும் கொள்ளாது - கண்ணுலு நோக்காமல், உண்ணவும் பெறுது - உண்ணவும் விருப்பம் பெருமல், நிழல்தலே மணந்த - குளிர்ச்சியைத் தன்னிடத்தேகொண்ட, புனல் கிடவாது - நீரிலும் படித்திராமல்.

(வி-ரை.) கண்ணினும் என்பதில் இன் என்னும் ஐந்தாவது மூன்றுவதன் கருவிப்பொருளில் வந்தது. தலே - ஏழனுருபு, இடப் பொருட்டு. கிடத்தல் - படித்திருத்தல்.

'விண்ணுடைத்துண்ணும்' என்பதுமுதல் 'மயக்கம்போல' என்பதுவரை.

(8—9 வரிகள்.)

(ப-ரை.) விண் உடைத்து உண்ணும் - விண்ணுலகத்தை யழித்தக்கவர்ந்த, வினை - (தீத்) தொழிலேயுடைய, சூர் - சூரபன்மனு லே, கவர்ந்த - சிறைகோட்பட்ட, வானவர் மங்கையர்-தேவமங்கை யர்களது, மயக்கம்போல - தடுமாற்றம்போல.

(வி-ரை.) விண் - ஆருபெயர். உடைத்தல் - அழித்தல். வினை - ஈண்டைக்கேற்பத் தீவினைக்காயிற்று.

'பிணர்' என்பதுமுதல் 'துய்த்து' என்பதுவரை.

(10—14 வரிகள்.)

(ப-ரை.) பிணர் - பொருக்காகிய, கரு மருப்பின்-கருங்கொம்பு களால், பிதிர்பட - சேருரும்படி, உழக்கி - மிரைக்கலக்கி, வெண் கார் - வெண்மையான கார்நெற்பயிருள்ள, கழனி-கழனிகளிடத்தே, குருகு எழ - பறவைகள் நிறையடித்தெழுமாறு, புகுந்து - பாய்ந்து, கடுக்கை சிறுகாயமைத்த - கொன்றையினது சிறிய காய்போன்ற, வால்-வாலேயுடைய, கருப்பை - காரெலியின், இணை யிறு என்ன - தம்மிலொத்த பற்கள்போல, இடையிடை - நடுவே நடுவே, முள் பயில் - முள்ளுகள் பொருந்திய, குறு புதல்-குறிய புதலாகிய, முண் டகம் - நீர்முள்ளிச்செடியை, கரும்பு என - கரும்பை யுண்ணுதல் போல, துய்த்து - தின்று.

(வி-ரை.) மருப்பு - கொம்பு. உழகல் - கலகல், அமைத்தல் - நிகர்த்தல்.

'செங்கட்பகடு' என்பதுமுதல் 'விதிப்படநினைந்து' என்பதுவரை.

(15—17 வரிகள்)

(ப-ரை) செங்கண் பகடு - செங்கணெருமை, தங்கும் - மேய்கின்ற, வயலூர்க்கு-மருதநாட்டுத் தலைவர்க்கு, அரு மறை விதியும் - எழுதற்கரிய வேத நிபந்தனைகளும், உலகியல் வழகசு-உலகவழக்கமும், கருத்து உறை பொருளும் - கருத்திலுள்ள பொருளும், விதிப்பட நினைந்து - முறைப்படத் திருவுளங்கொண்டு.

(வி-ரை.) வேத நிபந்தனை - வைதிகாசாரம். உலகவழக்கு - லௌகிகாசாரம்.

'வடசொன்மயக்கமும்' என்பதுமுதல் 'அமுதினை' என்பதுவரை.

(18—19 வரிகள்.)

(ப-ரை) வடசொல் மயக்கமும் - வடமொழிப் புணர்ச்சியும், வருவன புணர்த்தி - வருவனவற்றைச் சேர்த்தது, ஐந்திணை வழுவாது - ஐவகைத்திணைமுறைமையும் வழுவாமே, அகப்பொருள் அமுதினை - அனபினைக்திணையென முதலெடுத்த அமிர்தத்தை.

(வி-ரை.) அன்பினைந்திணையென முதலெடுத்த அமிர்தம் என்றது இறையனாரகப்பொருளை.

குறமுனி' என்பதுமுதல் 'மெய்த்தவக்கூடல்' என்பதுவரை.

(20—26 வரிகள்.)

(ப-ரை) குறமுனி தேறவும் - அகத்தியமுனிவன் தெளியவும், முதல் பெறு - தலைமைபெற்ற, புலவர்கள் எழ் எழு பெயரும்-சங்கப்புலவர்களாகிய நாற்பத்தொன்பதினமரும், கோது அற - ஐயந்திரிபின்றி, பருகவும் - உண்ணவும, புலன்வெறி - ஐம்புல நெறியின்கண், வழக்கில் - இயக்கத்தில், புணர் - கலவாதினற, உலகவர்க்கும் - உலகவியலினர்க்கும், முன் தவம் பெருக்கும் - இளமை தொட்டுத் தவத்தை வளராகாகின்ற, மூதல் தாபதர்க்கு-ஐந்தவித்த முனிவர்க்கும், நின்று அறிகது-தாகதா நிலைபெறறுணர, உணர்த்தவும் - அறிவுறுத்தவும், தமிழ் பெயர் நிறுத்தவும் - தமிழெனனும்

பெயரை நிலைபெறுத்தவும், எடுத்து பரப்பிய - திருவாக்கெடுத்து விரித்த, இமையவர் நாயகன் - தேவர்பெருமானது, மெய்த்தவம் - தவத்தான் மெய்மையுள்ள, கூடல் - மதுரையினிடத்தி.

(வி-ரை.) அங்குஷ்டப்ரமாண வருஷினாராகலால் அகத்திய முனிவரைக் 'குறுமுனி' என்றார். கோது - குற்றம், அது ஈண்டு ஜ்ஞாந்நிரிபுகளுக்காயிற்று. பருகல் - உண்டல். தாபதர் - தவஞ்செய்வோர். இமையவர் - மங்கல வழக்கு.

'வினைபொருள்' என்பதுமுதல் 'புல்லம்போல' என்பதுவரை.

(26—28 வரிகள்.)

(ப-ரை.) வினைபொருள் - பொருளைச் சம்பாதிக்கின்ற, மங்கையர் - பரத்தையர்கள். முகத்தினும் - முகத்தினலும், கண்ணினும் - கண்களினலும், முண்டகம் - தாமரையரும்பையொத்த, மூலையினும் - மூலைகளாலும், சொல்லினும் - சொற்களாலும், தொடக்கும் - வயப்படுத்தும், புல்லம்போல - அபிநயம்போல.

(வி-ரை.) வினைத்தல் - சம்பாதித்தல். முண்டகம் - ஆகுபெயர். பொருளீட்டற்குரிய பருவங்குறிப்பராய், பரத்தையரை'மங்கையர்' என்றார். முகத்தினும் கண்ணினும்என்பவற்றில் இன்னுருபுகள் மூன்றுவதன் பொருள.

''எம்மிடத்து' என்பதுமுதல் 'இவ்விடனே' என்பதுவரை.

(29—30 வரிகள்.)

(ப-ரை.) எம்மிடத்து - எம்போலியாளிடத்து, இலது-இல்லையாக, இவ்விடன் - இத்தவிடத்தில், தம்மூளம்-நாமதுள்ளம், தவறி - இடந்தெரியாமல், போந்தது - வந்தவாறு, என்னை - யாதோவறியேன்,

(வி-ரை.) தவறல் - தடுமாறல். போதந்தது போந்தது என விகாரமாயிற்று.

ஊர்க்கு, வீதியும் வழக்கும் பொருளும் நினைந்து புணர்த்தி, அகப்பொருளமுதைத் தேறவும் பருகவும் உலகவர்க்குந் தாபதர்க்குந் உணர்த்தவும் நிறுத்தவும் பரப்பிய நாயகன் கூடலில், பொருண்மங்கையர் புல்லம்போல எம்மிடத்திலது, அற்றாகவும் இவ்விடத்தேயுள்ளத்தவறித் தாம்போந்த தென்னையென வினைமுடிவுசெய்க. ()

திருக்கோவையார் உகந்தும் செய்யுள்.

வழிப்படுத்துரைத்தல்.

வழிப்படுத்துரைத்தலென்பது — ஓம்படுத்துரைத்தோழி, ஆயமும் மன்னையும் பின்வராமல் இவ்விடத்தே நிறுத்தி, இவ்வூரிடத்துள்ள அலரையுமொருவாற்றானீக்கி, யானும் வந்து நுங்களைக்காண்பேனுக,நீ யிருந்திருவொடு சென்று நும்பதியிடைச்சேர்வீராமினென இருவரையும் வழிப்படுத்துக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்:—

ஈண்டொல்லே யாயமு மௌவையு நீங்கவிவ் வூர்க்கவ்வைதீர்க்
தாண்டொல்லே கண்டிடக் கூடுக நும்மையும் வைப்பிடித்தின்
றூண்டெல்லே தீரின்பந் தந்தவன் சிற்றம் பலதிலவு
சேண்டில்லே மாநகர் வாய்ச்சென்று சேர்க திருத்தகவே.

மதிறுதலியை வழிபடுத்தப்
பதிவயிற்பெயரும் பாங்கிபகர்ந்தது.

(பதவுரை.) எம்மை பிடித்து - எம்மைவலித்துபிடித்து, இன்று ஆண்டு - இன்றூண்டு, எல்லே தீர் - எல்லே நீக்கிய, இன்பம் தருதவன் - இன்பத்தைத் தந்தவனது, சிற்றம்பலம் நிலவு - சிற்றம்பலம் நிலவெற்ற, சேண் தில்லே - சேய்த்தாகிய தில்லையென்கிற, மாநகர் வாய் - பெரியநகரிடத்து, திருத்தக சென்று - (நீர்) பொலிவுதகச் சென்று, சேர்க - சேர்வீராயின், ஆயமும் ஔவையும் ஈண்டு நீங்க - மகளிர் கூட்டமும் அன்னையும் பின்வாது இவ்விடத்தே நீங்க, இவ் வூர் கவ்வை ஒல்லே தீர்த்து - இவ்வூரின்கணுண்டாகிய அலரை (ஒரு வாற்றான்) விரையநீக்கி, ஆண்டு நும்மை ஒல்லே கண்டிடக் கூடுக - யான் ஆண்டுவந்து நும்மை விரையக்காணக் கூடுவதாக, எ-று.

(வி-ரை.) எல்லேதீரின்பம் - பேரின்பம் (அபாராநந்தம்).

நேரிசையாசிரியப்பா.

செங்கோற் றிருவுடன் றெளிந்தறம் பெருக்கிய
மறுபுல வேந்த னுறுபடை யெதிர்ந்த
கொடுங்கோற் கொற்றவ னெடும்படை யீனத்துஞ்
சேர வறந்த திருத்தகு நாளி
லவன்பழி நாட்டு நடுங்குநற் குடிகள்
கண்ணெடு கண்ணிற் கழறிய போல
வொருவரி னொருவ ருள்ளத் தடக்கித்

தோன்ற நகையுடன் முண்டமுஞ் சுட்டி
யம்ப லாற்று மீவ்வு ரடக்கிக்
கடல்கிடந் தன்ன நிரைநிரை யாய
வெள்ளமு மற்றையர் கள்ளமுங் கடந்து
தாயவர் பயங்குந் தனித்துயர் நிறுத்திப
பறவை மக்களோப் பரியுரக் கொடுத்துக்
கிடைப்பல்வல் யானே நும்மைத் தழைத்தெழு
தாளியுங் கொனையுந் தழைத்தலின் முல்லையும்
பாற்சுரந் தரக்கும் பயிறலிற் குறிஞ்சியு
மூடைத்தலை யெரிபொடி யுடைமையிற் பாலையு
மாமையுஞ் சலமு மேவலின் மருதமும்
கடிவுஞ் சங்கமு மொளிர்தலி னெய்தலு
மாகத் தனது பேரருள் மேனிபிற்
றிணையைத் தமைத்த வீணையிலி நாயகன்!
வருந்தொழி லீனத்தும் வளர்பெரும் பகலே
யெரிவிரிற் தன்ன வீநற்பஃ றுமரை!
யருண்முகத் திருவொடு மலர்முகங் குவிய
மரகதப் பாசடை யிடையிடை நாப்ப
ணீலமு மணியு நிரைகிடந் தென்ன
வண்டொடு குமுத மலர்ந்தெழ் வீரிப்பக்
குருகுஞ் சேவலும் பார்ப்புடன் வெருவிப்
பாசடைக் குடம்பை யூடுகண் படுப்பத்
தூணியுடன் சுகோரங் களியுடன் பெயர்த்து
விடுமமு தருந்த விண்ணத் தணக்கச்
சுரிவளைச் சாத்து நிறைமதி தவழு
மெறிதிரைப் பழனக் கூடற்
செறிகலின் நம்ம திருவொடும் பொலிந்தே.

செங்கோற்றிருவுடன் - திருவொடும்பொலிந்தே. பகுதி-உடன் போக்கு. துறை - வழிப்படுத்துரைத்தல்.

'செங்கோல்' என்பதுமுதல் 'கோற்றவன்' என்பதுவரை.

(1—3 வரிகள்.)

(ப-ரை.) செங்கோல் - செங்கோலாகிய, திருவுடன் - திரு மகளுடனே, தெளிந்து - மதுநூலாராய்ந்து, அறம் பெருக்கிய-அர சி

யற்றருமத்தை விருத்திசெய்த, மறுபுல வேந்தன் - வேற்றப்புலத் தரசனது, உறுபடை-பெருஞ்சேனையால், எதிர்த்தஎதிர்க்கப்பட்ட, கொடுங்கோல் கொற்றவன் - கொடுங்கோலரசனது.

(வி-ரை.) கொடுங்கோல்-கோடுங்கோல் என்பதன் விகாரம்.

'நேடும்படை' என்பதுமுதல் 'குடிகள்' என்பதுவரை.

(3—5 வரிகள.

(ப-ரை) நெடும்படை அனேத்தும்-அளவிறந்த சேனைமுற்றும், சோவறந்த-ஒருசோ மாய்ந்திட்ட, திருச்சுரு நாளில் - நன்மை பயக்குநாளையில், அவன் - அக்கொடுங்கோன் மன்னனது, பழி நாட்டுபழிபட்ட நாட்டிலுள்ள நடுங்கும் நல் குடிகள் - அவனது கொடுமையால் நடுங்கின நல்லகுடிகள்.

(வி-ரை.) வறத்தல் - மாய்தல்.

'கண்ணெடு' என்பதுமுதல் 'அடக்கி' என்பதுவரை.

(6—9 வரிகள.)

(ப-ரை.) கண்ணெடு கண்ணில் - பிறர் கண்களோடு தமது கண்களால், கழறியபோல - பேசிக்கொண்டதுபோல, ஒருவரின் ஒருவர் - ஒருவரோடொருவர் சொல்லி,உள்ளத்து - தத்தமுள்ளத்தினிடத்தே, அடக்கி - வெளிவிடாதடக்கி, தோன்ரு நகையுடன் - வெளிப்படாத சிரிப்புடன், தண்டமும் சுட்டி - மூக்கின்மேல் விரலிட்டுக் குறித்து, இல்லூர் தூற்றும் - இவ்வூரார் புறங்கூறுகின்ற, அம்பல் அடக்கி - அலர்தூற்றலை யடக்கி.

(வி-ரை) தண்டம் - மூக்கு.

'கடல்கிடந்தன்ன' என்பதுமுதல் 'கடந்து' என்பதுவரை.

(10—11 வரிகள்.)

(ப-ரை.) கடல் கிடந்தன்ன - கடலிருந்தாலொத்த, நிரைநிரை-பெருங்கூட்டமாகிய, ஆய வெள்ளமும் - மகளிர் கூட்டத்தையும், மற்றையர் - பிறசுற்றத்தாரது, கள்ளமும்-கரவடத்தையும், கடந்து-நீங்கி.

(வி-ரை) கிடந்தாலன்னவென்பது கிடந்தன்னவென விகார மாயிற்று.

'தாயவர்' என்பதுமுதல் 'நுட்மை' என்பதுவரை.

(12—14 வரிகள்.)

(ப-ரை.) தாயவர் - நமது தாய்மார், மயங்கும் - (பின்னேக்குமித்தி) மயங்கும், தனித்தயர் நீத்தி - பெருந்தன்பத்தை ஆற்றி, பறவை மக்களே - இள்ளேமுதலிய பறவைப் பார்ப்புக்களே, பரியுகர் - நம்போற் பரிவுள்ளவரிடத்து, கொடித்து - வளர்க்குப்படி சேர்ப்பித்து, வல் - விரைவில், நுட்மை - நுங்களிடத்தே, யாமே இடைப்பல் - யாமே வந்து சேருவேனுக.

(வி-ரை.) நீத்தல்- தணித்தல். பார்ப்புக்கள் - குஞ்சுகள். பரிதல் - அன்புசெய்தல். கிடைத்தல் - சேர்தல்.

'தழைத்தெழு' என்பதுமுதல் 'குறிஞ்சியும்' என்பதுவரை.

(14—16 வரிகள்.)

(ப-ரை.) தழைத்து எழு - தளிர்த்தெழுந்த, தாளியும் - தாளி மலரும், கொன்றையும்-கொன்றைமலரும், தழைத்தலின் - தழைத்திருத்தலால், முல்லையும் - முல்லைநிலமும், பாந்தளும் - பாம்பும், தாக்கும் - புலியும், பயிறலில் - கூடியிருத்தலினால், குறிஞ்சியும் - குறிஞ்சிநிலமும்.

(வி-ரை.) தாளி கொன்றை யென்பன ஆகுபெயர்கள். தாக்கு-தாக்கூ என்னும் வடசொற்றிரிபு.

'முடைத்தலே' என்பதுமுதல் 'மருதமும்' என்பதுவரை.

(17—18 வரிகள்.)

(ப-ரை.) முடை தலே - நிலாற்றம் வீசுமிடமாய், எரி - நெருப்புப், பொடி - சாம்பரும், உடைமையின்-உண்டாயிருத்தலால், பரலையும் - பாலைநிலமும், ஆமையும் - ஆமையும், சலமும் - நீரும், மேவலின் - பொருந்தியிருத்தலால், மருதமும் - மருதநிலமும்.

(வி-ரை.) எரி - ஆகுபெயர்.

'கடவும்' என்பதுமுதல் 'அமைத்த' என்பதுவரை.

(19—21 வரிகள்.)

(ப-ரை.) கடவும் - வீடமும், சங்கமும் - சங்கங்களும், ஒளிர்தலின் - விளங்குதலால், நெய்தலும் - நெய்தனிலமும், ஆக - ஆக, தனது பேரருள் மேனியில் - தன்னுடைய பேரருளாகிய திருமேனியில், நீணை ஐந்து அமைத்த - ஐந்திணைகளையுமேற்ற.

(வி-ரை.) கடி - ஆகுபெயர். திணையைந்தாவன: குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் பன.

'இணையிலி' என்பது முதல் 'முகங்குவிய' என்பதுவரை.
(21—24 வரிகள்.)

(ப-ரை.) இணையிலி - ஒப்பில்லாதவனுகிய, நாயகன் - முதல்வனது, வரும் தொழில் அனைத்தும்-நடத்துந்தொழில்யாவும், வளர்-வளர்தற்கிடமாகிய, பெரும்பகலே - பெரிய மத்தியானத்திலே, எரி விரிந்தன்ன - நெருப்பு விரிந்தாற்போல, இதழ் பல் தாமரை - இதழையுள்ள பலதாமரைமலர்கள், அருள்முகம திருவொடி - முகத்தில் அருணிறைந்த திருமகளுடனே, மலர்முகம் குவிய - தமது முகமலர் சரி கூம்பவும்.

(வி-ரை.) தாமரை - ஆகுபெயர்.

'மரகதப்பாசடை' என்பது முதல் 'மலர்ந்திதழ்விரிப்ப' என்பதுவரை.
(25—27 வரிகள்.)

(ப-ரை.) மாகதப் பாசடை - மாகதமணிபோன்ற பச்சிலைகளின், இடையிடை நீர்ப்பண் - நடுவே நடுவே, நீலமும் மணியும் - நீலமணியும் மாணிக்கமணியும், நிரைகிடந்து என்ன - அணிபெறக் கிடந்தாலொத்த, வண்டொடி குழுதம் - வண்டுடனே செல்வல்லி மலர்கள், மலர்ந்து இதழ் விரிப்ப-முகைவிண்டிதழ்சளே விரிப்பவும்.

(வி-ரை.) குமுதம் - ஆகுபெயர். முகை - மொட்டு.

'குருகுஞ்சேவலும்' என்பது முதல் 'கண்படுப்ப' என்பதுவரை.
(28—29 வரிகள்.)

(ப-ரை.) குருகும் சேவலும்-குருகுகளுஞ் சேவல்களும், பார்ப்புடன் - தத்தங்குஞ்சுகளுடனே, வெருவி - பொழுதுபோயிற்றென்றஞ்சி, பாசடை குடம்பையூடு - பச்சிலைகளாகிய கூடுகளிடத்தே, கண்படுப்ப - கண்ணுறங்கவும்.

(வி-ரை.) பார்ப்பு - குஞ்சு. வெருவல் - அஞ்சல். பாசு-பச்சை. அடை - இலை.

'துணையுடன்' என்பது முதல் 'அணக்க' என்பதுவரை.
(30—31 வரிகள்.)

(ப-ரை.) சகோரம் - சகோரப்பறவைகள், துணையுடன் - தத்தம் பேடைகளுடனே, களியுடன் பெயர்த்து - மகிழ்ச்சியாய்ப் பறந்து,

விகிம் அமுது - உமிழாகின்ற கிரணமிர்தத்தை, அருந்த - உண்ணும் படி, விண்ணத்து - ஆகாயத்தில், அணக்க - அண்ணுக்திடவும்.

(வி-ரை.) சகோரம் - நிலாமுகிப்புள். அண்ணுக்க என்பது அணக்கவென விகாரமாயிற்று.

'சுரிவளாசாத்து' என்பதுமுதல் 'திருவோடும்போலிந்தே' என்பதுவரை.

(32—34 வரிகள.)

(ப-ரை.) சுரி வளை சாத்து-முகஞ்சுரிந்தசங்கினையாகிய முத்தலரிசைகளினின்றும், நிறைமதி தவழும்-சந்திரனை நிறைந்த நிலாத்தவழ்கின்ற, எறி திரை - அலையெறிகின்ற கிரையையுடைய,பழனக் கூடல் - வயல்சூழ்ந்த மதுரையினிடத்து, திருவோடும் பொலிந்து-நீவிர் சுகமாகச் செழித்து, செறிக இன்று-இங்காளிற் சேர்ந்துவாழ்க.

(வி-ரை.) பழனம் - வயல். பொலிதல் - செழித்தல். செறிதல் - சேர்தல்.

ஒருவரினொருவ ருள்ளத்தடக்கி, ஊடக்கி, வெள்ளமுங் கள்ளமுங் கடந்து, தனித்தயராற்றிக்கொடுத்து, யானே நும்பாற்கிடைப்பன், இணையிலிநாயகன் பழனக் கூடலில், திருவுடன் பொலிந் திங்ஙணீவிர் செறிகவென வினைமுடிவு செய்க. (சுடு)

திருக்கோவையார் களரும் செய்யுள்.

கடலிடைவைத்துத் துயரறிவித்தல்.

கடலிடைவைத்துத் துயரறிவித்தலென்பது—தலைமகளிரவுது துயரம், தலைமகன் நிறைப்புறமாக, இவள் வாட, நீ யிரையாகின்றாய், இது நினக்கு நன்றேவெனத் தோழி, கடலொடு புலத்து கூறுகிற்றல். அதற்குச் செய்யுள்:—

தோத்தன் னடியமென் றேரைக் குழுமித்தொல் வானவர்சூழ்ந்
தேத்தும் படிநிற்ப வன்றில்லை யன்ன லிவடவள
வார்த்தன் னமிழ்துந் திருவு மதியு மிழந்தவரீ
பேர்த்து மிரைப்பொழி யாய்பழி நோக்காய் பெருங்கடலே.

எறிகடன் மேல்வைத் திரவரு துயரம்
அறைகழ லவற் கறியவு ரைத்தது.

(ப-ரை.) பெருங்கடலே - பெருங்கடலே, ஆர்த்து - (முற்காலத்து மிவ்வாறு) ஒலித்து, உன் அமிழ்தும் - உன்னமிர்தத்தை

யும், திருவும் - திருவையும், மதியும் - திங்களையும், இழந்து - இழந்துவைத்தும், பேர்த்தும் அவம் - பெயர்த்து மொருபய னின்றியே, சோத்தம் உன் அடியம்என்றேரை-சோத்தம் உன்னடியம் என்றெருருகாற் சொன்னேரை,தொல் வானவர் சூழ மீ சூழ்ந்து-பழையராகிய வானவர் கூடிப் பரிவாரமாயசு சூழ்ந்துநினறு, எத்துமபடி - எத்தும் வண்ணம், நிற்பவன் - நிற்குமவனது, தில்லையன் னுள் - தில்லையன் னுளாகிய, இவள் துவள-இவள் வாட, நீ இரைப்பொழியாய்-நீ இரையாநின்றாய, பழிநோச்சாய்-(காரணமின்றிப் பிறரை வருத்துதலான் வரும்) பழியையும் நோக்குகின்றிலை (நினைகின்றனன்றே), எ-று.

(வி-ரை.) சோத்தம் - இழிந்தார் செய்யுமஞ்சலி, அது சோதனைக் கடைக்குறைந்து நின்றது. சோத்தமடிய மென்பதூஉம், அடியமெனிற் குழுமித்தொல்லை வானவரென்பதூஉம், குழீஇத் தொல்லை வானவர் சூழ்ந்தேத்தும்படி வைப்பவனென்பதூஉம பாடம். திருவுமதியு மென்பது செல்வமு மதிவுமென வேறுமொரு பொருடோன்ற நின்றதென்பாருமுளர். இரா - குறுகுகின்றது.

நேரிசையாசிரியப்பா.

இருநிலந் தாங்கிய வலிகெழு தோன்மைப்
பொன்முடிச் சயிலக் கணைவற் புணர்ந்து
திருவெனுங் குழவியு மமுதெனும் பிளவையு
மதியெனு மகவு மலருல கறியக்
சுண்ணெடி முத்தங் கலுழ்ந்துடல் கலங்கி
வாய்விட் டலறி வயிறுகொந் தின்ற
மனனெழு வருத்தம தூடையை யாகலிற்
பெருமய லெய்தா நிறையின ளாக
வென்னெரு மயிலையு நின்மகட் கொண்டு
தோன்றிநின் றழியாத் துகளறு பெருந்தவ
நிதியெனக் கட்டிய சூறமுனிக் கருளுடன்
றரளமுஞ் சந்து மெரிகெழு மணியு
முடங்குளை யகழ்ந்த கொடுங்கரிக் கோடு
மகிலுங் கனகமு மருவிகொண் டிறங்கிப்
பொருநையங் கன்னிக் கணியணி பூட்டுஞ்
செம்புடற் பொதிந்த தெய்வப் பொதியமு
மூவட்டா தமையா வுணர்வெனும் பசியெடுத்

தள்ளமுஞ் செவியு முருகிநின் றுண்ணும்
பெருந்தமி ழ்முதும் பிரியாது கொடுத்த
தோடணி கடுக்கைக் கூடலெம் பெருமா
னெவ்வுயி ரிருந்து மவ்வுயி ரதற்குத்
தோன்று தடங்கிய தோன்மைத் தென்ன
வார்த்தெழு பெருங்குர லமைந்துநின் றெறிக்கின்
பெருந்தீக் குணனு மொழிந்துளங் குளிரு
மிப்பெரு நன்றி யின்றெற் குதவுதி
யெனிற்பதம் பணிகுவ லன்றே நன்கமர்
பவள வாயுங் கிளர்பச் சுடம்பு
நெடுங்கயல் விழியு நிறைமலி முலையு
மாசறப் படைத்து மணியுட னிறத்த
பெருமுகில் வயிறள வூட்டித்
திருவல னளிக்குங் கடன்மட மகளே.

இருநிலந்தாங்கிய கடன் மடமகளே. பருதி - இரவுக்குறி. துறை - கடலிடைவைத்துத் துயரறிவித்தல்.

'நன்கமர்' என்பதுமுதல் 'மாசறப்படைத்து' என்பதுவரை.
(26—29 வரிகள்.)

(ப-ரை.) நன்கு அமர் - நன்மையாகப் பொருந்திய, பவளவா யும் - பவளமாகியவாயும், கிளர் - ஒளிமிகுந்த, பச்சுடம்பும் - மிக்க பசுமையாகிய மேனியும், நெடு கயல் விழியும் - நீண்ட கயலாகிய கண்ணும், நிறை மலி முலையும் - பெரிய மலைகளாகிய முலைகளும், மாசு அற படைத்து - குற்றமறப் படைத்து.

(வி-ரை.) கயல் - சேல்மீன், பெருங்கெண்டையுமாம்.

'மணியுடன்' என்பதுமுதல் 'மடமகளே' என்பதுவரை.
(29—31 வரிகள்.)

(ப-ரை.) மணியுடன்-மணிகளுடனே, நிறத்த - நன்னிறத்தை யுடைய, பெரு முகில் - பெரிய முகிலே, வயிறு அளவு - வயிறு நிரம்ப, ஊட்டி - (நீராகியவமுதத்தை) ஊட்டி, திரு - வளப்பத்தை, உலகு அளிக்கும் - உலகத்துக்குக் கொடுக்கின்ற, கடல் மடமகளே - கட லாகிய மடந்தையே.

வி-ரை.) முகில் - மேகம்.

'இருநிலந்தாங்கிய' என்பதுமுதல் 'புணர்ந்து' என்பதுவரை.

(1—2 வரிகள.)

(ப-ரை.) இரு நிலம் தாங்கிய - பெரிய பூமியைத் தாங்கிய, வலிகெழு - வலமையுள்ள, தோளமை - ஆதரவிலாத, பொன் முடி - பொன்முடியையுடைய, சயிலகணவன - மந்தரகிரியென னுங் கணவனே, புணர்தல் - கூடி.

(வி-ரை) இருமை - பெருமை. முடி - சிகரம்.

'திருவெனுங்குழவியும்' என்பதுமுதல் 'மலருலகறிய' என்பதுவரை.

(3—4 வரிகள.)

(ப-ரை.) திருவெனும் குழவியும் - திருமகளாகிய பெண்ணே யும், அமுதது எனும - அமுதமாகிய, பிள்ளையும - பிள்ளையையும், மதி எனும் மகவும் - சந்திரனுகிய மகவையும், மலா உலகு ஆய - பரந்த வுலகமறியுமபடி.

(வி-ரை.) மகவு - குழந்தை.

'கண்ணெறி' என்பதுமுதல் 'உடையையாகலின்' என்பதுவரை.

(5—7 வரிகள.)

(ப-ரை.) கண்ணெறி - கண்ணில, முரித்தம் கலுழ்ந்தது - முத் தங்களுழ, உடல் கலங்கி - உடல் நொந்து, வாய்விட்டு அலறி-வாய திறந்தலறி, வயிறு நொந்து - கருப்பவேதனை யடைந்து, ஈன்ற - பெற்றதனுல், மனன் எழு வருதலம் - மனந்திலுண்டான வருத்தத தை, உடையை ஆகலின் - உடையளாயிருக்கினறனே யாதலால.

(வி-ரை.) கண்ணெறி-உருபுமயக்கம். கலுழ்ந்து - செயவெனெ சுசத்திரிபு. அது - பகுதிபொருள் விகுதி.

'பெருமயலெய்தா' என்பதுமுதல் 'குறுமுனிக்கு' என்பதுவரை.

(8—11 வரிகள.)

(ப-ரை) பெருமயல் எய்தா-மிக்க மயக்கத்தைப் பொருந்தாத, நிறையினளாக-மாட்சிமையுடையளா யிருக்குமாறு, என் ஒரு மயிலே யும் - மயில்போன்ற வெனதொரு பெண்ணேயும், நின் மகள் கொ ன்றி - நின்மகளாகவெண்ணி, தோன்றி நின்று அழியா-பிறந்திருந

திறவாமைக்குக் காரணமான, துகள் அறு பெருந்தவம் - (காமாதிக ளாகிய) துகளற்ற மாதவமே, நிதியென கட்டிய - தனது நிக்ஷேப மாகச் சேர்த்துள்ள, குறுமுனிக்கு - அகத்தியனுக்கு.

(வி-ரை.) மயில் - ஆகுபெயர். துகள் - குற்றம்.

'அருளுடன்' என்பதுமுதல் 'கன்னிக்கு' என்பதுவரை.

(11—15 வரிகள.)

(ப-ரை.) அருளுடன் - அன்புடனே, தாளமும் - முத்தங்களை யும், சந்தும் - சந்தனத்தையும், எரிசெழு மணியும் - ஒளிபொருந்திய மாணிக்கங்களையும், முடங்குளை அகழ்ந்த - சிங்கத்தினுற் பிளக்கப் பட்ட, கொடி கரி கோடும் - யானையினது கோணிய கொம்புகளை யும், அகிலும் - அகிலையும், கனகமும் - பொன்னையும், அருவிகொ ண்டு - அருவிநீராற் கைக்கொண்டு, இறங்கி - இழிந்து, பொருகை அம் கன்னிக்கு - பொருகையாகிய திருமகட்கு.

(வி-ரை.) பொருகை - தாமிரபர்ணியாறு.

'அணியணிபூட்டும்' என்பதுமுதல் 'கூடலெம்பெருமான்' என்பதுவரை.

(15—20 வரிகள்.)

(ப-ரை.) அணி அணிபூட்டும் - அழகிய ஆபரணங்களைத் தரிக்கா கின்ற, செம்பு உடல் பொதிந்த - தாமிரவுடலால் மூடப்பெற்ற, தெய்வப் பொதியமும் - தெய்வத்தன்மையுள்ள பொதியமலையும், உவட்டாதது-தெவிட்டாமல், அமையா உணர்வு எனும் - அடங்காத அறிவென்கிற, பகியெறித்து - பரிதோன்றி, கின்று-நிலைத்து, உள்ள மும் உருகி-மனமுருகி, தெவி உண் ணும்-செவியாகிய வாயாலுண் ணத்தக்க, பெருந்தமிழ் அமுதும் - பெருமையாகிய தமிழென்னும் அமுதத்தையும், பிரியாது கொடுத்த - பிரிவற்றிருக்குமாறு தந்தரு ளிய, தோடு அணி கடுக்கை-இதழ் நெருங்கிய சங்கத்தோட்டினையும் கொன்றை மலையும் அணிந்த, கூடல் எம்பெருமான் - மதுரைநாயக னது.

(வி-ரை.) உவட்டல் - தெவிட்டல். கடுக்கை - ஆகுபெயர்.

'எவ்வுயிரிருந்தும்' என்பதுமுதல் 'இப்பெருநன்றி' என்பதுவரை.

(21—25 வரிகள்.)

(ப-ரை.) எவ்வுயிர் இருந்தும் - எவ்வகைப்பட்ட வுயிரிடத்தும் கலந்திருந்தும், அவ்வுயிர்-அந்தவுயிர்கள், அதற்கு-அத்தொன்மையை

யறியும்படி, தோன்றுது அடங்கிய - வெளிப்படாதடங்கிய, தொன்மைத்து என்ன - அனுதித் தன்மைபோல, ஆர்த்து எழு - ஆரவாரித்து மேலெழுகின்ற, பெருங்குரல் அமைந்துகின்று - பெருங்குரலடங்கிநின்று, ஓடுங்கி - தணிந்து, நின் பெரு நீக்குணனும்-உனது மிக்க கொடுங்குணனும், ஒழிந்து-நீங்கி, உளம் குளிரும் - என்னுளங் குளிரத்தக்க, இப்பெருநன்றி - இத்தப் பேருதவியை.

(வி-மை.) தொன்மை பழமை. ஆர்த்தல்-ஆரவாரித்தல். குணன்-போலி.

'இன்று' எனபதுமுதல 'அன்றே' எனபதுவரை.

(25—26 வரிகள்.)

(ப-மை.) இன்று - இப்பொழுது, எற்கு - எனக்கு, உதவுதியெனின்-தருவாயெனின், நின்பதம் பணிகுவல்-நின்பாதம் பணிவேனாக.

(வி-மை.) அன்று, எ - அசைநிலைகள். உதவல் - தரல்.

கடன் மடமகளே! புணர்த்து, உலகறியக் கலுழ்த்து, கலங்கி, அலறி, கொந்து, குழவியும் பிள்ளையும் மிகவுமீன்ற வருத்தமுடையையாதலால் நிறையினளாக என்மயிலேயு நின்மகளாகக் கொண்டு, கூடற்பெருமானது தொன்மைத்தென்ன, குலமைக் தொடுவகி நீக்குண மொழிந்து உள்ளங் குளிரும் பெருநன்றி யுதவுதியெனின், நின்பதம் பணிகுவலென விணைமுடிவு செய்க. (கஉ)

திருக்கோவையார் கஉ - ம் செய்யுள்.

பிரிவுணர்த்தல்.

பிரிவுணர்த்தலென்பது—ஐவகைப்புணர்ச்சியும் பெற்றுப்புணர்வதன்முன்னும் புணர்ந்தபின்னும் ஒத்தவன்பினனுய் நின்ற தலைமகன் பிரியுமா றென்னையெனின், இப்புணர்ச்சி நெடுங்காலஞ் செல்லக்கடவதாக இருவரையுங் கூட்டிய தெய்வந்தானே பிரியுமாறு பிரிவிக்கும், அது பிரிவிக்குமாறு, தலைமகன் தனதாதரவினுல் நலம்பாராட்டக் கேட்டு, எம்பெருமான் முன்னின்று வாய்திறந்து பெரிய தோர் நாணின்மை செய்தேனெனத் தலைமகள் நாணி வருந்தாநிற்ப, அதுகண்டு இவள் வருந்துகின்றது யான் பிரிவேனாக வினைந்தாக வேண்டுமென் றுட்கொண்டு, அவளுக்குத் தான் பிரிவின்மை கூறு நிற்றல். அதற்குச் செய்யுள்:—

சிந்தா மணிசெனை கடலமிர் தகதிலலே யானருளால
வந்தா லிகழ்ப் படுமே மடமான் விழிமயிலே
யந்தா மரையன்ன மேனினனே யானகன் றுற்றுவனே
நிந்தா குலமுற்றென் னேவென்னே வாட்டந திருத்துவதே

பணிவளர்சல்குலேப் பயிர்ப்புறத்திப்
பிணிமனர்த்தாரோனே பிரிவுணாததியது.

(ப-ரை.) சிந்தாமணி - (ஒருவன்தவஞ்செயது பெறுஞ்) சிந்தா மணியும், தெள் கடல அமிர்த மதெளிந்த கடலினமிர்தமும், தில்லே யான அருளால் - (வந்தகதமினறிக) தில்லையானருளால், வந்தால-(தாமே) வந்தால், இகழப்படுமே - (அவை அவனுல்) இகழப்படுமோ, மடமான் விழி மயிலே - மடமான் விழிபோலும் விழிபையாடைய மயிலே, அம் தாமரை அனனமே - அழகிய தாமரைக்கண வாழுமன னமே, நினனே யான் அகன்று ஆற்றுவனே - நின்னையான் பிரிந்தா றறி யுளனுவனே, நிந்தாகுலம் உற்று - நிந்தகுதயின் மயக்கமுற்று, எனனே வாட்டந திருததுவது - எனனே வாட்டுவது, எனமனு - எனனே, எ-று.

(வி-ரை.) அந்தாமரை யன்னம் திருவென்பாருமூளர் நினனே யென்புழி உயிரினுஞ் சிறந்த நினனையெனறும், யானென்புழி இரு தலேப்புளளினேருயிரேனுமிய யானெனறும், தசசொற்களான் விளங் கினை. வாட்டந திருததுவதே யெனனுஞ் சொற்கள் ஒருசொனனீர வாய, வாட்டுவதே யெனறு பொருள்பட்டு, இரண்டாவதற்கு முடி பாயின. வாட்டந திருததுவதெனறு பாடமாயின், வாட்டதினக ணிருத்துவ தெனறுரைக்க. பயிர்ப்பு - பயிலாத பொருட்கணவந்த அருவருப்பு ; ரண்டுப் பயிலாதபொருள பிரிவு. பிரிவுணாததல் - அகனறுற்றுவனேவெனப் பிரிவெனபது மொன்றுண்டென்பதுபட மொழிதல.

நேரிசையாசிரியப்பா.

நீலேயுடைப் பெருகதிரு நேர்படு காலேக்
காலாற் றுடிததுக கனனெறிதிர் கறுத்தும்
ரனிநிறை செல்வ நாடுரன் பொருளு
மெதிரபெறிற் கண்சிவந் தெடுத்தவை கனேந்தும்
5 தாமரை நிதியும் வால்வனேத் தனமு
மில்லம் புகுதரி லிருங்கத வடைதது
மரியய னமரர் மலேவடம் பூட்டிப்

பெருங்கடல் வயிறு கிடங்கெழுக் கூடைந்த
வழுநமூட் கைபி லுதவுழி யூற்றிய
மெய்யுல கிரண்டிலுட் செய்நரு ளுளரே
லெழுகதிர் விரிக்கு மணிகெழு திருநதிழை
நிற்பிரி வளரு மனனுள ருகுவன்
முழுதுறை நிறைந்த பொருண்மன நிறுநதிமுன்
வேடங் துறவா வீதியுடைச் சாக்கிய
னருட்கரை காணு வன்பெறுங் பெருங்கடல்
பலகாட் பெருகி யொருநா ளுண்டங் கு
கரைநிலே யின்றிக் கையகன் றிடலு
மெடுத்தடை கன்மலர் தொடுத்தவை சாத்திய
பேரொளி யிணையாக் கூடன் மாமணி
குலமலைக் கன்னியென் றுருள்குடி யிருக்கும்
விதிநிறை தவரு வொருபங் குடைமையும்
பறவைசெல் லாத நெடுமுக டுருவிய
சேகரத் திறங்குந் திருநதித் தலையு
நெடும்பக ரூழி நிலையுட னீநதிலு
மருங்கரை யிறநத வாகமக் கடலு
மிளங்கோ வினர்க ளிரண்டறி பெயரு
மன்னமும் பன்றியு மொல்லியி னெடுத்துப்
பறந்து மகழ்ந்தும் படியிது வென்னு
வறிவுகன் றுயர்ந்த கழன்மணி முடியு
முடைமையன் பொற்கழல் பேணி
யடையலர் போல வருண்மனந் திரிந்தே.

நிலையுடைப்பெருந்திரு - அருண்மனந்திரிந்தே. பதுதி - இயற்கைப்புணர்ச்சி. துறை - பிரிவுணர்த்தல்.

எழுகதிர் விரிக்கு மணிகெழு திருந்திழை.

(11—வது வரி.)

(பதை.) எழு சதிர் - உதயஞ் செய்கின்ற சூரிய கிரணங்களோ, விரிக்கும் - பரப்புகின்ற, மணி கெழு-மாணிக்கங் குயிற்றிய, திருநது இழை - திருத்திய வணிகளோயுடையாய்.

(வி-ரை.) திருந்திழை-அன்மொழித்தொகை, இது அண்மை விளியாதலால் இயல்பாயிற்று.

'நிலையுடை' என்பதுமுதல் 'கறுத்தும்' என்பதுவரை.
(1—2 வரிகள்.)

(பதவுரை) நிலையுடை - நிலைமையுள்ள, பெருந்திரு - பெருஞ் செல்வமானது, நேர்படுகாலை - இடைத்தகாலத்து, காலால் தடிந்த - அதனைக் காலாற்றள்ளி, எதிர் - எதிராக, கணைய - அழன்ற, கறுத்தும் - கோபித்தும்.

(வி-ரை) நேர்படுதல் - இடைத்தல். கனலல் - அழலல். கறுத்தல் - கோபித்தல்.

'நனிநிறை' என்பதுமுதல் 'களைந்தும்' என்பதுவரை.
(3—4 வரிகள்.)

(பதவுரை.) நனி நிறை - ஒழியாது நிரம்பிய, செல்வ நாடும்-வளம் பத்தைத்தருகின்ற நாடும், நன்பொருளும் - அதனை யாளுகற்குரிய கருவிகளும், எதிர்பெறின் - நேரிடின், கண்சிவந்து எடுத்து அவை களைந்தும் - அவையிற்றை முனிந்து எடுத்தெறிந்தும்.

(வி-ரை.) பொருள் - ஈண்டுக் கருவிகளுக்காயிற்று. கண்சிவத்தல் - முனிதல்.

'தாமரை' என்பதுமுதல் 'அடைத்தும்' என்பதுவரை.
(5—6 வரிகள்.)

(பதவுரை.) தாமரை நிதியும்-பதுமநிதியும், வால்வளை தனமும்-வெள்ளிய சங்கநிதியும், இல்லம் புகுதரில் - வீடு தேடிவரின், இருங் கதவு அடைத்தும் - பெரியகதவை மூடித்தடுத்தும்.

(வி-ரை.) வளைசங்கு. புகுதரின் என்பதற்குப் பகுதி புகுதர.

'அரியயன்' என்பதுமுதல் 'ஊற்றியும்' என்பதுவரை.
(7—9 வரிகள்.)

(பதவுரை.) அரி - திருமாலும், அயன் - பிரமனும், அமரர்-தேவர் களும், மலை-(மந்தரமென்னும்) மலையை நட்டு, வடம் பூட்டி-(வாசுகி யென்னும்) வடத்தைப் பூட்டி, பெரு கடல் - பெரிய கடலினது, வயிறு - வயிறானது, இடங்கு எழ - பள்ளம் படுமாறு, கடைந்த - கடைந்ததனலுண்டான, அமுதம் - அமுதமானது, உள் கையில்

உள்ளங்கையில், உதவுழி - கிடைக்குங்கால், ஊற்றியும் - அதனைத் தசையிற் கவிழ்த்தும்.

(வி-ரை.) வடம் - கயிறு. கடைந்த - காரணப்பொருட்டாகிய பெயரெச்சம்.

மெய்யுல கிரண்டினுட் செய்குந ருளரேல்.
(10—வது வரி.)

(ப-ரை) மெய் உலகு இரண்டினுள்-மெய்ம்மையுள்ள விண்ணு மண்ணுமாகிய விரண்டுலகத்திலும், செய்குநர் உளரேல் - செய்தா ருண்டாயிருத்தல்.

(வி-ரை.) ஏல் - எனின் என்பதன் மரூஉ.

முழுதுறநிறைந்த் என்பதுமுதல் 'கையகன்றிடலும்' என்பதுவரை.
(13—17 வரிகள்.)

(ப-ரை.) முழுதுற நிறைந்த - உள்ளும் புறம்புபாக எங்கு நிறைந்துள்ள, பொருள் - சிவமெனும் பொருளே, மனம் நிறுத்தி - சித்தத்தின்கண்ணே நிலைபெறவைத்து, முன் - ஆதியிலுள்ள, வேடம் துறவா - சமணர்க்குரிய வேடத்தைக் கைவிடாத, விதி உடை-முறைமையையுடைய, சாகியன் - சாக்கியநாயனர், அருள் கரை காணு - அருளாகிய கரையைக் காணப்பெற்று, அன்பு என்னும் பெரும் கடல் - அன்பாகிய பெருங்கடலானது, பல நாள் பெருகி - அனேகநாளாகப் பெருகெடுத்து, ஒருநாள் உடைந்து - ஒருநாரு டைபட்டு, கரை நிலையின்றி-கரையானது நிலைபெறாமல், கையக னிடலும் - செயலற்றுச செல்லுதலும்.

(வி-ரை) காணு-செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். கையகறல்-ஒருசொல.

'எடுத்தடை' என்பதுமுதல் 'ஆகமக்கடலும்' என்பதுவரை.
(18—25 வரிகள்.)

(ப-ரை.) எடுத்தி அடை - எடுத்துச் சேர்த்துவைத்த, கல் மலரை - கல்லாகிய மலர்களே, தொடுத்து சாத்திய - அடுக்காக அருச்சித்த, இணையா - ஒப்பில்லாத, பேரொளி - பேரொளிபாகிய, கூடல் மரமணி - மதுரையிலுள்ள மாணிக்கம், குலம் - மேன்மையா

கிய, மலை கன்னி என்று - மலைமகளென்று சொல்லப்பட்டு, அருள் - தனது கருணையானது, குடியிருக்கும் - பிரியாதிருக்கின்ற, விதி - வேதத்தால் விதிக்கப்பட்ட, நிறை தவரு - விபுத்துவம் தவறுசை, ஒருபங்கு உடைமையும்-ஒருபாகமுடைய தன்மையும், பறவை செல்லாது-பறவைகள் செல்லாமல், நெடு முகடு-நெடிய ஆகாயமுகட்டை, உருவிய - கடந்தப்பாற்சென்ற,சேகரத்து - திருமுடியில், இறங்கும்-இறங்கித் தங்கிய, திருநதி துறையும் - கங்காநீரமும், நெடும் பகல் ஊழி - அனேக வூழிக்காலங்களே, நினைவுடன் நீத்தினும் - நினைப்புடனே கடந்தாலும், அரங்கரை இறந்த-அருமையாகிய கரைகாணக் கூடாத, ஆகமக்கடலும் - ஆகம சமுத்திரமும்.

(ம்-ரை.) அடைத்தல் - சேர்த்தல். விபுத்துவம் - பெருமை. சேகரம் - முடி. நீரம் - கரை.

'இளங்கோவினர்கள்' என்பதுமுதல் 'அகழ்ந்து'

என்பதுவரை.

(26—28 வரிகள்.)

(ப-ரை.) இளம் கோவினர்கள் - இளவரசராகிய, இரண்டு அறி பெயரும் - படைப்பு அளிப்பு என்னுந தொழிலறிந்த இருவரும், அன்னமும் பன்றியு மெடுத்து - அனனமாகவும் பன்றியாகவும் உருவெடுத்து, ஒல்லையில் பறந்தும் அகழ்ந்தும் - காலந தாழ்க்காமல் வீணணிற் பறந்தும் மண்ணைப் பிளந்தும்.

(வி-ரை.) படைப்பு - சிருட்டித்தல். அளிப்பு - காத்தல். அகழ்தல் - பிளத்தல். தாழ்தல் - தாமதித்தல்.

'படியிதுவேன்னு' என்பதுமுதல் 'உடைமையன்'

என்பதுவரை.

(28—30 வரிகள.)

(ப-ரை.) படி இது என்ன - அளவு இதுவாமென்று, அறிவு அகன்று - அறியப்படாமல், உயர்ந்த - மேலுங்கீழு மூடுருவிய, கழல் மணிமுடியும்-திருவடியும் திருமுடியும், உடைமையன் - உடையவனது.

(வ் ரை.) மணியென்பதனைக் கழலுக்குங் கூட்டுக. கழல் என் பதனீற்றில் எண்ணும்மை தொக்கது.

'பொற்கழல்' என்பதுமுதல் 'தீரிந்தே' என்பதுவரை.

(30—31 வரிகள.)

நிற்பிரி வளரு மனனுள ளருவன்.

(12—வது வரி.)

(பதை) பொன் சடில் பேணி - பொன்னடியை யருச்சித்து, அருள திரி ந - அருட்பேறுநிரிக்க, அடையலர் மனமபோல - அடையாதார் மனமபோல, நின் பிரிவு - நினைவைப் பிரிதலுக்கு, உள் ளரு ம் - நினையாதின்ற, மனன் உளருகுவன் - எண்ணமுடையே னாவேனுக.

(வி-ரை) அடையலர் - பகைவர் உள்ளல் - நினைத்தல். ¢

திருந்திழையே! பெருந்திருவை கறுத்தும் நாடும் பொருளும் பெறின், கண்விழாது சுகோந்துமை, நிதியுங் தனமும புகின கதவடைத் தும், அமுத முதவழி யூற்றியும் செய்தாருளரேல், கூடன்மாமணி யாகிய வுடைமையன் சடில்பேணி, அடையலாது, அருள் திரிந்த மனபபோல நிற்பிரிவுளரு மனனுளருவேனென விணமுடிவு செய்க. (சுஎ)

திருக்கோவையார் சுகுசு-ம் செய்யுள்.

ஊடனீ டவாடியுரைத்தல்.

ஊடனீடவாடியுரைத்தலெபபது—தணிக்கத்தணியாது மிகுத் தூசைதஉத் தலைமகள் மென்மேலு மூடாகிற்ப, அன்று அம்மலை யிடத்துத் தன்னை யெய்துதற் கோருபாயமின்றி வருந்தாகிற்ப யா னுய்யு மவ்வண்ணந் தன்னிணைமலர்க் கண்ணினது இனிய நோக்கத் தைத் தந்தருளி, என்னைத் தன்வபமாக்கிய நம்பெணணமுதம் அது வன்று, இது நம்மை வருத்தவதோர் மாயமாமெனத் தன்னெஞ்சிற் சுச சொல்லி, ஊடனீடத் தலைமகன் வாடாகிற்றல். அதற்குச் செய் யுள்:—

திருந்தே னுயகின்ற சிற்றம் பலவர்தென் னம்பொதியி
லிருந்தே னுயவந் திணைமலர்க் கண்ணினின் னேக்கருளிப்
பெருந்தே னெனநெஞ் சுகப்பிடித் தாண்டகம் பெண்ணமிழ்தம்
வருந்தே லதுவன் றிதுவோ வருவதோர் வஞ்சனையே.

வாடா ஊட
னீடா வாடியது.

(ப-ரை.) திருந்தேன் உய்ப நின்ற-(ஒருவாற் றானும்) திருந்தாதியான் பிறவித் துன்பத்தில் பிழைக்கவந்து நின்ற, பிறர்பலவர் - சிற்றம்பலவாது, தென்னம் பொதியில் - செற்றின்கண் ணுளதாகிய பொதியிலிடத்து, இருந்தேன் - ஒரு முயற்சியுமின்றி யிருந்தயான், உயவந்து - உய்யவண்ணம்வந்து, இணை மலர் கண்ணின் - (தன னுடைய) இணைந்த மலர்போலுங் கண்களினது, இன் தோக்கு அருளி-(உள்ளக்கருத்தை வெளிப்படுத்தும் நட்பினைக்கூடிய நோக்க மாகிய) இனிய கடைக்கணினுக்கத்தை முன்னெனக்குத்தந்து, பெரு தேன் என-பெருந்தேன்போல இனிதாய், நெஞ்சு உக-என்னெஞ்ச முருக, பிடித்து ஆண்ட - என்னைப் பிடித்துத் தன்வயமாக்கிய, நம் பெண் அடிமைத்தம் - நமது பெண்வடிவையுடைய அடிமைத்தமாகிய, அது - அது, ஆன்று - இதுவன்று, இதுவோ வருவதோர் வஞ்சனை-இதுவோ வருவதாரு மாயம், வரும்சேல் - அதனால் நீ வருந்தா தொழி, எ-று.

(வி-ரை.) ஓராம் - ஒழிபிசைக்கண் வந்தது. தன்னை நோக்கி யொருமுயற்சியு மில்லாத யான் பிறவித் துன்பத்தில் பிழைக்கத் தானேவந்து தனதிணைமலர்க் கண்ணினதினிய கடைக்கணுக் கத்தைத் தந்து பெருந்தேன்போன் றினிதாய், என்வன்மனம் நெகிழ வெனவலிந்துபிடித்த தடிமைகொண்ட பெண்ணடிமைத்தமென வேறு மொரு பொருள் வினைகியவாறு கண்டுகொள்க.

நேரிசையாசிரியப்பா.

நிரைவளை மீட்டமுத் தரளக் குப்பையு
மன்னக் குழுவுங் குருகணி யிமழுங்
கருங்கோட்டுப் புன்னை யரும்புதிர் கிடையு
மூடவெண் டாழை யுழ்ந்தகுமுண் மலரு
மலவன் கவைக்கா லல்லவெளை லலகும்
வாலுகம பரப்பி வலைவலி தொற்றினர்க்
கிதன வறியா தொளறிவெ ளிடையா
மாலுடைக் கழிக்கரைச் சேரிபோர் பாங்கர்ப்
புளவொடு பிணங்கும் புட்கவ ராது
வெள்ளிற வுணங்கல் காவ லாக
வலருபிர் கவருங் கொடுநிலைக் கூற்ற
மகனெனத் தரித்த நிலையறி குவனேல்

விண்குறித் தெழுநது மேலவர்ப் புடைத்து
நான்முகற் ருங்கும் தேனுடைத் தாமரை
யிதழுங் கொட்டையுஞ் சிதறக் குதர்ந்து
வானவ ரிறைவன் கடவுகார் பிடித்துப்
பஞ்செழப் பிழிந்து தண்புனல் பருகி
மைத்தெனப் பெயரிய பெடிமர மொடித்துக்
கண்ணுளத் தளவா வெளளுணை வண்டு
பொரியெனத் தாரகைக் கணனுடல் குத்தி
யமைத்திற லினைய கொடுந்தொழில் பெருக்கிய
மாயா வரத்த பெருங்குரு கடித்து
வெண்சிறை மூடித்த செஞ்சடைப் பெருமான்
கூடற் கிறையோன் குறியுருக் கடந்த
விருபத மூளவைத் தவர்மேற் பான்
மருவுத லொருவு மதியா குவனே.

நினவளோயீட்டமும்-மதியாகுவனே. பதநீ-பாத்தையிற்பிரிவு. துறை - ஊடனீட வாடியுரைத்தல்.

'நிரைவளை' என்பதுமுதல் 'இனமும்' என்பதுவரை.

(1—2 வரிகள்.)

(ப-ரை.) நிரை வளை ஈட்டமும் - வரிகசயான சங்கினமும், தாளக்குப்பையும் - முத்தக்குவையும், அண்ணக்குருவும் - அன்னக் கூட்டங்களும், அணி குருகு இனமும் - அழகிய கொக்குக் கூட்டங் களும்.

(வி-ரை) தாளம் - முத்து. அன்னம் - அன்னப்பறவை.

'கருங்கோட்டு' என்பதுமுதல் 'முண்மலரும்' என்பதுவரை.

(3—4 வரிகள.)

(ப-ரை.) கரும் கோட்டு புன்னை - கரியகோட்டினையுடைய புன்னையினது, அரும்பு உதிர் இடையும் - அரும்பு உதிர்கின்ற விட மும், முடம் வெண் தாழை - முடக்காகிய வெண்டாழையானது, ஊழ்த்த - உதிர்த்த, முள் மலரும் - முள்பொருந்திய மலர்களும்.

(வி-ரை.) கோடு - கொம்பு (இனை). இடை - இடம். முடம் - வளைவு. ஊழ்த்தல் - உதிர்த்தல்.

'அலவன்' என்பதுமுதல் 'வலிதோற்றினர்க்கு' என்பதுவரை.
(5—6 வரிகள்.)

(ப-ரை.) அலவன் - நண்டினது, கலை சால் அன்ன - பிளவாகிய கால்போன்ற, வெள் அலகும்-வெள்ளைப் பலகறையும், வாலுகம் பரப்பி - மணற்மேட்டில் விரித்து, வலை - வலையை, வலிதோற்றினர்க்கு - வலிதாக ஈர்த்துக் கட்டின செய்தனில மாக்களுக்கு.

(வி-ரை.) கலை - பிளவு. அலகு - பலகறை. வாலுகம் - மணல்மேடு. ஈர்த்தல் - இழுத்தல்.

'ஈதெனவறியாது' என்பதுமுதல் 'சேரியோர்பாங்கர்' என்பதுவரை.
(7—8 வரிகள்.)

(ப-ரை.) ஈது என அறியாது - இன்னதென அறியப்படாமல், ஒன்றி-தலேமயங்கி, வெள்ளிடையாம்-வெளியிடமாகிய, மாது உடை அழகையுடைய, கழிக்கரை - கழிக்கரையின்கண்ணுள்ள, சேரி ஓர் பாங்கர் - சேரியெனுந் பக்கத்தில்.

(வி-ரை.) இடை - இடம். மாது - அழகு.

'புள்ளோடுபிணங்கும்' என்பதுமுதல் 'காவலாக' என்பதுவரை.
(9—10 வரிகள்.)

(ப-ரை) புள்ளொடு பிணங்கும் - புள்ளுகளோடேம், புள் கவராது - பறவைகள் கவர்ந்து செல்லாது, வெள்ளிற உணங்கல் வெள்ளிய விரும்வுணங்கற்கு, காவலாக - காவலாயுள்ளாள்போல.

(வி-ரை.) இரு - ஓர்வகைமீன், இது "குறியதன்கீழா" ஆலால் இற எனக் குறுகிற்று. உணங்கல் - வற்றல்.

'உலகுயிர்கவரும்' என்பதுமுதல் 'நிலேயறிகுவனேல்' என்பதுவரை.
(11—12 வரிகள்.)

(ப-ரை.) உலகு உயிர் கவரும் - உலகத்திலுள்ள வுயிர்களைக் கவராநின்ற, கொடுநிலே கூற்றம்-கொடுந்தன்மையையுடைய யமனே, மகள் என தரித்த - பெண்ணென வேடம்பூண்டிருக்கிற, நிலே அறிகுவனேல் - நிலேயை முன்னரே யறிவேனுயின்.

(வி-ரை.) உயிர் - ஜீவராசிகள். தரித்தல் - பூணல்.

'விண்குறித்து' என்பதுமுதல் 'குதர்ந்து' என்பதுவரை.
(13—15 வரிகள.)

(ப-ரை) விண் குறித்து எழுந்து-விண்ணுலகத்தைக் குறித்து மேலெழுந்து, மேலவர் புடைத்த - தேவர்களேயடித்து, நான்முகன் தாங்கும - பிரமனேச சுமக்காநின்ற, தேன் உடை காமரை - தேனுடைய தாமரையினது, இதழும் - இதழும், கொட்டையும் - பொகுட்டும், சிதற - சிதறும்படி, குதர்ந்து - அழிதது.

(வி-ரை) விண் - ஆகுபெயர். மேலுலகத் திருப்பவராதலால் தேவர்களே 'மேலவர்' என்றார். குதாதல் - அழிததல்.

'வானவரிறைவன்' என்பதுமுதல் 'தண்புனல்பருகி' என்பதுவரை.
(16—17 வரிகள.)

(ப-ரை) வானவர் இறைவன் - தேவர்களுக இறைவனுகிய இநதிரன், கடவு கார் - நடததுகின்ற மேகத்தை, பிடிதது - பிடிதது, பஞ்சு எழ - பஞ்செழும்படி, பிழிந்து - பிழிந்து, தண் புனல் பருகி - அதிலுள்ள தண்ணிய புனலேயுண்டு

(வி-ரை) கடவல் - நடத்தல். புனல் - நீர்

'ஐந்தெனப்பெயரிய' என்பதுமுதல் 'எள்ளுணவுண்டு' என்பதுவரை.
(18—19 வரிகள.)

(ப-ரை.) ஐந்தென பெயரிய - ஐநதென்று பெயருள்ள, நெடு மரம் ஒடிதது - நெடிய கற்பகமரங்களே யொடித்து, கண் உளதது அளவா - கண்களுக்கு முள்ளத்தகாத பொருந்தாத, எள் உணவு உண்டு - இகழத்தக்க வுணவையுண்டு.

(வி-ரை.) நெடிமை - மேன்மைமேற்று. எள்ளல் - இகழ்தல்.

'பொரியென'என்பதுமுதல் 'கூடற்கிறையோன்'என்பதுவரை.
(20—24 வரிகள்.)

(ப-ரை) தாரகை கணன் - தாரகைக் கூட்டங்களே, பொரி என - நெற்பொரிபோல, உடல் குத்தி - அவற்றைக்குத்தி, அடும் இறல் - கொல்லுக இறலாகிய, இனைய - இவைபோன்ற,' கொடு தொழில்-நீத்தொழிலே, பெருக்கிய-பெருகச்செய்த, மாயா வரத்த -

அழியாத வாத்தினையுடைய, பெருங்குருகு - பெரிய குருகாகிய அசுரனை, அடித்து - மடித்து, வெள் நிறை - அதனது வெள்ளிய சிறகினை, மூடித்த - தரித்த, செஞ்சடை பெருமான் - செஞ்சடையுள்ள கடவுளாகிய, கூடற்கு இறையோன் - மதுரை நாயகனது.

(ப-ரை.) கண்ண்-போலி. உடல் - ஆகுபெயர். நிறல்-வெற்றி.

'குறியுருக்கடந்த' என்பதுமுதல் 'மதியாகுவனே' என்பதுவரை (24—26 வரிகள்.)

(ப-ரை.) குறி உரு கடந்த-குறியுமுருவுமில்லாத, இரு பதம்-இரண்டு திருவடியினையும், உள் வைத்தவர்போல்-உள்ளத்தின்கண் வைத்தவர்போல, மருவுதல் - கூடுதலே, ஒருவும் - நீங்காகின்ற, மதியாகுவன் - மதியினனுவேன். (அ)

(வி-ரை.) குறி உரு என்பவற்றிற்றில் எண்ணும்மைகள் தொக்கன. மதி-ஆகுபெயர்.

கழிக்கரைச் சேரியோர் பாங்கர், உணங்கல் காவலாகக், கொடி நிலைக்கூற்ற மகளெனத்தரித்த நிலையறிகுவனேல், கூடற்கிறையோனது இருபத முள்வைத்தவர்போல மருவுதலொருவு மதியாகுவனென வினைமுடிவுசெய்க.

திருக்கோவையார் ககo - ம் செய்யுள்.

பங்கயத்தோடு பரிவுற்றுரைத்தல்.

பங்கயத்தோடு பரிவுற்றுரைத்தலென்பது :—பறவையோடு வருந்தாகின்றவள், இவை பெண் வருத்தங்கண்டு, இவள்வருந்தாமல், விரைய வரவேண்டுமென்று ஞாயிற்றை நோக்கித் தங்கை குவியாகின்றனவாதலால், என்மாட் டன்புடையன போலுமெனப் பங்கயத்தோடு பரிவுற்றுக் கூறுதல். அதற்குச் செய்யுள்:—

கருங்கழி காதற்பைங் கானலிற் றில்லையெங் கண்டர்விண்டா
ரொருங்கழி காதர மூவெயில் செற்றவொற் றைச்சிலைசூழ்ந்
தருங்கழி காத மகலுமென் றூழென் றலந்துகண்ணீர்
வருங்கழி காதல் வனசங்கள் கூப்பு மலர்க்கைகளே.

முருகவிழ் கான
லொடுபரி வுற்றது.

(ப-ரை.) தில்லை - தில்லைக்கணுளராகிய, எம் கண்டர்-எம்மு டையகண்டர், விண்டார் ஒருங்கு அழி-பகைவ ரொருங்கே யழியும்,

காதரம் - அச்சத்தையுடைய, மூ எயில் செற்ற - மூவெயிலைச் செற்ற, ஒற்றை சிலை சூழ்ந்து - தனிவில்லைச் சூழ்ந்து, அரு கழி காதம் - அரியவாகிய மிக்கதூரங்களை, அகலும் என்றும் - போகாகின்றது என்றும் இனியிவளெங்ஙன மாற்றும் என்று, அலந்து - வருந்தி, கரு கழி - கருங்கழியின்கண்ணும், காதல் - காதலையுடைய, பை கானலில்-பசியகானலின்கண்ணும் ' உளவாகித் தன் புற்று, கண் நீர் வரும் - கண்ணீர் வராகின்ற, கழிகாதல் - கழிகாதலையுடைய, வனசங்கள்-தாமரைகள் (விரைந்து வரவேண்டுமென்று அஞ்ஞாயிற்றை நோக்கி), மலர் கைகள் - (தம்) மலராகிய கைகளை, கூப்பும் - கூப்பி யிரவாகின்றன (இவையெம்மாட் டன்புடையன போலும்), எ-று.

(வி-ரை.) கானலின் வனசங்களெனவும், தில்லையெங்கண்டர் செற்றவெனவுங் கூட்டுக. கானலிற் கைகூப்புமென வியைப்பினு மமையும். காணற்பொய்கையின் வனசம் கானலின் வனசமெனப் பட்டன. அலந்து கண்ணீர் வருமென்பது இருபொருட் டாகலின், ம்லர்ந்து கள்ளாகிய நீர் வருமென்றுரைக்க. இப்பொருட்கு அலர்ந்தென்ப திடைக்குறைந்து நின்றதாகக் கொள்க. கதிரோன்றம்மைப் பிரியவாற்றாது கடிது வரவேண்டுமென வனசங்கள் கைகூப்பா நின்றனவென்று அவற்றிற்கு இரக்கிலளாக வுரைப்பினுமமையும். அலர்ந்த வென்பது பாடமாயின், அலர்ந்த வனசமென வியையும்.

நேரிசையாசிரியப்பா.

சிலைதுதற் கணைவிழித் தெரிவைய ருளமென
வாழ்ந்தகன் றிருண்ட நிறைநீர்க் கயத்து
ளெரிவிரிந் தன்ன பலவிதழ்த் தாமரை
நெடுமயல் போர்த்த வுடலொரு வேற்குக்
5 குருமணி கொழிக்கும் புனன்மலைக் கோட்டுழி
நின்பதி மறைந்த நெட்டிர வகத்துட்
குருகும் புள்ளு மருகணி சூழத்
தேனெடும் வண்டொடுந் திருவொடுங் கொழுமிப்
பெருந்துயி லின்பம் பொருந்துபு நடுநாட்
10 காணுநின் கனவினுட் கவர்மனத் தவரைக்
கொய்யுளைக் கடுமான் கொளுவிய தேரொடு
பூவுதிர் கானற் புறங்கண் டனனெனச்

சிறிதொரு வாய்மை யுதவினீ யாயிற்
சேகரங் கிழித்த நிறைமதி யுடலங்
கலைகலை சிந்திய காட்சிப தென்னக்
கடிமான் கீழ்ந்த கடமலைப் பன்மருப்
பெடுத்தெடுத் துந்தி முணிக்குலஞ் சிதறிக்
கிளஞர்க் ணைச்சாப் பொருளினர் போலச்
சாதகம் வெறுப்பச் சரிந்தகழ்ந் தார்த்துத்
திரள்பளிங் குடைத்துச் சிதறுவ தென்ன
வழியெதிர் கிடந்த வுலமுடன் முக்கி
வேங்கையும் பொன்னு மோருழித் திரட்டி
வரையர மகளிர்க் கணியணி கொடுத்துப்
பணைக்கைக் கடமா வெறுத்துறு பூழி
வடுடெழுந் தார்ப்ப மணியெடுத் தலம்பி
மயில்சிறை யால வலிமுகம் பனிப்ப
வெதிர்சுனைக் குவளை மலர்ப்புறம் பறித்து
வரையுட னிறைய மாலையிட் டாங்கு
நெடுமுடி யருவி யகிலொடு கொழிக்குங்
கைலைவீற் றிருந்த கண்ணுதல் விண்ணவ
னுடைகக் கடவுள் கூட னுயகன்
முமமை யுடைத்த காமர் சேவடி
நிறையுளந் தரித்தவர் போலக்
துறையுள நீங்கி யின்பா குவனே.

சிலைதுதற்கணைவிழி - இன்பாகுவனே. பதுதி - ஒருவழித் தணத்தல். துறை - பங்கயத்தோடு பரிவுற்றுரைத்தல்.

'சிலைநுதல்' என்பதுமுதல் 'கயத்துள்' என்பதுவரை.

(1—2 வரிகள்.)

(ப-ரை.) சிலை நுதல் - வில்லையொத்த நுதலையும், கணை விழி- அம்பையொத்த விழியையுமுடைய, தெரிவையர் உளம் என - மாதர் மனம்போல, ஆழ்ந்து - ஆழமுடைத்தாய், அகன்று - பரவி, இருண்டு - கலுத்த, நிறை நீர் கயத்துள் - நிறைந்த நீர்வாவியில்.

(வி-ரை.) நுதல் - நெற்றி.

'எரிவிரிந்தன்ன' என்பதுமுதல் 'ஒருவேற்கு' என்பதுவரை.
(3—4 வரிகள்.)

(ப-ரை.) எரி விரிந்தன்ன - நெருப்பு விரிந்தாற்போன்ற, பல இதழ் தாமரை - பலவிதழ்த் தாமரைமலரே, நெடு மயல் போர்த்த - மிக்க மயலான் மூடப்பட்ட, உடல் ; உடலுள்ள, ஒருவேற்கு - ஒரு த்தியாகிய வெனக்கு.

(வி-ரை.) எரி-ஆகுபெயர். தாமரை-ஆகுபெயர், அண்ண வீளி யாதலால் இயல்பாயிற்று. மயல் - மயக்கம்.

'குருமணி' என்பதுமுதல 'நெடிரவதத்துள்' என்பதுவரை.
(5—6 வரிகள.)

(ப-ரை.) குரு மணி - மாணிக்க மணிகளே, கொழிக்கும் - ஒது க்குகின்ற, புனல் - (அருவி) நீரையுடைய, மலைக்கோட்டுழி - மலை சிகரத்தி, நின் பதி - நின்னுயகனுகிய சூரியன், மறைந்த - ஒளிதத, நெடு இரவகத்துள் - நெடிய இரவில்.

(வி-ரை.) குருமணி - ஒளியிற் சிறந்தமணி, அது மாணிக்கமே யாதலால் அதனைக் 'குருமணி' என்றே கூறினர். கோடு - சிகரம்.

'குருகும்' என்பதுமுதல் 'கேழுமி' என்பதுவரை.
(7—8 வரிகள்.)

(ப-ரை.) குருகும் - கொக்கும், புள்ளும் - (மற்றைப்) பற வைகளும், அருகு - சமீபத்தில், உணி - அணியாக, சூழ - சூழா நிற்ப, தேனெடுத் - பெண்வண்டிம், வண்டொடும் - ஆண்வண்டிம், திருவொடும் - திருமகளும், கெழுமி - கூடி.

(வி-ரை.) அணி - வரிசை. சூழ்தல் - சுற்றிநிற்றல். திரு-ஆகு பெயர்.

'பெருந்துயிலின்பம்' என்பதுமுதல் 'கவர்மனத்தவரை' என்பதுவரை.
(9—10 வரிகள்.)

(ப-ரை.) பெருதுயில் இன்பம்-பெரியதுயிலாகிய வின்பத்தை, பொருந்துபு - பொருந்தி, நநோள் - அத்தயாமத்தில், காணும்-காணு நின்ற, நின் கனவினுள் - நின் சொப்பனத்துள், கவர் மனத்தவளை - வேறுபட்ட மனத்தினளை.

(வி-ரை.) பொருந்துபு - செய்பு என்னும் வாய்ப்பாட் டிறந்த காலப் வினையெச்சம்., கவர் - பிளவு, அது இங்கு வேறுபாட்டிற் காயிற்று.

'கோய்யுளை' என்பதுமுதல் 'உதவினையாயின்' என்பதுவரை.

(11—13 வரிகள்.)

(பதவுரை.) கோய் உளை - கொய்த பிடரிமயிரையுடைய, கடுமான் - வேகமான குதிரைகளை, கொளுவிய - பூட்டிய, தேரொடு - தேருடனே, பூ உதிர் - மலர்களுதிராநின்ற, கானல் புறம் - கானற் புறத்தில், கண்டனன் என - யான்கண்டேனென்று, சிறிதொரு வாய்மை - சற்றேருண்மை, உதவினையாயின் - சொல்வாயெனின்.

(வி-ரை.) கானல் - கழிக்கரைச் சோலை.

'சேகரம்' என்பதுமுதல் 'காட்சியதென்ன' என்பதுவரை.

(14—15 வரிகள்.)

(பதவுரை.) சேகரம் - முடியால், கிழித்த - கிழிக்கப்பட்ட, நிறை மதி உடலம்-நிறைந்த மதியினதுடலம், கலை - கலேத்து, கலேகிழிய-கலேகள் சிதறிய, காட்சியது என்ன - தோற்றமபோல.

(வி-ரை.) கிழித்த - செயப்பாட்டு வினைப் பொருளில் வந்தது. கலேந்தென - வினையெச்சப் பொருள்தந்துநின்றது. காட்சியது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி.

'கருமான்' என்பதுமுதல் 'பொருளினர்போல' என்பதுவரை.

(16—18 வரிகள்.)

(பதவுரை.) கடுமான் கீழ்ந்த - சிங்கத்தினுற் கிழிக்கப்பட்ட, கடமலே - யானேயினது, பல் மருப்பு-பலகோடுகளே, எடுத்து எடுத்து உந்தி - தூக்கித் தூக்கித் தள்ளி, மணி குலம் சிதறி - மணிக்குலங்களே வீசி, கிளைஞர்கள் - உறவினரால், நச்சா - விரும்பப்படாத, பொருளினர்போல - பொருளேயுடையவர்போல.

(வி-ரை.) நச்சா - செயப்பாட்டு வினைப்பொருளில்வந்தது. கீழ்தல் - கிழித்தல். கடமலே - மதநீர் சொரிகிறமலே (யானே). சிங்கத்தினும் வேகமுள்ள விலங்கு வேறொன் றின்மையான் அதனே 'கடுமான்' என்றார். மா-னகரச்சாரியை பெற்று மான் என்றுயிற்று.

'சாதகம்' என்பதுமுதல் 'சிதறுவதென்ன' என்பதுவரை.

(19—20 வரிகள்.)

(ப-ரை.) சாதகம் வெறுப்ப - சகோரப்பட்கள் வெறுக்குமாறு, சரிந்தகழ்ந்து ஆர்த்து - ஒழுகிப்பெயர்ந்தொலித்து, நிரள் பளிங்கு - நிரண்ட பளிகுப்பாறைகளே, உடைத்து சிதறுவது என்ன - உடைத்துச் சிதறுகின்றதுபோல.

'வழியெதிர்கிடந்த' என்பதுமுதல் 'பூழி' என்பதுவரை.

(21—24 வரிகள்.)

(ப-ரை.) வழி எதிர் கிடந்த - வழிக்கெதிராகக் கிடந்த, உலமுட்ன் தாக்கி - கற்றூணோடு மோதி, வேங்கையும் - வேங்கை மலரும், பொன்னும் - பொன்னும், ஒருழி நிரட்டி - ஒரிடத்தச் சேர்த்து, வ்வை அரமகளிர்க்கு - மலையில் வாழும் அரமகளிர்க்கு, அணி அணி கொடுத்து - அணியப்பட்ட ஆபரணமாகக்கொடுத்து, பனை கை-பனைபோன்ற துதிக்கையுள்ள, கடமா-மதயானையின், எருத்து உறு - பிடரியிலுள்ள, பூழி - புழுதியை.

(வி-ரை.) உலம் - கற்றூண். அரமகளிர் - தெய்வப்பெண்கள். கடமா - (கடம் - மதம், மா - விலங்கு) யானை.

'வண்டெழுந்தார்ப்ப' என்பதுமுதல் 'மாலையிட்டாங்கு' என்பதுவரை.

(25—28 வரிகள.)

(ப-ரை.) வண்டு எழுந்து ஆர்ப்ப - (அதன் மதத்தை யுண்ணுகின்ற) வண்டுகளெழுந் தாரவாரிக்க, மணி எடுத்து - மணிகளே யெடுத்து வீசி, அலம்பி - கழுவி, மயில் - மயில்கள், சிறை-சிறையை விரித்து, ஆல - நடிக்கவும், வலிமுகம் - குரங்குகள், பனிப்ப - (குளிரால்) நடுங்கவும், எதிர் - எதிரிலுள்ள, சுனை குவளை மலர் - சுனையில் குவளை மலர்களே, புறம் பறித்து - புறத்திற் பறித்து வீசி, வையுடல் நிறைய - மலையிடனெங்கும் நிரம்பும்படி, மாலை இட்டாங்கு - மாலை சூட்டியவாறு.

(வி-ரை.) ஆர்த்தல் - ஆரவாரித்தல். அலம்பல்-கழுவல். ஆலல் - நடித்தல், பனித்தல் - நடுங்கல். உடல் - இடம்.

'நெடுமுடியருவி' என்பதுமுதல் 'கூடனுயகன்'
என்பதுவரை.

(29—31 வரிகள்.)

(ப-ரை.) நெடு முடி அருவி - நெடிய முகட்டின்கண் அருவியானது, அடிலொடு கொழிக்குமீ - அதிற்கட்டைகளையும் பிறவற்றையும் அலைகளாற் கொழித்துத்தள்ளிய, கைலை வீற்றிருந்த - கைலை மலையில் வீற்றிருக்கின்ற, கண் ணுதல் விண்ணவன் - கண்ணுதற் பகவானுகிய, நாடகக்கடவுள் - நடேசமூர்த்தியெனும், கூடல் நாயன் - மதுரைப்பெருமானது.

(வி-ரை.) முடி முகடு என்பன சிகரமென்னும் பொருள். நாடகம் - நடனம்.

'தாமரையுடைத்த' என்பதுமுதல் 'இன்பாகுவன்'
என்பதுவரை.

(32—34 வரிகள்.)

(ப-ரை.) தாமரை உடைத்த - தாமரைமலரைத் தோற்பித்த, காமர் சேவடி - அழகிய ஸ்ரீபாதங்களே, நிறை உளம் - உள்ளத்திலே நிறையும்படி, தரித்தவர்போல - தரித்த அன்பர்போல, குறையுளம் நீங்கி - மனக்குறை நீங்கி, இன்பாகுவன் - இன்பமயமாவேன்.

(வி-ரை.) உடைத்தல் - தோற்பித்தல்.

தாமரைமலரே! ஒருவேற்கு, நின்பதிமறைந்த நெட்டிரவகத்துள், நின்கனவினுள், கவர்மனத்தவரைக் கானற்புறங் கண்டனனென, சிறிதொரு வாய்மை யுதவினையாயின், கைலை வீற்றிருந்த கூடல்நாயகன் காமர்சேவடி யுளந்தரித்தவர்போல் குறையுளநீங்கியின்பாகுவனென வினைமுடிவுசெய்க. (கக)

திருக்கோவையார் உரும் செய்யுள்.

பதிபரிசுரைத்தல்.

பதிபரிசுரைத்த லென்பது — நகர் காட்டிக்கொண்டு சென்று, அங்ஙகரிடைப்புக்கு, அவ்விடத்துள்ள குன்றுகள், வாவிகள், பொழில்கள், மாளிகைகள், தெய்வப்பதி, இவையெல்லாஞ் சனித்தனி காட்டி, இதுகாண் நம்பதியாவதெனத் தலைமகளுக்குத் தலைமகன் பதிபரிசு காட்டோதிற்றல். அதற்குச் செய்யுள்:—

செய்குன் றுவையிலை சீர்மலர் வாவி விசும்பியங்கி
னைகின்ற திங்களைப்ப் பாறும் பொழிலவை ஞாங்கொகும்
பொய்குன்ற வேதிய ரோதிட முஞ்சிட மிந்திடமு
மெய்குன்ற வார்சிலை யம்பல வற்கிட மேந்திழையே

கண்ணிணர் வளர்கர் கண்டுசென் றடைந்து
பண்ணிவர் மொழிக்குப் பதிபரி சுரைத்தது.

(ப-ரை.) உவை செய் குன்று - உவைசெய் குன்றுகள், இவை சீர் மலர் வாவி-இவை நல்லமலரை யுடையவாவிகள், அவை விசும்பு இயங்கி னைகின்ற திங்கள்-அவை விசும்பின்க ணியங்குதலான் வருந திங்கள், எய்ப்பு ஆறும் பொழில்-அயர் உயிர்க்கும் பொழில்கள், உந்திடம ஞாயகர் எங்கும்-உவ்விடம் மிசையெங்கும், பொய் குன்ற-உலகத்திற் பொய் (மூதலாகிய குற்றங) கெட, வேதியர் ஒதிடம் மறையவர் மறைகொல்லுமிடம், எந்திழை-எந்திழாய், இந்திடமும் - இவ்விடமும், எய்-எய்தற்குக் (கருவியாகிய), குன்றம் வார் சிலை-குன்றமாகிய நீண்ட வில்லையுடைய, அம்பலவற்கிடம் - அம்பலவற் கிருப்பிடம் (இத்தன்மைத்திவூர்), எ-று.

(வி-ரை.) இவையென்பது தன்முன் னுள்ளவற்றை. உவையென்பது முன்னின்றவற்றிற் சிறிதுசேயவற்றை. அவையென்பது. அவற்றினுஞ் சேயவற்றை. முன் சொல்லப்பட்டவையே யன்றி இதனையுங் கூறுகின்றே னென்பது கருத்தாகலின் இந்திடமுமென்னு மும்மை இறந்ததுதழீஇய வெச்சவும்மை. உதிடம் இந்திடமெனச் சுட்டுறு திரிந்து நின்றன. பண்ணிவர்மொழி - பண்போலுமொழி.

நேரிசையாசிரியப்பா.

எரிதெறற் கரிய பொடிபொறுத் தியங்கினை
முகிறலை சுமந்த ளிமிறெழுந் திசைக்கும்
பொங்கருட் படுத்த மலர்கால் பொருந்துக
கருங்கடத் தெதிர்ந்த கொடும்புலிக் கொதுங்கினை
வரியுடற் செங்கண் வரால்ன மெதிர்ப்ப
வுழவக் கணத்த ருடைவது நோக்குக
கொலைஞர் பொலிந்த கொடித்தேர்க் கணங்கினை
வேதியர் நிதிமிக வீதிமக முற்றி
யவ்வீர தத்துறை யாடுதல் கெழுமிப்
பொன்னுருள் வையம் போவது காண்க

வாறலே யெயின ரமர்க்களிக் கழுங்கினே
பணைத்தெழு சாலி நெருங்கு புகுத்து
கழுநீர் களைஞர்தங் கம்பலை காண்க
தழறலைப் பழுதத பரன்முரம் படுத்தனே
சுரிமுகக் கூழவனே நிலவெழச் சொரிதத
குளிர்வெண் டரளக் குவாவினை காண்க
வலகைநெட் டிரதம் புனலெனக் காட்டினே
வன்மீ னெடுங்கயல் பொதுளினே யகத்துக்
கிடங்கெனப் பெயரிய கருங்கடல் காண்க
காகளம் பூசற் முடியொலி யேற்றனே
குமிமியஞ் செவ்வியர் சுருமுகில் விளர்ப்பக்
கிடைமுறை யெடுக்கு மறையொலி கேண்மதி
யமராகண் முனிக்கணைத் தவைமூன் றவறு
புரிந்துட னுமைகண் புதைப்பமற் றுமையு
மாடகச் சயிலச் சேகரந் தொடாத்த
வொற்றையம் பசுங்கழை யொல்கிய போல
வுலகுயிர்க் குயிரெனு நிருவரு வினைத்து
வினைக்காங் கொடுகண் புதைப்பவவ் வழியே
யுலகிரு டிரக்குஞ் செஞ்சுடர் வெண்சுடர்
பிரமனுட் பட்ட நிலவுயி ரனைத்துக
தமகெனைக் காட்டு மொளிக்கண் கெடலு
மற்றவர் மயக்கங் கண்டவர் கண்பெறத்
திருநுதல் கிழித்த தனிவிழி நாயகன்
முங்கிய கூடற் பெருக
நீங்கிது காண்கமுத் தெழினைகைக் கொடியே.

எரிதெறற்கரிய - எழினைகைகொடியே. பதுகீ-உடன்போக்கு. துறை - பதிபரிசுரைத்தல்.

முத் தெழினைகைக் கொடியே.
(35—வது வரி.)

(ப-ரை.) முத்து - முத்துப்போன்ற, எழில் - அழகாகிய, நகை - பற்களுள்ள, கொடியே - கொடிபோல்வாய்.

(வி-ரை.) கொடி - ஆகுபெயர்.

எரிதெறற் கரிய பொடிபொறுத் தியங்கினை.
(1—வது வரி.)

(ப-ரை.) எரி - நெருப்புப்பரலும், தெறற்கரிய - சுடுதற்குக் கூடாத, பொடி - (பாலையில் வெவ்விய) பரற்பொடிகளை, பொறுத்து - சகித்துக்கொண்டு, இயங்கினை - நடந்தனை.

(வி-ரை.) இயங்கல் - ஈண்டு நடத்தற்பொருட்டு.

'முகில்' என்பதுமுதல் 'பொருந்துக' என்பதுவரை.
(2—3 வரிகள்.)

(ப-ரை.) முகில் - மேகங்களை, தலை - தலையின்கண், சுமந்த - தாங்கிய, ஞிமிறு - வண்டுகள், எழுந்து - எழுந்து, இசைக்கும் - ஒலிக்காநின்ற, பொங்கருள் - சோலையினிடத்தே, படித்த - கீழேபடித்த, மலர் - மலரில், கால் - நின்காலை, பொருந்துக - வைத்திடுக.

(வ்-ரை.) இசைத்தல் - ஒலித்தல். பொங்கர் - சோலை.

'கருங்கடாது எனபதுமுதல 'நோக்குக' என்பதுவரை.
(4—6 வரிகள்.)

(ப-ரை.) கரு - கரிய, கடத்து - காட்டினிடத்து, எதிர்த்த - எதிர்த்த, கொடும்புலிக்கு - கொடுமையான புலிக்கு, ஒதுங்கினை - பயந்தனை, வரியுடல் - வரியுடலும், செம் கண் - செங்கண்ணுமுள்ள, வரால் இனம் - வரால்மீன் கூட்டங்கள், எதிர்ப்ப - துள்ளியெழுதலால், உழவக்கணத்தர் - கூட்டமாகிய உழவர்கள், உடைவது - பிதிர்ந்தோடுவதை, நோக்குக - பார்ப்பாயாக.

(வி-ரை.) கடம் - காடு. எதிர்த்தல் - துள்ளியெழுதல்.

'கோலஞர்' என்பதுமுதல் 'போவதுகாண்க' என்பதுவரை.
(7—10 வரிகள்.)

(ப-ரை.) கொலைஞர் - மறவர், பொலிந்த - எறிவந்த, கொடி தேர்க்கு - கொடியையுடைய தேர்களைக்கண்டு, அணங்கினை - வருந்தினை, வேதியர் - மறையோர், நிதி மிக-செல்வம் வளருமாறு, விதி மகம் முற்றி-யாகங்களை முறைமையான் முடித்தி, அவ்விரதம்-அவ்விரதத்தின்பொருட்டு, தறையாதுதல் கெழுமி - நீராடல் செய்து, பொன் உருள் வையம் - பொன்னுலாவிய ஆழித்தேர்மேல், போவது காண்க - போகின்றதை நோக்குக.

(வி-ரை.) மறவர் - கொலையையே தொழிலாக வுடையவராத லால் அவரைக் 'கொலைஞர்' என்றார்.

'ஆறலையெயினர்' என்பதுமுதல் 'கம்பலைகாண்க'

என்பதுவரை.

(11—13 வரிகள்.)

(ப-ரை.) ஆறு அலை எயினர் - வழிபறிப்போராகிய வேடர் களது, அமர்க்கலிக்கு - போரொலிக்கு, அழுங்கினை - நொந்தனை, பணைத்து எழு சாலி - அடிபருத்து மேல்வளர்ந்த நெற்பயிர்களை, நெருநகுபு புகுந்து - நெருங்கிப் புகுந்து, கழுநீர் - செங்கழுநீர்க்களை யை, களைஞர் - பறிப்பவரது, கம்பலை காண்க-ஓசையைக் காண்க.

(வி-ரை.) அழுங்கல் - சோதல். பணைத்தல் - பருத்தல். தம் சாரியை.

'தழறலைப்பழுத்த்' என்பதுமுதல் 'காண்க' என்பதுவரை

(14—16 வரிகள.)

(ப-ரை.) தழல் தலைப்பழுத்த - நெருப்பானது தம்மிடத்தே பழுத்துள்ள, பல் முரம்பு - பருக்கைக் கண்மேட்டை, அதுதனை - நெருங்கிவருதனை, சுரி முக வள் குழு - சுரிக்க முகத்தினையுடைய சங்கினம், நிலவு எழ சொரிந்த - சந்திரிகை வெளிப்படவீன்ற, குளிர் வெண் தரளக்குவால் இவை காணக - தட்பமாகிய வெண்முத்தக் குவையாகிய விவற்றைக் காண்க.

(வி-ரை.) தலை எழனுருபு. தரளம் - முத்து. குவால் - குவியல்.

'அலகைநேட்டிரதம்' என்பதுமுதல் 'கருங்கடல்காண்க'

என்பதுவரை.

(17—19 வரிகள்.)

(ப-ரை.) அலகை நெடி இரதம் - நெடிய பேய்த்தேரை, புனல் என காட்டினை - நீரென்று காட்டினை, வண்மீன் - முதலைகள், நெடி கயல் - நெடிய கயல்களும், பொதுவினையகத்து - மூன்போக் கிய வினையகத்தையுடைய ஒன்றோடொன்று மோதுகின்ற தொழி லைத் தன்னிடத்துள்ள, இடங்கு என பெயரிய - அகழென்று பெ யர்பெற்ற, கருங்கடல் காண்க - பெருங்கடலைக் காண்க.

(வி-ரை.) பேய்த்தேர் - கானனீர். கிடங்கு - அகழ், இது ஆகுபெயர்.

'காகளம்' என்பதுமுதல் 'கேண்மதி' என்பதுவரை.

(20—22 வரிகள.)

(ப-ரை.) காகளம் - காகள வோசையையும், பூசல் திடி ஒலி போர்த்தொழிற்குரிய பமபையொலியையும். ஏறறனே - செவியேற் றனே; சூடுமி அமசெனனியர்-சௌளம் வகுத்த தலையினராகிய பார் ப்பார், கருமுகில் விளர்ப்ப - கருமுகிலோசை நாணுமாறு, கிடை - வேதப்பளளியில், முறை எடுக்கும - முறையாகச் சாதைசொல் லும வாலாற்று முறையே அதிகியமஞ் செயகினறு, மறை ஒலி - வேதவொலியை, கேணமதி - நீ கேட்பாயாக.

(வி-ரை) மதியென்பது முன்னிலைக்கண் வருமோ ரிடைச் சொல். காகளம் - ஊதுகொமபு, இதனைக் காளமெனவுங கூறுப. பூசல் - போர். விளாதல் - நாணுதல். கிடை - வேதபாடசாலே.

'அமரர்கள்' என்பதுமுதல 'ஒல்கியபோல' என்பதுவரை.

(23—26 வரிகள.)

(ப-ரை.) அமரர்கள-தேவர்களும், முனி கணஞ்சூழ - முனி வர்குழாமும், முன் - ஆதியில, தவமு புரிந்து-தவமுசெயது, உடன-உடனே, உமை கண் புதைப்ப-உமாதேவி கண்களேமூட, உமையும-உமையு ம, ஆடகம சயிலசசேகரம-பொனமலைச சிகரதனை, தொடர்ந்த - தொடர்ந்தி, ஒற்றை அம் பசுங்கதை - இளமையாகிய வொரு மூங்கிலானது, ஒல்கியபோல - அசைவதுபோல.

(வி-ரை.) தவமு - பிழை. புதைத்தல் - மூடல். ஆடகம் - பொன். சயிலசசேகரம-மலையுசி. கதை-மூங்கில். ஒல்கல்-அசைதல்.

'உலகுயிர்க்கு' என்பதுமுதல் 'கண்புதைப்ப' என்பதுவரை.

(27—28 வரிகள.)

(ப-ரை.) உலகு உயிர்க்கு-உலகத்திலுள்ள வுயிர்களுக்கு, உயிர் எனும - உயிராகிய, திருவுரு அணைந்து - சிவபிரான் திருமேனி யைப் புணர்ந்து, வளை கரங்கொடு - வளையணிந்த கைகளால், கண் புதைப்ப - கண்களேமூட.

(வி-ரை.) கொடு-மூன்றுவதன் சொல்லுருபு.

'அவ்வுழியே' என்பதுமுதல் 'தனிவிழிநாயகன்' என்பதுவரை.

(28—33 வரிகள்.)

(ப-ரை.) அவ்வுழியே-அப்பொழுதே, உலகு இருள் நீக்கும்-உலகத்திற் பரந்தவிருளே விலக்கியருளிய, செஞ்சுடர் - சூரியனும், வெண்சுடர்-சந்திரனும், பிரமன் உட்பட்ட-பிரமன்முதலாகிய, நிலவுயிர் அனைத்தும்-விளங்காநின்ற அகிலவுயிர்களும், தமக்கு என காட்டும் - தத்தமக் குரியனவாய பௌதிக பதார்த்தங்களைக் காட்டாநின்ற, ஒளிகண் கெடலும் - கட்புல வொளியானது மழுங்குதலும், அவர் மயக்கம் - அவர்களது மயக்கத்தை, கண்டு - அறிந்து, அவர் - அவர்கள், கண் பெற - மீளவும் கண்ணொளி பெறுமாறு, திரு முதல் கிழித்த - அழகிய நெற்றியினிடத்தே திறந்த, தனி விழி நாயகன் - ஒப்பற்ற விழியுள்ள கடவுளது.

(வி-ரை.) அகிலம் - எல்லாம். பௌதிக பதார்த்தங்கள் - பூத சம்பந்தத்தா லுண்டான பொருள்கள்.

'தாங்கிய' என்பதுமுதல் 'ஈங்கீதுகாண்க' என்பதுவரை.

(34—35 வரிகள்.)

(ப-ரை.) தாங்கிய - சோமசுந்தரச் செழியர்பிராஞிப் பாதுகாத்த, கூடல் பெருநகர் இது - மதுரையாகிய மாநகரம் இது, ஈங்கு காண்க - இவ்விடத்தே கண்ணுற்றிடுக.

(வி-ரை.) கண்ணுறல் - ஒருசொல்.

முத்தெழில் நகைக்கொடியே! மலர்க்கால் பொருந்துக, உடைவது நோக்குக, வையம்போவது காண்க, களைஞர்தங் கம்பலைகாண்க, தளக் குவாலிவைகாண்க, கருங்கடல் காண்க, மறையொலி கேண்மதி, திருமுதல் கிழித்த தனிவிழிநாயகன் தாங்கிய கூடற்பெருநகரிது காண்கவென விளம்புவுசெய்க. (வ0)

திருக்கோவையார் உஎ-ம் பாடல்.

தேரூது புலம்பல்.

தேறது புலம்பலெனபது—தலைமகனது வாய்மைகூறி வருத்தந் தணியாநின்ற தோழிக்கு, யான் அவர்கூறிய மொழியின்படியே மெய்ம்மையைக் கண்டுவைத்தும், என்னெஞ்சமு நிறையும் என் வய

மாய் கிற்கின்றனவில்லை, அதுவேயுமன்றி, என்னுயிரும் பொறுத்தற கரிதாகாின்றது, இவை யிவ்வாறுதற்குக் காரணம் யாதென் றறி கின்றிலேனெனத் தான் றேறுமைசூறிப் புலம்பாகிற்றல். அதற் குச் செய்யுள்:—

மன்செய்த மூன்ஞண் மொழிவழி யேயன்ன வாயமைகண்டு
மென்செய்த நெஞ்சு நிறையுநில் லாவென நின்னுயிரும்
பொன்செய்த மேனியன் றில்லேயு ரூரிற் பொறையரிதா
முன்செய்த தீங்குகொல் காலத்து நீர்மைகொன் மோயகூழே.

தீதறுகண்ணி தேற்றத்தேரு து
போதறுகுழலி புலம்பியது.

(ப-ரை.) மோய் சூழல் - மோய்சூழலேயுடையாய், முன்ஞள் - முற்காலத்து, மன் செய்த - மன்னன் நமக்குதவிய, மொழிவழியே மொழியின்படியே, அன்ன வாய்மை கண்டும - அத்தன்மைத்தாகிய மெய்மையைக் கண்டுவைத்தும், நெஞ்சும் நிறையும் நில்லா-என்னெ ஞ்சமு நிறையு மென் வயமாய நிற்கின்றில, என் செய்த - இவை யென்செய்தன, அதுவேயுமன்றி, எனது இன் உயிரும் - எனதினிய வுயிரும், பொன்செய்த மேனியன் - பொன்னேயொத்த மேனியை யுடையவனது, தில்லே உரூரின் - தில்லேயை யுருதாரைப்போல, பொறை அரிதாம - வருத்தம பொறுத்த லரிதாகாின்றது, முன் செய்த தீங்குகொல் - (இவை யிவ்வாறுதற்குக் காரணம்)யான் முன் செய்த தீவினேயோ, காலத்து நீர்மைகொல்-(அன்றிப்) பிரியுங்கால மல்லாத இக்காலத்தி னீர்மைகொல்லோ (அறிகின்றிலன்), எ-று.

(வி-ரை.) மொழிவழியேகண்டு மெனவியையும். நெஞ்ச நில் லாமையாவது - நம்மாட்டு அவன்பு எத்தன்மைத்தோவென் றை யப்படுதல். நிறை நில்லாமையாவது - பொறுத்த லருமையான் அந்நோய் புறத்தார்க்குப் புலனுதல். நில்லாதென்பது பா—மரயின் தனித்தனிக் கூட்டுக. பொன்செய்தவென்புழிச் செய்தவென்பது உவமச்சொல். உயிர் துன்பமுழத்தற்குக் காரணமாதலின், அதனை யுந் துன்பமாக வினேந்து 'இன்னுயிரும் பொறையரிதாம்' என்ருள்.

நேரிசையாசிரியப்பா.

புட்பெயர்க் குன்றமு மெழுவகைப் பொருப்பு
மேல்கடற் கவிழ்முகப் பொரியுடன் மாவு

நெடுங்கடற் பரப்பு மடுத்தொழி லரக்கரு
மென்னுளத் திருளு மிடைபுகுந் துடைத்த
மந்திரத் திருவேன் மதங்கெழு மயிலோன்
குஞ்சரக் கொடியொடும் வள்ளியங் கொழுதொடும்
கூருக் கற்பங் குறித்துநிலை செய்த
புண்ணியங் குமிழ்த்த குன்றுடைக் கூட
மினைறந்துறை கூறைமிடற் றறங்கெழு பெருமான்
பேரரு ளளித்த மாதவர் போல
முன்னொரு நாளி லுடலுயிர் நீயென
வுள்ளங் கரிவைத் துரைசெய்த வூரர்
தம்மொழி திரிதது தவறின் னுளவே
லவர்குறை யன்று லொருவன் படைத்த
காலக் குறிகொ லன்றியு முண்ணித்
தியங்குட லீட்டிய கருங்கடி வினையாற்
காலக் குறியை மனந்தடு மாறிப்
பின்முன் குறித்தநம் பெருமதி யழகுகொ
னனவிடை நவிற்றக் கனவிடைக் கண்ட
வுளமெழு கலக்கத் துடன்மயங் கினமாற்
குறித்தவிவ் விடைநிலை யொன்றே
மறிக்குலத் துழையின் விழிநோக் கினளே.

புட்பெயர்குன்றமும்-விழிநோக்கினளே. பதுதி - வரைபொருட் பிரிதல். துறை - தேருதுபுலம்பல்.

மறிக்குலத் துழையின் விழிநோக் கினளே.
(22—வது வரி.)

(ப-ரை.) மறி குலத்து - மான்குழவுள், உழையின் - பெண் மானைபோல, விழி - (மருண்டு) விழிக்கின்ற, நோக்கினளே - கண் களையுடையாய்.

(வி-ரை.) இன் - ஐந்தனுருபு, ஒப்புப்பொருளது.

'பட்பெயர்க்குன்றமும்' என்பதுமுதல் 'மந்திரத்திருவேல்' என்பதுவரை.

(1—5 வரிகள்.)

(ப-ரை) புள் பெயர் குன்றமும் - கரைளஞ்சமென்னு மலையும், எழுவகை பொருப்பும் - எழுவகையாகிய மலையும், சுடல்மேல்-சுடலி னிடத்தை, கவிழ் முகம் - கவிழ்ந்த முகமுடைய, பொரியுடல் பொரி யரையாகிய வுடலையுடைய, மாவும் - மாமரவடிவான சூரனையும், நெடு கடல் பரப்பும் - பரவிய நெடிய சுடலும், அடுதொழில் அரக்கரும் - கொல்லுதொழிலையுடைய அரக்கர்களும், என் உளத்து இருளும - என்னுளத்தின்கண்ணுள்ள இருளுமாகிய இவற்றை, இடைபுகுத - நடுவிற் புகுந்து, உடைத்த - அழித்த, மந்திரத் திருவேல்-மந்திரம்பொருந்திய அழகிய வேலினையும்.

(வி-ரை.) எழுவகைமலை - ஸப்தகுலாசலங்கள். மேல் - எழுச்சுருபு. அடுதல் - கொலலுதல்.

'மதங்கேழ்' என்பதுமுதல் 'கூடல்' என்பதுவரை.

(5—8 வரிகள்.)

(ப-ரை) மதம் கெழு - வலிமை பொருந்திய, மயிலோன்-மயிலையுமுடைய முருகக்கடவுள், குஞ்சரக் கொடியொடும்-தெய்வயானை நாச்சியாரோடும், வள்ளி அம் கொழுந்தொடும்-இளைய வள்ளிநாச்சியாரோடும், குறித்து கூறு கற்பம் - குறித்துக கூறப்படாத கற்பங்களோ றும், கிலேசெய்த - நிலேபெற்றிருந்த, புண்ணியம் குமிழ்த்த - புண்ணியமே திரண்டு வடிவங்கொண்ட, குன்றுடை - திருப்பரங்குன்றமென்னு மலையை யொருபாலுடைய, கூடல் - மதுரைப்பதியில்

(வி-ரை.) குமிழ்த்தல் - திரளல். குஞ்சரம் - யானை, இது ஈண்டைக்கேற்பத் தெய்வயானையென துரைக்கலாயிற்று.

'நிறைந்து' என்பதுமுதல் 'மாதவர்போல' என்பதுவரை.

(9—10 வரிகள்.)

(ப-ரை.) நிறைந்து - நிறைந்து, உறை - வாசமாயிருக்கின்ற, கறை மிடறு-காளகண்டத்தையுடைய, அறம் கெழு-தருமமே யுருவமாகிய, பெருமான் - எமது பெருமானுகிய சோமசுந்தரம், பேருள் அளித்த - தனது பெரிய திருவையத்தைத்த, மாதவர்போல -பெரிய தவர்களைப்போல.

(வி-ஞா) உறைதல் - வசித்தல். கதை, காளம் என்பன விடத்தின் பரியாய நாமங்கள்.

'முன்னொருநாளில்' என்பதுமுதல் 'நின்றுளவேல்'

என்பதுவரை.

(11—13 வரிகள்.)

(பத.) முன் ஒருநாளில் - முன்னமொருகாலத்தில், உடல் உயிர் நீ என - எனதுடலுக்கு நீயுயிரென்று, உள்ளம் கரி வைத்தமதுள்ளத்தைச் சாட்சியாகவைத்து, உரை செய்த ஊர்-உறுதியுரைத்த நம்தலைவர், தம மொழி திரிந்து - தமதுசொல் மாறுபட்டு, தவறு - குற்றம், நின்றுளவேல் - உண்டாகுமாலல்.

(வி-உரை.) திரிதல் - மாறுபடுதல்.

'அவர்குறையன்றால்' என்பதுமுதல் 'அழகுகோல்'

என்பதுவரை.

(14—18 வரிகள்.)

(ப-உரை.) அவர் குறை அன்று - அஃது அவர் குற்றமன்று, ஒருவன்படைத்த-ஒருவனுகிய பிரமனுலே படைக்கப்பட்ட, காலம் குறிகொல் - காலதேவியல்போ, அன்றியும் - அல்லாமலும், முன்னே - முற்பிறப்பில், இயங்கி - மயங்கி, உடல் - தேகமானது, ஈட்டிய - சமப்பித்த, கரு கடு வினையால் - கரிய தீவினையால் வந்த, காலக்குறியை - காலக்குறியை, மனம் தமோறி - மனந் தமோறறத்தைப் பொருந்தி, பின்முன் குறித்த - பின்முன்குறித்த, நம் - நமது, பெரு மதி - பெரிய புத்தியினது, அழகுகொல் - தன்மையோ.

(வி-உரை.) ஆல்-அசை. கொல் - ஐயம்.

'நனவிடைநவிற்ற' என்பதுமுதல் 'நிலையொன்றே'

என்பதுவரை.

(19—21 வரிகள்.)

(ப-உரை.) நனவு இடை நவிற்ற - நனவிலேசொல்ல, கனவு இடை கண்ட - அதைக் கனவின்கண்கண்ட, உள் எழு கலக்கத்துடன்-மனதிற்றோன்றுங் கலக்கத்தோடு, மயங்கினம் ஆல் - யாமயங்கினமாதலால், குறித்த-தன்பமாக வினைந்த, இ இடைநிலை ஒன்

தே-இதுபோழ்து உயிருடனிலேத்திருத்த லொன்றுமே (பொருத்த லரிது).

(வி-ரை.) நனவு - ஜாக்ராவஸ்த்தை. ஆல் - ஆதலால். குறித்தல் - நினைத்தல். இடை - பொழுது.

நோக்கினனே! மயிலோன் குன்றுடைக் கூடற்பெருமானளித்த மாதவர்போல, முன்னெருநாளில்வுள்ளங் கரிவைத்து உரைசெய்த வூர் தம்மொழிதிரிந்து தவறுகின்றுளவேல், அவர் குறையன்றால், காலக்குறிகொல், அனறியு மநபெருமதி யழகுகொல், உளளெழு கலக்கத்துடன் மயங்கினமால், இவ்விடைநிலே யொனறேயென வினைமுடிவுசெய்க. (எச)

திருக்கோவையார் கருத்-ம் செய்யுள்.

பொழுதுகண்டு மயங்கல்.

பொழுதுகண்டுமயங்கு லென்பது — சுடரொடு புலம்பாகின்ற வள், கதிரவன் மறைந்தான், காப்பவர்சேயர், அதனமே லிவ்விடத்து மீனுண்ட அன்னங்களும் போய்த் தஞ்சேக்கைகளே யடைந்தன, இனியான் ஆற்றுமா றென்னெனென, மாலைப்பொழுதுகண்டு மயங்காதிற்றல். அதற்குச் செய்யுள்:—

பகலோன் கரந்தனன் காப்பவர் சேயர்பற் றற்றவர்க்குப்
புகலோன் புகுநர்க்குப் போக்கரி யோனெவ ரும்புகலத்
தகலோன் பயிரில்லைப் பைம்பொழிற சேக்கைக ளேயுக்கினவா
லகலோங கிருங்கழி வாய்க்கொழு மீனுண்ட வன்னங்களே.

மயறரு மாலை வருவது கண்டு
கயறரு கண்ணி கவலை யுற்றது.

(ப-ரை.) பகலோன் - கதிரவன், கரந்தனன் - மறைந்தான்; காப்பவர் சேயர்-(இமமாலைக்காலத்து வருந்தின்பத்தைக்) காக்குமவர் சேயராயிருந்தார்; அதுவேயுமன்றி, அகல ஒஙகு இரும் கழிவாய்-அகன்று நீருயர்ந்த பெரிய கழியிடத்து, கொழுமீன உண்ட-கொழுமீனை யுண்ட, அன்னஙகள்-அன்னஙகடமாம்(இவ்விடத்தைவிட்டு), பற்று அற்றவர்க்கு - புலன்களிற் பற்றற்றவர்க்கு, பகலோன் - பகலிடமாயுள்ளான், புகுநர்க்கு - தனகட் புகுவார்க்கு, போக்கு அரியோன் - பின் போதாரவரியவன, எவரும் புகல - எல்லாருமேதத்தி, தகலோன் -

தகுதலையுடையவன், பயில் - (அவனை) பயிலவும், தில்லை - தில்லை வரைப்பில், பைம்பொழில் - பைம்பொழில்களினுளதாகிய, சேக்கைகள் நோக்கின-(இவ்விடத்தை விட்டுத் தம் படுக்கைகளை நோக்கின, (இனி யென்செயவேனை), எ-று.

(வி-ரை.) ஓங்குதல் - ஓதலெறி நீருயர்தல். கொழுமீனென்பது ஓர் சாதிமீன.

நேரிசையாசிரியப்பா.

ஆயிரம் பணடவி யரவுவா யணைந்துக்
கருமுகி னிறத்த கண்ணனிற் சிறந்து
நிலையுட லடைகத் திருவிழி நிறைப்பத்
தேவர்கின் றிசைக்குந் தேவனிற் பெருகிக்
குருவளர் மரகத பறைதழை பரப்பி
மணிதிரை யுகைக்குங் கடலினிற் கனிந்
மூள்ளெயிற் றரவ முறித்துயிர் பருகிப்
பொளளென வானத தசனியிற் பொலிந்து
பூதமைக் துடையுங் காலக் கடையினு
மூடறழை நிலைத்த மறமிகு மயிலோன்
புரந்தரன் புதல்வி யெயினர்தம பாவை
யிருபா லிலங்க வுலகுபெற நிறைந்த
வருவியங் குன்றத தணியணி சுடற்
கிறையவன் பிறையவன் கறைகெழு மிடற்றோன்
மலர்க்குழல் வழுத்துங் காதலர் பாசறை
மூணபது நோக்கிவேன் மூனையவி ழுற்றத்துப்
பெரும்பக லிடையே பொதுர்பரிற் பிரிந்த
வனிகட் கூருகிர்க கூக்குரன் மொதுதையைக்
கருங்கட் கொடியினங் கண்ணுறச் சூழ்ந்து
புகையுடல் புடைத்த விடவினை போல
மூனங்கடந் தேறு மதிலவனைத் தெங்குந்

கருநெருப் பெடுத்த மறமருண் மாலை
கின்வரற் கேவர் நல்குநர் கின்வரல்
கண்டிட லிடைந்தன காட்டுவல் காண்மதி
மண்ணுடல் பசந்து கறுத்தது விண்ணமு
மாற்ரு தழன்றுகாற் றின்முக மயங்கி
யுடுவெனக் கொப்பு ளுடனிறை பொடித்த
தீங்கிவற் றடங்கிய விருதிணை யுயிர்களுந்
தம்மூடன் மயங்கின வொடுங்கின வுறங்கின
வடங்கின வவிந்தன வயர்ந்தன கிடந்தன
வெனப்பெறின் மாலை யென்னுயி ருளீப்பது
மவர்திற னிறப்பது மொருபுடை கிடக்க
வள்ளது மொழிமோ நீயே விண்ணுழை
வந்தீன யென்னில் வருகுறி கண்டிலன்
மண்ணிடை யெனிலோ வவ்வயி னான
கூடிநின் றனையெனிற் குறிதவ றுவாற்
றேம்படர்ந் தனனெனிற் றிசைசுறிக் குரரா
லாதலி னின்வர வெனக்கே
யோதல் வேண்டும் புலன்பெறக் குறித்தே.

ஆயிரம்பணடலி - புலன்பெறக்குறித்தே. பகுதி - ஒருவழித் தணத்தல். நூலறை - பொழுதுகண்டு மயங்கல்.

'ஆயிரம்' என்பதுமுதல் 'கண்ணனிற்சிறந்து' என்பதுவரை.

(1—2 வரிகள்.)

(பதவுரை.) ஆயிரம் - ஆயிரமென்னு மெண்ணேப்பெற்ற, பண அடவி - படக்காட்டினையுடைய, அரவு - (சேடனெனனும்) பாம்பை, வாய் அணைத்து - வாயிற்கவ்வி, கருமுகில் நிறத்த - கருமுகில் போலு நிறமுள்ள, கண்ணனிற் சிறந்து-கண்ணன்போற் சிறப்புற்று.

(வி-ரை.) பணம் - படம். முகில் - மேகம். இன்-ஐந்தனுருபு, ஒப்புப்பொருட்டு.

'நீலியுடலடங்க' என்பதுமுதல் 'தேவனிற்பெருகி'

(3—4 வரிகள்.)

(ப-ரை.) நீலி உடல் அடங்க-நீலியான தன்னுடன் முழுதும், திரு வீழி நிறைத்து - அழகிய கணகளே நிறைத்து, தேவர் பினமு இசைக்கும் - தேவர்களின்னமு தீதிக்கும், தேவனிற்பெருகி - இந்திரன்போல பெருமைபெற்று.

(வி-ரை.) அடங்க - முழுதும். இன் - ஐந்தாவது னெருப்புப் பொருளது.

'குருவளர்' என்பதுமுதல் 'கவினி' என்பதுவரை.

(5—6 வரிகள்.)

(ப-ரை.) குரு வளர் - நிறம் மிகுகின்ற, மரகதம் - மரகதமணி போலும், பறை தழை பரப்பி - இறகுகளைத் தழைவாக விரித்து, மணி - (முத்துமுதலிய) மணிகளே, திரை உகைக்கும் - அலைகளைதுகைகாகின்ற, கடலினில் - கடலில்போல, கவினி-அழகுற்று.

(வி-ரை.) குரு - ஒளியெனினுமாம். மரகதம் - பசமைமணி. பறைதழை - சிறகு.

'முள்ளெயிற்றரவம்' என்பதுமுதல் 'மறமிகுமயிலோன்' என்பதுவரை.

(7—10 வரிகள்.)

(ப-ரை.) முள் எயிறு அரவம் - முட்போன்ற பற்களையுடைய பாம்புகளே, முறித்து - முறித்து, உயிர் பருகி - அவற்றினுயிரை யுண்டு, பொன் என - விசையாக, வானத்து அசனியின் - மேகத்தின இடிமுழக்கம்போல், பொலிந்து - முழங்கி, பூதம் ஐந்து உடையும் - (பிருதுவி முதலிய) பஞ்ச பூதங்களுமழியும், காலக்கடையினும் - உகாந்தகாலத்தினும், உடல் தழை நிலைத்த - உடறழைந்து நிலைபெற்ற, மறம் மிகு மயிலோன் - வலிமைமிக்க மயில வாகனமாக வுடையவன்.

(வி-ரை.) முறித்தல் - துண்டித்தல்.

'புரந்தரன்புதல்வி' என்பதுமுதல் 'அணியணிகூடல்' என்பதுவரை.

(11—13 வரிகள்.)

(ப-ரை.) புரந்தான் புதல்வி-இந்திராகுமாரியாகிய தெய்வயானையும், ஞயினர் தம் பாவை - வேடுவர் குமாரியாகிய வள்ளியம்மையும்,

இருபால் இலங்க - இருபுடையினும் விளங்க, உலகு பெற - உலகினுள்ளார் வேண்டும வரங்களேப்பெற, நிறைந்த - நிறைந்தெழுந்தருளிய, ஒருவி அம் குணத்து - அருவிரிஞையுடைய திருப்பரங்குன்றத்தை, அணி அணி கூடல - அழகாகவணிந்த கூடலென்னுந் திருப்பதிக்கு.

(வி-ரை) பாவை - ஆகுபெயர். புடை - பக்கம் இலங்குதல் - விளங்குதல். உலகு - ஆகுபெயர்.

'இறையவன்' என்பதுமுதல் 'காதலர்' என்பதுவரை.

(14—15 வரிகள்.)

(ப-ரை) இறையவன - கடவுள், பிறையவன - பிறையை யணிந்தவன, கறை செழு மிடற்றோன - காளகண்டத்தையுடைய சோமசுந்தரத்தினது, மலர் கழல - மலர்போன்ற திருவடியை. வழுத்தும - துதிக்கின்றன, நம - நமது, காதலர் - தலைவர்

(வி-ரை.) பிறையென்றது ஒருகலேயாகிய சந்திரனே, இது "நாரெனன வோங்குஞ் சடைமுடி மேற்றனித் திங்களைவைத்த காரெனன வாருங் கறைமிடற் றமபலவன்" எனனுந் திருக்கோவைச் செய்யுளுரையா லினிதுவிளங்கும்.

'பாசறை' எனபதுமுதல 'அற்றத்து' என்பதுவரை.

(15—16 வரிகள.)

(பரை) பாசறை - படைவா பாசறையிலுள்ளார, மூனேப்பது நோகி-எதிர்ப்பதைநோகி, வேல முனை அவிழ - வேலினது மூனையுறையினின்றவிழ்ந்த, அறற்றத்து - சமயத்தில

(வி-ரை) பாசறை - படைவீடு. மூனைதல் - எதிர்தல். மூனை - நுனி அற்றம - சமயம

'பெரும்பகலிடையே' எனபதுமுதல் 'மோத்தையை' என்பதுவரை.

(17—18 வரிகள.)

(ப-ரை) பெரும் பகலிடையே-நல்ல மத்தியானத்திற்றானே, பொதும்பரிற்பிரிந்த-மரப்பொதுகளினின்றும் வெளிப்பட்ட, வளை கண - வளைந்த கணைகளையும, கூர உகிர் - கூரிய நகங்களையும, குகை குரல் - கூவுகின்ற குரலினையுமுடைய, மொந்தையை - கோட்டானை.

(வி-ரை.) பொதும்பர் - மரப்பொந்து. மொத்தை - கோட்டான்.

'கருங்கண்' என்பதுமுதல் 'விடவினைபோல' என்பதுவரை.

(19—20 வரிகள்.)

(ப-ரை.) கரு கண் - கரிய கண்களையுடைய, கொடி இனம் - காக்கைக் கூட்டங்கள், கண்ணற - கண்ணேட்டமின்றி, சூழ்ந்து - (அதனைச) சூழ்ந்து, புழுகை உடல் - புகைபோன்ற நிறத்தினையுடைய அதனுடலை, புடைத்த - குத்திய, விடவினைபோல - கொடிய செய்கைபோல.

(வி-ரை.) கோடி - காக்கை. கண் - கண்ணேட்டம். சூழ்தல் - வளைதல். விடம் - கொடுமை. வினை - செயல்.

'மனங்கடந்தோர்' என்பதுமுதல் 'மறமருண்மாலை' என்பதுவரை.

(21—22 வரிகள்.)

(ப-ரை.) மனம் கடந்தோர் - மனத்தானும் கடக்கவொண்ணாதவர், மதில் வளைத்து - மதிலைச் சூழ்ந்து, எங்கும் - எவ்விடங்களிலும், கருகெருப்பு எடுத்த - கரிய நெருப்பை எடுத்துக்கொட்டிய, மறம் அருண்மாலை - கொடுமையைத்தருகின்ற மாலைக்காலமே.

(வி-ரை.) மாலை - அண்மைவினை.

'நின்வரற்கு' என்பதுமுதல் 'காண்மதி' என்பதுவரை.

(23—24 வரிகள.)

(ப-ரை.) நின் வரற்கு - நின்வருதலுக்கு, எவர் கல்குநர் - யாவர் நின்னைத்தந்தவர், நின் வரல் கண்டு - நின் வருதலைக்கண்டு, உடல் இடைத்தன - உடல் வருந்தினவற்றை, காட்டுவல் - யான் காட்டுவேன், காண் - நீ பார்ப்பாயாக.

(வி-ரை.) கல்குதல் - கொடுத்தல். முனி - முன்னிலையசை வினைச்சொல்.

'மண்ணுடல்' என்பதுமுதல் 'பொடித்த்' என்பதுவரை.

(25—27 வரிகள.)

(ப-ரை.) மண் உடல் பசந்து - பூமியானது நின்வரவாலுடம்பு பசப்படைந்து, கறுத்தது - பின் கறுத்தது; விண்ணமும் - ஆகாய

மும், ஆற்றுது - (நின்வரவாற்) சகியாது, அழனறு - புழுங்கி, காற்றின் முகம் மயங்கி - காற்றினுல் முகம் வேறுபட்டு, உடி என - உடி வென்று சொலலும்படியான, கொப்புள் - கொப்புளம், உடல் நிறை பொடித்தது - உடனிறைய வண்டாயிற்று.

(வி-ரை.) பசப்பு - பசலைநிறம். விண்ணமும் என்பதில் அம் சாரியை. அழலல் - புழுங்கல். மயங்கல் - வேறுபட்டல். உடி - நாண் மீன்.

'ஈங்கிவற்று' என்பதுமுதல் 'எனப்பெறின்' என்பதுவரை.

(28—31 வரிகள்.)

(ப-ரை.) கோளகை - அண்ட கோளகையாகிய, குடிலில்-வீட் டிற் செல்லும்போது, குனிந்து - தலைகுனிந்து, இடைநது - விலகி, உப்புறத்து - பகிரணடத்தில், இடைநிலை அற்ற - தடையற்ற, படர் பெருவெளியகத்து - மிகவும் பாநத வெளியிடத்து.

(வி-ரை.) குடில் - வீடி. இடைதல் - விலதுதல். இடைநிலை - தடை. படர்தல் - பரத்தல்.

'உடன்முடக்கெடுத்த' என்பதுமுதல் 'அரக்கன்' என்பதுவரை.

(8—9 வரிகள்.)

(பதவுரை.) முடக்கு உடல் எடுத்த - முடங்கிய வுடலை நிமிர்த்த, தொழில் பெறு - தொழிலைப்பெற்ற, வாழ்க்கை - வாழ்க்கையினை யுடைய, கலை தலை - பிளவான நுனியினையுடைய. பிறை - பிறை போன்ற, எயிறு - பற்களையும், இருள் எழில் - இருளினழகினையுங் கொண்ட, அரக்கன் - இராவணன்.

(விளக்கம்.) முடக்கு - வளைவு. எழில்-அழகு, அது ஈண்டு நிறத்துக்காயிற்று "பெருவாயோருபதும், கருமிருபத்தும்" என் மேல்வருதலான் அரக்கன் என்றது இராவணனை யுணர்த்திற்று.

'அமுதமுண்டு' என்பதுமுதல் 'பறவை' என்பதுவரை.

(10—13 வரிகள்.)

(பதவுரை.) அமுதம் உண்டு - அமுதத்தை யுண்ணலால், இமையாதவரும்-கண்ணிமையாத தேவரும், மங்கையரும்-தேவமகளிரும், குறவரும்-குறவர்களும், குறவத்தியரும் ஆகி - குறத்தியரு மாகி, நிலம் பெற்று - பூமியில் வந்து, இமைத்து - கண்களிமைத்து, நெடுவரை இறும்பிடை-நெடிய மலைப்பாறையில், பறவை - தேன் ஈக்கள்.

(விளக்கம்.) அமுதம் - அம்ருதம் என்னும் வடசொற் சிதைவு. இமையாதவர் - இயல்புவழக்கு. மங்கையர் - பெண் பொதுப்பெயர். இமைத்தல் - கண்ணிதழ் குவித்தல். இறும்பு - பாறை.

'உண்மலட்டிய' என்பதுமுதல் 'உள்ளூறப்புகுந்து' என்பதுவரை.

(13—15 வரிகள்)

(பதவுரை.) உண்டு ஈட்டிய - மலர்தொறுங் கவர்ந்துசேர்த்த, இருல் நறவு - இருட்டின்கண்ணுள்ள தேனை, அருந்தி - உண்டு, அகிலத்தவர் என - அக்குறிஞ்சி நிலத்தாரைப்போல, அடிக்கடி வணங்கும்-இடைவிடாமல் வணங்குகின்ற, வெள்ளி அம் குன்றகம்-வெள்ளிமலையிடத்து, உள்ளூற புகுந்து - உள்ளே நுழைந்து.

(விளக்கம்.) ஈட்டல் - சேர்த்தல். இருல் - தேன்கூடு. வெள்ளியங்குன்றகம்-அம்சாரியை, அழகுமாம்.

'ஒருதேவனும்' என்பதுமுதல் 'ஆர்க்க' என்பதுவரை.

(15—17 வரிகள்.)

(ப-ரை.) அதன் முடி - அதன் சிகரத்தில், ஒரு தேவனும் - (சிவனென்னும்) ஒரு செய்வமும், மேவுமுளனும் என - இருக்கின்றனென்று, புயங்கொட்டி - தோளாக் கையாற்றட்டி, நகைத்து - சிரித்து, எடித்து - அம்மலையைத்தூக்கி, ஆர்க்க - ஆரவாரிக்க.

(வி-ரை.) ஆர்த்தல் - ஆரவாரித்தல்.

'பிலந்திறந்தன்ன' என்பதுமுதல் 'மதிமுடியந்தணன்' என்பதுவரை.

(18—23 வரிகள்.)

(ப-ரை.) பிலம் திறந்து அன்ன-குகை திறந்தாலொத்த, பெருவாய் ஒருபதும் - பத்தாகிய பெரியவாயும், மலை நிரைத்து ஒழுகிய-மலையை வரிசையாய்வைத்தாலொத்த, கரம் இருபதும்-இருபதாகிய கைகளும், விண் உடைத்து-விண்ணுடையுமாறு முறையே, அரற்றவும்-அழவும், திசை உட்க - திக்குகள் நடுங்க, முரியவும்-நெரியவும், தாமரை - தாமரைமலரின், அகவயின் சே இதழ் - செவப்பாகிய அகவிதழை, வாட்டிய - வாடச்செய்த, திருவடி பெருவிரல்சூலை - ஸ்ரீபாதத்தின் பெருவிரலது, நகம் தடியால்-நகத்தின் நுனியால், சிறிதுசற்றே, மலை உறுத்த-அம்மலையை யழுத்திய, மதி முடி அந்தணனை - சந்திரசேகரப் பெருமானது.

(வி-ரை) நிரை - வரிசை. அரற்றல் - அழல். உட்கல் - நடுங்கல். முரிதல் - நெரிதல். தாமரை-ஆகுபெயர்.

'பொன்னணிமாடம்' என்பதுமுதல் 'அறிவுறின்' என்பதுவரை.

(24—25 வரிகள்.)

(ப-ரை.) பொன் அணி மாடம்-பொன்னலணியப்பட்ட மாடங்கள், பொலி நகர் கூடல் - பொலிவுபெறற மதுரைமாநகரில், ஆவண வீதி - கடைவீதியை, அனையவர் - ஒப்பான பரத்தையர், அறிவுறின் - அறிவாராயின்.

(வி-ரை.) அணிதல் - அலங்கரித்தல். ஆவணம் - கடைத்தெரு. அறிவுறின் - ஒருசொல், பகுதி அறிவுறு. எல்லார்க்கும் பொதுவராதலால் பரத்தையர்களைக் கடைவீதிக் குவமையாக்கினர்.

'ஊருணியன்ன' என்பதுமுதல் 'தீண்டலேயே'
ஈன்பதுவரை.
(26—29 வரிகள்.)

(ப-ரை) ஊருணி அன்ன - ஊருணியை யொத்த, நின் மார்பு அகம் தோய்ந்தோன்மார்பைப்புணர்ந்த, என்-எனது, இணை முலை - இரண்டு முலைகளும், நன்னர் இழந்தன அதுபோல் - நன்மையிழந்ததுபோல, மற்றவர் - அவர்களது, கவை மனம் - இரண்டுபட்ட மனமானது, மாழ்கி - வருந்தி, செற்றம் நின் பகைவர் - நின்னைக் கோவிப்பார்கள் (ஆதலால்), இ கால் - என்னுடைய இக்கால், தீண்டலே - தீண்டாதொழிக.

(வி-ரை.) ஊருணி - ஊராரெல்லாரும் நீருண்ணுங் குளம். மற்று - அசை. கவை - பிளவு.

ஊரனே! அரக்கன் ஒருபதுவாயானது மரற்றவும் இருபதுகைகளு முரியவும் பெருவிரனகுதியால் மலையுறுத்த மதிமுடியத்தனன் கூடல் ஆவணவீதி யனையவர், அறிவுறின், நின்மார்பகந் தோய்ந்த என்னிணைமுலை நன்னிழந்ததனைபோல், மற்றவர் மாழ்கிச் செற்றம் பகைவராதலால் இக்கால் தீண்டலேயென விணைமுடிவுசெய்க. (எசு)

திருக்கோவையார் கூறும்-ம் செய்யுள்.

பொறையுவந்துரைத்தல்.

பொறையுவந்துரைத்தலென்பது:—தலைமகனைப் பரத்தையர் தேரிற்கொண்டமை கேட்ட தலைமகள், நெஞ்சுடைதல், புறத்து வெளிப்படாமற் பொறுத்தமைகண்ட தோழி, யானிவ்வாரூரகவும் கலங்காதுநின்ற பெரும்பொறையாட்டியை, யான் இன்று பேசுவனென்னென்று அவளே யுவந்து கூறுகின்றதல். அதற்குச்செய்யுள்:—

சுரும்புறு கொன்றையன் ரெல்புலி யூர்ச்சுரங் கும்மருங்குற்
பெரும்பொறை யாட்டியை யெண்ணின்று பேசுவ பேரொலிநீர்க்
கரும்புறை யூரன்க லந்தகன் ரூனென்று கண்மணியு
மரும்பொறை யாகுமென் னுவியுந் தேய்வுற் றழிகின்றதே.

கள்ளவிழ்கோதையைக் காதற்ரோழி
உள்ளவிழ்பொறைகண் டெந்துரைத்தது.

(ப-ரை.) பேரொலி நீர் - பெருமுழக்கமுற்ற நீரையுடைய, கரும்பு உறை - கரும்பு தங்கும், ஊரன்-ஊரையுடையவன், கலந்து

அகன்ஞன் என்று-கலந்துதைத்து நீங்கியஞனென்று (கருதுதலான்), கண்மணியும் - என் கண்மணியும், (பயனின்மையால்) அருமை பொறை ஆகும் - (தாங்குதற்கு) அரிய பாரமாகாதின்றன, என் ஆவியும் - என உயிரும், தேய்வுற்று அழிகின்றது - தேயுந்தழியாகின்றது, சுரும்பு உறு கொன்றையன் - (யானிவ்வாறுகவும் கலயகாதின்ற) வண்டுகள் மொய்க்குங கொன்றைப் பூவினையுடையானது, சென்ற புலியூர்-பழையதாகிய புலியூரில், சுருங்கும் - சுருங்கின, மருங்குல் - இடையையுடைய, பெருமபொறை யாட்டியை, பெருமபொறை யுடைய வளை, இன்று பேசுவ என - யான் இன்று பேசுவனவென, எ று.

(வி-ரை.) என்கண்மணியுங தேயவற்றழியாகின்றது. ஆவியு மரும்பொறையாகாதின்றதென்று கூட்டுவாருமுளர். உள் அவிழ் பொறை - நெஞ்சுடைத்து புறத்து வெளிப்படாத பொறை.

நேரிசையாசிரியப்பா.

உலர்கவட் டோமைப் பொரிசிறைக் கூகையும்
வீசுகோட் டார்தையஞ் சேவலோ டலமரக
திரைவிழிப் பருந்தினம் வளியுகிர்ப் படையாற்
பார்ப்பிரை கவரப் பயனுறு மூலகிற்
5 கடனறும் யாக்கைக் கவர்கடன் சழித்துத்
தழலுணக் கொடுக்க வதனுண வீடையே
கைவிளக் கெடுத்துக் கரையினங் கரையப்
பிணம்பிரித் தூண்ணுங் குணங்கினம் கொடுப்பச்
சூற்பே யேற்ப விடாகினி கரப்பக்
10 கண்டுளக் தளிர்கருங் கருணையஞ் செல்வி
பிறைநுதற் ஞட்டி கடுவளர் கண்டி
யிருனற வருவி யெழுபரங் குன்றக்
துறைருர்ப பகையினற் பெறுதிரு வயிற்றின
ளொருபாற் பொலிந்த வுயாகர்க் கூடற்
15 கடுகைகையஞ் சடையினன் கழலுளத் திலர்போற்
பொய்வரு மூரன் புகவரு மிற்புக
வென்னுளஞ் சிகைவிட் டெழுமனற் புக்க
மதுப்பொழி முளரியின் மாழ்கின வென்றுற்
ரேளிற் றுவண்டுந் தொங்கலுண் மறைந்துங்

20 தைவரை லேற்றுங கனிஞெக் தடைத்துக்
திரைகடலுஞ் றெவ்வமுன் றெனிரூள வாங்கியும்
பொருட்கான் றடைக்தும் பாசறைப் பொருத்தியும்
போக்கருங் கடுஞ்சுரம போகமுன் னிறுதுங்
காவலிற் கவனறங் கல்லியிற் காதிபும்
25 வேர்துளிடைக கணங்கியும் வினேபொருட் குருகியு
நின்ற விவட் கினி யென்னுங்
கன்றிய வுடலுட் படுகனி யுபிரே.

உலர்கவட்டோமை - படுகனியுயிரே. பதங்கி-பாத்தையிற்பிரிவு. சுறை - பொறையுவருதைத்தல்.

'உலர்கவட்டு' என்பதுமுதல் 'அலமர' என்பதுவரை.

(1—2 வரிகள.)

(பத-ரை.) உலர் கவட்டு - உலர்ந்த கொம்பினையுடைய, ஓமை - ஓமையென்னு மரத்தின், பொரி சினை - பொரிந்த கிளையிலுள்ள, கூகையும் - கோட்டானும், வீசு கோட்டு - அம்மரத்தினது கீண்ட கோட்டிலுள்ள, ஆந்தையும் - ஆந்தையும், சேவலோடு - தத்தஞ் சேவல்களோடு, அலமர - பதந்து சுழலாகிற்ப.

(வி-ரை.) கவடு - கொம்பு (கிளை). ஓமை - ஓர்மரம். கோடு - கிளை. அலமரல் - சுழலாகிற்றல்

'திரைவிழி' என்பதுமுதல் 'கழித்து' என்பதுவரை.

(3—5 வரிகள.)

(பத-ரை) திரை விழி - திரைந்த விழியினையுடைய, பருத்த இனம் - பருந்துகள், வலை உகிர் படையால் - வலைந்த நகமாகிய வாயுதத்தால், பார்ப்பு - தங்குஞ்சுகளுக்கு, இரை கவர - இரை கவர்ந்திடுமாறு, பயன் உறு உலகில்-பயனைக்கொண் டிருக்கின்ற பாலை நிலத்தில், கடன் அறும் - வந்தவினைப்போக மற்ற, யாக்கை - உடலின்பொருட்டு, கவர் கடன் - செய்யத்தகுங கடன்களே, கழித்து - செய்துமுடித்து.

(வி-ரை.) திரைதல் - சுருங்குதல். உகிர் - நகம். உலகு - ஈண்டுப் பாலைநிலத்துக்காயிற்று. கடன் - வினைப்போகம்.

'தழலுணக்கோடுக்க' என்பதுமுதல் 'கோடுப்ப' என்பதுவரை.

(6—8 வரிகள்.)

(ப-ரை.) தழல் உணகொடுக்க-அக்கினி தத்தஞ்செய்ய, அதன் உணவிடையே - அங்கெருப்பில் வேகுமபோது, கை விளகு ஏந்தி தது - கையில் விளகேந்தி, கரை-தவ்விவல்லியில்,'இனம கரைய - தன்னினதரை யழைத்து, பிணம - பிணதரை, பிரிதது - மூடபிரி தது, உண்ணும - புசிகின்ற, குணஙகு இனம - பிசாசகள், கொடு ப்ப - கொடுக்க.

(வி-ரை.) கரைய-எசசத்திரிபு. மூடி - மூடல். குணஙகு - பிசா சம்.

'சூற்பேய்' எனபதுமுதல் 'கருணைஞ்செல்வி' என்பதுவரை.

(9—10 வரிகள.)

(ப-ரை) சூல் பேய-சூலையுடைய பேயகள், எற்ப - கையேந்தி வாங்க, இடாகினி - இடாகினிகள், கரப்ப - அதனை மறைதது க் கொள்ள, கண்டு - (இதனை) கண்டு, உளம் தளிர்கும் - உளஙகள் களிக்காகினற, கருணை அம் செல்வி - கருணையையுடைய அழகிய காளியாகிய.

(வி-ரை) சூல் - கருப்பம். அம்-சாரியையுமாம்.

'பிறைநுதலுண்டி' என்பதுமுதல் 'சூர்ப்பகையினன்'

என்பதுவரை.

(11—13 வரிகள்.)

(ப-ரை.) பிறைநுதல் நாட்டி-பிறைபோன்ற நுதலில் நாட்டத் தையுடையாள், கடவளர் கண்டி - விடந்தஙகிய கண்டத்தையுடை யாள், இருல் நறவு - இருட்டினின்றும தேனனது, அருவி எழு - அருவியாக வோடுகின்ற, பாஙகுன்றத்து - திருப்பாஙகுன்றத்தில், உறை - எழுந்தருளிய, சூர் பகையினன - சூர்ப்பகையினஞ்சிய முரு கக்கடவுளே.

(வி-ரை) நுதல் - நெற்றி. நாட்டம் - கண். சூர்ப்பகையினன்- சூரனுக்குப் பகைவன்.

'பெறு' எனபதுமுதல 'உளத்திலாபோல்' என்பதுவரை.

(13—15 வரிகள்)

(ப-ரை) பெற - பெற்ற, திரு மயிற்றினள் - அழகிய வயிற்றினளாகிய வுமாதேவி, ஒருபால் பொலிந்த - ஒருபாகத்தில் விளங்கிய, உயர் நகர் கூடல் - நகரங்களை ஒயர்வாகிய மதுரையினகண், கடுக்கை அம் சடையினன - கொன்றை மலர் மாலை யணிந்த சடை முடிப்பெருமானது, கழல - திருவடி, உளத்து இலர்போல் - உள்ளத்திலில்லாதார்போல.

(வி-ரை.) கடுக்கை - ஆகுபெயர்.

'பொய்வருமூரன்' என்பதுமுதல் 'மாழ்கினவேன்றல்' என்பதுவரை.

(16—18 வரிகள்.)

(ப-ரை.) பொய வருமூரன் - பொய்யிற் கைவைத்தலவன், புக அரும் - செல்லச்சகாத,இல புக - பரத்தையரிலவிற் புகுதலால், என் உளம் - எனனுள்ளமானது, சிதை விட்டு எழும - கொழுகது விட்டெரிகின்ற, அனல புக்க - நெருபபிறபட்ட, மது பொழி முள நியின-தேனபொழிகின்ற தாமரைமலாபோல, மாழ்கின எனறல - கருகியதாஞல்.

(வி-ரை.) கைவரல் - தேர்தல் புகல் - செல்லல். முளரி-ஆகுபெயர் மாழ்குதல - கருகுதல.

'தோளிற்றுவண்டும்' என்பதுமுதல் 'தடைந்தும்' என்பதுவரை.

(19—22 வரிகள.)

(ப-ரை) தோளில் தூவண்டும - அத்தலைவனது தோளில் தூவண்டும், தொங்கலுள மணநாறும - அணிந்த மாலையுணமணநாறும், தைவரல ஏற்றம - கையால் வருடுதலைப் பெறறும, கனலிறும் - அவனைசகண்ட கனவிறும, சடைநதும் - போகேனெனமறித்தும், திரை கடல தெயவம முன் - அலைக்கடலாகிய தெயவத இன் முனபு, தெளி சூள வாஙகியும - ஐயமிலலாத ஆணைவாஙகியும, பொருள கான - பொருணிமித்தம் காட்டிவழி போகாமல், தடைந்தும் - தடுத்தும்.

(வி-ரை.) தெளிவு - ஐயமின்மை கான் - காடு, அது இங்கு அதன் வழியைக் குறித்தது.தடைதல் - தடுத்தல்.

'பாசறை என்பதுமுதல் 'நின்றவிவட்கு' என்பதுவரை.
(22—26 வரிகள்.)

(ப-ரை.) பாசறை - பாசறைக்குச் சென்றபோது, பொருந்தியும்-வருத்தத்தைப் பொறுத்திருந்தும், போக்கு அரும் கடுஞ்சுரம் - யாவருஞ் செல்லுதற்கரிய வெய்ய சுரத்தில், போக_போகத்துணிந்ததால், முன் - அதற்கு முன்னமே, இறந்தும் - மூர்ச்சித்தும், காவலில் கவன்றும் - நகரங் காத்தற்குச் சென்றபோது கவலைப்பட்டும், கல்வியில் கருதியும் - கல்வியிலே சென்றபோ தெண்ணமுற்றும், வேந்து விடைக்கு அணங்கியும்-அரசனுற் றூதுவிடுக்கப்பட்ட போது வருந்தியும், வினை பொருட்கு - மேல்நடக்குஞ் செய்திக்கு, உருகியும் - மனமுருகியும், நின்ற இவட்கு - நின்ற இவளுக்கு.

(வி-ரை.) சுரம் - பாலைநிலம். இறத்தல் - சாதல், அது இங்கு மூர்ச்சித்தலுக்காயிற்று. கவலல் - கவலைப்படல். அணங்கல் - வருந்தல்.

'இனியென்னும்' என்பதுமுதல் 'ராயியரே' என்பதுவரை.
(26—27 வரிகள்.)

(ப-ரை.) கன்றிய உடலுள் - நொந்த வுடலுள்ளே, படும் - இருக்கின்ற, நனி உயிர் - சிறியவுயிர், இனி என்னும்-இனி யாதாய் முடியுமோ (யானறிகின்றேனில்லை).

(வி-ரை.) கன்றுதல் - நோதல்.

கருணைச்செல்வியாகிய திருவயிற்றின லொருபாற் பொலிந்த கூடற் பெருமானது கழனிவேயார்போல், பொய்மொழி புகன்ற வூரன், தகாத வில்லிடத்தே புகுதலால், என்னுளம் அனற்புக்க மூளரியின் மாழ்கினவென்றூல், அவ்வூரன் பிரியாத காலத்தில் துவண்டும் மறைந்தும் எற்றும் தடைத்தும் வாங்கியும் நின்றூற்போல, பிரிந்தகாலத்தில் தடைத்தும் பொருந்தியும் இறந்தும் கவன்றும் கருதியும் அணங்கியும் உருகியும் நின்ற இவட்கு, கன்றிய வுடலுள்ளே சிறியவுயிர் இனியென்னுகுமென வினைமுடிவு செய்க. (அ0)

திருக்கோவையார் நகுஅ - ம் செய்யுள்.

வாயிலவர் வாழ்த்தல்.

வாயிலவர் வாழ்த்தலென்பது—செவ்வணி விடுக்கப் பூப்பியற் செவ்வி கெடாமல் மெலிவறிந்து இவளது பொலிவோடு வந்தமை

யான இவன் மெயயேதக்க வாயமையினனத தலைமகனே வாயிலவர் வாழ்த்தாகிற்றல். அதறகுச செயயுள்·—

வில்லைப் பொலிதுதல் வேற்பொலி கண்ணி மெலிவுமிகது
வல்லைப் பொலிவொடி வநதமை யாலினறு வான்வழுத்தும
தில்லைப் பொலிசிவன கிற்றம பலஞ்சிகதை செயபவரின
மல்லைப் பிலிவிய பூமலை மெய யேதக்க வாயமையனே.

தலைமகனது தசவிடைறை
கிலைகருவாயினன றேருருைததது.

(ப·ரை.) வில்லை பொலி-வில்லை நிகர்சது விளஙகுகிற, முதல்-நெற்றியையும, வேல பொலி - வேலைநிகர்த்து விளஙகுகிற, கண்ணி-கணகளேயு மூடை யவளது, மெலிவு அமிகது - வாட்டதலையதிகது, வல்லை - விரைவில், பொலிவொடி வநதமையால் - இவளது பொலி வெறடி வநதமையால், வான றினறு வழுததும - வானவர் றினறு வழுத்துகிற, தில்லை - தில்லைநகரில, பொலி - விளஙகுகிற, சிவன - சிவனது, சிறறமபலம் - சிற்றமபலததை, சிகதை செயபவரின்-சிந்திப்பவர்போல, மல்லை பொலி வயல சூழான - வளததால் விளஙகுகிற வயல்சூழநத ஊரையுடையவன, மெயயே - மெயயாகவே, தகக வாயமையன - தக்க மெயமமையுடை, எ-று.

(வி·மை.) வில்லையெண்ணு மைகாரம நிகைகிறை காதலன் வர, இவள் இடையினறிப் பொலிநதமையாற் பொலிவோடெள ஒதிக்கொடித்துக் கூறினார். பொலி சிறறமபலமென விரையும மல்லை கடைகசுறைதது ஐகாரம விரிநதுகினறது மல்லற்பொலி யென பதாஉம பாடம் வில்லை - உருபுமயகமக வான-ஆகுபெயர். தகுதிஞண்டு நனமைமேற்று.

நேரிசையாசிரியப்பா.

நிலேநீர் மொக்குளின் விளைவாய்த் தோன்றி
வான்றவ முடறகறை மதியெனச சுருங்கிப்
புல்லர்வாய்ச் சூளெனப பொருளுட னழியுஞ்
சிறுமை யின்பத நிருநதா வாழ்கைகைபக
5 கான்றிடி சொன்றியிற் கண்டரு வருத்தப
புலனறத் துடைதத நலனுறு கேளவிய
ராரா வின்பப பேரமு தருநதித்
துறவெனுங திருவுட னுறவுசெய் வாழ்க்கையர்

வாயிலுங் கண்ணிலு மனத்திலு மகலாப்
பேரொளி நாயகன் காரொளி நிடற்றோன்
மண்டிரு வேட்டுப் பஞ்சமம் பொருத
கிளரிபுங் கிரியுங் கிளர்படை நான்குந்
தின்மையுற் றொடுக்குந் தீப்பிறவும் பொன்றிட
வெளிவா யுறக நிருணைட் டொருவக்
கொலைமொன் டாழி நுனியுடன் படைத்து
மறியப் புகைத்த பறவைபழ பெருமர
னீர்மாக் கொன்ற தேயோன் குன்றமுங்
கல்லியு நிருவுங் காலமுங் கொடியு
மாடமு மோவரிய பணிகர்க் கூட
லால வாயிலு ளருகுட னிறுத்த
பவ்ளச் சடைபோன் பதுகுலை சுமந்த
கல்லிய நாரரி புல்லமுன் மங்கைய
ரோவிய வில் லிமை புறைபு ளாகக்
கேளாத் திறுசெவி ளெகருங் கலதிய
நில்வுழி யாயத் தினர்க்கு மாக
மௌன வலித்துப் பிரிந்து மலர்ஞ் சுழ் பந்தர்செய்
முன்றிலு மெய் புடை முகை நி லாக
மலர்சகமைச் சேகுகை மதுமலர் மறுத்தவீத்
திருமனங் கொளவாச மெக்கைய தாக
நின்னுளங் கண்டு நிபுண வன்னி
நாணு கவப்பொய் பேணியுட் புணர்த்தி
யாமொரு முகமன் டானு நீயுந்
திரு பெறு மயலவர் காண
வரபெறு மாவம பெரிதுடை யேமே.

நிலைநீர்மொக்குளின் - பெரிதுடையேமே. பதுதி - பரத்தையிற் பிரிவு. தூமை - வாயிலவர் வாழ்தல்.

'நிலைநீர்' என்பதுமுதல் 'சருங்கி' என்பதுவரை.

(1—2 வரிகள்.)

(ப-ரை.) நிலை நீர் - அசைவற்ற ஓடையி லெழாநின்ற, மொக்குளின் - குமிழியைப்போல, விளைவாய் தோன்றி - விளைவாகத்

தோனறி, வான தவழ் - ஆகாயத நிலியருகினற, உடல கறை - உடலிற் களாகமுள்ள, மதி என - மதிபோல, சுருங்கி - குறை ந்து

. (வி-ரை) கில - அகைவினமை. மொக்குளின என்பதில் இன் ஈற்றாவது சாரியைப்பொருளது.

'புல்லர்வாய்ச்சூளென' என்பதுமுதல் 'வாழ்க்கையய என்பதுவரை.

(3—4 வரிகள.)

(ப-ரை) புல்லர் வாய சூள் என - கீழ்மக்கள் வாயிலுண்டான சபதம்போல, பொருளுடன் அழியும-பொருளோடு கெடுகினற, சிறு உணவு இன்பம - சிறியவுணவாகிய இன்பதையுடைய, திருந்தா வாழ்கையை - திருதமில்லாத இல்லறவாழவை.

(வி-ரை.) புல்லர் - பண்படியாகபபிறதபெயர்.

'கான்றிதோன்றியின்' என்பதுமுதல் 'கேள்வியர்' என்பதுவரை.

(5—6 வரிகள.)

(ப-ரை) கான்றிது தொன்றியின் - கழிய சோற்றைப்போல, கண்டு - அறிதது, அருவருதது - அருவருப்படைந்து, புலன - ஐம புல வாசனையை, அற திடைதத - மூறறுந்திடைதத, நலன் உறு கேள்வியர - நனமையுணடாதற்குக் காரணமான நூறகேளவியை யுடையவரும.

(வி-ரை) காலல் - கக்கல் தொன்றி - சோறு. புலன் - ஆரு பெயர். புலவாசனை - சப்தாதிகளின் மணம. நலன்-போலி.

'ஆராவின்பம்' என்பதுமுதல் 'வாழ்க்கையர்' என்பதுவரை.

(7—8 வரிகள.)

(ப-ரை.) ஆரா இன்பம - இடைத்தற்கரிய பெரின்பமாகிய, போழுது அருநதி - பெரிய வழுகத்தையுணடு, துறவு எனும் திரு வுடன் - துறவறமெனனுஞ் செல்வியுடன, உறவு செய - உறவுசெ யது, வாழ்க்கையர் - வாழும் வாழ்கைகையயுடையவருமான பெரி யோரது.

(வி-ரை) ஆராவினபம - இ ட்டாத நினைபமெனினுமாம். செய்யென்று முதலிலேயே ம்ல் ப பினையெச்சப் பொருடாது நின்றது.

'வாயினும்' என்பதுமுதல் 'காரொளிமிடற்றோன்'

என்பதுவரை.

(3—10 வரிகள்.)

(ப-ரை.) வாயினும் - வாயாற் சொல்லுந் துதியினும், கண்ணினும் - கண்ணின் காட்சியினும், மனத்தினும - மனத்திற் சிந்திக்கு தலினும், அகலா - நீங்காத, பேரொளி - பேரொளிமயமாகிய, நாயகன் - தலைவனை, காரொளி மிடற்றோன் - கரியவொளி பொருந்திய கண்டத்தையுடையவன்.

(வி-ரை.) வாய் - ஆகுபெயர். கண்ணும் மனமும் அவை. பேரொளி - பரஞ்சோதி. மயம் - உருவம். மிடறு - கண்டம்.

மன்றடிருவேட்டு' என்பதுமுதல் 'மறங்கெழுபெருமான்'

என்பதுவரை.

(11—16 வரிகள்.)

(ப-ரை.) மண் திரு வேட்டு - பூமிசெலவுக்கான விருமப், பஞ்சவன் பொருத - பாண்டியனோடு யுத்தஞ்செய்த, வில்லியும் - சோழனும், வேளும் - (அவன்) சுற்றமும், வேளர் படை - நான்கும் - மிகுந்தவனவான்குவகையாக வீரருந்தேனையும், திண்மையுட - வலிமையும், டருகும் - இனமாபமும், பெற்றமும் - (வெற்றிகொள்வெமன்னும்) தெளிவும், பொன்னிட - கெடவு, எரிவரப் உரகர் - விஷாக்னி பொருந்தின வாயினையுடைய நாகரது, இருள் நாட்டு ஒருவ-ருண்டாகாட்டில் வீழுமாறு, கொலே கொண்டு - கொலையை மேற்கொண்டு, ஆழி - ஆபமாகிய மகிவில, உடன் - முற்பட்டுவீழ்ந்த பாண்டியனுடன், குறி படைத்து மறிய-குறிகொண்டு தானும் வீழ்ந்தபோது, புதைத்த - அதில் புதைந்திடும்படி செய்தருளிய, மறங்கெழு பெருமான் - வேலேருவாய் வந்தருளிய பெருமான்.

(வி-ரை) பொருதல் - போர்செய்தல். படை நான்கு - தேர் யானை குதிரை காலாள் எனபன. பொன்றல் - கெடல். எரி - நெருப்பு.

'நீர்மாகோனறு' என்பதுமுதல் 'ஆலவாயினுள்'

என்பதுவரை.

(17—20 வரிகள்.)

(பதவுரை.) நீர் - கடலில், மா கொன்ற - மாமரத்தைத்தடிந்த, சேயோன் - முருகக்கடவுளது, சூனறமும் - திருப்பரங்குன்றமும், கல்வியும் - கல்வியும், திருவும் - செல்வமும், காலமும் - ஆயுளும், கொடியும் - கொடிகளும், மாடமும் - மாடங்களும், ஓங்கிய - நீடித்துள்ள, மணிநகர் கூடல் - நகரங்களுள் மணியையொத்த கூடலென்னும், ஆலவாயினுள் - திருவாலவாயின்கண்.

(விளக்கம்.) தடிதல் - வெட்டல்.

'அருளுடனிறைந்த' என்பதுமுதல் 'நல்லியலூர'

என்பதுவரை.

(20—22 வரிகள்.)

(பதவுரை.) அருளுடன் நிறைந்த - அங்கயற்கணம்மையுடன் நிறைந்துள்ள, பவளம் சடையோன் - பவளம்போன்ற செஞ்சடைப் பிரானது, பதம் - திருவடிகளே, தலை சுமந்த - தலைமேற்கொண்ட, நல் இயல் ஊர - நல்ல அழகையுடைய தலைவனே.

(விளக்கம்.) இறைவிகருவம் அருளேயாதலால் 'அருளுடன்' என்றார்.

'நின்புல்லமுண்மங்கையர்' என்பதுமுதல் 'முன்றிலாக'

என்பதுவரை.

(22—27 வரிகள்.)

(பதவுரை.) நின் - நினது, புல்லம் உள் மங்கையர் - புன்மையாகிய வுள்ளத்தையுடைய பாத்தையர ஏ, ஒவிய இல்லம் - சித்திரமெழுதிய இல்லம், எம் உறையுள் ஆக - அவ்வாறில்லாத வெம தில்லமாகவும், கேளா சிறு சொல் - கேட்கத்தகாத கீழ்மைச்சொற்களை, கிளக்கும் - பேசுகின்ற, கலஇயர் - கலகமியற்றுந்தோழிகள், இவ்வுழி ஆயத்தினர்களுமாக - இவ்விடத்துள்ள தோழிகளாகவும், மௌவல் இருஞ் விரிந்து - மல்லிகைமலர் மலர்ந்து, மணம் சூழ் - மணத்தைச்செய்கின்ற, பந்தர் செய் - பந்தரமைத்த, முன்றிலும் - வாயிலும், எம்முடை - அவ்வாறில்லாத வெங்களுடைய, முன்றில் ஆக - வாயிலாகவும்.

(வ்-ரை) ஓவ்யம - சித்திர. உரையுள - வ்க. ஜனதல - பேசல். மௌவல்-ஆகுபெயர். பகதர் பேர்வி வாயில - வீடடின முற புறமாதலால அதனே முனறிலென வழஙகுப

'மலர்சுமைசசேக்கை' என்பதுமுதல் 'நிகழுணவுன்னி' எனபதுவரை.

(28—30 வரிகள.)

(ப-ரை.) மலர் சுமை சேக்கை - மலர் நிறைஙாயிய அவர் படுக்கையைப்போல, மது மலர மறுத்த - தேமலர்களிலலாமையால, திரு மனம கொள்ளர - துமதது மனம விருபபங்கொளளாத, இ சேக கையதாக - இநத எனது படுகையாகவும, நின உளம கணடு - நின்னுள்ளத்தையறிநது, நிகழ் உணவு உனனி - தனகு நிகழ்கினற வுணவைக்கருதி.

(வி-ரை.) உன்னல் - கருதல் காண்டல்-எண்டு அறிதல் குறித்து நினறது.

'நாணு' என்பதுமுதல் 'பெரிதுடையமே' என்பதுவரை.

(31—34 வரிகள.)

(ப-ரை.) நாணு - நாணுமல், நவம் பொய பேணி - புதுமை யான பொயகளே விரும்பி, உள புணர்த்தி - உளளே கறபிதது, மூக மன் - உபசாரஞ் சொலலுகினற, யாழொடி பாணனும - யாழோடு கூடிய பாணனும், நீயும்-நீயும, திரு பெறும - திருவினவளர பெற்ற, அயலவர் காண - அயலாரறிய, வரபபெறும - வரும்படிபெறற, மாத வம - நல்லதவதனை, பெரிது உடையமே-மிகவுமுடையமே யாமாக.

(வி-ரை) நாணுமல் எனனும எதிர்மறை வினையெசசம் ஈறு குறைநது நாண என நினறது. நவம - புதுமை. பேணல்-விரும்பல. புணர்தல் - கற்பித்தல்.

ஆலவாயினில் அருளுடனிறைநத பவளசசடையோன் பதங தலேசுமநத நலலியலூரனே! பாணனு நீயும அயலார்காண, எமதறை யுளாசவும இவ்வுழித் தோழியாசவும எமமுன்றிலாகவும மலர்மறு த்த சேகையாகவும நினனுளளத்தி லெண்ணி இவகே வரப்பெற மாதவமுடையம என வினமுடிவுசெயக.

திருக்கோவையார் கசசு-ம செய்யுள்.

பெறும்புனங்கண்டு பெருந்தல்.

வறும்புனங்காடு வந்தநலே பெ ந—தலைமகளைத் தோழியு ம் புனங்காவலேறிப் போகாதிரு, தலைமகன் பகற்றிடைச் சென்று நின்று, இப்புனம்யாருமுன் பயின்றதன்றே, இப்பொழுது இங்கு நிற்கின்றவா றென்னேவென்று, அதன் பொலிவழிவு கூறித் தலைமகளைத் தேடி வருந்தாதிற்றல். அதற்குச் செய்யுள்:—

பொதுவினிற் றீர்த்தென்னை யாண்டோன் புலியூர னன்பொருப்பே
யிதுவெனி லென்னின் பிருக்கின்ற வாறெம் பிருப்பொழிலே
லெதுமக் கெய்திய தென்னுந் தளிரடி யீண்டருவி
மதுவினிற் கைப்புவைத் தாலொத்த வாமறறிவ் வான்புனமே.

மேன்புனம்விடுத்து மெல்லியல்செல்ல
மினபொலிவேலோன் மெலிவுற்றது.

(பதவுரை.) பொதுவினில் - (அதுவோ இதுவோ வழுவையை மயங்கிப்) பொதுவாக நின்ற நிலைமையை, நீர்த்தது - நீக்கி, என்னை ஆண்டோன் - என்னையாண்டவன, புலியூர் அரன் - புலியூரில் அரன், பொருப்பே எனில்-(அவனது) மலைபோலாயின், இது இன்று இருக்கின்றவாறு என் - இஃது இன்றிருக்கின்றவாறுகிய இதென்னை, எம் இரும் பொழிலே - எமது பெரிய பொழிலே, நுமக்கு எய்தியது எது-நுமக்கு (இன்று) கேர்ந்தது யாது, என் உற்றனிர் - நீர் என்றுற்றீர், இ - இந்த, வான் புனம் - பெரியபுனம், அறை ஈண்டு அருவி - ஓலிக்கின்ற பேரருவியாய் விழும், மதுவினில் - தேனில், கைப்பு வைத்தால் ஒத்தவா (என்) - கைப்புச்சுவையை வைத்தாலொத்தவா றென், எ-று.

நேரிசையாசிரியப்பா.

உள்ளிருந் தெழுந்து புறம்படின் றெரியா
மளவாத் திருமணி யளித்த லானுங்
கொலைமுதிர் கடமான் முதிர்முகம் படர்ந்து
கொழுஞ்சினை மிடைந்து சுரிசொரி பொதுளிய
5 நெடுமரத் திளைங்கா கிலைத்த லானும்
பாசடை யும்பர் நெடுஞ்சினை விரிந்த
பேரிதழ்த் தாமரை பெருக லானு
நெடுவிசும் பணவும் பெருமதி தாங்கி

யுடையா வழுத முறைதத லாலு
மிளமையுங தொங்கலு மின்பழு மொருகால்
வாடாத் தேவர்கள் மணத்த லாலும
நூறுடை மகத்திற் பேறுகொண் டிருந்த
புரந்தரன் போலும் பொன்னெயி லெரித்த
மணிமேவுற் குமரன் றிருவளர் குன்றம்
பேரணி யுடுத்த பெருகுகர்க கூடல்
கோயில்கொண் டிருந்த குணப்பெருங் குன்ற
மருந்தவக் கண்ணிலை டைடைந்தமா முனிபாற்
பேரிருண் மாயைப் பெண்மக விரக்க
வுவர்முதல் கிடந்த சுவையே முமைத்துக்
கொடுத்தமெய்ப பிண்டக் குறியுடன் றோன்றிய
வெழுநிறச் சகரர்க ளேழுனி கின்று
மண்புக ழுழ்கிய வான்பரி பிணிக்கப
பன்முக வினகிற் பரிதியிற் றோட்டிய
வேலைக் குண்டகழ் வயிறலைத் தெழுத
பெருங்கார்க் கருங்கடு வரும்பிய மிடற்றோ
னெறிந்துயி ழுருவியு மெரிமணி பீட்டழு
மூளனுதோ துள்ளுதோ றுணுவழு றுறைதகுந்
திருமுத் தமிழும் பெருகுதென் மலயத
காரப் பொதும்ப ரடைகுளிர் சாரற்
சுரும்புடன் விரிந்த துணாமலர்க் கொடியே
விண்விரித் தொடுக்கு மிரவிவண் கவிகைக்
கிட்டிறை காம்பென விட்டெழு காம்பே
மரகதஞ் சினைத்த சிறைமயிற் குலமே
நீலப் போதும் பேதையும் விழித்த
பொறியுட னுழையே யெறிபுன மணியே
பாசிழைப் பட்டு நூற்கழி பரப்பிய
கிளைவாய்க் கிடைத்த வளைவாய்க் கிளியே
மைத்தர்கண் சென்று மாதருட் டடைந்த
பொழிமதுப புதுமலர்ப போக்குடைச் சுரும்பே
வெறிமுதிர் செம்மன் முறிமுகங் கொடுக்குந்

சந்தனப் பொதும்பர்த் தரைதிகிரனப் பொழிலே
கொளனேயஞ் சுகமுங் குருவியும் கடிய
விருகாற் கவரிற் பெரிமயி லமருத
நெடுங்காற் குறுமுழி நிரல்வைப் பிதணே
நெருநற்.கண்டவெற் ருதவிய வின்ப
மிற்றையிற் கரந்த விருண்மன மென்னை
விவணிற் கவைத்த வேலாக் கடுங்கள்
கொடித்துண் ணவர்பின் கரந்தமை கடுக்கு
மீங்கிவை கிடக்க வெவ்வினை முரம்புனை
5() திருநுதோ னிருநுதே னிலதா னீ ரு
நின்புன மல்லலின் றென்புலன் வெளிப்பட
வறைதல் வேண்டு மப்புன நிரேன
முன்னங் கண்டவ னன்றென்
றுன்னு வதவுத லுயர்ந்தோர் கடனே

உள்ளிருந்தெழுந்து - உயர்ந்தோர்கடனே. பதுமி - பதற்குறி. நுவறை - வறும்புனங்களைக்கடி வருந்தல்.

'உள்ளிருந்தெழுந்து' என்பதுமுதல் 'அளித்தலானு' என்பதுவரை.

(1—2 வரிகள்.)

(ப-ரை.) உள்ளிருந்து எழுந்த - உண்ணின்று மேலெழுந்து, புறம்பு நின்று எரியும் - பக்கங்களினின்று சுடர்விடுகின்ற, அளவாதிரு மணி - அளவிடப்படாத அழகிய மாணிக்கத்தை, அளித்தலானும் - பாதுகாத்தலானும்.

(வி-ரை.) எரிதல் - சுடர்விடுதல். அளித்தல் - பாதுகாத்தல்.

'கோலமுதிர்' என்பதுமுதல் 'நிலைத்தலானும்' என்பதுவரை.

(3—5 வரிகள்.)

(ப-ரை.) கொலை முதிர் - கொலைத்தொழின்முதிர்ந்த, கடமான்-கடமாக்கள், முதிர்முகம்-மிகுந்த விடங்களிடமும், படர்ந்து - சஞ்சரித்து, கொழுஞ்சினை-தழைந்தகிளைகள், மிடைந்து-நெருங்கி, குளிர்கொடி - குளிர்ச்சியோடி, பொதுளிய-தளிர்த்த, நெடி - நெடிய,

மாத்து இளங்கா - தருக்களையுடைய பசியசோலைகள், நிலைத்தலா னும் - நிலைபெற்றிருத்தலானும்.

(வி-ரை.) மூர்த்தல் - மிகுதல். கடமான் - மதம்பொருந்திய ஆனைகள். படர்தல்-சஞ்சரித்தல். மிடைதல் - நெருங்குதல். பொதி னல் - தவிர்த்தல்.

'பாசடையிம்பர்' என்பதுமுதல் 'பெருகலானும்' என்பதுவரை.

(6—7 வரிகள்.)

(ப-ரை.) உம்பர் - மேலிடத்தில், நெடு சுனை - பெரிய சுனை யின்கண், பாசடை விரிந்த - பசிய இலைகளோடுவிரிந்த, பேரிதழ் - பெரிய விதழ்களையுடைய, தாமரை-தாமரைமலர்கள், பெருகலானும் - பெருகுதலானும்.

(வி-ரை) பாசு - பசுமை. தாமரை - ஆகுபெயர்.

'நெடுவிசும்பணவும்' என்பதுமுதல் 'உறைதலானும்' எல்பதுவரை.

(8—9 வரிகள்.)

(ப-ரை.) நெடு விசும்பு அணவும் - பெரிய ஆகாயத்தை யளா வியு, பெரு மதி - பெரிய சந்திரனை, தாங்கி - பொறுத்தி, உடையா அமுதம் - அழியாத வமுதமான து, உறைதலானும் - நீங்காதிருத்த லானும்.

(வி-ரை.) அணவல்-ஆளாவல். தாங்கல் - பொறுத்தல். உடை தல் - அழிதல். உறைதல் - நீங்காதிருத்தல்.

'இளமையும்' என்பதுமுதல் 'மணத்தலானும்' எனபதுவரை.

(10—11 வரிகள்.)

(ப-ரை) இளமையும் - தைதிரை யின்மையும், தொங்கலும் - மாலையும், இன்பமும்-மகிழ்ச்சியும், ஒருகால்-ஒருகாலத்தும், வாடா - கெடாத, தேவர்கள் - அமரர்கள், மணத்தலானும் - பொருந்தியிரு த்தலானும்.

(வி-ரை.) இளமை - இளம்பருவம், அது இங்கு தைதிரை யின்மைக்காயிற்று. மணத்தல் - பொருந்தியிருத்தல்.

'நூறுடைமகத்தில்' என்பதுமுதல் 'கூடல்' என்பதுவரை.

(12—15 வரிகள்.)

(ப-ரை.) நூறு உடை மகத்தில்-நூறென்று மெண்ணையுடையவாகிய காரணமாக, பேறுகொண்டு இருந்த - பேற்றைக்கொண்டிருந்த, புரந்தரனேறும - இந்திரனேப்போலும் பிருகினைத, பொனவியில் எறிந்த - பொன்மயமில் சூழ்ந்த மயேந்திரவில்லையழித்த, மணிவேல் குமரன் - அழகிய வேலாயுதத்தையுடைய குமாரக்கடவுளை, திருவளர் குன்றம - வளமைமிக்க திருப்பரங்குன்றத்தை, போணி உதித்த - பெரிய ஆரூரைக்கொண்ட, பெருநகர் கூடல் - நகரங்களுள் மேன்மைத்தாகிய மதுரையை.

(வி-ரை.) மகம் - யாகம். பேறு - லாபம். வில் - ஆதபெயர். எறிதல் - அழித்தல்.

'கோயில்கொண்டிருந்த' என்பதுமுதல் 'மகவிரக்க' என்பதுவரை.

(16—18 வரிகள்.)

(ப-ரை.) கோயில்கொண்டிருந்த - திருக்கோயில் கொண்டருளிய, குணப்பெருங்குன்றம் - பெரிய குணமலை, அருங்கவம் கண்ணினேடு - அரிய தவமாகிய கண்ணுடனே, அடைந்த - ஆணையதனிலிருந்த, மாமுனிபால - பெரிய காசிபமுனிவனிடத்து, பேரிருள் - பெரியவிருளையொத்த, மாயைப்பெண் - மாயையெனலும் பெண்ணானவள், மகவு இரக்க - பிள்ளை வேண்டுமென்று யாசிக்க.

(வி-ரை.) குணப்பெருங்குன்றம் என்றது நிலைபேறுடைமை அசையாமை முதலியவை யுடைமைபற்றியெனக; "குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி, கணமேயுங் காத்த லரிது" என்னுந் திருக்குறளுரையாலு மிஃதினிது விளங்கும்.

'உவர்முதல்கிடந்த' என்பதுமுதல் 'பிணிக்க' என்பதுவரை.

(19—22 வரிகள்.)

(ப-ரை.) உவர் முதல் கிடந்த - உவர்ப்பு முதலாயுள்ள, சுவை ஏழ் அமைத்து - ஏழுவகைச சுவையையு மமைத்து, கொடித்த மெய் பிண்டம-அளித்த அவ்வண்ணப் பிடத்தின், குறியுடன் தோன்றிய - அடையாளங்களுடன் றோன்றிய, ஏழு நிறம் சுகரர்கள் - ஏழு நிறத்தினையுடைய சுகரர்களுந், ஏழ் அணி நின்று-ஏழணியாகநின்று,

மண புக மூழ்கிய - பாதல கதி லொளிக்கபபட்ட வான பர - ஈறப புளள அசுவமேதக ருதிரையை, பிணிக்க - கணபிடித்துககட்ட.

(வி-ரை) உவாத்தல - உபபுகறித்தல் பிணித்தல - கட்டல.

'பன்முகவிளக்கின்' எனபதுமுதல 'அருமபியமிடற்றோன்' எனபதுவரை.

(23—25 வரிகள)

(ப-ரை) பல முகம விளககின - பல முகஙகளையுடைய விளக ருபபோல, பரிதியின - சகர யுதகதினால, தொடடிய-தோணடிய, வேலைகுணடகழ - ஆழமாகிய பாதகடலின, வயிற அலைத எழுந்த - வயிறறை யலைத்துத தோனறிய, பெரு கார கருஙகடி - மிருந்த கரியற்றசையுடைய ஓலாலம, அருமபிய மிடறறோன - காணபபடுங கணடதசையுடையவனது

(வி-ரை) விளககின எனபதில இன் ஐந்தாவதனுபபுப பொருளது. பரிதியின எனபதில இன எனனும ஐந்தாவது மூனறாவது கருவிபபொருளில வநதது பரிதி-சகராயுதம. ஆலாலம - பாற கடலிலெழுந்த நஞசு அருபபுதல - காணபபடுதல.

'எறிநதுவீழ்ருவியும' எனபதுமுதல 'தோடியே' என்பதுவரை.

(26—30 வரிகள)

(ப-ரை) எறிநது வீழ் அருவியர-ஒலிததொழுகுகினற அருவி நீரும, எரி மணி ரூடடமும-சுடாவிடுகினற மணிககூடடமும, உள ளூதோளளூதோறும - நீனைகளூதோறு நினைகளூதோறும, உளூ அமுது ஊறைகளூ - உணணுதறகக வழுதளூ சுரகாகினற, திரு முததமிழும - அழகிய இயலிசை நாடகமெனனு மூனறுதமிழும, பெருகு - மலாகதறகிடமாகிய, தென மலயத்து - தெறகினகணணள பொதிகையில, ஆரபொரூபா - சநதனசசோலைகள, அடை குளிர சாரல - நெருஙகிய குளிரந்த சாரலினகண, சுருமபுடன-வணடுகளூ டனே, துணா மலா விரிந்த கொடியே - பூஙகொதுகள மலர்ந்த கொடியே

(வி-ரை) எறிதல - ஒலிததல எரிதல் - சுடாவிடுதல. உள ளூ - நினைததல. ஊறைதல - சுரததல மலயம - பொதியமலை. ஆரம - சநதனமரம. துணா - பூங்கொதது

'விண்விரித்தோகைகு' எனும் முதல் 'சிறைமயிற்குலமே' எனும் ஈறுவரை.

(31—33 வரிகள்)

(பதவுரை.) விண் விரித்த ஓகைகுழ - விண்ணில் (இரண்டுகோ) பரப்பிச் சுருக்காகிறை, இரவி வண்ண கயிலைக்கு - சூரியனைய கலலருடைக்கு, இட்டிறை காமபு என - அமைத்திருக்கு காமபு போல, விடடி எழு காமபே - மே லாடையிழுத்த மூலபோ, மரகத மணிதத - மாகதமணி இலைதாறபோலும், சிறை மயில் குலமே - சிறையையுடைய மயிலினமே.

(வி-ரை.) இணைதல - இலைதல

'நீலப்போதும்' எனபதுமுதல் 'எழிபுனமணியே'

எனபதுவரை.

(31—35 வரிகள்.)

(பதவுரை.) நீலப போது - நீர் லாபலமலர் ம, பேதையும - பெண்களனது கணணுமபோல, விழிய - விழிக , பொரி உடல உடையே - உடலிற புளளியுள்ள மானினமே, எழி பரம மணியே - இனையறுதத புனஙகளிலுளள மனினமே

(வி-பர) பேதை - ஆகுபெயர. எழிதல - அழகுதல்.

'பாசிழை' எனபதுமுதல் 'சுருமபே' எனபதுவரை.

(36—39 வரிகள.)

(பதவுரை) பாசிழை பட இறுல - பசிபவிழையாகிய பட்டுநூலை, கழி பரபபிய - கழியிற பரபபியதுபோல, இலைவாய இடைதத-மூலை இவினகணணிருகஙினற, வலை வாய இளியே - வலைத வாயினை யுடைய கிளிளையே, மைஉதா கண் செலல-மூட கண்கள்செனறு, நாதருட்டடைநத - மாதரிடதத ர , டைபபட்டாறபோலும, மது பொழி புது மலர் - மதுபபொழி பவற காண்மலரிடதது, போகரு உடை சுருமபே-போதலேயுடைய வணிடே.

(வி-ரை) இலை - ஓலைகில். கிடைத்தல் - இருத்தல். மது - தேன். நாள்மலர - அனறலர்ந்த மலர.

'வெறிமுதிர்சேம்மல்' என்பதுமுதல் 'நிழல்வைப்பிதணே' என்பதுவரை.

(40—44 வரிகள.)

(ப-ரை.) வெறி முதிர் செம்மல் - மணமுதிர்ந்த பழம்பூவை, மூறி முகம் கொடிகரும் - தளிர்மூக்கதினினை அஞ்சொரியாநின்ற, சுத்தனம பொதும்பர் - சுகதன மரங்களால், தழை சினை பொழிலே- இனேகன் தழைகதுள்ள சோலையே, கொள்ளே அம் சுகமும் - புண மறிவுசெய்யும அழகிய கிளிகளேயும, குருவியும் கடிய - குருவிகளேயும் ஏனைப்பறவைகளேயு மோசசுமாற, இருகால் கவணிற்கு-இரண்டு ணிையையுடைய கவணில் வைத்து வீசுதற்கு, எரி மணி சுமந்த - சிவந்த பன்மணிகளேச சுமந்த, நெடி கால் குற்றழி - நெடிய காலே யுற்ற சிறிய விடத்தையுமுடைய, நிழல் வைப்பிதணே-பாதலாணிழல் செயயுல பரணே.

(வி-ரை) வெறி - மணம். செம்மல் - பழம்பூவக்கோர் சிறப்புப் பெயர். நெசல் - கடிதல். கால் - நுனி, "வரையன நெருநர விரு கால் லியை வேதத்து" என்னும நிருக்கோவைச செய்யுளாலு மீதி னிது விளகுகும. எரிமணி - செம்மணி (மாணிக்கம). உழி - இடம இதண் - பரண்.

'நேருநர்கண்டவெற்கு' என்பதுமுதல் 'மனமென்னே' என்பதுவரை.

(45—46 வரிகள்.)

(ப-ரை.) நெருநல் கண்ட எற்கு - நேற்றுக்கண்டவெனக்கு, உதவிய இனபம - தகதவினபத்தை, இற்றையின கரந்த - இனறு தாமமெலாவிதத, இருள் மனம் என்னே-வஞ்சித்த மனதென்னே.

(வி-ரை.) கரத்தல் - ஒளித்தல்.

'இவண்' என்பதுமுதல் 'கிடக்க' என்பதுவரை.

(47—49 வரிகள.)

(ப-ரை.) இவண் - இவ்விடத்தே, நிற்கவைத்த - யான்மயஙகி நிற்கும்படிவிட்ட, எலா கடுஙகண் - தகாதகொடுமை, கொடித்த உண்டவர் - முன்னே யொருவற்குப் பகிர்ந்துண்டவர், பின்-பின்பு, காதகமை கடிக்கும் - கொடாமலொளித்த தன்மைபோலுஙின்றதி, நாகு இவை கிடக்க - இவை யிம்மட்டிருக்க.

(வி-ரை.) கடுங்கண்மை - கொடுமை. கடித்தல் - நிகர்த்தல்.

'என்னிழல்' என்பதுமுதல் 'அறைதல்வேண்டும்'
என்பதுவரை.

(49—52 வரிகள.)

(ப-ரை) என் நிழல் - எனது நிழல்போல, இரும்புனத்து - இப்பெரிய புனத்தின்கண், இருந்து ஒளிர் - விளங்கியிருந்த, அரும் தேன் - அருமையுள்ள தேனையொப்பாள், இலதால்-ஈங்கு இலளாத தால், நின் புலம் அல்ல என்று - இஃது நினது புனமன்றென்று, என் புலம் வெளிப்பட - எனதறிவிற்கு விளங்குமாறு, நீரும் அறை தல்வேண்டும் - நீவிரும் சொல்லல்வேண்டும்.

(வி-ரை) இருமை - பெருமை. புலம் - அறிவு.

'அப்புனம்' என்பதுமுதல் 'உயர்ந்தோர்கடனே'
என்பதுவரை.

(52—54 வரிகள.)

(ப-ரை.) அப்புனம் - அப்புனத்திலுள்ளோர், நீ்ல் - நீவிரா யிருப்பீராயின், முன்னம் கண்டவன் - முன்னமிங்கு வரக்கண்ட வன், அன்று என்று உன்னு - யான் அல்லனென்றுன்னுமல, உத வுதல் - (தேனையொப்பாள் சென்றவழி) சொல்லுதல், உயர்ந்தோர் கடன் - பெரியராயினோர் முறைமையாகும்.

(வி-ரை.) உன்னல் - நினைதல். உதவல் - ஈண்டுச்சொல்லற் பொருட்டது நின்றது.

துணர்மலர் விரிந்த கொடியே! காம்பே! மயிற்குலமே! எறி புனமணியே! வானவாய்க்கிளியே! சுரும்பே! பொழிலே! இதணே! நெருநற்கண்டவெற்கு உதவியவின்பம இற்றையிற்கருந்தவிருண்மன மென், நிற்கலைத்த வேலரக்கனெகண் கொத்தணிண்டவர் பின் கரந் தமை கடுக்கும், இவை கிடக்க, இரும்புனத்திருந் தொளிரருந்தேனி லதால், நின்புல மல்லவென்று என்புலம் வெளிப்பட நீரும் அறை தல்வேண்டும் அப்புனம் நீ்ல், முன்னமங்கண்டவன் அன்றென் றுன்னு உதவுதல் உயர்ந்தோர் கடனென வினைமுடிவுசெய்க. (அ)

திருக்கோவையார் உள்ளுறை செய்யுள்.

நெஞ்சொடு வருந்தல்.

நெஞ்சொடு வருந்தலென்பது—பிரிந்தமை கூறக்கேட்ட தலை மகன், அன்றவரை விடாது என்னெவிட்டு அவரது தேர்ப்பின்

செனற மெஞ்சம வினறு மவரவரது செயலாது எனனோ வருதலாசனற
தெனனத தனனெனஞசொடு வருதலாறறால. ஸகாரஞ சேயபுளி —

ஏரபினனை தேரணமுன் ணைநதல மேனச வெரிகமம நு
சீரபடைனை வெனறசெறிசழ லேனனி சஞ டிரைவாட
காரபுனனை பொனனவிப சூசர ணைவி சலி நகமா
தோபினனசகனறவெனறெனை தெனமகாலாகில புசெயவ னறிக

ரெனாப வரி சுப
பொறபு வாயபரு.

(ப-ரை.) ஏர - அழகுபுனடைய, பிரனை-பினைனை (பெரியதே
வியாருணை-, சேரன - சேரனகளை, முரசு - முரசால நி, ரனைர
வர - சேரநதகரறிய மாயவன, ஏவல - நிறை, எழில - நிறைய
ஆநகு விலாகுறி ஞ பொனனை வெனறை-வெறபனாக வெறன,
மெசறி வழலோன - நிருவடிகளை யுடையவரை, நிலை - நினை
கனனை, சூழ பொழிலவாய - சூழநத பொழிலினிட நு, கார
புனை - கரியபுனனை, பொன்ன தவிழ - பெரனமலர மலரவ,
முதுதம - முதுதிபனாலும, மண பில - மணலையுனடைய பீடரிட
நில, கலநது-கூடி, அசனறார-நீஙகினாரபது, தேர பிள ரை செனற-
தேரினர பினனைபோல, எனன தெரடு - எனாரை, நெஞ சே
னினறு எனகொலாம - (இவ்வாறதை) நினறு செயவ னை
னை (யானை அறிகிலேன), எ-று

(வி-ரை.) ஏதத ஒழி சிகழுமென வியையும. எனறேனறி லா
ஆவா சேர்பபினாேனை தெஞசம நினைகறனை வருதது
கினற தெனனெனறு தெஞசொடு தொடது கூறினாளாக வுரைபபினு
மமையும. சேரிசழலும முதிதமணலும அரமொழிதிகளை சேய
கில ரசே யென்பது பாடமாயின, அனன அவரை விடாதசென்ற
தெஞசம செல்லாதே மீணடிருகது மெனனைப்போல, இனறு சேய
கினறதென னெனனை கூறினாளாக வுரைக்க.

கோனையாசிரியப்பா.

மொழி விதிக்க விசைநூல் வழக்குட
தெரண வெணணெய கருகுலி யகதிணு
பரிற றிரடடி நாலப் குலியினுங்
நமையு நெடிலமபுங் கோடல பெற்றைதா

யாயிர நாகிரி நிறைபொரு ளிசிதரச்
சோடி ரசமணி குரீசுமணி குயிறறி
யிருநில விடதரி மலைகர கதவ
வாயிர நெடியி லமைகன பிரபட
பிறவிப பேசுக துறையுது போல
வாரிபட பாநகமிகா ஞரதப பேரியாழ்
நனையொ ளைபர வணிமுகம பலமப
மூநான கா ளுலி முழுவுடை சுறற
மைமலரிற நிரடி யாடனை சுழிதக
வகுளி நெர்மையு மலைதழுட நிரதே
யொலபடு நகரி யுமநகரிலை நீநி
யறவாய நாபிரண டணைதவரை கடடி
தோளசர மகிரது நெழிறபட தோனறு
முமபுரு சருவிப துனலிநின நிசைபப
வெழுவெ ய வடமபிபெப நெனைபதக குலியில
நகரி நா ய கரக முதகத
நிரதப பேரியாழ நினைபபட மூல
நிறைமதி வடடகு முயலுரி விரிதது
நரபட நெறறைப நரமட கடிபபமைத
நகநரம பிநாக தாறற குலிபப
விடகதப வகதி பிடரி முனமதுப
புறவிரன மூனறி றுனிவிர லகதது
மறுபத நிரணடிரை யனறதுபிர வணகு
மருதவுப பெயாபெறம வானக குருவி
நிறபடுத குளளநீ துவகதினை நிரைபப
நானமுனை முதலா மூ நருமப போறற
முனிவரந சலியுடன முகம னியபப
தேவாக ளனைவருந நிசைநிசை யிறைஞச
வினபப பாகுமிகாடி யிடபபாற் படர
வெளளிய குனறம வினகுகவீற நிருநத
முனனவ னுடனை முறைவண நாரென
வறவப பசுமலி யருமபவிழ கணணகா

னெய்தற் பாசடை நெடுங்காட் டொளிக்குங்
கண்ணெனக் குறித்த கருங்கயற் கணத்தை
வெள்ளுடல் கூர்வாய்ச் செந்தாட் குருகின
மரவெயி றணைத்தமுள் ளிலைமுடக் கைதைகள்
கான்றலர் கடிமலர்க் கரந்துறைந் துண்ணுங்
கருங்கழி கிடந்த கானலங் கரைவாய்
மெய்படு கடுஞ்சூண் மின்னெனத் துறந்தவர்
சுவலுளைக் கவனப் புள்ளியற் கலிமா
ஞெக்க மறைத்த பரிதிகொ ணெடுந்தேர்ப்
பின்னெடு சென்றவென் பெரும்பிழை நெஞ்சஞ்
சென்றுழிச் சென்றுழிச் சேறலு முளவோ
வவ்வினைப் பயனுழி யருந்தவம் பெறுமோ
யிடைவழி நீங்கியென் னெதிருறுங் கொல்லோ
வன்றியு நெடுநா ளமைக்துடன் வருமோ
யாதென நினைக்கிலன் மாதோ
பேதை கொள்ளா தொழிமனங் கடத்தே.

வடமொழிவிதித்த - ஒழிமனங்கடத்தே. பருதி-வரைபொருட் பிரிதல். துறை-நெஞ்சொவெருத்தல்.

'வடமோழிவிதித்த' என்பதுமுதல் 'ஐதாய்' என்பதுவரை.

(1—4 வரிகள்.)

(ப-ரை.) வடமொழி விதித்த - தேவபாடையில் நிருமித்த, இசை தூல் வழக்குடன் - இசைநூன் முறைப்படி, அடித்தன - பொருந்தியனவாகிய, எண்ணென்கு - முப்பத்திரண்டு, அங்குலியகத்தினும் - விரலனவினும், நாற்பதிற்றிரட்டி நாலங்குலியினும் - எண்பத்து நான்கு விரலளவினும் முறையே, குறுமையும் நெடுமையும் - குறுக்கமும் நீட்சியும், கோடல் பெற்று - கொள்ளுதலைப்பெற்று, ஐதாய் - அழகினதாய்.

(வி-ரை.) வடதேயத்தில் மிகுதியும் பயின்று வருதலால் தேவ பாடை வடமொழியென்னும் வழக்குண்டாயிற்று. கோடல் - கொள்தல்.

'ஆயிரத்தந்திரி' என்பது முதல் 'மனங்கரங்கதுவ'
என்பதுவரை.
(5—7 வரிகள.)

பிறவிப பேதத் துறைபது போல.
(9—வது வரி.)

(ப - ரை.) ஆயிரம் தந்திரி - ஆயிரகதந்திகள், நிறை பொது விசித்து - நிறைவாச சமனுற விறுக்கிய, கோடி மூன்றில் - மூன்று மூலேயாக, குறித்து - செய்து, மணி குயிற்றி - மணிகளிழைத்து - இரு நிலம் கிடத்தி - பெரிய பூமியிற் கிடத்தி, மனம் தரம் கதுவ - மனமுங்கையும் விடாதுபற்ற, பிறவி பேதத்து உறையதுபோல - பிறப்பின் வேறுபாட்டின் தோற்றம்போல.

(வி-ரை.) விசித்தல் - இறுக்குதல். குயிற்றல் - இழைத்தல். இருமை - பெருமை. கதுவல் - பற்றுதல். பேதம் - வேறுபாடு.

ஆயிரத் தெட்டி லமைந்தன பிறப்பு.
(8—வது வரி.)

'ஆரியப்பதங்கோள்' என்பதுமுதல் 'நனிமுகம்புலம்ப'
என்பதுவரை.
(10—11 வரிகள்.)

(ப-ரை.) ஆயிரத்தெட்டில் - ஆயிரத்தெண்வகையாக, அமைந்தன பிறப்பு - தோற்றுவனவாகிய நாதவகளமைந்த, ஆரிய பதம் கொள் - ஆரியப்பதத்தைக் கொண்டிருக்கின்ற, நாதம் பேரியாழ் - நாரதமென்னும் பெயரினையுடைய யாழ், நன்னர் கொள் அன்பால் - நனமையைக் கொண்டிருக்கின்ற அன்புடனே, நனி முகம் புலம்ப - மிகுதியும் வாயாற்பாடவும்.

(வி-ரை.) நாதம் - ஒலி. ஆரியபதம்-வடசொல். யாழ் - வீணை. முகம் ஈண்டைக்கேற்ப வாயென் றுரைக்கலாயிற்று. புலம்பல் - பாடல்.

'முந்நான்கங்குலி' என்பதுமுதல் 'தும்புருக்கருவியும்'
என்பதுவரை.
(12—18 வரிகள்.)

(ப-ரை.) முந்நான்கு அங்குலி - பன்னிரண்டு விரலளவாகிய, முழுவுடல் சுற்றும் - உடற்சுற்று முழுமையுமாகிய குறுக்கமும், ஐம்

பதி ரடடி ஆடடன ரி ர - தொணணூறாறு ஈராகு, அதகுலி மேலிலையும - ரி வகாரரம பதரிலை ஆடடதது - செயது, உள ளாரசசெலலனடை ப, மபயது சகுனி - நரபரர தகதிகளா, உமுதது - மடர தகு ம ரி மி மகளை நீகக செயது, அப வாயக ர - வலர முதத ஸ்யில, ஸ்ரீர ரடனாதது - முலலிர னடாகக சோத , ரமர ரடடி - செலகடடி, தெரிஸ்கா வநதிது - சோனி ரமர ந மகளையது, ம ரி டட முதனமம (தரம தொனனூறறி ர) முராரிது வைடாரடி, துமபு கருவியும - தரப வெலறறும வீரனு

(வி-மை) உறுதல - பொருந்துதல.

'துன்னிநின்றிசைபப' எனபதுமுதல 'முரல' எனபதுவரை.
(18—21 வரிகள)

(மை) தூனனி னனற இசைபப - பொருந்துதினறும பாட 'வுக, எழு என உட மபு டெறறு - கய்மரான டலலபபதம, எணபது ஆகுலுயின - எணபது விரலவு ரிடசிபுனே, தந்திரி நரமு கழ ஙகிய - நரறு கந்திரிகளா லொலிககர் னறற முதறக - முகதிதனே யுடைய, கிசகம பேரியர ட - கிசகமனனறும பெயரினையுடைய ய ழ, ஈனேயுடன முரல - பணணேறறி பாடவும

(வி-மை) இசைதறல - பாடுதல தங்கல - ஒலித்தல.

'நிறைமதி' எனப நமுதல 'துவகிகினறிசைபப'
எனபது வரை.
(22—29 வரிகள,)

(ப மை) நிறை மதி வடடதது - முழு மதிபோலும வடடவடி வாய, முயல உரி விதிது - முயலினறோலிறற கட டி, நாபபண-நடி விலை, ஒறறை நாமபு - ஒரு நாமபாலியை, கடிபடமைதது - மாசசனே யறறதது, அ நாமபு - ஈரக நாமபு, இருபதசாறு அகலுலி பெற - இருபதது ஆறு விரலவு பெறுமபடி, இடகரம தவகலி - இடகரக தாற கடடி, இடகீழ அமைதது - இடபபாலிலமைதது, புறவிலை மூனறினை - மூனறுவிரலின புறதிறமும, துளிவிரல அகதது ஈ-விர னுனியினிடதது ம, அறுபதிரணடு இசை - அறுபதிரணடு வகை யாகிய இசையை, அனைதுயிர வணஙகும - எலலாவுயிரும வணங கானின்ற, மருதது வம பெயர பெறும - மருதது வெனனும பெயர பெறற, வானகருவி - தேவயாழ, தூங்கலும தளளலும - தூங்க

லோசையுந் தன்னிலோசை யு, நுவலுங் கூறு இசைப்ப - தழுவி நின்று பாடவும்.

(வி-ரை.) விரித்தல் - சுட்டல் கடிப்பு - மார்சனை, தூவுக்கல் - கூட்டல், தழுவல்.

'மான்முகனே முதலா' என்பது முதல் 'வணங்காரென' வரையில்.

(15 வரிகள்.)

(ப-ரை.) நான்முகன் முதலா - பிரமன் முதலாகிய, மூவருமே பொறாத-முதற்றேவருங்கூடிக, முனிவர் அந்தணியுடனே முதிர்களுஞ் சலியோடி, முகமன இயம்ப - உபசரிக்க, தேவராள் அனைவரும் - தேவர்களாயாரும், நினைதிசை யுறைஞ்ச - நினைக்களே சாமம் வணங்கவும, இனைப் பசுங்கொடி - இன்பதரைத்தரும் இளமையான ஆன நகவல்லி, இடப்பாலே படர - இடப்பாலிருக்க. வெள்ளி அம் குன்றம் - வெள்ளிமலையில். விளங்க வீற்றிருந்த - ஞானப்பிரகாச தோனை மாறு வீற்றிருந்தருளுந, முனைவன - முதல்வனை, கூடல் - மதுரைத்திருப்பதியை, முறை வணங்கார் என - விதிமுறை வணங்கா தாபோல.

(வி-ரை.) முத்தேவர் - பிரமன் விட்டுறு உருத்திரன். முக மன - உபசாரவார்த்தை. பால் - பகுதி. பசுமை - நண்டிளமைகா யிறது. இனப் பசுங்கொடி யென்றது உமாதேவியாரை.

'அரவப்பகந்தலே' என்பது முதல் 'கருங்கயற்கணத்தை' என்பதுவரை.

(36—38 வரிகள்.)

(ப-ரை) அரவம் பகந்தலை - பாம்பின் பரிய தலைபோலும், அரும்பு அவிழ்-அருப்பு விரிந்த, கணை கால்-நிரண்டதாளையுடைய, நெய்தற் பாசடை - அல்லியினது பசுமிலைகளாகிய, கெடு காட்டு - பெரிய காட்டில், ஒளிக்கும - மறைகின்ற, கண் என குறித்த-மாதர் கண்ணென்று குறிக்கப்பட்ட, கருங்கயல் கணத்தை - பெரிய சேல் மீன்களை.

(வி-ரை.) கணை - நிரட்சி. குறித்தல் - சுட்டல், நினைத்தல் எனினுமமையும்.

'வெள்ளுடல்' என்பதுமுதல் 'உண்ணும்' என்பதுவரை.
(39—41 வரிகள்.)

(ப-ரை.) வெள் உடல் - வெள்ளிய வுடலையும், கூர் வாய் - கூரியவாயையும், செம் தாள் - செங்காலையுமுடைய, குருகு இனம் - நாரைக்கூட்டங்கள், அரவு எயிறு அணைத்த-பாம்பின் பல்லைப்போலும் பொருந்திய, முள் இலை-முண்மடல் நெருங்கிய, முடக்கைதைகள் - வளைவாகிய தாழைகளிடத்து, கான்றலர் கடி மலர் - வாசனையை வீசியலர்ந்த மலர்களோடு, கரந்து உறைந்து - ஒன்றுபொளித்திருந்து, உண்ணும் - கொத்தியுண்ணுகின்ற.

(வி-ரை.) வாய் - இவ்விடத்திற்கேற்ப அலகைக் குறித்தது. கான்று என்பதற்குப் பகுதி கால். காலல் - வீசல். காத்தல் = ஒளித்தல்.

'கருங்கழிகிடந்த' என்பதுமுதல் 'நெஞ்சம்' என்பதுவரை.
(42—46 வரிகள்.)

(ப-ரை.) கரு கழி கிடந்த - பெரியகழி சூழ்ந்த, கானலங்கரை வாய் - கடற்கரையில், மெய் படு கடுஞ்சூள் - உண்மையாகச்சொல்லிய பெரிய சத்தியத்தை, மின் என துறந்தவர் - மின்னலைப்போல விரைவின் மறந்தவரது, சுவல் உளே - பிடரிமயிரினையுடைய, கவனம் - வீரைவுள்ள, புள் இயல் - புள்ளின்றன்மையையுடைய, கலி மான் - கனைக்கின்ற குதிரைபூண்ட, நோக்கம் மறைத்த-பார்க்கின்ற கண்களை மறைத்த, பரிதி கொள் நெடி தேர் - உருளை பூட்டிய பெரியதேரின், பின்னெடு சென்ற-பின்னுற்சென்ற, என் பெரும் பீழை நெஞ்சம் - எனது மிகுந்த துயருறுகின்ற மனம்.

(வி-ரை.) கரைவாய் என்பதில் வாய் ஏழனுருபு. கலித்தல் - ஒலித்தல், அது ஈண்டுக் கனைத்தலுக்காயிற்று. பரிதி - தேருருள்.

'சென்றுழிச்சென்றுழி' என்பதுமுதல் 'கடுத்தே' என்பதுவரை.
(47—52 வரிகள்.)

(ப-ரை.) சென்றுழி சென்றுழி - அத்தேர் சென்றவிடங்களெல்லாம், சேறலும் உளவோ - செல்லுதலுமுண்டோ, அ வினை பயனுழி - அவர் சென்றவினைமுற்றுமளவும், அருந்தவம் பெறுமோ - அரியதவத்தைச் செய்யுமோ, இடை வழி நீங்கி - நடுவழியில் அவரை விட்டு, என் எதிருறுங்கொல்லோ-எனக்கெதிராக வருமோ, அன்றி

யும் - அப்படியல்லது, நெடுநாள் அமைத்து - நெடுநாள் அவருடனிருத்து, உடன் வருமோ - அவர் வருங்காற் கூடவருமோ, யாது என - எதுவென்றும, மனம் - மனனே, கடுத்து - விரைய, நினைக்கிலன் - நினைக்கவல்லேனல்லன், பேதை கொள்ளாது - பேதைமைப்படாமல், ஒழி - நிற்பாயாக.

(வி-ரை.) ஒழி - இடம. கடுத்தல-வரைதல். அமைதல்-இருத்தல்.

முன்னவன் கூடல் வணங்காரென, கருங்கயற் கணத்தை செந்தாட் குருகினம் உண்ணும் கானலங் கரையாய் கடுஞ்சூள் மின்னெனத் துறந்தவர் பரிதிகொணெடுந்தேர் பின்னெறி சென்ற நெஞ்சம், சேறலுமுளவோ, அருந்தவம் பெறுமோ, இனிவழி நீங்கி எதிருறுங்கொல்லோ, அன்றியுடன்வருமோ, யாதென நினைக்கிலன், ஒழியென வினைமுடிவுசெயக. (அசு)

திருக்கோவையார் கருத்தும் செய்யுள்.

காப்புச்சிறைமிக்க கையறுகிளவி.

காப்புச்சிறைமிக்க கையறுகிளவி யெனப்படுவது — காமமிக்கு எதிர்ப்பட விரும்பாநின்ற தலைமகள், இவ்விடையீடில்லா நீங்கி ஒருவழியான் வந்தாராயினும் இஞ்ஞாளி குரைதாழா நின்றமையின் யாமிவரை யெதிர்ப்படுத லரிதெனக் காப்புச்சிறைமிக்கு வருந்தா நிற்றல். அதற்குச் செய்யுள்:—

இன்னற வார்பொழிற் றில்லை நகரிறை சீர்விழவிற்
பன்னிற மாலைத் தொகைபக லாம்பல் விளக்கிருளின்
மன்னற வுய்க்குமில் லோருந் துயிலிற் றுறைவர்மிக்க
கொன்னிற வேலொடு வந்திடின் ஞாளி குரைதருமே.

மெய்யுறு காவலிற்
கையறு கிளவி.

(பதவுரை.) இன் - இனிய, நறவு ஆர் - தேன்பொருந்திய, பொழில் - சோலைகள்சூழ்ந்த, தில்லை நகர் - தில்லை நகருக்கு, இறை - இறைவனுனவனது, சீர் விழவில்-சிறப்பினையுடைய விழவின்கண், பல் நிறம் - பலநிறங்களையுடையனவாய, மாலை தொகை - மாலைத் தொகைகளால், பகல் ஆம்-(இராப்பொழுதும்) பகற்பொழுதாகாநிற்கும், (அதுவேயுமன்றி) பல் விளக்கு - பலவாகிய விளக்குகள், இருளின் துன் அற-இருளின் செறிவொழிய, உய்க்கும் - துரக்கும், இல்

லோரும் துயில்ன - (இவ்விடை யீடேயன்றி ஒருபொழுதும் துயிலாத) இல்லோருந்துயில்வாயின், துறைவர்-துறைவரானவர், கொன்மிக்க-மிக்க அச்சத்தைச்செய்கிற, நிறம்-நிறத்தையுடைய, வேலொடு வந்திடின் - வேலோடு வருவாயின், ஞாளி - நாய்கள், குரைதரும் - குரையாநிற்கும் (அதனால் நான் அவரை யெதிர்ப்படுதல் அஞ்சுபோலும்), எ - று.

(வி-ரை.) மாலைத்தொகையும் இராப்பகலாகாநிற்கும், பல வினைக்கும் இருளைத்துணைக்குமென் றுரைப்பினு மமையும். இல்லோருந் துயிலினன்றதனால், அதுவுமே மாறிடையீடு கூறப்பட்டதாம். நிறவேலென் றியைப்பினு மமையும். மெய்ப்புலுகாவல் - பிழையாதபடி காவல்.

நரிசையாசிரியப்பா.

கடிவிரை யங்குரம் காட்டியுள ளழுக்கா
றெண்டி னைச்ச சாகைகொண் டிருண்மனம் பொதுளிக்
கொடுங்கொலை வடுத்துக் கடும்பழிச் சடையிலக்
திரண்டைஞ் ஞாறு திரண்டவக் காவதஞ்
சுற்றுடல் பெற்றுத் நுனைப்பநி ஞெமிர
மற்றது நீண்டு மனையுடற் போகி
யைம்பது நாறுட னகன்றுசூழ் மெழுக்கிப்
பெருங்களா வினர்தந் தலைகீழ்க் குலவிய
விடமாக் கொன்ற மெடுவேற் குளவன்
குன்றமர் வள்ளிபங் கொடியொடு துவக்கிப்
பன்னிரு கண்ணிழிந் தென்னினை துரக்கு
மநட்பரங் குன்ற மூடுத்தனி கூடம்
குறும்பிறை முடிந்த மெடுஞ்சடை யொருத்தினைத்
தெய்வந் தொள்ளார் கிதைய தென்னக
கிடந்தவல் லிரவிற் கிளர்மழை கான்ற
யெலு மும்பரு மடைக்குபன லொருவிற்
தேவருன் கல்லார் கிதையிற் புரண்ட
கவலையுங் காற்சூறி கண்டுபொழிற் புளரு
மிமையாச் சூரும் பல்கண் டொருங்காத
குடியிற நன்னிற் றுஞ்சாக் கண்ணினர்
கடியுடு துணைவிற் கையகன் றெறிமணித்

திருமகளிருள் செலவு முன்னிற் பரத்த
கிணைமுகப் பணர்மகற் கடிபாடைத் தேரை
வயிற்புண் ணுடங்க வயிரக்கிடை கடகுரு
முழாக்கியெய் கவரி முகவிலை ஞாளி
யகிரதிரைப் படாகை யிவற்றுக அதிர்வு கதநம்
பூமலர் வாரீர் படா பொருகநா ரெரிநக
னனைகவிழ் மேம்பகிய வருமைபெரு கவை
மாலியய கஞ்ச மேணியிய முலையர்
மயங்கா தேர்வா டரு நெயய் பரந்த
மூகங்கிழ் வேய்பயி லறுகுப் பிரிய
மாலை யரசர் படிகை
காப்பா ருருகத வீதிபொரு தருவே.

கதிவீனையகுரு-லீதியொதத்து வே. பாதி-இயற்குறி. துறை-காப்புநிறைவிக் கையடகளவி.

'கடிவினை' என்பதுமுதல் 'எண்டிசைகோண்டு' என்பதுவரை.
(1—2 வரிகள்.)

(ப-ரை) கடிவினை - நஞ்சுகலந்த மாவையாகிய, அங்குசம் காட்டி - முன் வைத்த சோற்றுவிதது, உள் அழுகுகாறு-எனுதது எண் அழுகுகாருகிய, சாலை - இலைகளை, ஒன்ற இசை செண்டு-எட்டுத்திகளும் பரப்பி

(வி-ரை) கடி நஞ்சு. உள்-ஆகுபெயர் அழுக்காறு-பொறாமை. கோடலை இங்குப பரப்புதல் எனனும் பொருள பயந்துநினறது.

இருண்மனம பொதுளி.
(2—வது வரி.)

'திரண்டைஞ்ஞாறு' எனபதுமுதல் 'சுற்றுடல்பெற்று' என்பதுவரை.
(4—5 வரிகள்.)

(ப-ரை) இருள் மனம-இருண்ட மனமாகிய தளிர்களை, பொதுளி - தளிரதது, சுற்றுடல் - மரத்தடியின் சுற்றளவானது, இரண்டு ஐஞ்ஞாறு திரண்ட அக்காவதம பெற்று - ஆயிரங் காததூரத் திரட்சியாகப் பெற்று.

(வி-ரை) பொதுளல் - தளிர்த்தல்.

'துணைபதிஞ்ஞாயிரம்' என்பதுமுதல் 'ஒழுகுக்' எனுமளவும்.
(5—7 வரிகள்.)

(ப-ரை.) மற்றது - அந்த மரமானது, துணைப்பதிஞ்ஞாயிரம் நீண்டு - இருபதிஞ்ஞாயிரம் காவததூரமுயர்ந்து, மணி உடல் போலி அழகிய வுடலானது சென்று, சுற்று-ஈற்றிலும், ஐம்பது தூறுடன் ஐயாயிரங் காததூரம், அகன்று ஒழுக்கி - அகன்று பரவி.

(வி-ரை.) மற்று-அசைநிலை. துணை-இரண்டு. துணைப்பதிஞ்ஞாயிரம் என்றமையால் இருபதிஞ்ஞாயிரமென் றுரைக்கலாயிற்று. அகன்று-விரிந்து.

கொடுங்கொலை வடித்துக் கடும்பழிச் சடையலைந்து.
(3—வது வரி.)

'பெருங்களவு' என்பதுமுதல் 'குளவன்' என்பதுவரை.
(8—9 வரிகள்.)

(ப-ரை.) பெருங்களவு - மிகுந்த வஞ்சகமாகிய, இணர் தந்த - பூங்கொத்துக்களைத் தந்து, கொடுங்கொலை - கொடிய கொலையாகிய பிஞ்சுகளை, வடித்து - அரும்பி, அவை - அக்கிளை முதலியவைகள், கீழ் குலவிய-கீழே பொருந்தியதாகி, கடும்பழி சடை அலைந்து - மிகுந்த பழியாகிய வேர்மேலே யலைந்ததாகிய, விடம் மா கொன்ற - விடத்தையொத்த மாமரத்தைத் தடிந்த, நெடி வேல் குளவன்-நெடிய வேலாயுதத்தையுடைய முருகக்கடவுள்.

(வி-ரை.) வடித்தல் - அரும்புதல். தடிதல் - வெட்டுதல், பிள்ளுதலுமாம்.

'குன்றமர்' என்பதுமுதல் 'கூடல்' என்பதுவரை.
(10—12 வரிகள்.)

(ப-ரை.) குன்று அமர் வள்ளி அம் கொடியொடு-குன்றினிடத்தமர்ந்திருந்த வள்ளிநாச்சியா ரென்னுங் கொடியுடனே, துவக்கி - கட்டுப்பட்டு, பன்னிரு கண் விழித்து - பன்னிரண்டு கண்களாலு நோக்கி, என் வினை தடக்கும்-எனதிருவினையையும் போக்காநின்ற, அருள் பரங்குன்றம்-அருளுக்கிடமாகிய திருப்பரங்குன்றத்தால், உடுத்தணி - சூழ்ந்தலங்கரிக்கப்பட்ட, கூடல் - மதுரையில்.

(வி-ரை.) துவக்கல்-கட்டுண்டல். இருவினை-நல்வினை தீவினை. அணிதல் - அலங்கரித்தல்.

'குறும்பிறை' என்பதுமுதல் 'சிந்தையதென்ன' என்பதுவரை.

(13—14 வரிகள்.)

(ப - ரை.) குறும்பிறை முடித்த - சிறிய பிறையைத்தரித்த, நெடுஞ்சடை - நெடிய சடையையுடைய, ஒருத்தனை - ஒப்பற்றவனை, தெய்வம் கொள்ளார் - தெய்வமென்று மதியாதார், சிந்தையது என்ன - மனம்போல.

(வி-ரை.) நெடுஞ்சடை யொருத்தன் என்றது சிவபெருமானை.

'கிடந்தவல்லிரவில்' என்பதுமுதல் 'புரண்ட' என்பதுவரை.

(15—17 வரிகள.)

(ப-ரை.) கிடந்த வல் இரவில் - இருண்ட பெரிய விராககாலத்தில், இளர் மழை கான்ற - நிறைந்த மழையைப்பொழிந்த, அயலுள் உமபரும் - மண்ணையும் விண்ணையும், அடக்கு புனல் - தனக்குள்ளடக்கிய புனலை, ஒருவி - கடந்து, தே அருள்-தெய்வத்தினருளை, கல்லார் - அறியாதவர்களது, சிந்தையில் - மனதைப்போல, புரண்ட - மாறுபட்ட.

(வி-ரை) கான்ற என்பதற்குப் பகுதிகால். உம்பர் எனமேலே வருதலால் அயல் மண்ணை யுணர்த்திற்று. ஒருவல் - கடத்தல்.

'கவலையும்' என்பதுமுதல் 'கையகன்று' என்பதுவரை.

(18—21 வரிகள்.)

(ப-ரை.) கவலையும் - கவர் வழியையும், கால் குறி கண்டு - காற்குறியாற் கண்டு, பொழில் தள்ளும் - சோலைகளில் கடமாடுகின்ற, இமையா சூரும் - கண்ணிமைத்தலில்லாத தெய்வங்களையும், பல் கண்டு - பலவாகக்கண்டு, ஒருங்கா - அடங்காத, திடியின் கண்ணில் - குறிஞ்சிப்பறையினோசையால், துஞ்சா கண்ணினர் - உறங்காத கண்ணையுடையவர்களது, கடியும்-காவலையும், துனைவில் - சீக்கிரத்தில், கையகன்று - நீங்கி.

(வி-ரை) துஞ்சல் - உறங்கல். துனிவு - விரைவு. கையகன்று - ஒருசொல்; பகுதி - கையகல்.

'எரிமணித்தோகை' என்பதுமுதல் 'அதிர்குரைப்படக்கி' என்பதுவரை.
(21—26 வரிகள்.)

(ப-ரை.) எரி மணி தொகை - ஒளிர்கின்ற மணிக்கூட்டங்கள், இருள் கொல்லும் - இருளை நீக்கும், முன்நில் பகுதி - வாய்தல் முன்பு, இணைமுகம் பறை - இருமுகங்களையுடைய பறை, அறை - அடிக்கும் கருவியாகிய, கடிப்பு உடை - குறுந்தடி போலுமுடைய, தோகை - வாலை, வயிற்றுள் அடக்கி - வயிற்றின் கண்ணடக்கி, வா கிடைகிடக்கும் - வளைந்து படிந்திருக்கும், முழுக்கி மெய் கவரும் - சரைதந்து தம்மெனை மயலாமெனை முண்ணை யறிகின்ற, கொலை முகம் ஞாளி - கொலைமுகத்தையுடையநாய், அதிர் குரைப்பு அடக்கி - குலைகின்ற வெலியை யடக்கி.

(வி-ரை.) அறைதல் - அடித்தல். கிடைகிடத்தல்-ஒருசொல். வளையென்னு முதனிலை வளைந்து எனப் பொருள்பட்டு நின்றது, "வளிப்புனை பதாகை" என்பதிற்போல. குரைப்பு - குரைத்தல். கவர்தல்-ரண்டைக்கேற்ப அறுத்தல் எனப் பொருடந்து நின்றது.

'இற்புறத்து' என்பதுமுதல் 'பெருந்தவறு' என்பதுவரை.
(26—28 வரிகள்.)

(ப-ரை.) இல் புறத்து - வீட்டின் பின்புறத்தே, அணைத்த - வந்த, நம பூ புனல் ஊனை - நறுமணமுடைய நீரால் சூழப்பட்ட ஊனையுடைய தலையை, பொருதா நெடு கண் - உறழ்கின்ற நெடிய கண்ணையுடைய அல்லியின் - நக்தாயினலே, போக்கிய - போயவிடச் செய்த, அரும்பெருந்தவறு - நீக்கற்கரிய பெரிய இடையூறுனது (என்போன்றிருந்த நினனினை).

(வி-ரை.) அன்னை பின் என்பதில் இன் என்னு மைத்தாவது மூன்றாவதன் கருவிப்பொருளில் வந்தது.

'மாலைக்கும்' என்பதுமுதல் 'வாய்மடுக்க' என்பதுவரை.
(29—30 வரிகள்.)

(ப-ரை.) மாலையும் - (தனித்த) மாலைகளும், கண்ணும் - இரு கண்களும், மேலையுடன் - பேச்சோடும், உள்ளமும் - மனமும், மயங்கா - வேறுபடாத, முலைவர் - பீச்சர்களாது, மருந்து - அமிர்தத்தை, வாய் மடுக்க - வாயாலுண்ணுதற்கு.

(வி-ரை.) மடுத்தல் - வேறுபடல்.

'முகங்கவிழ்வேலையில்' எனபது முதல் 'ஒத்தது' எனபது வரை.

(31—33 வரிகள்.)

• (உ-ரை.) முகம் கவிழ் வேலையில் - முகத்தைச் சாய்த்த சமயத்தில். அறம் குடிபோகிய - தருமதேவதை விட்டுக்குடிபோன, மாயவீல் மார்கர் - வஞ்சனையிலவல்ல அரக்கர்கள், தட்டி - தட்டி, காயகாய்ச்ச, பார் - பூமியினசை. உருத்த - சிதறுப்படிசெயத, விதி - முறையை, ஒத்தது - ஒத்திருக்கிறது.

(வி-ரை.) காப்தல் - உலர்தல், உருச்சல் - சிதறுதல். வேலை சமயர்; வேளையெனறும் வழங்கும். குடிபோதல் - முற்றும் விட்டொழிதல். தட்டல் - இடறல்.

விடமா கொன்ற நெடுவேற்குளவன் பன்னிருகண் விழித்து
என்வினை தூக்கு மருட்பரஞ்சுடர முடித்தளிகூடல் நெடுஞ்சடை
யொருத்தனைக் கொள்ளார் சிகதையதென்ன,வல்லிரவில், அயலுறும்
பரு மடக்குபுன லொருவி, கல்லார் சிகதையிற் புரண்ட கலலெயுங்
காற்குறிகண்டு, சுருமப்பலகண்டு, கடியுங சையகன்று, ஞாளியதிர்
குரைப்படக்கி, இற்புறத்தணைத்த மடபுனலாளைப் பொருததா நெடு
ஙகணன்னையில் போக்கிய அரும்பெருதவபு, த்தவர் மருத்துவாய
மடிக்க முகங்கவிழ்வேலையில் அரகர் தட்டியுருத்த விதியொத்த
தென வினைமுடிவுசெய்க. (அச)

திருக்கோவையார் உரை-ம் செய்புள்.

மணமுரசுகேட்டு மகிழ்த்துரைத்தல்.

மணமுரசுகேட்டு மகிழ்ந்துரைத்தலெனபது — தோழி தலை மகளுக்குத் தேர்வரவு கூறுகின்ற அதிலைமைக்கண் மணமுரசு கேட்டு, மனையிலுள்ளார், இம்மிதிவலை நோக்கி யொலியாகின்றது மணமுரசென வுட்கொண்டு, யாம் பூண பொற்குடத் தோரண முதலாயினவற்றுன் மனைபை யலஙகரிப்போமென மகிழ்வொடு கூறுகிற்றல். அசற்குச் செய்புள்:—

பூரண பொற்குடம் வைக்க மணிமுத்தம் பொன்பொதிந்த
தோரண நீடுக தூரிய மார்க்கதொன் மாலயற்குஞ்
காரண னோரணி கண்ணுத லோன்கடற் றில்லையன்ன
வாரண வும்முலே மன்றலென் றேயுரு மணமுரசே.

நிலங்காவலர் நீண்மணத்தி
னலங்கண்டவர் நயந்துரைத்தது.

(ப-ரை.) தொல் - பழையராகிய, மால் அயற்கும் - மாலுக்கும் அயனுக்கும், காரணன் - காரணனுள்ளவன், ஏர் அணி - அழகையுடைய, கண் - தாலோன் - நெற்றிக்கண்ணே யுடையவன், (அவனது) கடல் - கடலையடித்த, நில்லை அன்ன - நில்லையை நிகர்த்த, வார் அணவும் - வாரினால் கட்டப்படுமளவைசென் றணவுகின்ற, மூலை - தனங்களேயுடையாளது, மன்றல் எனறு - மணமென்று, மணமுரசு எங்கும் - மணமுரசு முழங்காகின்றது, (அதனால்) பூண பொற்குடம் வைக்க - (வரியில்கடோரும்) நீரால் நிறைக்கப்பட்ட பொற்குடங்களே வைக்க, மணி முத்தம் பொன் பொதிந்த - மணியு முத்தும் பொன்னின்கண் அழுத்திய, தோரணம் - தோரணங்கள, நீடுக - (எவ்விடத்தும) ஒங்குவனவாக, தூரியம் ஆர்க்க - வாத்தியங்கள் முழங்குவனவாக, எ-று.

(வி-ரை.) வாரணவுமூலை யென்பதற்கு வாரைப் பொருதமூலை யெனினுமமையும்.

நேரிசையாசிரியப்பா.

நாற்கடல் வளைத்த நானிலத் துயிரினை
யைந்தருக் கடவு ளவன்புலத் தினரை
நடந்துபுக் குண்டும் பறந்துபுக் கயின்று
முத்தொழிற் றேவரு முருங்கவுள் ளுறுத்து
நோன்றலைக் கொடுஞ்சூர்க் களவுயிர் நுகர்ந்த
கழல்வேற் குமரன் சால்பரங் குன்ற
மணியெறியும் பொன்னெடு மார்பணி யணைத்த
பெருந்திருக் கூட லருந்தவர் பெருமா
னிருசர ணகலா வொருமைய ருவமெனச்
சுடர்விளக் கெடுமின கோதைக ளேற்குமின்
பூவும பொரியுந் தூவுமி னெழுதுமின்
சுண்ணமுந் தாதுந் துணைத்துக றேற்றுமின்
கரும்பெயற் குளிறிற் களிமயி லென்னக்
கிளர்ந்தயர் வட்குமுன் கிளர்வினைச் சென்மோ
ருடலுயிர் தழைக்கு மருள்வர வுணர்த்த
முல்லையம் படர்கொடி நீக்கிப் பிடவச்

சொரியலர் தள்ளித் துளர்ப்பொலம் கடிக்கைக
கிடைகர வொருஞிக் களவலர் கிடத்திப்
பூவையம் புதுமலர் போக்கியக் கடுத்த
கழுவிய திருமணி கால்பெற் றென்ன
நற்பெருந் தூது காட்டு
மற்புதக் கோபத் திருவர வதற்கே.

நாற்கடல்வளைத்த - திருவரவதற்கே. பாதி - வரைபொருட் பிரிதல். நுங்கை - மணமுரசுகேட்டு மகிழ்ந்துரைத்தல்.

'நாற்கடல்' என்பதுமுதல் 'புலத்தினரை' என்பதுவரை.
(1—2 வரிகள்.)

(பதவுரை.) நால் கடல் வளைத்த - நான்குதிசைக்கடலும் தம்முடைக்கிய, நால் நிலத்து உயிரினோ-நான்கு நிலத்திலுமுள்ள வுயிரையும், ஐந்தருக்கடவுள் - இந்திரனையும், அவன் புலத்தினரை - அவனது நிலத்திலுள்ள தேவரையும்.

(விளக்கவுரை.) நான்கு நிலமாவன - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன. நிலைமைத்தாயினும் பாலைக்கு நிலமின்மையின் அதனையொழித்து 'கானிலம்' என்றார்.

'நடந்துபுக்குண்டும்' என்பதுமுதல் 'உள்ளுறுத்தும்' என்பதுவரை.
(3—4 வரிகள்.)

(பதவுரை.) நடந்துபுக்கு உண்டும்-நடந்துபோயழித்தும், பறந்துபுக்கு அயின்றும் - பறந்துபோயுண்டும், முத்தொழில் தேவரும் - மூத்தொழிலையுடைய தேவர்களும், மூருங்க உள்ளுறுத்தும் - உளநடுங்கச்செய்யும்.

(விளக்கவுரை.) அயின்று என்பதற்குப் பருகி அயில். முத்தொழிற் றேவர் என்றது படைத்தல் காத்தல் அழித்தல் என்னு மூன்று தொழில்களையுடைய பிரமன் விட்டுணு உருத்திரன் என்பவர்களை.

'நோன்றலை' என்பதுமுதல் 'குமரன்' என்பதுவரை.
(5—6 வரிகள்.)

(பதவுரை.) நோன்றலை - வலியதலையையுடைய, கொடுஞ்சூர் - கொடியசூரனது, களவு உயிர் துகர்ந்த - கள்ளத்தனமையதாகிய வுயிரையுண்ட, தழல் வேல் குமரன் - அழலுகின்ற வேலையுடைய குமரக்கடவுள்.

(வி-ரை.) மீனாளை - வினைமை தழுவியவை - வினைத்தொகை நிலைத்தொடர். சூர ஆருயிர் - துகர்தல் - உண்டல்.

'சால்' என்பதுமுதல் 'அணைத்த' என்பதுவரை.

(6—7 வரிகள.)

(ப-ரை.) சால் - நிறைந்துள்ள; பரவுகுன்றம்-திருப்பரங்குன்றத்தை, மணியும் - மாணிக்கமும்; பொன்னும் - பொன்னையும், மார்பு அணி - மகாமணிப் பதக்கமாக, அணைத்தது.

(வி-ரை.) உயர்வு யிரண்டும் எண்ணும்மைகள். மார்பு அணி - மார்பில் தரித்தற்குரிய ஆபரணம், அதனை மகாமணிப்பதக்கம என வழங்குப.

'பெருந்திருக்கூடல்' என்பதுமுதல் 'உளமென' என்பதுவரை.

(8—9 வரிகள.)

(ப-ரை.) பெருந்திருக்கூடல்-பெரிய வளப்பமுள்ள கூடலில், அருந்தவர் பெருமான் - அரியதவர்களது பெருமான், இரு சரண் அகலா-இரண்டு திருவடிகளையும் விட்டு நீங்காத, ஒருமையர் உளம் என - ஒருமைப்பாட்டினை யுடையவர்களது உள்ளத்தைப்போல.

(வி-ரை.) பெருந்திருக்கூட லருந்தவர் பெருமான் என்றது சிவபிரானை. ஒருமையரை வகாக்கிரித்தர் எனபர் வடநூலார்.

'சரும்பெயர்குளிரின்' என்பதுமுதல் 'அருள்வரவு' என்பதுவரை.

(13—15 வரிகள.)

(ப-ரை.) கரும்பெயல் குளிரின் - கரியமழை பெய்தலினாலெழு மினலே, களி மயில் என்ன-களிக்கின்ற மயிலைப்போல, இளர் வினை சென்றோர் - மேலான வினையின்கட் சென்ற தலைவரது, உடல் உயிர் தழைக்கும் அருள் வரவு - உடலுமுயிரும் தழைத்தற்குக் காரணமான திருவையுள்ள வரவை, இளைந்து அயர்வாட்கு-மிகுதியாகத் தளர்கின்ற தலைவிக்கு.

(வி-ரை.) குளிர் - ஒலி. களிமயில் - வினைத்தொகை நிலைத்தொடர். இளர்தல் - மிகுதல்.

'மூன, உணர்த்த, முல்லையங்கே ழி.' என்பதுமுதல் 'ஏ நவி' என்பதுவரை.
(11, 15, 16—18 வரிகள்.)

(ப-ரை) முன் - எதிராகவந்து, உணர்ச்சத-அறிவிக்க, முல்லை அம படர் கொழு-அழகாகப் படர்கின்ற மூலிலைக் கொடிகளே, நீங்கி-போகி, பிடவ சொரி அலர் - பிடவத்தினது மிகுதியாகச் சொரிகின்ற மலர்களோ, தள்ளி-விலகி, தூணர்-பூங்கொத்துக்களையுடைய, பொலம் கதிகை - பொற்கொன்றையானது, கிடதவு - இருக்கும் இடத்தை, ஒருவி - நீங்கி.

(வி-ரை.) பிடவம் - ஓர்செடி. பொலம் - பொன. கிடைதாவு-ஆருபெயர்.

'களவலர்' என்பதுமுதல் 'கால்பேற்றென்ன' என்பதுவரை.
(18—20 வரிகள.)

அற்புதக் கோபத் திருவரவு.
(22—வது வரி.)

(ப-ரை.) களவு அலர் - களாவினதலரை, கிடதவி - உதிர்த்து, பூவை அம புது மலர்-காயாவினது புதியமலரை, போகி போகி, அடக்கு அடித்த - அடக்கிலாட்டி, கழுவிய திரு மணி-சாணைதீர்ந்த அழகிய மாணிக்கம், கால் பெற்று என்ன - கால்பெற்று வந்தாற் போல, அற்புதக்கோபம் திரு வரவு-அற்புதமான இந்திரகோபத்தினல்ல வரவானது.

(வி-ரை.) களவலர் - களாமலர் எழுவல் - சாணைதீர்தல். இந்திரகோபம் - ஓர்பூச்சி, இதனை ஈயல் என்றும் மூதா எனறும் கூறுப (பட்டிப்பூச்சி). அற்புதம - ஆசசரியம.

அதற்கு, நற்பெருந் தூது காட்டிமம.
(21—22 வரிகள்.)

'சுடர்விளக்கேமின்' என்பதுமுதல் 'தூற்றுமின்'
என்பதுவரை.
(10—12 வரிகள்.)

(ப-ரை.) அதற்கு - அவ்வருள் வரவிற்கு, நல் பெருந்தூது - மிகவு நன்மையான தூது, காட்டும் - காட்டாநிற்கும் (ஆதலால), சுடர் விளக்கு எடுமின் - மாணிக்க விளக்க மேந்துவீராக, கோதை

கள் தூக்குமின் - மலர்மாலைகளே நாற்றுவீராக, பூவும் பொரியும் - மலரும் பொரியும், தூவுமின் - தூவுவீராக, எழுதுமின் - தரைமெழுகிக் கோலமிடுவீராக, சுண்ணமும் தாதும் - வாசனைச் சுண்ணமும் மலர்த்தாதுகளுமாகிய, தினைத்துகள் - இருவகைப் பொடிகளையும், தூற்றுமின் - இறைப்பீராக.

(வி-ரை) நன்மை - மிகுதிப்பொருளில் வந்தது. சுடர் - ஆகுபெயர். நாற்றுதல் - தொங்கவிடுதல்; தன்வினையில் நரலல் என் வரும். தூவல் - இறைத்தல். தினை - இரண்டு.

கூடலருந்தவர் பெருமான் இருசரணகமல ஒழுமைய ருளமெனக் கினர்வினைச் சென்றேர் வாலை, அயர்வாட்கு முன்னுணர்த்தி, அரக்கடுத்த கழுவிய திருமணி கால்பெற்றென்ன, அற்புதக்கோப நற்பெருந்தூது காட்டிர், ஆதலால், விளக்கெடுமின், கோதைகள் தூக்குமின், பூவும் பொரியுந் தூவுமின், எழுதுமின், தூற்றுமின் என விணைமுடிவு செய்க. (அடி)

திருக்கோவையார் கூகை-கம் செய்யுள்.

வாய்மொழிகூறித் தலைமகள் வருந்தல்.

வாய்மொழிகூறித் தலைமகள்வருந்துலென்பது — கலக்கங் கண்டுரைத்த தோழிக்கு, முன்னிலைப் புறமொழியாக நின்னிற் பிரியேன் பிரிவுமாற்றேனென்று சொன்னவர் தலைமைபிரிவாராயின், இதற்கு நாஞ்சொல்லுவ தென்னேவெனத் தலைமகனது வாய்மொழி கூறித் தலைமகள் வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

பிரியா மையுமுயி ரொன்றுவ தும்பிரி யிற்பெரிதுக்
தரியாமை யுமொருங் கேகின்று சாற்றினர் தையன்மெய்யிற்
பிரியாமை செய்துகின் றேன்றில்லைப் பேரிய லூரான்ன
புரியா மையுமிது வேயினி யெண்ணற் புகல்வதுவே.

தீதறுகல்விக்குச் செல்வன்செல்லுமெனப்
போதுறுகுழலி புலம்பியது.

(பதவுரை.) தையல் - உமாதேவியை, மெய்யின்-தன் திருமேனியினின்றும், பிரியாமை செய்து கின்றேன் - பிரியாதிருக்கச்செய்து நின்றவனது, தில்லை - திருத்தில்லையாகிய, பேர் இயல் ஊர்-பெருவளத்தையுடைய ஊரானவர், பிரியாமையும் - என்னேவிட்டுப் பிரியாமையையும், உயிர் ஒன்று ஆவதும்-எம்மிருவர்க்கும் உயிரொன்றுமிருத்தலையும், பிரியின் - பிரிந்தால், பெரிதும் தரியாமையும்-மிகுதியாய்த் தரித்திராமையையும், ஒருங்கே நின்று சாற்றினர் - ஒருங்கே

நின்று சொல்லினர், இதுவே - இச்சொல்லுதலே, அனை புரியா மையும் - அவற்றைச் செய்யாமையுமாகும்போலும், இனி நாம புரல் வது என் - இனி யாம் சொல்லக்கிடந்தது யாது, எ - று.

(வி-ரை) தையன் மெய்யிற் பிரியாத போன்பிணைதது நில் லேக்கட் பயின்றும் அன்பு பேணுது பிரிதல் எங்ஙனம வலலாயிஞ ரென்னுங கருத்தால, 'பிரியாமை செய்தின் றேன்றில்லை பரிய லூசர்' என்றார். பிரிவு காணப்பட்டமையின், அன்னவென்றது ஒழி நத விரண்டுமேயாம். அன்னபுரியாமையு மிதுவே யென்பதற்குப் பிரிவு முதலாகிய நடக்கின்றவறறைத் தாம் செய்யாமையு மிது வேயா மிருந்தெனினு மமையும் இன்னல் புரியாமையு மிதுவை யெனறு பாடமோதுவாருமுளர.

நேரிசையாசிரியப்பா.

பழுதறு தெய்வங் காட்டப் பண்டையி
னுழுவ னலத்தா லோருயி ரென்னுங்
கடுஞ்சூ டடங்குங் கைபுனை புனைந்தும்
பூழியம போனகம் பொதுவுட னுண்டுங்
5 சூழமகக் குறித்துச் சிலமொழி கொடுத்துங்
கையுறை சுமந்துங் கடிதத்தழை தாங்கியு
மூயிரிற் றளர விரங்கியு முணகியும்
பினையுங் கிழியும் படைக்குவ னென்று
மிறடியஞ் சேவற் கெறிகவன் கூட்டியும்
10 புனமுமெம் முயிரும் படர்கரி தடிந்து
மழுங்குறு புனலெடுத் தகிற்புகை பூட்டியு
மொளிர்மணி பூசல் பரியவிட் டியர்த்து
மிரவினிற் றங்க வெளிவர விரந்து
மிருவியம புனத்திடை யெரியுயிர்ப் பெறிந்தும்
15 தெரிந்தலர் கொய்தும் பொழிற்குறி வினவியு
முடலொடும பிணைந்தகை யாய்துயி லொற்றிச்
செறியிருட் குழம்பகஞ் சென்றுபளிங் கெடுத்த
விற்பொழிற் கிடைக்கு மளவுகின் றுலைந்தும்
பன்னுட் பன்னெறி யழுங்கின நின்று
20 மூகவீனந்து முணர்த்த முழவ துவைக்க

வொருதாற் றாகி நிலைய மொளிர்வித்து
மூவுட லிணைதலு முகத்தொ டோமுகத்
தென்னடி ப்பு விளித்த கல்லல் செறிய
விருட்குற றான்றியெம் மருட்களி யாற்றி
யூழுளாய்க் கொக்கரை யும்பர்ஞட் டொலிக்கக்
கரங்கால் காட்டித் தலைய மியக்கி
யிதழளிழ்ந் தாமரை யெனுநகு ணித்துங்
துவைப்பகின் றமைகரத் துக்கவைகு டோற்றிக்
கரிகரா லன்ன மொருதலைத் திரங்கத்
துடிகொ றிந திரைப்பத் துளைபரப பி
வள்ளம் பிணைத்தசெங் கரடிகை மல்க
வெளியக லேந்திவெம் புபங்கமிசை யாக்கி
யெரிதவிர்த் தன்ன வேணியிற் குழவிப்
பசுமதிசை யுழுதொடு நிரம்பிய தென்ன
மதுக்குவி மத்தழு விலைதொரு மறுபிறை
மார்பழு விருதிப தென்னக் கூளபுறத்
தேனைக் கோல்வெண் பொடிபபுலத் தொளிரச்
பொலன்பிளிர் மன்றப பொதுவக நாடக
தனிக்கொடி தாணவெவ் வீடதுயிர் தழைபப
வாடிய பெருமா னமர்நறுதை கூடல்
கனிலுமு வினவா கவரிணு நீங்கச்
சூளும் வாய்மையும் தோறறி
வீளவும பொய்த்தற் கவர்மனங் கரியே.

பழுதறுதெய்வம் - அவர் மனையகளியே. பதுகி - ஒதற்பிரிவு. தூறை - வாய்மொழிகூறித் தலைமகள் வருத்தல்.

'பழுதறுதெய்வம்' என்பது முதல் 'ஓருயிரேன்றும்'
என்பதுவரை.

(1—2 வரிகள்)

(ப-ரை.) பழுதறு அறு தெய்வம் - குற்றமற்ற ஊழானது, காட்ட - கூட்டுவித்ததால், பண்டையின் - முன்னுளில், உழுவல் - நலத்தால் - எழுமையுந் தொடர்ந்த அன்போடு, ஓருயிர் என்றும்-நம் மிருவர்க்கு முயிரொன்றென்றும்.

(வி-ரை.) தெயவம-ஈண்டைகதேறப ஊழ்கதாயிறது.

'கஞ்சூடந்தும்' என்பதுமுதல் 'சிலமோழிகோடித்தும்
எனபதுவரை.

(3—5 வரிகள்)

(ப-ரை) கடிஞருள தந்தும - அநுமைபான சூளுரைதந்தும, கை புனை புனைதந்த - கையாலணிடலணிதந்தும, பூழி அம போள கம - வண்டேறுசோறநினை பொதுபுடன உணடும - ஆபதகோ டிருதருதியும, ஏழ மகதருதிதது - வண்டறடாவையாகிய இரமவை பாடடி, சில மொழி கோடித்தும சில வாசகதை பயிறறினீர

(வி-ரை) சூள - சபதம, இதனை வருளின மனைமம கூறுட புனை - அணகலன (ஆபரணம. பூழி - புழுதி அஃ இஙகு வணட லுகாயிறது. போளகம - சோறு பொது : ஆயம இளமக - இளவ குழவி

'கையுறைசுமந்தும்' எனபதுமுதல 'படைகுவனேன்மம்'
எனபதுவரை.

(6—9 வரிகள.)

(ப-ரை) கையுறை சுமந்தும - கையுறைதநதும, கடி சுளை தாஙகியும மணதை தையுடைய தழையை யேநதியும, உயிரின தளர - உயிரோடு தளருபடி, இரஙகியும - வருநதியும, உணவகியும - வாடி யும, பணையும - பணைமடலாற குதிரையும, கிழியும - நுவியபபடமும: படைகுவனா எனபதும - படைபபேனனறும.

(வி-ரை) கடி - மணம பனை - ஆதபெயா. கிழி-எழுதுபடம. இரஙகல - வருநதல உணஙகல - வாடல.

'இறடியருசேவற்கு' எனபதுமுதல 'அகிறபசையூட்டியும்'
எனபதுவரை.

(9—11 வரிகள.)

(ப-ரை) இறடி அம சேவறகு - தினைசாவறகு, எறி கவண கூடடியும - எறிதறகுக கவண டடிக கொடிதது, புனமும-தினைப் புனதது மடலும, எம உயிரும - எமமுயிரினமேலும, படா கரி தடித்தும - வஸ்தயானையைக கொனறும, அழுஙகுபு புனல எதிது-டான முகுய பலனினறும மேலெதிதறும, அகில புனை டடி யும - (சுளாயடையைக்கடாப) ஏறிபுனைக கொடிதறக

(வி-ரை.) இறடி - தினை. அம் - சாரியை. சேவல் - காவல். கவண் - ஒடி. தடிதல் - கொல்லல். புனல் - நீர்.

'ஒளிர்மணியூசல்' என்பதுமுதல் 'எரியுயிர்ப்பெறிந்தும்' என்பதுவரை
(12—14 வரிகள்.)

(ப-ரை.) ஒளிர் மணி ஊசல் - மணிகள் விளங்காநின்ற ஊசல் வடமானது, பரிய - அற்றபோது, இட்டு - கயிறிட்டு, உயர்த்தும் - ஆட்டியும், இரவினில் தங்க-இரவிலெல்லைமிடத்துத்தங்க, எளிவர இரக்கும் - எளியையாக யாசித்தும், இருவி அம் புனத்தினை - அறுத்த தினைப்புனத்தின்கண், எரியுயிர்ப்பெறிந்தும் - என்னைக் காணுமையால் பெருமூச்செவிட்டும்.

(வி-ரை.) பரிதல் - அறுதல். உயர்த்தல்-ஆட்டல். இரத்தல்-யாசித்தல். இருவி - கதிர் கொய்த தினைத்தட்டை; இது, "பரிவு செய்தாண்டு" என்னு முதற்குறிப்பினையுடைய திருக்கோவைச் செய்யுளுரையா லினிதுவிளங்கும்.

'தெரிந்தலர்' என்பதுமுதல் 'அழுங்கினரின்று' என்பதுவரை.
(15—19 வரிகள.)

(ப-ரை.) அலர் தெரிந்து கொய்தும் - மலர்களே யாராய்ந்து பறித்துக்கொடுத்தும், பொழில் குறி வினவியும் - தங்கும் பொழிலுக்கு அடையாளங்கேட்டும், உடலொடும் பிணைந்த கை-தன்னுடலோடு மணைத்த கையையுடைய, ஐய் துயில் ஒற்றி-தாயினது துயில் சோதித்து (நீங்கி), செறி இருள் குழம்பகம் - குழம்பாகச் செறிந்த விருளாகிய நள்ளிரவில், சென்று-வந்த, பளிங்கு எடுத்த இல்-பளிக்குப்பாறையாலியற்றிய இல்லிலிருந்தும், பொழில்-அக்குறித்த பொழிலினிடத்தே, இடைக்கும் அளவும் - (நான் வந்து) சேருமளவும், நின்று உலைத்தும் - ஓபாமலச்சதத்தால் வருத்தியும், பல் நாள் - பலநாளாக, பன்னெறி - இவ்வாறு பலவகைப்பட, அழுங்கினர்-வருந்தினதலைவர், இன்று - இப்பொழுது.

(வி-ரை.) தெரிதல் - ஆராய்தல். பிணைதல் - அணைத்தல். ஒற்றல் - சோதித்தல். பளிங்கு - படிகம். அழுங்கல் - வருந்தல்.

'முகனேந்து' என்பதுமுதல் 'கல்லல்செறிய' என்பதுவரை.
(20—23 வரிகள்.)

(ப-ரை.) முகனேந்து மணத்த - ஐந்துமுகம் பொருந்திய, முழவம் துவைக்க - முழவமென்னும் வாச்சியமொலிக்க, ஒருகால்தூக்கி-

ஒருகாலேத்தாக்கி, நிலயம் ஒளிர்வித்து-கூத்திணைத் தோற்றுவித்து, மூவுடல் அணைத்த - மூன்றுடல் பொருந்திய, மும்முகத்து-மூன்று முகத்துள், ஒரோமுகத்து - ஒவ்வோர் முகத்தில், எண் கடிப்பு விசித்த - எட்டுக்கடிப்பால் விசிதத, கல்லல் செறிய - கல்லலென்னும் வாச்சியமுழங்க.

(வி-ரை.) துவைத்தல் - ஒலித்தல். விசித்தல் - கட்டல், இறுக்குதலுமாம்.

'இருட்குறுஞரந்தி' என்பதுமுதல் 'துவைப்ப'

என்பதுவரை.

(24—28 வரிகள்.)

(ப-ரை.) இருள் குறும் ஊன்றி - கருமைபாகிய பூதங்கள் கீழேகாட்டி, எம் அருள் கனி ஆற்றி - எமக்கருளால் மகிழ்ச்சியுண்டாக்கி, உருள் வாய் - உருட்சியாகிய முகத்தையுடைய, கொக்கரை - வலம்புரிச சங்கத்தை, உம்பர் காட்டு - தேவர்காடளவு மூடிருவு மாறு, ஒலிக்க - போய்ச்சத்திக்க, கரம் கால் காட்டி - கையையுங்காலே யுங்காட்டி, தலேயம் இயக்கி - தலேயமென்னுங்கூத்தைத் தோற்றுவித்து, இதழ் அலிழ் தாமரை என்னும் - இதழ்விரிந்த தாமரைமலரையொத்த, தகுணித்தம் துவைப்ப - தகுணித்தமென்னும் வாச்சிய மொலிக்க.

(வி-ரை.) ஆற்றல் - உண்டாக்கல். கொக்கரை - வலம்புரிச் சங்கினேர் பேதம். உம்பர் - ஆகுபெயர். இயக்கல் - தோற்றுவித்தல்.

'நின்றமைகரத்து' என்பதுமுதல் 'வெம்புயங்கமிசையாக்கி'

என்பதுவரை.

(28—32 வரிகள்.

(ப-ரை.) நின்று அமை காத்து - நிலேபெற்றமைந்த கையால் கலைகள் தோற்றி - கிளைக்கின்ற வொலிகளே யெழுப்பி, கரி கால் அன்ன - யானைக்காலேயொத்த, மொந்தை - மொந்தையென்னும் வாச்சியம், கலித்து இரங்க - மிகுந்தொலிக்க, துடி எறிந்து இசைப்ப - நிறபம்பையென்னும் வாச்சிய மெழுந்தொலிக்க, துகளம் பரப்பி - நுட்பமான வொலிகளே யெழுப்பி, வள்ளம் பிணைத்த - மரக்கால் கட்டிய, செம் காடிகை மல்க - செவ்விய காடிகையென்னும்

வாச்சியத்தினெலி யதிகரிப்ப, எரியகல் ஏத்தி - மழுவேந்தி, வெம் புயங்கம் மிசை ஆக்கி - வெவ்விய பாம்பணியை மேலேதரித்து.

(வி-மை.) கலித்தல் - மிகுதல். துகள் - தூளி; அது இங்கு நுண்மை குறித்துநின்றது. மல்கல் - அதிகரித்தல். எரி அகல் - எரியாகின்ற அகல் (மழு). புயங்கம்-புஜங்கம் என்னும் வடசொற்றிரிபு. நஞ்சுடைமையால் 'வெம்புயங்கம்' என்றார்.

'எரிதளிர்த்தன்ன' என்பதுமுதல் 'ஒளிர' என்பதுவரை.

(33—37 வரிகள்.)

(ப-மை.) எரி தளிர்த்தன்ன - நெருப்புத் தளிர்த்தாலொத்த, வேணியில் - சடையில், குழவி பசும்பிறை - இளம்பிறையின், அமு தொடு - அமிர்தத்துடனே, நிரம்பியது என்ன - நிரம்பியிருந்தாற் போல, மது குளிர் மத்தமும் - மதுவாற் குளிர்ந்த மத்தம்பூவையும், மிலேத்து - தரித்து, ஒரு மறுபிறை - வேறொரு பிறையை, மார்ப மும் - மார்பினிடத்தும, இருத்தியது என்ன - வைத்தாற்போல, கூன் புறத்து - வளைந்த முதுகையுடைய, எனம் கோடு - வராகக் கொம்பும், வெள் பொடி புறத்து - வெள்ளிய திருநீற்றுப் பொடியா னது திருமேனியில், ஒளிர - ஒளிசெய்ய.

(வி-மை.) எரி-ஆருபெயர். தளிர்த்தாலன்ன லென்பது தளிர்த் தன்னவென விகாரமாயிற்று. இறைவன் சடை சிவந்திருத்தல்பற்றி 'எரிதளிர்த்தன்னவேணி' என்றார். "தென்னெருக்குஞ் சோலைக்கம லப்பிரான் செஞ்சடாடவிதான், என்னெருக்கு மென்னி லெரியொக் கும்" என்றும், "அந்தியேபோலு மவிர்சடையான்" என்றும் பிறருங் கூறுதல் காண்க. மிலேத்தல் - தரித்தல். புறம் - முதுகு. எனம் - பன்றி.

'பொலன்மிளிர்' என்பதுமுதல் 'வினவாதவரினும்' என்பதுவரை.

(38—41 வரிகள்.)

(ப-மை.) பொலன் மிளிர் - பொன்மயமாக வினங்காகின்ற, மன்றப்பொதுவகம் - மன்றமாகிய சபையினிடத்து, நடி - திருவுள ங்கொண்டு, தனி கொடி காண - ஒப்பற்ற பார்வதியார் தரிசிக்க, எவ்விடத்து - எந்தவிடத்தினுமுள்ள, உயிர் தழைப்ப - உயிர்கள் பெருக, ஆடிய பெருமான் - ஆடியகடவுள், அமர்ந்து - வீற்றிருந்து, நிறை கூடல் - எங்கு நிறைந்திருக்கின்ற மதுரைப்பதியை, கண

வினும் - சொப்பனத்திலும், வினவாதவரினும்-கேட்டறியாதவரைப் பார்க்கிலும்.

(வி-ரை.) பொலன் - பொன். மிளிர்தல் - விளங்கல். கொடி - ஆகுபெயர்.

'நீங்கி' என்பதுமுதல 'அவர்மனங்கரியே' என்பதுவரை.

(41—43 வரிகள்.)

(ப-ரை) நீஙகி - (அன்பு சிறிதுமின்றி) நீங்கி, சூளும் வாய்மையும் - சத்தியத்தையும் இனிய வாய்மொழியையும், தோற்றி சொல்லி வெளிக்குக்காட்டி, நீளவும் - பெரும்பாலும், பொய்த்தற்கே உள்ளே வஞ்சித்தற்கு, அவர் மனம் - அவர் மனமோன்றே, கரி சாட்சியாகுமல்லவோ.

(வி-ரை.) நீட்சி இங்குப் பெரும்பான்மை குறித்தது.

பொழில் கிடைக்குமனவும் பன்னுள் பன்னெறி யழுங்கினர், இன்று எவ்விடத் துயிர்தழைப்ப ஆடியபெருமான் கூடல் கீனவி னும் வினவாதவரினும் நீஙகிச் சூளும் வாய்மையும் தோற்றி நீளவும் பொய்த்தற்கு அவர்மனங் கரியென வினைமுடிவுசெய்க. (அசு)

திருக்கோவையார் ஈஎசு-ம் செய்யுள்,

தோழியிற்பழித்தல்.

தோழியிற்பழித்தலென்பது—பாணன் வாவுரைத்த தோழு, இவள் வருந்த அயலாரிடத்து நல்குதலால் எம்முடைய வள்ளல் இன்று தக்கிருந்திலனெனத் தலைமகளை யிற்பழித்துக் கூறு நிற்றல். அதற்குச் செய்யுள்:—

திக்கினி லங்குதிண் டோளிறை நில்லேச்சிற் றம்பலத்துக்
கொக்கி னிறகத ணிந்தநின் முடிதென் கூடலன்ன
வகனனை கையவ ணேயவ யல்வயி னல்குதலாற்
றக்கின் றிருந்தில னின்றசெவ் வேலெந் தனிவள்ளலே.

தலைமகனைத் தகவிலனெனச்
சிலைதுதற்பாங்கி நீங்குசெப்பியது.

(ப-ரை.) திக்கின் இலங்கு - திக்குகளிற்சென்று விளங்குகிற, திண் தோள் - திண்ணியதோள்களையுடைய, இறை - இறைவன், நில்லேச்சிற்றம்பலத்து - நில்லேச் சிற்றம்பலத்தில், கொக்கின்

இறகு - கொக்கிறகை, அணிந்து நின்று ஆடி - தரித்து நின்று ஆடு வோன், (அவனது) தென்கூடல் அன்ன-தென்மதுரையை நிகர்த்த, அக்கு - அக்குமணிபோலும், இன் நகை - இனிய நகையையுடைய, இவள் நைய - இவள்வருந்த, அயல் வயின்-அயலாரிடத்து, நல்குதலால் - அருள்செய்தலால், நின்ற - யாவராலு மறியப்பட்டுநின்ற, செவ்வேல் - செவ்வேலேந்திய, எம் தனி வள்ளல் - எமது ஒப்பற்ற வள்ளலானவன், இன்று தக்கு இருந்திலன் - இன்று தகவுடையனல்லன், எ-று.

(வி-ரை.) அயல் வயின் என்பதற்குப் பொருணசை யுள்ளத்தாகலிற் காமத்திற் கயலென்றுரைப்பினு மமையும்.

நேரிசையாசிரியப்பா.

பரசடைக் கருங்கழி படர்மண லுலகமு
மெழுமலே பொடித்தவர்க் கிசைதல் வேண்டி
வரையுல கீனத்தும் வருவது போலத்
திரைநிரை திரைத்துக் கரைகரைக் கொல்லும்
வையைநீர் விழவு புகுந்தன மெனவொரு
பொய்யின ளன்றி மெய்யினீ யும்
பொலம்பூண் பெயர்ந்துறை பூணை யருடரு
குளிர்ச்சி நீங்கிக் கொடுங்கோல் வேந்தெனச்
சேக்கொள் கண்ணை செம்மொழி பெயர்தந்
தொன்றுட னில்லா மொழியை மறுத்த
முதிரா நாட்செய் முண்டக மலர்ந்து
கவிழ்ந்த முகத்தையெக் கண்மனந் தோன்ற
வரும்பிய நகையை யன்றே நின்கே
ழென்கண் கண்ட விவ்விடை யென்னுள
மன்னிநின் றடங்காக் குடுமியம் பெருந்தழல்
பசுங்கடல் வீழ்ந்து பருகக் கொதித்த
தோற்றமுங் கடந்ததென் றலாற் றல்செய்
விண்ணகம் புடைத்து நெடுவரை கரக்குங்
கொடுஞ்சூர் கொன்ற கூரிய நெடுவேற்
குன்றக் குறவர் கொம்பினுக் கினியன்

குருகொலி யோவாப பணிமலே வாவி
வயிறுவாய்த் தழுகு குமுகியங் கிழவோன்
வாழ்பரங் குன்றெனு மணியலி பூண்ட
நான்மறை புகழுங் கூடலம் பெருமான்
வான்முக வீன்ற மலைமக டன்னெடு
முழுதுணர் ஞான மெல்லா முடைமை
முழுதனுக் கிரகங் கொழுப மகாதி
பாசமி லாமை மாசறு நிட்கள
மலிகா ரகருறி யாகிய தன்குண
மெட்டுத் தரித்து விட்டறு குற்ற
மருச்சனை வனைக்கம் பரவுயிர்க் கன்பகம்
பேரருட் டிருநூல் பெருகுதற வெங்கு
நிறைபொரு ளழுத்த லருளினைக் கூட்ட
பிருட்பவ நடுங்க லெனுங்குண மெட்டுக்
கமக்கும் படைக்க விதிபேற் றடியவர்
நிலையருட் கற்பென நெடுங்கற் புடையோண்
முன்னுறின் வண்மன மாங்கே
நன்னரிற் கொண்டு குளிரும் பெறுமே.

பாசடைக்கருங்கழி - குளிரும்பெறுமே. **பதுதி** - பரத்தையிற் பிரிவு. **துறை** - தோழியிற்பழித்தல்.

'பாசடை' என்பதுமுதல் **'இசைதல்வேண்டி'** என்பதுவரை (1—2 வரிகள்.)

(ப-ரை.) பாசடை - பாசிலையால் மூடிதலுள்ள, கருங்கழி பெருங்கடலானது, படர் - பரந்துள்ள, மணல் உலகமும் - மணல் மிகுந்த நெய்தனிலமும், எழு மலை பொடித்தவற்கு - எழுமலையை யுந் தூளாக்கிய வேலவனுக்கு, இசைதல் வேண்டி - பொருந்துதலே விரும்பி.

(வி-ரை.) பாசிலை - பச்சிலை; பசுமை-பகுதி.

'வரையுலகனைத்தும்' என்பதுமுதல் **'மெய்யினீரும்'** என்பதுவரை.

(3—6 வரிகள்.)

(ப-ரை.) வரை உலகு அனைத்தும் - குறிஞ்சியிலுள்ளவெல் லாமலைகளும், வருவது போல - வருகின்ற தன்மைபோல, நிரை

நிரை நிரைத்து - அலகளே யணியாகத்திரைத்து, கரை கரைக கொல்லும் - கரையைக் கரைத்தழிக்கின்ற, வையை நீர் விழவு - வையைப் பெருக்கத்தின்போது செய்யும் விழாவிற்கு, புகுந்தனம என - போய் வந்தோமென்னும்படி, ஒரு பொய்யினள் அன்றி - பொய்யுள்ளவள் வொருத்திபோலல்லாமல், மெய்யினே நீயும் - நீயு மெய்ம்மையுள்ளாய்.

(வி-ரை.) அணி - வரிசை. கரைக்கொல்லும் என்றது "வரிப் புனேபந்து" போன்றது.

'பொலம்பூண்' என்பதுமுதல் 'மொழியை' என்பதுவரை.

(7—10 வரிகள்.)

(ப-ரை.) பொலம்பூண் - பொன்னணிகள், பெயர்ந்துறை - கலேந்து கிடக்கின்ற, பூணை - அலங்காரமுடையவளுயினே, அருள் தரும்-இனிமையைத்தருகின்ற, குளிர்ச்சி நீங்கி - தண்ணளியொழி ந்து, கொடுங்கோல் வேந்து என - கொடுங்கோலரசன்போல, சேக் கொள் கண்ணை - சிவப்பைக்கொண்ட கண்ணேயுடையவளுயினே, செம்மொழி பெயர்ந்து - இனியசொல் நீங்கி, ஒன்றுடன் நில்லா - ஒருதன்மையதா நில்லாத, மொழியை - சொல்லேயுடையவளுயினே.

(வி-ரை.) பொலம் - பொன். தண்ணளி - கிருபை. சே - செம்மை.

'மறுத்த' என்பதுமுதல் 'அரும்பியநகையை' என்பதுவரை.

(10—13 வரிகள.)

(ப-ரை.) மறுத்த - மலர்ச்சிக் கிடமில்லாத, முதிராகான் - பருவமில்லாதநாளில், செய்-உண்டான, முண்டகம் - தாமரைப்பூப் போல, மலர்ந்து கவிழ்ந்த - மலர்ந்து கீழேநோக்கிய, முகத்தை - முகத்தையுடையாய், எக்கண் - எத்தவிடத்தோ, மனம் தோன்ற - மனம்போய்ப் பதியுமாறு, அரும்பிய நகையை - உண்டான நகையை யுடையவளுயினே.

(வி-ரை.) நகை - சிரிப்பு.

'அன்றே' என்பதுமுதல் 'கடந்தேற்றல்' என்பதுவரை.

(13—17 வரிகள்.)

(ப-ரை.) அன்றே - அல்லவா, இவ்விடை - இவ்விடத்தில், என் கண் - எனதுகண்ணல், நின் கேழ் கண்ட - உனது தன்மை

யைக் கண்ட, என் உளம் - எனது நெஞ்சமானது, மன்னிகின்று அடங்கா - நிலைபெற்று நின்றடங்காமல், சூடும் அம் பெருங்கழல் - கொழுத்துவிட் டெரிகின்ற வடவாக்கினியானது, பசுங்கடல் வளைந்து - கருங்கடலைச் சூழ்ந்து, பருக - அதனைச்சுவற்றும்படி, சொதித்த.தோற்றமும் - கொதித்தெழுந்த கொடுமையினையும், கடந்தது என்றல்-கடந்து கொதிப்பதென்றல்.

(வி-ரை.), வடவாக்கினியைப் 'பெருங்கழல்' என்றார், அதனிற் பெருந்தீயின்மையால். பசுமை- இவணுக் கருமை குறித்து நின்றது. சுவற்றல் - வற்றச்செய்தல்.

'ஆற்றல்செய்' என்பது முதல் 'குழவியங்கிழவோன்' என்பதுவரை.

(17—22 வரிகள.)

(ப-ரை.) ஆற்றல் செய் - போர்புரிந்து, விண்ணகம் புடைத்து- தேவருலகங்களை யழித்தது, செங் வரை - பெரிய மலையினுளளை, சுரக்கும் - ஒளிதத, கொடுஞ்சூர் கொன்ற - கெல்லியருளனைத் தடிந்த, கூரிய நெடுவேல் - (கூரிய) நெடியவேலை யேந்தியவனும், குன்றம் குறவர் - மலைவேடுவர்தந்த, கொடிபினுக்கு இனியன் - மகளுக்கினியவனும், குருகு ஓலி ஓவா - பறவைகளொலித்தல் நீங்காத, பனி மலை வாவி - இமயமலைச்சாரற் சுனையானது, அழகு வயிறு வாய்த்த - தன்னிடத்தே அழகா யீன்ற, குழவி அம் கிழவோன் குழந்தையுமாகிய நாயகன்.

(வி-ரை.) சுரத்தல் - ஒளிர்த்தல். தடிதல்-கொல்லல். கொம்பு- ஆகுபெயர்.

'வாழ்பரங்குன்று' என்பது முதல் 'கூடலம்பெருமான்' என்பதுவரை.

(23—24 வரிகள்.)

(ப-ரை.) வாழ் பரங்குன்று என்னும் - வாழ்கின்ற பரங்கிரி யென்கிற, மணி அணி பூண்ட - மாணிக்கப்பூடணத்தைத் தன்னிற் கொண்ட, நான்மறை புகழும் - வேதங்களனைத்து மேத்துகின்ற, கூடலம் பெருமான் - மதுரைக்கிறைவன்

(வி-ரை) பரங்கிரி - திருப்பரங்குன்றம்.

'வான்முதல்' என்பதுமுதல் 'தன்குணமெட்டேத்தரித்து' என்பதுவரை.

(25—30 வரிகள்.)

(ப-ரை) வான் முதல்-விண்முதலிய அனேத்தையும், என்ற-தாகருள்ளி, மலமகள் தனஞெடும் - பரர்வதிபாருடனே, முழுது உணர் ஞானம்-அனேத்து முணர்கின்ற பேரறிவும், எல்லாம உடைமை - அனேகதாக தன்வயததே யுடைமையும், முழுதி அணுக்கிரசுமபோருளுடைமையுர, கெழு பரம் - மூடிவிலாற்றலும, அநாதி - தோற்றமினமையும, பாசம இலாமை - பாசமினமையும், மாசு அறு நிட்களம - குற்றமற்ற நிட்களமும, அவிகாரக்குறி - விகார மிலலாத சகளமும், ஆகிய - இவையாகிய, தன் குண மெட்டும தரி தது - தனக்குரிய எணகுணஙகளேயும் தாணுள்ளவாறு தரிதது.

(வி-ரை.) மாசு - குற்றம.

'விட்டறுகுற்றம்' என்பதுமுதல் 'விதிப்பேற்றடியவர்' என்பதுவரை.

(30—35 வரிகள.)

(ப-ரை.) அறு குற்றமவிட்டு - காமமுதலிய அறுவகைக குறற தினினறு நீகி, அருசசனே - சிவார்சனேயும், வணக்கம-வணகக மும, பரவுயிர்க்கு அன்பு அகம-பெரிய சிவகாருண்ணிய வுளளமும, போருள் திரு நூல் - பெரிய அருட்குக் காரணமாகிய திருமுறை யுணர்சசியும, பெருநதறவு - எவற்றினும் பெரிய துறவும, எவகும நிறை பொருள் அழுநதல் - எங்குநிறைநதுள்ள சிவததோடழுநதுத லும, அருள் இனகசுட்டம் - அருளேயடைநத சாதசஙகப்புணர்சசி யும், இருள் பவம் நடுஙகல்-சன்மாநதகார நடுஙகுதற்கேதுவாகிய ஆதமஞாகமும், எணும் குணம் எட்டும் - ஆகியவெணவகைக் குணங களேயும், தமககும் படைக்க - அடியாராகிய தமக்கு மளித்தருள, விதிப்பேற்றடியவர் - அவ்வாறுபெற்ற முறைமைப்பாடைய அடி யவர்களது.

(வி-ரை.) அவவகைக் குற்றம்-காமக்ரோத லோபமோஹமத மத்ஸராகள். நூல்-ஆகுபெயர். துறவு - துறததல் (பற்றறவிடுதல்). புணர்சசி - கூடுதல்.

'நிலையருட்கற்பென' என்பதுமுதல் 'குளிரும்பெறுமே' என்பதுவரை.

(36—38 வரிகள்.)

(ப-ரை.) நிலை - நிலைமையான, அருள் கற்பு என - அருட்கற்பைப்போல, நெடுங்கற்புடையோள் - நீங்காத கற்பையுடைய தலைமகளுக்கு, முன் உறின் - எதிரில்வந்தால், சென்றனையாயின், அவள் மனம் - அவளுள்ளமானது, ஆங்கே - அதுபோழ்தே, நன்னிலில் கொண்டு - நன்மையையுட்கொண்டு, குளிரும் பெறுமே - தணிவும் பெறக்கூடுங்கேள்ளோ.

(வி-ரை.) நன்னர் - நன்மை. உறல் - செல்லல்.

நீயும் வையைநீர்விழவு புகுந்தனமென, மெய்யினே பெயர்ந்துறை பூணை, சேக்கொள் கண்ணை, ஒன்றுடனில்லா மொழியை, கலிழ்ந்தமுகத்தை, மனந்தோன்றுநகையையன்றே, நின்கேழ்கண்ட என்னுள்ளம், கடல் பருக்கக் கொதித்த பெருந்தழற் றேற்றமுஞ், கடந்தென்றல், கூடற்பெருமான் மலைமகளொடு தன்குணமெட்டுந் தரித்தபடி யருச்சனைமுதலிய வெண்வகைக் குணங்களையுந் தமக்குஞ் படைக்கப்பெற்ற, அடியவருட் கற்பெனக் கற்புடையோண் முன்னுறின் அவள் மனம் குளிரும் பெறுமேவென வினைமுடிவு செய்க. (அஎ)

திருக்கோவையார் நூகை-ம் செய்யுள்.

புனலாட்டுவித்தமை கூறிப்புலத்தல்.

புனலாட்டுவித்தமைகூறிப்புலத்தலென்பது — அணிந்தவழியுடனின்ற தலைமகள், ஊடறீராகின்ற தலைமகளுழி, இவர்செய்த பிழையெல்லாம் பொறுக்கலாம், பலருமறிய வொருத்தியைப் புனலாட்டுவித்து அது செய்யாதார்போல என் மனையின்கணிவர் வந்து நிற்கின்றவிது எனக்குப் பொறுத்தலரிதெனத் தணிக்கத் தணியாது பரத்தையைப் புனலாட்டுவித்தமைகூறிப் புலவாகிற்றல். அதற்குச் செய்யுள்:—

> கொந்தார் நறுங்கொன்றைச் சிற்றம் பலவர் திருவாரூரோர்
> பந்தார் விரலியைப் பாய்புன லாட்டிமன் பாவியெற்கு
> வந்தார் பரிசுமன் றும்பிற்கு மாறென் வளமனையிற்
> கொந்தார் தடந்தோள் விடங்கா லயிற்படைக் கொற்றவனே.

ஓங்கதனுக் கழுக்கமெய்தி
வீங்குமென்முலை விட்டுரைத்தது.

(பதவுரை.) சொந்து ஆர்-கொத்துமாலை நிறைந்த, தடம் தோள் - பெரிய தோளினையும், விடம் கால்-நஞ்சைக் கக்குகிற, அயில் படை-கூர்மையாகிய படையினையுமுடைய, கொற்றவர் - தலைவர், பாவிப்பு - நினைவேனுக்கு, என் வளமனையில் நிற்குமாறு - என் வளமனையில் வந்து நிற்கினறபடி, ஓர் பந்து ஆர் விரலியை - பந்துபயிலுகின்றவிரலுடையாளொருத்தியை, செந்தார் நறுங்கொன்றைசிற்றம்பலவர் தில்லைநகர்-செய்யதாமாலை நறிய கொன்றைப்பூவினையுடைய சிற்றம்பலவரது தில்லையாகிய நகர் (வரைப்பில்), டாய் புனல் ஆட்டி - பாய்கின்ற புனலாட்டுவித்து, வந்தார் பரிசும் அன்று ஆய - (வெளிப்படத்தவறு செய்து) வந்தார் (சிலர் நிற்கும்) பரிசுமன்றாக (மனத்தவறு செய்யாராய்) வந்து நிற்குமாறு வந்து நின்றாராயின், அது தொழுத்தலரிது), எ-று.

(வி-ரை) தில்லைநகரோர் பந்தார் விரலியென வியைப்பினுமையும். மன - ஒழியிசைக்கண்வந்தது, அசைநிலையெனினுமமையும். ஒருத்தியைப் புனலாட்டி வந்தார் பரிசுமன்றாய்க் கொற்றவர் மனைக்கண்வந்து நிற்குமா றென்னென்று கூட்டி யுரைப்பினுமமையும். கொத்துமாலை - பலவா யொன்றுகியமாலை. ஓங்கதனுக்கு - அப்படித்து நிலையால். விட்டுரைத்தது - வெளிப்படவுரைத்தது.

நேரிசையாசிரியப்பா.

மாயமு மின்பு மருட்சியும் தெருட்சியு
நகைததொகை கூட்டிக் கவைத்தெழு சொல்லி
லமுதமுங் கடிவும் விழியில்வைத் தளிக்கு
மிருமனப் பொய்புளத் தொருமக டன்னைக்
5 காியோன் கடுப்பத் துகில்கவர்ந் தொளிர
விதியினும் பன்மைசெய் முகம்படைத் தனவாச்
சோதியிற் படைக்கண் செவவுய்த் தரும்புசெய்
முண்டக முலையிற் சாந்தழித் தமைத்தோ
ளெழுதிய கழைக்கரும் பெறிந்துநூல் வளர்த்த
10 கோதைவகை பரிந்து மணிக்கலன் கொண்டு
கழைத்தோ ணெகிழத் தழையுடல் குழையத்
திரையெதிர் தளாி மலர்த்துகில் கண்புதைத்

தொண்ணிற வேங்கை யின் முதும் பொன்னுஞ்
சுண்ணமுங் கலந்து திமிர்தட னூற்றி
வண்டொடு மகிழ்ந்தளிழ் தோட்டலர் சூட்டி
யிறுல்புணர் புதுத்தே னீத்துடன் புணரும்
வையையின் மணிக்க மலனவ டன்னுடன்
கொழுமிய வழுவுட புகுமதி நீயே
கலைகொக் கட்செவி யணந்திரை துய்த்த
பாசுடற் பருவாய்ப் பிழையுக் கவரியும்
பேழ்வாய்த் தழல் விழித்த தரக்குடித் தளிந்த
நிலமபடர் தோகைக குலங்கொளசே தாவு
மவ்வழி மாத்திரை யறையெழ காலைந்த
திருதுதற் கண்ணு மலைமகட் பாகமு
மெரிமழு வவ்வியும பெறுமருட் டிருவுரு
வெடுத்துட னந்தக கடலெலை யரவினை
தீவாய்ப புலியினைத் திருதுகர் நகைபட
வெடுத்தகனி பூண வுரித்துடை யுடுப்பா
முனிவருந் தேவருங் கமலமலர் புகிழ்ப்பத்
தருவன வன்றி மலரவ னவன்றெழுதி
ஞரண ஞங்கவன் கூருடைக காவல
சேரத துடைக்கும் பேரரு ணெளின்
முத்தொழி லிற்றன் முகமறுழி லாகஇ
யொருதாட் டாரைகொண் முக்கவைச படர்வேற்
றலையிருந் தருவகதி முழுதுகன் றளிக்கும்
திருநகர்க் காசிப் பதிபகத தென்னும்
வெளியுறத் தோன்றிய விருண்மணி மிடற்றோ
னேமியங் குன்றகழ் தெடுவேற் காளையன்
றண்பரங் குன்றந் தமர்பெறு கூடற்
றிறையோன் றிருவடி நிறையுடன் வணங்கும்
பெரும்புன னூர வெம்மில்ல
மரும்புனல் வையைப் புதுநீ ரன்றே.

மாயமுமின்பும் - புதுநீரன்றே. பதுநீ - பரத்தையிற்பிரிவு. துறை - புனலாட்டெடுத்தமைகூறிப் புலத்தல்.

'மாயமும்' என்பதுமுதல் 'ஒருமகடன்னே' என்பதுவரை.

(1—4 வரிகள்.)

(ப-ரை.) நகைத்தொகை கூட்டி - சிரிப்பு மிகுதியுஞ் சேர்த்து, கவைத்தெழு சொல்லில்-இருவேறுறிய சொல்லினிடத்துமாயமும்-வஞ்சமும், இன்பும் - இன்பமும், மருட்கியும-ம்யக்கமும், தெருட்சியும - தெளிவும், விழியில்-கண்ணினிடத்தே, அமுதமும் கடிவும - அமிர்தமும் நஞ்சமும், வைத்து ஒளிக்கும் - இருத்தித் தமது தொழிலே யோமபுகின்ற, இரு மனம் - இருவகைப்பட்ட மனத்தையும், பொய் உளத்து - பொய்மைபட்ட வுள்ளத்தையுமுடைய, ஒரு மகடன்னே - விசாதிகமான விலமகளே.

(வி-ரை.) ஓம்புகல் - காப்பாற்றல். பரத்தையை 'இருமனப் பொய்யுளத்தொருமகள்' என்றார், அவள் அன்னளாகலின; "இரு மனப் பெண்டிருங் கள்ளுங் கவறும், திருநீக்கப் பட்டார்தொடர்பு" என்றார் பெருநாவலரும். விசாதிகம் - வேறுசாதித்தனமை.

'கரியோன்கடுப்ப' என்பதுமுதல் 'சேலவுய்த்து'

என்பதுவரை.

(5—7 வரிகள.)

(ப-ரை.) கரியோன் கடுப்ப-கண்ணன்போல, துகில் கவர்ந்து - ஆடையைக்கவர்த்தும், ஒளிர-ஒளிரும்படி, விழியினும்-நான்முகனைப் பார்க்கிலும், பலமை செய் - பற்பலவித்தைச் செய்கின்ற, முகம் படைத்து - அவன் முகத்தைப்பெற்று, அளவா சோதியின்-அளவுபடாத சோதியிலுலே, படை கண்-கூரிய கண்கள், செலவுய்த்து - பதியுமாறு நோக்கியும்.

(வி-ரை.) கரியோன் - கருநிறமுள்ளவன். இது க்ருஷ்ணன் என்னும் வடசொன் மொழிபெயர்ப்பு. ஒளிர்தல் - ஒளிசெய்தல். படைக்கண் - படுத்தற்குரிய கண் எனினுமாம்.

'அரும்புசேய்' என்பதுமுதல் 'பரிந்தும்' என்பதுவரை.

(7—10 வரிகள்.)

(ப-ரை.) முண்டகவரும்பு செய் - தாமரைமொக்குள்போலு மழகு செய்கின்ற, முலையின் சாந்து அழித்து - தனத்திற்பூசிய சந்தனத்தை யழித்தும், அமை தோள் - மூங்கில்போன்ற தோளில், எழுதிய-தொய்யில்வளைந்த, கழை கரும்பு எறிந்தும்-மரான் கரும்பு

வில் வடிவத்தைக் கரைத்தும், நூல் வளர்த்த - நாரால் நீளக்கட்டிய, கோதை வகை பரிந்தும் - மாலைவகைகளே யுறுத்தும்.

(வி-ரை) முண்டகம் - தாமரை. அமை-மூங்கில். தொய்யில்-சந்தனக்கோலம்.

'மணிக்கலன்கொண்டு' என்பதுமுதல் 'மறித்துப்' என்பதுவரை.

(10—17 வரிகள்.)

(ப-ரை.) மணிக் கலன் கொண்டு - மணியணிகளைக் கழற்றி, கழை தோள் கெழி - மூங்கில் போன்ற தோளைகிழவர், தழை உடல் குழைய - பூரித்தவுடல் குழையவும், இரை எதிர் தள்ளி - அலைக்கெதிரே தள்ளியும், மலர் துகில் - பூத்துகிலாலே, கண் புதைத்து - கண்ணீர்மூடியும், ஒள் நிற வேங்கையின் - நன்னிறமுள்ள வேங்கைமலர்களின், தாது பொன்னும் - மகரந்தத்தையும் பொற் பொடியையும், சுண்ணமும் கலந்து-சுண்ணத்தோடு கலந்து, திமிர்ந்து உடல் ஊற்றி - அவளுடலிற் பூசியுமிறைத்தும், வண்டொடு மகிழ்ந்தழிழ் - வண்டுகள் மொய்க்கச் செழித்து மலர்ந்த, தோடு அலர் சூட்டி - மலர்நிறைந்த மாலைதரித்தும், இருல் புணர் புது தேன் - இருட்டிற் கட்டின புதியதேனை, ஈத்துடன் பாணமும் - உண்பித்து அவளுடன் கூடி, வையையில் - வையையாற்றில் நீராடியும் - மீளவும்.

(வி-ரை) மணியணிகள் - ரத்நாபரணங்கள். கழை - மூங்கில். தீண்மை-நன்மை. திமிர்தல் - பூசுதல். தூற்றல்-இறைத்தல் தோடு-பூவிதழ். இருல் - இருட்டு (தேன்கூடு).

'அன்னவடன்னுடன்' என்பதுமுதல் 'குலங்கோள்சேதாவும்' என்பதுவரை.

(17—22 வரிகள்.)

(ப-ரை.) செழுமிய வீதியுள்-சிறப்பித்தவிழாவில், அன்னவன் தன்னுடன் - அவ்வியல்புகளுடனே, புகுமதி நீயே - சென்றனையாகிய நீயே, கவை நா கட்செவி - பிளவாகிய நாவையுடைய பாம்பானது, அணந்து இரை துய்த்த - வாய்திறந்திரையாகவுண்ட, பரந்த டல் பகு வாய் - பரந்துலையும் பெரிய வாயையுமுடையதாய, பீழை அம் தவளையும் - மரணவாதனைக்குட்பட்ட தவளையும், பேழ் வாய்

பினப்பாகிய வாயையும், தழல விழி - நெருப்பெரிகின்ற கண்களையு முடைய, தாக்கு அடித்து அவிந்த - புலியடித்தலாலிறந்த, நிலம படர் சோகை-மண்ணிற்படரும் வாலியுடைய, குலம் கொள் சேதாவும - உத்தமப் பிறவியுள்ள செவ்வியபசுவும்.

(வி-ரை.) அன்னவடன் என்பதில் தன் சாரியை. மதி - முன்னிலையசை. கண்ணே செவியாகவுடையதாதலால் பாம்பு கட்செவி யெனப்பட்டது. அணைத்தல் - வாய்திறத்தல். தூய்த்தல் - உண்டல். ஈழை - மரணவேதனை. தாக்கு - புலி, இது தாகத்தை என்னும் வட சொற்றிரிபு. குலம் - மேனமை.

'அவ்வுழி' என்பதுமுதல் 'உருவெடுத்து' என்பதுவரை.

(23—26 வரிகள்.)

(பரை.) அவ்வுழி - அவைபட்டவிடத்தே, அரைமாத்திரை - அரைநொடியில், எழு காலே - உயிர்பெற்றெழுந்த சமயத்தில், திருநுதல் கண்ணும் - விளக்கமான நெற்றிக்கண்ணும், மலைமகள் பகுதியும் - பார்வதியார் பாகமும், எரி மழு கவ்வியும் - எரிகின்ற மழுவுமானும், பெறும் - கொண்ட, அருள் திரு உருவெடுத்து - அருளே திருமேனியாகத் தோற்றி.

(வி-ரை.) அவ்வுழி - அவ்விடம். அமயம் - சமயம்.

'உடன்' என்பதுமுதல் 'தருவனவன்றி' என்பதுவரை.

(26—30 வரிகள்.)

(பரை.) உடன் - விரைந்து, அந்த-மேறகூறிய, கடுக்கொலை-லிடத்தாற் கொலையைத் தன்னிடத்துள்ள, அரவினை - பாம்பையும், நீ வாய் புலியினை - நீப்புகையெழும் வாயையுடைய புலியையும், திருத்தவர் நகைப்ப-தருவனத்திருடிகள் நகைக்குமாறு (முறையே), எடுத்து அணி பூண - தாக்கி யணியாக வணிந்துகொள்ளவும், உரித்தி உடை உடுப்ப - தோலையுரித்துடையாக வுடுப்பவும், முனிவரும் தேவரும் - அதனைக்கண்ட முனிவருந்தேவரும், கரமலர் முகிழ்ப்ப - மலர்போன்ற கைகளைக் கூப்பவும், தருவன அன்றி - செய்வதுமல்லாமல்.

(வி-ரை.) அணியாக - ஆபரணமாக. உடை - ஆடை. முகிழ்த்தல் - கூப்புதல்.

'மலரவன்' என்பதுமுதல் 'பேரருணரின்' என்பதுவரை.
(30—32 வரிகள்.)

(ப-ரை.) மலரவனவன் தொழில்-பிரமனதுபடைப்பும், அற்ற-அடைவாறே, நாரணனவன் - திருமாலின், கூருடை காலல-பெருமையையுடைய காப்பும், சேர தனடைக்கும் - ஒருங்கே யழிக்கின்ற, பேரருள் நாளின் - பேரருளைசெய்கின்ற ஆதியினும்.

(வி-ரை.) கூர் - பெருமை. தடைத்தல் - சங்கரித்தல்.

'முத்தொழிலில்' எனபதுமுதல் 'மிடற்றோன்' என்பதுவரை
(33—37 வரிகள்.)

(ப-ரை.) முத்தொழிலில் - மூவகைத் தொழிலுள்ளும், தன் முதல் தொழில் ஆக்கி - தன்றொழில்க முதன்மைத்தாகவு, ஒரு தாள் - ஒரு தாளின்மேல், தாரை கொள் - கூர்மைகொண்ட, முச சுடர் கவை வேல் - மூன்று சுடர்போலும் கவருள்ள சூலத்தின், தலை இருத்து - தலைக்கட்டவுங், அருகுதல் முழுதும் - அரியகரியனைத்தும், நன்று அளிக்கும் - குறைவின்றி யளிக்கின்ற, திருநகர் - நகரங்களுட் சீர்மைத்தாகிய, காசி பதியகத்து - காசியென்னுந திருப்பதியில், என்றும் - எந்தநாளினும், வெளியுற தோன்றிய - வெளிப்படத் தோன்றுகின்ற, இருள் மணி மிடற்றோன் - நீலமணி போலுங் கண்டத்தினன்.

(வி-ரை.) தான் - சால். கவர் - பிளவு. இருள் மணி-நீலமணி. மிடறு - கண்டம்.

'நேமியங்குன்று'என்பதுமுதல் 'பெரும்புனலூர' என்பதுவரை.
(38—41 வரிகள்.)

(ப-ரை.) நேமி அம் குன்று - பெரிய கைளஞ்சமலையை, அகழ் - பினந்த, நெடி வேல் காளையன் - நெட்டிலைவேற்குமரன், தன் பரங குனறம் - தனது திருப்பரங்குன்றத்தை, தமர் பெறு - தன்னினமாகப்பெற்றுள்ள, கூடற்கிறையோன் - மதுரைப்பெருமானது, திருவடி - ஸ்ரீபாதங்களை, நிறையுடன் வணங்கும்-பத்திமையுடன் வணங்குகின்ற, பெரும்புனல் ஊர - பருநீர் ஊரனே.

(வி-ரை.) அகழ்தல் - பிளத்தல். நிறை-ஈண்டுப் பத்திமையை யுணர்த்திற்று.

'எம்மில்லம்' என்பதுமுதல் 'நீரன்றே' என்பதுவரை.

(41—42 வரிகள்.)

(ப-ரை.) எம் இல்லம் - எமது வீடானது, அரும்புனல் - புண்ணிய நதியாகிய, அ வையை-அந்த வையைப்போலும், புதுநீர் அன்றே - புதுமையாகிய நீர்மைத்தன்று.

(வி-ரை.) இடைத்தற்கரிதாதலால் புண்ணிய நதியை 'அரும் புனல்' என்றார்.

கூடற்கிறையோன் திருவடி கிறையுடன் வணங்கும் பெரும் புனலூர ! இருமனப் பொய்புளத்து ஒரு மகடன்னைத் துகில் கவர்ந்து படைக்கண் செலவுய்த்தும் மூலியிற் சாத்தழித்துத் தோளெழுதிய கழைக்கரும் பெறித்தும் கோதைவகை பரிந்தும் நிரைபெயிர்த்தள்ளி மலர்த்துகில் கண்புதைத்து உடலூற்றி அலர் சூட்டிப் புதித் தேனீத்துடன் புணரும் வையையின் மறித்துங் கெழுமிய விழவுள் அன்னவடன்னுடன் புகுமதி நீயே வர, எம்மில்லம் அரும்புனல் அவ் வையைப் புதுநீரன்றென வினைமுடிவு செய்க. (அ)

திருக்கோவையார் கூகடு-ம் செய்யுள்.

வருத்தந்தணித்தல்.

வருத்தந்தணித்தலென்பது—தலைமகனது பிரிவுகேட்டு உள்ளுடைந்து தனிமையுற்று வருந்தாகின்ற தலைமகளை, கின்னைவிட்டு அவர் பிரியார், நீ கெருப்பையுற்ற வெண்ணெயும் நீரையுற்றவுப்பும் போல இவ்வாறருகித் தனிமையுற்று வருந்தாதொழி யெனத் தோழி அவளது வருத்தந் தணியாகிற்றல். அதற்குச் செய்யுள்:—

நெருப்புறு வெண்ணெய நீருறு முப்பு மெனவிங்ஙனே
பொருப்புறு தோகை புலம்புறல் பொய்யன்பர் போக்குமிக்க
விருப்புறு வோரைவிண் ணேரின்மி குத்துகண் ணீர்கழியத்
திருப்புறு சூலத்தி னேன்றில்லை போலுந் திருமுதலே.

மணிப்பூண் மன்னவன் றணப்ப லில்லை
அஞ்சல் பொய்யென வஞ்சியைத் தணித்தது.

(ப-ரை.) மிக்க விருப்பு உறுவோரை - (தன்கண்) மிக்க பிரியப்புறுமவரை, விண்ணேரின் மிகுத்து - விண்ணோரினு மிகச்செய்து, நண்ணீர்கழிய - பகைவர்மாய, திருப்புறு சூலத்தினேன் றில்லைபோ

லும் திருநுதல் - லிகிர்ஈகப்படுஞ் சூலவேலை யுடையவனது நிலை யையொக்குந் திருநுதால்; பொருப்பு உறு தோகை - பொருப்பைச சேர்ந்த மயில்போல்வாய், நெருப்பு உறும வெண்ணெயும் நீர் உறும் ஊப்பும் என - நீயையுற்ற வெண்ணெயும் நீரையுற்ற வுப்புமபோல, இங்ஙன் புலம்புறல் - இவ்வாறருகித் தனிமையுறுதொழி, அனபா போக்கு பொய் - அன்பர் பேர்க்குப்பொய், எ-று

(வி-ரை.) மிகுத்தென்னும் வினையெசசம் திருப்புறு சூலமென் புழித்திருப் பெனபதனெடு முடிந்தது.

நேரிசையாசிரியப்பா.

வேலியங் குறுஞ்சூல் வினைகாய்ப் பஞ்சினம்
பெருவெள் ளிடையிற் சிறுகாற் பட்டென
நிறைகாண் வேலி நீங்கித் தமியே
யோருழி நில்லா தலமரல் கொளளுமென்
னருள்ளுணை நெஞ்சநிற் குறும்பயன் கேண்மதி
மண்ணுளர் வணங்குந் தன்னுடைத் தகைமையு
மிருளறு புலனுமெய்ப பொருளுறுங் கல்வியு
மமராபெற றுண்ணு மமுதுருக கொண்டு
சூறுஞ்சொற் குதட்டிய மழலைமென் கிளவியில்
விளரியுள வினைக்குந் தளர்நடைச் சிறுவனு
நின்னலம் புகழ்ந்துணு நீதியுங் கோற்றமுங்
துவரித தீர்ந்தகங் கவர்மனத் தூரன்
பொம்மலங் கதிர்முலை புணர்வுறுங் கொல்லெனச்
சென்றுசென் றிரங்கலை யன்றியுந் தவிர்மோ
கெட்டுகிர்க் கருங்காற் றுன்முலைப பெருமபே
யமர்பெற் றுன்னல றறிவுறப் படரப்
பேழ்வா யிடாகினி காறுழு தேததிக்
கையடை கொடுத்தவெண் ணினவாய்க் குழவி
யிமம் பெருவிளக் கெடுப்ப மற்றதன்
சுடுபொடிக் காப்புட னுளங்கச சுரிகுர
லாந்தையுங் கூகையு மணிதா னுறுதத
வோரிபாட் டெடுப்ப வுவணமுங் கொடியுஞ்

செஞ்செவிச் சேவற் கவ்வாய்க் கழுது
மிட்டசெம் பச்சை யிடையிடை கல்லெனப்
பட்டுலர் களரிபம் பாற்றுரில் கொளுஞ்
சுளரிபங் காணிடை சுரர்தொழு தேத்துந
மரகதத் தழாயு மகிழ்ந்து கிரியுந
தேனையுஞ் சூலமுந தோளின்முன் கையில்
மருங்கிற் கருந்தினை வாடா திருததிட
போர்வலி யவுரை புகபொரு ஆட்றிய
முக்கட் பிறையெயிற் றெனைடோட் செலவி
கண்டுளங் களிபட கீகைகழற முமரை
வானக வாளி யுறுற மலர
வொருதர ளெழுபளி யொருவத் திவ்டோள
பதுதுத திசையு ளெட்டவை யுடைபப
வொருருடங் குலவிய திருவடி யுரவோன்
கூடலம் பதியக மபவி
நீடநின் றெணணு ருளமென நீயே.

வேலியகுறுஞ்சூல் - உளமெனநீயே. பதுதி - பகைதணிவினைப்பிரிவு. துறை - வருதகதணித்தல்.

'வேலியங்குறுஞ்சூல்' என்பதுமுதல் 'சிறுகாற்பட்டேன்' என்பதுவரை.

(1—2 வரிகள.)

(ப-ரை.) வேலி அம் குறுஞ்சூல் - முள்ளிலவின் சிறிய சூலானது, விளை காய் பஞ்சினம - முதிர்ந்தகாயிலுள்ள பஞ்சினகுகள், பெருவெள்ளிடையில - பெரிய வெளியிடத்து, சிறு கால்பட்டெனதென்றற்காற்றி லகப்பட்டாறபோல.

(வி-ரை.) வேலி - முள்ளிலவமரம். அம்-சாரியை. சூல் - சருப்பம். விளைதல் - முதிர்தல். மெல்லிய காற்றுதலால் தெனறறகாற் நிளைச 'சிறுகாற்று' என்றார். கால்-காற்று; 'மனிதர் வெகுகோடை நீக்கும் வசந்த மெனகாலும்" என்றார் பிறரும்.

'நிறைநாண்' என்பதுமுதல் 'நெஞ்சம்' என்பதுவரை.

(3—5 வரிகள.)

(ப-ரை) நிறை நாண் - நிறையு நாணமுமாகிய, வேலி நீங்கி - காப்பானது நீஙகாகிற்ப, தமியே - தனியாய், ஒருழி நில்லாது - ஒரு

நிலையில் நிலலாமல், அலமரல கொளளும - உ ற கின்ற, என் உருக
துணை - எனதரிய துணையாகிய, நெஞ்சம - நெ ஞ சாகாது

. (வி-ரை) நிறை நாண எனபவற்றிறகில எனனுமடைகள
தொகுகன நீஙகி-எளசதறிபு

'நிறகுறுபயண்' எனபதுமுதல 'சிறுவனுர' என்பதுவரை.

(9—10 வரிகள.)

(ப-ரை) நிறகு உயம பான - உலகில பொருநருசகரகக
பயர, நீ கேளனமின் நீ கேடபாராக, மான உளர - ஞ றுலகதாரா,
வணகும - பணியாயினும, தனனுடை சுகைளமபும - ஞான பெரு
மையும, இருள அறு புலனும - மாசறற அறிவுடனையும, மெய
பொருள - உணமைபபொருளே, உறும - அடையுதறக, கலவி பும-
கலவிவளரமும, ஆமரா பெறறு உணரும - தேவாபெறறுணரு
னைற அமுது உருகொணடி - அமுதாதினன சுவையையுடைதாய,
குழலுசொல - இனிதுசொலலாகிய, குதடட்டிய - குழறிய, மழலை
மெலலிளவிபில - மெனமையாகிய மழலசசொலலால, உள விளரி
விளைகுற - உளளதறில வேடகையை விளைகினற, தளர நடை
சிறுவனும - தளரநடையையுடைய பை ளை

(வி-ரை) நெணபதறிம நனனிலை யசையிடைச
சொல வளம - செலவம. உரு - ரண ந வலயை யுணாதறிறு
விளரி - வேடகை.

'நின்னலம்' எனபதுமுதல 'மனத்தூரன்' என்பதுவரை.

(11—12 வரிகள.)

(ப - ரை) புகழ்நத - புகழுநதறதிபெரி, நின நலம் - நினதின்பத
தை, உணர-அனுபவிதத, நீதியும தோறறமும - மெயமையும மாண்
பும துவரதறோநத - முறறமதறநத, நம வகா மனதது ஊான -
நமதிரணடபட மனதததையுடைய தலைவன.

(வி-ரை) துவர - எஞசாமைப் பொருட-ருவதோரா வினையெச
ச ம. "துயரகத துவாபபெதத", 'துவர முடிதத துகளறு முசி" என
றறிரூடகதத ரானரோ செயயுட்களாறு மி:ஃதினிது விளஙகும

'போம்பலங்கதிர்முலை' எனபதுமுதல் 'துவிமோ'

என்பதுவரை

(13—14 வரிகள.)

(ப - ரை) பொம்மல் அம்கதிர முலை - பூரிப்பால் விளஙகு
கின்ற தனஙகளை, புணாவுறுகொல் என - தழுவுவலேனெவனறு,

நீயே - நீதானே, சென்று சென்று இரங்கலே - அடிக்கடி வருந்தா தொழிக, அன்றியும் - இரங்கல் சிறிதுமின்றி, தவிர்மோ - விடுவா யாக.

(வி-ரை.) சுதிர்முலை-வினைத்தொகை நிலைத்தொடர். கொல்.. அசைநிலை; உம் - இசைகிறை. தவிர்மோ என்பதில் மோ முன்னிலை யசை யிடைச்சொல்.

'நேட்டுகிர்' என்பதுமுதல் 'படர'
என்பதுவரை.
(15—16 வரிகள்.)

(பதவுரை.) நெடு உகிர் சருங்கால் - நெடியகருமுள்ள கரிய காலை யும், தோல் முலை - தோல்முலையையுமுடைய, பெரும்பேய்-பெரிய பேய்கள், அமர் பெற்று - போர்கிடைத்து, ஒன்னலர் அறிவுற - பகைஞருறியுமாறு, படர - செல்லவும்.

(வி-ரை.) உகிர் - நகம். அமர் - போர். ஒன்னலர் - சேராதவர் (பகைவர்) படர்தல் - செல்லல்.

'பேழ்வாய்' என்பதுமுதல் 'வாய்க்குழவி'
என்பதுவரை.
(17—18 வரிகள்.)

(பதவுரை.) பேழ் வாய் - பெரியவாயுள்ள, இடாகினி - எயற் பெண், கால் தொழுது ஏத்தி - பாதத்தை வணங்கித்துதித்து, கையடை கொடுத்த - அடைக்கலமாகக் கொடுத்த, வெள் நிணம் வாய் குழவி - வெள்ளிய நிணம்பற்றிய வாயையுடைய குழந்தை.

(வி-ரை.) இடாகினி - பேய்வகையிலொன்று. நிணம் - தசை.

'ஈமம்' என்பதுமுதல் 'அணிதாலுறுத்த'
என்பதுவரை.
(19—21 வரிகள்.)

(பதவுரை.) ஈமம் - மயானமான, பெரு விளக்கு எடுப்ப-பெரிய தீபமெடுக்க, அதன் - அம்மயானத்தின், சுடுபொடி காப்பு - பிணஞ் சுடற் சாம்பற்பொடியால், உடல் துளங்க - உடல் வருத்தவும், சுரிகுரல் - சுரிந்த குரலையுடைய, ஆந்தையும் கூகையுங் - ஆந்தையுங் கோட்டானும், அணி தாலுறுத்த - அருகில் காவலாலொலிக்கவும்.

(வி-மை.) துளங்கல் - வருந்தல். அணி - அருகு. தாது - ஈ, அதுதால் என ஈறு தொக்குத்தலாயிற்று.

'ஓரிபாட்டெடுப்ப' என்பதுமுதல் 'சுள்ளியங்கானிடை' என்பதுவரை.

(22-26 வரிகள்.)

(ப-ரை.) ஓரி பாட்டெடுப்ப - முதுகரிகள் ஊளையிடவும், உவணமும் கொடியும் - பருந்துங் காக்கையும், செஞ்செவி - வெகுதகாதையும், கவர் வாய் - பிளவாகிய வாயையுமுடைய, சேவல் கழுகும் - சேவலுடன் பெண்கழுகுகளும், இட்ட - அமைத்த, செம் பருதர் இடையிடை - செவ்விய பருதருக்கு நடுவே நடுவே. கால் என - நட்டகால்களேயொப்ப, பட்டு உலர் - பட்டுப்போயுலர்ந்த, சுள்ளியம்பால் - கள்ளியினிடத்து, துயில்கொண்ஞும் - தங்குதற்கிடமாகிய, சுள்ளி அம் கானிடை - இலையுலர்ந்த சுள்ளிபொருந்திய பாலையுள்.

(வி-மை.) ஓரி - இழுகரி. பாட்டெடுத்தல் - ஊளையிடல். பால - இடம். சுள்ளி - அறவுலர்ந்த மெல்லிறகு. கான்-காடு (பாலைவனம்). இடை-ழகரவீறு.

'சுரர்தொழுதேத்த' என்பதுமுதல் 'வாடாதிருத்தி' என்பதுவரை.

(26—29 வரிகள்.)

(ப-ரை.) சுரர் தொழுது ஏத்த - தேவர் வணங்கித் துதிக்க, மாகதத்துழாயும் - பசிய துளபமாலையையும், அந்திறக்கிளியும்-அந்திறக்கிள்ளையையும், தோகையும்-மயிலிறகுகளையும், சூலமும் - சூலத்தையும் (முன்றையே), தோளில் - தோளினிடத்தும், முன் கையில் - முன் கையிலும், மருங்கில் - இடையிலும், காத்தினில் - கையிலும், வாடாது இருத்தி - நீங்காமலிருத்தி.

(வி-மை.) மாகதம் - பச்சைநிறம். மருங்கு - இடை.

'போர்வலி' என்பதுமுதல் 'உளங்களிப்ப' என்பதுவரை.

(30—32 வரிகள்.)

(ப-ரை.) போர் வலி - போர்செய்தலில் வலிமைமிக்க, அவுணர் - அசுரர்கள், புக - எதிர்த்தபோது, பொருது - அமர்புரிந்து, உட்றிய - அழித்த, முக்கண் - மூன்றுகண்களும், பிறை எயிறு - பிணைபோற் புல்லும், எண் தோள் - எட்டுத்தோளுமுள்ள, செல்வி -

காளியம்மை, கண்டு - (கூடத்தின் விசாலத்தை) நோக்கி, உளங்களிப்ப - உள்ளத்தில் மகிழ்ச்சியாக.

(வி-ரை.) பொருதல் - போர்செய்தல். உடற்றல் - அழித்தல்.

'கனைகழல்' என்பதுமுதல் 'ஒருவ' என்பதுவரை.

(32—34 வரிகள.)

(ப-ரை.) கனை கழல் - வேதச்சிலம்பொலிக்கின்ற திருவடியாகிய, தாமரை - ஒருதாமரைப்பூ, வானகம் - ஆகாயத்திலுள்ள, வாவி யூடு - கங்கையினிடத்தே, உற மலர - பொருந்தி மலராதிற்பவும், ஒருதாள் - ஒரு திருவடியானது, எழு புவி - ஏழுபாதலத்திற்கும், ஒருவ - அப்பாதாளகடந்து செல்லாதிற்பவும்.

(வி-ரை.) கனைத்தல் - ஒலித்தல். தாமரை-ஆகுபெயர். வாவி - ஸரோவரம். பாதலம் - பாதாளலோகம். ஒருவல் - கடத்தல்.

'திண்டோள்' என்பதுமுதல் 'அவையுடைப்ப' என்பதுவரை.

(34—35 வரிகள.)

(ப-ரை.) திண் தோள் - திண்ணிய புயங்களும், பத்து திசையுள் - மேலும் கீழுஞ் சேர்ந்த பத்தாகிய திசைகளுள், எட்டு-எட்டுத் திசையையும், அவை யுடைப்ப-தாமே கடந்து ஜயிருவாதிற்பவும்.

(வி-ரை.) உடைத்தல் - ஜயிருவிச்செல்லல்.

'ஒருநடங்குலவிய' என்பதுமுதல் 'உளமென' என்பதுவரை.

(36—38 வரிகள்.)

(ப-ரை.) ஒருநடம் குலவிய-ஒப்பில்லாதநடனத்தைச் செய்தருளிய, திருவடி - அவ்விரண்டு திருவடியையுடைய, உரவோன் - பெரியோனது, கூடலம்பதியகம்-கூடலாகிய திருப்பதியினிடத்தே, பரவி-(சொக்கலிங்கத்தைப்) போற்றி, நீட நின்ற-ஒழியாமல் நிலைபெற்று, எண்ணூர் - நினையாதவரது, உளம் என - உள்ளத்தைப்போல.

(வி-ரை.) ஒருமை - ஒப்பின்மை. குலவல் - செய்தல்.

திருவடி உரவோன் கூடல்பரவி யெண்ணூருளமென, நீயே நெஞ்சிற் குறும்பயன் கேள், கவர்மனத்தூரன் கதிர்முலை புணருங கொல்லென இரங்கலை, இன்றியும் தவிர்மோ என விணைமுடிவு செய்க. (அசு)

திருக்கோவையார் கூடுசூ-ம மேய்டுள்.

பாணிஞ்ஞுகி வெருளுதல்.

பாணிஞ்ஞு வேருஞ்சல்—தோழிச்சு வாயின் மறுத்தது லே மகள், நினனிடத்து அவா நீஙாதவருள் பெரியரெனறு நீ மிசால்ல வேண்டுமோ, அதுகிடக்க கொற்சோயி ஞாலிவிற்றுப் புலையா எ ம லத்து நின்னுடைய நல்லநல்ல பொய்யைப்பொருந்தி நிற்கலுற்றீரு நீபோந்ததென வாயில் வேண்டிய பாணஞ்ஞுகி வெருண்டு கூறுமற் றல். அதற்குச் செயயுள்:—

மையெகாண்ட கண்டர் வயல்கொண்ட திலலூல் கூடார்நின்வாய்
மெயகொண்ட வனபின மென்பதென் வினளார வருள் பெரியர்
வைகொண்ட ஞெகிகொற் சேரியின் வீற்றெமதில் வணணவணணப்
பொய்கொண்டு நிற்கலுற் றீரேபுலை யாதிநின்னி போந்ததுவே.

மன்னியாழ்ப் பாணன் வாயில் வேண்ட
மின்னிடை மடந்தை வெருண்டு மைந்தது.

(ப-ரை) மை தொண்ட - கருமை பொருந்திய, கண்டர்-கண் டத்தையுடையவராதல, வயல் கொண்ட-வயல் சூழ்ந்த, திலலை - தில் லையிலுளளவரை, மல்கு செல்வம நிறைந்த, ஊரர்-ஊரானவர், நின் வாய் - உன்னிடத்து, மெயகொண்ட அனபினர் என்பது என-உண் மையாகிய அன்பையுடையவரென்று நீ சொல்லுவதென், வினளார - நீஙகாத, அருள் பெரியர் - அருளிற் சிறநதவர், (அது நிற்க) வை தொண்ட ஊசி - கூர்மையைக்கொண்ட ஊசியை, கொல் சேரியில் விற்று - கொல்லரூரில் விறறு, எம் இல் - எமதில்லத்தில், வண்ண வண்ணப் பொய் கொண்டு நிற்கலுற்றீரே - உனது நல்லநல்ல பொய் மையைப் பொருந்தி நிற்கலுற்றீரே, புலை ஆதினனி - புலையஞ்சிய ஆத்தினனி, போநதது - ஈண்டு நீ வநதது (இது சாலாதன்று), எ-று.

(வி-ரை.) மெய்கொண்ட வனபினென்று சொலலுகின்ற தென், நின்வாயிலவர் வினளாவருள் பெரியான்றே வென்றதைப் பினுமமையும். ஊசி கொற்சேரியின் விற்றென உவமவினை உவமிக் கப்படும் பொருண்மேலேறிநின்றது. அடுக்கு - பன்மைக்கண்வந் சது. ஆத்தினனி யென்பதனை முன்னிலைக்கண் வந்ததாக வுரைப் பினுமமையும். விற்குநின்னென்பதூஉம் பாடம்.

நேரிசையாசிரியப்பா.

ஊரூரகைதை தூட்க வுழக்குமோர் விருந்தினைக்
குவளைவடி பூந்த கட்டவள வாணகைக்

குறுந்தொடி மடந்தைதந் தோழியுங் கேண்மோ
கவிரலர் பூத்தசெஞ் செம்மையிற் குடிபி
மஞ்சடை கிளைத்த வரிக்குரு முட்டாட்
கூரரி வாளின் றோகையஞ் சேவற்
கொடியோன் குன்றம் புடைவளர் கூட்டற்
கணிச்சியங் கைதலத் தருட்பெரும் காரண
னுலகுயிர் பகுடைப் பசுங்கொடிக் கொருபாற்
பகுதியிற்க் கின்பந் தொகுத்தமைத்த றுமையினன்
மூளரீர்ப் புகுத்திய பதமலர்த் தாட்டுணை
மணிமுடி சுமக்குநம் வயலணி பூரர்பின்
வளர்மறித் தகரெனத் திரிதரும் பாண்மக
னெனக்குரித் தரிதிலம் யாமே யெமது
மணியொளிர் முன்றி லொருபுடை நிலைகின்
றன்ன வூரர் புல்லமும் விழக்குடிக்
கடாஅக் களியியும் படாஅப் பழியு
மெங்கையர் புலவியி லியம்பின நம்பாற்
றனதுமுன் புன்மொழி நீளத் தந்து
மொன்றுபத் தாயிர நன்றுபெறப் புனைந்துங்
கட்டிய பொய்ப்பரப் பினைத்துகிற் குறுத்திற்
பேரெறுழ்ச் சகர ரேழெனப் பறித்த
மூதிற்றிரை யடிக்கும் பரிதியந் தோழங்
காட்டையு ளிம்பர் காணத்
தோட்டிகின் றளிக்குந் தொன்மையது பெறுமே.

ஊர்நகைத்துட்க - தொன்மையதுபெறுமே. **பதுதி** - பரத்தையிற்பிரிவு. துணை - பாணனொடு வெகுளுதல்.

'குவளைபூத்த' என்பதுமுதல் 'கேண்மோ' என்பதுவரை.

(2—3 வரிகள்.)

(ப-ரை) குவளைபூத்த - குவளைமலரையொத்த, வடி கண் - கூர்மையான கண்களையும், தவள வாள் நகை - வெள்ளிய வொளி பொருந்திய நகையையும், குறுந்தொடி-குறிய தொடியையுமுடைய, மடந்தை - மடப்பத்தையுள்ள, நந்தோழியுங் கேண்மோ - என்று தோழியே கேட்பாயாக.

